சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம்

ஆழமும் அகலமும்



முனைவர் எம்.எஸ். ஸ்ரீலக்ஷ்மி

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம்
ஆழமும் அகலமும்

முனைவர் எம்.எஸ். ஸ்ரீலக்ஷ்மி

மருதா

Published by : Marutha
226 (188), Bharathi Salai, Royapettah,
Chennai - 600014. T.N. India. ✆ : 9382116466
e - mail : marutha1999@rediffmail.com

First published in August 2005

Singapore
International
Foundation

Recipient of the Singapore International Award, August 2005, from the Singapore International Foundation, for the publication and official launch of 'Singapore Tamizh Literature - Aazhamum Agalamum' at Alagappa University, Karaikudi, India in November 2005 and at New Delhi in December 2005. With support from the Singapore International Foundation.

I S B N No.: 981 - 05 - 3203

Price : Rs. 125

Printed by : Sri Mahendra Graphics, Chennai - 14

•

இலக்கிய இழையால்

இனிதாய் அமைந்த

இன்னுயிர் நண்பர்க்கு

இந்நூல் சமர்ப்பணம்!

•

மதிப்புக்குரிய கம்பன் அடிசூடி
பழ. பழனியப்பன் அவர்களுக்கு
நூலாசிரியரின் அன்பளிப்பு.

அன்புடன்,
M.S. ஸ்ரீலக்ஷ்மி,
சிங்கப்பூர்.
5/1/13.

உள்ளடக்கம்

என்னுரை

என்னைக் கவர்ந்த விஷயங்களுள் இலக்கியம் தலையாயது. இலக்கிய ஆர்வத்தின் உந்துதலால், சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்னும் உத்வேகத்தால் இந்நூலை உருவாக்கியுள்ளேன்.

சிங்கப்பூர்ப் பொருளாதாரத்திற்கு உதவிய தமிழர்கள் தங்களை அடையாளப்படுத்திக் காட்டும் இலக்கியம், பண்பாடு போன்ற விஷயங்களில் எவ்வளவு அக்கறை காட்டுகின்றனர் என்பதைச் சிங்கப்பூரில் வாழும் மற்ற இனத்தவர் அறிந்துகொள்ள வேண்டும்; சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் பற்றி உலகத் தமிழர்கள் அறிய வேண்டும் என்னும் வேட்கை எனக்கு உண்டு. இந்த வேட்கையே இந்நூலின் பிறப்பிற்குக் காரணமாகும்.

சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் பற்றி வெவ்வேறு ஆண்டுகளில், பல்வேறு ஆய்வுக் கருத்தரங்குகளுக்காக, மலர்களுக்காக நான் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கி உள்ளேன். இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் சில ஆய்வு நோக்கிலும், சில அறிமுக நோக்கிலும் எழுதப்பட்டவை. எனவே ஆய்வுக் கட்டுரை, பார்வைக் கட்டுரை, சிந்தனைக் கட்டுரை எனப் பல்வேறு கோணங்களில் கட்டுரைகளை வகைப்படுத்தி உள்ளேன். இதனால் இந்நூலில் இருவேறு மொழிநடையைக் காணலாம். ஆய்வுக்கே உரிய எளிய, அலங்காரமற்ற மொழிநடை, தமிழினிமையை உணர்த்தும் இனிய நடை என்பதாக நூலின் நடை அமைகிறது.

சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் பற்றிய கட்டுரைகளைப் பலர் எழுதியிருந்தாலும் அவை அங்கொன்றும் இங்கொன்றுமாக உதிரிப் பூக்களைப் போலக் கிடக்கின்றன. என்னுடைய முயற்சியும் அப்படி வீணாகிவிடக் கூடாது, எதிர்கால ஆய்வுகளுக்கு வழியமைத்துக் கொடுக்க வேண்டும் என்னும் நோக்கத்தை இந்நூல் நிறைவேற்றும் என நம்புகிறேன். அக்கரை இலக்கியம் என்றோ, புலம்பெயர் தமிழர்களின்

இலக்கியம் என்றோ அணுக விழைவார்க்கு இந்நூல் அரிய கையேடு. காய்தல், உவத்தல் இல்லா மனநிலையோடு, உண்மையை உரைக்க அஞ்சக்கூடாது என்னும் காந்திய இலக்கிய நெறியோடு இந்நூலை உருவாக்கியுள்ளேன்.

சிங்கப்பூர் மலேசியாவோடு இணைந்திருந்த காலத்தில் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய முயற்சிகளுக்கு வித்திட்டுச் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியப் பரப்பை ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும் உறுதுணையாக இருந்தவர்களைப் பற்றிய 'நற்றமிழ் வளர்த்த நகரத்தார்' என்னும் கட்டுரை என்னுடைய 'இலக்கியப் பாலம் பங்கும் பணியும்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டு ஆவணப்படுத்தும் நோக்குடன் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நூல் தமிழில் மட்டுமின்றி இருமொழிப் படைப்பாக ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது. இதன் மூலம் சிங்கப்பூரில் வாழும் மற்ற இனத்தினர் சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் பற்றிப் புரிந்துகொள்ள முடியும். நீண்டகாலமாகத் தமிழிலக்கிய முயற்சிகள் சிங்கப்பூர் மண்ணில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை அவர்களுக்கு உணர்த்த முடியும்.

சில செய்திகள் இந்நூலில் 'கூறியது கூறலாக' அமைவது தவிர்க்கப்பட முடியாதது. இலக்கியப் பரப்பு குறுகியதாக அமைவதால் இப்போக்கு உள்ளது. அடிப்படைச் செய்திகள் ஒன்றேயாயினும் வெவ்வேறு கோணங்களில், வெவ்வேறு சமயங்களில் எழுதப்பட்டதால் கூறியது கூறலைத் தவிர்க்க முடியவில்லை. சில கட்டுரைகளில் புதிய செய்திகளை இணைத்துப் புதுவடிவம் கொடுத்துள்ளேன்.

முனைவர் எம்.எஸ். ஸ்ரீலக்ஷ்மி
சிங்கப்பூர்.

சிங்கப்பூர்த் தமிழர்களைப் புரிந்துகொள்வதற்கான தேடலை நோக்கி...

'பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலங்களில் 'கூலி' என்னும் சொல் உருவாகிறது. ஆசிய நாடுகளில், குறிப்பாக இந்தியாவைச் சேர்ந்த பயிற்சி இல்லாத பணியாளர்களை (unskilled) குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது. உருது மொழியில் இச்சொல்லுக்கு அடிமை என்று பொருள்' என்று ஆக்ஸ்போர்டு அகராதி, 'கூலி'க்கு விளக்கம் தருகிறது. இழிந்த பொருளில் வழங்கும் இச்சொல்லை உலகிற்கு வழங்கியவர்கள் தமிழர்களே. தொடர்ந்து ஏற்பட்ட பஞ்சங்கள்; ஐரோப்பியர்கள் ஆசிய நாடுகளைக் காலனிகளாக மாற்றியபோது, ஆசிய நாடுகளில் தேயிலை, காப்பி, இரப்பர் மற்றும் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கங்காணிகளால் கப்பல் ஏற்றப்படுதல் ஆகிய இன்னபிற செயல்களால், தமிழர்கள் 'கூலி'களாக ஆக்கப்பட்டார்கள். மலேசியா, சிங்கப்பூர், பர்மா, தென்ஆப்பிரிக்கா, ரீயூனியன், மொரீசியஸ் ஆகிய பகுதிகளில் குடியேறினார்கள். பதினெட்டாம் நூற்றாண்டு தொடங்கி இக்குடியேற்றம் நடந்தது. இந்நாடுகளுக்கு வணிகர்களாகக் குடியேறியவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. இவ்வகையில் கடந்த இருநூற்றைம்பது ஆண்டுகளில், தமிழகத்திலிருந்து குடியேறிய மக்கள் குறித்த விரிவான விவரங்கள் இன்னும் பதிவு செய்யப்படவில்லை. இவர்களது வாழ்க்கையைப் பற்றித் தமிழகத்தில் இருப்பவர்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை. மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் குடியேறிய தமிழர்களுக்குக் கடந்த ஐம்பது ஆண்டுகளில் குடியுரிமை வழங்கப்பட்டதோடு, தமிழ் ஆட்சி மற்றும் நிர்வாக மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிறுபான்மை இனமாகத் தமிழர்கள் வாழ்கிறார்கள். இந்நாடுகளில் வாழும் தமிழர்களின் பண்பாட்டு நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.

உலகம் முழுவதும் சிறுபான்மை இனங்கள் தங்களுக்கான அங்கீகாரம் கோரும் செயல்பாடுகள்' வலுப்பட்டுள்ளன. பெரும் பான்மை இனம் X சிறுபான்மை இனம் என்ற முரண் அரசியல் ரீதியாகவும் அணுகப்படும் சூழல் உருப்பெற்றுள்ளது. அண்மையில் உருப்பெற்று வரும் உலகமயமாதல், தேசிய இனங்களின் சிக்கல்களைப் புதிய தளத்திற்கு எடுத்துச் செல்கின்றது. பல இனங்கள் ஓரிடத்தில் வாழ்வது குறித்த அக்கறைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு விவாதிக்கப் படுகின்றன. இந்தப் பின்புலத்தில் முனைவர் இலட்சுமி அவர்களின் இந்நூல் தமிழகத்தில் வெளியிடப்படுகிறது. சிங்கப்பூர் குறித்த பல்வேறு உரையாடல்களுக்கு இந்நூலில் காணப்படும் தரவுகள் அடிப்படையாக அமைகின்றன. இதனைப் பின்வரும் வகையில் புரிந்து கொள்ளலாம்.

- சிறுபான்மை இனமாகச் சிங்கப்பூரில் வாழும் தமிழர்களின் மனநிலைக்கும், அங்கு உருவாகி வரும் படைப்புகளுக்குமான உறவுகள்.

- பிறந்த நாட்டில் சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள், குடியேற்ற நாடுகளில் வாழும் முறைமை.

- பிறந்த நாட்டிற்கும் வாழும் நாட்டிற்குமான உறவுநிலைகளைப் பேணும் தன்மைகள்.

- குடியேறிய நாட்டில் பிறந்து வளர்ந்தவர்களுக்கும், குடியேறி நிலையாக வாழுபவர்களுக்கும் இடையேயான முரண்கள்.

கடந்த இருநூறு ஆண்டுகளில் சிங்கப்பூரில் உருவான/உருவாகி வரும் ஆக்கங்களைப் பற்றிய பதிவாக அமையும் இந்நூலை வாசிக்கும் போது ஏற்பட்ட மனநிலை சார்ந்து மேற்குறித்த பாகுபாட்டைச் செய்துள்ளேன்.

பயண நூல்கள், புனைகதைகள், கவிதைகள், சிறுவர் இலக்கியம், நாடகங்கள் ஆகிய பிற குறித்த பதிவாக அமையும் இந்நூலில், அப்பதிவைச் செய்தவர்களை முதன்மைப்படுத்திய மதிப்பீடு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நூல் சிங்கப்பூரில் உருவான புனைகதைகளைக் குறித்த விரிவான பதிவைச் செய்துள்ளது. குடியேறிகள் புனைவை மேற் கொள்ளும்போது, அவர்களுக்குப் பல புதிய சிக்கல்கள் உருவாகின்றன. எந்த நாட்டின் இருப்பைப் பதிவு செய்வது? 'இங்கொரு கால் அங்கொரு கால்' என்ற நிலைமையை எப்படி எழுத்தில் வடிப்பது? பிறந்து வளர்ந்த அனுபவங்களுக்கும் வாழும் அனுபவத்திற்குமான நுண்ணிய

வேறுபாடுகளை எப்படிப் பதிவு செய்வது? ஒரு 'புதுமொழி'யை எப்படிக் கண்டுபிடிப்பது? என்பவை போன்ற பல சிக்கல்கள் உருவாகின்றன. இலட்சுமி அவர்கள் சிங்கப்பூர் புனைகதைகளை மதிப்பீடு செய்யும் போது பின்கண்ட கூறுகளை முதன்மைப்படுத்துகிறார்.

- இப்புனைகதைகளின் மொழி செழுமையுறவில்லை. சொல்லப் படும் விஷயத்திற்கும் மொழிக்குமான உறவு சிதிலமடைந்துள்ளது. ஏதோ எழுத வேண்டும் என்பதற்காக, குறிப்பாகப் 'போட்டி'க்காக எழுதுகிறார்கள். 'போட்டி'க் கதை எழுத்தாளர்களே உருவாகிறார்கள். போட்டி இல்லையெனில் எழுத்து இல்லை.

- தமிழ்நாட்டு விவரிப்புகளைச் சிங்கப்பூரில் இருந்துகொண்டு செய்கிறார்கள். இப்படிச் செய்வதைச் 'சிங்கப்பூர் படைப்பு' என்று எப்படிச் சொல்வது?

- 'திருட்டு எழுத்து முறை' மிகுதியாகக் காணப்படுகிறது. பாத்தி ரங்களின் பெயர்களை மாற்றிவிட்டுப் 'புதுக் கதை' எழுதிவிடுகிறார்கள். அதற்குப் பரிசும் கொடுக்கப்படுகிறது.

- பெண்கள் புனைகதை ஆக்கத் துறையில் முனைப்பாகச் செயல் பட முடியவில்லை. எழுதிய ஒரு சிலரின் ஆக்கங்கள், புனைகதையின் அடிப்படைகளைக் கொண்டிருக்கவில்லை.

இலட்சுமி அவர்களின் புனைகதை பற்றிய இம்மதிப்பீடு, சிங்கப்பூரில் கதை எழுதும் முயற்சி தொடக்க நிலையில் இருப்பதைச் சொல்கிறது. இதற்கான காரணங்களைச் சிந்திப்பது பயனுடையதாக இருக்கும். குடியேற்றச் சூழலில் மனிதர்கள் இரட்டை மனநிலையோடு இருக்க வேண்டியுள்ளது. நிலவும் பொருளாதாரச் சூழல், வெளிவரும் ஊடகங்கள், வாசிப்போர் ஆகியவற்றின் தன்மைகள் வேறுபட்டதாக உள்ளன. எழுத்து என்பது மன உந்துதல் சார்ந்த ஆவேச வெளிப் பாடாக அமைவதற்கு மாறாக, சமூக அங்கீகாரம் பெறும் அடையாள அட்டையாக அமைகிறது. 'எழுத்தாளர்' பட்டம் கிடைக்கிறது. மாலை மரியாதைகள், நுகர்வுப் பண்பாடு சார்ந்து அளிக்கப்படுகின்றன. சிறுபான்மைக் கூட்டத்தில் தனித்த 'அடையாளம்' கிடைப்பதாகக் கருதும் போதை மனநிலை உருவாகிறது.

மேற்குறித்த நிகழ்வுகள் தமிழகத்திலும் நடைபெறுகின்றன; ஆனால் அவை சிரத்தையான செயல்பாடாக அங்கீகாரம் பெறுவது இல்லை. ஏதோ ஒரு கூட்டத்தின் ஒரு வகையான சடங்கு என்று ஒதுக்கப்படுகிறது. அவர்கள் மாற்றி மாற்றி மாலை போட்டுக்

கொள்வார்கள். அப்படி மாலை போட்டுக்கொள்ளும்போது, தங்களைத் துச்சமாகக் கருதும் வேறொரு கூட்டம் இருப்பதும் அவர்களுக்குத் தெரியும். சிறுபான்மைச் சூழலான சிங்கப்பூரில் இவ்வகையான 'இரட்டைச் சூழல்' இன்னும் உருவாகவில்லை. 'அத்தி பூத்தாற் போல்' இளங்கோவன்கள் இப்பொழுதுதான் உருவாகி வருகிறார்கள். மாற்றி மாற்றி மாலை போடுபவர்கள் மத்தியில் இளங்கோவன்கள் உருவாவது அத்துணை எளிதில்லை. எனவே, தமிழ்நாட்டுச் சூழலைச் சார்ந்து 'சிங்கப்பூர்க் கதை'களை மதிப்பீடு செய்யும்போது இலட்சுமி எழுதுவது எல்லாம் சரியே; ஆனால் முழுச் சமூகச் சூழலையும் கணக்கில் கொள்ள வேண்டியுள்ளதே. இருந்தாலும் இவ்வகை மதிப்பீடுகள், வருங் காலங்களில் 'சிங்கப்பூர் புனைகதைகள்' அதன் சரியான பாதையில் உருவாக வழிவகுக்கும். இந்தப் பின்புலத்தில் இந்நூல் விரிவாகப் பேசும் புனைகதைகள் பற்றிய மதிப்பீடு சிரத்தையாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும்.

'பயண நூல்கள்' குறித்த இந்நூலின் மதிப்பீடு சிங்கப்பூரைப் புரிந்துகொள்ள உதவுகிறது. குடியேறியவர்களின் 'பயண மனநிலை'யை அறிந்துகொள்ள உதவுகிறது. பிரபந்த யாப்பு வடிவங்களில் தமிழ் நாட்டில் பயண நூல்கள் உருவானதாகக் கூற முடியவில்லை. ஆனால், குடியேறிய தமிழர்கள் தங்களது யாப்பு மரபுகளைக் கொண்டு வாழும் இடத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். இலட்சுமி அவர்கள், 'இப்பயண நூல்களில் காணக்கூடியச் சமூக விமர்சனம்கூட, பின்னர் உருவான புனைகதைகளில் காண முடியவில்லை' என்று இந்நூலில் பதிவு செய்கிறார். இத்தன்மை மிகவும் சுவையான ஒன்று. இந்நிலை ஏன் உருவானது? என்பது குறித்துப் பேசலாம். பிரபந்தங்கள் எழுதியவர்கள் முன்னே பிரித்தானிய, ஜப்பானிய, சீன முதலாளிகளாகிய ஆக்கிரமிப் பாளர்கள் இருந்தார்கள். அவர்கள், தாங்கள் சுரண்டப்படுவதை உணர்ந்தார்கள். அதைப் பதிவு செய்தார்கள். ஆனால் புனைகதை எழுதுபவர்கள், 'தப்பிக்கும் மனநிலையோர்' என்பதால், தங்கள் முன் நிகழும் செயல்களைக் கண்டுகொள்ளாமல் இருக்கப் பழகியவர்கள். 'நமக்கேன் இந்த வம்பு' என்று வெள்ளைக்காரன் 'கோட்டை', புழுங்கிச் செத்தாலும் கழட்டாமல் போட்டுத் திரிபவர்கள். இவர்களது 'டை'யும், 'கோட்டு'ம் அடிமைச் சின்னங்கள். இதற்குள் கிடைக்கும் 'சுகத்தை' இழப்பதற்கு இவர்கள் முன்வர இயலாது. இந்த முரண்தான் பயண இலக்கியத்தில் காணும் விமரிசனம், புனைகதையில் விமரிசனமின்மை என்பதாக அமைகிறது. மரபு இலக்கியம் அரசாங்கத்தை வழிபடும் கூறுகளையும் கொண்டிருக்கும்; இதில் புனைகதையாளர்கள் நேரடியாக

ஈடுபடுவதில்லை. மாறாக ஒதுங்கிக்கொள்வார்கள். ஆனால் மரபு இலக்கியம் அரசாங்கத்தை வாழ்த்திப் பாடும். கவிதைகளில் இவ்வகை யான 'வாழ்த்திப் பாடும்' மரபு இருப்பதைக் காண முடியும். சிங்கப்பூரின் தொடக்க கால ஆக்கங்கள் பயணம் சார்ந்ததாக இருப்பது, மனித மனத்திற்கும் இலக்கிய உருவாக்கத்திற்குமான உறவுநிலைகளைப் புரிந்துகொள்ள உதவும்.

புனைகதைகள் அச்சு வழி உருவாவதைப் போல், நாடகங்கள் வானொலி வழி உருப்பெறும் நிலை உலகம் முழுவதும் உண்டு. சிங்கப்பூர் தமிழ்ச் சூழலில் வானொலி நாடகங்கள் உருவாகியிருப்பதை அறியமுடிகிறது. இது சவலைப் பிள்ளையே. அரங்கத்திற்கு நிகழ்த்துதல் சார்ந்த பயிற்சி மற்றும் அக்கறை அவசியம். இவ்வகையில் சிங்கப்பூரின் 'அக்னிக்கூத்து' பற்றிய விரிவான விவரங்களை இந்நூல் பதிவு செய்துள்ளது. இளங்கோவன் அவர்களின் கவிதை, சிறுகதை ஆகிய வற்றைப் பற்றிப் பேசும் அதே வேளையில் அவரது நாடகங்களையும் இந்நூல் விரிவாகப் பேசுகிறது.

மிகவும் 'மொண்ணையான' ஒரு சூழலில் இளங்கோவன் எப்படி உருவாக முடிந்தது? அவரது ஆக்கங்கள் ஏன் வேறுபட்டுள்ளன? என்ற விவாதம் முக்கியம். 'மாற்று' குறித்த அவரது சிந்தனைகள் எப்படி உருவாயின? அதன் வழி மாற்று ஆக்கங்களை எப்படிச் செய்ய முடிகிறது? இவ்வினாக்களுக்கு விடை கண்டு இந்நூல் விவாதித் திருக்கலாம். இளங்கோவன், தமிழ்நாட்டில் உருவான வெகுசன நுகர்வு சார்ந்த, மலிவு மற்றும் கொச்சைப் பண்பாட்டு நிகழ்வுகளால் செல் வாக்குப் பெறவில்லை; மாறாக இங்கு நடைபெறும் 'மாற்று' நிகழ்வுகளோடு தொடர்ந்து உறவைப் பேணி வந்துள்ளார். ஆங்கில மொழி வழி கிடைக்கும் பல்வேறு வாய்ப்புகளையும் அவர் சரியாகப் பயன்படுத்தியுள்ளார். இவ்விதம் செயல்படும் தமிழர்கள் சிங்கப்பூரில் மிகக் குறைவு. இப்படிச் செயல்படும் சிங்கப்பூர்த் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். இலட்சுமி அவர்களின் கறாரான மதிப்பீடுகள் அவ்வகையான மாற்றத்தை உருவாக்க உதவக்கூடும்.

பயண நூல்கள், புனைகதை, நாடகம் பற்றிய விரிவான பதிவு களைச் செய்திருக்கும் இந்நூல் இராம. கண்ணபிரான், நா. கோவிந்த சாமி, இளங்கோவன், கனகலதா ஆகிய சிங்கப்பூர் படைப்பாளிகளை விமரிசனங்களுடன் அங்கீகரிக்கிறது. பிற அனைத்தையும் மிகவும் வெளிப்படையான, கறாரான மொழியில் விமரிசனம் செய்துள்ளது. சிறுபான்மைச் சமூகத்தில் வாழும் ஒருவரால், இவ்வளவு துணிவாக

316

மதிப்பீடு செய்து எழுத முடிகிறதே! தமிழ்நாட்டில் கூட இப்படி மதிப்பீடு செய்ய முடியுமா? என்ற 'பயம்' இந்நூலை வாசித்துக் கொண்டிருந்தபோது அடிக்கடி ஏற்பட்டது. இதற்கான துணிவை இவர் எப்படிப் பெற்றார்? என்ற வினா, இவர் மீதான மதிப்பீட்டையும் மரியாதையையும் உயர்த்துகிறது. வறட்டாகச் செய்யும் மதிப்பீடாக இல்லாமல், நியாய ஆவேசம், கோபம், அதன் வெளிப்பாடான மொழியாக இந்நூல் அமைகிறது. சிங்கப்பூர் ஆக்கங்கள் எதிர்காலத்தில் செழுமையுடன் உருவாக இவரது ஆவேசம் அடியுரமாக அமையும் என்று நம்பலாம். சிங்கப்பூர் 'படைப்பாளி'கள் இந்நூலை எதிர்மறை யாகக் கொள்ளாது, சுயவிமர்சனமாகக் கொள்வது, எதிர்காலத்தில் இவ்வகையான நூல்கள் எழுதும் வாய்ப்பைக் குறைக்கும்.

சிங்கப்பூர் வாழ் தமிழர்கள், அவர்களது பல வகையான படைப்புகள், அங்கு நடைபெறும் பல்வகைப் பண்பாட்டு நிகழ்வுகள், குறிப்பாக நகரத்தார் செயல்பாடுகள் என்று விரிவாக இந்நூல் பேசியுள்ளது. இவற்றின் அடிப்படையாக அமைந்திருக்கும் விமர்சனப் பார்வையை மட்டும் சில எடுத்துக்காட்டுகளால் மேலே பேசினோம். இந்நூலில் பேசப்படும் ஒவ்வொரு செய்தி குறித்தும் விரிவாகப் பேச முடியும். இதனை வேறொரு சந்தர்ப்பத்தில் விரிவாகச் செய்ய வேண்டும்.

தமிழ் இலக்கியத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம். — வீ. அரசு. 15-07-05

●

சிங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சி.ந. சதாசிவப் பண்டிதர் பெறுமிடம்

பழமரம் நாடும் பறவை போலப் பொருளாதார வளம் தேடித் தமிழர்கள் தமிழ்நாடு, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குக் குடியேறினர். புலம்பெயர்ந்த இவர்கள் தங்கள் வாழ்க்கையை மட்டும் வளப்படுத்திக்கொள்ளவில்லை. குடியேறிய நாடுகளின் செல்வச் செழிப்பிற்கு உழைத்துள்ளதோடு கலை, பண்பாடு போன்ற விஷயங்களில் தங்களை அடையாளங் காட்டவும் முயன்றுள்ளனர். இதன் விளைவாக மலேசிய, சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தின் மூலவர்களாயும் விளங்கினர். இவர்களின் படைப்-பிலக்கிய முயற்சிகள் முன்னர் கூறிய இரு நாடுகளில் தமிழ் இலக்கியத் துறை வளர்வதற்குக் கால்கோள் செய்தன.

மலேசிய, சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தின் மூலவர் சி.ந. சதாசிவப் பண்டிதர் என்பது யாரும் மறுக்க இயலா உண்மை. இன்று இரண்டு நாடுகளும் தனித்தனியாகப் பிரிந்திருந்தாலும் சிங்கப்பூர் மலேசியாவுடன் இணைந்திருந்த காலகட்டத்தில் மலேசியத் தமிழ் இலக்கியத்தின் மூலவராகச் சதாசிவப் பண்டிதரைக் குறிப்பிட்டுள்ளார் இரா. தண்டாயுதம். மலேசியாவிலிருந்து பிரிந்து தனி நாடாகிய இன்றைய சிங்கப்பூரின் தமிழ் இலக்கியத்தின் மூலவராக சதாசிவப் பண்டிதரைக் குறிப்பிட்டுள்ளனர் நா. கோவிந்தசாமி, வை. திருநாவுக்கரசு ஆகியோர்.

சி.ந. சதாசிவப் பண்டிதர் எழுதிய நூல்கள் 'வண்ணை அந்தாதி', 'வண்ணை நகரூஞ்சல்', 'சிங்கை நகரந்தாதி', 'சித்திர கவிகள்' என்பன வாகும். இவை நான்கும் 1887இல் சி.கு. மகதூம் சாயபுக்குச் சொந்த மாகிய தினோதயவேந்திரசாலையில் அச்சிடப்பட்டன. இவற்றுள் முதல் இரு நூல்களும் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் உள்ள வண்ணார் பண்ணை என்னும் வண்ணை நகரைப் பற்றியவை. வண்ணை நகரில்

கோயில் கொண்டுள்ள காமாட்சி அம்மன் இவ்விரு நூல்களின் பாட்டுடைத் தலைவி. அந்தாதி, ஊஞ்சல் என்னும் இரு யாப்பு வடிவங்களில் இயற்றப்பட்ட இவ்விரு நூல்களும் நூலாசிரியரைப் பற்றிய செய்திகளை அறிய உதவுகின்றன.

குடியேறிகள் தாங்கள் பிறந்து வளர்ந்த நாட்டை அவ்வளவு எளிதில் மறந்துவிட மாட்டார்கள் என்பதற்குக் குடியேறிகள் படைத்த நூல்களில் இடம்பெறும் அவர்களின் தாய்நாட்டைப் பற்றிய செய்திகளே நல்ல சான்றாகின்றன. பொருளாதார நிலைப்பாட்டுக்கு இந்நாடுகளில் வாழ்ந்தாலும் அவர்களின் நினைப்பு அல்லது நினைவு எல்லாமே தாய்நாட்டைப் பற்றித்தான் இருந்தன என்பதற்கு வண்ணை நகர் காமாட்சி அம்மனைப் பற்றிய அந்தாதியும், ஊஞ்சலுமே சான்றாக அமைகின்றன. இப்போக்கு வேரை இழந்துவிட விரும்பாத அவர்களின் மனத்தைக் காட்டுவதாக அமைகிறது.

இவ்விரு நூல்களிலும் தெய்வத்தைப் போற்றிப் பரவுதல், அறக் கருத்துக்களை வலியுறுத்துதல், தத்துவக் கருத்துக்களை மொழிதல், சைவ சித்தாந்தம் பற்றிய செய்திகளைப் பாடுதல், வழிபாட்டுப் பயன் கூறுதல், அழகிய சொல்லாட்சிகளைப் பெய்தல், கற்பனை நயத்துடன் பாடுதல், காமாட்சி அன்னையின் பெருமை, நூலாசிரியரின் விண்ணப்பம், பெண்மயக்கைப் பழித்துப் பேசுதல், வழிபாடு செய்யாதவர் படும் பாடு போன்ற பல செய்திகளை ஐம்பது வெண்பாக்களாகப் பாடியுள்ளார். இவ்வண்ணையந்தாதியின் வழி நூலாசிரியரின் புலமை நலமும், பக்தியுணர்வும், நாட்டுப்பற்றும் புலனாகின்றன.

'வண்ணை நகரூஞ்சல்' என்னும் நூலில் நூலாசிரியரின் கற்பனை வளமும், பன்னூற் பயிற்சியும், உருவகச் சிறப்பும், தத்துவ அறிவும் இருபத்திரண்டு பாடல்களில் தெரிய வருகின்றன. இவ்விரு நூல்களும் வண்ணைநகர் காமாட்சி அம்மன் மீது பாடப்பட்டிருப்பினும் நூல்கள் நுவலும் செய்திகள் அனைவர்க்கும் பொதுவானவை. பக்தி இலக்கியம் என்ற அடிப்படையில் இந்நூல்களை வகைப்படுத்தும் அதே வேளையில் நூலாசிரியரின் யாப்பிலக்கணப் புலமையையும் பாராட்டாமல் இருக்க இயலாது.

தமிழக இலக்கிய வரலாற்றில் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் அதிகமாகப் பாடப்பட்ட காலத்தைச் 'சிற்றிலக்கியக் காலம்' என வகைப்படுத்துவர். இக்காலகட்டத்தில் சில புலவர்கள் ஒரே பாடுபொருளைப் பல்வேறு யாப்பு வடிவங்களில் பாடியுள்ளனர்.

இப்போக்கு ஏறத்தாழப் பதினெட்டாம் நூற்றாண்டு வரை தொடர்ந்துள்ளது. தமிழிலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுப் புலமை பெற்ற சதாசிவப் பண்டிதர் தமிழகம், இலங்கை ஆகிய நாடுகளின் தமிழிலக்கியப் போக்கையும் மனங்கொண்டே அந்தாதி, ஊஞ்சல் ஆகிய யாப்பு வடிவங்களைக் கையாண்டு ஒரே பாடுபொருளைப் பாடியுள்ளார்.

சிங்கப்பூரில் 1859இல் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் கட்டப்பட்ட தண்டாயுதபாணி கோவிலில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது அந்தாதி யாப்பில் பாடப்பட்ட நூல் 'சிங்கை நகர் அந்தாதி' ஆகும். தமிழில் அதிகமான செல்வாக்குப் பெற்ற யாப்பு வடிவம் அந்தாதி ஆகும். 'சிங்கை நகர் அந்தாதி' கட்டளைக் கலித்துறை யாலான நூறு பாடல்களைக் கொண்டது. பெரும்பாலான தமிழிலக் கியங்களைப் போல இந்நூல் 'உலகெல்லாம்' என்றே தொடங்குகிறது. 'உலகெலாம்' எனும் மங்கலச் சொல்லைக் கொண்டு நூலைத் தொடங்கும் தமிழ் மரபையே நூலாசிரியரும் பின்பற்றியுள்ளார். மேலும் தமிழ் மரபை அடியொற்றியே 'அவையடக்கம்' என்னும் பகுதியும் இடம்பெறுகிறது. இந்நூலை இயற்றியவர் பற்றிய செய்தி 'ஈழப்பதியான் சதாசிவப் பண்டிதனே' என அகச்சான்றாய் நூலில் அமைகிறது.

சிங்கை நகர் பற்றிய வருணனைகள் சில நாம் நினைத்துப் பார்க்கத்தக்கன. மீன்பிடி கிராமமாக இருந்த சிங்கப்பூர் படிப்படியாக நகரமாகிய செய்தியை மனங்கொண்டு 'புதுநகர்ச் சிங்கை' எனக் குறிப்பிடுகிறார் நூலாசிரியர். 'சிங்காபுரம்', 'சிங்கையூர்', 'சிங்கை' எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் சிங்கப்பூரின் செல்வ வளமும், இயற்கையழகும் நூலில் குறிப்பிடப்படுகின்றன. அவை அதீதக் கற்பனை யாக அமையாமல் உள்ளதை உள்ளவாறே கூறும் இயல்பினவாக உள்ளன. மேலும் சிங்கை நகர் வந்தார்க்குச் சிரமங்கள் இல்லாது வாழ்வில் இன்பம் கிடைத்ததையும் 'சுகந்தரு சிங்கை' என்ற சொல்லாட்சியின் வழி அறிகிறோம்.

குடியேறிகள் இங்கு வந்து பல வகையில் துன்புற்றபோதும் ஓரளவு பண வருவாய்க்கும் வழிசெய்துகொண்டனர். ஆகவே வருமானம் பெறவும், வசதியாக வாழவும் வாய்ப்பு வழங்கிய சிங்கையை மனமார, நன்றியோடு நினைவுகூர்கின்றனர். இந்த மனப்பான்மையின் எதிரொலியாகச் சதாசிவப் பண்டிதரும் சிங்கப்பூரின் செல்வ வளத்தைப் பெரிதும் போற்றிப் பல தொடராட்சிகளின் வழியே அதனை வெளிப்படுத்துகிறார். •

முருகனைப் போற்றும் நூலாசிரியர் 'சிங்கை வெற்ப' எனப் பாடுகிறார். முருகன் குறிஞ்சி நிலக் கடவுள் என்பதும், குன்றுகள் அவன் கோயில் கொண்டிருக்கும் இடம் என்பதும் தமிழ் மரபு வழிப்பட்டவை. இச்செய்திகளை உளங்கொண்டே 'சிங்கை வெற்ப' எனத் தண்டாயுத பாணியைப் பரவுகிறார்.

பக்தி நலம் கனியும் பனுவல் என்பதால் முருக வழிபாடு, முருகனருட் சிறப்பு, முருகனின் திருவடிச் சிறப்பு, சைவ சித்தாந்தக் கருத்துக்கள், நிலையாமை பற்றிய கருத்துகள், பிறவிப் பயனுக்கும் இறை வழிபாட்டுக்கும் உள்ள தொடர்பு, இறைவனின் எண்குணச் சிறப்பு, அறக் கருத்துக்கள், முருகநாமத்தின் - சடாட்சரத்தின் மகிமை போன்ற பல செய்திகள் நூல் முழுவதும் விரவி உள்ளன.

நூலாசிரியரின் யாப்பிலக்கணப் புலமை அளவிடற்கரியது. இவர் கையாண்டுள்ள மடக்கு, யமகம் என்ற உத்திகள் யாப்பிலக்கணப் புலமையின் வெளிப்பாடே. இந்நூலில் ஓரிரு பாடல்கள் நேரடியாகப் பொருளுணரும் வகையில் அமையாமல் கொண்டுகூட்டுப் பொருள் கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள் என்ற வகைப்பாடுகளை அடியொற்றிப் பொருள்கொள்ளும் வகையில் பாடப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாகப் பாடல் 56ஐக் கூறலாம். இப்படி நேரடியாகப் பொருள் கொள்ளாமல் யாப்பிலக்கணப் புலமை கொண்டு பொருளுணர வைத்தல் மிகச் சிலர்க்கே கைவரப்பெறும்.

நூலாசிரியரின் பன்னூற் பயிற்சியும் சிங்கை நகரந்தாதியில் தெற்றென வெளிப்படுகிறது. திருக்குறள், ஆழ்வார்கள் அருளிய திவ்யப்பிரபந்தம், தேவாரம், திருவாசகம் முதலிய பல நூல்களைக் கற்றறிந்தவர் என்பது நூலைக் கற்பார்க்குச் செவ்வனே புலப்படும்.

இந்நூலில் உவமை அணியும் சிறப்புற விரவியுள்ளது. நூலாசிரியர் தமிழ் மரபில் அழுத்தமான பற்றுடையவர் என்பதைக் காட்டும் மரபுவமைகள் இந்நூலில் பயின்று வருகின்றன. பக்திப் பனுவல்களில் இம்மரபுவமைகள் இடம்பெறாமலிருக்கா. எடுத்துக்காட்டாகக் 'கன்றினைத் தேடும் பசு', 'பசுவினைத் தேடும் கன்று', 'சூரியன் முன் பனி', 'மலரும் மணமும்' போன்றவற்றைக் கூறலாம். சில உவமைகளைத் தம் விருப்புக்கும் கற்பனைக்கும் ஏற்ப மாற்றியமைத்துக் கையாள்கிறார் நூலாசிரியர். எடுத்துக்காட்டாகச் சூரியனைக் கையால் மறைக்க முடியாது என்னும் கருத்துப்படச் 'சூரியனைக் கை மறைத்தலில்' என நாலடியார் என்னும் நீதிநூல் உவமை கூறும். இதனை நூலாசிரியரான

சதாசிவப் பண்டிதர் 'ககனத்தைக் காற்படியால் வீரியம் பேசி அளப்பது போலும்' எனப் பாடுகிறார்.

சில புதிய உவமைகளையும் நூலாசிரியர் படைத்துள்ள பாங்கு அவரின் கற்பனைத் திறத்தைக் காட்டுகிறது. சான்றாக முருகக் கடவுளின் புகழைப் பாவினுள் வைத்துப் பாடுவது முடியாத செயல் என்றும், முருகனின் புகழ் சொற்களுக்குள் அடங்காத ஆற்றலுடையது என்றும் கூற விழையும் நூலாசிரியர்,

'...சேயடியைப் பாவகத்துள் வைத்துப் பாட
நினைக்கின்ற பான்மையது
பூவகத்துள் கடல்நீர் அளத்தலும் போர்க்களத்திற்
சேவகத்து அம்பெய்தல் கையிலி மானும் சிறப்பிதுவே'

('சிங்கை நகர் அந்தாதி', பாடல் : 80)

எனப் புதிய உவமைகளால் பாடுகிறார்.

இறைவன் காட்சிக்கு அரியன். ஆனால் முருகனைக் கண்டதாகக் கூறுவது வெறும் பிதற்றலே என்பதை விளக்கும் வகையில்,

'நின்மல னேயுனைக் கண்டவ ரென்று நிதம் பிதற்றல்
வன்மல நீக்க வகையறியாது வரிவிரல்காண
டன்னுனி தொட்டிடத் தன்வாய் முகத்தினைத் தான்கறித்துத்
தின்னுதல் போலுந் திருவளர் சிங்கைச் சினகரனே'

('சிங்கை நகர் அந்தாதி', பாடல் : 59)

எனப் பாடியுள்ளார். இவ்வண்ணம் சதாசிவப் பண்டிதரின் நுண்மாண் நுழைபுலம் விளக்கும் வகையில் அமைந்துள்ள உவமைகள் முறையே 61, 62, 68, 69, 71 ஆகிய எண்களுள்ள பாடல்களில் அமைந்துள்ளன. இவை நுட்பமாகச் சிந்திப்போரின் அறிவாற்றலுக்கு விருந்தாய் அமைவன ஆகும்.

உவமையின் ஒரு கூறு உருவகம். ஆயின் உவமையைக் காட்டிலும் பொருட்செறிவு காரணமாகப் பெரிதும் கற்றோரால் மதிக்கப்படுவது உருவகம். இவ்வுருவகமும் சதாசிவப் பண்டிதரின் கைவண்ணத்தால் பொலிவு பெறுகிறது.

'உத்தம நீ கடல்; என்னுயிர் அப்பதில் உப்பு; மலந்
தத்திய கன்மம் வளி அலை; போதந்தரும் இரண்டு
சத்தியும் உன்னிடம் உண்டே சகத்தினைத் தாங்கு பஞ்ச
நித்திய வேலை நிராமய னேசிங்கை நின்மலனே'

('சிங்கை நகர் அந்தாதி', பாடல் : 58)

சைவ சித்தாந்தம் தமிழரின் தனிப்பெருஞ் சொத்து. தமிழரின் அறிவாற்றல் காட்டும் அற்புதமான படைப்பு. இத்துறைக் கருத்துக்கள் சாதாரண மக்களின் சிற்றறிவுக்கு எட்டாதவை. ஆனால் சைவ சமயத்தில் கற்றுத் துறைபோகிய அறிஞர்க்கு விளங்கும் தன்மை கொண்டவை. இத்துறைக் கருத்துக்கள் நூலின் பெரும்பாலான பாடல்களில் தத்துவக் கருத்துக்களாக ஒளிர்கின்றன. முருகக் கடவுளைப் பற்றிய பக்திப் பனுவல் என்பதாலும், சைவ சமயமும் சைவ சித்தாந்தமும் உயிரும் உடலும் போன்று இணைத்து எண்ணப்படத்தக்கவை என்பதாலும் நூலாசிரியர் இவற்றை விதந்து பாடியுள்ளார். இதனை விரித்தால் பெருகும்.

நூலாசிரியரின் விண்ணப்பத்தைப் பல பாடல்களில் காணலாம். பக்திப் பனுவல்களைப் படைக்கும் புலவர்கள் உயர்ந்த பரம்பொருளுக்கு முன் தம்மைத் தாழ்த்திக்கொள்ளும் இயல்புடையவர்கள். அவர்களைப் போன்றே நூலாசிரியர் தம்மைத் தாழ்த்திக்கொண்டு உயர்ந்த பரம் பொருளிடம் சில வேண்டுதல்களைத் தெரிவிக்கிறார். இவை இவ்வுலக இம்மை வாழ்வு தொடர்பானவையல்ல. பக்தியுணர்வு மேலீட்டால் தம்மிடம் உள்ள அற்ப ஆசைகளைத் தணித்து இறையருள் நாட்டத்தைக் கூட்டுவிக்கும்படியும், தமக்கு முருகக் கடவுளைத் தவிர வேறு யாரும் ஆதரவு இல்லாததால் தம்மைக் காக்கும்படியும் வேண்டுகிறார். இவருடைய பக்தியுணர்வு,

'இலையே பொறுமை யிலையே யறிவு மெழினலமும்
இலையே யுறுதியிலையே சுகமு மிரும்புவியில்
இலையே யறவுமிலையே துறவு மியற்புகழும்
இலையே எனினு மிருக்குமென் சிங்கை யிறையடியே'

('சிங்கை நகர் அந்தாதி', பாடல் : 5)

எனும் பாடலில் வெளிப்படுகிறது. 'ஊரிலேன் காணி இல்லை; உறவு மற்றொருவரில்லை' என்னும் தொண்டரடிப் பொடியாழ்வாரின் பக்தி மேலீட்டையே மேற்கண்ட பாடல் வெளியிட்டாலும் இறைவனே அனைத்துக்கும் அடிப்படைக் காரணமானவன் என எண்ணும் ஆழ்ந்த அன்பைத் தெரிவிக்கிறது. இவ்வன்புப் பெருக்கினாலேயே 'இனி எனக்கு என்ன பயமே' (பாடல் : 7) என உறுதிகொண்ட நெஞ்சினராய், 'உன்னடிக்கீழ் வந்து உறங்குவனே' என்று மறுமைப் பயணத்திற்குத் தயாராகிறார். இறையடி இணைவதே இவருடைய விருப்பம் எனத் தெரிவதால் பக்தி நூல்களில் காணப்படும் 'பக்தி வைராக்கியத்தையும்' இவரிடம் காண முடிகிறது.

முருகக் கடவுளைப் பற்றிய பல புராணக் கருத்துக்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஒன்று முருகனை வாணிகனாகச் சித்திரிப்பது. வணிக வளத்தை மட்டுமே நம்பி வாழும் சிங்கப்பூரில் கோயில் கொண்டுள்ள முருகக் கடவுளை வாணிகனாகப் போற்று- கிறார் நூலாசிரியர். 'வயஞ்சிங்கை வாணிகனே; வாணிக மோங்கி வளர் சிங்கை வேலன்' என வாணிகம் என்னும் சொல்லை முருகனுக்கும், சிங்கைக்கும் இணைத்துப் பாடியுள்ளது பாராட்டுக்குரிய சொல்லாட்சி யாக அமைகிறது.

நூலாசிரியர் பெண்மயக்கைப் பாடும் விதம் முழுக்க முழுக்கத் தமிழ் மரபு சார்ந்த நெறியாகவே தோன்றுகிறது. நூலாசிரியரின் எண்ணங்களும் விழைவுகளும் நூலின் வழி வெளிப்படுவதை நோக்கவும், நூலாசிரியர் தன்னடக்கத்துடன் தம்மைப் பற்றிய யாதொரு தகவலையும் அகச்சான்றாகப் பாடாது இருப்பதனாலும் மேற்கூறப் பட்ட மரபு சார்ந்த நெறி வலுப்படுகிறது. சிங்கை நகரைப் போற்றிப் பாடும் இப்பக்திப் பனுவல் சமூகம் பற்றிய செய்திகளைக் கூறவேயில்லை. நூலாசிரியர் நூற்பயனாகக் கூறும் செய்திகளும் 'முன்னோர் மொழி பொருள் பொன்னே போல்' போற்றும் அடிப்படையில் அமைந் துள்ளன.

பக்தி வைராக்கியம், யாப்பிலக்கணப் புலமை, சைவ சித்தாந்தப் புலமை, பன்னூற் பயிற்சி ஆகியவை கொண்ட சதாசிவப் பண்டிதர் ஈழத்திலிருந்து பொருள் தேடச் சிங்கைக்கு வந்து சிங்கை நகரில் கோயில் கொண்டுள்ள தண்டாயுதபாணி மீது கவிதை பாடிய நல்ல புலவர் எனவும், காரிகை கற்றுக் கவிபாடிய இவரின் கவிதைகள் 'தேசிய இலக்கியம்' மலர வழிவகுத்தன எனவும் சொல்வது தவறாகாது.

'பட்டுக்கோட்டை போட்ட பிள்ளையார் சுழி' என்னும் தலைப்பில் இரண்டாயிரத்து மூன்றாமாண்டு ஆகஸ்ட் முதல் நாளன்று வந்த தினமணி நாளிதழில் (இணையப் பதிப்பு) வெளிவந்த சுவையான தகவல் ஒன்று சிங்கைத் தமிழிலக்கிய முன்னோடிகளுள் ஒருவராகக் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் தந்தை அருணாசலக் கவிராயரைக் கூறுகிறது. சிங்கப்பூருக்குப் பிழைக்க வந்த அருணாசலக் கவிராயர் தம் சொந்த ஊர் நினைவாகவே இருந்ததால் கும்மிநடை மெட்டுகளில் தனது முசுகுந்தன் காடு பற்றிப் பாடி நூலாகச் சிங்கை நகரில் வெளியிட்டார் எனவும், அந்த நூலின் பிரதி லண்டனில் உள்ள கலோனியல் நூலகத்தில் இன்றும் உள்ளது என்றும் அச்செய்தி கூறுகிறது. இச்செய்திகளை நோக்கச் சிங்கப்பூர் மண் தொடர்பான

செய்தியை - சிங்கப்பூரில் கோயில் கொண்டுள்ள முருகக் கடவுளை - சிங்கப்பூரில் குடியேறிய தமிழர்களின் சமய நம்பிக்கைகளை நூலாகப் பாடி, சிங்கையிலேயே அதனை நூலாக வெளியிட்டுச் சிங்கப்பூர் மண்ணுக்கு விசுவாசியாக விளங்கிய சதாசிவப் பண்டிதர் தேசிய இலக்கியத்தின் ஆணிவேராக, மூலவராகச் சொல்லப்படுவது பல வகையிலும் பொருத்தமே!

சதாசிவப் பண்டிதர் எழுதிய மற்றொரு நூல் 'சித்திர கவிகள்' என்பதாகும். இவருடைய பழுத்த யாப்பிலக்கணப் புலமையின் ஒரு கூறு 'சிங்கை நகர் அந்தாதி'. ஆயின் சித்திர கவிகளோ முழுப் பரிமாணம் என்பதில் தவறில்லை.

தமிழில் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என நான்கு வகையான கவிதைகள் உண்டு. இவற்றைப் பாடும் புலவர்களையும் இப்பெயராலேயே அழைக்கும் வழக்கும் உண்டு. ஆசுகவி என்பது விரைந்து கவிபாடுவது. 'இம்மென்றால் எழுநூறும் அம்மென்றால் அறுநூறும்' பாடுபவர் ஆசுகவி. பாட்டின் அடி, சொல், அணி, பா முதலியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொடுத்துப் பாடச் செய்வதாகும். விரைவாகப் பாடும் ஆற்றலுடையவர் தம் கைச்சரக்கை இக்கவிதையின் வழி வெளிப்படுத்துவர். வெண்பாப் போட்டி போன்றவற்றிற்கு வழிகாட்டியது ஆசுகவியே!

மதுரகவி என்பது இனிமையாகப் பாடுவது என்றும், சித்திரகவி என்பது சித்திரங்கள் அல்லது படங்கள் வாயிலாகக் கவிஞன் தான் சொல்ல வந்த கருத்தைக் கூறுவது என்றும் சொல்லலாம். வித்தாரகவி என்பது ஒரு பொருள் குறித்து விரிவாகப் பாடுவது ஆகும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ சமயக் குரவர்களுள் ஒருவரான திருஞானசம்பந்தர் யமகம், திரிபு, மாலைமாற்று முதலிய யாப்பு வடிவங்களைக் கையாண்டு புதுமை செய்தார். தேவாரத்தை நன்கு கற்றிருந்த சதாசிவப் பண்டிதரும் அவர் வழி நின்று சிங்கப்பூரில் சித்திர கவிகளைப் பாடிப் புதுமை செய்தார். எனவே அவற்றின் முன்னோடி எனும் சிறப்பும் சிங்கையில் பண்டிதருக்கு உண்டு. 'யாப்பிலக்கணப் புலமையின் மணிமுடி' எனச் சித்திர கவிதையை வருணித்தால் அதன் நாயகராகச் சிங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெறுபவர் சதாசிவப் பண்டிதரே ஆவார்.

'தண்டியலங்காரம்' என்னும் இலக்கண நூல் கவிதைக்குரிய இலக்கணங்களைக் கூறுவதாகும். சொல்லணி, பொருளணி என இரு

வகையான அணிகளுள் சொல்லணி என்னும் வகைப்பாட்டினுள் சித்திர கவியைக் கூறுகிறது 'தண்டியலங்காரம்'. எழுத்துக்களைப் பல கோணங்களில் கூட்டியும், பிரித்தும் பாடப்படுவது சித்திரகவி. குறிப்பிட்ட சித்திரத்திற்குள் கவிதையின் வரிகள் இடம்பெறுமாறு எழுத்துக்களைக் கணக்கிட்டு அமைப்பதைச் சித்திரகவியில் காணலாம். இக்காலத்தில் சொற்களைக் கண்டுபிடித்து விளையாடும் மொழி விளையாட்டுக்களுள் ஒன்றான குறுக்கெழுத்துப் போட்டிக்கு மூலம் சித்திரகவியாக இருக்கலாம். ஆனால் சித்திர கவிதை சொற்களைக் கண்டறிந்து அவற்றைத் தொடர்ச்சியாக அமைத்துப் பொருளறியும் 'யாப்பிலக்கண விளையாட்டு' என்றுகூடச் சொல்லத்தக்கது. இச்சித்திரகவிதை புதியன படைக்கும் நோக்குடன், விடுகதை போன்று புதிராக, விளையாட்டு முறை என்னும் சுலபமான வழியாகக் கற்றார்க்கு மட்டுமே இன்பமளிக்கும் கவிதை வடிவம். இதனை இயற்றுவோர்க்கு இருக்க வேண்டிய யாப்பிலக்கணப் புலமை போல இதனைப் படிப்போர்க்கும் பழுத்த யாப்பிலக்கணப் புலமை அமைய வேண்டும். ஆகவே சித்திர கவிதையைப் 'பண்டிதர்க்கே உரிய பா வகை' எனக் குறிக்கலாம். இத்தகு கடினமான பா வகையைப் பாடிய சதாசிவப் பண்டிதர் சிங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் 'கவிதை வடிவத்தில்' புதுமை படைத்த புலவராக விளங்குகிறார்.

சித்திர கவிகள் பற்றி விரிவாக ஆராய்ந்த வே.இரா.மாதவன் சிங்கப்பூர்ச் சித்திர கவி நாவலர் என்ற பெயரில் சி.வே.நாராயணசாமி நாயகர் என்பாரைக் குறிப்பிடுகிறார். இவர் வாழ்ந்த காலம் பற்றிய யாதொரு குறிப்பும் இல்லாததால் யாழ்ப்பாணம் சி.ந. சதாசிவப் பண்டிதரே சித்திர கவிதையின் நாயகராகக் கருதப்படுகிறார்.

நூலாசிரியர் மாலைமாற்று வெண்பா, அஷ்டநாக வெண்பா, துவி நாக விருத்தம், இரத வெண்பா, கமல வெண்பா, சதுரங்க வெண்பா, துவி வெண்பா, நிரல் நிரைக் கட்டளைக் கலித்துறை, திரி வெண்பா, தனுவெண்பா, வினா விடை வெண்பா, கட்டளைக் கலித்துறை இருபா, நடுவெழுத்து அலங்காரம், திரிபங்கி, ஒரு சீர் மடக்கு, மடக்கு விருத்தம், வேலாயுத பந்தம், அடி நினைந்திரங்கல், மோனை பிறழாத நேரிசை ஆசிரியப்பா என 19 வகையான சித்திர கவிதைகளைப் படைத்துள்ளார்.

ஒரு கவிதையை முதலிலிருந்து நோக்கினாலும் அல்லது முடிவிலிருந்து நோக்கினாலும் அதே கவிதை அமையும்படி எழுத்துக்களை நிரலாக அமைத்துப் பாடுவது மாலைமாற்று வெண்பாவாகும். மாலையின் இரண்டு தலைப்புகளில் எதனைக் கொண்டு நோக்கினாலும்

ஒரே தன்மை உடையதாய்க் காட்சியளிப்பது போல இவ்வெண்பாவும் அமையும்.

ஒரு சதுரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டு பாம்புகளின் தலைகள் பொருந்துவதாகவும், ஒவ்வொரு கோணத்திலும் இரண்டு வால்கள் பொருந்துவதாகவும் அமைத்து, எட்டுப் பாம்புகளின் உடல்கள் பின்னிப் பிணைந்து கிடப்பதாகச் சித்திரம் வரைந்து எழுத்துக்களைக் கணக்கிட்டுச் சித்திரம் தீட்டுவது அஷ்டநாக வெண்பா.

இரண்டு பாம்புகள் பின்னிப் புணர்ந்து விளையாடுவது போன்று சித்திரம் வரைந்து எழுத்துக்களை அதில் பொருத்திப் பாடுவது துவி நாக பந்தம் அல்லது துவிநாக வெண்பா எனப்படும்.

தேர் போலச் சித்திரம் வரைந்து அதனுள் எழுத்துக்களைப் பொருத்திச் செய்வது இரத பந்தம் எனப்படும் இரத வெண்பா ஆகும்.

ஒரு தாமரை மலர் போலச் சித்திரம் தீட்டி அதனுள் எழுத்துக் களை இட்டுப் பாடுவது கமல வெண்பா.

பக்கத்திற்கு எட்டுக் கட்டங்கள் என நான்கு பக்கத்திற்குமாக 64 கட்டங்களை அமைத்துச் சித்திரம் தீட்டி அவற்றினுள் எழுத்துக்களை அமைத்துச் செய்யப்படுவது சதுரங்க வெண்பா எனப்படும்.

ஒரே வெண்பாவின் சீர்களை மாற்றி இருவேறு வெண்பாக் களாகப் பாடுவது துவி வெண்பா ஆகும். பெரும்பாலும் நேரிசை வெண்பாவே இதில் கையாளப்படும்.

வரிசையாகப் பொருள்களை அடுக்கிப் பாடுவது நிரல் நிரைக் கட்டளைக் கலித்துறை எனப்படும்.

நேரிசை வெண்பா ஒன்றின் சீர்களை மாற்றி மூன்று வெண் பாக்கள் அமையுமாறு பாடுவது திரிவெண்பா எனப்படும்.

ஒரு வகை வெண்பாவுக்குள் மற்றொரு வகை வெண்பா மறைந் திருக்கும்படி பாடுவது கரந்துறை வெண்பா எனப்படும்.

கேள்வி பதிலாக அமையும்படிச் செய்யப்படுவது வினா விடை வெண்பா.

ஒரு வகைப் பாவினுள் மற்றொரு வகைப் பா அமையுமாறு செய்வது கட்டளைக் கலித்துறை இருபா எனப்படும். கட்டளைக் கலித்துறையில் நேரிசை வெண்பா அமையப் பாடுவது இவ்விரு

பாவினுள் அடங்கும். அடி நினைந்திரங்கல் என்னும் துறையுள் இடம் பெறும் கட்டளைக் கலித்துறையுள் மோனை பிறழாத நேரிசை ஆசிரியப்பா அமையும்படி பாடப்படுவது இருபா என்னும் வகையில் அடங்குவதாகும்.

ஒரு பாடலில் உள்ள சொற்கள் ஒவ்வொன்றும் மூன்று எழுத்துக் களாக அமையும்படிச் செய்து, அவற்றுள் நடு எழுத்தெல்லாம் சேர்ந்து பாட்டுடைத் தலைவன் பெயர் அமையும்படி இயற்றுவது நடுவெழுத்து அலங்காரம் ஆகும்.

ஒரே பாடல் ஒரு சமயத்தில் மூன்று பாடல்களாக அமைவது போலவும், இம்மூன்று பாடல்களும் வெவ்வேறு பொருள் பற்றியதாக அமைவதாகவும் அமைவது திரிபங்கி எனப்படும். தனிப்பாடலாக நிற்கும்போதும் இது பொருளால் வேறுபடும்.

ஒரு சீர் மடங்கி மடங்கி வந்து வேறொரு பொருளைத் தருவது ஒரு சீர் மடக்கு எனப்படும்.

வேலாயுத பந்தம் என்பது மாலைமாற்று என்னும் சொல் லணியைச் சேர்ந்தது. வேலாயுதச் சித்திரத்தில் எழுத்துக்களை அமைத்து மாலைமாற்றாகப் பாடுவது ஆகும்.

மேற்கூறிய அனைத்துச் சித்திர கவிதைகளிலும் சிங்கப்பூரில் கோயில் கொண்டுள்ள தண்டாயுதபாணியே போற்றிப் பாடப்பட்டுள் ளார். ஒவ்வொரு சித்திர கவியிலும் 'சிங்கப்பூர்' என்னும் சொல்லாட்சி அமைகிறது. பக்தியைப் பாடுபொருளாகக் கொண்டு செய்யப்பட்ட இந்நூல் முன்னர் குறிப்பிட்டது போல நூலாசிரியரின் யாப்பிலக் கணப் புலமையை மட்டும் காட்டாது அவருடைய பக்தி உணர்வையும் காட்டுகிறது.

தமிழ் இலக்கிய உலகில் பன்னெடுங் காலமாகக் கவிதை, செய்யுள் என இரு வகையிலும் படைப்புகள் வெளிவந்துள்ளன. உவமை, ஓசை, பொருள் நயம், கற்பனைத்திறன், சொல்லாட்சி போன்ற கூறுகளின் வழி கற்பார்க்கு இன்பமூட்டுவது கவிதை ஆகும். ஆனால் செய்யுளோ எழுத்துக்களைக் கொண்டு இலக்கண விதிப்படி செய்யப்படுவது. செய்யுள் செய்வதானால் புலவருக்குச் செய்திகளை நயம்படச் சொல்ல வேண்டிய கட்டாயமில்லை. ஆகவே கவிதையைப் போலச் செல்வாக்குப் பெற்ற வடிவமாகச் செய்யுளைக் கூற முடியாது. சதாசிவப் பண்டிதர் சித்திரக் கவிகள் என்னும் பெயரில் செய்யுள்தான் செய்துள்ளார்.

இதனால் சித்திரக் கவிதைகளில் பண்டிதரின் படைப்பாற்றல் அழகை அல்லது கவித்துவத்தைக் காண முடியாது. இருப்பினும் பாடுபொருள் அடிப்படையில் சிங்கப்பூர் தண்டாயுதபாணி கருப்பொருளாக அமைவதால் சதாசிவப் பண்டிதரின் இலக்கியப் பணி சிங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது.

*(1993இல் ஆஸ்திரேலியாவில் நடந்த
உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க
மாநாட்டுக்காக எழுதப்பட்ட கட்டுரை)*

●

சிங்கப்பூரில் குடியேறிகள் படைத்த நான்கு பயண நூல்கள் ஓர் ஆய்வு

முன்னுரை

பொருளாதார வளமும் பலமும் குடியேறிகளின் குறிக்கோள்; அவர்களுக்கு இலக்கியம் பற்றிய அக்கறை இருப்பதில்லை என்பது சமூகவியலாரின் ஆய்வுக் கணிப்பு. இக்கணிப்பு சிங்கப்பூர்ச் சூழலுக்குப் பொருந்தவில்லை. ஏனெனில் இந்நாட்டின் 'தேசிய இலக்கியம்' உருவாகக் குடியேறிகளே மூல காரணர்களாய் விளங்கியுள்ளனர். சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் குடியேறிகளின் இலக்கியமாகவே ஆரம்ப காலங்களில் திகழ்ந்தது.

பொதுவும் சிறப்பும்

1893, 1907, 1936, 1937 ஆகிய நான்கு ஆண்டுகளிலும் வெளி வந்துள்ள 'அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி', 'சிங்கை நகர் சிங்கார வடிவேலர் காவடிச் சிந்து', 'புத்தர் ஆலய வழிநடைச் சிந்து', 'இந்தியக் கப்பல் பிரயாண வழிநடைச் சிந்து' ஆகிய நான்கு பயண நூல்களும் குடியேறிகள் சிங்கப்பூர்த் தமிழிலக்கிய உலகிற்கு ஆற்றியுள்ள பங்கினை தடம் அமைத்துக் கொடுத்த பாங்கினை வெளிக்காட்டுபவை. இவற்றிடையே சில பொதுத் தன்மைகளும், பல சிறப்புத் தன்மைகளும் அமைந்துள்ளன.

இந்நான்கு நூல்களும் நாட்டுப்புற இலக்கியத் தன்மைகளைப் பெற்று விளங்குகின்றன. இவை 'சிந்து' என்னும் வகைப்பாட்டில் அடங்குபவை. ஒளிவுமறைவின்றிப் பாடுவது; எளிய, கொச்சைச் சொற்களை ஆள்வது; பெண்ணை முன்னிலைப்படுத்திப் பேசுவது;

காமச்சுவை சொட்டும் வருணனைகள்; 'இலாவணி', 'ஆனந்தக் களிப்பு' ஆகிய மெட்டுகளில் இசைப்பாடலாய் அமைவது ஆகிய நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் இவற்றில் காணப்படுவதோடு, இவை ஆங்கிலக் காலனித்துவ ஆட்சியில் பாடப்பட்டதால் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் புகழ்பாடுவனவாகவும் விளங்குகின்றன.

'சிந்து' வடிவம்

மூன்று சீர்களைக் கொண்டது சிந்தடி. இவ்வடியால் இயன்ற பாடலே சிந்துப்பாடல். இப்பாடல்கள் ஏனைய இலக்கிய வகைகளான காப்பியங்களைப் போன்றோ, பிரபந்தங்களைப் போன்றோ விரிந்த விதிமுறைகட்கு உட்பட்டவையல்ல. கர்னாடக இசைப்பாடல்களில் உள்ளது போலப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அமைப்பு இருப்பதாலும், தாலாட்டு, ஒப்பாரி போல மக்களின் அன்றாட வாழ்வோடு தொடர்பு கொண்டிராமல் இருப்பதாலும் சிந்துப்பாடல்கள் இலக்கியமாகக் கருதப்படவில்லை.

இவற்றுள் 'காவடிச் சிந்து', 'வழிநடைச் சிந்து', 'வரலாற்றுச் சிந்து', 'நொண்டிச் சிந்து', 'விபத்துச் சிந்து' போன்ற பல வகைகள் தமிழகத்திலுள்ளன. ஆயின் சிங்கப்பூரில் பாடப்பட்ட இந்நான்கு பயண நூல்களும் 'வழிநடைச் சிந்து' என்னும் வகைப்பாட்டிற்குப் பொருந்தி வருவன. பிழைப்புத் தேடி மலாயா, சிங்கப்பூருக்குப் பயணம் மேற்கொண்ட மக்களைப் பற்றியும், இறையருள் நாடி இவர்கள் மேற்கொண்ட பயணங்கள் பற்றியும் இவை பேசுகின்றன. ஆகவே வழிநடைச் சிந்தாக இவை வெவ்வேறு மெட்டுகளில் பாடப்பட்டன என்பதில் தவறில்லை. மற்றொரு கோணத்தில் சிந்தித்துப் பார்த்தால் கற்றோரின் பயண நூல்கள் 'ஆற்றுப்படை' என்னும் பெயரில் வாழ்ந் தமை போலக் கல்லாதாரின் பயண நூல்கள் 'சிந்துகளாக' மலர்ந்தன ; மணம் பரப்பின எனலாம். இதற்கு அக்காலத்தில் 'சிந்து' பெற்றிருந்த செல்வாக்கும் காரணமாகும்.

சிறப்புத் தன்மைகள்

ஒரு நாட்டின் வரலாற்றை அறிய, மக்களின் மனப்பண்பைத் தெரிந்துகொள்ள, பழக்க வழக்கங்களைத் தொகுத்தறிய, நாகரிகச் சார்புகளை ஆய்ந்தறிய, உள்ளத்து உணர்ச்சிகளின் உருவத்தைப் படம்பிடிக்க நாட்டுப்பாடல்கள் துணைபுரிவன (சு. சண்முகசுந்தரம், 1982). இவ்வடிப்

படையில் சிங்கப்பூரின் வரலாற்றையும், இங்குக் குடியேறிய தமிழர்கள், பிற இனத்தார் ஆகியோரின் வாழ்க்கை நிலைகளையும், சமூக அக்கறையையும் இந்நான்கு நூல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

1. அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி

இந்நூல் பூவுலகம் புகழ் குதிரைப் பந்தயமிடும் புதுமையைப் பார்த்து வரும் நோக்குடன் நா.வ. இரங்கசாமிதாசனால் பாடப்பட்டது. எரிந்த கட்சியில் பாடப்பட்ட இலாவணியாகவும் திகழ்கிறது. இன்றைய நடைமுறையிலுள்ளது போன்று பயணப்பத்திரம் அன்றில்லை. ஆயின் 'ஆர்டர்' (order) வழங்கும் வழக்கம் இருந்தது. நாகப்பட்டினத்தில் மலாயா, சிங்கப்பூர் செல்வதற்குரிய 'ஆர்டர்களைக்' கணபதியாப் பிள்ளை என்பவர் வழங்கியுள்ளார். இங்ஙனம் உத்தரவு பெற்றோர் அனைவரையும் பயணத்திற்கு முன்னர் எண்ணிச் சரிபார்க்குமிடம் 'சவுக்கண்டி' எனப்படும் சுங்கச்சாவடியாகும். இப்பணியைக் காவலர்கள் செய்ததாக நூல் மொழிகிறது. ஆதலின் 'சவுக்கண்டி' என்பதைக் காவற்கூடமாகவும் கருத இடமுண்டு. கப்பல் பயணிகள் தங்களுக்குத் தேவையான சாக்கு மூட்டைகளுடன் கட்டுச்சாத மூட்டைகளையும் கொண்டு சென்றனர். இப்பயணிகள் மதவேறுபாடு கருதா உயர் மனத்துடன் படகிலேறியதும் கண்ணுக்குத் தெரிந்த 'நாகை தர்காவை' (பள்ளிவாசலை) வணங்கினர். கப்பற் பயணம் தொடர்கிறது. தன்னுடன் வரும் பெண்ணிடம் பல செய்திகளைக் கூறுகிறார் ஆசிரியர். மறுமொழி யாகப் பெண்ணும் பேசுகிறாள். அவள் பேசுகையில்,

'உண்மையில்லாமல் இதோ ஒருவன் ஒற்றைப் படகிலேறி
ஒருவன் காட்டுக்கப்பித்தான் வாரானே'

எனக் குறிப்பிடுகிறாள். மலாக்கா நகரை அடைவதற்கு முன் கப்பலி லிருந்து பயணிகளைப் படகிலேற்றிச் சென்று கரை சேர்க்கக் 'கட்டுமரம்' என்னும் படகில் 'பைலட்' வரும் செய்தியை இவ்வாறு 'காட்டுக்கப் பித்தான்' என்னும் தொடரின் மூலம் குறிப்பிட்டிருக்கிறாள்.

பயணிகள் கடற் பயணத்தால் நோயுற்று வாடினர். பயணிகள் நேரத்தை அறிந்துகொள்வதற்காகக் கப்பலில் மணி அடிக்கப்பட்டது. பயணிகள் ஏறி, இறங்கச் சீடிப் படிக்கட்டுகள் பயன்பட்டன. தாம்பூலம் போடுதல், பந்தயம் கட்டிக்கொள்ளுதல் முதலிய பழக்க வழக்கங்களும் பயணிகளிடம் அமைந்திருந்தன என்பதை அறியலாம். மலைநாட்டை அடைவதற்கு முன் 'குருவிப்பீர்' மலையைக் கண்டதாக நூலாசிரியர்

கூறியுள்ளார். இக்குருவிப்பீர் மலை என்பது மேற்கு மலாயாவிலிருந்து சற்றுத் தள்ளியுள்ள 'கோகாய் (Goh kai / Fowl island) அல்லது 'ஃபவுல் ஐலண்ட்' எனப்படும் குன்றைக் குறிக்கிறதென எண்ணத் தோன்றுகிறது (இளங்கோவன், 'அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி ஆய்வுக் குறிப்பு'). கோலப் பினாங்கில் அமைந்துள்ள கோட்டை முனையில் உணவுக் கடை, கோப்பிக் கடை ஆகியவற்றில் பயணிகள் பசியாறினர். பயணிகள் குளிக்கத் 'தண்ணீர்ப்பீலி' (public washing area) அமைந்திருந்தது. கப்பல் பயணிகளுக்கு வேண்டிய வெற்றிலை பாக்கு வாங்கிவர 'எடுபிடிகள்' இருந்தனர். அவர்களுள் ஒருவர் நா.வ. இரங்கசாமி தாசனின் சொந்த ஊரைச் சேர்ந்த 'காரி முகம்மது' ஆவார்.

மலாக்காவைக் கடந்து சிங்கப்பூரை வந்தடையும் கப்பல்கள் 'தஞ்சோங் பகார் டாக்'கில் நின்றன. துறைமுகத்தில் பழுது வந்திடாமல் காக்கக் காவல் நிலையங்கள் இருந்தன. அவற்றை 'டாணா' என்றழைத்தனர்.

சிங்கப்பூர் 1893இல் எவ்வாறிருந்தது என்பதை அறிய நூலாசிரியர் பல சாலைகளின் பெயர்களையும், புகழ்பெற்றிருந்த நிறுவனங்களின் பெயர்களையும் ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றார். இக்குறிப்புகள் சிங்கப்பூரின் பூகோள அமைப்பையும், வர்த்தக முக்கியத்துவத்தையும் அறிய உதவுகின்றன. இன்றைய அன்சன் சாலை 'யின்சிங் ரோடு' எனவும், சவுத் பிரிட்ஜ் சாலை 'சபாஜி ரோடு' எனவும், நார்த் கானல் ரோடு 'கின்னா ரோடு' என்றும் பாடாங் 'ஜனவரித் திடல்' என்றும், சுப்ரீம் கோர்ட் 'பெரிய கோர்ட்' என்றும், கத்ரி & கம்பெனி 'கத்ரிஸ்காட்' எனவும் வழங்கப்பட்டதைக் குதிரைப் பந்தய லாவணி மூலம் அறிகிறோம். 'சார்ட்டர்டு வங்கி', ஹாங்காங் 'ஷங்காய் வங்கி', 'டெலிகிராப் ஆபீஸ்' ஆகியவை எவ்விடத்தில் அமைந்திருந்தன என்பதையும் நூலாசிரியர் சுட்டியுள்ளார். 'கவர்னர்ஹில்' என்பது இஸ்தானாவையும், 'சிறாங் ரோடு' சிராங்கூன் சாலையையும் குறிக்கின்றன.

பரத்தையர்களும் பரத்தமைத் தொழிலும்

உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் தனிமனித ஒழுக்கத்திற்குச் சவாலாக அமைந்த பல தீய பழக்கங்களுள் பரத்தமைத் தொழிலும் ஒன்று. சமூக வறுமையே இப்பழக்கத்தின் ஆணிவேர். ஆயினும் சிங்கப்பூரில் அக்காலத்தில் பரத்தமையொழுக்கம் இருந்ததை நூலாசிரியர் குறிப்பிடும்போது ஒழுக்கக்கேடும், கலாச்சார வறுமையும் இருந்தன என்றுணர முடிகிறது. முதல் உலகப் போர் வரையில் இவண் குடியேறிய

மக்கள்தொகையில் கணிசமான எண்ணிக்கையில் ஜப்பானியப் பெண்கள் பரத்தமைத் தொழிலில் ஈடுபட்டனர் (இளங்கோவன், அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி ஆராய்ச்சிக் குறிப்பு). இச்செய்தியை,

'துஷ்டர்கள் புகழ்ந்திட ஜப்பொன்காரி
தொல்புவியோர் அறியக் கன்னத்தில்
புட்டாவிட்டு குஷமாயிருப்பார்'

என்று லாவணி குறிப்பிடுகிறது. இவ்விலைமாதர்கள் 'நார்த் பிரிட்ஜ் ரோட்டில்' இருந்தனர். 'கோரங்கி ஸ்தீரிகள்' எனப்படும் தெலுங்கு விலைமாதர்களும் இப்பகுதியில் இருந்தனர். கோரங்கி ஸ்தீரிகள் எரிகின்ற சுருட்டை உட்புறமாக வாயில் வைத்துப் புகைத்துக் கொண்டும், கோணல் கொண்டையிட்டும், காதில் வளையமிட்டும் காட்சியளித்ததாகக் கூறுவர். 'கன்னிமக்காக்காரிகள்' என லாவணி குறிப்பிடுவது அரேபிய இசுலாமியப் பெண்களே. இவர்களும் 'நார்த் ப்ரிட்ஜ் ரோட்டில்' இருந்தனர் எனச் சுட்டுகிறது இலாவணி.

தனிமனிதர்களைப் பற்றிய குறிப்புகள்

'பால்கம்பம்' கந்தசாமி ஐயா என்பவரின் அனுமதியோடு ஆசிரியர் ஏதோ செயலில் வெற்றியடைந்தார் என்பதும், அதனால் தம்பியய்யா என்பவர் வெகுமதிகள் தந்தார் என்பதும் குறிப்பிடப்படுகின்றன. அப்பாசாமி என்பவர் 'கவாத்' வேலை செய்வதில் தன்னிகரற்றவர் - காவல் சாவடியில் (டாணா) 'பேதாவாக' வேலை செய்தவர் ; குடும்பத்தோடு சிங்கையில் வாழ்ந்த பணக்காரர்; மாடு வியாபாரம் செய்தார் எனப் பல செய்திகளை நூலாசிரியர் கூறுவதற்குக் காரணம் அப்பாசாமி அவருடைய 'சிஷ்யன்' என்பதே. தன் ஆசிரியரான கருப்பண்ண உபாத்தியாயர் ஊருக்குச் சென்ற செய்தியையும் குறிப்பிடுகிறார். தன்னோடு நெருங்கிய தொடர்பு கொண்ட தனிமனிதர்களைப் பற்றிய செய்திகளை அபிமானத்தின் பேரில் கூறியுள்ளார்.

சிங்கப்பூரில் கிராமிய வாழ்வு

பிரித்தாளும் கொள்கையைக் கொண்ட ஆங்கிலக் காலனித்துவ ஆட்சி குடியேறிகளைத் தனித்தனிக் கிராமங்களில் குடியேற்றியது. இக்கிராமங்களைக் 'கம்பங்கள்' (Kampong) என மலாய் மொழியில் வழங்கினர். தமிழர்கள் வாழ்ந்த கம்பங்களைப் பற்றிய குறிப்புகள் இலாவணியில் இடம்பெறுவதால் கிராமிய வாழ்வு படம்பிடித்துக்

காட்டப்படுகிறது. 'பால்கம்பம்' என்பது 'க்ராஸ் ஸ்ட்ரீட்டிலும்', 'பப்ளோ', 'கர்பாவ்' சாலைகளுக்கு அருகிலும், வண்ணான்துறையைக் குறிக்கும் 'டோப்பிக் கம்பம்' இன்றைய 'டோபிகாட்' பகுதியிலும், 'ரூமா பாஞ்சாங்' என்னும் பகுதி ரோச்சோர் கால்வாய், ஆல்பர்ட் சாலை அருகிலும் இருந்தன. 'வெங்கோல் கம்பம்' என இலாவணி குறிப்பிடுவது இன்றைய 'பென்கூலன் தெரு' (மிடில் ரோடு) பகுதியாக இருந்திருக்க லாம். இவ்விரு சொற்களின் ஒலியொப்புமை கருதி இம்முடிவிற்கு வரலாம். இக்கம்பம் பற்றி இலாவணி, 'வங்கணமுள்ள வேலைக் கண்காட்சி வேடிக்கையை' எனக் கூறுகிறது.

'வங்கணமுள்ள' என்னும் சொல் காதல் மிகுந்த பெண்கள் என்னும் பொருள் பயப்பதாகும். பொதுவிடங்களில் காதல் மிகுதியால் வேடிக்கையான வேலைகளைச் செய்பவர் பொதுமகளிராவர். ஆகவே 'வெங்கோல் கம்பத்தில்' விலை மாதர்கள் வாழ்ந்திருக்கின்றனர் எனத் துணியலாம்.

சிவன் கோயில் பற்றிய செய்தி

'சிவன் கோயிலைத் தாண்டி' என்னும் ஒரு குறிப்பு மட்டுமே இலாவணியில் இடம்பெற்றுள்ளது. இன்று சிவன் கோயில் அமைந்துள்ள இடம் வேறு; ஆயின் 1893லும், அதற்கு முன்னரும் இன்றைய டோபிகாட் எம்.ஆர்.டி. நிலையம் அமைந்துள்ள இடத்தில் அக்கோயில் கட்டப்பட்டிருந்தது.

தமிழர் உரிமை

அன்றைய சிங்கையில் விக்டோரியா நாடக அரங்கு தமிழ் நாடகங்களை நடத்த அனுமதித்ததில்லை என்பதால் நூலாசிரியர் 'விக்டோரியா கூத்து மேடையுந் தூற்றி' எனப் பாடுகிறார். ரூமாபாஞ் சாங் கொடியைப் போற்றுவதாலும், அவ்விடத்தில் ரோச்சோர் கூத்துமேடை இருந்ததாலும் கூத்துகள் தமிழர்களால் நடத்தப்பட்டி ருக்க வேண்டும் என எண்ண இடமுண்டு.

ஐயுறுதற்குரிய இடங்கள்

இலாவணியில் மயக்கந்தரும் இடங்கள் இரண்டு உள்ளன. இவை மேலும் ஆய்தற்குரியன. பினாங்கு நகரை அடைவதற்கு முன் 'அச்சக்கரை பார்' என நூலாசிரியர் பாடியுள்ளார். அச்சக்கரை என்பது

பினாங்கு நகரின் அருகே உள்ள ஒரூராக இருந்திருக்கலாம். ஏனெனில் மலாயா வாழ் நகரத்தார் வீடுகளில் 'அச்சக்கரைப் பாய்' பிரபலமானது. செட்டிநாட்டுப் பகுதியில் 'அச்சக்கரைப் பாய்' பெற்றிருந்த செல்வாக்கை நோக்கப் பாய் பின்னும் தொழில் அவ்வூரில் நடைபெற்றிருக்க வேண்டும் எனத் துணியலாம். இவ்விடம் இந்தோனீசியாவின் அருகே உள்ள 'அச்சே' என்னும் தீவைக் குறிப்பதாகவும் கூறுவார் உள்ளனர்.

இந்நூலின் மற்றோரிடத்தில் 'அப்துல்காதர் மரைக்கார் அகப் பட்ட இடம் எந்தன் இடம் சொல்லு' என்னும் வரிகளில் அப்துல்காதர் மரைக்கார் யார்? அவர் ஓர் ஏஜெண்டா? என்ற ஐயம் எழுகிறது.

ஆங்கிலேயர் பற்றிய குறிப்புகள்

'குதிரைப் பந்தய லாவணி' குதிரைப் பந்தயத்திற்கு வரும் ஆங்கிலேயர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை வழங்குகிறது. மெக்ரீஷன், டாலன், ஏப்ரஹாம் ஆகிய குதிரைக்காரர்களைப் பற்றியும், அவர்கள் குதிரைப் பந்தயத்திற்கு வருவதைப் பற்றியும் கிழ்க்கண்டவாறு கூறுகிறது.

'பார்த்தால் தெரியுதய்யா பாலன் துரையுமவன்',

'அச்சமில்லாமல் மெக்ரீஷனானவனும் அவசரமாக வாரான்',

'பாலனிபுறாமடி பந்தயத்துடன் வந்தான்.'

குதிரை வண்டிகளின் (Hackney) சொந்தக்காரர்களாய் இம்மூவரும் இருந்தனர். டாலனின் லாயம் 'கோய்க்' சாலையிலும் (Koek Road) ஏபிராஹிமின் லாயம் 'ஆர்ச்சட்' சாலையிலும் இருந்தன. டாலன் சுற்றுப்பயணிகளுக்குக் குதிரை வண்டிகளை வாடகைக்கு விட்டவன் என்று வரலாறு கூறுகிறது. ஏபிரஹாம் 250 குதிரைகளை வைத்திருந் தான் எனவும், உள்ளூர்ச் சமூக வாழ்வில் செல்வாக்கு உடையவனாகத் திகழ்ந்தான் எனவும் வரலாறு கூறுகிறது (இளங்கோவன், 'அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி ஆராய்ச்சிக் குறிப்பு').

2. சிங்கை நகர் சிங்கார வடிவேலர் காவடிச் சிந்து

நூலின் நோக்கம்

சிங்கை நகரில் அன்று தொட்டு இன்று வரை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் சமயத் திருவிழாவாம் தைப்பூசத்தின் பெருமையை

'ஆனந்தக் களிப்பாகக்' கூறுவது இந்நூலின் நோக்கமாகும். இந்நூலைக் காரைக்குடியைச் சேர்ந்த ராம.மு.ராம.இராமநாதன் இயற்றியுள்ளார்.

நூலமைப்பு

மற்ற மூன்று பயண நூல்களை விடவும் முழுமை பெற்ற நூலாக வடிவச் செம்மையுடன் இது திகழ்கிறது. நூலிறுதியில் இடம்பெறும் தொகுப்புரையும், வாழ்த்துகளும் நூலின் முழுமையை உறுதிப்படுத்து கின்றன. இந்நூலில் பெண்ணை விளித்துச் செய்தியைக் கூறும் போக்கு காணப்படுகிறது. இதனால் பெண் இவருடன் பயணம் செய்திருக் கலாமோ என்ற ஐயம் எழக்கூடும். நூலாசிரியர் நகரத்தார் மரபைச் சேர்ந்தவர். 'முந்நீர் வழக்கம் மகடுஉவோடில்லை' என்னும் நெறிப்படி வாழ்ந்த நகரத்தாருள் 9.2.1933இல்தான் முதல் நகரத்தார் பெண்மணி பினாங்கிற்குத் தன் கணவருடன் வந்தார் (சேஷாத்ரி சர்மா, 1970). ஆகவே இந்நூலில் பெண்ணை விளித்துப் பாடுவது நாட்டுப்புற இலக்கியத்தின் கூறாகவே அமைந்துள்ளது. மேலும் இந்நூலைப் பொறுத்தவரை பெண்ணைப் பற்றிய வருணனைகள் விரசமாக இல்லை. 'கற்றோர்கள் என்பதைச் சிலமுடனே சொல்லும் கனவாக்கினாலே அறியலாம்' (மா. இராமலிங்கம், 1979) என்பதற்கிணங்கச் சொல்லாட்சி அமைகிறது. கூறியது கூறலைத் தவிர்க்க நூலாசிரியர் கூற்று பயன் படுகிறது.

நூலாசிரியரின் பன்னூற்பயிற்சி

தமிழிலக்கியங்கள், புராணங்கள் போன்றவற்றைக் கற்றவர் நூலாசிரியர் என்பது மலைவளம், கோவில்வளம், முருகனின் இரதம் பற்றிய வருணனை ஆகியவற்றின் மூலம் தெரியவரும். சான்றாக 'வெய்ய புலி பசுவோடு நின்று விளையாடும்' என்பது சிங்கையின் அமைதிக்குக் கூறப்படும் உவமையாகும். இது தமிழிலக்கியங்கள் பலவற்றிலும் இடம்பெற்றுள்ளது. முருகனைச் 'சிப்பாய்' என்று அழைப்பர் அருணகிரி நாதர். நூலாசிரியரும் இச்சொல்லைப் பயன்படுத்துவதால் 'திருப்புகழ்' போன்ற பனுவல்களையும் கற்றிருக்க வேண்டும் எனத் துணியலாம்.

நகரத்தார் பற்றிய செய்திகள்

நூலின் நோக்கம் முன்னர் கூறப்பட்டது போலத் தைப்பூச மகிமை பாடுவதாக இருப்பினும், இப்பூசத் திருநாளை நடத்துபவர்கள் நகரத்தார்கள் என்பதாலும் பல விரிவான செய்திகள் நகரத்தார்களைப்

பற்றிக் கூறப்படுகின்றன. சிங்கை நகரின் செல்வச் செழிப்பிற்கு முதுகெலும்பாக இருந்த நகரத்தார்களின் செல்வவளம் சிறப்பாகப் போற்றப்படுகிறது. 'பற்றுவரவிலே சல்லிக் காசும் விடத்' துணியாமை, உசித வட்டிக்குப் பணம் கொடுத்தல், ரொக்கக் காசினைச் செல விடாமை, வம்பரிடம் அடகு எடுக்காமை போன்றவை நகரத்தார்களின் தொழில் உத்திகளாகக் கூறப்படுகின்றன.

நகரத்தார் வரலாறு, பழக்க வழக்கங்கள், இறைவனை மறவாப் பக்தியுணர்வு, அறநெஞ்சம், வாய்மை வழாமை, சிக்கனம், பழிக்கு அஞ்சும் பான்மை போன்ற உயர்குணங்கள் சிறப்பிக்கப்படுகின்றன. சிங்கை நகரில் செட்டியார்கள் வட்டித் தொழில் நடத்தி வந்தாலும் அவர்களின் குடும்பங்கள் தமிழகத்தின் செட்டிநாட்டுப் பகுதியில்தான் இருந்தன. பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் பாடியது போல 'இல்லறமும் இல்லாமல், துறவறமும் இல்லாமல் இரண்டுங்கெட்டு' நகரத்தார் வாழ்ந்தனர். இவர்கள் சிங்கையில் மார்க்கெட் ஸ்திரீட் பகுதியில் வாழ்ந்தனர்.

சீனர்கள் பற்றிய செய்தி

முருகனின் வெள்ளி ரதம் செல்லும் வழியினை வருணிக்கும் வேளையில் சீனர்களைப் பற்றித் தானறிந்த தகவல்களை நூலாசிரியர் கூறியுள்ளார். பல்லினச் சமுதாயம் சிங்கப்பூரில் ஆரம்ப காலத்திலிருந்தே வாழ்ந்து வந்துள்ளது என்பதற்குச் சீனர்களைப் பற்றிய செய்திகளும் சான்றாகும். சமுதாயத்தைப் புறக்கணித்துவிட்டு எந்த ஓர் இலக்கியமும் தோன்றவியலாது. இலக்கியக் கலைப் படைப்பிற்குள்ள பொதுத் தன்மைகளுள் சமுதாயப் பின்னணியைச் சாற்றுவதும் ஒன்றாகும். சிங்கையில் குடியேறிய சீனர்களைப் பற்றி ஆசிரியர் சமூக அக்கறை யுடன் செய்திகளை மொழிந்துள்ளார். சீனர்களின் வாணிப நோக் கையும், வளமார் வாழ்க்கையையும்,

> 'ஒப்பில் சீனத்துச் சாதியர்கள் கூட்டம்
> நாளும் செய்கின்ற வியாபாரந் தனிலே நாட்டம்'

எனப் போற்றுவர். சீனர்களின் இனப்பற்று, உழைப்பாற்றல், செய்யும் தொழிலில் உயர்வு தாழ்வு கருதாமை, தெய்வ வழிபாடு, உணவுப் பழக்கங்கள், வசிப்பிடம், குணநலன்கள் ஆகியவை பற்றிய விரிவான செய்திகளை நோக்க நூலாசிரியருக்குச் சீனர்களோடு அணுக்கமான உறவும், நட்பும் இருந்திருக்க வேண்டும் என அறியலாம். அண்டிய

வரைக் காப்பதும், முரண்பட்டோரை வஞ்சந் தீர்த்துக்கொள்வதும் சீனர்களின் நீர்மை. இதனை,

'தம்மை அண்டியவரைக் கைவிடமாட்டார் வஞ்சம்
அடுக்கிலோ வொருக்காலும் அவரைவிடார்'

என்று உள்ளதை உள்ளவாறே படம்பிடித்துக் காட்டுவர்.

ஆங்கில ஆட்சியின் புகழ்பாடுதல்

வாழ்க்கைப் போராட்டத்திற்காக ஆளும் வர்க்கத்தினரைப் போற்றி அடிபணிந்து வாழ்வது என்ற நிலையில் ஆங்கிலேயரின் புகழைப் பாடியிருக்கலாம்; அல்லது யாரையும் பகைத்துக்கொள்ள வேண்டாம் என எண்ணும் நகரத்தார் இனப்பண்பும் இதற்குக் காரணமாக இருக்கலாம். காலனித்துவ ஆட்சியின் கல்வித் துறை, நீதித் துறை, காவல் துறை பற்றிய பல செய்திகள் பாராட்டுமுகத்தான் அமைந்துள்ளன.

'காசு வாங்காமல் சிறுவர்களைப் படிப்பிக்கு மதியோர்' எனப் போற்றுவதால் இலவசக் கல்விமுறை சிறுவர்களுக்கு வாய்த்ததை நாம் அறியலாம். மேலும் கைத்தொழிற் கல்வியிலும் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது என்பதனை 'கைத்தொழில்களுஞ் செய்ய வருத்தி வைப்பார்கள்' என்னும் வரி உணர்த்துகிறது.

ஆங்கிலேயர்களின் வசதிமிக்க வாழ்க்கையை இந்நூல் சிறப்புறச் சித்திரிக்கிறது. 'மேன்மையோடு சுகம் அனுபவிக்கும் இச்சாதி' என்பது ஆங்கிலேயர் பற்றி நூலாசிரியரின் கணிப்பாகும். ஆக்ஸ்லி சாலையில் ஆங்கிலேயர்களின் வங்களாக்கள் (பங்களாக்கள்) அமைந்திருந்தன. இச்சாலையில்தான் உயர்பதவிகள் வகித்தோரும், பெரிய வியாபாரிகள், சட்டைக்காரர் எனப்படும் யூரேசியர்கள் ஆகியோரும் வாழ்ந்தனர். ஆர்ச்சட் சாலையில் ஆங்கிலேயர்களுக்காக மதுபானக் கடைகள் நடத்தப்பட்டன. இம்மதுபானக் கடைகள் பற்பல விளக்குகள் பொருத்தப்பட்டு ஒளிவெள்ளத்தை உமிழ்ந்தன. இதைப் பாடும் நூலாசிரியர் 'ஆழ்ந்த சமயப்பற்றுடையவர்கள் லெட்ச தீபம் காண்பதைப் பேரின்ப நிலை (முத்தி) என்று எண்ணுவதைப் போல' ஆங்கிலேயர்கள் மதுபானக் கடைகளின் லெட்சதீபத்தை முத்தியாகக் கருதினர் என எள்ளற் சுவையோடு பாடியுள்ளார். இவர்கள் பந்து விளையாடத் தனித்திடலும் உண்டு. சிங்கப்பூரின் சட்டத் துறையைப் பற்றிய குறிப்பொன்றும் இந்நூலின்கண் இடம்பெற்றுள்ளது.

'கொலை களவு அடிபிடிகளாதி யாவுங்
கொண்டுபோயுள்ளதை விசாரித்து நீதி
உண்மை நிலை கண்டு இன்னதீர்ப்பென்பார் தங்கள்
நீதிக்குமீறிலிது கிரான்சூடியென்பார்
நடத்தும் இவ்வண்ணஞ் சட்டமதைத்தானே - செய்து
இங்கிலீசுத்துரைமார்கள் வைத்ததிது தானே'

என்னும் பகுதியின் வாயிலாக இக்காலத்தைப் போலில்லாமல் அக்காலத்தில் ஜூரி முறை வழக்கில் இருந்தது என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

ஆங்கிலேயர்கள் தருமத்திற்காக மருத்துவமனைகளை நடத்தினர். இம்மருத்துவமனை இரவு பத்து மணி வரை திறந்திருந்தது; 'தருமத்திற் காகத்தானே செய்கிறோம்' என நினைக்காமல், குழந்தைக்கு மருந்து கொடுத்துக் கவனித்துக்கொள்ளும் தாய் போல அக்கறையுடன் நோயாளிகளைக் கவனித்துக்கொண்டனர்.

அக்காலச் சிங்கப்பூரில் சீனர்கள் அதிகம் வாழ்ந்த தெருக்களில் ஒன்று 'மில் ஸ்திரீட்'. இவண் நாகரிக மனைகள் பல இருந்தன. 'ரிவர் வல்லி' சாலையில் பனிக்கட்டி ஆலை ஒன்றிருந்தது. அருங்காட்சியகம், வரி வாங்கும் 'தமாசாபீஸ்' முதலியவை இருந்தன எனவும், இன்றுள்ள அக்கம்பக்கக் காவல் சாவடிகள் போன்று அக்காலத்திலும் காவல் சாவடிகள் இருந்தன என்றும், அவற்றை 'கேட்டாபீஸ்' என்றழைக்கும் வழக்கம் இருந்தது என்றும் அறிகிறோம்.

பொதுப் போக்குவரத்திற்குக் காந்த வண்டிகள் (electric tram cars) பயன்பட்டன. இவற்றில் கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டது; அடிக்கடி இவ்வண்டிகள் ஓடியதை 'க்ஷணத்துக்குச் க்ஷணம்' என்ற சொல்லாட்சி குறிக்கிறது.

கொடிமலை என்பது 'போர்ட்கேனிங்' மலையைக் குறிக்கிறது. இவண் ஆங்கில அரசாங்கத்தின் கொடி பறந்து கொண்டிருக்கும். இராணுவத்தினர் இங்கே இருந்தனர் எனவும், பொதுமக்கள் நேரத்தை அறிந்துகொள்ளப் பதினைந்து நாழிகைக்கொரு (கடிகை) முறை பீரங்கியால் சுட்டனர் (குண்டு போட்டிடுவார்) எனவும், அரசாங்கத் தொடர்புடைய இடம் என்பதால் பொதுமக்களை நெருங்க விடுவ தில்லை என்றும் அறிகிறோம். கொடிமலை ஆண்டவர் என நூலாசிரியர் சுட்டுவது கல்லறையைக் குறிப்பதாகும். பரமேஸ்வரா மன்னனைப் புதைத்த இடம் எனவும், யாரோ முகமதியர் ஒருவரின்

கல்லறை உள்ள இடம் எனவும் இருவேறு கருத்துகள் வழங்கப் படுகின்றன.

தைப்பூச விழா

தைப்பூச விழாவைக் காணத் துரைமார்களும், துரைசானிகளும், உயர்பதவி வகித்த ஆங்கிலேயர்களும் வந்திருந்தனர் என்பதையும், அவர்களை ஆலய நிர்வாகத்தினர் தக்க மரியாதைகளுடன் கவனித்தனர் என்பதையும், தைப்பூசத்தையொட்டி ஐந்து நாட்களுக்குக் காலை பத்து மணி முதல் மாலை நான்கு மணி வரையில் அன்னதானம் வழங்கப் பட்டது என்பதையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். இதன் மூலம் தைப்பூச விழா பற்றிய சிறப்புச் செய்திகளை நாமறிகிறோம்.

கோவிலமைப்பு

இன்று கண்ணைக் கவரும் எழிலுடன் காட்சி தரும் தண்டாயுதபாணி ஆலயம் 4.4.1859இல் கட்டப்பட்டதாகக் கோவில் வரலாறு பற்றிக் கோவிற் கல்வெட்டு கூறுகிறது. பழைய கோயிலின் நுழைவு வாயிலின் முன்பக்கம் இரண்டு திண்ணைகள், பின்பு செட்டி நாட்டு வீடுகளிலுள்ளதைப் போன்ற அலங்கார மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை என்ற அமைப்போடு 'கார்த்திகைக் கட்டு' என்னும் பகுதியும் இருந்தன. இந்நூலாசிரியர் கருவறையை (கர்ப்பக்கிரகம்) வருணிக்கும்போது,

'தவளமிகு படிகக்கல் சேர்த்துமேடை
தானிட்டு புட்பராகச் சட்டங்கோர்த்துச்
செய்ய பவளத்தினாற் கால்கள் நாட்டித் துய்ய
பச்சை வளை பூட்டி மாணிக்கக் கைமாட்டி
சொலிக்கும் வயிரத்தினாற் பலகை சேர்த்துச் செம்பொன்'

என உயர்வுநவிற்சியாய் வருணிக்கிறார். இதனால் நூலாசிரியரின் வருணனைத் திறமும் கற்பனை வளமும் புலனாகின்றன.

சிங்கப்பூர்ச் சாலைகளும் இடங்களும்

சிங்கப்பூரின் முக்கியமான இடங்களையும் சாலைகளையும் நூலா சிரியர் ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்கிறார். இதனால் சிங்கப்பூரைப் பற்றிய படக்காட்சி நம் மனத்திரையில் ஓடும். 'புக்கைபாசோ' என நூலாசிரியர் சுட்டுவது 'புக்கிட்பாசோ' (Bukit Pasoh) பகுதியையும்

'கமிசேரி மலை' என்பது 'பேர்ல்ஸ் ஹில்' (Pearls hill) என்னும் குன்றையும், 'துள்ளாயர் ஸ்திரீட்' என்பது 'தெலுக் ஆயர்' (Telok Ayer Street) வீதியையும், 'கிள்ளங்கி ஸ்திரீட்' என்பது 'கிளிங் தெரு' (Kling' Street) என்பதையும் குறிக்கின்றன. மேலும் 'அச்சா ரோடு' 'ஆர்ச்சட் சாலை'யையும், 'சிப்பாய் லயன்' என்பது 'சிப்பாய்லேன்' (Sepoy lane) பகுதியையும், 'கைவுர்மென்று வீடு' 'இஸ்தானா'வையும் (Istana) குறிக்கின்றன.

3. பிரமன் ஆலய வழிநடைச் சிந்து

நூலமைப்பு

முத்து நாடார் இந்நூலாசிரியர். இந்நூல் இரு பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளதாக முன்னுரையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இந்நூலின் முதற்பாகம் மட்டுமே கிடைத்துள்ளது. இப்பகுதியும் முழுமையாக இல்லை. இந்நூல் நாடகமாகப் பாடப்பட்டது என்பதை 'இந்நிலத்தில் நாடகமாய் இன்பமுடன்' என்ற தொடர் மூலம் அறியலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வழங்கிய தெருக்கூத்து பாணியில் ஆசிரியர் இதனைப் பாடியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இந்நூலின் கீர்த்தனைகள் அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த 'மெட்டுகளில்' (tunes) பாடப்பட்டுள்ளன.

நூல் நுவலும் செய்திகள்

நூலாசிரியர் தன்னுடன் வரும் பெண்ணிடம் வழிநடைக் காட்சிகளைக் குறித்தும், தனக்குத் தெரிந்தவர்களைப் பற்றியும், தான் சந்திக்க வேண்டியவர்களைப் பற்றியும் கூறுகிறார்.

மக்களின் வசிப்பிடம்

தமிழகக் குடியேறிகள் பலரும் 'குமுசுகளில்' வசித்தனர். 'பேச்சந்தன் கம்பெனி பலமான குமுசு மய்யம்' எனக் குறிப்பதால் கம்பெனி அல்லது நிறுவனம் குமுசுகளைக் கட்டியிருக்கலாம் அல்லது வாடகைக்கு அமர்த்தியிருக்கலாம் என எண்ண இடமுண்டு. இதை உறுதிசெய்வது போல 'குமுசுக்கார முதலாளிகள்' என்னுந் தொடர் அமைகிறது. குமுசுகளில் குடிநீர்க் கிணறுகள், கோப்பிக் கடைகள் இருந்தன. குமுசுக்காரர்களுக்குச் சொந்தமான எல்லையில் தென்னை மரங்கள் நடப்பட்டிருந்தன.

நூலாசிரியர் தங்கியிருந்த 'குமுசு' பிரமன் ஆலயத்திலிருந்து நாலே முக்கால் கல் ($4^3/_4$ mile) தொலைவில் உள்ளது எனவும், உடன் வரும் பெண்ணை நடக்க ஆயத்தமாகும்படியும் கூறுகிறார் ஆசிரியர்.

தனிமனிதர்கள் பற்றிய செய்திகள்

பழனி மண்டோர், மன்னர் போற்றும் வீரப்பன், நண்பன் சின்னையன், மக்களின் துயர் துடைக்கும் கோபாலு அப்பு, 'ஏர்பேசில்' வசிக்கும் நடராஜன், அம்முனிப்பட்டி வேலன், நகைகள் இரவல் தரும் கருப்பையா, கெ.பி.சின்னையா, நெட்டையன் (பாஞ்சான்) என்றழைக் கப்பட்ட மருதமுத்து சாமி ஆகியோரிடம் விடைபெற்றுக் கோவிலுக்குச் செல்கிறார் நூலாசிரியர். பல பேரை நட்பாகப் பெற்றதால் செல்வாக்கு உடையவராக இருக்க வேண்டும் என்றே நினைக்கத் தோன்றுகிறது. தனிமனிதர்களை அறிமுகப்படுத்தும்போது அவர்களின் குணநலன் களை அடைமொழியாகக் கூறுகிறார் நூலாசிரியர். 'பரோபகாரம்' மிக்க வி.ஆ.என். ஆறுமுகம், 'பக்திமிக்க' பழனியப்பன் என வரும் தொடராட்சி களை நோக்க நூலாசிரியர் நல்லவர்களையே நட்பாகக் கொண்டு பழகினார் என்றறியலாம்.

சீனர் பற்றிய குறிப்பு

'லிமொன்' என்னும் சீனர் 'கிராணியாக' (Clerk) பணியாற்றியவர் என்றும், அன்பாகப் பழகுபவர் என்றும் கூறுவதிலிருந்து இனவேறுபாடு கருதாமல் பழகும் உள்ளங்கள் அன்றும் இருந்ததை அறிகிறோம்.

பழக்க வழக்கங்கள்

கையில் காசு இல்லாத நிலையில் வழியில் தன் நண்பர்களைச் சந்தித்துப் பணம் கடன் வாங்கிக்கொண்டு செல்வதும், கோப்பிக் கடையில் கடனுக்குச் சாப்பிட்டுவிட்டு மீண்டும் வரும்போது பணம் கொடுப்பதும், பெண்கள் இரவல் நகைகளை அணிந்து செல்வதும் வழக்கமாக இருந்திருக்கின்றன. கிராமியக் கலைகளுக்குச் செல்வாக்கு இருந்தது என்பதைப் 'புஷ்பப் பல்லக்கின் பின் புலிவேசம் நடந்தது' என்னும் குறிப்பின் மூலம் அறியலாம். சீனக் கோவிலுக்குச் செல்வதானால் உரிய அனுமதியுடன் செல்லும் பழக்கமும் இருந்தது.

செல்வச் செழிப்பு

மக்காக்காரர்களாகிய முஸ்லீம்களின் 'சொந்த ரோடு' என்பது சையத் ஆல்வி சாலையைக் குறிக்கிறது. இங்கே 'கியாஸ் லைட்' (பெட்ரோமாக்ஸ் விளக்குகள்) எரிவது செல்வத்தின் அடையாளமாகக் கூறப்படுகிறது.

இசுலாமியர்கள்

சிங்கையில் நிறைய இசுலாமியர்கள் வாழ்ந்தனர் என்னும் குறிப்பும் நூலில் இடம்பெறுகிறது. அப்துல்கனி ராவுத்தர், நாமலூரு ராவுத்தர், நயினா முகம்மது ராவுத்தர் எனத் தன் இசுலாமிய நண்பர்களைப் பற்றியும் நூலாசிரியர் சுட்டுகிறார். இதன்மூலம் 'சமயம்' நட்புக்குத் தடையாக அமையவில்லை என்று அறிகிறோம்.

ஒட்டுக்கடைகள்

சிராங்கூன் சாலையில் தமிழர்கள் ஒட்டுக்கடை வைத்திருந்தனர். வீர.சுப்பையா சேர்வை, சி.கே. கருப்பையா அம்பலம் ஆகியோர் பற்றிய குறிப்புகள் மூலமும் தமிழர்கள் சிறிய அளவில் சொந்தத் தொழில் செய்து வந்ததை அறிய இயல்கிறது.

பெயர்களுக்குப் பின் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ளச் சாதிப் பெயர்களை இணைத்துக்கொள்வதில் மக்கள் காட்டிய நாட்டத்தையும் அறியலாம்.

சிங்கப்பூரைப் பற்றிய செய்திகள்

நூல் முழுமையாக இல்லாததால் சிங்கப்பூரைப் பற்றிய செய்திகள் விரிவாக அமையாமல், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கின்றன. தாம்சன் ரோடு பற்றிக் குறிப்பிடும்போது 'நாலாபக்கம் பிரியும் ஏழு ரோடு' எனக் குறிப்பிடுகிறார். இதுவும் தெளிவாக அமையவில்லை; மேலும் ஆய்தற்குரியது. தோபாயோ மருத்துவ மனையை 'தருமாஸ்பத்திரி' என வழங்கினர். சிங்கை மக்களுக்குக் குடிநீர் வழங்கிய 'மக்ரிட்சி ஏரி', பழைய குதிரைப்பந்தயத் திடல், 'காலைப் பாசார்', 'தேக்கா பஜார்' போன்றவை பெயரளவில் சுட்டப்படுகினற்ன.

சிங்கப்பூரின் கிராமியப் பின்னணியைத் தண்ணிக்கம்பம், மாட்டுக் கம்பப்பாலம் போன்ற தொடராட்சிகள் வழியே அறியலாம். தண்ணிக்

கம்பம் என்பது இப்போதைய வடபத்ரகாளியம்மன் கோயில் உள்ள இடத்தில் இருந்தது. இங்குள்ள காவல் சாவடி 'தண்ணிக்கம்பம் டாணா' என்று வழங்கப்பட்டது.

பிரமன் ஆலயம்

'சிமிண்டினால் சிலையது ததும்பிய
சவுண்டு தோணிகள் பதிதனிலழகிய'

என்ற வரிகளில் புத்தர் ஆலயம் பற்றிய வருணனை இடம் பெறுகிறது. இவண் சிமிண்டினால் செய்யப்பட்ட சிலைகள் நிரம்பியிருந்தன. 'ஆயிரம் விளக்குக் கோயில்' என இதனை மக்கள் வழங்கியதால் இங்கு எண்ணற்ற விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன என்று அறிகிறோம்.

4. இந்திய கப்பற் பிரயாண வழிநடைச் சிங்காரம்/சிந்து

இந்நூல் பேரளத்தைச் சேர்ந்த பி.கே.ஆறுமுகதாசன் என்பவரால் பாடப்பட்டது. இவர் பாப்புதாசனின் மாணவர். தமிழகத்தில் சிறுசிறு நூல்களை எழுதி வெளியிட்டவர்.

பயணிகள் நிலை

தமிழகத்திலிருந்து பிழைப்புத் தேடி மலாயா, சிங்கப்பூருக்கு வந்த பயணிகள் நிலை பற்றி இந்நூல் விரிவான பல செய்திகளை வழங்குகிறது. அம்மை நோய்த் தடுப்பூசி போட்டுக்கொண்ட பின்னரே பயணிகள் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். 'ரப்பர்த் தோட்ட வேலைக்கென்று அப்பன் தாய் பெண்டு பிள்ளைகளோடு அனந்தம் பற்பல ஜாதிக் கூட்டம்' என நூலாசிரியர் குறிப்பிடுவதிலிருந்து பால் மரக் காட்டில் பாடுபடப் பாட்டாளிகள் கூட்டம் பெருமளவில் தமிழகத்திலிருந்து பல குடும்பங்களாக மலாயா, சிங்கப்பூர் வந்தது என்று அறிகிறோம்.

அக்காலத்தில் 'இலஞ்சம்' கொடுக்கும் பழக்கம் இருந்தது என்பதற்கு இந்நூல் தக்க சான்று. கப்பலில் பயணிகள் ஏறுவதற்குப் படகுகள் அல்லது ஓடங்கள் மூலம் கொண்டு செல்லப்படுவர். தங்களைப் பத்திரமாகக் கப்பலேற்றிவிட ஓடக்காரர்களுக்கு இப் பயணிகள் இனாம் கொடுத்துள்ளனர் என நூல் குறிப்பிடுகிறது.

தமிழர்களைப் போலவே வங்காளிகள், சீனர், இந்தியர், கோரங்கிகள், சிங்களர்கள், பர்மா ஜனங்கள் ஆகியோர் பிழைப்புத் தேடி மலாயா நாட்டுக்கு வந்தனர். தமிழர்கள் தவிர எஞ்சியோர் சீட்டாடிக் கொண்டிருந்தனர். கப்பலில் தில்லானா, லாவணி ஆகியவற்றைத் தமிழர்கள் ஆடிப் பாடி மகிழ்ந்தனர்.

கப்பல் பயணிகள் இழிவாக நடத்தப்பட்டனர் என்னும் செய்தியை,

'பாவியெனப் பேர் படைத்துக் கேவல வேலைக்கு வந்தோர்
படுமோசஞ் செய்குறார்'

என நூல் கூறுவதிலிருந்து பயணிகளின் அவலநிலை தெளிவாகப் புலனாகிறது. வெள்ளையர்கள் இதனைக் கண்டால் தண்டிப்பர் என்று ஆசிரியர் கூறுவதனால் 'சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரங் கொடுப்பதில்லை' என்னும் மனப்பான்மை கப்பல் ஊழியர்களிடம் இருந்திருக்கின்றது எனத் துணியலாம்.

ஏஜெண்டுகளின் ஊழல்

சமுதாயக் கொடுமைகளை எதிர்த்துக் குரல் கொடுக்கும் உணர்வு நூலாசிரியர்களிடம் அமையப் பெற்றிருந்தது. இலக்கியம் சமுதாயப் புரட்சிக்குக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதற்கு இந்நூல் ஏற்றதொரு சான்றாக இலங்குகிறது. பயணிகளுக்கு ஆர்டர் வழங்கும் ஏஜெண்டுகள் பற்றி,

'பாமர ஜனங்கள் தம்மை ஏற்றிக் காசு பறிக்க
பக்திபக்தியாக சிலர் வேஷம் வேஷம்
பாரடியிங்கே இவர்கள் கூறுமுப தேசமொழி
பாவமிவர்கட்கே சேயில்லை மோசம் மோசம்
ஆமெயிவர் தம்மிடம் நாமொரு ரூபாய் கொடுத்தால்
அப்புறம் பார்க்கவே முடியாது மாதே
ஆண்டவனிவர்க் கெக்கதி வேண்டியளிப்பாரோ பூவில்
அன்யாயமிவர் செய்வது தீதே தீதே'

என இந்நூல் குறிப்பிடுகிறது. தமிழகத்தில் நடைபெற்ற இவ்வநீதிகள் மலாயா, சிங்கப்பூருக்குப் பிழைப்பு நாடி வந்த பயணிகளை அளவுக் கதிகமாகப் பாதித்திருக்க வேண்டும். ஆகவே அநீதி கண்டு அடர்த்து எழுகிறார் ஆசிரியர். பணத்தைப் பெற்றுக்கொண்டு 'கம்பி நீட்டிவிடும்' இவர்களை நம்பாது தானே நேரில் சென்று ஆர்டர் வாங்கி வருவதாகக்

கூறுகிறார். இவ்வாறு வலியச் செல்பவர்களுக்கு ஏற்படும் நிலையைக் குறிப்பிடவும் தவறவில்லை.

> 'தாமாக நேரில் சென்றாலும் போமெனப் பிடித்துத் தள்ளும்
> தறுதலைக்கூட்டம் நாகையில் உண்டு உண்டு'

என்பது ஆசிரியரின் குமுறலாகும்.

ஊழல் புரியும் ஏஜெண்டுகளுக்கு மத்தியில் சுல்தான் மிகவும் நல்ல ஏஜெண்ட் என வானளாவப் புகழ்கிறார்.

> 'தத்தாரி தமையடக்கும் உத்தமர் மீது சுல்தான்
> தன் புகழோங்குது உலகம் கண்டுகண்டு'

என்பது ஆசிரியரின் புகழாரம்.

கப்பலிலிருந்து பணிகளை முதன்முதலில் புரமலை எனப்படும் பூரான்மலையில் (St. John's Island) இறக்கினர். இப்பயணிகளின் உடைகளுக்குப் புகையடிக்கும் வழக்கம் அன்றிருந்தது. சிங்கப்பூரில் தொற்று நோய்கள் பரவவிடாமல் தடுப்பதற்காக இந்தியாவிலிருந்து வரும் கப்பல் பயணிகளுக்கு மட்டுமே புகை அடிக்கப்பட்டது. புகை என்பது கிருமிநாசினி என்றும், சுண்ணாம்பு என்றும் கூறுவர்.

> 'பூவையே இவ்விடத்தில் யாவருடைகட்கும் புகை
> புகட்டிக் கொடுத்தார்'

என்பது நூலில் இடம்பெறும் வரிகளாகும்.

பயண வழிகள்

> 'கேளடியிப்போ சிரம்பான் கோலாலும்பூரொடு
> கிட்டிடும் சுங்குரும்பைக்கும் போகும் போகும்
> மெல்லியலே தைப்பிங் பேரா'

எனக் குறிப்பிடுவது நூலாசிரியர் பயண வழிகளை நன்கு அறிந்தவர் என்பதைத் தெளிவுபடுத்தும். மேலும் மலாயா, சிங்கப்பூருக்கு அடிக்கடி வந்து சென்ற பயண அனுபவம் நிறையப் பெற்றவர் நூலாசிரியர் என்றும் நாம் துணியலாம்.

பயண நேரம்

ஐந்து நாள் கப்பல் பயணம் மேற்கொண்டு பினாங்கு நகரை அடைந்தனர் என்பது நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பினாங்கு நகரின் குருவிப்பீர் மலை தெரியக் கண்டு,

'கஷ்டமனைத்தையும் தீர்த்துவிட்டோம்
இன்றைந்து நாளாய்'

என்று நூலாசிரியர் மொழிகிறார்.

மலாக்காவிற்குச் செல்லும் மக்கள் கப்பலை விட்டிறங்கி ரயில் மூலம் சென்றதை,

'நாட்டுப்புறமாக உள்ள தோட்டக்காடி ஸ்டேட்டுக்கெல்லாம்
நாளும் ஏகுவார் ரயிலில் நாடி நாடி'

எனச் சொல்கிறார் நூலாசிரியர்.

கப்பல் வருணனை

கப்பலின் அமைப்பு, கப்பலில் உள்ள வெவ்வேறு பிரிவுகள், தண்ணீர்ப்பீலி, சமையல் செய்யுமிடம் எனக் கப்பல் வருணனை முழுவதுமாகச் சித்திரிக்கப்படுகிறது. இரண்டாம் வகுப்பில் ஆங்கிலேயர்களும், உயர் அதிகாரிகளும் பயணம் செய்தனர். வசதிகள் நிறைந்த இவ்வகுப்பைக் 'குபேரன் மாளிகை' எனப் போற்றுகிறார் ஆசிரியர்.

சிங்கப்பூர் பற்றிய செய்திகள்

சிங்கப்பூர்த் துறைமுகம் சுறுசுறுப்பான துறைமுகம் எனவும், பன்னாட்டுக் கப்பல்கள் இங்கு வந்தன எனவும், கூலியாட்கள் சுறுசுறுப்பாக வேலை செய்தனர் எனவும் இந்நூல் கூறுகிறது. துறை முகத்தைப் பற்றிய இச்செய்தி சிங்கையின் ஏற்றுமதி இறக்குமதித் துறையை மதிப்பிட உதவும்.

சிங்கை 'சட்டதிட்டங்கள்' மிகுந்த நாடு. தக்க அனுமதி இல்லாமல் சிங்கப்பூருக்கு வந்தால் தொல்லைப்படுவர் என்பதை,

'மற்றொரு தேசத்தவரிங்கு உத்தாரம் வாங்காது வரின்
மாட்டிக் கொள்வார் அவஸ்தையிற் தொல்லை தொல்லை'

என்று நூலாசிரியர் கூறுகிறார்.

சிங்கை செல்வம் மிக்க நாடு என்பதை 'மஞ்சடை மாடகூடங்கள்', 'பங்களாவெங்கும் கோடி மனு வாசம் செய்யும் வீடு வீடு' என்னும் தொடர்கள் தெளிவுபடுத்துகின்றன. மேலும் மலாயா நாட்டில் ஈயம், ரப்பர்த் தோட்டம் போன்றவற்றால் செல்வம் செழிப்பதை 'ஆதிலெஷ்மி வாசஞ்செய் நாடு' என்று பாராட்டுகிறார். மலாயாவை நினைத்தால்

'ஆசியா, லண்டன், ஜப்பானும் யோசிக்கும்' எனப் புகழ்கிறார். மலாயாவின் செல்வச் செழிப்பே இவ்வாறு புகழ்வதற்குக் காரணம் ஆகும்.

ஆங்கிலேயரைப் புகழ்தல்

'சமர்த்தன் ஈரோப்பன்', 'வெள்ளைக்கார யூகிகள்', 'சமர்த்தர்', 'வெள்ளைக்காரரின் யூகம்; யூகம்' என்னும் வரிகள் ஆங்கிலேயரின் கூர்த்த மதியைப் பாராட்டுவதாய் உள்ளன. இவை ஆளும் வர்க்கத்தைப் போற்றும் புகழ்மொழிகளே.

ஆசிரியரை இனங்காட்டுமிடம்

நூலாசிரியர் ஆறுமுகதாசன் ஈ.வெ.ரா.வின் கொள்கைகளில் ஆழ்ந்த பிடிப்புடையவர் என்பதை இந்நூலின் வழி அறியலாம். சிங்கப்பூருக்குப் பயணம் மேற்கொள்வதன் பொருட்டு நாகை வந்த ஆசிரியர் நாகையின் வீதிகளை வருணிக்கிறார். அவ்வேளையில்,

> 'தன் குலமே பெரிதென்று அன்யாயக் கொள்ளை கொள்ளும்
> தரகுப் பார்ப்பார வீதி பாராய் பாராய்'

என்று கூறுகிறார். இதன்மூலம் பிராமண வெறுப்பு அல்லது பார்ப்பனீய எதிர்ப்புக் கொள்கை கொண்டவர் நூலாசிரியர் என அவரை நாம் அடையாளம் கண்டுகொள்கிறோம்.

பெண்களை மதிக்கும் கொள்கை

பெண்ணை முன்னிலைப்படுத்திப் பேசும் ஆசிரியர் பெண்ணை வெறும் போகப்பொருளாகவே கருதினார் போலும்! காமச்சுவை மீக்கூர்ந்து நிற்கும் வருணனை நூலில் இடம்பெறுகிறது.

> 'தாஷ்டீக கொக்கோகலீலை போட்டியாய்ப் புரிபவளே',
>
> 'தானெழுந் தென்னோடு நீயுங் கூடிக்கூடி நாசூக்கின்மை
> தாதியைப் போலெனக் கேற்று'

என்பன போன்ற வருணனைகள் பெண்மயக்கில் பிதற்றும் மொழி களாக வெளிப்படுகின்றன. 'கொக்கோகம்' என்பது உடலுறவுக் கலையாகும். மேலும் இவ்வருணனைகளால் ஆசிரியரும், அக்காலச் சமுதாயமும் பெண்களைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணங்களைப்

அறிய முடிகின்றது. ஆயினும் 'தாயகம் போலச் சிங்கை நகரில் நேயமுடன் வாழ வேண்டும்' என வேண்டுகோள் விடுப்பது நாட்டின் மீது விசுவாசங் காட்ட விடுக்கப்படும் வேண்டுகோளாகவே ஒலிக்கிறது.

முடிவுரை

சமுதாயத்தைச் சொல்லில் வடித்தளிக்கும் சித்திரங்களாக, வரலாற்றை அறிய உதவும் ஆவணங்களாக இந்நான்கு நூல்களும் திகழ் கின்றன. படைப்பிலக்கியம் சிங்கப்பூரில் தோன்றப் பாதை அமைத்துக் கொடுத்த இப்படைப்பாளர்கள் காரிகை கற்றுக் கவிபாடும் திறமை பெற்றிருந்தும், ஏட்டில் எழுதாக் கவிதை வடிவங்களுக்கு ஏற்றம் தந்து இந்நூல்களைப் படைத்துள்ளனர். இந்நான்கு நூல்களுள்ளும் 'சிங்கை நகர்ச் சிங்கார வடிவேலர் காவடிச் சிந்து' முற்றுப்பெற்று முடிமணி யாய்த் திகழ்கிறது.

(1999இல் 'சிங்கா' இருமொழி இதழினில் வெளியிடப்பட்ட கட்டுரை)

பயன்பட்ட நூல்கள்:

1. பழ. முத்தப்பன், சிந்து இலக்கியம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன வெளியீடு, 1983.
2. தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், சிந்தாமணிப் பதிப்பக வெளியீடு, 1989.
3. சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், 1982.
4. மா. இராமலிங்கம், இலக்கியக் கதவு, தாமரைப் பதிப்பகம், 1979.
5. அருள்மிகு தண்டாயுதபாணி கோயில் குடமுழுக்கு விழா மலர், சிங்கப்பூர், 1996.
6. சேஷாத்திரி சர்மா, நகரத்தார்கள், வானதி பதிப்பகம், 1970.

●

சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் ஒரு கண்ணோட்டம்

மொழியின் சொல்வண்ணங்களைக் கொண்டு அறிவு என்னும் தூரிகையால், மனம் என்னும் திரையில், எழுதிக் காட்டும் எண்ணங்கள் என்னும் ஓவியங்களே இலக்கியங்களாக மலர்கின்றன. அத்தகு இலக்கியங்கள் சிங்கப்பூர் மண்ணில் தமிழர்களால் படைக்கப்பட்டுள்ளனவா? அவற்றின் போக்கும் நோக்கும் யாவை? என்பன பற்றிக் கூறுவது இக்கட்டுரை.

சிங்கப்பூர் தனி நாடாகப் பிரியுமுன் மலேசியாவுடன் இணைந்திருந்தது. ஆகவே, சிங்கப்பூர்த் தமிழிலக்கிய மகள் மலேசியத் தமிழன்னையின் வயிற்றில் பிறந்தவளே எனலாம். மகள் திருமணம் முடிந்து புகுந்த வீடு சென்றதும் அங்குள்ள சூழ்நிலைகளுக்கேற்பக் குடும்பம் நடத்துவாள். இவ்வாறே சிங்கப்பூர்த் தமிழிலக்கியமும் சூழலுக்கேற்ப மலேசியத் தமிழிலக்கியத்தினின்று வேறுபட்டுக் கிளைத்தது.

தமிழகத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கியோரும், சமுதாயக் கட்டுப்பாடுகளால் தீய்க்கப்பட்டும், தாக்கப்பட்டும் வாடிய மக்களும், இலங்கைவாழ் மக்களும், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் குடியேறினர்..குடியேறிகளுக்குப் பொருளாதார வளமும், பலமுமே குறிக்கோள்; இலக்கியம் பற்றிய அக்கறை அவர்களுக்கு இருப்பதில்லை என்பது சமூகவியலாரின் ஆய்வுக் கணிப்பு. இக்கூற்று ஓரளவே பொருந்துமாயினும் சிங்கப்பூர், மலேசியாவுக்கு முற்றிலும் பொருந்தும் என்பதற்கில்லை.

திரு. நா.கோவிந்தசாமி சிங்கப்பூர்ச் சூழல், அரசியல், சமூகவியல் ஆகியவற்றின் அடிப்படையில் சில காலகட்டங்களை வரையறுத்துக்

கொண்டு சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வளர்ச்சியைக் கீழ்க்காணுமாறு மதிப்பிடுவார்:

தொடக்க காலம்	1887 - 1930
சீர்திருத்தக் காலம்	1930 - 1942
ஜப்பானியர் ஆட்சிக் காலம்	1942 - 1945
இனஎழுச்சிக் காலம்	1946 - 1960
குழப்பமான அறுபதுகள்	1961 - 1970
நிலைபெற்ற எழுபதுகள்	1971 - 1979
அங்கீகாரம் கிடைத்த எண்பதுகள்	1981 - 1989

சிங்கப்பூர் தனி நாடாகப் பிரிவதற்கு முன் வெளிவந்த பல நூல்கள் மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் உரியதாகப் பல கட்டுரைகளில் கூறப்பட்டுள்ளன. சிங்கப்பூர்த் தமிழிலக்கிய வளர்ச்சி பற்றிய கட்டுரைகள் திரு. கோவிந்தசாமி அவர்களின் காலப் பகுப்புமுறையை அடியொற்றித் தழுவி எழுதப்பட்டுள்ளன. சிங்கப்பூர்த் தமிழிலக்கிய வளர்ச்சியை முழுமையாக அறிவதற்குப் பொருத்தமான காலப் பகுப்புமுறை திரு. கோவிந்தசாமி அவர்களுடையது; ஆதலின், இக் கட்டுரையும் இப்பகுப்புமுறையை அடியொற்றி அமைகிறது.

தொடக்க காலம் (1887 - 1930)

இக்காலகட்டத்தில் பக்தியைப் பாடுபொருளாகக் கொண்ட 'சிங்கை நகர் அந்தாதி', 'சித்திர கவிகள்', 'முருகேசர் பேரில் பதிகம்', 'கீர்த்தனைத் திரட்டு', இரங்கசாமிதாசனின் 'அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி' ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. இக்கால இலக்கியங் களைப் பற்றிக் குறிப்பிடும் பாவலர் முல்லைவாணனின் கருத்து இவண் நினைக்கத்தக்கது. 'இக்காலகட்டம் வரையிலான நூல்கள் பொதுவாக இறையுணர்வு கொளுத்துதலிலும், ஒருசில நாட்டு வரலாற்றைக் குறிப்பிடுவதிலும் முன்னின்றவையாகும்'. இக்கால இலக்கியங்களின் பாடுபொருள் பக்தியாக அமைந்திருப்பினும்கூட, இக்காலகட்டம் சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தின் மூலவர்களாகக் குடியேறிகள் மலரத் தொடங்கிய காலமாகும். திரு. இளங்கோவன் அவர்கள் கூறியிருப்பது போன்று சிங்கப்பூரில் தமிழிலக்கியம் உருவாவதற்கும், வளர்வதற்கும் இவை கால்கோள் செய்தன.

'குதிரைப் பந்தய லாவணி', சிங்கப்பூர்த் தமிழர்களிடையே சமூக அக்கறை அரும்பத் தொடங்கியதற்குத் தக்க சான்று. சிங்கப்பூர் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும் சமூகவியல் குறிப்புகளையும் தன்னகத்தே கொண்டது 'குதிரைப் பந்தய லாவணி'. இந்நூலில் மலேசிய, சிங்கப்பூர் மக்கள் பயன்படுத்தும் மலாய்ச் சொற்கள் இடப் பின்னணியைத் தெளிவுறுத்துவன. சுருங்கக் கூறின் சிங்கப்பூர்ப் பின்னணியில் நூல்கள் படைக்க வேண்டும் என்ற வேட்கை இக்காலத்தே தோன்றியது.

சீர்திருத்தக் காலம் (1930 - 1942)

பெரியார் ஈ.வெ.ரா. அவர்களது சீர்திருத்த உணர்வு மலேசிய, சிங்கப்பூர் மக்களிடையேயும் மேலோங்கி நின்றது இக்காலகட்டமாகும். இதனைப் பற்றி ஈ.ச. விசுவநாதன் அவர்கள் கூறும் கருத்து இவண் நினைக்கத் தக்கது. 'தமிழகத்தில் சீர்திருத்த இயக்கம் வளரக் காரண மாயிருந்த பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களே மலாயாவிலும் அச் சீர்திருத்த வித்தினை ஊன்றினார்'. இவர் 1929ஆம் ஆண்டிலும், 1954ஆம் ஆண்டிலும் மலாயாவிற்கு வருகை புரிந்தார். 1929ஆம் ஆண்டில் மலாயாவிற்கு வந்தபோது ஈப்போவில் அகில மலாயாத் தமிழ் மாநாடு நடந்தது. அதில் பங்குபெற்ற பெரியாரின் ஆலோசனைப்படி நாடு முழுவதும் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்களைத் தலைவராகவும், க.து. அய்யாசாமி மண்கொண்டார் அவர்களைப் பொதுச் செயலாளராகவும் கொண்ட 'தமிழர் சீர்திருத்த சங்கம்', அந்தச் சீர்திருத்த இயக்கங்களில் முதலில் தோன்றியதாகும். கோ. சாரங்கபாணி 'தமிழ் முரசு' என்னும் நாளிதழைத் தோற்றுவித்துப் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பிய துடன் தமிழ்ப் படைப்புகள் மலர்வதற்கும் வழிவகுத்தார். பெரியார் ஊட்டிட்ட சீர்திருத்த உணர்வு இக்காலப் படைப்புகளிலும் எதிரொலித்தது. இதற்குத் தக்க சான்று ம.சி. செல்வதுரை எழுதிய 'கோரகந்தன் அல்லது தென்மலாயா கிரியில் வட இலங்கைத் துப்பாளி' என்னும் நவீனமாகும்.

தமிழகப் பின்னணி கொண்ட நாவல்களும் சிறுகதைகளும் இக்காலத்தில் எழுதப்பட்டன. ஆகவேதான் 'மலேசியாவும் சிங்கப்பூரும் தமிழகத்தோடு கொண்டுள்ள இடையறாத் தொடர்பும் தமிழ் வளர்ச்சிக்கு உதவியாக இருந்து வருகின்றது' என்பர். இக்காலத்தில் ந. பழநி வேலு சமூகச் சீர்திருத்தமே தீவிரமான குறிக்கோள் என்னும் இலட்சிய வேட்கையுடன் எழுதிக் குவித்தார். பல இலக்கிய வடிவங்களும் ந. பழநிவேலுவின் சிந்தனை வண்ணத்தில் பிறந்தன.

இக்காலகட்டத்தில் இலக்கியப் பரப்பு விரிந்தது. ந. பழநிவேலு, வை. ராஜரத்தினம், முகிலன், எம். ஆறுமுகம், சிவத்தம்பி, ராஜம்மாள் ஆகியோர் சிங்கப்பூர்த் தமிழிலக்கியப் பரப்பை விரிவுபடுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

தமிழ்நாட்டுப் பின்னணியை எழுத்தாளர்களால் மறக்க முடிய வில்லை. ஆதலின் அவற்றைக் கொண்ட படைப்புகள் வெளிவந்தன. இக்காலத்தில் உருவாக்கப்பட்ட மேடை நாடகங்களும் சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்தின. மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் குடியேறிய வர்களுள் மிகப் பெரும்பாலோர் பிராமணர் அல்லாத சாதியினர். ஆகவே பெரியாரின் சீர்திருத்த வேட்கை இவர்களைக் கிளர்ந்தெழச் செய்தது; செயல்படவும் தூண்டியது. சமூகச் சீர்திருத்தமே எழுத்தாளர் களின் தாரக மந்திரமாக விளங்கிய நிலையை இக்காலத்தில் காணலாம்.

ஜப்பானியர் காலம் (1942 - 1945)

பெருகி வரும் வெள்ளத்தை அணை கட்டித் தடுப்பது போலச் சமூக அக்கறையுடன் மலரத் தொடங்கிய சிங்கப்பூர்த் தமிழிலக்கிய உணர்வுக்கு ஜப்பானியர் காலம் தடையாக அமைந்தது. பல தமிழ்ப் பத்திரிகைகள் நிறுத்தப்பட்டன. ஆயினும் புதுப்புது இதழ்கள் தோன்றின. சான்றாகச் 'சுதந்திர இந்தியா' (நாளிதழ்), 'சந்திரோதயம்' (மாத இதழ்) ஆகியவற்றைக் கூறலாம். இக்காலத்தில் மக்களின் நோக்கம் ஜப்பானியருடன் இணைந்து ஆங்கிலேயரை விரட்ட வேண்டும் என்பதாகவே மிகுதியும் அமைந்தது. ஆங்கிலேயரை வெளியேற்றி, விடுதலை பெறத் துடித்ததை இக்காலப் படைப்புகள் காட்டுகின்றன.

கவிஞர் ந. பழநிவேலுவின் 'கவிதை மலர்கள்' நூலாக மலர்ந்தது. சிங்கப்பூர்ப் பின்னணி மட்டுமன்றிச் சிங்கப்பூர்த் தமிழர்களின் வாழ்க்கைப் பிரச்னைகளையும் மையமாகக் கொண்ட படைப்புகள் உருவாயின. புராண, இதிகாச எதிர்ப்பும், பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனையும் 1984இல் 'சுந்தரமூர்த்தி நாயனார் கிரிமினல் கேஸ்' என்னும் நாடக நூலாக உருவெடுத்தது. இந்நூலாசிரியர் அ.சி.சுப்பையா என்பவராவார்.

ஜப்பானியர் ஆட்சி ஏற்படுத்திய ஆறாத காயங்கள் இக் காலகட்ட எழுத்துகளில் வெளிப்பட்டன. பக்ருதீன் சாகிப், மணி, ந. பழநிவேலு ஆகியோர் இனம், மொழி, பண்பாடு ஆகியவற்றில் தீவிரமான அக்கறை காட்டினர்.

இக்கால இலக்கியப் போக்கிற்கும் நோக்கிற்கும் துணை செய்தவை 'தமிழ்முரசு' நாளிதழ் போன்ற பத்திரிகைகளே. கதை வகுப்பு, ரசனை வகுப்பு, சிறுகதைப் போட்டி ஆகியவற்றின் பங்கு மிக மிக முக்கியமானதாகும். இவற்றால் புதிய எழுத்தாளர் பரம்பரையும் தோன்றியது.

'தமிழவேள்' கோ. சாரங்கபாணி பொங்கல் விழாவைத் 'தமிழர் திருநாள்' ஆகக் கொண்டாடக் கூறிய சிந்தனைத் தூண்டல், சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தின் போக்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அரசியல் முக்கியத்துவத்தை உணர்ந்து குடியுரிமை பெற்றுச் சிங்கப்பூரில் நிலைத்து வாழ வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டு வந்தது.

1960களில் மாணவர் மணிமன்றம், 'மாதவி' இலக்கிய இதழ் ஆகியவை சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தை வளர்க்கவும் வளம்பெறச் செய்யவும் துணைநின்றன. மேலும் பல புது எழுத்தாளர்களின் வரவு மெருகூட்டியது.

1963ல் சிங்கப்பூர் மலேசியாவுடன் இணைவதா? இல்லையா? என்ற குழப்பமான நிலை நிலவியது. இஃது இக்காலத்தில் தோன்றிய படைப்புகளையும் பாதித்தது என்றே கூற வேண்டும்.

விடுதலைக்குப் பின்

விடுதலைக்குப் பின் வெளிவந்த படைப்புகளின் போக்குப் பற்றிய க. இளங்கோவன் அவர்களின் கருத்து இங்கே நோக்கத்தக்கது. 'இலக்கியம் படைத்தல் என்பது இங்கே இரசம் வைப்பதாகத்தான் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. இலக்கியம் என்பது இரசவாத வித்தை. பொறுப்போடு சிந்தித்தால்தானே மனக்கலவை புதிய தடங்களை அறிமுகப்படுத்தும்.'

இலக்கியப் படைப்பாளராக இலங்கும் திரு. இளங்கோவன் அவர்களின் கருத்து நடுவுநிலையோடு சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தை மதிப்பிடும் திறனாய்வாளர்க்கும் உடன்பாடானதே. பல்வேறு இலக்கிய வடிவங்களான கவிதை, சிறுகதை, நாடகம், நாவல் ஆகியவை கணிசமான அளவில் இக்காலகட்டத்தில் வெளிவந்துள்ளன.

கவிதைத் துறை

மரபுக்கவிதை, புதுக்கவிதை என இரு கிளைகளாகக் கவிதைத் துறை கிளைத்துள்ளது. மரபுக்கவிதைத் துறையில் நிறையக் கவிஞர்கள்

ஈடுபட்டிருப்பினும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில கவிஞர்களே தனித்தன்மையுடன் எழுதி வருகின்றனர். சான்றாக, க.து.மு. இக்பால், (முகவரிகள் சில கவிதைகள்), முருகதாசன் (அழகோவியம்) ஆகியோரைக் கவித்திறன் கொண்டவர்களாகக் காட்டலாம். எஞ்சிய கவிஞர்களின் கவிதைத் தொகுப்புகளை ஆழ்ந்து படித்தால் அவர்கள் கையாண்ட பாடுபொருள்களைச் சில வாய்ப்பாடுகளுக்குள் அடக்கி விடலாம். சிங்கப்பூர்ப் பின்னணி, தமிழ்ப் பெருமை, தமிழர் திருநாள், தமிழர் கொண்டாடும் விழாக்கள், தமிழ்ச் சமுதாயத்தின் குறைபாடுகள், தமிழக மற்றும் மலேசியத் தலைவர்கள் என்னும் வாய்ப்பாட்டிலே கவிதைகள் அமைந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. கற்பனை வளம், கவிதைக் கலையின் கூறுகள் ஆகிய கலையம்சங்கள் ஆங்காங்கே தலைகாட்டும் நிலை அரிதில் காணக்கூடிய ஒன்றாம். பல கவிஞர்கள் புதிய சிந்தனைகளைக் கொண்டிராமைக்கும், 'அரைத்த மா அரைக்கும்' அவலநிலைக்கும் சில காரணங்களைத் தெளிவாகக் கூற முடியும். தன்முனைப்பு மேம்பட்டு நிற்கும் போக்கு, இதன் விளைவாகக் கவிஞர்கள் தம்மைக் கம்பன், காளிதாசன், பாரதி என எண்ணி மயங்கும் நிலை ஆகியவை கவிஞர்கள் மனித வாழ்க்கையை உற்றுநோக்கத் தடைக்கற்களாகின்றன. சிங்கப்பூர் நாட்டில் நல்லாட்சி நிலவுவது உலகறிந்த உண்மையே. ஆயினும் தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்க்கையைக் கவிஞர்கள் உற்றுநோக்க மறுப்பது ஏன்? கவிஞர்கள் இயந்திரமாகி வருவதன்றோ காரணம்!

புதுக்கவிதைத் துறை இளைஞர்களைக் கவர்ந்துள்ள துறையாக இலங்குகிறது. இவ்விளையர்கள் அனைவரையும் இவண் குறிப்பிட இயலாது. மரபுக்கவிதைகளைத் துய்ப்போர் எண்ணிக்கையை விடப் புதுக்கவிதையைத் துய்க்கும் வாசகர்கள் பெருகி வருகின்றனர். க.து.மு.இக்பால், க.இளங்கோவன் ஆகிய இருவரும் புதுக்கவிதைத் துறையில் கணிசமான பங்காற்றி வருகின்றனர்.

சிறுகதைத் துறை

சிங்கப்பூரில் விடுதலைக்குப் பின்னர் பல சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. திரு. நா.கோவிந்தசாமி, சிங்கை மா. இளங்கண்ணன், க. இளங்கோவன், இராம. கண்ணபிரான் ஆகியோர் பண்பட்ட கலைக்கூறு பொருந்திய இலக்கியப் படைப்புகளை உருவாக்கியுள்ளனர். இலக்கியத் தரமுடைய சிறுகதைகள் வரிசையில் 'சிங்கப்பூர்ப் புனைகதைகள்' என்னும் சிறுகதைத் தொகுப்பில் உள்ள சிறுகதைகள்

அனைத்தையும், 'இருபத்தைந்து ஆண்டுகள்' என்னும் நூலில் உள்ள அனைத்துச் சிறுகதைகளையும் குறிப்பிடலாம்.

இலக்கியத் தரமுடைய இச்சிறுகதைகளை ஆழ்ந்து படிக்குங்கால் இவற்றைப் படைத்த எழுத்தாளர் பெருமக்கள், வாழ்க்கையை ஊடுருவிக் காணும் திறன் உடையவர்களாயும், வாழ்க்கையை மேம்படுத்த வழிகாட்டும் புதிய சிந்தனை உடையவர்களாயும், புதுமைகள் புரியும் ஆற்றல் உடையவர்களாயும், ஆசியான் வட்டார இலக்கிய வளர்ச்சி பற்றி நன்கறிந்தவர்களாயும், இலக்கிய உணர்வுடன் எழுதும் திறன் உடையவர்களாயும் இருப்பதை நன்கு உணர முடியும்; அறிய முடியும். பல இன மக்கள் வாழும் சிங்கப்பூரில் சீன, மலாய், ஆங்கிலச் சிறுகதைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கத்தக்க தரமான நல்ல தமிழ்ச் சிறுகதைகளும் உள்ளன என்று உறுதியாக நாம் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்.

நாவல் துறை

நாவல் துறை தத்தித் தளர்நடையிட்டு வரும் துறை. பெரும்பாலும் குறுநாவல்கள் வெளிவந்துள்ளன. வெளிவந்துள்ள குறுநாவல்களையும் ஓரிரு நாவல்களையும் ஆழ்ந்து படித்தால் எழுத்தாளர்கள் கதைகூறிச் சென்றுள்ளனரே தவிரக் கலையம்சம் படைத்த நாவல் எழுதவில்லை என்பது தெற்றெனப் புலனாகும். சான்றாக 'அலைகள்', 'கலா' ஆகிய வற்றைக் கூறலாம். ஆயினும் 'வேள்வி' என்னும் குறுநாவல் தனித்தன்மை வாய்ந்த தமிழ்ச் சமுதாயப் பிரச்னைகளை இனங்காட்ட எழுந்த அற்புதமான கலைப்படைப்பு. குறுநாவலின் தலைப்பு உணர்த்தும் செய்திகள் பல. குறியீடு போலத் தலைப்பு அமைந்துள்ளமை நயமுடையது. சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தை வளர்க்கவும், வளப் படுத்தவும் 'வேள்வி' என்னும் குறுநாவல் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் வல்லமை வாய்ந்தது.

நாடகத் துறை

நாவல் துறை போலவே தளர்நடையிடும் குழந்தையாகத்தான் நாடகத் துறையும் விளங்குகிறது. மேடை நாடகங்கள் விடுதலைக்கு முன்பு செல்வாக்குப் பெற்றிருந்தன; ஆயின் விடுதலைக்குப் பின்னர் செல்வாக்கிழக்கத் தொடங்கின. இன்று புதுஉத்தி நாடகங்கள் அவ்வப்போது படைக்கப்பட்டு வருகின்றன. புதுஉத்தி நாடகத் துறையில் கணிசமான பங்காற்றி வருபவர் இளங்கோவன். இளையர்

சிலர் புதுஉத்தி நாடகத் துறையின்பால் ஆர்வம் கொண்டு சோதனை முயற்சிகளில் ஒரொருகால் ஈடுபட்டு வருகின்றனர்.

சிங்கப்பூரில் மேடையேற்றபபட்ட நாடகங்கள், வானொலியில் ஒலிபரப்பான நாடகங்கள் ஆகியவை நூலுருப் பெற்றுப் படிப்பதற்குரிய நாடக வகையாக வெளிவந்துள்ளன. இங்ஙனம் நூலுருப் பெற்ற நாடகத் தொகுப்புகள் பதினொன்று. இவற்றை இந்தியர் பண்பாட்டு நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவினர், தமிழ் இளையர் மன்றம் ஆகியவை வெளியிட்டுள்ளன. இவற்றுள் 'சுவடுகள்' (எஸ். வரதன்), 'சிங்கப்பூரில் மேடை நாடகங்கள்' ஆகிய இரு நூல்களும் சிங்கப்பூரின் நாடகத் துறையைப் பற்றி அறிந்துகொள்ளப் பெருந்துணை புரிவன. எஞ்சிய நாடக நூல்களுள் 'இலக்கியக் காட்சிகள்' என்னும் நாடகம் பழமையான கருப்பொருள்களைக் கொண்டிருந்தாலும் நாடகங்களின் மொழிநடை நாடகாசிரியரான பி.கிருஷ்ணனின் தமிழுணர்வையும் தமிழ்த் திறத்தையும் வெளிப்படுத்துகின்றது.

'மனோன்மணீயம்' என்னும் நாடகம் தமிழகத்தில் பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட கவிதை நாடகம். இந்நாடகத்திற்கு எம்.கே. நாராயணன் உரைநடை வடிவம் கொடுத்துள்ளார். இஃது ஒரு தழுவல் நாடகம். ஏற்கனவே உள்ள கதைத் திட்டம், பாத்திரங்கள் போன்றவற்றைக் கைக்கொண்டு நாடகத்தின் மொழிநடையை மட்டும் ஆசிரியர் மாற்றியுள்ளார். இத்தழுவல் படைப்புகளில் படைப்பாளரின் திறமை வெளிப்படவில்லை.

சிங்கப்பூர் விடுதலைக்குப் பின் வெளிவந்த படைப்புகளை நோக்கப் பேருண்மை ஒன்று புலப்படுகின்றது. எழுத்தாளர்கள் நிறைய எழுது கிறார்கள். ஆயின் நிறைவாக எழுதவில்லை. முன்னர் குறிப்பிட்டவாறு ஒரு சில படைப்புகள் தரமுடையனவாய் விளங்குகின்றன. இலக்கியம் என்ற பெயரில் மஞ்சள் பத்திரிகைக்கு உரிய செய்திகளும் இடம் பெறுகின்றன.

எதிர்காலமும் இலக்கியமும்

1990களில் தமிழ் மொழி படிப்போர் எண்ணிக்கை சிங்கப்பூர் நாட்டில் குறைந்து வருகிறது. இன்று வாசகர்களைத் தேடிப் பிடிக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. மேனாட்டு நாகரிக மோகத்தில் ஆழ்ந்திருக்கும் 'அட்டையாய்' ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழர்கள் இலக்கியங்களைப் படிப்பதிலோ சுவைப்பதிலோ மேனாட்டாரைப் பின்பற்றுவதில்லை. எதிர்காலத்திலும் இந்நிலை தொடருமாயின் தமிழின், தமிழிலக்கியத்தின் கதி என்னாவது?

'எழுத்தாளர்கள் காலத்தின் தேவைக்கேற்பப் பிறப்பார்கள்' என்னும் கூற்றை மெய்ப்பிக்க வேண்டியது எதிர்காலத்தில் சிங்கப்பூர்த் தமிழிலக்கியத் துறைக்கு வரவிருப்பவர்களின் பொறுப்பாகும். ஏனெனில் சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தை வளர்க்க வாசகர்களும், வளப்படுத்த எழுத்தாளர்களும் தயாராய் இருக்க வேண்டியது எதிர்காலத்தில்தான். இளம் எழுத்தாளர்கள் இதற்கு எவ்வாறு பங்காற்ற இயலும் என்பதைக் கீழ்க்காணுமாறு விவரிக்கிறார் இளங்கோவன். இக்கருத்து சிங்கப்பூர்த் தமிழர்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிய வேண்டும்.

'சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் என்பது இந்நாட்டு வாழ்க்கையின் அம்சங்களைத் தவிர வேறெந்த வெளித்தொடர்புகளின் சுமையாலும் ஆகர்ஷிக்கப்படாத இளைய தலைமுறையினரின் பிரதிநிதிகளால்தான் படைக்கப்படக்கூடும். யாருக்கும் கூழைக்கும்பிடு போடாத, கருத்துச் சுதந்திரத்தில் பற்றுள்ள மனப்பான்மை உதிக்க வேண்டும். இலக்கிய வியாதியாவதை விட இலக்கியவாதியாவதற்கு ஆணிவேர் மனோ தைரியம்' (இளங்கோவன், 1981).

முடிவுரை

நூறாண்டுகளுக்கும் மேலாக இந்நாட்டில் வாழ்ந்துவரும் தமிழர்களிடையே இருக்கக்கூடிய நூல்கள் ஏறத்தாழ நூற்றைம்பது. இவற்றுள் இலக்கியத் தகுதியைப் பெற்றவை மிகவும் குறைவே. விரல் விட்டு எண்ணிவிடலாம். 'எந்த ஒரு மொழியும் நிலைபேறுடைய மொழியாக வாழ வேண்டுமென்றால், வளர வேண்டுமென்றால் படைப் பாற்றல் இன்றியமையாததாகும்' (ஈ.அண்ணாமலை, 1992). சிங்கப்பூர்த் தமிழர்கள் படைப்பாற்றல் கொண்டவர்களாய் விளங்கின், தமிழ் மொழியும், இலக்கியமும் நிலைத்து வாழும். இதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது சிங்கப்பூர்த் தமிழர்களின் கடப்பாடாகும்.

(1992இல் சிங்கப்பூரில் தமிழ் இளையர் மாநாட்டில் வாசிக்கப்பட்டு,
1995இல் தஞ்சாவூரில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி
மாநாட்டு மலரில் வெளிவந்த கட்டுரை)

•

எண்பதுகளுக்குப் பின் சிங்கப்பூர் புனைகதைகள்

தோற்றுவாய்

கலை இலக்கியத் துறைகளில் சாதனை புரிய விழையும் சிங்கப்பூர் அரசு தமிழ்ப் புனைகதை இலக்கியத்திற்கு அங்கீகாரம் வழங்கிய காலகட்டத்தைச் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாற்றின் நற்காலமாகக் கருதினார் அமரர் நா. கோவிந்தசாமி (நா. கோவிந்தசாமி, 1990). புனைகதைத் துறையில் விதைக்கப்பட்ட இவ்வித்து அரசின் அரவணைப்பால் 'சிங்கப்பூர்ப் புனைகதைகள்' (The Fiction of Singapore) என்னும் தொகுப்புநூல் மலரக் காரணமானது. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாற்றில், அரசின் ஆதரவு புனைகதை இலக்கியம் பொலிவுறக் காரணமாக அமைந்ததால் அதனை 'மைல்கல்' என்பதில் தவறில்லை.

ஆக்கமும் ஊக்கமும்

புனைகதை எழுத்தாளர்களை இனங்காணவும், அவர்களை ஊக்குவிக்கவும் சிறுகதைப் போட்டிகள் அவ்வப்போது நடத்தப்பட்டன. தேசிய அளவிலான சிறுகதைப் போட்டி (கலாச்சார அமைச்சால் நடத்தப்பட்டது), எழுத்தாளர் கழகப் போட்டி, 'தங்க முனை' விருதுப் போட்டி (தேசியக் கலைகள்மன்றம் & சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ்) ஆகியவைகளும் எண்பதுகளின் தொடர்ச்சியாகத் தொண்ணூறுகளில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. சிங்கப்பூர்ப் புத்தக மேம்பாட்டு மன்றத்தின் பரிசு, தென்கிழக்காசிய விருது போன்றவை எழுத்தாளர்களின் இலக்கியத் தரம் வாய்ந்த நூல்களுக்கும், இலக்கியப் பங்களிப்புக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. சிங்கப்பூர்த் தமிழ்ப் புனைகதை எழுத்தாளர்கள் சிலர் இவ்விருதுகளைப் பெற்றிருக்கின்றனர். இவை சிங்கப்பூரில் தமிழ்ப் புனைகதை இலக்கியம் தழைத்து வளர உற்சாகம் ஊட்டும் சூழலை ஏற்படுத்தித் தந்துள்ளன.

நோக்கமும் தேக்கமும்

சிங்கப்பூரின் தேசியக் கலைகள் மன்றமும், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸும் இணைந்து ஈராண்டுகளுக்கு ஒரு முறை நடத்தும் 'தங்க முனை விருதுப் போட்டி' ஆங்கிலம், சீனம், மலாய் என்னும் மொழிகளில் புதிய இலக்கியப் படைப்புகள் மலர வழிவகுத்திருக்கிறது. ஆயின் தமிழைப் பொறுத்தவரை புதிய எழுத்தாளர்கள் யாரும் உருவாகவில்லை. தங்க முனை விருதுப் போட்டியில் பரிசு பெற்றோர் அந்த வாய்ப்பை இலக்கியம் படைக்கும் ஆக்ககரமான முயற்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. மாறாகப் 'பணஞ் சேர்க்கும் வாணிப நோக்கோடு' மட்டுமே பயன்படுத்தி வந்துள்ளனர். வழக்கமாக எழுதிப் பரிசு பெறும் இவர்கள் இலக்கிய அக்கறை அல்லது படைப்பாற்றல் அக்கறையின்றிப் 'போட்டிக்கு எழுதுவதையே தொழிலாகக் கொண் டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து இங்குக் குடியேறி நிரந்தர வாசத் தகுதி உடையவர்கள் சிலர் இப்போட்டியில் பரிசு பெற்றுள்ளனர். இவர்கள் சிங்கப்பூர்ப் பணத்தின் மேல் கொண்டுள்ள அக்கறை இந்நாட்டு இலக்கிய வளர்ச்சிக்கு எவ்வகையிலும் உதவாது. இவர்கள் புதிய முயற்சிகளில் ஈடுபடாத தேக்க நிலைக்கு என்ன காரணம்? பரிசுத் தொகையாக வழங்கப்படும் சிங்கப்பூர் வெள்ளியின் நிலையான நாணய மதிப்பா? பண வேட்கையா? 'பிழைக்க வந்த நாடு' என்னும் பெரிய மனமா? சிங்கப்பூர் மண்ணோடு ஐக்கியமாகி, அந்த உணர்வுகளைச் சுவீகரித்துக்கொண்டு இலக்கியம் படைக்கும் மனமின்மையா? இயலாமையா?

மாற்றமும் மனமும்

எவ்விதப் போட்டியிலும் பரிசு பெறாமல், அப்படிப் பரிசு பெறுவதையும் விரும்பாமல் இலக்கிய வேட்கையே தங்கள் பெரு நோக்கமாகக் கொண்டு எழுதி வரும் இளம் எழுத்தாளர்களும் அவ்வப்போது தங்களை அடையாளம் காட்டிக்கொள்கின்றனர்.

> 'இவ்விளம் எழுத்தாளர்கள் அடுத்த நூற்றாண்டில் கணிசமான அளவில் புனைகதைத் துறைக்குப் பங்காற்றுவர் என நிச்சயமாக நம்பலாம். எதிர்காலச் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத் துறை இளம் எழுத் தாளர்கள் கையில்தான் உள்ளது. சிங்கப்பூரியத்

> தமிழ் இலக்கியம் என்பது இந்நாட்டு வாழ்க்கையின் அம்சங்களைத் தவிர வேறெந்த வெளித் தொடர்புகளின் சுமையாலும் ஆகர்ஷிக்கப்படாத இளைய தலைமுறையின் பிரதிநிதிகளால்தான் படைக்கப் படக்கூடும். யாருக்கும் கூழைக்கும்பிடு போடாத, கருத்துச் சுதந்திரத்தில் பற்றுள்ள மனப்பான்மை உதிக்க வேண்டும். இலக்கிய வியாதி ஆவதை விட இலக்கியவாதியாவதற்கு ஆணிவேர் மனோதைரியம் (இளங்கோவன், 1981)

எனக் கூறும் இளங்கோவனின் கருத்தினை இவண் நினைத்துப் பார்ப்பது நலம் பயக்கும்.

மொழியும் இலக்கியமும்

தொண்ணூறுகளில் தமிழ் மொழி கற்போரின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. இதனால் வாசகர் கூட்டமும் குறையத் தொடங்கிவிட்டது. மேனாட்டு நாகரிக மோகத்தில் அட்டையைப் போல் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழர்கள் இலக்கியங்களைத் துய்த்து மகிழ்வதில் மேனாட்டவரைப் பின்பற்றுவதில்லை. 'தமிழ் மொழி கற்பது வீண்' என நம்பும் தமிழர்கள் தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களைக் கற்பதும் வீண் எனக் கருதுகின்றனர். இத்தகு சூழலிலும் 'காலத்தின் தேவைக்கேற்ப எழுத்தாளர்கள் பிறப்பார்கள்' என்று நம்ப வேண்டியுள்ளது. மொழியார்வத்தினால் எழுதிக் கொண்டிருக்கும் ஒரு சில இளம் எழுத்தாளர்கள் வாசகர் நெஞ்சங்களில் பால் வார்க்கலாம்.

இளம் எழுத்தாளர்களின் நிலை நம்பிக்கை அளிக்க மூத்த எழுத்தாளர்களில் ஒரு சிலரும் 90களில் அவ்வப்போது எழுதி வந்துள்ளனர். இலக்கியம் படைத்தல் ஆர்வத்தின் வெளிப்பாடாக, உயிர்ப்புடைய கலையாக இவர்களிடம் பரிணமிப்பதால் நூல்களையும் அவ்வப்போது வெளியிட்டுள்ளனர். 90களைப் பொறுத்தவரை சுயமுயற்சியின் பயனாக மூத்த எழுத்தாளர்களின் நூல்கள் வெளி வந்துள்ளன.

வெளியீடுகளும் ஆய்வுக் களமும்

1990ஆம் ஆண்டு சிங்கப்பூரின் இருபத்தைந்து தமிழ் நூல்கள் இந்தியர் பண்பாட்டு நிகழ்ச்சிக் குழு ஏற்பாட்டில் வெளிவந்துள்ளன.

இவற்றுள் புனைகதைகளும் அடங்கும். தொண்ணூறுகளில் தமிழகத்தில் தொகுப்பு நூல் வெளியீடுகள் பரவியிருப்பதைப் போன்றே சிங்கப்பூரிலும் பல தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

'சிங்கப்பூர்ப் புனைகதைகள்' (1990), 'தேடி' (1991), 'சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகள்' (1992), 'பீடம்' (1993), புதுமைதாசன் கதைகள்' (1993), 'நினைவுகளின் கோலங்கள்' (1993), 'நோன்பு' (1994), 'கவரிமான்' (1996) ஆகிய புனைகதைத் தொகுப்புகளையும்; இந்தியர் பண்பாட்டு நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவினரின் வெளியீடுகளாகிய 'வைகறைப் பூக்கள்', 'இனியவளே', 'நவமணி', 'உறவுகள்', 'காலம் கடந்துவிட்டது', 'தனிமரம்', 'புதியவர்களின் சிறுகதைகள்' ஆகியவற்றையும் அடிப்படையாகக் கொண்டு இத்திறனாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

புனைகதைகள் என்னும் பொதுப் பிரிவுக்குள் 'புதினம்' எனப்படும் நாவலும், சிறுகதையும் அடங்கும். இக்கட்டுரையின் முதற் பகுதி நாவலைப் பற்றியும், இரண்டாம் பகுதி சிறுகதை பற்றியும் அமைந்துள்ளது.

ஆற்றாமையும் ஆறுதலும்

90களில் ஆறு நாவல்கள் மட்டுமே வெளிவந்துள்ளன என்னும் செய்தி ஆறாத வருத்தத்தை அளித்தாலும், 'இனியவளே' என்னும் தொடர்கதை தவிர எஞ்சிய ஐந்தும் இலக்கியத் தகுதியுடைய நாவல்களாகப் பரிமளிக்கின்றன என்பது ஆறுதலை அளிக்கிறது. 'கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?' என்பது போல எண்ணிக்கையில் குறைந்தாலும் அவை சிறந்த இலக்கியங்கள் என்னும் அந்தஸ்து பெற்றுள்ள பெருமைக்குரியதாகும்.

மா. இளங்கண்ணனின் நாவல்கள்

மா. பாலகிருஷ்ணன் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் தனித்தமிழ்ப் பற்றின் காரணமாக இளங்கண்ணன் ஆனவர். மூன்று சிறுகதைத் தொகுப்புகளையும், மூன்று புதினங்களையும் வெளியிட்டவர். இவரின் இலக்கியப் பங்களிப்பிற்காகத் தென்கிழக்கு ஆசிய எழுத்து விருது 1982இல் வழங்கப்பட்டது. 'தாம் எழுதுவது இரண்டு நிமிடத்திற்காவது படிப்பவரைப் பாதிக்க வேண்டு'மென எண்ணுபவர்.

சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழும் தமிழர்களின் பிரச்னைகளைச் சமூக அக்கறையோடு எழுதுபவர் இளங்கண்ணன்.

இவருடைய படைப்புகள் பலவற்றிலும் சமூக அக்கறை ஊடுருவி வியாபித்திருப்பது இவர்தம் படைப்புகளின் சிறப்பு.

சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்த எழிலரசி தமிழ்நாட்டு வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டபோது அவள் அதை ஏற்றுக்கொண்டு எப்படி வாழ்கிறாள் என்பதை மையமாய் கொண்டு எழுதப்பட்டது 'நினைவுகளின் கோலங்கள்' என்னும் புதினம். இதன் கதையும், சம்பவங்களும் மிகச் சாதாரணமானவைதாம் என்றாலும் சிங்கப்பூர்ப் பின்னணியைச் சிறப்பாகச் சித்திரிப்பதால் கதைக்கும், சம்பவங்களுக்கும் தனி மெருகு ஏறியுள்ளது.

சிங்கப்பூர் 60களின் இறுதியில் சிறிது சிறிதாக நவீனமயமாகத் தொடங்கியது. 'கம்பத்தில்' (Kampong) கிராமத்தில் வாழ்ந்த மக்கள் அடுக்குமாடி வீடுகளில் வாழ வேண்டிய ஒரு புதிய சூழல் - மாறுதல் ஏற்பட்டது. இச்சூழலில் ஒரு தமிழ்க் குடும்பம் தன்னைப் புதிய சூழலுக்கு எப்படித் தயார்படுத்திக்கொள்கிறது என்பதைப் புதினம் நெடுகிலும் இளங்கண்ணன் மிக அழகாகக் காட்டியுள்ளார். முத்தையா குடும்பமும், முருகையா குடும்பமும் புதிய மாறுதலுக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றன. முத்தையா மரகதம் இணையரின் மகள் எழிலரசி, விருப்பத்திற்கு மாறாக மாமன் மகன் வாணனுக்கு மணமுடிக்கப்பட்டுப் பல்வகைத் துன்பங்களை அனுபவிக்கிறாள். அவளும் தமிழ்நாட்டுச் சூழல் என்னும் புதிய சூழ்நிலைக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கிறாள்.

மாடுகளை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தும் முத்தம்மாள் குடும்பமும், முருகையா குடும்பமும் சிங்கப்பூர் 'கம்ப' வாழ்வின் பிரதிநிதிகள். சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்தாலும் அவர்களின் மன நிலையில் மாற்றமில்லை. சராசரித் தமிழகத் தமிழன் எப்படிச் சிந்திப்பானோ அப்படியே சிந்திக்கிறார்கள். அண்ணாமலை, முத்தம் மாள் ஆகிய இருவரும் தம் பிள்ளை மாணிக்கம் மங்கையர்க்கரசியோடு நெருங்கிப் பழகிவிட்டபோது, அவர்கள் தம் சாதியைப் பற்றிப் பேசுவதையும், முறைப் பெண்ணைத் திருமணம் செய்ய நினைப்பதையும் சான்றாகக் கூறலாம். இதன் மூலம் அவர்களின் நினைப்பும், மனநிலையும் சிங்கப்பூரோடு ஐக்கியப்படவில்லை என அறிய முடிகிறது.

ஆதியில் சிங்கப்பூரில் குடியேறிய தமிழர்களும்; சிங்கப்பூரிலேயே பிறந்து வளர்ந்தாலும் 'ஆற்றிலே ஒரு கால்; சேற்றிலே ஒரு கால்' என நினைக்கும் அடுத்த தலைமுறைத் தமிழர்களும்; முகிலன், எழிலரசி

போன்று முழுக்க முழுக்கச் சிங்கப்பூர் மண்ணுக்கு விசுவாசமுடைய சிங்கப்பூர்த் தமிழர்களும் இந்நாவலில் உலவுகின்றனர். இதனால் குடியேறித் தமிழர், 'இரண்டுங்கெட்டான்' என்னும் மனநிலை கொண்ட தமிழர், சிங்கப்பூர்த் தமிழர் என்னும் மூவகைத் தமிழரின் மனப்போக்கு களை, எண்ண வெளிப்பாடுகளை 'நினைவுகளின் கோலங்களாக' வடித்துள்ளார் இளங்கண்ணன் என்பது தேற்றம்.

எழிலரசி பெற்றோருக்கு அடங்கிய பெண்ணாகவே திகழ்கிறாள். மணவிலக்குப் பெற்ற பின்பும் விரும்பியவனை மணக்கத் தயங்குகிறாள். அறுபதுகளில் பெரும்பான்மைத் தமிழ்ப் பெண்கள் பெற்றோருக்கு அடங்கி நடந்துகொண்டதோடு, கோழைகளாகவும் திகழ்ந்ததற்குத் தக்க சான்று எழிலரசியே!

கருப்பன் சாமியாடி, கதைப்போக்கில் மட்டுமன்றி வாசகர் மனங் களிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் பாத்திரம். தலைமுறை மாற்றத்திற்கு அவர் வழிகாட்டுகிறார். எழிலரசியைத் திருமணம் செய்யுமுன் அவள் மாமன் வீரையா சாமியிடம் உத்தரவு கேட்கவில்லை என்றும், 'பெண்ணைப் பெற்றவளிடமே அனுப்பிவிடு' என்று சாமியாடி கூறுவதும், திருமணம் செய்துகொள்ளும் பிள்ளைகளின் விருப்பத் தையும், கருத்துக்களையும் பெற்றோர் செவிமடுக்க வேண்டும் என்னும் கருத்தை 'மறைமுகமாகச் சொல்வது' போன்று அமைகின்றன.

பெற்றோரின் வற்புறுத்தலோடு செய்து வைக்கப்பட்ட எழிலரசி யின் திருமணம் தோல்வியில் முடிகிறது. வாணனால் மணவிலக்குச் செய்யப்பட்டு எழிலரசி சிங்கப்பூருக்குத் திரும்புகிறாள். இதன் மூலம், 'மற்றவர்களின் மனநிறைவுக்காகச் செய்துகொண்டது சடங்காகத்தான் இருக்குமே ஒழிய திருமணமாக இருக்காது' என்பதை எழிலரசி வாயிலாக இளங்கண்ணன் சமூகத்துக்குச் சொல்கிறார். அறுபது எழுபதுகளில் தமிழர்களிடையே நிலவிய பிற்போக்கான எண்ணங் களையும், அவர்களின் மனநிலையையும் இந்நாவல் படம்பிடித்துக் காட்டுகிறது. அடித்தள மக்கள் குடி, போதைப்பொருள் முதலிய வற்றுக்கு அடிமையாவதை மாணிக்கத்தின் வழி அறியலாம். இப்படி, மனிதனுடைய யதார்த்த வாழ்வில் நேரடியாகச் சம்பந்தப்படுகிற பிரச்னைகள், போராட்டங்கள், மனித இயல்புகள் ஆகியவற்றைப் பல்வேறு பாத்திரங்களின் மனவோட்டங்களால் புரிந்துகொள்ள வைக்கிறார் இளங்கண்ணன். மேலும் அவர் மனிதனைப் புரிந்து கொள்ளவும் வைக்கிறார். எனவே இது சிறந்த நாவலாகித் தேசிய புத்தக மன்றத்தின் பரிசையும் பெற்றுள்ளது.

முகிலன், எழிலரசி என்னும் இரு காதலர்களின் காதல் நினைவுகள், பெற்றோர்களின் பிற்போக்கான நினைப்புகளால் அலங்கோலமாகின்றன. எழிலரசியின் நினைவில் ஏங்கும் பெற்றோர், வேலுவின் நினைவில் வாழும் வெள்ளையம்மாள் எனப் பலருடைய நினைவுகளின் கோலங்கள் இந்நாவலில் பின்னப்பட்டுத் தலைப்பு அற்புதமாகப் பொருந்தியிருப்பதைக் காண்கிறோம்.

வைகறைப் பூக்கள்

எழுபதுகளில் தொடர்கதையாக வெளிவந்த இந்நாவல் பழமையைப் பின்னோக்கிப் பார்க்கும் கற்பனையின் விளைவாகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலம், ஜப்பானியர் ஆட்சிக் காலம், இந்திய தேசிய ராணுவ எழுச்சி போன்ற கடந்த காலச் செய்திகளை வைத்துக் கொண்டு கற்பனைத் திறனோடு, உயிர்ப்பு மிக்க பாத்திரங்களை உலவ விட்டுச் சிறந்த நாவலைப் படைத்திருக்கிறார் இளங்கண்ணன்.

ஜப்பானியர் ஆட்சியின் கொடுமைகள் அடிமட்டத் தமிழர்களை எவ்வாறு பாதித்தன, அக்கால வாழ்க்கை முறை, ஆங்கிலேயரின் கொடுமைகள் எனப் பல செய்திகள் இந்நாவலில் விரிவாக எழுதப் பட்டுள்ளன. இந்நாவலில் இளங்கண்ணனின் குறியீட்டு உத்தியும், தனித்தமிழ்ப் பற்றும், தமிழினம் பற்றிய கவலையும் புலப்படுகின்றன. குறியீட்டு உத்தி இளங்கண்ணனின் கைவண்ணத்தில் மிகச் சிறப்பாக ஒளிர்வதை அத்தியாயம் 8இல் காணலாம். குறியீடுகளே கதை நிகழ்ச்சிகளை விளக்குகின்றன.

> 'இரை தின்னும் கோழிகளுக்கு இடையில் நாகம் மாளின் சேவல் புகுந்து சோளத்தைப் பொறுக்கு வதும், ஒவ்வொரு பெட்டைக் கோழியையும் கொண்டையில் கொத்தி விரட்டுவதுமாக இருந்தது.'

இந்நாவலில் இளங்கண்ணனுடைய மொழிநடை, பாராட்டுக்குரிய மற்றொரு அம்சமாகத் திகழ்கிறது. அவருடைய வருணனைக்கு, 'பழைய நினைவுகளைப் புதுப்பித்தலும், புதிய கனவுகளை வளர்ப்பதிலும் முனைந்து நின்ற மன உணர்வுகளில் மாலைப் பொழுது விரைவாக வந்து சேர்ந்தது' என்னும் பகுதி நல்ல சான்றாகும்.

பாத்திரப் படைப்பில் அன்பரசன், அழகப்பன், மணிமேகலை ஆகியோர் மனத்தை விட்ட கலா கதைமாந்தர்கள் எனலாம். காந்தியக் கொள்கையில் பிடிப்புடைய அன்பரசன், அழகப்பன் ஆகியோரின்

பண்புநலன்களைப் பெயர்கள் வாயிலாகவே அடையாளங் காணச் செய்கிறார் இளங்கண்ணன். தீயவனுக்கு 'நல்லையன்' என்னும் பெயரை அங்கதமாகச் சூட்டியுள்ளார். 'கோடாரிக்காம்பு', 'பாதம் கழுவி' என்பன போன்ற குறியீடுகள் தமிழ்ச் சமுதாயத்தினரைக் குறிக்கின்றன.

நாவலின் முடிவில் இந்திய ராணுவம் வெற்றி பெற்று அன்பரசன், மனிமேகலை ஆகியோர் மீண்டும் சிங்கப்பூருக்குத் திரும்புகின்றனர். அவர்களின் மண வாழ்க்கையோடு இந்திய மூவண்ணக் கொடிகளைப் பறக்கவிட்டு நாவலை முடிக்கிறார். சிங்கப்பூரில் வாழ்ந்தாலும் இந்தியர் வீடுகளில் மூவண்ணக் கொடிகள் பறந்தன என்று எழுதும்போது தமிழர்களின் மனநிலையைத் தெளிவாகப் படம்பிடிக்கிறார் இளங் கண்ணன்.

இராம. கண்ணபிரானின் குறுநாவல்கள்

சிந்தனை வளமும், கொள்கைப் பிடிப்பும், நிறைவாக எழுத வேண்டும் என்னும் துடிப்பும், எழுத்தை வேள்வியாய்க் கருதும் 'செம்மல்' உள்ளமும், ஆழ்ந்தகன்ற படிப்பறிவும், கூரிய பார்வையும், பல்துறைப் பட்டறிவும், எழுதியவை போதா என்னும் நிறைவின்மையும் கொண்டவர் இராம. கண்ணபிரான். தேசியப் புத்தக மன்றத்தின் பரிசும், ஆசியான் விருதும், கலாச்சாரப் பதக்கமும், தமிழவேள் விருதும் இவருடைய இலக்கியப் பணியை நினைவூட்டும் நற்சான்றுகள். இவருடைய இரண்டு குறுநாவல்களில் ஒன்றான 'வாழ்வு' மொழிப் பார்வைக்கும், இன்னொன்றான 'பீடம்' கலைப்பார்வைக்கும் சான்றாக அமைபவை.

ஞானப்பூங்கோதை கென்சிங்டன் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிகிறாள். அப்பள்ளியின் மற்றொரு தமிழாசிரியர் வில்லியம். விரிவுரையாளர் தேவேந்திரன் மற்றும் முரளி, அவனுடைய பெற்றோர், அவனுடைய தாத்தா ஆகியோரைப் பாத்திரங்களாக உலவ விட்டு 1980களின் மத்தியில் தமிழ் மொழியின் வாழ்வு குறித்த பிரச்னையைக் கருவாகக் கொண்டு பின்னப்பட்ட குறுநாவல் 'வாழ்வு' ஆகும். ஞானப் பூங்கோதை இலட்சிய தாகமும், அக்கறையும், பொறுப்பும் கொண்ட தமிழாசிரியர். தமிழ் மொழி கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள், மேல்மட்டத் தமிழர்களிடையே நிலவும் தமிழ் மொழி பற்றிய மனப்போக்குகள் போன்றவை இக்குறுநாவலில் சித்திரிக்கப்பட்டுள்ளன.

அடிமட்டத் தமிழர்களுடைய குழந்தைகளின் மொழித்திறன், ஆங்கிலம் கற்ற, ஆங்கிலத்தையே வீட்டு மொழியாகக் கொண்ட

பணக்காரத் தமிழ்ப் பிள்ளைகளின் மொழித்திறன் என்னும் இரு கோணங்களின் வாயிலாகத் தமிழ்க் கல்வி பற்றிய செய்திகளைப் பேசும் குறுநாவலாக இது திகழ்கிறது. ஆகவே இது ஒரு சமுதாயப் பிரச்னை என்பதாக மட்டும் அமையாமல் தேசியப் பிரச்னையாகவும் கால்கொண்டுள்ளது.

கண்ணபிரான் ஒரு தமிழாசிரியர். அவருடைய மொழியுணர்வு, மொழிப்பற்று ஆகியவை இக்குறுநாவலில் தெள்ளிதின் புலப்படு கின்றன. 'மொழியே ஓர் இனத்தின் விழி; இம்மொழி வாழ்ந்தால்தான் இனம் வாழ முடியும்' என்னும் உண்மையை 'வாழ்வு' என்னும் குறுநாவல் எதிரொலிக்கிறது. தமிழ் மொழியின் வாழ்வு (சிங்கப்பூரில்) தமிழர்களின் கையில்தான் உள்ளது என்னும் செய்தியைத் தன் ஆசிரியப் பணி அனுபவத்தின் பின்னணியில் ஞானப்பூங்கோதையாய் நின்று, சிறப்பாக, பிரச்சார நெடியின்றி எழுதியுள்ளார் இராம. கண்ணபிரான்.

கண்ணபிரானின் 'கலை' பற்றிய சிந்தனைகளை 'பீடம்' என்னும் குறுநாவல் எதிரொலிக்கிறது. எழுத்துக் கலையும் படைப்புக் கலைகளுள் ஒன்றே. படைப்புச் சுதந்திரம் சிற்பக் கலைஞனுக்கு மட்டுமன்றி படைப்புக் கலைஞர்கள் அனைவருக்கும் அவசியம் வேண்டப்படுவதே என்னும் உண்மையை கலைஞனாக நின்று இக்குறுநாவலின் வழி இராம. கண்ணபிரான் வெளிப்படுத்துகிறார். படைப்பாளன் தன்னைத் தன் படைப்பில் வெளிக்காட்டாமல் இருக்க முடியாது. கதைமாந்தர் வாயிலாகத் தன்னை வெளிக்காட்டியே தீருவான் என்னும் உண்மையை 'பீடம்' உணர்த்துகிறது. 'பீடத்தின்' வழி இராம. கண்ணபிரான் ஒப்பற்ற கலைஞராக வெளிப்படுகிறார்.

'பீடம்' என்னும் குறுநாவல் இராம. கண்ணபிரான் 'ஆளுமை'க்குச் கிடைத்த பீடம் என்றே எண்ணத் தோன்றுகிறது. எழுத்துலகில் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய உலகில் கண்ணபிரானுக்குத் தனித்த சிறப்பு மிக்க 'பீடம்' அமைத்துக் கொடுக்கும் படைப்பு இக்குறுநாவல் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. படைப்புச் சுதந்திரம் என்னும் ஆணிவேரைச் சர்வாதிகாரம் என்னும் புழு அரிக்குமானால் கலைஞன் எவ்வாறு பாதிக்கப்படுவான் என்பதைச் செம்மையாகச் சித்திரிக்கும் படைப்பு இது.

படைப்புக் கலைஞனின் சிறப்பியல்புகள், அவனது கோப தாபங்கள், உள்ளக் குமுறல்கள், போலிக் கலைஞர்களின் பொய்ம் முகங்கள், சந்தர்ப்பவாதிகளின் வாழ்க்கை முறைகள், சர்வாதிகாரத்தின் கொடுமைகள் முதலியவை உணர்வுபூர்வமாகப் பேசப்பட்டுள்ளன.

படைப்புக் கலை பற்றிய அறிவார்ந்த பேச்சும், ஆழமான கருத்துக்களும் வாசகர்களின் மனமென்னும் பீடத்தில் சிவசங்கர் என்னும் உண்மைக் கலைஞனை அமரத்துவம் அடையச் செய்து, நெடிது நிலைக்கச் செய்கின்றன.

'பீடம்' என்னும் குறுநாவலின் தலைப்பு விளக்கமும் இக்குறு நாவலினுள் அமைந்திருப்பது இந்நெடுங்கதையின் தனிச் சிறப்பாகும். ஆட்சிப் பீடம் கொடுங்கோலனின் அரச பீடமாகும்போது, நிர்வாக பீடங்களின் நிலை மாறி, தனிமனித வழிபாட்டின் அடிப்படையில் புதிய சக்தி பீடங்களும், வித்யா பீடங்களும் தோன்றி, உண்மைக் கலைஞர் களின் உயர்ந்த கலைப் பீடத்தை அசைத்து, ஆட்டங்காணச் செய்து, இறுதியில் சத்திய பீடத்தின் முன் தோற்றுவிடுகிறது.

இக்குறுநாவலின் மூலம், 'கலைஞன், கலைஞனாக மட்டும் வாழக் கூடாது. கலை, சமூகப் பிணைப்புக் கொண்ட கலைஞனாக வாழவும் வேண்டும்' என்பது போன்ற உயர்ந்த விஷயங்களைச் சமுதாயத்திற்குக் கண்ணபிரான் வாரி வழங்கியிருக்கிறார். 'காண்பவை எல்லாம் அவையே போல' என்பது போன்று எந்த நாட்டின் கொடுங்கோலாட்சியையும் இக்கதையோடு பொருத்திப் பார்க்கலாம், அரசியலுக்கும், கலைக்கும் ஏற்படும் போராட்டத்தில் கலை வெற்றி பெறுவதாகக் காட்டப்படும் புதுமையும் இக்குறுநாவலில் உண்டு.

சாதாரண வாசகனால் ஜீரணித்துக்கொள்ள முடியாத 'கனமான' உள்ளடக்கம் இக்குறுநாவலின் தனிச்சிறப்பு. பாத்திரப் படைப்பும், அதற்குப் பெயர் சூட்டும் முறையும் கண்ணபிரானின் முத்திரைகளாகக் காட்சியளிக்கின்றன. குறியீட்டு அடிப்படையில் பெயர் சூட்டப்பட்ட இக்குறுநாவலில் இடம்பெறும் உண்மைக் கலைஞன் சிவசங்கர் கண்ணபிரானின் வெளிப்பாடு எனச் சாற்றலாம். உணர்ச்சிச் செறிவான மொழிநடை கதைக்கு மேலும் வலுவூட்டியுள்ளது.

நா. கோவிந்தசாமியின் 'வேள்வி'

'சர்ச்சைக்குரிய எழுத்தாளர்' எனப் பெயர் பெற்ற வித்தியாசமான எழுத்தாளர் நா. கோவிந்தசாமி. 'வேள்வி' என்னும் நாவலே நா. கோவிந்தசாமியைப் பற்றி மேற்கூறப்பட்ட புகழுரைக்குக் காரணமாகும். ஆலயங்கள் சமய வழிபாட்டிடங்களாகத் திகழ்ந்தால் மட்டும் போதாது. அவை சமுதாய மையங்களாகவும் திகழ வேண்டும் என்னும் நோக்குடன் கோயிலின் பின்னணியில் சமுதாயத்தைச்

சித்திரித்துள்ளார். 'வேள்வி' குறியீடாகத் திகழும் தலைப்பு. சிறுகதைகள், நாடகங்கள், நாவல்கள் முதலிய கலைப்படைப்புகளை 'உள்ளொளியைத் தேடும்' பணிக்காகப் பயன்படுத்தும் சமூகப் பிரக்ஞை மிகுதியும் உள்ளவர் நா. கோவிந்தசாமி.

சிறுதெய்வ வழிபாட்டினை உயிர்மூச்சாகக் கொண்ட கருப்பண்ண மண்டோர் கோவிலை விரிவாக்க எண்ணுகிறார். கோயில் 'கமிட்டியில்' உள்ள சந்தர்ப்பவாதிகள் இவரைப் புறக்கணித்து விடுகிறார்கள். ஆகவே கோயில் குழுவை விட்டு அவராகவே ஒதுங்கி விடுகிறார். தமிழ்க் கோயில்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் குமரன், கருப்பண்ண மண்டோர் போன்ற பலரையும் பேட்டி கண்டு இந்து ஆலயங்களைப் பற்றிய ஆய்வேட்டை எழுதி முடிக்கிறான். ஆனால் அதைச் சமர்ப்பிக்கவில்லை.

குமரன், கருப்பண்ண மண்டோர் ஆகியோர் சிங்கப்பூரர்கள் என்னும் உணர்வோடு தமிழ்ச் சமூகத்துக்கு நன்மை செய்ய வேண்டும் என விழைகின்றனர். இவர்களின் மனப்போக்கு நாவலில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் கோயில் தர்மகர்த்தாவோ பிழைக்க வந்த நாடு என்னும் கண்ணோட்டத்தில் தங்களின் தாய்நாடான இந்தியாவில் சமுதாயப் பணி செய்கிறோம் என்ற பெயரில் சுய விளம்பரத்தைத் தேடுகிறார். 'கோயில் கட்டிய ஒரு சமூகம் இந்த நாட்டில் தலைநிமிர்ந்து நிற்காது; கல்வி கற்ற சமூகமே இந்த நாட்டில் உயர்ந்து நிற்கும்' என்பதே 'வேள்வி' என்னும் நாவல் சமூகத்துக்கு விடுக்கும் செய்தியாகும்.

வேள்வி புனிதமானது. கருப்பண்ண மண்டோர் கோவிலைப் பெரிதாக்க எண்ணிப் பாடுபடுகிறார். இவருடைய பணி ஒரு வேள்வியே. இதில் சுயநலத்தின் சுவடேயில்லை. இவ்வேள்வியைத் தொடரவிடாமல் சுயநலக்காரர்களும், புகழ், விளம்பரம் போன்றவற்றுக்கு ஆசைப்படும் பணக்காரத் தர்மகர்த்தாக்களும் தடுக்கின்றனர். பொதுப் பணியைப் புனிதப் பணியாகச் செய்யும் மனநிலை இல்லாதோர் துரதிர்ஷ்ட வசமாகப் பெருகியிருக்கும் சமுதாய அவலத்தை இந்நாவல் அழகுறச் சித்திரிக்கிறது.

குமரன் தன் ஆராய்ச்சியை ஒரு வேள்வியாகவே கருதுகிறான். தமிழ்ச் சமுதாயத்திற்கு நன்மை செய்ய விழையும் அவனுடைய வேள்வி நிறைவேற வேண்டிய தருணத்தில் 'சமூகத் துரோகி' எனப் பலராலும் தூஷிக்கப்பட்ட தொண்டனாக வேள்விக் களத்தில் குதிக்கிறான். ஆய்வின் மூலம் தமிழ்ச் சமூகப் பிரச்னைகளைக் கண்டறிந்த அவன்

தன் சமூகக் குறைபாடுகளைக் களையும் நோக்குடன் 'கர்மவீரனாகக்' காட்சியளிக்கிறான். அந்நிலையில் அவனுக்குச் சமூகக் கடமையே வேள்வியாகிறது. இப்படிப் பல நிலைகளில் 'வேள்வி' என்னும் தலைப்பு பொருந்தி வருகிறது.

வேள்வி என்னும் தலைப்பை மற்றொரு கோணத்திலும் அணுகலாம். இவ்வணுகுமுறைக்கும் நாவலாசிரியரின் சமூகவியற் பார்வைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. 'சமயப் பணி என்பது சமூகப் பணியின் ஒரு கூறேயாகும். சமூகப் பணி என்பது வேள்வியைப் போன்றது. இந்த வேள்வியில் இறங்கச் சுயநலமற்ற தூய மனமும், பொதுநல உணர்வும், கறைபடாத கரங்களும் வேண்டும். சுய விளம்பரம், மாலை, மரியாதை போன்றவற்றை நாடும் பொய்ம்முகங்கள் தேவை யில்லை' என்னும் கருத்துப்படக் குறியீட்டுத் தலைப்பாக 'வேள்வியை' அமைத்துள்ளார், செவ்வையாக அமைந்துள்ள இத்தலைப்பு உள்ளொளியைத் தேடும் 'இலக்கிய வேள்வியில்' நா. கோவிந்தசாமியை அற்புதமான நாவலாசிரியர் என அடையாளம் காட்டுகிறது. மனிதப் பண்புகளின் தேடலாக 'வேள்வி' திகழ்கிறது. இவ்வேள்வியில் கல்வி யாளன் மனிதனாகிறான்.

கருப்பண்ண மண்டோர், குமரன் ஆகிய இருவரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். பொதுவாகத் தனித்தன்மை மிக்க பாத்திரங்களைப் படைக்கும்போது பாத்திரப் பண்புகளே மேலோங்கி நிற்கும் அல்லது முதன்மை பெறும். இப்படிப்பட்ட நாவல்களில் கட்டமைப்பு சரியாக அமையாது. ஆயின் இந்த நாவலில் செறிவுக் கட்டமைப்பு சிறப்பாக உள்ளது. கதை நிகழ்ச்சிகளை ஆசிரியர் கையாளும் போக்கு நாவலின் கட்டமைப்பு நெகிழ்ந்து போகாதபடி செறிவாக்கியுள்ளது. 'ஒரு சமுதாயத்தின் புறத் தூண்டுதல்கள் நல்லவர்களின் மனத்தில் புத்தெழுச் சியை ஊட்டிப் போராடும் தீரர்களாக மாற்றிவிடுவது இயற்கை' (தி. பாக்கியமுத்து, 1972). இவ்வடிப்படையில்தான் குமரனும் சமூகத்திற் காகப் போராடத் துணிகிறான். வாழ்க்கையின் மேற்பூச்சுப் போல வழிபாட்டுக்கும் மேற்பூச்சுப் பூசும் சமூகத்தை எதிர்த்துப் போராடும் மனிதாபிமானம் மிக்க பாத்திரப் படைப்பாக, உயர்ந்த படைப்பாகக் குமரன் இலங்குகிறான்.

கருப்பண்ண மண்டோர் 'வேள்வி' முழுவதிலும் நீக்கமற நிறைந்து நிற்கிறார். பொதுநலச் சேவைக்கு வரும் ஒவ்வொருவரும் அவரைப் போல் புனிதனாக இருக்க வேண்டும். சிறுதெய்வ வழிபாட்டை

உயிர்மூச்சாகக் கருதும் அவர் 'வஞ்சனையில்லா பக்தி' என்னும் வழிபாட்டுத் தத்துவத்தை வலியுறுத்துகிறார்.

நாவலாசிரியர் நிகழ்ச்சிகள் சிலவற்றை வருணிக்கும் திறம் சிறப்பாக அமைகிறது. சான்றாகக் கோவிலையும், அதன் அருகில் இருக்கும் பண்டாரத்தின் தகரக் கொட்டகையையும் சமுதாய ஏற்றத் தாழ்வின் பிரதிபலிப்பாகப் போகிற போக்கில் சாதாரணமாக எழுதி யிருப்பது நாவலின் மொழி நடைக்கு மட்டுமின்றிக் கருவுக்கும் கிடைத்த வெற்றியாகிறது. மண்டோர், குமரன் ஆகியோரின் கூற்றுகள் ஒவ்வொன்றும் உயிர்த்துடிப்புடன் அமைந்தவை. குமரன் ஒரு சிந்தனையாளன், கல்வியாளன் என்னும் உண்மைகளை அவனுடைய பேச்சுகள் தெளிவாக்குகின்றன.

சம்பவ வருணனை என்ற நிலையையும் மீறிக் கதைமாந்தரின் மனவுணர்வுகளை வருணிக்கும் திறம் மிகச் சிறப்பாக அமைகிறது. சான்றாகக் குமரனின் மனவுணர்வுகளைக் கூறலாம். நா. கோவிந்த சாமியின் நடையில் அங்கதமும் மிளிர்கிறது. தமிழ்நாட்டில் இலக்கியப் பாடம் சொல்லித் தரும் பேராசிரியர் ஒருவர் மலேசிய, சிங்கப்பூர் வருகைக்குப் பிறகு முழுநேரச் சொற்பொழிவாளராகிவிட்டார்; 'விசா'வையும் இரண்டு வாரங்களுக்குப் புதுப்பித்துவிட்டார் என்னும் வார்த்தைகளில் எள்ளல் கூர்மையாகவே விழுகிறது. இதைப் போன்றே முனீஸ்வரனுக்குக் குருக்கள் தரும் விளக்கமும் அங்கதச் சுவையுடன் அமைகிறது. ஆசிரியர் கதை கூறியும் (narrative method), பாத்திரங்களைப் பேச விட்டும் (dramatic method) நாவலை அனுபவங்களின் பொக்கிஷமாக, அரிய கலைப்படைப்பாக உருவாக்கியுள்ளார்.

இனியவளே

எஸ்.எஸ். சர்மா எழுதிய தொடர்கதைகள் எழுபதுகளில் 'இந்தியன் மூவி நியூஸ்' என்னும் இதழில் வெளிவந்தன. அவை 'வள்ளி', 'கபுகா', 'என்னை விட்டுவிடு', 'உஷ், பேசாதே', 'என் அன்பே', 'இனியவளே' என்பவை ஆகும். இவற்றுள் இனியவளே 'நாவல்' என்னும் பெயரில் அச்சிடப்பெற்றுள்ளது. காதலுக்கு ஏழை, பணக்காரர் என்ற பேதம் கிடையாது என்னும் பல்லவியில், லதா, பூரணி ஆகிய இரு பெண்களின் கதையாக, நம்ப முடியாத நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு எழுதியுள்ளார் சர்மா. இதை நாவல் என்று அழைப்பது பொருந்தாது. பொதுவாக சர்மாவின் கதைகள் தமிழ்த் திரைப்படப் பாணியில்தான்

செல்லும். இதற்கு அவர் பணிபுரிந்த இந்தியன் மூவி நியூஸ் கூடக் காரணமாக இருக்கலாம். மக்களின் ரசனைக்காக அவர்கள் விரும்பும் வகையில் கதைகளை எழுதிப் பிரபலம் பெற்றவர் திரு. சர்மா. இவருடைய புதினங்கள் இலக்கியத்தரம் வாய்ந்தவை அல்ல என்பது தவறாகாது.

சிறுகதைகளும் கலை வடிவமும்

தொண்ணூறுகளில் வெளிவந்த தொகுப்புகளுள் இந்தியர் பண்பாட்டு நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவினரால் வெளியிடப்பட்ட ஐந்து சிறுகதைத் தொகுப்புகளான 'தனிமரம்' (பெ. சிவசாமி), 'புதியவர்களின் சிறுகதைகள்' (ராஜாராம், ரத்னாவதி, பாலமலர்), 'காலம் கடந்து விட்டது' (இரா. துரைமாணிக்கம்), 'உறவுகள்' (திருமதி கண்ணம்மா), 'நவமணி' (லெட்சுமி தனபால்) ஆகியவையும், சிங்கை தமிழ்ச்செல்-வத்தின் 'கவரிமான்' என்னும் தொகுப்பும் எழுத்துத் துறையில் தத்தித் தத்தித் தளிர்நடையிட்டு வரும் மழலைச் சிறுகதைகள்.

தமிழகப் பதிப்புத் துறையில் 1990களைத் 'தொகுப்புக் காலம்' என வருணிக்கிறார் அகிலன் கண்ணன். சிங்கப்பூரிலும் ஏறத்தாழ இந்நிலை தான் நிலவியது எனச் சொல்வதில் தவறில்லை. ஆசியான் இலக்கியத் தொகுதியில் இடம்பெற்ற தமிழ்ச் சிறுகதைகளைத் தொகுத்துச் 'சிங்கப் பூர்த் தமிழ்ச் சிறுகதைகள்' என்னும் பெயரில் நா. கோவிந்தசாமியும், இளங்கோவனும் வெளியிட்டிருக்கிறார்கள். தொடக்க காலம் தொடங்கி எண்பதுகள் வரை எழுதப்பட்ட மிகச் சிறந்த பதினேழு கதைகளைத் தொகுத்துள்ளனர். இம்முயற்சியால் சிங்கப்பூரின் ஒட்டுமொத்தமான சிறுகதை இலக்கிய வளர்ச்சியையும், சமூகப் பார்வையையும், இலக்கியச் செல்நெறிகளையும் (trends), மண்ணின் மணத்தையும் அறிந்துகொள்ள இயலும். இச்சிறுகதைத் தொகுப்பினைச் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒரு 'பொக்கிஷம்' (கருவூலம்) என்பதில் தவறில்லை.

இத்தொகுப்பு நூலைப் பரகால ஜீயர் கணையாழி இதழில் பாராட்டியிருப்பதை இவண் நினைவுகூர்தல் பொருத்தமுடையதாகும்.

> 'சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகள்' என்ற இத் தொகுப்பு ஒரு நல்ல தொகுப்பாகப் படுகிறது. பார்வைக் கோளாறு எதுவும் இல்லை. இது கால கட்ட வரையறையில், அந்தந்தக் காலத்திய கோட் பாட்டு வீச்சின் அடிப்படையில் தொகுக்கப்பட்

டுள்ளது. ஒரு நூற்றாண்டு வளர்ச்சியையுடைய சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதை இன்று ஒரு 'serious adulthood' நிலையை அடைந்துள்ளது' ('கணையாழி', ஏப்ரல் 1993)

என்று பாராட்டுவது இத்தொகுப்பின் வெற்றியை மதிப்பிட உதவுகிறது.

> 'தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் முதல் தமிழ்ச் சிறுகதை சிங்கப்பூர் மண்ணில்தான் தோன்றியது என்ற உண்மையை எழுதும் வண்ணம் உதயமானது மகதூம் சாயபு எழுதிய 'வினோத சம்பாஷணை' என்னும் கதை என்பது அமரர் நா.கோ.வின் கருத்து. வ.வே.சு. ஐயர் எழுதிய 'மங்கையர்க்கரசியின் காதல்' தான் தமிழ் மொழியில் எழுதப்பட்ட முதல் சிறுகதை என்னும் கருத்து நா. கோவிந்தசாமியின் கருத்துக்கு முன் அடிபட்டுப் போய் விடுகிறது. 1888இல் சாயபு எழுதிய இக்கதை வடிவச் சோதனைக்கும் வட்டாரத் தமிழுக்கும் வாய்ப்பளித்த கதை. இது கதையா? எனக் கேள்வி கேட்போருக்கும், கலையின் வெற்றிக்கு இலக்கணம் தேவையில்லை என்று கூறும் நவீனச் சிந்தனையாளர்களுக்கும் கருத்து வேறுபாடு களை வளர்க்கும் கதை இது. இதுவே இத்தொகுப் பின் முதல் கதையாக அமைந்து சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதையின் முன்னோடியாகச் சாயபு அவர்களை அறிமுகப்படுத்துகிறது. ஆயின் ஒரு சிலரால் மகதூம் சாயபுவின் கதையைச் சிறுகதை என ஏற்க இயல வில்லை' (ந. பாலபாஸ்கரன், 'சிங்கப்பூர்த் தமிழிலக் கியம் : ஒரு நூற்றாண்டு').

பிழைப்புத் தேடி மலையகம் வந்த தமிழர்களிடம் ஆழமாக வேரூன்றி நின்ற சாதிப் பிரச்னையை மையமாய்க் கொண்டு பின்னப் பட்டது 'கல்யாணப் பந்தலில்' என்னும் கதை. சாதிப் பிரச்னையைச் சாடும் இக்கதை குடியேறித் தமிழர் நிலையை அறியவும், கலப்புத் திருமணத்திற்கு அவர்களிடையே இருந்த எதிர்ப்பினை அறியவும் உதவுகிறது. இந்திய தமிழகத் தொடர்பு இக்கதையில் இற்றுவிடாமல் இழையோடுகிறது.

குடியேறித் தமிழர்களின் மனப்போக்கிற்கு மற்றொரு சான்றாவது 'வாழ முடியாதவள்' என்னும் கதை. பிழைக்க வந்த இடத்தில் பெண்களைச் சேர்த்து வைத்துக்கொள்வதும், அவர்களைத் திருமணம் செய்து கொள்வதும், பின்னர் சில ஆண்டுகள் கழித்து அவர்களைத் தவிக்க விட்டுத் தமிழகம் செல்வதும் பரவலாக அன்றைய சிங்கப்பூரில் காணப் பட்ட நிலை. இதற்கு விதிவிலக்கான கண்ணுச்சாமியின் மலாய் மனைவி அவனுடைய பெற்றோர்களின் தொல்லையால் வாழ்வை முடித்துக் கொள்ளும் நிலையை 'வாழ முடியாதவள்' என்னும் கதையின் வழியே பி. கிருஷ்ணன் சித்திரித்துள்ளார். தமிழன் மலாய்ப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதாகக் காட்டிப் புரட்சிச் சிந்தனையை விதைக்கிறது. சமுதாய எதிர்ப்புக்கும் ஈடுகொடுக்க முடியாமல், புரட்சிக்கும் ஈடுகொடுக்க முடியாமல் வாழ முடியாதவர்களாகிப் பெண்கள் தம் வாழ்வை முடித்துக்கொண்ட சமுதாய அவலத்தை பி. கிருஷ்ணன் இக்கதையின் வழியே சித்திரித்துள்ளார்.

தமிழ்ச் சமுதாயத்திடம் அமைந்துள்ள சோதிட நம்பிக்கைகளை எள்ளும் நோக்கில் அமைந்தது 'காலக்கணக்கு' என்னும் பி. கிருஷ்ணனின் கதை. அங்கதம் மிளிர நகைச்சுவையோடு கதை கூறும் வேளையில் சமூக அக்கறை மிக்கவராக அவரை இனங்காட்டுகிறது இக்கதை. இவர், புதுமைதாசன் என்னும் புனைபெயரில், 'புதுமைப் பித்தனைப் போலவே கதை எழுதும் ஆற்றலுடன்' சிங்கப்பூரின் தமிழ்ச் சிறுகதையுலகில் தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளார்.

முற்றிலும் முஸ்லீம் சமுதாயப் பின்னணியில் பின்னப்பட்ட நல்ல கதை முகமது ரபீக்கின் 'புது வீடு'. மனைவி மக்களைத் தமிழகத்தில் விட்டுவிட்டுப் பிழைப்புத் தேடி மலைநாட்டுக்கு வருபவர்களின் குடும்பங்களில் ஏற்படும் விளைவுகளையும், அவ்வாறு பிழைக்க வந்தவர்கள் எதிர்நோக்கிய இன்னல்களையும் கலைநயத்துடன் விவரிக்கும் இக்கதை சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் இசுலாமியர்களின் பங்கினை மதிப்பிட உதவும் நல்ல அளவுகோல்.

கண்ணபிரான் குடும்பக் கதைகளையே எழுதுபவர் என்ற எண்ணம் பலரிடையே மேலோங்கியுள்ளது. ஆனால் அவர் கனமான உள்ளீடு கொண்ட, சமூக அக்கறையும், சமூகப் பிரக்ஞையும் மிக்க கதைகளை எழுதும் ஆற்றலுடையவர் என்பதற்குக் கட்டியம் கூறும் கதை 'நாடோடிகள்'. சிங்கையை விட்டு ஆஸ்திரேலியாவில் குடியேறிய தனபாலின் மூலமாகச் சிங்கப்பூரர்கள் நம் தாய்நாட்டுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதையே 'நாடோடிகள்' வாயிலாகக் கண்ண

பிரான் சமுதாயத்திற்குச் செய்தியாக விடுக்கிறார். 'இக்கரைக்கு அக்கரைப் பச்சை' என்னும் மனப்பான்மை கொண்ட நாடோடித் தமிழர்களால் நாட்டிற்குப் பயனேதும் இல்லை என வலியுறுத்துகிறார். தமிழர்களின் மனப்போக்கையும், சமூக நிலையையும் காட்டும் இக்கதை 'தேசிய உணர்வு' மிக்க சிறுகதையாகவும் திகழ்கிறது. சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதையின் எல்லைகளும், கருப்பொருள்களும் விரிவடைந்து வந்துள்ளமைக்கு இக்கதை நல்ல சான்று.

சிங்கப்பூரில் பணம் சம்பாதிக்க வந்த கந்தசாமி 'கச்சாங் பூத்தே'யாக வியாபாரத்தைத் தொடங்கித் தன் பணத்தை இழந்து, சுகங் களை இழந்து, மகனை இழந்து, இறுதியில் மனைவியை வரவழைத்துச் சேர்ந்து வாழ எண்ணும்போது விபத்தில் சிக்கி உயிருக்குப் போராடும் நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகிறார். கந்த சாமியைப் போன்று 'இழப்புகளை' எதிர்நோக்கிய குடியேறித் தமிழர்களின் அவலநிலை இக்கதையில் சிறப்பாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது.

நா. கோவிந்தசாமியின் 'ஓர் ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது' என்னும் கதை ஓர் எழுத்தாளன் போலி வாழ்க்கையினின்று தன்னை மீட்டுக்கொண்டு மெய்யான வாழ்க்கைக்குத் திரும்ப முயல்வதைக் கூறும் கதையாகும். 'சுயதேடல்' அல்லது உள்ளொளியைத் தேடும் நோக்கம் ஓர் எழுத்தாளனுக்கு இருக்க வேண்டும் என்பதை இக்கதை மூலம் அறியலாம். சமூகப் பிரச்சினையின் பின்னணியில் சிந்தனைக் கருத்துக்களைக் கொண்ட இக்கதை இவ்வெழுத்தாளரின் ஆளுமையை வெளிக்காட்டுகிறது. சிறுகதையின் செல்நெறிகள் மாறுபட்டிருக்கும் போக்கிற்கு இக்கதை நல்லுதாரணமாகும்.

> 'நா. கோவிந்தசாமியின் 'தேடல்' என்னும் கதை தமிழ்ச் சமூகத்தில் வேரூன்றிக் காணப்படும் தனி மனித வழிபாடு ஒழியவும், சமூக முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட கொள்கைகள் பிறக்கவும், அக் கொள்கைகளைச் செயல்படுத்தச் சம்பளம் பெற்று உழைக்கும் தலைவர்கள் உருவாகவும் வழிகாட்டு கிறது. புதிய சிந்தனையை மையமாய்க் கொண்டும், குறைந்த சம்பவங்களைக் கொண்டும் பின்னப்பட்ட கதை 'தேடல்'. மரபுவழிப்பட்ட சிந்தனை கொண்ட வர்கள் நா. கோவிந்தசாமியின் சிந்தனைகளை வரவேற்பதில்லை' (ந. பாலபாஸ்கரன், 'சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் : ஒரு நூற்றாண்டு').

சிங்கப்பூர்ச் சிறுகதைகளின் உள்ளடக்கமும், செல்நெறிகளும் மாறி வருவதற்கு இக்கதையை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

'விடியாத துருவ இருள்' என்னும் கதை இளையவன் என்னும் புனைபெயர் கொண்ட உதுமான்கனி என்பவரால் எழுதப்பட்டது. வெவ்வேறு மதத்தைச் சார்ந்தவர்கள் காதலிக்கும்போது 'மதம்' என்ற தடுப்புச் சுவர் குறுக்கே நிற்கக் காதலர்கள் பிரிய நேரிடுகிறது. படித்தவர்கள் கோழைகளாகும்போது இருள் விடியாமலே போகிறது என்பதை இக்கதை உணர்த்துகிறது. சமுதாய எதிர்ப்புக்கு அஞ்சுபவர்கள் காதலிக்கக் கூடாது என்பதை இக்கதை மறைமுகமாக உணர்த்துகிறது. இளையவன் எழுதிய மற்றொரு கதையான 'அகதி'யும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இது மனநோயாளியாகக் குற்றம் சாட்டப்பட்ட இளம் குற்றவாளி ஒருவனை மையமாய்க் கொண்டு வழக்குமன்றக் காட்சிகளின் பின்னணியில் எழுதப்பட்ட கதையாகும். சிறுகதையின் பின்னணியும், பாடுபொருளும், செல்நெறிகளும் சிங்கப்பூர்ச் சிறுகதை களில் எவ்வாறு வேறுபட்டு வந்துள்ளன என்பதை அறிதற்கு இக் கதையும் உதவும். இவ்வெழுத்தாளரின் தொழிற் பின்னணி அல்லது சார்புநிலை இக்கதையில் தெளிவாகிறது.

'எண்ணங்கள் நிலையானவை அல்ல' என்னும் கதையில் ஏழை பணக்காரன் வேறுபாடு, உழைப்பாளியின் உழைப்பிலேயே பணக்கார னாகும் சோம்பேறி முதலாளியின் நிலை ஆகியவற்றைப் பற்றிய எண்ணங்கள் நல்லத்தம்பி - சின்னக்கண்ணு ஆகிய இருவரின் வாயி லாகவும், கனவுத்தியின் வழியாகவும் வெளியிடப்படுகின்றன. மனித மனம் மாறும் இயல்புடையது என்னும் உண்மையை மா. இளங் கண்ணன் இக்கதையில் அழகாகச் சித்திரித்துள்ளார்.

'இலட்சியங்களின் ஊனங்கள்' என்னும் கதையும் அடிமட்டத்தில் வாழும் இரு ஏழைகளின் நிலையைச் சிறப்பாகச் சித்திரிக்கிறது. தாய்நாட்டுக்கு மீண்டும் செல்ல வேண்டும் என்னும் ஆசையுடன் வாழும் பிச்சைமுத்துக் கிழவருக்கு அட்டைப்பெட்டி சேகரித்து - அதில் வரும் வருமானத்தைச் சேமித்துக் கொடுத்து, அவருடைய ஆசையை நிறைவேற்ற வழி செய்துவிட்டுக் கண்ணை மூடுகிறாள் குவே என்னும் சீனக் கிழவி. இறுதியில் அப்பணம் திருடப்பட்டுக் கிழவரின் ஆசை நிராசையாகிறது. அடிமட்டத்தில் வாழ்வோர் இலட்சியங்களைக் கொண்டிருந்தாலும் அவை சமூகத்தால் ஊனங்களாக்கப்படுகின்றன என்னும் உண்மையை இன இணக்கத்தின் பின்னணியில் தமிழர், சீனர்

என்னும் இருவேறு இனப் பிரதிநிதிகளை (பிச்சைமுத்துக் கிழவர், குவே கிழவி) மையப்படுத்திப் பேசியுள்ளார் மா. இளங்கண்ணன்.

'அவர்கள் கொடுப்பார்கள்' என்னும் கதையில் திடீர் மரணத்தால் தவிக்கும் ஏழைக் குடும்பத்தின் அவலங்களை எம்.கே. நாராயணன் உணர்வுபூர்வமாக விவரித்துள்ளார். உலகநாதன் வேலை பார்க்கும் அலுவலகப் பின்னணி, ஏழைக் குடும்பத்தின் வறுமைப் பின்னணி முதலியவை சிறப்புறச் சித்திரிக்கப்பட்டுள்ளன. யாரும் பணம் கொடுக்காதபோது உலகநாதனின் மத்திய சேமநிதிப் பணம் கைகொடுப்பதாகக் கதையை முடித்துள்ளார். மத்திய சேமநிதியின் அவசியத்தினைச் சொல்வதற்காக எழுதப்பட்ட கதை என்றே தோன்றுகிறது.

நவீன இலக்கியச் சிந்தனையும், ஆழ்ந்தகன்ற அறிவுத்திறனும், நுட்பமான பார்வையும் கொண்ட, வித்தியாசமான - முரண்பட்ட (controversial) எழுத்தாளர் இளங்கோவன். புதுக்கவிதைகளின் முன்னோடியாகவும், நவீன நாடகங்களின் சிற்பியாகவும் திகழும் இவர் மிகச் சிறந்த சிறுகதை எழுத்தாளர் எனப் பறைசாற்றுவதோடு, சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகளுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தவர் என்னும் பெருமைக்கு உரியவர் ஆகிறார். 'புகை ஏணி' என்னும் சிறுகதையும், 'அறிமுகமில்லாக் கண்ணாடிகளில் எதேச்சையாக' என்னும் சிறுகதையும் சாதாரண வாசகனுக்குப் புரியாத, மிகக் கனமான உள்ளீடு கொண்ட அற்புதமான குறியீட்டுப் படைப்புகள். இவை உலகளாவிய நிலையில் உள்ள பிரச்னைகளைப் பேசுகின்றன. சிங்கப்பூர் மண்ணில் இக்கதைகள் தோன்றி இருப்பினும் இவை கொண்டுள்ள உள்ளீடுகளால் உலகத்துச் சிறுகதைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம் என்னும் முடிவுக்கு நம்மைக் கொண்டு செல்கின்றன. இத்தொகுப்பின் முடிமணிகளாக இக்கதைகள் திகழ்கின்றன. இக்கதைகளின் பின்னணி ஒரு குறிப்பிட்ட நிலவியல் எல்லையைக் கடந்து உலகளாவிய நிலையில் அமைந்துள்ளது பாராட்டிற்குரியது.

'மற்றொன்று' என்னும் கதை, தமிழகத்தில் பிறந்த பெண் சிங்கப்பூரரை மணந்து, சீரழிக்கப்பட்டு, கல்வியால் தலைநிமிர்ந்து வாழ்ந்ததைக் கடித உத்தியின் வாயிலாகக் கூறுகிறது. திருமணம் புரிந்துகொள்வதற்கு முன் தன்னுடைய கடிதத்தைப் படிப்பதன் மூலம் வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பதில் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும் எனத் தாய் தன் மகள் பூங்கொடிக்கு அறிவுரை கூறும் கதையே 'மற்றொன்று'. இது சாதாரணமான கதை என்றாலும் தமிழகத்தில் பிறந்து சிங்கப்பூரர்

களைத் திருமணம் செய்துகொண்டு வாழும் - போராடும் பெண்களின் பிரச்னை சமூகப் பிரச்சினையாகவே அண்மைக் காலம் வரையில் தலையெடுத்துள்ளது. இதனை இயல்பான நடையில், எவ்வித ஆரவாரமும் இல்லாமல் அமைதியாகவும், ஆழமாகவும் சொல்லியுள்ளார் சே.வெ. சண்முகம்.

மொத்தத்தில் தனிமனிதப் பிரச்னைகள், சமூகப் பிரச்னைகள், உலகளாவிய பிரச்னைகள் எனப் பன்முகமாகக் கிளைத்த பிரச்னைகளை வெவ்வேறான உத்திகளில் சொல்லி, மானிட உணர்வுகளை மையமாக்கி, மண்ணின் மணம் கமழச் செய்து, வட்டார மொழிநடையை வண்ண முறக் கையாண்டு சிங்கப்பூர் எழுத்தாளர்கள் சிறுகதைகளைப் படைத்துள்ளனர் என்பதைச் 'சிங்கப்பூர்ச் சிறுகதைகள்' என்னும் நூல் தெள்ளிதின் உணர்த்துகிறது.

முடிவுரை

இருபத்தோராம் நூற்றாண்டில் சிங்கப்பூர்த் தமிழ்ப் புனைகதை இலக்கியம் தழைத்து வளர இளம் எழுத்தாளர்கள் உத்வேகத்தோடு செயல்பட வேண்டும், அரசு வழங்கும் நல்வாய்ப்புகளை வியாபார நோக்கின்றி இலக்கியச் சிந்தனையோடு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மூத்த எழுத்தாளர்கள் ஓய்ந்துவிடாமல் தொடர்ந்து முனைப் போடு செயல்பட வேண்டும்.

(1999இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திய 'சமகாலச் செல்நெறிகள்' என்னும் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை)

துணைநூற் பட்டியல்

1. இளங்கோவன், 'சிங்கப்பூர் இலக்கியப் போக்குகள்', 1965-81, 'சிங்கப்பூரில் தமிழும் தமிழ் இலக்கியமும்', ஆய்வரங்க மாநாட்டுக் கட்டுரைகள், சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை, 1981.
2. கண்ணபிரான், இராம., 'சிங்கப்பூரில் தமிழ்ச் சிறுகதை', சிங்கப்பூரில் தமிழும் தமிழ் இலக்கியமும், ஆய்வரங்க மாநாட்டுக் கட்டுரைகள், சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை, 1977.
3. கோவிந்தசாமி. நா. 'சிங்கப்பூர்ப் புனைகதைகள்' (The Fiction of Singapore) முன்னுரை, 1981.
4. பாக்கியம் முத்து, தி. 'இலக்கியத்தில் மனிதன்', கிறித்துவ இலக்கியச் சங்கம், 1972.

5. இலக்குமி மீனாட்சிசுந்தரம், 'சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தின் நோக்கும் போக்கும்', எட்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தஞ்சை, 1994.

6. 'சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் - ஒரு நூற்றாண்டு', சிங்கப்பூர் எழுத்தாளர் கழக வெளியீடு, 1996.

7. 'சுபமங்களா', ஜூன் 1993.

8. 'கணையாழி', ஏப்ரல் 1993.

9. 'தினமலர்', மார்ச் 31, 1993.

●

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தில் தமிழ்ச் சமூகப் பிரதிபலிப்பு

அறிமுகம்

இலக்கியம் ஒரு சமுதாய ஆவணம். தனிமனிதனுக்கும் சமுதாயத்துக்கும் இடையே உள்ள உறவுகளைப் பற்றி இலக்கியத்தின் வழியே அறிந்துகொள்வதோடு சமுதாய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்வ-தற்குரிய ஆவணமாகவும் இலக்கியம் இலங்குகிறது. இக்கண்ணோட் டத்தில் சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தை அணுக விழைந்ததன் பயனாகச் 'சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தில் தமிழ்ச் சமூகப் பிரதிபலிப்பு' என்னும் ஆய்வு மலர்கிறது.

முன்னைய ஆய்வுகள்

'சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் - ஒரு சமூகவியற் கண்ணோட்டம்' (1979) என்னும் தலைப்பில் அமரர் நா. கோவிந்தசாமி சிங்கப்பூர்த் தமிழிலக்கியங்களை ஆராய்ந்துள்ளார். இதனை இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஓர் அறிமுக முயற்சியாக அவர் செய்தார் என்றே கூறவேண்டும். ஆழமான சமூகவியற் கண்ணோட்டத்திற்கு இவர்தம் ஆய்வில் இடமில்லை. இக்கட்டுரையில் சமூகவியற் கண்ணோட் டத்துடன் முற்றிலும் சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தை ஆராயவில்லை என்று அவரே இக்கட்டுரையாளரிடம் கூறிக் கவன்றதுமுண்டு (1992).

'சிங்கப்பூர்த் தமிழர்களின் எண்ணங்களும், அவர்களின் இன அடையாளமும் அவர்களின் எழுத்துக்களில் வெளிப்படும் பாங்கு' என்னும் தலைப்பில் திருமதி டக்மார் ஹென்மன் ராசநாயகம் என்னும் ஜெர்மானியப் பெண்மணி ஆங்கில ஆய்வுக் கட்டுரை ஒன்றைத்

தென்கிழக்கு ஆசிய மையத்தில் எண்பதுகளில் (1983) படைத்தார். அருமையான, துணிச்சல்மிக்க, நேர்மையான ஆய்வுக் கண்ணோட்டத்துடன் தமிழ்ச் சமூகத்தைப் பற்றிய ஆய்வாக மலர்ந்த அக்கட்டுரை இருட்டடிப்புச் செய்யப்பட்டது வேதனையும், வெட்கமும் தரும் செய்தியாகும். சிங்கப்பூர்த் தமிழர்களுள் ஒரு சிலர் 'இச்சதியில்' ஈடுபட்டதன் வாயிலாக இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சிங்கப்பூர்த் தமிழர்களின் பங்களிப்பு எவ்வாறு அமையும்? என்னும் கேள்வி இந்நூலாசிரியரின் உள்ளத்தில் எழுந்தது. திருமதி. ராசநாயகம் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்களிடம் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருப்பதன் வாயிலாகச் சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தின் நோக்கும் போக்கும் பற்றிய தெளிவான சிந்தனை பிறக்க வழிவகுத்தார் என்று கூறுவது மிகையன்று. அவருடைய ஆய்வு முயற்சியைத் தொடர்ந்து மற்றொரு சமூகவியல் ஆய்வின் அடிப் படையில் இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது. திருமதி ராசநாயகம் 1965க்குப் பிறகு வெளிவந்த புனைகதைகளை மட்டும் ஆய்வுக் களனாகக் கொண்டிருந்தார் என்பது இவண் குறிப்பிடப்பட வேண்டிய செய்தி ஆகும்.

ஆய்வின் ஆழமும் அகலமும்

இலக்கியம் என்பதை ஒரு சமூகப் பத்திரமாகவும், சமூக வரலாற்று ஏடாகவும் காண வேண்டும். படைப்பாசிரியரின் தனித்தன்மையைப் பொறுத்துச் சமூக உண்மையை ஏதாவது ஒரு வகையில் இலக்கியம் பிரதிபலிப்பதாலும், அதை ஒரு சமூகப் பத்திரமாகக் கருதுகிறார்கள் இலக்கியச் சமூகவியலாளர்கள் (literary sociologists). மேலும் அது உண்மையான வாழ்க்கை நிலையைக் கற்பனை ஆற்றலுடன் கொடுக்கும் ஒன்றாகவும் திகழ்வதால் அதனை ஒரு சமூக வரலாற்று ஏடாக, நினைவுச்சின்னமாகக் கருதுகின்றனர்.

சிங்கப்பூர் இலக்கியத்தைச் சமூகவியல் அணுகுமுறையோடு ஆராயும் வேளையில் எழுத்தாளர்களை அல்லது இலக்கியப் படைப் பாளிகளை மையமாய்க் கொண்ட சமூகவியல் ஆய்வு, இலக்கியங்கள் நுவலும் சமுதாயச் செய்திகள், இலக்கியத்தின் மீது சமுதாயத்தின் தாக்கம் ஆகிய மூன்று நிலைகளில் இக்கட்டுரை தமிழ்ச் சமூகப் பிரதிபலிப்பைக் காட்ட முயல்கிறது.

இலக்கிய விமர்சனம் பற்றி ஒரு முறை க.நா.சு. அவர்களிடம் ஆர்.கே. நாராயன் கீழ்க்காணுமாறு சொன்னார்:

> 'பட்டணத்தில் மழை பெய்தபின் சாக்கடை நீரைச் சல்லடை போட்டுச் சலித்து ஏதாவது பொன் கிடைத்திருக்கிறதா என்று பார்த்துக்கொண்டு சிலர் இருப்பதைப் பார்த்திருக்கிறாயா? அந்த மாதிரிதான் விமரிசனம் என்பதும் சாக்கடையில் சல்லடை போட்டுத் தேடுகிற விஷயம்தான். சில சமயம் காணாமற் போன தங்கத் திருகாணி கிடைக்கும். சில சமயம் காணாமற் போன மோதிரம் கூடக் கிடைக்கலாம். ஆனால், சில சமயம் ஒன்றுமே கிடைக்காது.'

இலக்கியத் திறனாய்வின் அருமைப்பாட்டைக் குறிக்க இவ்வுவமை கையாளப்படுகிறதே தவிர சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தை இழிவுபடுத்தக் கையாளப்படவில்லை. மேலும் ஆர்.கே. நாராயண் கூறியது போன்று காணாமற் போன திருகாணியாகவோ, மோதிரமாகவோதான் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்களின் சமூகப் பார்வை அமைகிறது. சிங்கப்பூரில் ஆர்வம் காரணமாகவும், துடிப்பு காரணமாகவும் நிறையபேர் எழுதிக்கொண்டிருந்தாலும் நிறைவு தரும் படைப்புகள் மிகச் சிலவே. இலக்கியச் சமூகவியலாளராக ஆய்வு செய்வதால் அவற்றில் சமூகப் பிரதிபலிப்பு எந்த அளவு உண்மையாக இடம் பெறுகிறது என்பதை அறிய இயலும்.

ஆய்வு மூலங்கள்

சிங்கப்பூர்த் தமிழ்ப் படைப்பிலக்கிய வகைகளான கவிதைகள், புனைகதைகள், நாடகங்கள் அனைத்திலும் இடம்பெறும் சமூகப் பிரதிபலிப்பு எத்தகையது என்பதைப் பரந்துபட்ட ஆய்வு மூலங்களைக் கொண்டு இக்கட்டுரை விளக்குகிறது.

சிங்கப்பூரின் சமூகச் சூழல்

சிங்கப்பூரில் வாழும் மற்ற இன மக்களை நோக்க, எண்ணிக்கையளவில் மிகச் சிறுபான்மையினராய், எண்ணங்களாலும், பார்வைகளாலும் பெரும்பான்மைச் சமுதாயத்தினரினின்று வேறுபட்டு வாழும் தமிழர்களைச் சிறுபான்மைத் தமிழரென அழைப்பதில் சமூகவியலாளர்கள் இருவேறு கருத்துகள் கொண்டிருக்க முடியாது. மலேசியாவைப் போலப் பல இன மக்கள் வாழும் நாடாக இருப்பினும் மலேசியாவில் இல்லாத சில சிறப்பு அம்சங்கள் இங்குள்ளன. இவண்

தமிழ் ஆட்சி மொழியாக இருப்பதால் இலக்கியம் படைக்கும் வாய்ப்புக்கு எவ்விதத் தடையும் (தமிழ் மக்களைத் தவிர) இல்லை.

வாய்ப்புகள் இருந்தும், வசதிகள் இருந்தும் சிங்கப்பூர்த் தமிழர்கள் படைப்பிலக்கியத் துறையில் எப்படித் தங்கள் பிரச்னைகளைக் கையாண்டிருக்கிறார்கள்? அவர்களின் சமூகப் பிரச்னைகள் அவர்கள் படைக்கும் இலக்கிய வகைகளில் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகின்றன? அவர்களின் எண்ணங்களையும், பார்வைகளையும் படைப்பிலக்கியம் எவ்வாறு வெளிப்படுத்துகின்றது? சமூக, அரசியல் மாற்றங்கள் சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தில் எவ்வளவு தூரம் பேசப்பட்டிருக்கின்றன? சமூக, அரசியல் மாற்றங்களின் பாதிப்பு சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா? என்பன போன்ற கேள்விகளைச் சிங்கப்பூர்ச் சூழல் என்னுள் தோற்றுவித்தது.

> 'இலக்கியம் என்பது சமுதாய அமைப்பு; அதன் மொழி சமுதாயப் படைப்பாகும். அதனுடைய வழி முறைகள், கொள்கைகள் மற்றும் செயல்வகைகள் அனைத்துமே சமுதாயத்தில்தான் தோன்றுகின்றன. எல்லாவற்றையும் விட இலக்கியம் என்பது வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும். இப் பிரதிபலிப்பு பெருமளவில் ஒரு சமூக உண்மையாகும். இதைத் தவிர, அதன் பயனாகவே அதற்கொரு சமூகப் பணியுண்டு. அதோடு அதில் எழும் பல வினாக் களும், பிரச்னைகளும் சமுதாயத்தைச் சார்ந்தவையே'
> (சி.இ. மறைமலை 1991)

என்னும் கருத்தை ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் இலக்கியமும் சமுதாயமும் கொண்டுள்ள அணுக்கம் புலனாகும்.

சிங்கப்பூரின் மொழி, இலக்கியச் சூழல்

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் குடியேறிகளால் வேர்விடத் தொடங்கிய இலக்கியமாகும். தமிழகத் தமிழர்கள் தோட்டத் தொழிலாளிகளாக ஆங்கிலக் காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ்ப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கொண்டுவரப்பட்டபோதே (1825 - 1873) இலக்கியம் படைக்கத் தொடங்கினர். தமிழ்நாட்டில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியின் எதிரொலியும் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் ஒலித்தன. இதற்குத் தக்கதோர் எடுத்துக்காட்டு பெரியாரின் சுயமரி யாதை

இயக்கமாகும். ரப்பர்த் தோட்டப் பாட்டாளிகளாகக் கொண்டுவரப் பட்டவர்களுள் ஆதிதிராவிடர்களின் எண்ணிக்கை ஐம்பது விழுக்காடாகச் சிங்கப்பூரிலும், மூன்றில் ஒரு பங்காக மலேசியாவிலும் இருந்தது (அ. மணி, 1971). தமிழர் அமைப்புகளின் தோற்றத்திற்குச் சுயமரியாதை இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகள் ஆகியவற்றில் கொண்டிருந்த பிடிப்பும் காரணமாக அமைந்தது.

1950களில் சிங்கப்பூரில் நடந்த குடியேற்றத்தின்போது, இப்போதைய தமிழ் எழுத்தாளர்கள் பலர் சிங்கப்பூருக்கு வரத் தொடங்கினர். மேலும் திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற (தமிழக) அமைப்புகளின் செல்வாக்கினால் தனித்தமிழ் நடையும் சிங்கப்பூருக்குப் புது வரவாக அமைந்தது. ஈ.வெ.ரா.வின் கொள்கையைப் பின்பற்றுபவர்கள் எழுத்துலகில் பிரவேசித்தனர். தமிழவேள் கோ. சாரங்கபாணியால் உருவாக்கப்பட்ட தமிழ் எழுத்தாளர்கள் பலராவர்.

சிங்கப்பூர்த் தமிழர்களுக்குள்ளும் இரு வேறுபட்ட வர்க்கங்கள் இருந்தன. ஆங்கிலம் கற்ற உயர்மட்டத் தமிழர்களுக்கும், தமிழ் மட்டுமே கற்ற அடிமட்டத் தமிழர்களுக்கும் இடையே பெரிய இடைவெளி இருந்து வந்தது. தமிழ் மட்டுமே கற்ற தமிழர்கள் பெரும்பாலும் தமிழர் பிரதிநித்துவ சபையின் (TRC) ஆதரவாளர்களே! ஆங்கிலம் கற்ற உயர்மட்டத் தமிழர்கள், தமிழ் மட்டுமே கற்ற அடிமட்டத் தமிழர் களைத் தாழ்ந்த சாதியினராகக் கருதினர். மேலும் உயர்மட்டத் தமிழர்களின் கண்ணோட்டத்தில் அடிமட்டத் தமிழர்கள் குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாயும், திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளில் ஊறிப்போனவர்களாயும், தமிழ்நாட்டு அரசியலுக்கு ஆட்பட்டவர்களாயும் விளங்கினர். தமிழ் மொழியைக் 'கூலிக்காரன் பாஷை' (Coolie Tamil) என்று வருணித்த காலமும் உண்டு. சமூக அந்தஸ்து நாடிய அடிமட்டத் தமிழர்களில் சிலர் ஆங்கிலம் கற்றுத் தமிழைப் புறக்கணித்துத் தாம் பெற விரும்பிய சமூக முன்னேற்றத்தைப் பெற்றனர். இவர்களைத் 'தமிழ்த் துரோகிகள்' என்றுகூட வருணித்தனர் தமிழ் மட்டுமறிந்த அடிமட்டத் தமிழர்கள். தாழ்ந்த சாதியினரில் பெரும்பாலோர் தமிழ் ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தனர்; அவர்களே எழுத்தாளர்களாயும் திகழ்ந்தனர். இவர்கள் தமிழ் இலக்கியங்களே தலைசிறந்தவை என்னும் கருத்துடையவர்கள். 'அகமையப் பண்பாட்டு நெறியாளர்கள்' என்று முனைவர் மறைமலை குறிப்பிடுவது போல (சி.இ. மறைமலை, 1991) பிறமொழி இலக்கியங்கள்

பற்றி மிகுதியும் அறியாதவர்களாய் விளங்கினர். தமிழைக் 'கூலி பாஷை' எனக் கருதிய காரணத்தால் உயர்மட்டத் தமிழர்கள் அடிமட்டத் தமிழர்களை மதிக்கத் தயங்கினர். மேலும் ஆங்கிலம் கற்றாலும் கூடத் தமிழ் இயக்கங்கள் கற்பித்த சில விஷயங்களை இவர்கள் இன்னமும் பின்பற்றுவதாகவே உயர்மட்டத்தினர் கருதினர். ஆகவே ஆங்கிலம் கற்ற உயர்மட்டத்தினர் தமிழையும், தமிழ் இலக்கியத்தையும் அக்கறைக்குரிய விஷயங்களாகக் கருதவில்லை. தாய்மொழிக் கல்வியை - இரண்டாம் மொழிக் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டிய கடப்பாடு அரசாங் கத்திற்கு உண்டாயிற்று. இக்கல்விக் கோட்பாடு இளந்தலைமுறையினர் 'மொழி வேர்களை' (linguistic roots) மறக்காமலிருக்க ஒரு வாய்ப்பாக இருந்தது. இப்படிப்பட்ட சூழலிலும் தமிழைப் பற்றிய அவர்களின் மனப்போக்கு இன்னும் மாறவில்லை.

தமிழ் எழுத்தாளர்கள் பலரும் 'சமூக அந்தஸ்து' என்னும் மாயையில் - போர்வையில் தங்களை மறைத்துக்கொண்டு தாங்கள் சார்ந்திருக்கும் சமூகத்தைப் பிரதிபலிக்கத் தவறியுள்ளனர். தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதும், 'ஆதிதிராவிடர்கள்' என்று இவர்களை அழைத்ததும் இவர்களைப் புண்படுத்தியிருக்க வேண்டும். சிங்கப்பூரிலும் இந்தியாவைப் போலவே 'பறையர்கள்' எனப்படும் ஆதிதிராவிடர்களை இழிவாக நடத்திய நிலையை மணி தன் ஆய்வில் கூறியுள்ளார் (மணி, 1971). தலைமுறை தலைமுறையாக ஒடுக்கப்பட்ட இவ்வினத்தினர் ஒளிந்துகொள்ள முயன்றனரே அன்றிச் சமுதாயத் தடுப்புகளை (social barriers) அல்லது சமூகத் தடைகளை உடைத்தெறிந்து விட்டுத் தைரியமாகத் தங்கள் சமூகம் எதிர்நோக்கிய பிரச்னைகளை எழுதத் தயங்கினர். ஒரு வேளை இவர்கள் தங்கள் சமூகம் எதிர்நோக்கிய பிரச்னைகளை வெளிச்சமிட்டுக் காட்டியிருந்தால் 'தலித்' இலக்கியம் போல ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் சிக்கல்களைப் பேசும் இலக்கிய வகைகள் பல இங்கும் எழுந்திருக்க வாய்ப்புண்டு (உரிமைகள் மறுக்கப்பட்டுக் காலங்காலமாக ஒடுக்கப்பட்ட சமூகநிலை கருதியே 'தலித்' என்னும் சொல் இங்குக் கையாளப்பட்டுள்ளது). ஆனால் துரதிர்ஷ்டவசமாக எழுத்தாளர்கள் பலருக்குப் போதுமான துணிவில்லை. பயப்படுபவர்கள் - கோழைகள் பேனாவைப் பிடிப்பதால் பயனென்ன? ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக் குரல்களை வெளிப்படுத்த வேண்டிய எழுத்தாளர்களே ஒளிந்துகொண்டனர்.

பல்லினச் சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த எழுத்தாளன், சமூக அளவிலும் தனிமனித அளவிலும் பிரச்னைகள் மலிந்து கிடக்கும் ஒரு சமுதாயத்தின் கலைஞனாக அவற்றைப்

பிரதிபலித்துக் காட்டி அவற்றை விமர்சிக்க வேண்டும். ஆக்கப் பூர்வமான இந்தச் சமூக நற்பணியில் சிங்கப்பூரைப் பொறுத்தவரை சிறந்து விளங்கும் அல்லது துணிவுடன் ஈடுபடும் எழுத்தாளர் எண்ணிக்கை பெருக வேண்டும். பல்லினச் சமுதாயத்தில் சிறுபான்மைச் சமூகத்தின் தொண்டன் என்ற முறையில் திரு. இளங்கோவன் ஆக்கப்பூர்வமான இலக்கியப் பணியாற்றி வருகிறார். இருமொழி வல்லுநராகவும், பன்முகக் கலைஞராகவும் (multifaceted) திகழும் திரு. இளங்கோவனைத் தவிர வேறு யாருக்கும் துணிச்சல் இருப்பதாகத் தெரியவில்லை. துணிச்சலின்மையால் பல சமூகப் பிரச்னைகள் கையாளப்படாமல் ஒளிக்கப்பட்ட பிரச்னைகளாகி வருகின்றன. அதே வேளையில் 'சிங்கப்பூர் எழுத்தாளர்கள் செயற்கையாகச் சிக்கல்களை உருவாக்கிக் கொண்டு நடைமுறைக்கு ஒவ்வாத வகையில் எழுதி உள்ளனர்; உண்மையான சிக்கல்களை எழுதி அவற்றுக்குத் தீர்வு காண அஞ்சுகின்றனர்' (டக்மார் ராசநாயகம், ப. 32) எனக் குற்றம் சாட்டுவது பொருத்தமானதாகவே படுகிறது. ஆழமான, கூரிய அறிவுத்திறனாலும், சமூகப் பார்வையாலும் மட்டுமே சமூகத்தில் புதைந்து கிடக்கும் விஷயங்களை வெளிக்கொண்டுவர முடியும். இத்தகு பார்வை இருப்பதனாலேயே திரு. இளங்கோவனால் புதைந்து கிடக்கும் பிரச்சனைகளை வெளிக்கொண்டுவர முடிகிறது. 'முரண்பட்ட எழுத்தாளர்' என்னும் முத்திரை இவருக்குண்டு. இவர் ஆங்கிலம் கற்ற உயர்மட்டத் தமிழராக இருந்தபோதிலும் வர்க்க வேறுபாடுகளைக் கடந்து சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்னைகளுக்கே முக்கியத்துவம் அளித்து வருகிறார். சிறுபான்மைச் சமூகத்தின் குரலாகவே இவரது படைப்புகள் ஒலிக்கின்றன.

பெரும்பான்மையான தமிழ் எழுத்தாளர்கள் தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு எனக் குறுகிய வரையறைகளை வகுத்துக்கொண்டு எழுதி வருகின்றனர். இவர்களின் இத்தகைய 'செக்குமாட்டுத் தன்மை' காரணமாக இவர்களின் படைப்புகளில் ஆழமான சமூகப் பார்வை அமைய வாய்ப்பில்லை. ஆழமான சமூகப் பார்வையோ அல்லது சமூகப் பிரக்ஞையோ இல்லாத காரணத்தால் கனமான படைப்புகள் இவர்களிடம் உருவாக வாய்ப்பில்லை.

மொழி, இலக்கியம் போன்றவற்றின் மீது கொண்டுள்ள வேட்கையால் பத்திரிகைகளில் எழுதியும், சொந்தமாக நூல்களை வெளியிட்டும் ஆர்வம் காட்டி வருகின்றனர் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள். பொதுவாகப் புத்தகம் வாங்குவது, இலக்கிய முயற்சி களை ஆதரிப்பது போன்ற அறிவார்ந்த விஷயங்களைச் சிங்கப்பூர்த்

தமிழர்களிடம் எதிர்பார்ப்பது நம்பிக்கை மோசம் போவதாகும். இப்படிப்பட்ட, ஆர்வமில்லாத பொதுமக்களை வாசகர்களாகப் பெற்றும் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் ஆர்வத்தோடு நூல்களை எழுதி, வெளியிட்டு வருகின்றனர் என்றால் அதற்குரிய முக்கியக் காரணங்களாக இக்கட்டுரையாளர் இரண்டினைக் கருதுகிறார். தங்களைக் 'கீழ்ச்சாதி' என்னும் போர்வையிலிருந்து விடுவித்துக்கொண்டு முன்னேறுவதற்கும், சமூக அந்தஸ்து மாற்றத்திற்கு அடையாளமாகவும் (Social mobility) ஆசிரியப் பணியைப் போலவே எழுத்துப் பணியையும் கொண்டுள்ளனர்.

மேலும் இலக்கிய வள்ர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமான தாகவும், அணுக்கமானதாகவும் கருதப்பட வேண்டிய இலக்கியத் திறனாய்வுச் சூழலும் சிங்கப்பூரில் திருப்தி தருவதாக இல்லை. எடுத்துக் காட்டாகச் சில எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளில் (சான்று: பெரி.நீல. பழனிவேலனின் 'அந்தரத்தில் தொங்கும் உறவு', நாரண. புதுமைப்பித்தனின் 'அவன்' முன்னுரையில்) இலக்கியத் திறனாய்வுப் புலிகளிடம் தம் நூல் சிக்கிக்கொள்வதைத் தாங்கள் பொருட்படுத்த வில்லை என்ற தொனி ஒலிக்கப் புலம்பியும், வருந்தியும் எழுதியுள்ளதை நோக்க, திறனாய்வு என்னும் உரைகல்லில் தங்கள் படைப்புகள் உரைத்துப் பார்க்கப்படுவதை இவர்கள் விரும்பவில்லை என்னும் உண்மை வெட்ட வெளிச்சமாகிறது. இவர்களின் பார்வைகள் விசாலப் படத் தடையாகின்றன. மாறாக எழுத்தாளர்களில் ஒரு சிலர் நடுநிலையுடன் நின்று திறனாய்வு செய்துள்ளமையை இராம. கண்ணபிரான், திரு. இளங்கோவன், திரு. பி. கிருஷ்ணன், அமரர் நா. கோவிந்தசாமி ஆகியோரின் கட்டுரைகளிலிருந்தும், உரை அரங்குகளில் அவர்கள் ஆற்றிய உரைகளிலிருந்தும் அறியலாம். இவர்களுள்ளும் திரு. இளங்கோவன் திட்சண்யமான திறனாய்வுப் பார்வை கொண்டவர்.

படைப்பிலக்கியம், திறனாய்வு ஆகிய இரு துறைகளிலும் 'இலக்கியத் திருட்டு' பல்கிவரும் சூழல் சிங்கப்பூரில் தமிழர்கள் மத்தியில் பரவியுள்ளது. மூத்த எழுத்தாளரான சே.வெ. சண்முகம் எழுதிய 'சிங்கப்பூர்க் குழந்தைகள்' என்னும் சிறுகதை லெட்சுமி தனகோபால் (லெட்சுமி வீரப்பன்) என்னும் பெண் எழுத்தாளரால் முழுவதுமாக திருடப்பட்டுச் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தினரால் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டிக்கு அனுப்பப்பட்டது. அச்சங்கத்தினர் அக் கதைக்குப் பரிசளித்துப் பாராட்டியதை நோக்க, தமிழர்கள் மத்தியில்

இலக்கியத் திருட்டு அப்பட்டமாகவே ஊக்குவிக்கப்படும் சூழல் சிங்கப்பூரில் நிலவுகிறது என்பதை நாம் ஒத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

இலக்கியத் திறனாய்வுத் துறையில் சொல்லுக்குச் சொல் திருடும் போக்கு மட்டுமன்றிச் சொந்தக் கருத்து எதுவும் தம் சிந்தனையில் உதிக்காத பட்சத்தில் பிறர் கருத்துகளையே தம் சொந்தக் கருத்தாக்கிக் கொண்டு எழுதும் அவலநிலையும் ஆழமாக வேரூன்றிவிட்டது. கல்வியாளர்களும் இப்போக்கினைத் தாராளமாக வளர்த்து வருகின்றனர். ஆகவே கல்வியாளர்கள் மத்தியில் திறனாய்வு இன்னும் பரிதாப நிலையிலிருந்து விடுபடவேயில்லை. 'அறிவுக் கடல்களிலும்', 'இலக்கியக் கடல்களிலும்' அலைக்கழிக்கப்படும் துரும்பாகி, 'ஆய்வு நரிகளாலும்', 'ஆய்வுக் கிளிகளாலும்', 'ஆய்வுப் பூனைகளாலும்' பதம் பார்க்கப்பட்டு, 'சோரம் போன' பண்டங்களாகத் திறனாய்வுகள் வெளி வந்துள்ளன. உதாரணமாக முனைவர் சுப. திண்ணப்பன், 'சிங்கப்பூரில் தமிழ் மொழியும் இலக்கியமும் : 1965 முதல் 1990 வரை ஓர் அகன்ற பார்வை' என்னும் கட்டுரையில் அமரர் நா. கோவிந்தசாமியின் கருத்துக்கள் பலவற்றை மேற்கோள்களாகக் காட்டாமல் தன்னுடைய சொந்தக் கருத்துகள் போலவே கூறியுள்ளார். 'பிறர் கருத்துக்களைத் தன் சொந்தக்கருத்துக்கள் போலக் கூறுவது சோரம் போய்ப் பெற்ற பிள்ளையைத் தன் சொந்தப் பிள்ளை எனச் சொல்வதாகும்; இது ஆய்வு நாகரிகமாகாது' எனத் தமிழியல் ஆய்வு என்னும் நூலில் முனைவர் தமிழண்ணல் கூறியதை நோக்க முன்னர் குறிப்பிடப்பட்ட கட்டுரையைச் 'சோரம் போன பண்டம்' எனச் சொல்வதில் தவறென்ன?

மேலும் முனைவர் திண்ணப்பன் காட்டிய வழியில் பலரும் துணிந்து சென்று இலக்கியத் திருட்டினை - கருத்துத் திருட்டினை மேற்கொண்டு வரும் பரிதாபமான நிலை சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய உலகில் பிரபலமாகி வருகிறது. ஆய்வறம் பேணாத முறையில் முனைவர். ஆ.ரா. சிவகுமாரனும் மூலக் கருத்து யாருடையது என்பதைச் சற்றும் ஆராயாது திருடப்பட்ட கருத்தினை மேற்கோளாகக் காட்டியிருக் கிறார். இப்போக்கு அவருடைய 'சிங்கப்பூர்த் தமிழ்ப் படைப்பிலக் கியத்தின் தோற்ற வரலாறு' என்னும் கட்டுரை மூலம் ('தமிழ் மாருதம்', ஆவணி - 2000) வெட்டவெளிச்சமாகிறது. இதனால் கருத்துத் திருட்டு செல்வாக்குப் பெற்று வருவதையும் அறிய முடிகிறது. 'நடுநிலை பிறழ்ந்த' அக்கட்டுரையில் எம். இலியாஸின் கருத்தினை மேற்கோள் காட்டி எழுதியுள்ளார் அவர். அப்பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

'எழுத்தாளர்கள் குறைந்தது மாதம் ஒரு படைப்பை யாவது எழுத வேண்டும் என்று பேரவை கட்டாயப் படுத்தியது. ஒவ்வொரு மாதமும் சில தலைப்புகளைக் கொடுத்து அத்தலைப்புகளுக்கு ஏற்பச் சிறுகதைகள் எழுதத் தூண்டியது. இது சிங்கையில் தமிழ் இலக்கியப் படைப்பாளிகள் எழுத்தார்வம் பெறு வதற்கும் திறன் பெறுவதற்கும் பெரிதும் துணைபுரி கிறது' (எம். இலியாஸ், தமிழவேள் சாரங்கபாணி).

'தமிழவேள் சாரங்கபாணி' என்னும் நூலை எழுதிய எம். இலியாஸ், திரு. இராம. கண்ணபிரான் அவர்கள் 'சிங்கப்பூரில் தமிழ்ச் சிறுகதை (1930 - 1977)' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் ('சிங்கப்பூரில் தமிழும் தமிழ் இலக்கியமும்' 1977, சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை) இடம்பெற்றுள்ள பல பகுதிகளைச் சொற்களைக் கூட மாற்றாமல் அப்படியே பயன்படுத்தியுள்ளார். இதைத் திருட்டு என்று சொல்லாமல் எப்படி அழைப்பது? இராம. கண்ணபிரானின் கருத்துக்கள் என்றுகூட திரு. இலியாஸ் சுட்ட வேயில்லை. இப்படித் திருடப்பட்ட கருத்துக்கள் எட்டு இடங்களில் இடம்பெற்றுள்ளன. ஆய்வாளர் என்ற முறையில் உண்மையான கருத்துக்கள் எவை? திருடப்பட்ட கருத்துக்கள் எவை என்றுகூடத் தெரி யாமல் முனைவர் பட்ட ஆய்வுக்காகச் சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தை ஆய்வுப்பொருளாக எடுத்துக்கொண்ட முனைவர் ஆ.ரா. சிவகுமாரன் முன்னர் குறிப்பிடப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் இவற்றை மேற் கோளாகக் காட்டியுள்ளார். இஃது ஆய்வறமா? ஆய்வு மேற்கொள் வோர் ஆய்வறம் பேண வேண்டியது அவர்களின் கடப்பாடு. இப்படிக் கடப்பாட்டை மறந்த ஆய்வாளர்கள் எப்படி நடுவுநிலை தவறாத, நேர்மையான ஆய்வுகளை நிகழ்த்த முடியும்?

பதவிக்காக முனைவர் பட்டம் பெறும் ஆய்வாளர்கள் சிலர் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தைப் போலியாக ஆய்வு செய்து தங்களுக்குத் தேவையான பட்டங்களையும், பதவிகளையும் பெற்று வருகின்றனர். உண்மையான, ஆழமான, இலக்கியப் பிரக்ஞைமிக்க ஆய்வுகள் வெளிவருவதற்குக் காரணகர்த்தாக்களே இல்லாத அவலநிலை சிங்கப்பூரில் காணப்படுகிறது. நடுநிலை நின்று, வெளிப் படையாக, உண்மையைக் கூறும் திறனிகளுக்கு ஏற்படும் தொல்லை களும், துன்பங்களும் சொல்லுந் தரமன்று. மிகப் பல எழுத்தாளர்களின் 'கிழறுப்பு வேலையும்', 'கீழான புத்தியும்' நடுநிலை பிறழாது இலக்கியப்

பணியாற்றுவோருக்குச் சவாலாகவே உள்ளன. வெறும் முகஸ்துதிகளை வரவேற்று அவற்றிலேயே மகிழ்ச்சி காணும் மனப்போக்கு மிகப் பல எழுத்தாளர்களை ஆக்கிரமித்துக்கொண்டு இருப்பதால் ஆரோக்கிய மான திறனாய்வுகள் எழ வாய்ப்பில்லை. திறனாய்வு செய்வோர் உண்மையைக் கூற அஞ்சும் 'பேடித்தனமும்' சிங்கப்பூரில் நிலவுகிறது. 'பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாத பாங்கைப் போல' எதற்கும் அஞ்சாத மனோதைரியமும், மனோதிடமும் மிக்க ஒரு சிலர் இவற்றுக்கு அப்பாற்பட்ட நிலையில் திறனாய்வு செய்துவருகின்றனர். இக்கட்டுரை யும் அத்தகைய முயற்சியே! சிங்கப்பூரின் சமூக, பொருளியல் மற்றும் இலக்கியச் சூழல்கள் பற்றி இதுவரை விளக்கப்பட்டன. இனிச் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தில் சமூகப் பிரதிபலிப்பு எங்ஙனம் காட்டப்பட்டுள்ளது என்பதைக் கவிதைகளின் துணை கொண்டு இக்கட்டுரையின் முதற் பகுதி விளக்க முயல்கிறது.

தொடக்க கால (1887 - 1890) இலக்கிய முயற்சிகளான 'சிங்கை நகர் அந்தாதி', 'சித்திரக் கவிதைகள்', 'முருகேசர் பேரில் பதிகம்', 'கீர்த்தனைத் திரட்டு', இரங்கசாமிதாசனின் 'அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி' ஆகிய நூல்கள் பக்தியைப் பாடுபொருளாகக் கொண்டு வெளிவந்துள்ளன. 'இக்காலக்கட்டம் வரையிலான நூல்கள் பொது வாக இறையுணர்வு கொளுத்துதலிலும், ஒரு சில நாட்டு வரலாற்றைக் குறிப்பிடுவதிலும் முன்னின்றவையாகும்' (முல்லைவாணன், 1985) எனக் குறிப்பிடுவது இவண் நினையத்தகும்.

பக்தியுணர்வு பாடுபொருளாக அமைந்தாலும் கூடத் 'தேசிய இலக்கியம்' என்னும் சிறு விதை இக்காலகட்டத்தில் விதைக்கப்பட்டது. இது சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தின் மூலவர்களாகக் குடியேறிகள் மலரத் தொடங்கிய காலமுமாகும். 1893, 1907, 1936, 1937 ஆகிய நான்கு ஆண்டுகளிலும் வெளிவந்த 'அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி', 'சிங்கை நகர் சிங்கார வடிவேலர் காவடிச் சிந்து', 'புத்தர் ஆலய வழிநடைச் சிந்து', 'இந்தியக் கப்பற் பிராயாண வழிநடைச் சிந்து' ஆகிய நான்கு பயண நூல்களும் நாட்டுப்புற இலக்கியத்தை அடியொற்றிச் சமூகத்தைப் பிரதிபலித்த அளவுக்குக் கூட இன்றைய கவிதை நூல்கள் தற்காலச் சமூகத்தைப் பிரதிபலித்துள்ளனவா? என்னும் கேள்வி நம் மனத்தே எழுகிறது. 'சிந்து' என்னும் இலக்கிய வகையாக மலர்ந்த இந்நூல்கள், கற்றோர் செய்த 'ஆற்றுப்படை' நூல்கள் போல கல்லாதார் படைத்த பயண நூல்கள் ஆகும். இவற்றில் சமூக அக்கறை நிரம்பி வழிகிறது என்பது வெள்ளிடை மலை.

தமிழ்நாட்டிலிருந்து புறப்பட்டது தொடங்கி இங்கே வாழ்வது வரை உண்மைகளை ஒளிவுமறைவின்றி, அக்கால வாழ்க்கை முறையை, சிங்கப்பூரின் அமைப்பை, சமூக வறுமையை, அவ்வறுமையால் ஏற்பட்ட பரத்தமைத் தொழிலை, சில தனிமனிதர்கள் பற்றிய செய்திகளை, கிராமிய வாழ்வின் படப்பிடிப்பை, சீனர்கள் பற்றிய செய்திகளை, குடியேறிகளின் வசிப்பிடங்களை, கூலிகளாகப் பயணம் மேற்கொண் டோரின் இழிநிலையை, ஏஜெண்டுகள் என்றழைக்கப்பட்ட தரகர்களின் ஊழல்களை விரிவாக ஆராய்கின்றன. இப்பயண நூல்கள் அன்றைய சிங்கப்பூரை மட்டுமன்றித் தமிழ்ச் சமூகப் படப்பிடிப்பைத் துல்லிய மாகத் தந்து சிங்கப்பூரின் தேசிய இலக்கியம் உருவாகக் கால்கோள் செய்தன.

'காரிகை' கற்றுக் கவியாகாமல் உணர்ச்சி மேலீட்டால் கவிஞர்களாகிய 'சிந்து' ஆசிரியர்கள் காட்டிய சமூகப் பிரதிபலிப்பினைக் 'காரிகை' கற்றுக் கவிபாடும் இன்றைய மரபுக் கவிஞர்கள் காட்டத் தவறிவிட்டனர். சிங்கப்பூரின் செல்வச் செழிப்பு, இயற்கை அழகு, அரசியல் தலைவர்கள் பற்றிய புகழ்மாலைகள், சிங்கப்பூர் மக்களின் உழைப்புத் திறன், நான்கின மக்களின் ஒற்றுமை, தமிழர் திருநாள், தமிழின் பெருமை என இன்னோரன்ன செய்திகளை ஊடும் பாவுமாகக் கொண்டு சிங்கப்பூரில் மரபுக் கவிதைகளைப் படைத்துள்ளனர் கவிஞர்கள். எல்லா மரபுக் கவிதைகளிலும் இதே பாடுபொருள்கள்தாம்; ஆகவே ஒரு 'வாய்பாட்டை' (formula) வடிவமைத்துக் கொண்டு அதை நிறைவேற்ற மரபுக் கவிஞர்கள் பாடியுள்ளனர் எனத் துணியலாம்.

புற்றீசல் போலக் கவிஞர்கள் பெருகுவதோ, கவிதைகள் பெருகுவதோ வளர்ச்சியின் அடையாளமாகத் தெரிகின்றது திரு. வி.டி. அரசு அவர்களுக்கு! அவர்,

> 'உண்மையில் 1950 முதல் 1970 வரையிலான இருப தாண்டுக் காலம் சிங்கப்பூர்த் தமிழ்க் கவிஞர்களின் பொற்காலம் என்றே கூற வேண்டும். இந்தக் கால கட்டத்தில் தமிழ்ப் பாவலர்கள் பலர் தோன்றினர்; வளர்ந்தனர். பாடல்களைப் பாராட்டிப் படிக்கும் வாசகர்களும் உருவாகினர். எல்லாவற்றுக்கும் மேலாக, முற்றிலும் சிங்கப்பூர்ப் பின்னணியில் தனித் தன்மையோடு கூடிய தமிழ்க் கவிதை இலக்கியம் அரும்பிய காலம் இது' (வி.டி. அரசு, சிங்கப்பூர் கவிதைத் தொகுப்பு, முன்னுரை)

என்று போற்றுகிறார். புறநிலை வளர்ச்சியைக் கருத்தில் கொண்டால் எண்ணிக்கை வளர்ச்சி பெரிதாகத் தெரியலாம். ஆனால் கவிதைகள் பல 'சாரமற்ற சக்கைகளாய்' வெளிவந்ததை அவர் மறந்தார் போலும்! இவர் கூறும் 'சிங்கப்பூர்ப் பின்னணி' என்ற தொடரும், சிங்கப்பூர்க் கவிஞர்கள் பலர் ஆண்டுகள் பலவாய் மந்திரம் போல ஜபம் செய்யும் 'மண்ணின் மணம் கமழ' என்ற தொடரும் பொருத்தமற்றவை! பொய் யானவை! என்பதைப் பல கவிதைத் தொகுப்புகள் உணர்த்துகின்றன.

தமிழக இடப்பின்னணியைக் காட்டும் 'குற்றாலம்' என்னும் கவிதை 'கடையநல்லூர் ஜமீலாவின் கவிதைகள்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது. இஃது எப்படி திரு. அரசுவின் கண்களில் சிங்கப்பூர்ப் பின்னணியாக மண்ணின் மணம் கமழுமாறு அமைந்ததோ தெரியவில்லை! பரணன், நாடும் நாமும், இயற்கையும் எழிலும், காதலும் கண்ணீரும், வாழ்த்தும் வரவேற்பும் முதலிய அதிகாரங்களைக் கொண்ட தலைப்புகளையும், அவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட கவிதைகளையும் பாடியுள்ளார். இவற்றில் சமூகப் பிதிபலிப்பு என்பது மருந்துக்குக் கூட இல்லை! இதில் எப்படி மண்மணத்தை நுகர்ந்தார் திரு. அரசு என்ற மாயமும் புரியவில்லை!

க.து.மு. இக்பாலின் கவிதைகளில் பல்வேறு பாடுபொருள்கள் இருப்பினும் சமூகப் பிரதிபலிப்பு இல்லை. மு. தங்கராசன் சொல் விளக்கங்களை யாப்பெனும் நூலில் கோர்த்துச் செய்யுள்கள் பல வற்றைச் செய்துள்ளார். சிங்கப்பூர்க் கவிஞர்கள், குறிப்பாக மரபுக் கவிஞர்கள் அனைவரும் சிங்கப்பூரை வியந்து போற்றியுள்ளனர். நவீன சிங்கப்பூரின் சிற்பியாகிய திரு. லீ குவான் யூ, தமிழவேள் கோ. சாரங்க பாணி போன்ற தலைவர்களையும் போற்றித் துதிக்க மறக்கவில்லை. பொதுவாகச் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு நாட்டில் வாழும்போது அந்நாட்டுக்கு விசுவாசமுடையவர்களாகவே இருப் பார்கள். தங்களின் நிலைபேற்றுக்கு அத்தகைய விசுவாசம் அவசியம் என்பதாக அவர்களின் நிலையும், நினைப்பும் அமைவதால் அந்நாட்டைப் பல கோணங்களிலும் பாராட்டுவார்களே தவிர சமூகப் பிரதிபலிப்பைக் காட்ட விரும்ப மாட்டார்கள் என்பது சிங்கப்பூரில் தமிழ்க் கவிதைகளை (மரபுக் கவிதைகளை) பொறுத்தவரை உண்மை!

மு. தங்கராசன் 'உதயம்' என்னும் தொகுப்பில்,

'எழுதுகின்ற எழுத்தெல்லாம் எழுத்தே ஆமோ?
எழுத்ததனின் இயல்பதனை எழுதிச் செல்வேன்'

என்று ஊருக்கு உபதேசம் செய்யத் தொடங்குகிறார். ஆனால் அவருடைய எழுத்துக்களில் என்ன இருக்கின்றது? என்னும் கருத்து அவருக்கு 'உதயம்' ஆகவில்லை!

எழுத்தாளன் தன் படைப்புகளில் தன்னை அடையாளம் காட்டிக் கொள்வான். எழுத்தாளர்களை மையப்படுத்தி அவர்தம் படைப்புகளை ஆராயும் இலக்கியச் சமூகவியல் அணுகுமுறையைக் கவிஞர் வி. இக்குவனத்தின் கவிதைகளில் பொருத்திப் பார்க்க முயல்வது பெருந்தவறாகும்! ஏனெனில் அவர் 'என் குறிப்பு', 'என்னருமைப் பேரனுக்கு' ஆகிய கவிதைகளில் சுய விளம்பரம் செய்துகொள்கிறார். தன் வரலாற்றையும், பக்தியையும் பாடுபொருளாகக் கொண்டு பாடப்பட்ட கவிஞர் இக்குவனத்தின் கவிதைகளைச் சிங்கப்பூர்ப் பின்னணி எனத் திரு. அரசு எவ்வாறு வகைப்படுத்தினார்?

சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதைகளுள் குறிப்பாக மரபுக் கவிதைகளில் 'செக்குமாட்டுப் போக்கு' அதிகம் காணப்படுகிறதே தவிர சமூகப் பிரதிபலிப்பு சிறிதும் அமையவில்லை. இம்மரபுக் கவிஞர்களுள்ளும் முருகுதாசன் சந்தக்கவிஞராகக் கருதப்பட்டபோதிலும் சமூக அக்கறை கொண்டவராகத் தலையெடுத்துள்ளார். 'முருகுதாசன் கவிதைகள்', 'சூரியதாகம்' என்னும் நூல்கள் இவரிடம் அரும்பத் தொடங்கியுள்ள சமூக அக்கறைக்குச் சான்றாகின்றனவே தவிர இவரும் சமூகப் பின்னணியையோ, சமூகப் பிரதிபலிப்பையோ காட்டவில்லை. தமிழர் களிடையே காணப்படும் குறைகளை ஆவேசத்துடன் சுட்டிக்காட்டுவ தோடு நின்றுவிடுகிறார். இவருடைய கவிதைகளில் 'பிரசாரப் பாணி' காணப்படுவதால் சமூக அக்கறை கூட அடிபட்டுப் போய்விட்டது.

சிங்கை முகிலன் ஈ.வெ.ரா. பெரியாரின் கொள்கைகளில் ஆழ்ந்த பிடிப்புடையவராகத் திகழ்ந்தபோதிலும் அவருடைய கவிதைகளில் சில சமூக அக்கறை, சமூகப் படப்பிடிப்பு ஆகியவற்றைக் கொண்ட கவிதைகளாய் மிளிர்கின்றன. இதற்குச் சான்றாய் அமைவது 'துடிக்கும் உள்ளம்' (1954) என்னும் நூலாகும். முகிலனின் சமூக அக்கறை, சமூக உணர்வு போன்றவற்றை விட அவருடைய மனிதநேய உணர்வும், உலகளாவிய பார்வையும் அவரைச் சிறப்பாக ('மனிதச் சுவடு', 1975) அடையாளம் காட்டுகின்றன.

வாழ்த்துக் கவிதைகள் (பரணன், 'தோணி' ப. 149) இரங்கற் பாக்களான கையறுநிலைகள் (பரணன் கவிதைகள்), வானொலியின் கோரப் பசிக்குத் தீனியாகச் செய்யப்பட்ட செய்யுள்கள் ஆகியவை கவிதைத் தொகுப்புகளாய் வெளிவந்துள்ளன. இவற்றை நோக்கச்

சிங்கப்பூர்க் கவிஞர்கள் வாணிப நோக்கோடு நூல் வெளியிட்டுள் ளனர் என்றே கருத வேண்டியுள்ளது. இவற்றில் சமூக உணர்வோ, சமூக அக்கறையோ, சமூகப் பிரதிபலிப்போ சிறிதும் இல்லை.

'மரபுச் சிலம்பொலிக்க மந்திரத் தமிழ்பாடி
ஆடிவரும் என் கவிதைகள் என்று நம்புகிறேன்'

('முருகதாசன் கவிதைகள்', 1990)

'உணர்ச்சித் தெறிப்பு, புரட்சிப் பூகம்பம், சமுதாயச் சாடல், முதலாளி தொழிலாளி முரண்பாடு, மதச் சாடல், கடவுள் மறுப்பு, அரசியல் சித்தாந்தம் இவை போன்ற துறைகளைத் தொட்டுப் புரட்சி செய்வ தாகப் புரட்டு செய்யும் சில நாடுகளைப் போல் நம் நாட்டில் தீவிரமாக எழுத முடியாது. எழுதத் தேவையும் இல்லாதபடி நல்லாட்சியும் நன்மக்களும் வசதியும் மிக்க நாடாகத் திகழ்கிறது நம் சிங்கை' (முருகதாசன் கவிதைகள், முன்னுரை)

என முருகதாசன் கூறியுள்ளதை நோக்க சிங்கப்பூர்த் தமிழ்க் கவிஞர்கள் (மரபுக் கவிதைகள்) பாடியோர் எல்லோரிடமும் இவ்வெண்ணமே குடிகொண்டுள்ளது என்பதும், அவர்களின் வறண்ட கவிதைகளுக்குப் பின்னணி என்ன என்பதும் அறியக் கிடக்கின்றன.

நாட்டில் நல்லாட்சி நிலவி வருவது உலகறிந்த உண்மை. ஆயின் தமிழ்ச் சமுதாயத்தைக் கவிஞர்கள் கூர்ந்து பார்க்க மறுக்கிறார்கள். புதிய சிந்தனைகள் பிறக்க வழியின்மை, தன்முனைப்பு மேம்பட்டு நிற்கும் நிலை, சமூகப் பிரச்னைகளைக் கூறிவிட்டால் எங்கே தங்களின் பின்னணி வெளிப்பட்டுவிடுமோ என்ற ஐயமும், பயமும் எழுத்தாளர் களிடம் குடிகொண்டிருப்பது போன்ற காரணங்களால் சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதைகளைப் பயிலும் ஒருவர் (முற்கூறப்பட்டவை நீங்கலாக) சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகம் பற்றியோ, அவர்களின் பிரச்னை பற்றியோ அறிய வாய்ப்பில்லை. குறிப்பாகச் சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதைகள் (மரபுக் கவிதைகள்) இலக்கியச் சமூகவியல் ஆய்வுக்கு எவ்வளவு தூரம் பயன்படும் என்பது வினாக்குறியே! சமூக ஆவணங்களாக விளங்காத இக்கவிதைகள் இலக்கியச் சமூகவியல் ஆய்வுக்கு எவ்வகையிலும் துணைபுரியா என்பது இக்கட்டுரையாளரின் துணிபு. இலக்கியங்களை முருகியலுணர்வோடு கற்போருக்குக் கூட இவை முழுமையும் பயன் தாரா.

மரபுக் கவிதைகளின் நிலை ஒருபுறமிருக்கப் புதுக் கவிதைகள் இலக்கியச் சமூகவியலை அறியவோ, அந்நெறிப்படி அவற்றை ஆராயவோ பயனளிக்குமா? என்னும் தேடலோடு புதுக் கவிதைகளை அணுகினால் திரு. இளங்கோவனின் கவிதைகள் உதவிக்கரம் நீட்டுகின்றன. இவர் சிங்கையில் புதுக்கவிதையின் முன்னோடி. இவர் ஒருவரே ஆழ்ந்த சமூகப் பிரக்ஞையுடன் கவிதைகளைப் படைத்துள்ளார். 'மௌனவதம்', 'விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து', 'இருமொழிப் படைப்புகள்' ஆகிய மூன்று நூல்களிலும் சிங்கப்பூரில் சிறுபான்மைச் சமூகமாக வாழும் தமிழ்ச் சமூகத்தின் பிரதிபலிப்பைக் காட்டுகிறார். 'மௌனவதம்' என்னும் நூலில் 'கிஷ்கிந்தை', 'பிரார்த்தனை', 'மயிரிழை' 'ஒலிகுண்டு', 'ஹச்', 'நீயும் புச்சுக் கவ்வுஞனா', 'டேய் தமிழன்', 'வெள்ளையன் குறிப்பேடு', 'சீனச் சிங்க நடனம்', 'முகங்களைத் துறந்த உயர்திணைகள்', 'ஏண்ணா மவனைப் பார்த்தியாண்ணா' போன்ற கவிதைகளைச் சமூகப் பிரதிபலிப்பு அமைந்த கவிதைகளாகச் சாற்றலாம்.

'இலக்கியம் வாழ்வை அவ்வாறே பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி' (ரெனிவெலாக், 1966) என்னும் அடிப்படையில் தமிழ்ச் சமூகத்தினை யதார்த்த நிலையில் அவர்கள் பேசும் சொற்களைக் கொண்டே படைத்துக் காட்டுகிறார் இளங்கோவன். இடக்கரடக்கல் சொற்கள், அவையல் கிளவிகள் போன்றவற்றைத் தாராளமாக இவர் கையாளுவதால் இவரை 'வக்கிர' உணர்வு' கொண்டவர் என்றே பலரும் கருதுகிறார்கள். ஆனால் உண்மையில் சமூகப் பிரதிபலிப்பின் யதார்த் தத்தை இம்மியும் பிசகாமல் காட்டுவதற்காகவும், இச்சித்திரிப்புகள் சத்தியமானவை என்பதைக் காட்டுவதற்காகவும் இச்சொற்கள் இடம்பெறுகின்றன என்று இக்கட்டுரையாளர் கருதுகிறார். கவிதைகள் உள்ளத்தில் உணர்வு மீதூரப்பெற்ற நிலையில் பிறக்கும்போது சொற்கள் தாமாக வந்து விழும். அதுவே நல்ல கவிஞர்களின் படைப்புகளில் நாம் காணக்கூடிய நிலை. மாறாகச் சொற்களைச் சேர்த்து அல்லது மாற்றிச் செய்யப்படும்போது கவிதை என்ற நிலையிலிருந்து இறங்கிச் 'செய்யுள்' என்ற நிலையை அடைகின்றன. திரு. இளங்கோவன் 'செய்யுள் செய்யவில்லை' என்பதாலும், கவிதை களையே படைத்துள்ளார் என்பதாலும், யதார்த்தத்தின் முழு வீச்சைக் காட்டவேண்டும் என எண்ணியதாலும் அவருடைய கவிதைகளில் இடக்கரடக்கல் சொற்களும், அவையல் கிளவிகளும் இடம்பெறுவ தாகக் கொள்வது தவறாகாது. அவர் எடுத்துக்கொண்ட பாடுபொருள் களும் மற்றொரு காரணமாக அமைகின்றன. பொதுவாகப் பாடு பொருள்களுக்கும்

கவிதையில் இடம்பெறும் சொற்களுக்கும், அணுக்கமான தொடர்புண்டு. இவ்வடிப்படையில் சிந்தித்தாலும் இடக்கரடக்கல் சொற்களும், அவையல் கிளவிகளும் இளங்கோவனின் கவிதைகளில் இடம் பெறுகின்றன என அமைதி கூறலாம்.

வளர்ந்து வரும் இளங்கவிஞர்களில் 'கனகலதா' குறிப்பிடத்தக்க இடம்பெறுகிறார். இவருடைய கவிதைகள் சிங்கப்பூர்ச் சமுதாயத்தைச் சிறப்பாகச் சித்திரிக்கின்றன. இவருடைய கவிதைகள் சமீபத்தில் நூலுருப் பெற்றுள்ளன. 'வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடும் மீ கோரிங்கும்' (Fried noodles) என்னும் கவிதை சிங்கப்பூர்த் தமிழ்க் குடிமக்களின் நினைப்பு களையும், அவர்களின் வாழ்க்கை யதார்த்தங்களையும் மிகச் சிறப்பாக எள்ளல் தொனியுடன் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. 'காசு கொடுத்தால் தேடி வரும் இலக்கியமும் கலைகளும்' என்னும் வரிகள் அம்பு போல் தைக்கும் ஆற்றல் மிக்கவை. பணவேட்கைச் சமூகமாக மாறிவரும் சமூக மாற்றத்தைப் படம்பிடித்துக் காட்டும் கவிதை இது.

சிங்கப்பூர்த் தமிழர்கள் தீபாவளி கொண்டாடும் விதத்தைக் கேலி செய்யும் கவிதை 'கணக்கு' என்பது. ஐப்பசி மாதத்தில் 'சௌத் ப்ரிட்ஜ் ரோடு' மாரியம்மன் கோவில் தீமிதி விழா, திரௌபதியம்மன் திருவிழா, தீபாவளிக்கு முன்னர்ச் செத்தவர்களுக்குப் படையிலிடுவது, தொலைக் காட்சி நிகழ்ச்சிகளின் தரமும் அவற்றின் பாதிப்பும், மாணவர்களுக்கு ஆண்டிறுதித் தேர்வு எனப் பல உண்மைச் சம்பவங்களுக்கு உயிர்ப்புக் கொடுத்துத் திட்டப்பட்ட இக்கவிதை எத்தனையோ ஆயிரம் 'மைல்கள்' கடந்து வாழும் ஒருவருக்குச் சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தைக் காட்டும் 'தரிசனம்' ஆகும். சிங்கப்பூரின் சமய, சமூக, கல்விப் பின்னணி சிறப்பாக இக்கவிதையில் பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது.

பரபரப்பு மிக்க சிங்கப்பூர்ச் சாலைகளைப் படம்பிடித்துக் காட்டும் கவிதையாக 'ஒரு சாலைக் கனவு' திகழ்கிறது. சாலையில் நிகழும் நிகழ்ச்சிகள் சிங்கப்பூர்ப் பின்னணியை விளக்குவதோடு அமையாமல் லதாவின் நுண்ணோக்கிற்கு அடையாளமாகவும் அமைகின்றன. 'நிச்சயமற்ற நினைவுகளோடு' எனக் கவிதையை முடித்திருப்பது சிறப்பாக அமைவதோடு சிங்கப்பூர் வாழ்வியற் பின்னணியையும் விளக்குகிறது.

'இலை ஒன்று கீழே விழுந்தது' என்னும் கவிதை ஜப்பானிய 'ஹைக்கூ' போன்றது. இயந்திரமாகி வரும் சிங்கப்பூர்ச் சூழலில் 'இலை ஒன்று கீழே விழும்' சாதாரண நிகழ்ச்சியை ஒவ்வொருவரும் ஒவ்வொரு

கோணத்தில் பார்க்கிறார்கள் என்பதையும், சிலர் எந்த நிகழ்வையும் கண்டும் காணாமல் செல்கிறார்கள் என்பதையும் கூறும் உருவகக் கவிதை ஆகும். இது இயந்திரத்தன்மை கொண்டு இதயமே இல்லாது வாழும் சிங்கப்பூர் மக்களின் வாழ்க்கை யதார்த்தங்களைக் கூறும் கவிதையாகும்.

'மேய்ப்பன்' என்னும் கவிதை சமூக அங்கதம் மிளிர அஞ்சியஞ்சிச் சாகும் அடிமைப்புத்தி உடைய தமிழ் மக்களையும், கேள்வி கேட்கத் துணிவில்லாத கோழைகளையும், அப்படியே துணிந்து ஒருவன் கேள்வி கேட்டாலும் அவனை அடித்து நொறுக்கும் அறிவில்லாத தமிழ்ச் சமூகத்தையும் 'வாத்துக் கூட்டம்' எனக் குறியீடாகக் காட்டி எள்ளி நகையாடுகிறது. வாழையடி வாழையாகத் தலைவனைத் தெய்வமாக மதித்து வழிபடும் ஆட்டுமந்தைக் கூட்டமாகவும் தமிழ்ச் சமூகத்தைச் சித்திரிக்கிறார் லதா. சிங்கப்பூர்ச் சமூகப் பிரதிபலிப்பைத் தெளிவாகவும், எள்ளற் சுவையோடும், முருகியல் தன்மையோடும் படைத்துள்ளார் லதா. 'ஒரு வீட்டின் சோகம்', 'தடை செய்கிறோம்', 'என்ன லா மைக்', 'கா... கா... கா...', 'சாசனம்', 'சப்பாத்துகள்', 'மீ கோரிங்கும் வீ.வ.க. வீடும்', 'குடி உரிமை' போன்ற கவிதைகளில் சிங்கப்பூரின் பலவிதமான பின்னணி களும் காட்டப்படுகின்றன. சமூகப் பிரதிபலிப்பு மிக்க இவருடைய கவிதைகளை நோக்க, இவர் இருபத்தோராம் நூற்றாண்டில் சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதை இலக்கியத்திற்குப் புதிய பரிமாணத்தைத் தருவார் என நம்பலாம்.

இக்கட்டுரையின் இரண்டாவது பகுதி புனைகதைகளில் சமூகப் பிரதிபலிப்புப் பற்றியது. புனைகதைகளுள் ஒன்றாகிய சிறுகதைகளில் தமிழ்ச் சமூகப் பிரபலிப்பு அமையும் பாங்கை ஆராய்வது இப்பகுதியின் நோக்கமாகும். சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகள் பல வெளி வந்திருப்பினும் அவற்றுள் சமூகத்தைப் பிரதிபலிக்கும் படைப்புகளை மட்டுமே வரையறுத்துக்கொண்டு இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது.

சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகளில் பெரும்பாலானவை தனிமனித வாழ்வு பற்றிப் பேசுபவை. குறிப்பாக அன்றாட வாழ்வு, குடும்பம், காதல் போன்றவற்றைச் சித்திரிக்கின்றன. சுருங்கச் சொன்னால் தமிழர்களின் சொந்த வாழ்வுதான் (private life) பேசப்படுகிறது. சமூக உறுப்பினனாகிய தனிமனிதனின் செயல்பாடுகள் குடும்பம் என்ற குறுகிய எல்லைக்குள் மட்டுமே காட்டப்படுகின்றன. ஆகவே குடும்பக் கதைகள், காதல் கதைகள் என்ற வகைப்பாட்டினுள் நிறையச் சிறுகதைகளை அடக்கி விடலாம். சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் ஒரு சிலவற்றைத் தவிர மிகப்

பெரும்பாலான சிறுகதைகளில் சமூக, பொருளியல், அரசியல் கருத்துகள் பேசப்படவில்லை. இதனால் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் பெரும்பாலோருக்குச் சமூக, பொருளியல், அரசியல் சித்தாந்தங்களைப் பற்றிய ஞானமோ, அதனை எழுதுவதற்குத் தேவையான துணிவோ இல்லையா? என்று எண்ணத் தோன்றுகிறது. ஆழமான, கூரிய சமூகப் பார்வை அமைந்தாலொழியச் சிறுபான்மைச் சமூகத்தினர் அடையும் துன்பங்களைச் சிறுகதைகளாக வடிக்க முடியாது. எழுத்தாளர் சமூக உறுப்பினர் என்பதோடு சமூகச் சார்புடையவராயும் இருப்பதால் எழுத்தாளரின் கல்விச் சூழல், அவர் பிறந்த குடும்பச் சூழல், தொழில், திருமண வாழ்க்கை ஆகிய விவரங்களின் அடிப்படையில் அவர் சார்ந்துள்ள சமூகப் பிரிவை அறுதியிட்டுக் கூறலாம். இதன் வழியாக அவரது சார்புநிலை, சமூகம் பற்றிய அவருடைய கோட்பாடு, அவருடைய சமூக நோக்கு முதலியவற்றைத் தெள்ளிதின் அறிந்து கொள்ளலாம். ஆயின் துரதிர்ஷ்டவசமாகச் சிங்கப்பூர்த் தமிழ் எழுத் தாளர்களில் பெரும்பாலோர் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ள விரும்புவதில்லை. எடுத்துக்காட்டாக எழுத்தாளர் சே.வெ. சண்முகம் கப்பற்பட்டறையில் வேலை பார்த்தவர். இப்பின்னணி அவருடைய கதை ஒன்றில் கூட வெளிப்படவில்லை. இப்படிப் பல எழுத்தாளர்கள் தங்களின் சார்புநிலைகளை வெளிப்படுத்தத் தவறியதால் அவர்களின் படைப்புகளில் சமூகப் பிரதிபலிப்பு அமையவில்லை.

இவண் தமிழகத்தைப் போன்று 'மார்க்ஸிஸம்', 'கம்யூனிசம்' போன்ற சிந்தனைகளுக்குச் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை. ஆகவே அவை பற்றிய கதைகள் இங்கு எழவில்லை. விதிவிலக்காகச் சிங்கை இளங்கண்ணன் 'எண்ணங்கள் நிலையானவை அல்ல' என்னும் கதையின் மூலம் முதலாளித்துவ நோக்கையும், போக்கையும் யாரும் மாற்ற முடியாது என்னும் உண்மையையும், முதலாளியின் எண்ணங்கள் நிலையானவை அல்ல என்னும் உண்மையை உளவியல் பாங்கோடும், ஆழமான சமுதாயப் பார்வை யோடும் கூறியுள்ளார்.

சிங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் மத்தியில் எழுத்துக்கள் பிறப்பதற்கு வர்க்க வேறுபாடுகளும், வருணாசிரம தர்மங்களும் காரணமாக இருந்திருக்கின்றன. சிங்கப்பூர்ப் புனைகதைகளுள்ளும் அடிமட்டத் தமிழர்களைப் பற்றியும் அவர்களுடைய பிரச்னைகளைப் பற்றியும் அதிகமாக எழுதியவர் சிங்கை மா. இளங்கண்ணன் ஆவார். இவரது படைப்புகளைப் புறக்கணித்துவிட்டுச் சிங்கப்பூர்த் தமிழிலக்கி யத்தை ஆராய்வது முழுமையான ஆய்வாகவும் அமையாது. ஒரு சில

கதைகளில் 'சிறுகதைக் கலை' எனப்படும் கலைவடிவம் (craft) அமையா விட்டாலும் கூடச் சமூகப் பிரதிபலிப்பைக் காட்டும் உள்ளீடும், அடிமட்டத் தமிழர் வாழ்வு பற்றிய சித்திரிப்பும் இவரது சிறப்பு அம்சங்கள் என்பதில் தவறில்லை.

இவர் குறைந்த கல்வித் தகுதி உடையவராக இருந்தபோதும் ஒரு நிழற்படக் கலைஞனைப் போல அடிமட்டத் தமிழர்களின் வாழ்வை, தனக்கு மிகவும் பரிச்சயமான சமூகப் பின்னணியைப் படம்பிடித்துக் காட்டுவதில் வல்லவர். இவருடைய கதைகளில் இவரின் சார்புநிலை புலப்படுகிறது. இதனால் சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் இவருக்கெனத் தனித்த இடமுண்டு. இவருடைய 'கோடுகள் ஓவியங் களாகின்றன', 'குங்குமக் கன்னத்தில்', 'வழி பிறந்தது' 'தூண்டில் மீன்' ஆகிய சிறுகதைத் தொகுப்புகளில் மிகப் பல கதைகள் அடிமட்டத் தமிழர் வாழ்வையே சித்திரிப்பன. அடிமட்டத்தினர் எதிர்நோக்கும் பொருளாதாரச் சிக்கல், அதன் விளைவாகச் செட்டியாரிடம் வட்டிக்குக் கடன் வாங்குவது, ஏவல் பில்லி சூனியம் செய்வது, திரைப்பட மோகம், சோதிட நம்பிக்கை, குடிப்பழக்கம், வரம்பற்ற வாழ்க்கை, நாலு நம்பர் சூதாட்டம் போன்றவற்றைச் சித்திரித்துள்ளார். இவர் அஞ்சாமல் அடிமட்டத் தமிழர்களைப் பற்றி எழுதியது இவருடைய துணிச்சலைக் காட்டுகின்றது. அடிமட்டத்தினரின் வாழ்க்கைச் சிக்கல்களோடு சமூக, பொருளியல் மாற்றங்களையும் இவர் விவரிக்கத் தவறவில்லை.

பெரிய கருப்பன் கிட்டங்கியில் எடுபிடியாக வேலை பார்த்தவன். பிறகு பணத்தைச் சேமித்து ஒரு வட்டிக்கடையைத் திறக்கிறான். இதனைச் 'சாமர்த்தியம்' என்னும் கதையில் காட்டிக் கிட்டங்கியின் பின்னணியையும் சிறப்பாக விவரிக்கிறார். இதன் மூலம் சிங்கப்பூரில் வட்டித்தொழில் செய்த செட்டியார்களைப் பற்றியும், செட்டியார் எனப்படும் 'நகரத்தார்' சமூகப் பிரதிபலிப்பையும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். 'சுற்றிப் பார்க்க வந்தவர்' என்னும் கதையும் சிங்கப்பூர்ப் பின்னணியில் சிறப்புறப் படைக்கப்பட்டுள்ளது.

அடிமட்டத்தினர் மத்தியில் காணப்படும் வரம்பற்ற வாழ்க்கையைக் காட்டும்போது செயற்கைத் தன்மையுடன், நம்ப முடியாத அளவுக்குக் கற்பனை செய்கிறார் இளங்கண்ணன் என்றே தோன்றுகிறது. தந்தையின் வைப்பாட்டியுடன் மகன் உறவு கொள்வ தனைத் தந்தையே நேரில் பார்ப்பதை உதாரணமாகக் கூறலாம். ஒரு பெண் தன்னை ஆணாக அறுவைச் சிகிச்சை மூலம் மாற்றிக்கொள்வது போன்றவை கதை எழுதப்பட்ட காலத்தில் அதீதக் கற்பனையே! மேலும்

இவருடைய தனித்தமிழ் நடை இவருடைய சமூகப் பிரதிபலிப்பிற்குப் பொருந்தாமலும், கதையை அனுபவித்துப் படிக்க விடாமலும், கதைப் போக்கிற்குத் தொய்வு தருவதாகவும் அமைகிறது.

திரு. பி.கிருஷ்ணன் 'புதுமைதாசன்' என்னும் புனைபெயரில் சிறுகதைகளை எழுதியுள்ளார். புதுமைப்பித்தனிடம் ஈடுபாடு கொண்டவர் என்பதைப் புனைபெயர் மூலம் அறியலாம். புதுமைப்பித்தனிடம் இவர் கொண்ட ஈடுபாடு இவருடைய சமூகப் பார்வைக்கு அழுத்தம் தரும் வகையில் அங்கத நடையாகி ஒளிர்கிறது. எள்ளல் தரும் நகைச்சுவை இவர் கதைகளின் சிறப்பு அம்சம். பல ஆண்களுடன் உறவு கொண்டு உடலளவில் திருப்தி அடையாமல் காமம் மீதூரப் பெற்று அலையும் பெண்களைச் சாடுவது போலப் 'பரோபகாரி' என்னும் கதை அமைகிறது. கற்பு என்பது இலக்கியத்தில் மட்டும்தானா? என ஆசிரியர் கேட்பது சமூகத்தை நோக்கிய கேள்விக்கணை ஆகும்.

பங்குச் சந்தையில் தன் சேமநிதிப் பணத்தை முதலீடு செய்து ஓய்வு எடுக்க வேண்டிய வயதில் நிரந்தர ஓய்வை (சாவை) பெற்றவரைக் காட்டும் கதை 'ஓய்வு'. 1987இல் சிங்கப்பூர்ப் பங்குச் சந்தையில் ஏற்பட்ட சரிவை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இக்கதை பங்குச் சந்தை விவகாரத்தில் அனுபவமோ அறிவோ இல்லாத தமிழர்கள் பலர் பங்குச் சந்தையில் முதலீடு செய்து நொடித்துப் போய் உயிரை விட்டதற்குச் சான்றாக அமைகிறது. பொருளியல் விஷயத்தைக் கதையின் சாராம் சமாகக் கொண்டிருப்பது கிருஷ்ணனின் சமூகப் பிரதிபலிப்பை யதார்த்தமாக்குகிறது. இது இவருடைய சமூகப் பிரதிபலிப்பின் புதிய பரிமாணங்களுள் ஒன்று.

சிங்கப்பூர்த் தமிழ் இளையர்கள் வன்முறைக் கும்பல்களில் சேர்ந்து படிப்பைப் பாதியில் கைவிட்டுப் பாழாகித் திரிவதைச் சித்திரிக்கும் கதை 'உதிரிகள்'. இஃது அற்புதமான படைப்பு. கொச்சை மலாய் பேசித் திரியும் இளைஞர்கள், திரைப்பட நடிகர்கள், பின்னணிப் பாடகர்களின் பெயர்களை முன்னொட்டாகக் கொண்ட உள்ளூர்க் கலைஞர்கள், பொதுவிடங்களில் பெண்களைக் கண்டபடி பேசும் வன்முறைக் கும்பலின் உறுப்பினர்கள், அருவருக்கத்தக்க ஆடையணிகள் சகிதமாய்க் காட்சியளிக்கும் வன்முறையாளர்கள், இவர்களின் வன்முறைக்குப் பலியான குடும்பங்கள் என உதிரிகள் ஒவ்வொருவரையும் படம்பிடித்துக் காட்டுகிறார் பி. கிருஷ்ணன். இன்றளவும் கூட அவர் அடையாளம் காட்டிய உதிரிகள் தமிழ்ச் சமூகத்தில் பெருகிக்கொண்டிருக்கிறார்கள்.

சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்திடையே ஆழமாய் வேரூன்றி உள்ள சோதிட நம்பிக்கை, லாட்டரிச் சீட்டு (நாலு நம்பர்) மோகம் போன்றவற்றைக் கேலி செய்யும் சமூகப் பார்வையில் உதயமானது 'காலக்கணக்கு' என்னும் கதை. மலாய்ப் பெண்ணைக் கலப்புத் திருமணம் செய்துகொண்ட கண்ணுச்சாமியின் மூலம் சிங்கப்பூரில் உழைத்துச் சம்பாதிக்கும் கண்ணுச்சாமி போன்றவர்களைக் கறவைப் பசுக்களாகக் கருதும் தமிழகத் தமிழர்களையும், கலப்புத் திருமணத்திற்கு அக் காலக்கட்டத்தில் எத்தகைய வரவேற்பு இருந்தது என்பதையும் சிங்கப்பூர்ச் சூழலில் காட்டியுள்ளார் பி. கிருஷ்ணன்.

சீனப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்ட தமிழ் இளைஞனின் சந்தேகப் புத்தி, குடிப்பழக்கம், சீனர்களின் (கூச்ச மில்லாமல்) பழகும் தன்மை போன்றவற்றை விவரிக்கும் கதை 'தெளிவு' என்பது. சிங்கப்பூர் எழுத்தாளர்கள் பெரும்பாலும் சீனர்களை உத்தமர்களாகவே காட்டும் வழக்கமுடையவர்கள் என்னும் கருத்து இக்கட்டுரையாளருக்கு உண்டு. ஆயின் பி. கிருஷ்ணன் காட்டும் சீனப் பெண் சராசரி மனிதப் பிறவியாகக் கோபதாபங்களுக்கு உட்பட்டுப் பொறுமை எல்லை மீறிய நிலையில் கணவனைத் தாக்குகிறாள். இக்கதையில் சீனப்பெண்ணின் மூலமும், பிற ஆடவர்களோடு பேசினால் பெண்ணின் கற்பொழுக்கத்தைச் சந்தேகிக்கும் தமிழ்ச் சமூகப் பிரதிநிதியான முருகனின் மூலமும் சீனர்கள் கூச்சமின்றிப் பழகும் இயல்புடையவர்கள் என்னும் தெளிவை ஏற்படுத்துகிறார். சீனர்களை 'வகைமாதிரிகளாக' (Prototype) வார்க்காமல் உள்ளது உள்ளபடியே காட்டியிருப்பது பி. கிருஷ்ணனின் சிறப்பாகும்.

உழைக்காது பிச்சையெடுத்து வாழ நினைக்கும் தமிழ்ச் சமூகப் பிரதிநிதிகளுக்கு உழைப்பின் முக்கியத்துவத்தை விளக்கும் கதையாக அமைவது 'துணை'. 'பரோபகாரி' பெண்ணைப் போன்றே நச்சரவில் இடம்பெறும் ரேவதி என்னும் பெண்ணும் அமைகிறாள். அருவருக் கத்தக்க நடவடிக்கைகளால் பெண் சமூகமே வெறுக்கத்தக்க நச்சரவா கிறாள் இவள். ஐம்பதுகளில் வாழ்ந்த தமிழ்க் குடும்பப் பின்னணி, அக்குடும்பங்களில் பெண்ணின் நிலை. அப்பெண்களின் மனப்போக்கு ஆகியவை பண்பாட்டு அக்கறைக்குச் சவாலாக அமைகின்றன. இதுவே பி. கிருஷ்ணன் சமூகத்துக்கு விடுக்கும் செய்தியாகும். மூத்த எழுத்தாள ராக மதிக்கப்படும் இவர் சோதிடம், பங்குச் சந்தை ஆகியவை பற்றி ஆழமாகத் தெரிந்துகொண்டு எழுதியிருந்தால் தொழிற் பின்னணி மிகச் சிறப்பாக அமைந்து இருக்கும். இங்கே திருமதி. டக்மார் ராசநாயகம்

குறிப்பிடும் கருத்தை எண்ணிப் பார்ப்பது பொருந்தும் (டக்மார் ராசநாயகம், பக். 57-58).

தென்கிழக்காசிய விருது பெற்றவர் நா. கோவிந்தசாமி. இவருடைய புனைகதைத் தொகுப்பு 'தேடி' என்பதாகும். இத்தொகுப்பில் 'திசைகள்', 'ஒட்டுண்ணிகள்', 'மதிப்பீடுகள்', 'தேடல்', 'ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது', 'அமைப்பு' ஆகிய சிறுகதைகள் உள்ளன.

சிங்கப்பூரில் வாழ்ந்து வரும் இந்தியத் தொழிலாளர்களின் படப்பிடிப்பாக அமைவது 'திசைகள்'. கூலியாக வந்தபோது இருந்த மனநிலையையே இன்றளவிலும் கொண்டிருக்கக்கூடிய சமூகமாக; சிங்கப்பூரின் நவீன வளர்ச்சிக்குக் கட்டுமானத் துறை, கப்பல் துறை, சாலைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கெல்லாம் முதுகெலும் பான, விசுவாசம் மிக்க, முதலாளிமார்களின் பாராட்டுகளிலேயே மனநிறைவு காணும் சமூகம்; பங்குதாரர்களாக மாற வாய்ப்பிருந்தும் - மாற வாய்ப்பளிக்கப்பட்டபோதும் அதனைப் பயன்படுத்திப் பிழைக்கத் தெரியாத சமூகமாக; 'அடிமைச் சிறுமதியும்', அச்சமும் கொண்ட சமூகமாகத் தமிழ்ச் சமூகத்தைத் 'திசைகள்' காட்டுகின்றன. எழுபத்தைந்து ஆண்டு கால வரலாற்றில் முதலாளிமார்களுக்குப் பிரச்சனையே தராத, கப்பல் பட்டறையே உலகம் எனக் கருதிய கிணற்றுத் தவளைகள் நிறைந்த சமூகமாக, கோயில் கட்டும் முயற்சியில் ஒன்றுபடும் சமூகமாக, ஒற்றுமையின்மையால் தனிமனிதர்களின் சுய கௌரவத்திற்குப் பலியாகி உரிமைகளை இழக்கும் சமூகமாக, சுய லாபம், சுய கௌரவம் பார்க்கும் தலைவர்களை நம்பி மோசம் போகும் சமூகமாகத் தொழிலாளர்கள் சமூகத்தைத் 'திசைகள்' காட்டு கின்றன. இப்படிப்பட்ட சமூகத்தைப் பிரதிபலிக்கும் திரு. நா. கோவிந்தசாமி இச் சமூகத்தின் பிரதிநிதியாகப் பேசுகிறாரா? அல்லது இச்சமூகத்திற்கு அன்னியப்பட்டுப் பேசுகின்றாரா? என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் உழைக்கும் தமிழ்ச் சமூகத்தைப் பொருத்தமுறப் பின்னணியாலேயே புரிந்துகொள்ள வைத்திருப்பது பாராட்டிற்குரியது.

ஒட்டுண்ணிகள் பிற உயிர்களைச் சார்ந்து வாழும் இயல் புடையவை. சமூகநல அமைச்சின் உதவிப் பணத்தைப் பெற்று வாழ்ந்து வரும் கோபாலின் குடும்பம் வசதிகள் இருந்தாலும், தொடர்ந்து தாமே நிதியுதவி பெற வேண்டும் என எண்ணுகிறது. பிறர் உழைப்பில் உண்டு வாழும், சுகம் காணும் தமிழர்கள் இன்றும் நிறைய உள்ளனர் என்பதை இக்கதை காட்டுகிறது. நா.கோ.வின் ஆசிரியப் பணி அனுபவத்தில் பிறந்தது இக்கதை. தமிழ்ச் சமூகப் பிரதிபலிப்பை வெளிக்காட்டுவதோடு

எழுத்தாளரின் தொழிற் பின்னணியையும் அறிந்துகொள்ள இக்கதை உதவுகிறது.

மலாக்காச் செட்டிகளின் 'நதிமூலம்' பற்றிய கதையாகும் 'மதிப்பீடுகள்'. ஆங்கிலக் காலனித்துவ ஆட்சியின்போது கைதிகளாகக் கொண்டுவரப்பட்டவர்களின் மதிப்பீடுகள், அவர்களைப் பற்றிய படப் பிடிப்புகள் ஆகியவை 'மதிப்பீடுகள்' என்னும் கதையில் சமூகப் பிரதி பலிப்பு இடம்பெற்றுள்ளதை அறியத் துணைபுரிகின்றன. அடிமைகளை விடக் கேவலமாக அவர்கள் நடத்தப்பட்டதும், மக்களால் அவர்கள் மிருகங்களை விடக் கேவலமாக மதிக்கப்பட்டதும் சித்திரிக்கப் பட்டுள்ளன. காலனித்துவ ஆட்சியின்போது மலாய்க்காரர்களும், சீனர்களும் தமிழர்களை 'கில்லிங்' என அழைத்த நிலையைச் சிவகாம சுந்தரர் வாய்மொழியால் கூறவைக்கிறார் நா.கோ. 1880களில் லத்தீப் எனும் கைதி மலாய்ப் பெண்ணை மணந்து பணக்காரனாகிவிட்டான் என்பதும், மதத்திற்கு முன் 'கில்லிங்' என்னும் பட்டம் அடிபட்டுப் போனது என்பதும் சிவகாமசுந்தரரால் சொல்லப்படுகின்றன. சமூக அந்தஸ்தைப் பெறுவதற்காக மதமோ, இனமோ வழிகாட்டவில்லையே என்னும் ஏக்கம் சிவகாமசுந்தரர் என்னும் பிரதிநிதியின் வாயிலாக வெளிப்படுத்தப்படுகிறது. மொத்தத்தில் இக்கதை கட்டுரை பாணியில் அமைந்திருந்தாலும் சிங்கப்பூரின் நிர்மாணத்திற்குத் தங்கள் உழைப்பையும் உயிரையும் கொடுத்த தமிழ்க் கைதிகள் சமூகத்தை மிகவும் சிறப்பாகச் சித்திரித்துள்ளது.

தலைமைத்துவ வழிபாடு மிதமிஞ்சியிருக்கும் சமூகமாகத் தமிழ்ச் சமூகம் 'தேடல்' என்னும் சிறுகதையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. தலைவரின் சிடர்கள் என்று சமூகம் நம்பியிருந்தவர்கள் பெரிய பதவிகளைப் பெற்றதும் எவ்வாறு சமூகத்தை மறந்துவிடுகிறார்கள் என்னும் நிலையும், அறிவாளிகள் தமிழர் அமைப்புகளில் பங்கேற்காமல் ஒதுங்கி போன நிலையும், உயர்கல்வி கற்றவர்களுக்கு தமிழ் உணர்வு இல்லை; தமிழ்ப்பற்று இல்லை எனப் பட்டயம் கொடுக்கும் நிலையும், தனிமனித வழிபாடு, தலைவன் வழிபாடு ஆகிய நெறிகள் செல்வாக்குப் பெற்ற நிலையும் 'தேடல்' என்னும் கதையின் வாயிலாகச் சொல்லப் பட்ட உண்மைகள். இக்கதையில் சமூகப் பிரதிபலிப்பு செம்மையாக அமைந்துள்ளது பாராட்டப்பட வேண்டிய விஷயமே! இப்படிப் போலிகள் மலிந்த சமூகத்தில், தலைவனைச் சம்பளம் கொடுத்துத் தேர்ந்தெடுக்கலாம்; மனிதனை முன்வைக்காமல் இலட்சியங்களை முன்வைக்கலாம்; கொள்கைகளை முன்வைத்துக் காரியம் செய்யலாம்

என்றெல்லாம் புதுமைச் சிந்தனைகளை உதிர்க்கும் மகேந்திரனின் பின்னணி என்ன? என்பதை நாம் 'தேட' வேண்டியுள்ளது. அறிவு ஜீவியாகப் பேசும் அவனை அடையாளம் காட்ட ஆசிரியர் தவறியதில் ஏதோ மர்மம் இருக்கிறது. சமூக எதிர்ப்புக்கு ஆளாக நேரிடுமோ என்ற பயம் கூட அவனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. மகேந்திரனை இனங்காட்டினால் தன்னையே அடையாளம் காட்ட நேரிடுமோ? என நா.கோ. அஞ்சியிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. 'என் அனுபவங் களும் உணர்வுகளுமே எழுத்தாகின்றன' ('தமிழ்முரசு', 23.10.1994) என அவர் கூறியிருப்பதை நோக்க, அப்படிப் பின்னணி தெளிவுறுத்தப் பட்டிருப்பின் அவன் உதிர்த்த சிந்தனைகள் பொருளார்ந்தவை என்பது புரிந்திருக்கும். மேலும் மரபுவழிப்பட்ட சிந்தனைகளை உடைத்தெறித்து விட்டுப் புதிய சிந்தனைகளை வரவேற்கும் இளைய சமூகத்தையும் கோடிட்டுக் காட்டியுள்ளார் நா.கோ. மொத்தத்தில் நா.கோ.வின் 'தேடலில்' சமூகப் பிரதிபலிப்பு 'கனகச்சிதமாக'ச் சிக்கியுள்ளது. அதே வேளையில் மகேந்திரன் 'தப்பித்துக்கொள்பவன்' (escapist) என்பது இக்கட்டுரையாளரின் தேடலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'ஓர் ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது' என்னும் கதையில் 'எழுத்தாளர்' என்னும் போர்வை எழுத்தாளனுக்கு எவ்வளவு பெயர், புகழ், வசதி போன்றவற்றைக் கொடுத்திருக்கிறது என்பதையும், இலக்கிய வளர்ச்சிக்கு ஏறத்தாழக் கால் நூற்றாண்டுக் காலமாக உழைத்ததையும், புதிய அணியினரைச் சாடிப் புகழ்பெற்றதையும், 'காந்த' எழுத்துகளால் காரிகையரைக் கவர்ந்ததையும், தன் உயர்வுக்காக மற்றவர்களை அனுசரித்து, வளைந்து கொடுத்து (compromise) நடந்துகொண்டதையும், பாராட்டுக்காக எழுத்தை வளைக்கும் சாதாரண எழுத்தாளர்கள் மலர்ந்து வருவதையும் ஆன்மாவின் திரையை அகற்றி நா.கோ. வெட்ட வெளிச்சமாக்குகிறார். உண்மையில் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் மிகப் பலரும் ஒரு கழகமாக இணைந்து நா.கோ. சொன்னதைத்தான் செய்து வருகிறார்கள் என்பதும், முகமன்களையே வரவேற்கும் முகம் இவர்களின் பன்முகங்களில் ஒன்று என்பதும் இக்கட்டுரையாளரின் கருத்து. 'எழுத்தாளர் சமூகப் பிரதிபலிப்பு' நா.கோ.வால் ஒரு சமூகப் பிரதிநிதி என்ற அளவில் துல்லியமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைச் சித்திரிக்கும் நடைமுறை வாழ்க்கையை இக்கதையில் காண்கிறோம். கணவனை இழந்த ஒரு பெண்ணைக் காதலித்து அவளுடன் கள்ளத் தனமாக உறவு கொண்டு, அவள் மீதும் அவள் குழந்தை மீதும் அக்கறை காட்டுவது போல் நடித்தும், அவளைத் திருமணம் செய்து தன்

'பிம்பத்தை' (image) அழித்துக்கொள்ள விரும்பாத போலி மனிதனையும் நா.கோ. நன்கு சித்திரிப்பதன் வழி இக்கதையில் சமூகப் பிரதிபலிப்பு செவ்வையாய் அமைகிறது. நா.கோ. கலையம்சம் இல்லாமல் கதையை எழுதியிருந்தாலும் உண்மையாகவே சிறப்பாகச் சுயவிமர்சனம் செய்துள்ளார்.

தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் நிலை எவ்வாறு அமைந்திருக் கிறது என்பதை ஓர் ஆன்மாவின் திரை அகல்வதால் நாம் அறிய முடிகிறது. எழுத்தாளரின் போலித்தனத்தை அறிந்து, இரட்டை வாழ்க்கை வாழ்வதைக் கண்டு, அவரை அறநெறிக்குத் திருப்பும் 'மலர்' போன்ற பெண்கள் உள்ளனர் என்பது அடையாளம் காட்டப்படுகிறது. 'அமைப்பு' என்னும் கதையில் பெண்ணுரிமை, பெண் விடுதலை என்ற பெயரில் திருமணமே செய்துகொள்ளாமல் வாழும் புதிய பண்பாடு, புதிய வாழ்க்கை முறை, சிங்கப்பூரில் இம்முறை அரும்பத் தொடங்கியுள்ளமையைக் காட்டுகிறார் நா.கோ. திருமணத்தைச் சடங்காகக் கருதும் பெண்கள் தலையெடுத்துள்ளனர் என்பதை அமுதா வழி அறிகிறோம். அமுதா 'சுயவிமர்சனம்' செய்துகொள்ளும் நா.கோ வின் பிரதிபலிப்பு. 'மரபுடைத்தல்' என்னும் நெறியே இக்கதையில் செல்வாக்குப் பெற்றிருப்பதாக இக்கட்டுரையாளர் கருதுகிறார். திருமணம் செய்துகொண்டு 'ஈ.கோ'வைச் (ego) சிதைத்துக்கொண்டு வாழ முடியாது எனக் கருதும் அமுதா கூடத் தப்பித்துக்கொள்பவள் (ஓர் escapist) என்றே இக்கட்டுரையாளருக்குத் தோன்றுகிறது. அமுதா தான் பெண்ணியம் பேசும் நா.கோ. என்று எண்ண வேண்டியுள்ளது.

சிந்தனை வளமும், கொள்கைப் பிடிப்பும் கொண்டு எழுத்தை 'வேள்வி'யாகக் கருதும் செம்மல் உள்ளம் கொண்டவர் இராம. கண்ண பிரான். நான்கு சிறுகதைத் தொகுப்புகளில் தாம் எழுதிய 42 கதை களைத் தொகுத்துள்ளார். சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தின் பிரச்னை களை அலசும் கனமான படைப்புகள் இவருடைய சமூகப் பார்வையைத் தெள்ளிதின் புலப்படுத்துகின்றன. இவருடைய சமூகப் பிரதிபலிப்பு மூவகைப்பட்ட சமுதாயங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது. மரபு வழிப்பட்ட சமுதாயம் (traditional society), மாறுபட்ட சமுதாயம் (transi-tional society), புதுமைச் சமுதாயம் (modern society) என்பன இராம. கண்ணபிரானின் சமூகப் பார்வையில் கண்டெடுக்கப்பட்ட சமுதாய வகைகள். கண்ணபிரான் அகிலன், அறிஞர் மு.வ. போலக் கருத்தியல் வாதி (idealist) என்பதும் அவர்தம் படைப்புகள் வழி பெறப்படும் உண்மையாகும்.

பொதுவாகக் குடும்பக் கதைகளை எழுதுபவர் என்னும் முத்திரை இராம. கண்ணபிரானுக்கு உண்டு. குடும்பம் சமுதாயத்தின் ஓர் அங்கம் எனக் கருதுவதால் அவரின் குடும்பப் பார்வை பல குடும்பக் கதைகள் பிறக்கக் காரணமாயின. எழுத்தாளனுடைய சொந்த வாழ்க்கைக்கும் அவனுடைய எழுத்துக்கும் உள்ள உறவு மிக நெருக்கமானது. எழுத்தாளனின் வாழ்க்கை அனுபவம் அவனுடைய எழுத்துக்களுக்கு வித்தாக அமைவதோடு உரமாயும், ஊன்றுகோலாயும் திகழ்கிறது என்னும் கருத்து கண்ணபிரானின் கதைகளைப் பொறுத்தவரை உண்மையாகியுள்ளது. மொத்தத்தில் சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தின ருக்கு நல்ல குடும்பங்களையும், மாறுபட்ட குடும்பங்களையும், கருத்து வேறுபாடுகள் நிறைந்த குடும்பங்களையும் காட்டியுள்ளார். செல்வர் - ஏழை; ஒழுக்கம் - ஒழுங்கீனம்; உண்மை - பொய் ; அன்பு - வேஷம் என முரண்பட்ட குடும்பங்களைச் சித்திரித்துக் காட்டி அன்பெனும் பிணைப்பை வலுப்படுத்துகிறார். சமூகப் பிரதிபலிப்பு, குடும்ப சக்தியையும் பொறுத்திருப்பதால் அதனைப் புறக்கணிப்பதற்கில்லை. 'கோபுர நிழல்', 'அவர் பங்கு', 'புதிய உலகு', 'பழைய சர்ச்சைகள், புதிய நோக்குகள்', 'கருவியா துணைவியா, 'அன்னை நெஞ்சம்', 'இருளிலும் சில வெண்மேகங்கள்', 'பொன் வளையல்', 'ஒரு சத்தியம், இரு நிலைகள்', 'வாடைக்காற்று', 'நடிகையின் கண்ணீர்', 'அருமை', 'இருண்ட வீடு', 'சோழன் பொம்மை', 'மூத்த பிள்ளை', 'திருமங்கை' எனப் பல கதைகளில், பல கோணங்களில் குடும்பப் பிரச்னைகள் சித்திரிக்கப்படுகின்றன.

கலை, அறிவியல், சமயம், மனிதநேயம் முதலிய கருப்பொருள் களைக் கொண்டும் கண்ணபிரான் கதைகளை எழுதியுள்ளார். இவருடைய 42 கதைகளுள் நேரடியாகச் சமூகப் பிரதிபலிப்பைக் கொண்டவை ஒரு சிலவே. 'நாடோடிகள்', 'இழப்புகள்', 'ஆறு பத்து பதினேழில்', 'தானாமோரா டைரி' ஆகிய கதைகள் சமூகத்தைப் பாடுபொருளாக (கருப்பொருளாக) கொண்டவை. 'நாடோடிகள்' என்னும் கதை கனமான உள்ளீடும், சமூக அக்கறையும், சமூகப் பிரக்ஞையும் கொண்ட படைப்பு. சிங்கையை விட்டு ஆஸ்திரேலியாவில் குடியேறிய தனபாலின் மூலமாகச் சிங்கப்பூரர்கள் தம் தாய்நாட்டுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதையே சமூகத்துக்குச் செய்தியாக வழங்குகிறார். 'இக்கரைக்கு அக்கரைப் பச்சை' என்னும் மனப்பான்மை கொண்ட நாடோடித் தமிழர்களால் நாட்டிற்குப் பயனேதும் இல்லை என வலியுறுத்துகிறார். தமிழர்களின் மனப்போக்கையும், சமூக நிலையையும் காட்டும் இக்கதை தேசிய உணர்வு மிக்க சிறுகதையாகவும்

திகழ்கிறது. சிங்கப்பூரின் தமிழ்ச் சமூகப் பிரதிபலிப்பைத் தமிழர் வாழ்வு பற்றி அதிகம் கவலைப்படும் பார்த்திபன் மூலமும், தன் இனத்தின் மொழி, பண்பாட்டைத் துறந்து மேற்கத்திய வாழ்க்கை முறையைப் பின்பற்றும் இரண்டாம் பிரிவு (உயர்மட்டமாக மாறிய) தமிழனாகிய தனபால் மூலமும் காட்டுகிறார் கண்ணபிரான்.

தனபால் தமிழர்களை வெறுத்ததற்கு அவன் வாழ்ந்த சமூகப் பின்னணியே காரணம். இதனை அவன் பார்த்திபனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறான்...

> 'சிங்கை ஹெண்டர்சன் பகுதியில் தொடங்கி என் இளமைப் பிராயம் அங்கு வசித்த தமிழர்களால் துன்புற்ற விவரத்தை உன்னிடம் ஒரு விளிம்புதான் காட்டியிருக்கிறேன். என் தந்தை ஒரு மலக் 'காடி' ஓட்டுநர் என்பதையோ அதனால் என் தந்தையை விட வேலைத் தரத்தில் சற்றே உயர்ந்திருந்த சக குடியிருப்புத் தொழிலாளிகள் எங்களைத் தாழ் வாகக் கருதி என் கல்வி முன்னேற்றத்திற்குப் பல இடையூறுகள் செய்தனர் (நாடோடிகள், இலக்கியக் களம், ப. 19).

எனத் தன் தமிழின வெறுப்புக்குரிய காரணத்தைக் கூறுகிறான். தாமும் முன்னேறாமல், மற்றவர்களையும் முன்னேற விடாமல் தடுத்த பொறாமை பிடித்த தமிழர்களின் மீது கொண்ட வெறுப்பு சமூக அந்தஸ்தை அவன் அடைய உதவியது என்று கண்ணபிரான் சித்திரித் திருப்பது 'இலக்கியம் சமுதாயத்தின் வெளிப்பாடு' என்னும் உண்மையை நன்கு உணர்த்துகிறது.

சிங்கப்பூரில் பணம் சம்பாதிக்க வந்த கந்தசாமி 'கச்சாங் பூத்தேயாக' (கடலை வியாபாரியாக) வியாபாரத்தைத் தொடங்கித் தன் சம்பாத்தியத்தையெல்லாம் இழந்து, சுகங்களை இழந்து, தன் மகனை இழந்து, இறுதியில் மனைவியை அழைத்துக்கொண்டு வந்து சிங்கப்பூரில் சேர்ந்து வாழ எண்ணும்போது விபத்தில் சிக்கி உயிருக்குப் போராடும் நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகிறான். குடியேறித் தமிழர்களின் பிரதிநிதி கந்தசாமி. இவன் வாழ்க்கையில் சந்தித்த இழப்புகளைப் போலவே குடியேறித் தமிழர் ஒவ்வொருவரும் சந்தித் திருக்கின்றனர். இக்கதை குடியேறித் தமிழர்களைப் பற்றிய நல்ல படப்பிடிப்பு எனலாம்.

சே.வெ. சண்முகம், பொன். சுந்தரராசு போன்ற பல எழுத்தாளர்களும் சிறுகதைகளை எழுதி நூலாக வெளியிட்டிருப்பினும் இவர்கள் தங்கள் பின்னணியையோ, தாங்கள் சார்ந்துள்ள சமூகப் பின்னணியையோ காட்டத் தயங்குகிறார்கள். பொன். சுந்தரராசு ஜனரஞ்சகக் கதைகளையே அதிகம் எழுதியுள்ளார். ஆயினும் 'இப்படியும் ஒரு பிழைப்பு' என்ற கதையின் மூலம் அய்யாவுத் தோட்டியின் வாழ்க்கை கூறப்படுகிறது. இக்கதையில் கூட ஆசிரியர் பொன். சுந்தரராசு தோட்டிகள் சமூகப் பின்னணியை ஆழமாக விளக்கக் கூசுகிறார் என்றே தோன்றுகிறது. ஆகவே மேலெழுந்தவாரியாகச் சமூகப் பின்னணி சுட்டப்படுகிறது. பொன். சுந்தரராசு ஒரு தமிழாசிரியர் என்பதால் அந்தப் பின்னணியை 'ஏணி' என்னும் கதையின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகளை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது அவற்றில் வேலைகள்/பதவிகளைப் பற்றியோ, நிதிநிலை (பொருளியல் நிலை) பற்றியோ செய்திகள் இடம்பெறுவது மிகவும் குறைவு என்பர் டக்மர் ராசநாயகம் (டக்மார் ராசநாயகம், ப. 56). அவருடைய கூற்று முற்றிலும் உண்மை என ஏற்பதே அறிவுடைமையாகும்.

சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகளில் தமிழர்கள் மற்ற இனத்தாருடன் பழகும் முறை, வேலையிடச் சூழல், அண்டை அயலாருடன் பழகும் முறை போன்றவை உண்மையாகச் சித்திரிக்கப் படவில்லை. அவை போலித்தனமாக, செயற்கை முலாம் பூசப்பட்டுக் கையாளப்பட்டுள்ளன. தங்களுடைய சொந்த சமூகத்தை ஊடுருவிப் பார்க்காமல், பார்க்க இயலாமல் சீனச் சமூகத்தைக் கதைக்குக் களமாக்கியும், கருப்பொருளாக்கியும் 'கதை விட்டுள்ளனர்' அல்லது 'கதை கட்டியுள்ளனர்' மா. இளங்கண்ணன், நாரண. புதுமைப்பித்தன், சே.வெ. சண்முகம் போன்றோர். மற்ற இனத்தாரைப் பற்றி உயர்ந்த கருத்துக்களும், மதிப்பும் கொண்டவர்களாகவே இவ்வெழுத்தாளர்கள் திகழ்வதால் அவ்வாறே எழுதியும் உள்ளனர். சீனர்கள், மலாய்க்காரர்கள் ஆகியோர் 'வகைமாதிரிகளே' (Prototypes). உழைப்பின் திருவுருவம் நம்பிக்கையின் கருவூலம், பாசத்தின் பிறப்பிடம், உத்தம மனிதர்கள் போன்ற வகைமாதிரிகளைப் படைத்துள்ளனர். ஆயின் இவர்களோ மற்ற மொழி இலக்கியங்களில் தமிழர்களின் படப்பிடிப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அறிய விரும்பாதவர்கள்; அறியாதவர்கள் என்பது வேதனைக்குரிய செய்தியே! காலங்காலமாகக் குருதியில்

தோய்ந்த அடிமைப் புத்தியும், ஆழமாக எதையும் ஆராயாமல் எழுதும் போக்கும் கொண்டிருப்பது இதற்குக் காரணங்களாக அமையலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

காதல், கலப்புத் திருமணங்கள், சாதி ஒழிப்பு என்று பேசும் சிறுகதைகள் மேலோட்டமாகத்தான் அவற்றைப் பற்றிப் பேசுகின்றன. இதற்குக் காரணம் எழுத்தாளர்கள் ஆழமான சமுதாயத் திறனாய்வை மேற்கொள்ளாததே ஆகும். ஓர் எழுத்தாளர் மற்ற எழுத்தாளருடன் உரையாட நேர்ந்தால் தான் எழுதப்போகும் கதைகள் பற்றிப் பிரஸ்தாபிக்காமல் இருப்பதே நல்லது. அப்படிச் சொல்லும் எழுத்தாளருடைய கதைக் கரு, கேட்கும் எழுத்தாளரின் கதைப்படைப்பாக வெளிவந்துவிடும் அபாயமும் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் ஒரு சிலரிடம் காணப்படுகிறது. இது சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் பலர் வெறும் கேள்விஞானத்தைக் கொண்டே கதை எழுதுபவர்கள் என்றும், ஆழமான ஆய்வெல்லாம் அவசியமற்றவை எனக் கருதுபவர்கள் என்றும் புலப்படுத்துகின்றது. சிறுகதைகளில் பிரச்னையின் தீவிரம் காட்டப்படவில்லை என்பதும் வருந்துதற்குரியதே!

மேலும் சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகளில் சமூக மாற்றம் என்பது புறநிலை மாற்றமாகவே (external changes) சித்திரிக்கப்படுகின்றது. அதாவது பணவசதியைப் பொறுத்த அளவில் வாகனங்கள், தொலைக் காட்சி, தொலைபேசி போன்ற வாழ்க்கை வசதிகள் காட்டப்பட் டுள்ளன. அவர்களின் எண்ணப்போக்கில் மாற்றம் ஏற்படாததையோ, பண்பியல் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படாததையோ (Qualitative changes of life style) காட்டி, அவற்றை ஆழமாக ஆராயத் தவறி விடுகின்றன. இப்பணியைக் கதையில் வரும் பாத்திரங்களோ, எழுத்தாளரோ செய்வது வழக்கம். ஆயின் சிங்கப்பூர்ச் சிறுகதைகள் பல இதனைச் செய்யத் தவறிவிடுகின்றன. சிங்கப்பூர் வாழ்க்கை முறை என்பது இச்சிறுகதைகளில் பேசப்படவில்லை. சிங்கப்பூரின் இடப்பின்னணியை மட்டுமே (சாலைகள், தெருக்கள், இடங்கள், பொதுவிடங்கள் போன்றவற்றின் பெயர்கள்) எழுத்தாளர்கள் பலர் வாழ்வியற் பின்னணியாகக் கருதுகிறார்களோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

சிங்கப்பூரில் சிறுகதைகள் மற்ற இலக்கிய வகைகளை விட அதிகமான எண்ணிக்கையில் வெளிவந்திருப்பதை நோக்கும்போது அறிஞர் கைலாசபதியின் கருத்தே நினைவுக்கு வருகின்றது. அவர் சிறுகதையைத் தனிமனிதனின் குரலாகவே காண்கிறார். சிறுகதைகள்

வளர்ச்சியையோ அல்லது மாற்றத்தையோ பதிவு செய்யவில்லை (க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், ப. 213). ஆயின் நாவல் சமுதாய மாற்றத்தையும், சமுதாய வளர்ச்சியையும் பதிவு செய்கிறது என்கிறார். கட்டுரையில் முன்னர் குறிப்பிட்டபடி ஒரு சில எழுத்தாளர்களின் படைப்புகளில் சமூகப் பிரதிபலிப்பு செவ்வையாய் அமைந்துள்ளமைக்கு அவர்களின் ஆழமான சமூகப்பார்வை காரணமாக அமைகிறது. நா. கோவிந்தசாமியின் ஒரு சில படைப்புகள் தவிர இலக்கிய வடிவம் ஒரு தடையாய் அமையவில்லை என்றே கூற வேண்டியுள்ளது. அதே சமயம் எழுத்தாற்றலோ, கூரிய சமூகப் பார்வையோ இல்லாமல் கதை செய்யும் சராசரிக்கும் கிழான எழுத்தாளர்களுக்கு, அதாவது நாலாந்தர ஐந்தாந்தர எழுத்தாளர்க்கு வடிவமும் தடையாக அமைகின்றது.

சுருங்கக் கூறின் சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகள் இலக்கியத்தைச் சமூகவியல் அணுகுமுறையிலே ஆய்வோருக்கு மிகவும் சொற்பமான அளவில்தான் பயன்பட முடியும்.

புதினங்களும் சமூகப் பிரதிபலிப்பும்

சிங்கப்பூரில் நூலாக வெளிவந்துள்ள புதினங்கள் பதினைந்து. இவ்வெண்ணிக்கை மிகவும் சொற்பமே. இவற்றுள்ளும் சமூகப் பிரதிபலிப்புக் கொண்டவை விரல் விட்டு எண்ணக்கூடியவை.

மா. இளங்கண்ணனின் புதினங்கள்

'நினைவுகளின் கோலங்கள்', 'வைகறைப் பூக்கள்', 'அலைகள்' ஆகிய மூன்றும் இளங்கண்ணனால் தொடர்கதைகளாக எழுதப்பட்டு நூலுருப் பெற்றவை. சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்த எழிலரசி தமிழ்நாட்டு வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டபோது அவள் அதை ஏற்றுக்கொண்டு எப்படி வாழ்கிறாள் என்பதை மையமாய்க் கொண்டு எழுதப்பட்டது 'நினைவுகளின் கோலங்கள்' என்னும் புதினம். இதன் கதையும், சம்பவங்களும் சாதாரணமானவைதாம் என்றாலும் சிங்கப்பூர்ப் பின்னணியைச் சிறப்பாகச் சித்திரிப்பதால் கதைக்கும், சம்பவங்களுக்கும் தனி மெருகு ஏறியுள்ளது.

சிங்கப்பூர் 60களின் இறுதியில் சிறிது சிறிதாக நவீனமயமாகத் தொடங்கியது. கம்பத்தில் (kampong கிராமத்தில்) வாழ்ந்த மக்கள் அடுக்குமாடி வீடுகளில் வாழ வேண்டிய ஒரு புதிய சூழல் - மாறுதல் ஏற்பட்டது. இச்சூழலில் வாழத் தன்னை மாற்றிக்கொள்ளும் ஒரு

குடும்பப் பின்னணியும், சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்த பெண் தமிழ் நாட்டுக் கிராமச் சூழலில் வாழத் தன்னைத் தயார்படுத்திக்கொள்ளும் பின்னணியும் என இருவேறு இடப் பின்னணிகள் சித்திரிக்கப் படுகின்றன.

மாடுகளை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தும் முத்தம்மாள் குடும்பமும், முருகையா குடும்பமும் சிங்கப்பூர்க் கம்ப வாழ்வின் பிரதி நிதிகள். சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்தாலும் அவர்களின் மனநிலையில் மாற்றமில்லை. சராசரித் தமிழகத்துத் தமிழன் எப்படிச் சிந்திப்பானோ அப்படியே சிந்திக்கிறார்கள். அண்ணாமலை, முத்தம்மாள் ஆகிய இருவரும் தம் பிள்ளை மாணிக்கம் மங்கையர்க்கரசியோடு நெருங்கிப் பழகிவிட்டபோது, அவர்கள் தம் சாதியைப் பற்றிப் பேசுவதையும், முறைப் பெண்ணைத் திருமணம் செய்ய நினைப்பதையும் சான்றாகக் கூறலாம். இதன் மூலம் அவர்களின் நினைப்பும், மனநிலையும் சிங்கப்பூரோடு ஐக்கியப்படவில்லை என அறிய முடிகிறது.

ஆதியில் குடியேறிய தமிழர்களும்; சிங்கப்பூரிலேயே பிறந்து வளர்ந்தாலும், 'ஆற்றிலே ஒரு கால்; சேற்றிலே ஒரு கால்' என நினைக்கும் அடுத்த தலைமுறைத் தமிழர்களும்; முகிலன், எழிலரசி போன்று முழுக்க முழுக்கச் சிங்கப்பூர் மண்ணுக்கு விசுவாசமுடைய சிங்கப்பூர்த் தமிழர்களும் இந்நாவலில் உலவுகின்றனர். இதனால் குடியேறித் தமிழர், 'இரண்டுங் கெட்டான்' என்னும் மனநிலை கொண்ட தமிழர், சிங்கப்பூர்த் தமிழர் என்னும் மூவகைத் தமிழரின் மனப்போக்குகளை - எண்ண வெளிப்பாடுகளை நினைவுகளின் கோலங் களாக வடித்துள்ளார் இளங்கண்ணன் என்பது தேற்றம்.

ஒரு குடும்பத்தின் மாற்றத்தையும், எழிலரசி என்னும் சாதாரணப் பெண்ணின் பிரச்னைகளையும் மனிதநேயக் கண்ணோட்டத்துடனும், சமூகவியற் பார்வையுடனும் நாவலாசிரியர் அணுகியுள்ளார். இப் பார்வை ஒரு நாட்டின் பார்வையையும் பிரதிபலிக்கிறது.

எழிலரசி பெற்றோருக்கு அடங்கிய பெண்ணாகவே இருக்கிறாள். மணவிலக்குப் பெற்ற பின்பும் விரும்பியவனை மணக்கத் தயங்குகிறாள். அறுபதுகளில் பெரும்பான்மைத் தமிழ்ப் பெண்கள் பெற்றோருக்கு அடங்கி நடந்துகொண்டதோடு கோழைகளாகவும் திகழ்ந்ததற்கு நல்ல சான்று எழிலரசியே!

பெற்றோரின் வற்புறுத்தலோடு செய்து வைக்கப்பட்ட எழிலரசி யின் திருமணம் தோல்வியில் முடிகிறது. வாணனால் மணவிலக்குச்

செய்யப்பட்டுச் சிங்கப்பூர் திரும்புகிறாள். இதன் மூலம், 'மற்றவர்களின் மனநிறைவுக்காகச் செய்துகொண்டது சடங்காகத்தான் இருக்குமே ஒழியத் திருமணமாக இருக்காது' என்பதை எழிலரசி வாயிலாக இளங்கண்ணன் சமூகத்துக்குச் சொல்கிறார். அறுபது, எழுபதுகளில் தமிழர்களிடையே நிலவிய பிற்போக்கான எண்ணங்களையும், அவர்களின் மனநிலையையும் இந்நாவல் பிரதிபலிக்கிறது.

அடித்தள மக்கள் குடி, போதைப்பொருள் முதலியவற்றுக்கு அடிமையாவதை மாணிக்கத்தின் மூலம் அறியலாம். இப்படி மனிதனுடைய யதார்த்த வாழ்வில் நேரடியாகச் சம்பந்தப்படுகிற பிரச்னைகள், போராட்டங்கள், மனித இயல்புகள் ஆகியவற்றை இந் நாவலாசிரியர் பாத்திரங்களின் வழியும், மனவோட்டங்களின் வழியும் புரிந்துகொள்ள வைக்கிறார். எனவே இது சிறந்த நாவலாகித் தேசிய புத்தக மன்றத்தின் பரிசைப் பெற்றது.

வைகறைப் பூக்கள்

எழுபதுகளில் தொடர்கதையாக வெளிவந்த இந்நாவல் பழமையைப் பின்னோக்கிப் பார்க்கும் கற்பனையின் விளைவாகும். ஆங்கிலேயர் ஆட்சிக்காலம், ஜப்பானியர் ஆட்சிக்காலம், இந்திய தேசிய ராணுவ எழுச்சி போன்ற கடந்தகாலச் செய்திகளை வைத்துக்கொண்டு கற்பனைத் திறனோடு, உயிர்ப்பு மிக்க பாத்திரங்களை உலவ விட்டுச் சிறந்த நாவலைப் படைத்துள்ளார்.

ஜப்பானியர் ஆட்சிக் கொடுமைகள் அடிமட்டத் தமிழரை எவ்வாறு பாதித்தன; அக்கால வாழ்க்கை முறை, ஆங்கிலேயரின் கொடுமைகள் எனப் பல செய்திகள் இந்நாவலில் விரிவாக எழுதப் பட்டுள்ளன. நிழலை வைத்து மணி கூறுவது, தமிழினத்தின் கிழறுப்பு வேலைகள், கங்காணிகளின் கொடுமை, ஜப்பான்காரனின் கொடுமைகள் போன்ற பல செய்திகள் சிங்கப்பூர்ப் பின்னணியை விளக்க உதவுகின்றன.

அலைகள்

இளங்கண்ணனின் முதல் நாவல் என்னும் காரணத்தால் பலரின் கண்டனங்களுக்கு உள்ளான நாவல் இது என்பது குறிப்பிடத்தக்கது. திரைப்பட பாணியில் கதையை நடத்திச் செல்வதாலும், சம்பவங்களில் செயற்கை இழை ஓடுவதாலும் 'அலைகள்' நாவல் நம்பும்படியாக இல்லை. சீனப் பெண்ணுக்குச் சேலை கட்டித் தமிழ்ப் பெண்ணாக்க முயற்சி செய்துள்ளார். இந்நாவலைப் பற்றி டக்மார் ஹென்மேன்

ராசநாயகம் கருத்துரைக்கும்போது, 'தமிழ்நாட்டில் ஆர்வம் மிக்க திரைப்பட இயக்குநர் ஒருவர் இக்கதையை இயக்கினால் வெற்றித் திரைப்படம் ஆக்கிவிடுவார்' (ப. 53) என்று குறிப்பிடுகிறார். இக்கருத்தை நகைப்பிற்காக மட்டும் கொள்ளாமல் சமூகப் பிரதிபலிப்பு என்ற கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். செயற்கைப் பூச்சும், போலித் தன்மையும் உள்ள ஒரு நாவல் எப்படிச் சமூக ஆவணமாகும்? எப்படிச் சமுதாய வெளிப்பாடாகும்?

ஐரோப்பிய நாவலாசிரியர்கள் பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் சீனர்களைப் பற்றிய தகவல்களை எழுதியதை மனத்துட்கொண்டு இளங்கண்ணனும் இவ்வாறு சீனர்களைப் பற்றி எழுதுவது பொருந்தவில்லை என்கிறார் டக்மார் (ப. 55). சீனக் குடும்ப வருணனை, சீனப் பெண்களின் பாதங்கள் சிறுத்திருப்பது போன்ற வற்றைச் சான்றாகக் கூறலாம். இவற்றை நம்ப முடியவில்லை. தமிழ் இரத்தம் சீனப் பெண்ணின் உடலில் ஏற்றப்படுவது, லேய்குவா திருக்குறள் படிப்பது, வாசலில் திருவள்ளுவர் படம் மாட்டியிருப்பது எனப் பல வழிகளில் தமிழ்ச் சாயம் பூச முயல்கிறார் இளங்கண்ணன். இவற்றில் தோற்றுவிடுவதோடு செயற்கைத் தன்மையை நிலைநிறுத்து கிறார். உண்மையில் சீனர்களைப் பற்றிக் கதைகளில் எழுதுவோர் சீனர்களின் வாழ்க்கை முறை, அதைப் பற்றிய உளவியல் பார்வை ஆகியவற்றை முழுமையாகச் சொல்ல வேண்டும். 'அலைகள்' என்ற நாவலை எழுதியதன் வாயிலாக இளங்கண்ணன் நல்ல எழுத்தாளர் என்ற பெயருக்குக் களங்கத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார் எனத் துணிந்து கூறலாம். ஆனால் இது அவருடைய முதல் நாவல் என்பதால் பல தவறுகளைச் செய்துள்ளார் என அமைதி கூறலாம்.

கண்ணபிரானின் குறுநாவல்கள்

கண்ணபிரானின் சமூகப் பார்வைக்கும், மொழிப் பார்வைக்கும் சான்றாக விளங்குவது 'வாழ்வு' என்னும் குறுநாவல். ஞானப்பூங்கோதை கென்சிங்டன் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிகிறாள். அப்பள்ளி யின் மற்றொரு தமிழாசிரியர் வில்லியம். விரிவுரையாளர் தேவேந்திரன் மற்றும் முரளி, அவனுடைய பெற்றோர், அவனுடைய தாத்தா ஆகியோரைப் பாத்திரங்களாக உலவ விட்டு 1980களின் மத்தியில் தமிழ் மொழியின் வாழ்வு குறித்த பிரச்னையைக் கருவாகக் கொண்டு பின்னப்பட்ட குறுநாவல் இது. தமிழ் மொழி கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள், மேல்மட்டத் தமிழர்களிடையே நிலவும் தமிழ் மொழி பற்றிய மனப்போக்குகள் போன்றவை இக்குறுநாவலில் சித்திரிக்கப்பட்டுள்ளன.

அடிமட்டத் தமிழர்களின் குழந்தைகளுடைய மொழித்திறன், ஆங்கிலம் கற்று, அதனையே வீட்டு மொழியாகக் கொண்ட பணக்காரத் தமிழ்ப் பிள்ளைகளின் மொழித்திறன் என்னும் இரு கோணங்களின் வாயிலாகத் தமிழ்க் கல்வி பற்றிய செய்திகளைப் பேசும் குறுநாவல் 'வாழ்வு' ஆகும். எனவே இது ஒரு சமூகப் பிரச்னையாக அமையாமல் தேசியப் பிரச்னையாகவும் கால்கொண்டுள்ளது.

திரு. கண்ணபிரான் ஒரு தமிழாசிரியர். அவருடைய மொழி யுணர்வு, மொழிப்பற்று ஆகியவை இந்நாவலில் தெள்ளிதின் புலப்படு கின்றன. 'மொழியே ஓர் இனத்தின் விழி; இம்மொழி வாழ்ந்தால்தான் இனம் வாழ முடியும்' என்னும் உண்மையை வாழ்வு என்னும் குறுநாவல் எதிரொலிக்கிறது. சிங்கப்பூரில் தமிழ் மொழியின் வாழ்வு தமிழர்களின் கையில்தான் உள்ளது என்னும் செய்தியைத் தம் ஆசிரியப் பணி அனுபவத்தின் துணைகொண்டு, ஞானப்பூங்கோதையாய் நின்று சிறப்பாகப் பிரச்சார நெடி சிறிதும் இன்றிப் படைத்துள்ளார் திரு. கண்ணபிரான்.

நா. கோவிந்தசாமியின் 'வேள்வி'

'வேள்வி' என்னும் நாவலின் மூலமே அமரர் கோவிந்தசாமி சர்ச்சைக்குரிய எழுத்தாளராகவும், சற்று வித்தியாசமான எழுத்தாள ராகவும் அடையாளம் காட்டப்பட்டார். ஆலயங்கள் சமய வழிபாட் டிடங்களாகத் திகழ்ந்தால் மட்டும் போதாது, அவை சமுதாய மையங்களாகவும் திகழ வேண்டும் என்னும் நோக்குடன் கோயிலின் பின்னணியில் சமூகத்தைப் பிரதிபலித்துள்ளார் நா. கோவிந்தசாமி. 'உள்ளொளியைத் தேடும்' இவருடைய வழக்கமான தேடலில்தான் 'வேள்வி' உயிர்த்தெழுகிறது.

சிறுபான்மைச் சமூகத்தினராகிய தமிழர்களுக்கு மத்தியில் சிறுதெய்வ வழிபாட்டை அதிகம் மேற்கொண்டவர்கள் ஆதி திராவிடர்களே. சிங்கப்பூர்ப் பின்னணியில் சிறுதெய்வக் கோயில்களும், குடியேறிய மக்களில் பெரும்பான்மையினராக ஆதிதிராவிடர்களும் இருந்ததை நோக்க சிறுதெய்வ வழிபாட்டின் செல்வாக்கு தெரிய வரும். சிறுதெய்வ வழிபாட்டை உயிர்மூச்சாகக் கொண்ட கருப்பண்ண மண்டோர் கோவிலை விரிவாக்க எண்ணுகிறார். கோயில் 'கமிட்டியில்' உள்ள சந்தர்ப்பவாதிகள் இவரைப் புறக்கணித்து விடுகிறார்கள். ஆகவே கோயில் குழுவை விட்டு அவராகவே ஒதுங்கிவிடுகிறார். தமிழ்க் கோயில்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் குமரன், கருப்பண்ண

மண்டோர் போன்ற பலரையும் பேட்டிகண்டு இந்து ஆலயங்களைப் பற்றிய ஆய்வேட்டை எழுதி முடிக்கிறான். ஆனால் இதைச் சமர்ப்பிக்காமல் தப்பித்துக்கொள்கிறான். நா.கோ.வின் தலைமைக் கதைமாந்தர்கள் உயர்ந்த சிந்தனைகளைக் கொண்டவர்களாகவும், சமூக அக்கறை பொங்கப் பேசும் 'வாய்ச்சொல் வீரர்'களாகப் பெரும்பாலும் படைத்துக் காட்டப்பட்டுள்ளனர். இவர்கள் பேசிய பேச்சைச் செயல்படுத்துவார்கள் என்று பார்த்தால் தப்பித்துக்கொண்டு (escapists) ஓடிவிடுவார்கள். இந்தப் பாணியில்தான் 'வேள்வியைத்' தொடங்கும் குமரன் ஒன்றுமே செய்யாமல் ஒதுங்கிவிடுகிறான். சமூக எதிர்ப்புக்கு அஞ்சிய அவன் 'காட்டிக்கொடுக்க விரும்பவில்லை' என்று தப்பித்துக் கொள்கிறான். புண்ணைக் கீறிக் கிளறிப் பார்த்துவிட்டு மருந்து போடாமல் விட்டுவிடும் மருத்துவர் போலத் தீர்வு கூறிச் சமுதாயத்தைத் திருத்துவதைக் காட்டாமல் குமரன் பயந்து ஒதுங்கிக்கொள்வது ஏன்? அவனை அவ்வாறு ஒதுக்கிய நா.கோ. சமூகப் பிரக்ஞையுடன் ஒரு தலைப்பை எடுத்துக்கொண்டு விவாதித்த பின்னர் சமூக எதிர்ப்புக்கு அஞ்சி, அதனைப் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் நூலாக்கி வெளியிட்டிருக்கும் ஒரே செய்கையினால் அவர் கோழையாகிவிட்டார் என்று கூறுவதில் தவறில்லை. கோயில்களில் நடக்கும் அநீதிகளை வெளிச்சமிட்டுக் காட்டிய வேகத்துடன் குமரன் தப்பித்துக்கொள்வதில் அர்த்தமென்ன உள்ளது? தன்னை ஒதுக்கியதால் கருப்பண்ண மண்டோர் ஒதுங்க வேண்டியதில்லையே?

கருப்பண்ண மண்டோரும், குமரனும் சிங்கப்பூரர்கள். இவர்கள் இவ்வுணர்வுடனே தமிழ்ச் சமூகத்துக்கு நன்மை செய்ய விழைபவர்கள். இவர்களின் மனப்போக்கு நாவலில் தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. 'வாய்ச்சொல் வீரர்களாகிய' இவர்கள் கர்ம வீரர்களாக மாறத் தயக்கம் காட்டுகிறார்கள். நாவல் பிறந்த கதையை விவரிக்கும் நா.கோ. தான் பின்வாங்க வேண்டிய சூழலைக் கீழ்க்காணுமாறு கூறுகிறார்:

> சிங்கப்பூர்த் தமிழ்ச் சமுதாயத்தில் காணப்படும் முரண்பாடுகள், போலித் தன்மைகள் என்னைக் கோபமடையச் செய்தன. கோபங்கள் எழுத்துக் களாக மாறின. எழுத்தாளனுக்கு தார்மீகக் கோபம், இருக்க வேண்டும். அவன் எழுத்தில் அவனுக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். எனது கோபம் ஆதங்கத்தின் உச்சமாக எழுதப்பட்டதுதான் 'வேள்வி'. இந்த நாவலை நான் 1980இல் எழுதினேன்.

ஆனால் பத்தாண்டுகள் கழித்துத்தான் வெளியிட்டேன். நாவல் எழுதிய காலத்தில் வேள்வியை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் சமுதாயத்துக்கோ அல்லது விமர்சனங்களையும், அதன் விளைவுகளையும் சந்திக்கும் பக்குவம் எனக்கோ இல்லை.'

(நா. கோவிந்தசாமியின் பேட்டி, 'தமிழ் முரசு', 23.10.94)

கோயில் தர்மகர்த்தாவோ பிழைக்க வந்த நாடு என்னும் கண்ணோட்டத்தில், தங்களின் தாய்நாடான இந்தியாவில் சுயவிளம்பரத்தைத் தேடுகிறார். 'கோவில் கட்டிய ஒரு சமூகம் இந்த நாட்டில் தலைநிமிர்ந்து நிற்காது; கல்வி கற்ற சமூகமே இந்த நாட்டில் உயர்ந்து நிற்கும்' என்பதே வேள்வி என்னும் நாவல் சமூகத்துக்கு விடுக்கும் செய்தியாகும்.

வேள்வி என்னும் தலைப்பு குறியீடாக அமைந்து பல சமூக விரோதிகளையும், சுயநலக்காரர்களையும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. கோவிலைப் பெரிதாக்க என்னும் கருப்பண்ண மண்டோரின் வேள்வியில் சுயநலத்தின் சுவடேயில்லை. இவ்வேள்வியைத் தொடர விடாமல் சுயநலக்காரர்களும், புகழ், விளம்பரம் போன்றவற்றுக்கு ஆசைப்படும் பணக்காரத் தர்மகர்த்தாக்களும் தடுக்கின்றனர். பொதுப் பணியைப் புனிதப் பணியாகச் செய்யும் மனநிலை இல்லாதோர் துரதிர்ஷ்ட வசமாகப் பெருகியிருக்கும் சமுதாய அவலத்தை இந்நாவல் அழகுறச் சித்திரிக்கிறது.

குமரன் தன் ஆராய்ச்சியை ஒரு வேள்வியாகவே கருதுகிறான். தமிழ்ச் சமூகத்திற்கு நன்மை செய்ய விழையும் அவனுடைய வேள்வி நிறைவேற வேண்டிய தருணத்தில் 'சமூகத் துரோகி' எனப் பலராலும் தூஷிக்கப்பட்ட தொண்டனாக வேள்விக் களத்தில் குதிக்கிறான். ஆய்வின் மூலம் தமிழ்ச் சமூகப் பிரச்னைகளைக் கண்டறிந்த அவன் தன் சமூகக் குறைபாடுகளைக்களையும் நோக்குடன் கர்மவீரனாகக் காட்சி தருகிறான். அந்நிலையில் அவனுக்குச் சமூகக் கடமையே வேள்வியாகிறது (ஆனால் அது நீடிக்காமல் போய்விடுவது வருந்துதற்குரியதே).

வேள்வியில் பல விதமான பொருள்களையும் நெருப்பிலிடுவது போல் பலதரப்பட்ட சமூகத் தீமைகளும், அநீதிகளும் வேள்வித்தீயில் பொசுக்கப்பட வேண்டும் என்னும் விழைவு இந்நாவலின் ஆசிரியர் உட்படத் தலைமைப் பாத்திரங்களுக்கும் உண்டு. வேள்வி என்னும்

தலைப்பின் வழியே நாவலாசிரியரின் சமூகவியற் பார்வை தெற்றெனப் புலப்படுவதையும் நம்மால் அவதானிக்க முடிகிறது. சமயப் பணி என்பது முன்னர் குறிப்பிட்டபடி வேள்வியைப் போன்றது. இந்த வேள்வியில் இறங்கச் சுயநலமற்ற தூய மனமும், பொதுநல உணர்வும், கறைபடாக் கரங்களும் வேண்டும். சுயவிளம்பரம், மாலை மரியாதை போன்றவற்றை நாடும் பொய்ம் முகங்கள் தேவையில்லை என்னும் கருத்துப்படத் தலைப்பைத் தந்துள்ளார். இலக்கிய வேள்வியில் நா. கோவிந்தசாமிக்கு அற்புதமான நாவலாசிரியர் என்னும் சிறப்புக் கிடைக்கிறது. மனிதப் பண்புகளின் தேடலாக 'வேள்வி' அமைகிறது. இவ்வேள்வியில் கல்வி யாளன் ஒரு கோணத்தில் மனிதனாகவும், மற்றொரு கோணத்தில் கோழையாகவும் காட்டப்படுகிறான். 'ஒரு சமுதாயத்தின் புறத் தூண்டுதல்கள் நல்லவர்களின் மனத்தில் புத்தெழுச்சியை ஊட்டிப் போராடும் தீரர்களாக மாற்றிவிடுவது இயற்கை' (தி. பாக்கியமுத்து, 1972) என்னும் இவ்வடிப்படையில்தான் குமரனும் சமூகத்திற்காகப் போராடத் துணிகிறான். வாழ்க்கையின் மேற்பூச்சுப் போல வழிபாட் டுக்கும் மேற்பூச்சுப் பூசும் சமூகத்தை எதிர்த்துப் போராடத் துணியும் குமரனின் பின்னணி என்ன? கருப்பண்ண மண்டோரின் பின்னணி என்ன? என்பவை நாவலாசிரியரால் ஒளிக்கப்பட்டுச் சமூகப் பிரதி பலிப்பின் முழு வீச்சையும் காட்டத் தவறிவிடுகின்றன. சமூகக் கேடுகளையும், அவற்றுக்குக் காரணமானவர்களையும் ஒளிக்காமல் வெளிப்படுத்தும் நாவலாசிரியர், அவற்றை எதிர்த்துப் போராடுபவர் களை ஒளித்திருப்பதன் மூலம் சமூக அடையாளங்களை, பாத்திரங்களின் சுய அடையாளங்களைப் பலியிட்டிருக்கிறார் என்பது இக்கட்டுரை யாளரின் கருத்தாகும்.

சமுதாய ஏற்றத்தாழ்வினையும் 'வேள்வி' விளக்குகிறது. கோவிலையும், அதனருகில் அமைந்துள்ள பண்டாரத்தின் தகரக் கொட்டகையையும் போகிற போக்கில் சாதாரணமாக எழுதியிருப்பதும், தர்மகர்த்தாவின் குளிர்சாதன வசதி அறையைப் பிரதிபலித்திருப்பதும் சமுதாய ஏற்றத்தாழ்வினை விவரிப்பன. தமிழ்நாட்டில் இலக்கியப் பாடம் போதிக்கும் பேராசிரியர் ஒருவர் மலேசிய, சிங்கப்பூர் வருகைக்குப் பிறகு முழுநேரச் சொற்பொழிவாளர் ஆகிவிட்டார். 'விசா'வையும் இரண்டு வாரங்களுக்குப் புதுப்பித்துவிட்டார்' என்னும் வார்த்தைகளில் அங்கதச் சுவை மிளிர்ந்தாலும் அவை சிங்கப்பூரைப் பற்றித் தமிழ் நாட்டார் கணிப்பாகவும் அமைகிறது; தமிழ்நாட்டுப் பேராசிரியர்கள் பற்றி இங்கு (சிங்கப்பூரிலுள்ளவர்கள்) என்ன நினைக்கிறார்கள் என்பதையும் காட்டுகிறது.

பெரி.நீல. பழனிவேலனின் குறுநாவல்கள்

பெரி.நீல. பழனிவேலன் குறுநாவல்கள் நான்கு அடங்கிய தொகுதி ஒன்றும், 'செம்பருத்தி', 'அந்தரத்தில் தொங்கும் உறவு' ஆகிய நாவல்களுமாக ஆறு நாவல்கள் எழுதியுள்ளார். 'பவுன் பரிசு பெற்ற புதினம்' என்ற முத்திரையோடு வெளிவந்துள்ள இப்புதினம் நாவலாசிரியருக்குத் தமிழ் உணர்வு அதிகம் என்பதையும், அந்தத் தமிழ் உணர்வை வெளியிட அவர் புதினம் எழுதாமல் தனித்தமிழ்க் கட்டுரைகள் எழுதியிருக்கலாமே என்ற எண்ணத்தையும் ஏற்படுத்துகிறது.

'செம்பருத்தி' என்னும் நாவல் மலேசியப் பின்னணியைக் கொண்டு சிங்கப்பூரரால் எழுதப்பட்டது. இன ஒற்றுமைக்காகக் கதை எழுதியுள்ளார். அதிலும் தமிழ்த் திரைப்படப் பாணியிலான முக்கோணக் காதலும், சீன, மலாய் இனப் பெண்கள் தமிழனைக் காதலிப்பதாகவும் 'கதை விட்டிருக்கிறார்' பெரி.நீல. பழனிவேலன். சீன, மலாய்ச் சமூகங்களைக் கதைகளில் எழுதுவதற்கு அவர்களைப் பற்றிய செய்திகளை எழுத்தாளர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்றும், அவற்றை ஆராய்ச்சி செய்த பின்னே எழுத வேண்டும் என்றும், இலக்கியத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிந்தவர்களிடம் நூலுக்கு அணிந்துரை பெற வேண்டும் என்றும் இவ்விரு புதினங்களும் நமக்கு உணர்த்துகின்றன.

கட்டுரையின் இறுதிப் பகுதியாக அமைவது நாடகங்களும் அவற்றில் வெளிப்படும் சமூக அக்கறையும் ஆகும். சிங்கப்பூரில் தமிழ் நாடக வளர்ச்சி என்னும் அறிமுகக் கட்டுரை (எஸ்.எஸ். சர்மா) ரெ. சோமசுந்தரத்தின் 'சிங்கப்பூரில் தமிழ் நாடக வளர்ச்சி' என்னும் நூலுக்கு அடிப்படையாக அமைந்தது. இவை தமிழ் மேடை நாடக வளர்ச்சி, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் பங்கு போன்ற பல விஷயங்களைக் கூறுகின்றன. மேடை நாடகங்களாகவும், வானொலி நாடகங்களாகவும் வெற்றி பெற்ற நாடகங்கள் சில நூல் வடிவம் பெற்றன. இவற்றில் சமூகப் பிரதிபலிப்பு எங்ஙனம் அமைகிறது என்பது இக்கட்டுரையின் இறுதிப் பகுதியாக இடம்பெற்றுள்ளது.

சிங்கப்பூரில் வெளிவந்த நாடக நூல்கள் மிகக் குறைவே. இந்தியர் பண்பாட்டு நிகழச்சி ஏற்பாட்டுக் குழுவினர் சிங்கப்பூரின் வெள்ளி விழாவை ஒட்டிச் சில மேடை நாடக நூல்களை வெளியிட்டனர். இவற்றுள் 'இலக்கியக் காட்சிகள்', 'மனோன்மணீயம்' என்ற இரண்டு நாடகங்களும் தழுவல் நாடகங்கள். இவை தமிழ்நாட்டுப் பின்னணியைத் தழுவியவை. 'கடல் கடந்தோர் இலக்கியம்' என்ற

தலைப்புடன் ந. பழனிவேலுவின் வானொலி நாடகங்கள் அனைத்தும் புத்தக வடிவில் வெளியிடப்பட்டன. அவை ஒலிபரப்பப்பட்ட நாள், ஆண்டு போன்ற தகவல்களைக் கொண்டிருக்கவில்லை. ஆகவே இவை ஒலிபரப்பப்பட்ட ஆண்டுகளில் நிலவிய பிரச்னைகளை வெளிக்காட்டு கின்றனவா என்று ஆராய்வதற்கும் இடமில்லை. மேலும் கருப்பொருள் அடிப்படையில் தமிழ்நாட்டுக் கருப்பொருள்களையே பேசுகின்றன. அவை சிங்கப்பூர்ச் சமூகத்தைப் பிரதிபலிக்கவில்லை என்பது தேற்றம்.

திருவாளர்

ஏ.பி. சண்முகம் 'எழுத்துச் செம்மல்' எனப் பட்டம் பெற்றவர். இவர் சிறுகதை, நாவல், நாடகம் என ஒவ்வோர் இலக்கிய வகையையும் எழுதிப் பார்க்கிறார். அவர் எதை எழுதுகிறார், ஏன் எழுதுகிறார், என்றெல்லாம் சிந்திக்காமல் எழுதுவதால் அவரெல்லாம் எழுத்தாளர் என்ற போர்வையில் உலவுகிறார் என்றே சொல்ல வேண்டும். தெளிவற்ற, குழப்பமான முறையில் 'திருவாளர்' என்னும் நாடகம் எழுதப்பட்டுள்ளது. '1960களில் சிங்கப்பூரில் தமிழர்களிடையே நிலவிய வாழ்க்கைப் போக்கைக் கொண்டுள்ள சமூக நாடகம்' என்னும் முன்னுரையோடு வெளிவந்துள்ளது. சிங்கப்பூரின் இடப்பெயர்களைத் தவிர நாடக நோக்கமோ, நாடகப் பின்னணியோ ஒன்றும் தெளிவாக அமையவில்லை. குழப்பம் கொண்ட ஒருவரின் கிறுக்கல்களே இவை. 'சமூக அங்கதம்' என்ற முத்திரையுடன் இதனைப் பதிப்பித்துள்ளனர்.

உதயத்தை நோக்கி

பொன். சுந்தரராசுவின் நாடகங்கள் ஜனரஞ்சகப் புகழ்பெற்றவை. இவருடைய சிறுகதைகளைப் போலவே நாடகங்களிலும் சமூகப் பிரதிபலிப்போ, கனமான உள்ளீடோ அமையவில்லை. குடும்பக் களன் களையே நாடகமாக்கியுள்ளார். இத்தொகுப்பிலுள்ள ஆறு நாடகங் களில் இரண்டு மட்டுமே சமூகப் பிரச்னைகள் என்று ஆசிரியரால் இனங்காட்டப்படுகின்றன. 'கன்னிப் பூக்கள்' குடும்பச் சுமைகளுக்கு அஞ்சித் திருமணம் செய்ய மறுக்கும் பெண்கள் பற்றிய நாடகமாகும். எஞ்சிய நான்கு நாடகங்களும் பொழுதுபோக்கு அம்சம் கொண்டவை; ஆகவே இலக்கிய அந்தஸ்தைப் பெறத் தகுதியற்றவை. இரு சமூகச் சிக்கல்களை நாடகமாக்கியிருப்பதாக பொன். சுந்தரராசு கூறினாலும் அவற்றில் சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தின் அடையாளமோ, பின்னணியோ, சமூகப் பிரதிபலிப்போ அமையவில்லை. ஆசிரியர் தன்னையும் அடையாளம் காட்டவில்லை.

கல்லுக்குள் ஈரம்

இந்நாடகத் தலைப்பு ர.சு. நல்லபெருமாள் (தமிழக நாவலாசிரியர்களுள் ஒருவர்; சிறந்த படைப்பாளி) அவர்களின் புதினத் தலைப்பை நினைவூட்டுகிறது. இரு குடும்பங்களை மையமாய்க் கொண்டு பின்னப்பட்ட கதை. இதனைச் சிங்கப்பூர் நாடகம் என்பதா? தமிழக நாடகம் என்பதா? இடப் பின்னணியோ, காலப் பின்னணியோ தெளிவாக இல்லாததால் மேற்கூறப்பட்ட வகையில் இரு நாட்டோடும் பொருத்திப் பார்க்கலாம். மாறுபட்ட இரு குடும்பங்களின் மூலம் கட்டுப்பாடின்றிப் பிள்ளைகளை வளர்ப்பதன் விளைவு, கட்டாயத் திருமணத்தின் விளைவு ஆகியவை வலியுறுத்தப்பட்டுள்ளன. இந் நாடகத்தில் சிங்கப்பூர்ச் சமூகப் பிரதிபலிப்பு என்ற சொல்லுக்குக் கூட இடமில்லை.

பழத்தோட்டம்

ஐந்து வானொலி நாடகங்களின் தொகுப்பான 'பழத் தோட்டத்தில்' உருவக நாடகமாக அமைவது என்னும் குறிப்புடன் இதனை வெளியிட்டுள்ளனர். பாசம் மிக்க அண்ணன் தம்பியரிடையே நடைபெறும் பாகப்பிரிவினையே கதைக் கரு. உழைப்பும், தன்னம்பிக்கையும் கொண்ட தம்பி இளங்கோ, கட்டாந்தரையை வளங்கொழிக்கும் பூந்தோட்டமாக்கி வாழ்வில் உயர்கிறான். பிரிந்த அண்ணன், தம்பி இருவரும் இறுதியில் வாழ்வில் இணைகின்றனர். நாடகத்தின் அறிமுகவுரையில் சொல்லப்பட்டிருப்பது போலச் சிங்கப்பூர்க் குடியரசின் வளர்ச்சி, சுதந்திரம் ஆகியவை உருவகமாகப் பேசப்படவில்லை. ஆசிரியர் சே.வெ. சண்முகம் கூறியிருப்பது போல உருவகத்தை உணர்த்தும் கூறுகளையும் காண முடிவதில்லை. கம்பம், ரம்புத்தான், தவக்கை ஆகிய மலாய்ச் சொற்களையும், சீனத் தவக்கை ஒருவரின் பெயர் சுட்டப்படுவதையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் இக்கதையில் சிங்கப்பூர்ப் பின்னணி தெரிவதில்லை. இக்கதை தமிழகப் பின்னணியில் எழுதப்பட்டது என்று கூடச் சொல்லலாம். இந்நாடகமும் சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தைப் பிரதிபலிக்கத் தவறிவிடுகிறது.

'அரங்கேற்றம்' என்னும் நாடகத்தைச் சமூகக் கண்ணோட்ட நாடகம் என விளம்பரப்படுத்தி உள்ளனர். இந்நாடகம் நாடகக் கலை பற்றிய நாடகமாகும். நடிப்புக் கலை, நடிகர்கள் என நாடகக் கலை தொடர்புடைய செய்திகளே இந்நாடகத்தில் கூறப்பட்டுள்ளன. நாட

கத்தைக் கலையாக மதிக்க வேண்டுமே தவிர கடைச் சரக்காக்கிவிடக் கூடாது என்னும் எதிர்பார்ப்பு இந்நாடகத்தில் ஒலிக்கிறது.

நெஞ்சிலாடும் நிழல்கள்

ராம். நாராயணசாமியின் படைப்பு 'நெஞ்சிலாடும் நிழல்கள்' என்னும் நாடகம். இது பிள்ளைகளால் புறக்கணிக்கப்படும் பெற்றோரின் நிலையைக் காட்டும் நாடகமாகும். தன் பிள்ளைகளுக்குக் கல்வி தந்து வாழ்வில் முன்னேற உதவும் தந்தை பரஞ்சோதி. மூன்று பிள்ளைகளால் ஏற்பட்ட விரக்தி காரணமாக நான்காம் பிள்ளையை அவர் வெறுக்கிறார். ஆயின் நான்காம் பிள்ளையான பாபு தந்தையின் பொருட்டுக் காதலைத் தியாகம் செய்கிறான். முதியோரைப் புறக் கணித்தல் என்னும் கருப்பொருளை மையமாய்க் கொண்டது என்பதைத் தவிரச் சமூகப் பிரதிபலிப்பு இந்நாடகத்தில் அறவே இடம்பெறவில்லை. சமூகப் பின்னணியோ, சிங்கப்பூர்ப் பின்னணியோ இந்நாடகத்தில் இடம்பெறவில்லை.

தாலி எங்கே?

சிங்கை S.V. நாதனின் படைப்பான இந்த நாடகம் முற்றிலும் தமிழகப் பின்னணி கொண்டது. சிங்கப்பூர்ப் பின்னணி சிறிதும் இடம்பெறவில்லை; இந்நாடகத்தை எழுதியவர் சிங்கப்பூரர் என்பதைத் தவிர குறிப்பிடத்தக்க வேறொன்றுமில்லை.

தலாக்

பரீட்சார்த்த நாடகத் துறையில் சிங்கப்பூரின் முன்னோடியாகவும், நவீன நாடகம் என்பது 'ஒரு நிகழ்கலையான நாடகத்தின் உள்ளுயிர் வடிவம் என்பது வாழ்வின் மகிழ்ச்சியையும், வலிகளையும் பரிமாறிக் கொள்வதாகவும், வெளிப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்' (இளங்கோவன், 1999) என்னும் கருத்துடையவராகவும் திகழும் இளங்கோவனின் படைப்பு 'தலாக்' என்னும் நாடகமாகும்.

பெண்ணியம் பேசும் இந்நாடகம் குறிப்பாகத் தமிழ் முஸ்லீம் சமூகப் பெண்களின் உரிமைக்குக் குரல் கொடுப்பதாகவும், ஆணாதிக்கச் சமூகத்தின் அடக்குமுறைகளை எதிர்த்துக் குரல் கொடுப்பதாகவும் அமைந்தது ஆகும். தமிழகத் தமிழ் முஸ்லீம் பெண்ணான நிஷாவும், சிங்கப்பூர்த் தமிழ் முஸ்லீமான சாமும் திருமணம் செய்துகொள் கின்றனர். திருமண வாழ்வைத் தொடங்கச் சிங்கப்பூர் வருகிறாள் நிஷா.

'ஊர்க்காரி', 'பட்டிக்காடு' என்றும் பழித்துரைக்கப்பட்டு, வேலைக் காரியாக இழிவுபடுத்தப்படுகிறாள். வெளியுலகத் தொடர்பு (அவளுக்கு) துண்டிக்கப்பட்டு, தன் கணவனால் பலாத்காரப்படுத்தப்பட்டு, அடி, உதை எனத் துன்புறுத்தப்பட்டு, விருப்பமில்லாமலே கருக்கலைப்புச் செய்யப்பட்டுப் பல விதத் தொல்லைகளுக்கும், சித்ரவதைகளுக்கும் ஆளாகி இறுதியில் விவாகரத்தும் பெறுகிறாள். ஒரு முஸ்லீம் பெண்ணின் துன்பத்தை மனிதநேயக் கண்ணோட்டத்துடன் எடுத்துக்காட்டும் இப்படைப்பில் தமிழ் முஸ்லீம் சமூகப் பிரதிபலிப்பும், சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகப் பிரதிபலிப்பும் ஒருங்கிணைந்து வெற்றிபெற்ற நாடகமாக இது மும்முறை அரங்கேறியது. தமிழ் முஸ்லீம் வெறியர்கள் இவருக்குத் தந்த தொல்லைகள் சொல்லுந்தரமன்று. இசுலாமிய சமய நெறிகளைத் தொடாமல் முழுக்க முழுக்க சமூகப் பிரச்சனைகளையே மையப்படுத்தியுள்ளார் நாடக ஆசிரியர். சிங்கப்பூரில் பல்லினச் சமூக அமைப்பு வழக்கில் இருந்தபோதிலும், கலப்பினச் சமூக அமைப்பு இருந்து வருவதையும் இவர் சுட்டிக்காட்டுகிறார். தமிழ் முஸ்லிமான 'சாம்' காதல் வசப்படும்போது சாதி சமய பேதங்களைக் கடந்தவனாக இந்துப் பெண்ணைத் (தேவி) திருமணம் செய்துகொள்வதும், கலப்பினச் சமூகத்தை உருவாக்குபவன் போன்று இலங்கைப் பெண்ணுடன் உறவு கொள்வதும் சிங்கப்பூர்த் தமிழனை (ஒழுக்க அளவில்) அடையாளம் காட்டுகின்றன.

மும்முறை அரங்கேறிய இந்நாடகம் 'விவாகரத்து' என்னும் சமூகப் பிரச்னையை பரீட்சார்த்த நாடக அணுகுமுறையோடும், தனிநபர் நடிப்பு போன்ற புதிய வகை உத்திகளோடும் அணுகியது. சிங்கப்பூரில் இந்திய சமூகம், குறிப்பாகத் தமிழ்ச் சமூகம் சிறுபான்மை இனமாக இருந்தபோதிலும் மணவிலக்குகளின் எண்ணிக்கை இவர்கள் மத்தியில் அதிகரித்துக்கொண்டே வருவதால் இது குறிப்பிட்ட சமூகப் பிரச்னை யாக மட்டுமன்றித் தேசியப் பிரச்னையாகவும் கால்கொண்டுள்ளது. எனவே தீவிரமான இப்பிரச்சனையைத் தமிழ்ச் சமூகப் பின்னணியில் இந்நாடக ஆசிரியர் எழுதிப் படைத்தபோதிலும்கூட ஆங்கிலேயர்கள், சீனர்கள், மலாய்க்காரர்கள் எனப் பல்லினத்தவரும் இந்நாடகத்தை வரவேற்றுப் போற்றியதை இக்கட்டுரையாளர் நன்கறிவார்.

'நவீன நாடகச் செயல்பாடும், அரசியல் செயல்பாடும் தொடர் புடையவை. அரசியல் கருத்துத் தளங்ளையும், ஆளும் வர்க்கத்தினரின் கருத்தமைவுகளையும் விசாரிக்கும் துணிச்சல் நவீன நாடகத்துக்கு உண்டு' (இளங்கோவன், 1999) என்னும் அடிப்படையில் அபாரமான

துணிச்சலோடு அரசியல், சமூக, பொருளியல் கருத்துக்களை மையமாய்க் கொண்டு அரங்கேறிய தமிழ் நாடகங்கள் ('ஊடாடி', 'மோட்சம்', 'நாய்கள்' ஆகியவை நூலுருப் பெறவில்லை) போன்றவற்றை நோக்க 'தலாக்' அவ்வளவு துணிச்சல் மிக்க படைப்பு என்று கூறிவிட முடியாது என இக்கட்டுரையாளர் கருதுகிறார்.

ஆய்வு முடிவுகள்

1. சிங்கப்பூரில் தமிழ் ஆட்சிமொழியாக இருந்தும் இலக்கியம் படைக்கும் வாய்ப்புக்குத் தமிழ் மக்களைத் தவிர வேறு புறத்தடைகள் இல்லை.

2. சிங்கப்பூரில் குடியேறிய ஆதிதிராவிடர்கள் சமூகத் தடைகளை உடைத்தெறிந்திருந்தால் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக்குரலாக ஒலிக்கும் 'தலித் இலக்கியம்' இங்கும் உருவாகியிருக்கலாம்.

3. சிங்கப்பூரைப் பொறுத்தவரை மிகப் பல எழுத்தாளர்கள் உண்மையான சமூகத்தைப் பிரதிபலிக்காததோடு மட்டுமல்லாமல் தங்களையுமே ஒளித்துக்கொள்கிறார்கள்.

4. சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்களில் மிகப் பலருக்குத் துணிச்சல் இருப்பதில்லை. உண்மையைச் சொல்லும் திறனாய்வாளர்க்கு எண்ணற்ற தொல்லை கொடுக்கவும், படைப்பிலக்கியவாதிகளைச் செயலற்று முடக்கிவிடத் துணிவதற்கும் வேண்டிய அழிவுமனம் நிரம்பவே உண்டு.

5. திரு. இளங்கோவன் சிறுபான்மைச் சமூகத்தின் தொண்டனாக இருந்து பல இலக்கிய வகைகளிலும் சமூகப் பிரதிபலிப்பைக் கையாளும் ஓர் இலக்கியவாதி ஆவார். அவருடைய துணிச்சல் நம்மை வியக்க வைக்கும்.

6. சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் பலர் தம்மைக் 'கீழ்ச்சாதி' என்னும் அடிமட்டப் போர்வையிலிருந்து விடுவித்துக்கொள்வதற்காகவும், சமூக அந்தஸ்து மாற்றத்தின் அடையாளமாகவும் எழுத்துப் பணியைக் கொண்டிருக்கிறார்கள்.

7. இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படையான இலக்கியத் திறனாய்வுத் துறையில் ஆய்வாளர் சிலர் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதையும், முனைவர் பட்ட ஆய்வு போன்ற முயற்சிகள் அவர்கள்

'விரும்பியதைக்' கொடுக்கும் 'காமதேனுவாக' விளங்குவதையும் காண முடிகிறது. பாரபட்சமான ஆய்வுகளுக்கும் இங்கு பஞ்சமில்லை.

8. பேராசிரியர்கள் தொடங்கிச் சாதாரண எழுத்தாளர்கள் வரையும் இலக்கியத் திருட்டும், கருத்துத் திருட்டும் அவர்களை 'ருசி கண்ட பூனைகளாக்கி விட்டன'.

9. குடியேறிகளே 'தேசிய இலக்கியம்' வேரூன்ற மூல காரணர்களாய் விளங்கினர்.

10. தொடக்க காலப் பயண நூல்களில் நிரம்பி வழியும் சமூகப் பிரதிபலிப்பு கூடத் தற்கால மரபுக் கவிதைகளில் இடம்பெறவில்லை. மரபுக் கவிதைகளில் செக்குமாட்டுப் போக்கு அதிகம். முருகியல் உணர்வைக் கூடப் பெரும்பாலானவை தரவில்லை.

11. 'மண்ணின் மணம்', 'சிங்கப்பூர்ப் பின்னணி' போன்ற சொற்கள் உதட்டளவில் எழுத்தாளர்களைக் கவர்ந்துள்ளதால் அவை அவர்களின் ஜெபங்களாகிவிட்டன. ஆனால் உண்மையில் மரபுக் கவிதைகளில் அத்தகைய மந்திரச் சொற்களுக்கு இடமில்லை.

12. குடியேறிய நாடுகளில் விசுவாசமும் நிலைபேறும் கருதி அரசியல் தலைவர்களைப் புகழ்வதும், நாட்டைப் புகழ்வதும் தவிர்க்க முடியாத போக்குகளாகிவிட்டன.

13. இளங்கோவன், லதா ஆகியோரின் கவிதைகளில் தமிழ்ச் சமூகப் பிரதிபலிப்பு சிறப்பாக அமைகிறது.

14. சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்கள் மிகப் பலரும் தங்கள் சார்பு நிலையைக் காட்டிக்கொள்வதில்லை.

15. சொந்த சமூகத்தை நன்கு ஊடுருவிப் பார்க்க முடியாதவர்கள் எவ்வாறு சீன, மலாய் சமூகங்களை ஊடுருவிப் பார்ப்பார்கள்? எனவே Prototype என்று சொல்லக்கூடிய வகைமாதிரிகளையே படைத்துள்ளனர்

16. சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் பலர் சமூக மாற்றம் என்பதை வெறும் புறநிலை மாற்றமாகவே கருதுகிறார்கள்.

17. இளங்கண்ணன் அடிமட்டத்தினரின் பிரச்னைகளை அழகுறக் கையாண்டுள்ளார். 'அலைகள்' என்னும் நாவலைத் தவிர எஞ்சிய படைப்புகள் அனைத்திலும் சமூகப் பிரதிபலிப்பு செவ்வையாய் அமைந்துள்ளது.

18. கண்ணபிரானின் படைப்புகள் தேசியப் பிரச்னைகளை ஆராய்வதோடு சமூகப் பிரதிபலிப்பைப் பாத்திரங்கள் வாயிலாகவும், ஆசிரியர் வழியாகவும் காட்டுகின்றன.

19. நா. கோவிந்தசாமி சமூக அக்கறையுடன் எழுதினாலும் தப்பித்துக் கொள்ளவே (ஒரு escapist ஆகவே) விரும்புகிறார். சமூகப் பிரதிபலிப்பைக் காட்டும்போது தன்னை இனம்காட்டிக் கொள்வ தில்லை.

20. நாடக நூல்களிலும் இளங்கோவனே நவீன நாடகப் பாணியில் சிறுபான்மைச் சமூகப் பிரதிபலிப்பைத் துணிச்சல் மிக்க படைப்புகளின் வழி வெளிப்படுத்துகிறார்.

(2000தில் சென்னையில் நடந்த 'தமிழ் இனி' மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை)

•

சிங்கப்பூர்ப் படைப்பிலக்கியத் துறையில் பெண்களின் பங்களிப்பு

பல்லினச் சமுதாயமாக வாழும் சிங்கப்பூரில் மற்ற சமூகங்களான சீன, மலாய் சமூகங்களோடு ஒப்பு நோக்கினால் தமிழ்ச் சமூகத்தில் குறிப்பாக இலக்கியத் துறையில் பெண்களின் பங்களிப்பு மிகவும் சொற்பமே. விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே சிங்கப்பூர்ப் பெண் எழுத்தாளர்கள். சிங்கப்பூர் மண்ணிலேயே பிறந்து, இங்கேயே எழுத்தாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் மிக மிகக் குறைவு. மலேசியா, தமிழ்நாடு ஆகிய நாடுகளினின்று இங்கு வந்து நிரந்தரவாசிகளாயும், சிங்கப்பூர்க் குடிமக்களாக மாறியும் பெண் எழுத்தாளர்கள் எழுதி வருகின்றனர். சிங்கப்பூரில் தமிழ் மொழியில் எழுதும் பெண் எழுத்தாளர்களுள்ளும் ஒரு சிலர் தவிர எஞ்சியோர் போட்டிகளுக்கு எழுதுவதைத் தொழிலாகவே மேற்கொண்டுள்ளனர். போட்டிகளுக்கு எழுதிப் பரிசைப் பெறுவதோடு 'மழையில் பூத்த காளான்கள் போல' இப்பெண் எழுத்தாளர்கள் காணாமற் போய்விடுகின்றனர். இன்னுஞ் சிலர் பத்திரிகைகளுக்கு எழுதுவதோடு நின்றுவிடுவர். சொந்தப் பணத்தைச் செலவழித்து நூல் வெளியீடு செய்யும் உயர்ந்த எண்ணம் இங்குள்ள பெண் எழுத்தாளர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. பிறரின் பொருட்செலவில் நூலை அச்சிட்டு வெளியிடத் தயங்காத மனநிலை பரவலாக இங்கே காணப்படுகிறது.

படைப்பிலக்கியத் துறையில் சிறுகதை, கவிதை, புதினம், நாடகம் ஆகிய துறைகளில் பெண் எழுத்தாளர்கள் எழுதி வருகின்றனர். இவற்றுள் நூலுருப் பெற்றவை கீழ்வருமாறு:

சிறுகதைத் தொகுப்புகள்

1. வசந்தத்தின் வாசலிலே - சங்கரி இராமானுஜம், 1984
2. உறவுகள் - திருமதி கண்ணம்மா, 1990

3. நவமணி - லெட்சுமி தனகோபால், 1990

4. புதியவர்களின் சிறுகதைகள் - ரத்னாவதி, பாலமலர், 1990

5. கண்ணாடி நினைவுகள் - சீதாலட்சுமி, 2001

புதினம்

1. மேற்கே உதிக்கும் சூரியன் - ரத்னாவதி, 1989

கவிதைத் தொகுப்புகள்

1. இளவேனிற் பூக்கள் - திருமதி பார்வதி பூபாலன், 1997

2. தீவெளி - கனகலதா, 2003

பொதுவாகச் சிங்கப்பூர்ப் பெண் எழுத்தாளர்கள் எல்லாருமே பதின்ம வயதில் எழுதத் தொடங்கிவிட்டதாகப் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். இன்னும் சொல்லப்போனால் தங்களின் எழுத்தார்வம் அரும்பத் தொடங்கியதைத் 'தங்களின் அடையாளமாக'க் காட்டிக் கொள்கின்றனர். இதன் விளைவாக அனுபவ முதிர்ச்சி இல்லாத படைப்புக்களே வெளிவந்துள்ளன. இதற்கு விதிவிலக்கு கனகலதா என்னும் பெண் கவிஞர். இவரிடம் நல்ல கவித்திறனும், ஆழமான பார்வையும், தரமான சிறுகதைகளைப் படைக்கும் ஆற்றலும் உண்டு.

சங்கரி இராமனுஜம்

இவர் 1980களில் எழுதத் தொடங்கியவர். 'தமிழ் முரசு', 'தமிழ் மலர்', சிங்கப்பூர் ஒலிப்பரப்புக் கழகம் ஆகியவற்றால் இவருடைய எழுத்தார்வம் வளர்ந்தது. சமூக சேவகியாகத் திகழ்ந்த இவர் உண்மைச் சம்பவங்களையே கதைகளாகப் படைக்க முயன்றுள்ளதாகத் தெரிவித் துள்ளார். இவருடைய எழுத்தார்வத்தை மதிக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. ஆனால் சிறுகதை எழுதுவது என்னும் திறன் - ஆற்றல் - கலை இவருக்குக் கைவரப் பெறவில்லை என்பது தெளிவாகப் புலனாகிறது. இவர் எழுதிய பதிமூன்று கதைகளைக் கதைகள் என்று அழைக்க முடியாது. பாத்திரப் பெயர்கள், இடப் பெயர்கள் போன்ற வற்றை நீக்கிவிட்டுப் படித்தால் கட்டுரைகளைப் படிப்பது போன்ற உணர்வே ஏற்படும். சிங்கப்பூரில் முதன்முதலாகத் தமிழில் தான் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்ட பெண்மணி என்று இவரை அழைக்கலாமே தவிர 'சிறுகதை எழுத்தாளர்' என்று

அழைப்பது கூடப் பொருந்தாது. இந்நூலின் முகவுரைகள் கூடப் புகழுரைகளும், மிகையுரைகளுமே! வெறும் சம்பவக் கோர்வைகளை, அவற்றிலும் கூடச் சில முரண்பாடுகளோடு, செயற்கையாகச் சிங்கப்பூர்ப் பின்னணியை வலிந்து புகுத்தியுள்ளதையும் இவரது கதைகளில் நாம் காணலாம். 'தியாகத் திருவிளக்கு'களின் கதாபாத்திரங்களில் கதையாசிரியருக்குக் குழப்பம் ஏற்பட்டுள்ளது. சிறுகதை எழுத்தாளராக முயன்ற இவர் கட்டுரை நூலாசிரியராகத் தோற்றமளிக்கிறார் என்று கூறுவது தவறாகாது. சிங்கப்பூர் தனது இருபத்தைந்தாவது நாட்டு நிர்மாணப் பணியைக் கொண்டாடிய வேளையில் சமூக சேவகியான இவர் தனது நூலை வெளியிட்டுள்ள ஆர்வத்தைப் பாராட்டலாம் என்பதைத் தவிர வேறு எதுவும் விசேஷமான சிறப்பு அம்சம் கிடையாது.

திருமதி கண்ணம்மா

சிங்கப்பூரிலேயே பிறந்து வளர்ந்த இவர் வானொலி நாடகங்கள், சிறுகதைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார். 'பொன்விலங்கு', 'நாலுகால் மண்டபம்', 'என் கண்ணின் பாவை அன்றோ' போன்ற தொடர் நாடகங்களையும், 'நதிக்கரையோரத்து நாணல்', 'ஈரவிழிக் காவியங்கள்' முதலிய ஏழு தனி நாடகங்களையும் எழுதியவர். வானொலியின் கோரப் பசிக்கு இரை போட்டு எழுத்தாளராக உருப்பெற்றவர். 'இசை சொல்லும் கதை', 'காட்சியும் கானமும்' போன்ற கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். சிங்கப்பூரின் இருபத்தைந்தாவது ஆண்டு வெள்ளி விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி இந்தியர் பண்பாட்டு விழா ஏற்பாட்டுக் குழுவினரால் வெளியிடப்பட்டது 'உறவுகள்' என்னும் இச்சிறுகதைத் தொகுப்பு நூல். பாச உணர்வை மையமாகக் கொண்டும், கல்வியில் ஒரு பெண்ணுக்கு இருக்கும் ஆர்வத்தை மையமாக வைத்தும், முதியோர்களின் ஆதரவற்ற நிலையை மையமாய்க் கொண்டும், திசை மாறிச் செல்லும் மாணவன் ஒருவனைத் தத்தெடுத்து வளர்க்கும் தமிழாசிரியர் ஒருவரை மையமிட்டும், நாட்டுப்பற்றைக் கருவாகக் கொண்டும், ஒரு பெண்ணை மற்றொரு பெண்ணே கேவலப்படுத்தும் இழிநிலையைக் கருவாக்கியும், சிறுவர்களைப் பார்த்துப் பெரியவர்கள் திருந்துவதைக் கருவாக்கியும், முதியோர் இல்லத்தில் வாழும் பாட்டியைப் பற்றியும், பாசம், பரிவு, தியாகம் போன்ற குணங்களைச் சித்திரிக்கும் வகையிலும் கதைகளை எழுதியுள்ளார். நற்குணங்களை வலியுறுத்தி எழுதும் இவரது கதைகளில் செயற்கை முலாம் நிறையவே பூசப்பட்டுள்ளது. பிரசாரம் செய்யும் போக்கும், 'சினிமாத்தனமும்'

நிறையவே உள்ளன. இவருடைய கதைக்கருக்கள் மிக மிகக் குறுகிய வட்டத்திற்குள் சுழல்பவை. சிங்கப்பூர் வானொலிக் கழகம் எழுத்தாளர்களுக்குச் சன்மானம் தந்திராவிட்டால் கண்ணம்மா போன்றவர்கள் எழுதியிருப்பார்களா? என்ற ஐயம் எழுவது இயல்பே!

திருமதி லெட்சுமி தனகோபால்

இவர் லெட்சுமி வீரப்பன் என்ற பெயரிலும் எழுதி வருகிறார். தமிழாசிரியராகப் பணிபுரியும் இவர் 'தமிழ் மலர்', 'தமிழ் முரசு' ஆகிய நாளேடுகளாலும், சிங்கப்பூர் வானொலிக் கழகத்தாலும் தன் எழுத்தார்வத்தை வளர்த்துக்கொண்டவர். போட்டிகளில் பரிசு பெறுவதற்கென்றே எழுதுபவர். 'நவமணி' என்னும் இவரது சிறுகதைத் தொகுப்பு நூல் சிங்கப்பூரின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி இந்தியர் பண்பாட்டு மாத விழாக் குழுவினரால் வெளியிடப் பட்டது. ஒன்பது சிறுகதைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. தாய்ப்பாசம் ('பெற்ற மனம்'), முதியோர் பிரச்னை ('யாருக்காக அழுகிறேன்'), குழந்தையுடன் நேரம் செலவழிப்பது ('ஒரு தாயின் நிம்மதி'), மேல்நாட்டு நாகரிக மோகமும் தமிழ்ப் பண்பாடும் ('படிப்பினை'), வேற்றுமையில் ஒற்றுமை ('நமது செல்வங்கள்'), தம்பி தங்கைகளுக்காகத் தன் வாழ் நாளையே அர்ப்பணித்த அண்ணன் புறக்கணிக்கப்படுதல் ('இதுதான் உலகம்'), மனவளர்ச்சி குன்றிய தங்கைக்காகத் தன் மணவாழ்வைத் தியாகம் செய்தல் ('ஒரு மரம் நிழலைத் தேடுகிறது'), வாடகை உந்து வண்டி ஓட்டுநர் நேர்மையுடன் செயல்படுதல் ('சொந்தம்'), மருமகளால் கொடுமைப்படுத்தப்படும் மாமியார் ('வாழப் பிறந்தவள்') என்னும் கருக்களைக் கொண்டு கதை எழுதியுள்ளார்.

மற்ற பெண் எழுத்தாளர்களோடு ஒப்பிடுகையில் இவரிடம் கதை சொல்லும் கலை மிகச் சிறிதளவு இருக்கிறது. எனினும் சில இடங்களில் இவர் தவறான தகவல்களையும் எழுதுகிறார். (எ.டு. ஒரு மரம் நிழலைத் தேடுகிறது) தங்கை சாந்தி இளம்பிள்ளைவாதத்திற்கு ஆளானாள் என்று எழுதும் இவ்வெழுத்தாளர் சாந்தியை மனவளர்ச்சி குன்றியவள் என்று வருணிக்கிறார். இது குழப்பமான பகுதி. மேலும் 'பெற்ற மனம்' கதையில் முனியம்மாவின் மகன் மாரியப்பன், 'ரிப்போர்ட் புக்குல சிவப்பு மார்க் இருந்த இடத்துல எல்லாம் நீல மார்க்ல எழுதி உன்னை ஏமாத்தினேன்' என்று எழுதுகிறார். இது எந்த அளவுக்கு நம்பகமான தகவல் என்ற சந்தேகம் தோன்றுகிறது. இவர் தமிழாசிரியராகக் கதை எழுதுவதால் கட்டுரை பாணியில் கதையின் முடிவுகளை அமைப்ப தோடு, 'பொறியாளர் பணி', 'புசித்தான்' போன்ற சொல்லாட்சிகளைப் பயன்படுத்தி ஒரு விதமான செயற்கைத் தன்மையை உருவாக்கியுள்ளார்.

இப்படிப்பட்ட சொற்கள் இயல்பான கதையோட்டத்தைத் தடை செய்யும் தன்மையுடையவை.

இவரது 'நமது செல்வங்கள்' என்னும் கதை 'அப்பட்டமான' திருட்டுக் கதை. மறைந்த மூத்த எழுத்தாளர் சே.வெ. சண்முகத்தின் 'சிங்கப்பூர்க் குழந்தைகள்' என்னும் கதையை வரிக்கு வரி திருடியிருப்ப தோடு ஒரு சில வார்த்தைகளை மாற்றிக் கதையை வெளியிட்டுள்ளார். சே.வே. சண்முகத்தின் 'பொரிவிளங்காய் உருண்டை' லெட்சுமி தனகோபாலிடம் 'கெட்டி உருண்டையாகிறது'. சே.வெ. சண்முகம் காட்டும் 'சட்டைக்காரர்' லெட்சுமி தனகோபாலிடம் 'மலாய்க்காரர்' ஆக மாறுகிறார். சே.வே. சண்முகத்தின் கதையில் 'மீன் வளர்ப்பவர்' லெட்சுமியிடம் 'நாய் வளர்ப்பவராக' மாறுகிறார். மேலும் 'வாழப் பிறந்தவள்' என்னும் கதைத் தலைப்பு பி. கிருஷ்ணனின் கதைத் தலைப்பை நினைவூட்டுகிறது. இதன் கதை வேறு என்றாலும் தலைப்பை வேறு விதமாக ஏன் மாற்றவில்லை? என்ற வினா எழுகிறது. இந்த எழுத்தாளர் கதையைத் திருடிச் 'சாமர்த்தியமாக' மாற்றியிருந்தாலும் அதனை டாக்டர் ஆ. வீரமணி போன்றவர்கள் நூலாக வெளியிடும் படித் தூண்டியிருப்பது திருட்டுப் படைப்புகளுக்கு அங்கீகாரம் அளித்து உரம் சேர்ப்பது போல உள்ளது. நூல் வெளியீட்டுக் குழுவினராகச் செயல்படுவோர் இனிவரும் காலங்களில் இத்தகைய இலக்கியத் திருட்டுகளை ஊக்குவிக்கக் கூடாது. அப்போதுதான் படைப்பிலக்கியம் ஆரோக்கியமாக வளரும்.

ரத்னாவதி & பாலமலர்

இவர் 'மேற்கே உதிக்கும் சூரியன்' என்னும் புதினத்தை எழுதியவர். இவருடைய சிறுகதைகள் 'புதியவர்களின் சிறுகதைகள்' என்னும் நூலாக சிங்கப்பூரின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி வெளியிடப் பட்டது. 'தரகன்' என்னும் கதை இந்து சமயத்தை இழிவுபடுத்தும் தோரணையில் எழுதப்பட்ட கதை. சமயத்தின் பெயரால் நிலவும் சில மூடநம்பிக்கைகளும், இந்து சமயப் பழக்க வழக்கங்களும் இவருக்குக் கேலிப்பொருளாகியுள்ளன. இன இணக்கத்தையும், சமய நல்லிணக் கத்தையும் 'கண்ணின் மணியெனக்' காத்துவரும் சிங்கப்பூரில் இப்படிப் பட்ட கதைகளை வெளியிடுவது எப்படிச் சாத்தியமானது? என்று வியக்கத் தோன்றுகிறது. 'நாளை மனிதன்' என்னும் கற்பனைக் கதையிலும் இந்து சமயம், இந்துக் கடவுளர்கள், இந்துக்களின் நம்பிக்கைகள் ஆகியவை கேலிப்பொருள்களாகி உள்ளன. ரத்னாவதி இந்து சமயத்தைக் கேலி செய்யவே கதை எழுதினாரா?

பொதுவாகச் சிங்கப்பூரில் தமிழாசிரியர்கள் அரசாங்கத்தின் நல்ல சம்பளக் கொள்கையால் மதிப்பைப் பெற்றிருந்தாலும் மாணவர்களால் மதிக்கப்படுவது என்பது 'அத்தி பூப்பது' போன்றதே. தமிழாசிரியர் மாணவனை வெறுப்பதும், மாணவன் தமிழாசிரியரை வெறுப்பதும் இவ்வெழுத்தாளரின் 'சாரும் காரும்' என்னும் கதையின் மூலம் நிதர்சன மாகக் காட்டப்படுகின்றன. நந்தினி என்னும் கெட்டிக்கார மாண வியைத் தமிழாசிரியர் பழிவாங்கும் சந்தர்ப்பங்கள் உண்மைச் சம்பவங்களாக உருமாறியுள்ளன. நந்தினி பணக்கார மாணவியாக இருப்பதும், நாளுக்கொரு காரை அவளே ஓட்டி வருவதும் தமிழாசிரி யரின் வறுமை நிலையோடு ஒப்பிடப்பட்டு அவருடைய தாழ்வு மனப் பான்மை நந்தினியின் மீது கொண்ட துவேஷத்தை விசுவரூபம் கொள்ள வைப்பதும் உண்மையாகவே சித்திரிக்கப்பட்டுள்ளன. கட்டொழுங்கு நடவடிக்கைகளைப் புறக்கணிப்பது போல மாணவர்கள் 'ஹைலைட் டையிங்' செய்துகொண்டு வருவதாக எழுதியிருப்பது நம்பகமான தகவலாகத் தெரியவில்லை. ஒரு மாணவியின் உள்ளக் குமுறலும், பழிவாங்கப்படும் நிலையும் இக்கதையில் மாணவர் என்ற கண்ணோட்டத்தில் கச்சிதமாக வந்து விழுகின்றன. தமிழாசிரியர் பற்றிக் குறைகூறும் இக்கதை பத்திரிகைகளில் வெளிவந்திருந்தால் இவரின் மீது சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கம் நடவடிக்கையே எடுத்திருக்கும்! 'சாரும் காரும்' என்ற கதை எழுத்தாளரின் துணிச்சலைக் காட்டுவதாக, உண்மைச் சம்பவங்களுக்கு உருவம் கொடுத்திருப்பதாக அமைந்தாலும் தமிழாசிரியரைப் பழிவாங்கும் மூர்க்கத்தனமான நோக்கில் எழுதப் பட்டிருக்கிறது. ஆசிரியர் மீது சேற்றை வாரியிறைத்துவிட்டு வாகனத்தை வேகமாக ஓட்டுவதாகக் கதையை முடித்திருப்பது ஆசிரியர் மீது சமூகம் வாழையடி வாழையாகக் காட்டும் மதிப்பை, மரியாதையை ஆட்டங் காணச் செய்துள்ளது. தனது பள்ளி அனுபவத்தை அடிப்படையாய் வைத்து கதையை உருவாக்கியிருக்கிறார் என நினைக்கத் தோன்றுகிறது.

'மகனே! மகனே!' என்னும் கதை வழக்கறிஞர் பற்றிய கதை. நம்ப முடியாத தடத்தில் கதை செல்கிறது. உண்மைக்காக வாதாடும் ரகுராமன் என்ற வக்கில் தந்தையின் நண்பருக்காக வாதாட மறுத்துத் தந்தையைப் பகைத்துக்கொள்வதாகக் கதையை அமைக்கிறார். பிரகலாதனுக்கும், இரணியனுக்கும் நடந்த போராட்டம் போல ரகுராமனுக்கும் அவனுடைய தந்தை பாலச்சந்தருக்கும் போராட்டம் நடப்பதாகக் காட்டியுள்ளார். பணவேட்கைச் சமூகமாக மாறிவரும் சிங்கப்பூர்ச் சமூகத்தில் மனசாட்சிப்படி நடக்கும் வக்கில் ரகுராமன் புதிய முன்மாதிரி என இந்த எழுத்தாளர் நினைத்தார் போலும்!

வடிவங்கள்' என்னும் கதை எயிட்ஸ் நோயாளி ராஜ் என்பவரை மையமாகக் கொண்ட கதை. அவருக்கு மருத்துவம் பார்க்கும் மருத்துவர் 'வெங்கட ராவ்'ஐக் காதலிக்கும் ஆர்த்தி எயிட்ஸ் நோய் பற்றி ஒன்றுமே தெரியாதவளாய், அந்த நோய் தன் காதலராகிய மருத்துவருக்கும் வந்துவிடும் என்று கதையாசிரியர் எழுதுவது அறிவுக்குப் பொருத்த மாகத் தோன்றவில்லை. இக்கதையில் ஆசிரியர் நன்றாகவே 'சரடு விட்டிருக்கிறார்'.

ஜீவா என்பவன் பல பெண்களை ருசி பார்க்கும் குணம் உடையவன். இவனை நம்பி மோசம் போகும் ஒரு பெண் இவனுடைய 'மூன்று முகங்களை' எண்ணிப் பார்க்கிறாள். 'மூன்று முகம்' என்னும் கதை மிகச் சாதாரணமான கதை என்றாலும் நடப்பியலில் ஜீவா போன்ற மனிதர்கள் இருப்பதைக் காட்டுகிறது.

'இராஜ்ஜியம்' என்னும் கதை குடும்பத்தில் தனக்கு இருக்க வேண்டிய இடம், அதிகாரம் ஆகியவற்றை இழந்து மனநோயாளியாக மாறும் லெட்சுமி பற்றிய கதை. வழக்கமான 'மாமியார் மருமகள்' கதைதான். ஆயினும் மருமகள் சற்று வித்தியாசமானவள்! மாமியார் - மருமகள் கொடுமை இக்கதையில் இல்லை. மாமியார் 'இராஜ்ஜியம்' பெற நினைக்கிறாள். ஆனால் மருமகள் இராஜ்ஜியத்தைப் பெற்று விடுகிறாள்.

'மாங்கல்யம்' என்னும் கதையில் முதிர்கன்னி ஒருத்தியின் பிரச்னையைப் பெண்ணிய நோக்கில் அணுகியுள்ளார் எழுத்தாளர். 'உண்மையில் கல்யாணம் ஆகாத கன்னிப்பெண்கள் பரிதாபத்திற்குரிய விதவைகள் என முதிர்கன்னிகளை விதவைகளோடு ஒப்பிட்டு எழுதியுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதே. சிங்கப்பூர்ச் சமூகம் பற்றி அறிந்துகொள்ள, பெண்களின் நிலை பற்றி அறிந்துகொள்ள 'மாங்கல்யம்' என்னும் இக்கதை எவ்வளவு தூரம் பயன்படும்? பெண்களின் பிரச்னை இக்கதையில் இலேசாகக் கோடிட்டுக் காட்டப் பட்டுள்ளது.

பாலமலர்

இவர் எழுதிய 'உறவு', 'முள்ளிருக்கும் ரோஜா', 'சந்திப்பு', 'பொருத்தம்' ஆகிய நான்கு கதைகளில் முதல் இரண்டும் காதல் பற்றியவை. கதையமைப்பு சரியில்லாதவை. சிங்கப்பூரில் விடுதலைக்குப் பிறகு இல்லாத ஜாதிப் பிரச்னை வலியப் புகுத்தப்படுகிறது. பெண்களின் சமவுரிமை, வரதட்சணை போன்ற விஷயங்களுக்காகக் கதையமைப்பு

ஒழுங்காக இல்லாத கதைகளை எழுதியுள்ளார். [illegible] சிறுகதை எழுதுவதும், குழந்தை தத்தித் தத்தி நடக்க முயல்வதும் ஒன்றுதான். சிறுகதை எழுதுவது ஒரு கலை என்பது இவருக்குப் புரியவில்லை. உயர்நிலைப் பள்ளிகளில் 'ஓ லெவல்' எனப்படும் சாதாரண நிலைப் பொதுச் சான்றிதழ்த் தமிழ்த் தேர்வில் கேட்கப்படும் கேள்விக்கு எழுதிய கதைகளைப் பிரசுரித்தாரா? என்ற ஐயம் இவருடைய கதைகளைப் படிக்கும்போது பிறக்கிறது.

சீதாலட்சுமி

இவர் எழுதிய கதைகளுள் முதல் எட்டும் தமிழ்நாட்டில் பல்வேறு போட்டிகளுக்காக எழுதப்பட்டவை. பின்னர் உள்ள ஏழு கதைகளும் சிங்கப்பூரில் வாழுங்காலத்தில் எழுதப்பட்டவை. சிங்கப்பூர்ப் படைப்பிலக்கியத் துறையில் இவரும் பரிசுக்காகக் கதை எழுதும் பழக்கம் உடையவர். 'அம்மா எப்போ வருவாங்க' என்ற கதை 'தமிழ் முரசு'வில் 1991இல் வெளிவந்தது. சிங்கப்பூர்ச் சூழலில் விடலைப்பருவ எழுத்துக்கள் விபரீதமானவையாகப் போனது போல இவர் முனைவர் பட்டம் பெற்றிருந்தும் கூட விபரீதமாகக் கதை எழுதிறார். இவருடைய 'அம்மா எப்போ வருவாங்க' என்ற கதை அபத்தமான கதை. மக்கள் தொடர்புச் சாதனங்களைப் பற்றி முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்ட இவர், அதிலும் குறிப்பாகத் 'தமிழ் முரசு'வில் வேலை செய்த இவ்வெழுத்தாளர் சிறுகதை எழுதும் விஷயம் தொடர்பாகத் தகவல் திரட்டுவதில்லை என்பது இக்கதையைப் படித்த மாத்திரத்தில் வெட்ட வெளிச்சமாகிறது. சிங்கப்பூரில் வாழும் பத்து வயதுச் சிறுவனுக்குக் கூடப் போரில் பயன்படுத்தப்படும் குண்டுகள் பற்றித் தெரிந்துள்ளது. கணினி விளையாட்டுகள், ஆங்கிலத் திரைப்படங்கள், ஆங்கிலப் புத்தகங்கள் ஆகியவற்றின் வழி துப்பாக்கிகள், அவற்றில் பயன்படுத்தப்படும் குண்டுகள் போன்ற பல விஷயங்களைச் சிறுவர்கள் தெரிந்து கொள்கிறார்கள். அப்படியிருக்க இவர் ஆராயாமல் 'கதை விட்டிருப்பது' தெரிகிறது. இனிமேலாவது வாசகர்களை மடையர்களாகக் கருதிக்கொண்டு கதை எழுதும் போக்கை இவர் கைவிடுவது நல்லது. இக்கதை 'வளைகுடாப் போரை' மையமாய்க் கொண்டு எழுதப்பட்ட கதை. வளைகுடாப் பிரச்சனையைச் சமாளிக்க அமெரிக்கப் படைகள் அங்கு சென்றபோது கதையில் வரும் மேரியும் செல்கிறாள். 'ஆர்மியில் அண்டர் ஆபீசர்' என்று மேரியை அறிமுகப்படுத்தியிருப்பதும் உண்மைதானா என்பது சிந்திக்க வேண்டிய விஷயம். பொதுவாகப் போர்க்களத்தில் பெண்கள் இராணுவப் படை வீரர்களாகத் துப்பாக்கி ஏந்திச் செல்வதில்லை. அதுவும் இக்கதை

எழுதப்பட்ட 90களில் இந்நிலை அறவே இல்லை. இராணுவ வீரர் என்றில்லாமல் பெண்கள் மருத்துவர், தாதி போன்ற வேறு மாதிரியான சேவைகளை இராணுவத்தில் செய்திருக்கிறார்கள். தமிழ்ப் பெண்கள் வீரப் பெண்மணிகள் என்னும் புறநானூற்றுக் கால வாழ்வை மனத்தில் நினைத்து மேரியை இவ்வெழுத்தாளர் உருவாக்கினார் போலும்! மேலும் மேரியைச் சாகடிக்கும் பகுதியில் 'என் மேரி... துப்பாக்கிக் குண்டுக்கு உணவாகிவிட்டாள். சிதைந்த, பிய்ந்த உடலுடன், பளிச் சென்று திலகமிட்ட முகத்துடன் சிரித்தபடி இருந்தாள்... கழுத்தில் நான் வாங்கித் தந்த சங்கிலியை அணிந்தபடி இருந்த அவள் உடல் கழுத்துக்குக் கீழே கருகி ரத்தக் குருதி படிந்து துண்டு துண்டாய்க் கிடந்தது' என்று ஆசிரியர் வருணிப்பது அபத்த மாகவும், 'தத்துப்பித்தென்று' உளறுவதாகவும் உள்ளது. இராணுவ வீரர்கள் 'Dog tag' எனப்படும் அடையாள அட்டை அணிவது வழக்கமே தவிர தங்கச் சங்கிலி அணிய முடியாது. அப்படியிருக்க மேரி தங்கச் சங்கிலி அணிவதாக எழுதுவதை எப்படி நம்ப முடியும்? மேலும் உடலைப் பிய்த்து எறியக்கூடிய 'shot gun' இராணுவத்தில் பயன்படுத்தப் படும் வழக்கமில்லையே? Bazuka, Grenade, Motar போன்ற குண்டுகள் உடலைத் துளைத்துக் கருக்க முடியும். ஆனால் இவை ராக்கெட் சார்ந்த குண்டுகளே, துப்பாக்கிக் குண்டுகள் அல்ல. இப்படி உண்மையான விஷயங்கள் பலவற்றைத் தெரிந்துகொள்ளாமலேயே இவ்வெழுத்தாளர் 'காதில் பூ வைப்பது' போலக் கதை எழுதியுள்ளார். தன் அறியாமையை வெளியிடுவதோடு வாசகர்களையும் அறிவிலிகளாக நினைத்துக் கதை எழுதியுள்ளது வேதனையும் வெட்கமும் தருவதாகும். சிறுகதையில் சொற்செட்டு மிகவும் முக்கியம். ரத்தக் கறை படிந்த உடல் என்பதுதான் வழக்கம். ரத்தமும் குருதியும் ஒன்றுதான் என்பதை ஆசிரியர் மறந்தாரா? இராணுவ வீரரின் பிரேதம் உள்ள சவப்பெட்டியைக் 'கணவனாக இருந்தாலும்' திறக்க முடியுமா? மேரியின் 'கணவன் திறந்து பார்த்தான்' என்று எழுதுவது பொருந்துமா? மேரியின் கணவன் அவள் சாவை எண்ணி 'என் மேரி சாகும்போது எப்படியெல்லாம் துடித்திருப்பாள்? என்னவெல்லாம் நினைத்திருப்பாள்? எப்படியெல்லாம் அலறி இருப்பாள்?' என்று அழுது புலம்புகிறான். இப்புலம்பல் ஒரு சாதாரணப் பெண்மணியின் இறப்புக்கு ஒத்துவரலாம். ஆனால் போரில் இறந்ததாக எழுதப்படும் ஒரு பெண்மணிக்கு ஒத்துவரும் புலம்பல்களா? போர் வீரனின் வாழ்வு நிச்சயமற்றது; மரணத்தை மகிழ்ச்சியோடு ஏற்று நாட்டுக்காக வீரமரணமடைவது அவனின் இலக்கு. அப்படி உயரிய இலக்குடைய ஒருவர் இறந்தபோது புலம்புவது அப்பாத்திரப்

படைப்பை இழிவுபடுத்துவது என்பது இவ்வெழுத்தாளருக்குப் புரியவில்லை போலும்! 'மெலோடிராமா' பாணியில் - தமிழ் சினிமா பாணியில் மேரியின் கணவனைப் புலம்ப வைத்துள்ளார். தாயை இழந்த ஒரு குழந்தையைத் தந்தை வளர்ப்பதில் உள்ள சிரமங்களைப் புரிய வைப்பதற்காக இவ்வெழுத்தாளர் தனக்குத் தெரியாத துறையை எடுத்துக்கொண்டு ஆழமான ஆராய்ச்சி எதுவும் மேற்கொள்ளாது மேரியை வளைகுடாவுக்கு அனுப்பிச் சாகடித்துச் சிரமப்பட்டிருக்க வேண்டாம்! கதையைக் கேலிக்குள்ளாக்கியிருக்கவும் வேண்டாம்!

'கண்ணாடி நினைவுகள்' என்னும் கதை தங்க முனை விருதுப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கதை. சிங்கப்பூர்ப் பின்னணியைக் காட்டப் பெருவிரைவு ரயில் நிலைய ஆங்கில அறிவிப்பை சிவசங்கரி எழுதுவது போல அப்படியே ஆங்கிலத்தில் எழுதிச் செயற்கைத் தன்மை மிக்க பின்னணியை ஒட்ட வைக்கிறார். அடுத்து அதே அறிவிப்பு தமிழில் எழுதப்பட்டுள்ளது! சொற்செட்டு பற்றி ஆசிரியர் கவனத்தில் கொள்ளவில்லை. குமரேசனின் மனைவியை வருணிக்கும் எழுத்தாளர் அவருக்குத் தமிழ்ப்பற்றின் காரணமாகக் கண்ணகி என்ற பெயர் சூட்டுகிறார். பெயரில் மட்டும் தமிழ்ப்பற்று! உடையில் மலாய்ப் பற்று! மலாய் இனப் பெண்களின் பாரம்பரிய உடையான 'பாஜூகுரோங்கை' அணிவித்து மகிழ்கிறார். 'வெற்றிலை போட்டுச் சிவந்த உதடுகள்' என எழுதும் ஆசிரியர் குமரேசனின் மனைவி கண்ணகியை 'நாகரிகமாகவும்' இருப்பாள் என வருணிக்கிறார். சிங்கப்பூரின் பல இனக் கலாச் சாரத்தைப் படம்பிடித்துக் காட்டப் படாத பாடு படுகிறார் இவ்வெழுத் தாளர். இறுதியில் அது முன்னுக்குப் பின் முரணாக அமைகிறது. சிங்கப்பூரில் எழுதப்பட்ட கதைக்குத் தமிழ்நாட்டு உவமை ('கிழித்துப் போட்ட பருத்திப் பூவாய்') கையாளப்படுகிறது. பருத்திப் பூ பூத்தால் தானாகவே வெடிக்கும். அதைக் கிழித்துப் போடவே தேவையில்லை என்பது இவ்வெழுத்தாளருக்கு இனியாவது தெரியட்டும். சிங்கப்பூர்த் தமிழர்களுக்குப் பருத்திப் பூ என்பது என்ன என்று தெரியுமா? ஓர் இடப் பின்னணி கையாளப்படும் உவமைகளிலும் தெளிவாகப் புலப்படும் என்பது இக்கதையின் ஆசிரியருக்குத் தெரியாது போலும்!

மனைவி வாங்கித் தந்த கண்ணாடி ரயில் தண்டவாளத்துக்கு இடையே விழுந்துவிட அதையொட்டிப் பிறக்கும் கண்ணாடி நினைவு களாக மனைவியைப் பற்றிய நினைவுகள் தொடர்கின்றன. கண்ணாடிப் பிரேமை (frame) வேண்டுமானால் பல ஆண்டுகளுக்குப் பயன் படுத்தலாம். ஆனால் கண்ணாடியை நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்த முடியுமா? கண்பார்வை கூடுதல் குறைச்சலின்றி ஒரே மாதிரியாக நீண்ட

காலத்துக்கு இருக்க முடியுமா? இவற்றையெல்லாம் சிந்தித்துக் கதை எழுதியிருக்க வேண்டும் இவ்வெழுத்தாளர்.

பிரிந்து வாழும் கணவன், மனைவி, பெற்றோர் பிரிவால் பாட்டியிடையே வளரும் தந்தைப் பாசம் மிக்க மகள் என்ற மூவரைப் பற்றிய கதை 'யாருக்காக' என்பது. பொறுப்பில்லாத அம்மாவையும், அன்பு மிக்க தந்தையையும் மீண்டும் இணைத்து வைக்க உதவுகிறது மகள் நல்லியின் கடிதம். மகள் மீது கொண்ட பாசத்துக்காக மனைவியை மன்னித்து மீண்டும் சேர்ந்து வாழ முயல்கிறார் தந்தை. ஆனால் நீதிமன்றத்தில் விவாகரத்து தொடர்பான வழக்கிற்குத் தீர்ப்புக் கூறுவதற்கு முன்பு தந்தை தன் வழக்கறிஞர் மூலமாகச் சேர்ந்து வாழ விரும்புவதாகத் தெரிவிப்பது கதையில் எழுத 'ஜோரான கதைத் திருப்பமாக' 'உச்சக்கட்டமாக' வேண்டுமானால் அமையலாம். நடைமுறையில் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு மாறானது. நீதிபதியும் மகிழ்ச்சியில் பங்குபெற்றார் என்று எழுதியிருப்பது நடைமுறையில் சாத்தியமா?

கண்டிப்பு மிக்க அம்மா தன் பிள்ளைகளைத் தற்காலிகமாகப் பிரிந்து செல்லத் தயங்குகிறாள். 'கற்றாழை முள்' என்னும் கதை, அம்மாவின் கண்டிப்பிலிருந்து சிறிது காலம் விடுதலை கிடைக்கும் என்று எண்ணிய சித்தனாவுக்கும், தீபனுக்கும் அப்பா கண்டிப்பில் மற்றொரு கற்றாழை முள்ளாகக் காட்சி தருகிறார். இக்கால இளையர்கள் பெற்றோரின் கண்டிப்பை விரும்புவதில்லை என்னும் மையக் கருத்தைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. 'கற்றாழை முள்' என்பது கதைத் தலைப்பு. எந்தச் செடியில் உள்ள முள்ளாக இருந்தாலும் அது செடியைப் பாதுகாப்பதுதான்.

'ஹாஸ்பைஸ் ஹோமி'ல் தங்கிச் சிகிச்சை பெறும் கல்யாணியம்மாவுக்குத் தாதிப் பணி செய்பவள் பிரியா. முப்பது வயது வரை தனிமரமாக வாழ்ந்தவள் இப்போது திருமணம் செய்ய எண்ணுகிறாள். கல்யாணியம்மா கேட்டதற்கு இணங்க அவரின் மகனையே திருமணம் செய்ய முடிவெடுக்கிறாள். அவளுடைய மனத் தவிப்பைக் காட்டும் கதை 'மாறுகிறேன்' என்பது. இக்கதையில் இவ்வெழுத்தாளர் எழுதியுள்ள பகுதி வாசகர்கள் ஐயுறும்படியாக உள்ளது. 'அவளின் கரிந்த குடல் பகுதிகள் கருகிவிட்ட வெங்காயம் போல, தன் நீர் கலந்த மலத்தில் வெளியாவதைக் கண்ட கல்யாணி அம்மாள்' என்று எழுதுகிறார். புற்று நோய்க்கு அளிக்கப்படும் ஒளிக்கதிர்ச் சிகிச்சை முறையினால் இவ்வாறு குடல் கரிந்துபோனதாக எழுதியுள்ளது வியப்பே!

'கோலங்கள்' என்னும் கதை தங்க முனை விருதுப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதை ஆகும். கார்த்திக்கின் தந்தையான ரகு, இருதாரம் மணம் முடித்து மூன்றாவதாக ஒரு பெண்ணை மனைவியாக்கிக்கொள்ளத் தன் மகனின் சம்மதத்தைக் கடிதம் மூலமாகக் கேட்பது கதை. சிங்கப்பூர்ச் சூழலில் பணிப்பெண்ணைக் குடும்ப உறுப்பினராகக் கருதும் மனநிலை கொண்ட தமிழ்க் குடும்பங்கள் இருப்பதாக இவர் எழுதியிருப்பது மிகைப்படுத்தப்பட்ட செய்தியே! தன் வாழ்வைத் தானே தீர்மானித்துக்கொள்ளும் நடைமுறை உள்ள சிங்கப்பூர்க் குடும்ப வாழ்வில், மறுமணம் செய்துகொள்வதற்குத் தந்தை தனது பதின்ம வயது மகனின் அனுமதியைப் பெறுவதாக எழுதியுள்ளது வேடிக்கையாக உள்ளது! 'மகனைத் தெய்வமாய் நினைத்து அனுமதி கேட்கிறேன்' என்று ரகு எழுதுவது நம்பத்தக்கதாய் இல்லை. புதுமை படைக்கிறதாகக் கருதிக்கொண்டு இப்படிப் பொய்களை எழுதலாமா? இக்கதை பரிசு பெற்றிருப்பது வியப்பைத் தருகிறது. சிங்கப்பூர் பின்னணியும் இக்கதையில் ஆங்கில மொழி யிலமைந்த எம்.ஆர்.டி. அறிவிப்புகள், வலுக்கட்டாயமாகச் சீன முதியவரை ஆங்கிலம் பேச வைத்தல், சிங்கப்பூரின் தனி அடையாளமாக இவ்வெழுத்தாளர் கருதும் எம்.ஆர்.டி. நிலையங்கள் என இவரின் வழக்கமான செயற்கைப் பின்னணி ஒட்ட வைக்கப்பட்டுள்ளது.

'வளர்ப்புக்கு வணக்கம்' என்னும் கதையில் இன இணக்கப் பிரச்சாரம் செய்வது தலைமை நோக்கமாகத் தோன்றுகிறது. இதற்கு சீன அம்மாவுக்குப் பிறந்த இந்திய முஸ்லீமான மும்தாஜ் கருவி யாகிறாள். மும்தாஜின் பூர்வீகக் கதை, மும்தாஜின் குழந்தைகள் குழந்தைப் பராமரிப்பு இல்லத்தில் இருப்பது, கெல்வினின் குணாதிசயம் எனச் சிறுகதையின் ஒருமை சிதறிப்போவது போலத் தோன்றுகிறது.

சுருங்கச் சொன்னால் இந்த எழுத்தாளர் பரிசுக்கு எழுதுவதை நோக்கமாகக் கொண்டிருப்பவர் என்றும், கதையம்சங்கள் பற்றிக் கவலைப்படாது நம்பமுடியாத தகவல்களையும், ஆராய்ச்சி எதுவும் மேற்கொள்ளாது எழுதுபவர் என்பதும், வாசகர்களை மடையர்களாகக் கருதுபவர் என்பதும் 'கண்ணாடி நினைவுகளில்' வெட்ட வெளிச்சமாகின்றன.

ரத்னாவதியின் புதினம் : 'மேற்கே உதிக்கும் சூரியன்'

பதின்ம வயதில் எழுதப்பட்ட புதினம் என்ற முகவுரையோடு புதினத்தைத் தொடங்குகிறார் இவர். திருமணமாவதற்கு முன்னால்

நெறி தவறிச் சென்று குழந்தையைப் பெற்றெடுக்கும் ஒரு பெண்ணின் பிரச்னையைக் கருவாகக் கொண்டு எழுதியுள்ள இவருக்கு இது ஒரு தனிமனிதப் பிரச்னையாகத் தெரியாமல் சமூகச் சிக்கலாகவே தோன்று கிறது! ஆனந்தகுமார் என்னும் செல்வந்தரின் வளர்ப்பு மகள் ரம்யா. அவள் தன்னை விட வயதில் மூத்த ஆண்களை விரும்புவாள். அதற்கு அவள் கூறும் வியாக்கியானம் மனோதத்துவ அடிப்படையிலானது என்று எழுதுகிறார் இந்த எழுத்தாளர். பொதுவாகச் சிங்கப்பூர் எழுத்தாளர்கள் பெரும்பாலானோரைத் தமிழ்த் திரைப்படங்கள் ஆட்டிப்படைக்கின்றன என்பதற்கு ரத்னாவதியும் விதிவிலக்கல்ல.

ஓர் அத்தியாயம் தொடங்கும்போது திரைப்படப் பாடல்களோடு தொடங்குவது, ஆனந்த குமார் இறந்த சமயத்தில் வழி தவறிப் பிறந்தவள் என்று ரம்யாவைக் கமலாம்பிகை கூறும்போது (தன் பிறப்பின் ரகசியம் ஏற்கனவே தெரிந்திருந்தபோதும்) அழுது புலம்புவது, நித்யா பிரேமிடம் தன்னை இழப்பது, பிறகு குழந்தையைப் பெற்றெடுத்து மற்றொருவருக்குத் தத்துக் கொடுப்பது, கதையின் திடீர்த் திருப்பங்கள் போன்ற சினிமாத்தனங்களைக் கொண்டு கதை எழுதியுள்ளார் ஆசிரியர்.

நெறி தவறி ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டுச் சமுதாயத்தைக் குறைகூறும் நித்யா நெறி தவறிய பெண்களையும் குழந்தைகளையும் வாழ வைக்க வேண்டும், மனதைரியம் அளிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நெறி பிறழ்ந்த சமுதாயத்தை - ஒழுக்கம் என்னும் வேலியை உதாசீனம் செய்யும் சமுதாயத்தை உருவாக்கும்! விடலைப் பருவ வேகத்தில் இவ்வெழுத்தாளர் புலம்புவது பின்விளைவுகளை எண்ணிப் பார்க்காத, அதற்குரிய அனுபவ முதிர்ச்சி இல்லாத எழுத்துக்குத் தக்க சான்றாகும். நித்யா-சுந்தரம் திருமணம், எதிர்பாராத கதைத் திருப்பங்கள், ரம்யா, பாஸ்கர், மோகன் என்னும் மூவரின் முக்கோணக் காதல் எனக் கதையை வளர்த்துச் செல்கிறார். நித்யாவைத் தனது தாயாக (உண்மைத் தாயாக இருந்தபோதிலும்) ஏற்க ரம்யாவிற்கு மனம் வராததால் சூரியன் மேற்கே உதிப்பதில்லை என்கிறாள். ஆனால் அவளைத் திருமணம் செய்த மோகனோ சூரியன் மேற்கேயும் உதிக்கும் என நம்புகிறான்.

மிக மிகச் சாதாரணமான ஒரு கதையை எந்த விதச் சுவை யுணர்வும் இல்லாமல் 'அபத்தமான' விவாதங்களோடு 'சப்'பென்று எழுதியுள்ளார் இந்த எழுத்தாளர். இவர் கதை எழுதுவதில் கொண்ட ஈடுபாட்டை மதிக்கலாமே தவிர கதையில் சிறப்பு அம்சங்கள் ஒன்றுமே

இல்லை. இந்த இளம் பெண் எழுத்தாளர் 'மோன்ட் ப்ளாங்க்' விருது பெற்றார். இவர் இவ்விருதுக்கு உரியவர்தானா? என்னும் சந்தேகம் இவருடைய கதைகளைப் படிப்போர்க்கு எழுவது தவிர்க்க முடியாததே!

கவிதைத் துறையில் பெண்கள்

பார்வதி பூபாலன்

இவர் மரபுக் கவிதையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் . தமிழ் இலக்கண, இலக்கியங்களை நன்கு கற்றுத் தமிழாசிரியராகப் பணி புரிந்தவர். இவரது 'இளவேனிற் பூக்கள்' என்னும் கவிதை நூல் இவருடைய ஆழ்ந்த தமிழ்ப்பற்றைப் புலனாக்குகிறது. ஆயினும் சிங்கப்பூரில் எழுதப்பட்ட எல்லா மரபுக் கவிதைகளையும் போல இந்நூலும் மொழி, நாடு, இயற்கை, சான்றோர், பொதுவான விஷயங் கள் என்பன பற்றி எழுதப்பட்ட கவிதைகளைக் கொண்டது. 'நாடு' என்னும் பகுதியில் அமைந்த கவிதைகள் சிங்கப்பூரின் புகழ் பாடுபவை. இப்பகுதி ஒன்று மட்டுமே இந்நூல் சிங்கையில் வெளிவந்த கவிதை நூல் என்பதற்குச் சான்றாகும். எஞ்சிய பகுதிகளுக்குத் தமிழ்நாட்டுப் பின்னணியே கருவாக அமைந்துள்ளது. பொதுவாக 'இளவேனிற் பூக்கள்' பழைய தமிழிலக்கியங்களை நினைவுபடுத்தும் வகையில் உவமை களையும், கற்பனைகளையும் கொண்டுள்ளது. 'முன்னோர் மொழி பொன்னே போல் போற்றும்' மரபு இக்கவிஞரிடமும் உள்ளது. மேலும் சிங்கப்பூர் படைப்பிலக்கியத் துறையில் இந்நூலின் நிலை என்ன? இதனைக் கொண்டு சிங்கப்பூர் சமூகம் பற்றி அறிய முடியுமா என்பது ஐயமே!

கனகலதா

கனகலதா 'தமிழ் முரசு'வில் பணி புரிபவர். இவருடைய 'தீவெளி' என்னும் நூல் நாற்பத்தி மூன்று கவிதைகளைக் கொண்டது. லதாவின் கவிதைகள் 'சிங்கா' என்னும் இலக்கிய இதழ், 'சந்தங்கள்' என்னும் தொகுப்பு நூல், 'ஆசியான் கவிதைத் தொகுப்பு' - சிங்கப்பூர்க் கவிதைகள், 'சிங்கப்பூரின் குரல்கள்' என்னும் வெள்ளி விழாத் தொகுப்பு, தமிழகத்தின் 'காலச்சுவடு' இதழ், பிரான்சின் 'உயிர்நிழல்' இதழ், இலங்கையின் 'சரிநிகர்' இதழ் போன்றவற்றில் அச்சேறியுள்ளன. புதுக்கவிதைத் துறையில் லதா தனக்கென ஒரு சிறப்பிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார். சிங்கப்பூர்ப் பின்னணி, அங்கதச் சுவை,

புதுக்கவிதை உத்திகளான குறியீடு, படிமம் ஆகியவை லதாவின் கவிதைகளில் சிறப்பாக அமைந்துள்ளன. இவருடைய கவிதைகள் சிங்கப்பூர்ச் சமூகத்தைப் பற்றி மட்டும் அமையாமல் உலகளாவிய பிரச்னைகளையும், இயற்கையையும் பற்றிப் பேசுகின்றன. 'ஹைக்கூ' கவிதை வடிவமும் லதாவின் கவிதைச் சிறப்புகளில் மற்றொரு அம்சமாகும்.

லதாவின் கவிதைகளில் காணப்படும் மற்றொரு சிறப்பு அம்சம் எள்ளல் தொனியும், வாழ்க்கை யதார்த்தங்களை வெளிச்சமிட்டுக் காட்டுவதும் ஆகும். 'வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடும் மீகோரிங்கும்' என்னும் கவிதை சிங்கப்பூர்த் தமிழ் மக்களின் நிலையையும் நினைப் பையும் காட்டுகின்றது. பணவேட்கைச் சமூகத்தை 'காசு கொடுத்தால் தேடி வரும் இலக்கியமும் கலைகளும்' என்னும் வரியின் மூலம் படம்பிடிக்கிறார்.

சிங்கப்பூர்த் தமிழர்கள் தீபாவளி கொண்டாடும் விதத்தைக் கேலி செய்யும் கவிதை 'கணக்கு' என்பது. ஐப்பசி மாதத்தில் சௌத் பிரிட்ஜ் ரோடு மாரியம்மன் கோவிலில் நடைபெறும் தீமிதித் திருவிழா, திரௌபதி அம்மன் திருவிழா, தீபாவளிக்கு முதல் நாள் செத்த வர்களுக்குப் படையலிடுவது, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தரமும், அவற்றின் பாதிப்பும் போன்ற உண்மைச் சம்பவங்களுக்கு உயிர்ப்புக் கொடுத்துத் திட்டப்பட்ட கவிதை 'கணக்கு' என்னும் தலைப்பில் அமைந்தது. இக்கவிதையில் சமய, சமூக, கல்விப் பின்னணி சிறப்பாகப் பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது.

பரபரப்புடன் இயங்கும் சிங்கப்பூர்ச் சாலைகளை 'ஒரு சாலைக் கனவு' என்னும் கவிதை படம்பிடிப்பதோடு கூர்ந்து நோக்கும் திறனுடையவர் லதா என்பதையும் இதன் வழி நாம் அறிகிறோம். 'ஹைக்கூ' போன்ற கவிதை 'இலை ஒன்று கீழே விழுந்தது' என்பதாகும். இது உருவகத் தன்மை கொண்ட கவிதை. 'தலைமைத்துவ வழிபாடு' பற்றி லதா எழுதிய 'மேய்ப்பன்' கவிதை எந்த நாட்டுக்கும் பொருந்தி வரும் முருகியல் தன்மை கொண்ட கவிதையாகும். சமூக, அரசியல், பொருளியல் பிரதிபலிப்பு, வாழ்க்கை யதார்த்தம், புதுக்கவிதைக் கூறுகள், உலகளாவிய நோக்கு போன்ற அம்சங்களைச் சிறப்பாகச் சித்திரிக்கும் லதா இருபத்தோராம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதை உலகிற்குப் புதிய பரிமாணத்தைத் தருவார் என நம்பலாம்.

லதாவின் கவிதைகள் சிறப்பு அம்சங்களைக் கொண்டிருந்தாலும் ஒரு சில கவிதைகளில் கவித்துவத்தை விட உரைநடை வீச்சு அதிகமாகக்

காணப்படுகிறது. மேலும் 'இருண்மை' என்னும் பண்பும் இவருடைய கவிதைகளில் அதிகமாகக் காணக் கிடக்கிறது. ஆகவே சில கவிதை களைப் படித்தால் புரிந்துகொள்வது கடினமாக உள்ளது எனத் தமிழ்க் கவிதை பற்றி அறிந்தவர்கள் கூறுகின்றனர். சில கவிதைகளில் உள்ளூர் எழுத்தாளர்களான திரு. நா.கோவிந்தசாமி, திரு. இளங்கோவன் ஆகியோருடைய எழுத்துக்களின் பாதிப்பும் அமைந்துள்ளது. உதாரணமாகத் 'தேடல்' என்னும் சிறுகதையில் திரு. நா.கோ. பேசும் தலைமைத்துவ வழிபாடு; நல்ல தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்பன போன்ற விஷயங்கள் 'மேய்ப்பன்' என்னும் கவிதையில் பேசப்படுகின்றன. 'என்ன லா மைக்?' 'கண்ணி வெடி' ஆகிய கவிதைகள் திரு. இளங்கோவனின் எழுத்துக்களை நினைவூட்டுகின்றன. எடுத்துக் காட்டாகத் திரு. இளங்கோவனின் 'கண்ணி வெடி' என்ற நாடகத்தைப் பார்த்த பின் லதா 'கண்ணி வெடி' என்ற கவிதையை எழுதியுள்ளாரோ? என ஐயுறத் தோன்றுகிறது. இப்படி மேற்கூறப்பட்ட எழுத்தாளர்களின் படைப்புகள் தம்மை எந்த விதத்திலாவது பாதித்ததைக் கவிதையாக வடி-த்தாலும் இது அவருடைய ஆளுமையைப் பாதிக்கும் விஷயமாகவே தோன்றுகிறது. லதாவின் பார்வையில் புதிய பாடுபொருள்கள் சிக்காமல் இருக்க முடியாது.

முடிவுரை

பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு மிகச் சொற்பமானது என்றாலும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாற்றில் கனகலதாவிற்குத் தனியோர் இடமுண்டு என்னும் வகையில் அவரின் பணி ஓரளவு நிறைவாக உள்ளது. இன்னும் சில பெண்கள் சிங்கப்பூரில் நிரந்தர வாசத் தகுதி கொண்டோராய்ப் போட்டிகளில் பங்கேற்றும், 'தமிழ் முரசு'வில் சிறுகதைகளை வெளியிட்டும் வருகின்றனர் இவர்களின் பார்வை விசாலப்பட வேண்டும்.

(காலச்சுவடு (தமிழ்நாடு) இதழில்
சுருக்கமாக வெளியான கட்டுரையின் முழு வடிவம்.)

●

சிங்கப்பூர் சிறுவர் இலக்கியம் : ஒரு சிந்தனை

சிறுவர்கள் ஒரு நாட்டின் பெருஞ்செல்வம். இவர்களை நன்கு வளர்ப்பது பெற்றோர், உற்றார் உறவினர், பள்ளிகள் ஆகியோரின் கூட்டு முயற்சியாகும். சிந்தனை விதைகளை விதைத்து, மகிழ்ச்சி என்னும் நீர் பாய்ச்சி, ஊக்க உரமிட்டுச் சிறுவர்களை நன்கு வளர்க்க வேண்டும். குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு உதவும் சத்துணவு போல, உள்ள வளர்ச்சிக்கு இலக்கிய நல்லுணவும் தேவை. ஆகவே சிறுவர் இலக்கியம் அவசியமானதாக உலகெங்கும் உணரப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் தமிழர்கள் 1800களில் குடியேறி வாழ்ந்தபோதிலும் சிறுவர் இலக்கியச் சிந்தனை 1935க்குப் பின்னரே எழுந்தது. இதற்கு உந்துசக்தியாக இருந்தது 'தமிழ் முரசு' என்னும் செய்தித்தாள் ஆகும். சிங்கப்பூரில் வெளிவந்த 'கவிதை மலர்கள்' என்னும் நூலில் இடம்பெற்ற கவிதைகளில் சில 'தமிழ் முரசு'வில் வெளிவந்தவை. 'தாய்தந்தை' என்னும் தலைப்பில் வெளிவந்த கவிதை குழந்தை இலக்கியம் என்னும் வகைப்பாட்டில் அடங்கும்.

மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் தனி நாடாகப் பிரிவதற்கு முன் மலேசியாவில் வெளிவந்த 'சோலை' போன்ற இலக்கிய ஏடுகள் 1946க்குப் பின் தோன்றிச் சிறுவர் இலக்கியச் சிந்தனைக்கு வழிகாட்டின. சிறுவர் இலக்கியம் எப்படி அமைய வேண்டும் என்பதைச் 'சோலை' என்னும் இலக்கிய ஏட்டின் ஆசிரியர் கா. இராமநாதன் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

> 'சிறுவர்கட்கு ஊட்டும் இலக்கிய இன்பம்
> மிகவும் எளிதான தன்மையுடன் இன்பமாகப்
> புகுத்தப்பட வேண்டும். இதற்கு ஆரம்பப்
> பாடசாலைகளே தகுந்தவை. அங்குள்ள

ஆசிரியர்கள் நல்ல முறைப்படி பயின்ற
தமிழ் மன்னர்களாக இருக்க வேண்டும்'

சிறுவர்களுக்குத் தமிழார்வமும், இலக்கிய ஈடுபாடும் வளரச் 'சோலை' சொன்ன பரிந்துரையை, அதன் தேவையை நன்குணர்ந்த 'தமிழ் முரசு' நாளிதழின் ஆசிரியர் கோ.சாரங்கபாணி 'தமிழ் முரசு மாணவர் மணிமன்ற மலர்' என்னும் இலவச இதழை 6.7.1953இல் வெளியிட்டார். எவ்வித நற்செயலும் தொடக்க காலத்தில் எதிர்பார்த்த வரவேற்பைப் பெறுவதில்லை அல்லவா? அதுபோன்றே மணிமன்ற மலரும் ஆரம்ப காலத்தில் மாணவர்களைக் கவரவில்லை. சிறிது காலங்கழித்தே மாணவர்களின் கவனத்தை ஈர்த்துப் படைப்பாற்றல் திறனை வெளிக்கொணர வாய்ப்பாகியது. மாணவர் மணிமன்ற மலர் ஓர் எழுத்தாளர் பரம்பரையையே தோற்றுவித்தது. மணிமன்றப் பயிற்சிக்களம் பலரைப் புடம்போட்ட பொன் போல ஒளிரச் செய்தது. சிறுவர்களின் கைவண்ணங்கள் மட்டுமின்றிப் பெரியவர்களின் படைப்புகளும் இடம்பெற்றன. இதனால் சிறுவர் இலக்கியம் பற்றிய சிந்தனை வலுப்பெற்று வளர்ந்தது. கவிதைகள், கதைகள், நாடகங்கள், கட்டுரைகள் எனப் பல்வேறு பரிமாணங்களில் வளர்ந்தது.

'தமிழ் முரசு'வின் ஆக்கப் பணியை அடியொற்றித் 'தமிழ்நேசன்', 'தமிழ் மலர்' முதலிய செய்தித்தாள்களும், சிறுவர் பகுதியை வெளியிட்டன. சிங்கப்பூர் சுதந்திரம் பெறுமுன் இருந்த காலகட்டத்தில் 'தமிழ்நேச'னின் 'சிறுவர் அரங்கம்' என்னும் இலவச இதழும், 'சிறுவர் பேரவை' என்னும் இலவச இதழை 'தமிழ் மலர்' நாளிதழும் வெளியிட்டன.

சிறுவர் இலக்கியம் செழித்து வளர்வதற்கு வானொலி, தொலைக்காட்சி போன்ற தகவல் சாதனங்களும் குறிப்பிடத்தக்க பங்காற்றி உள்ளன. செய்தித்தாள்கள் படைப்புகளை வெளியிட்டு ஆதரவளித்தன. அதே வேளையில் வானொலி படைப்பாளிகளுக்குச் சன்மானம் வழங்கியது. சிறுவர் இலக்கியம் படைப்பதற்கு ஏற்ற சூழல் திருப்திகரமாக இருந்ததால் நிறைய பேர் எழுத்தார்வம் கொண்டு எழுதினர்.

வானொலியில் ஒலிபரப்பப்பட்ட சிறுவர் மலர் நிகழ்ச்சி, மாணவர் மேடை, பிள்ளைக் கனிகள், சிறுவர் பூங்கா, சிறுவர் கதைகள், பாடிப் பழகுவோம், சிறுவர் மேடை முதலிய பல நிகழ்ச்சிகள் சிறுவர் இலக்கியம் வளர்வதற்கு வாய்ப்பளித்தன.

சிறுவர் இலக்கியங்களுள் குறிப்பாகக் கவிதை நூல்களின் எண்ணிக்கை நாடகம், சிறுகதை ஆகியவற்றோடு ஒப்பிடும்போது சிறிது அதிகமே. 'பாடிப் பழகுவோம்' என்னும் நிகழ்ச்சியின் வாயிலாகப் பல கவிஞர்கள் தோன்றினர். இந்நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்ட பாடல்கள் பின்னரே நூலுருப் பெற்றன. 'சிங்கப்பூர்ப் பாடல்கள்' என்னும் நூல் கவிஞர் கா. பெருமாள் அவர்களால் எழுதப்பட்டது. 'பாடிப் பழகுவோம்' என்னும் நிகழ்ச்சிக்கு அவர் எழுதிய இசைப்பாடல்களின் தொகுப்பு. இது கவிதை என்னும் வரையறைக்குள் அடங்காது. சிறுவர் கவிதை நூல்களின் எண்ணிக்கை மொத்தம் பதின்மூன்று. 'பாடிப் பழகுவோம்' என்ற நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டிருக்காவிட்டால் இந்த நூல்களும் வெளிவந்திருக்குமா என்பது ஐயமே. எனவே சிறுவர் இலக்கியம் சிங்கப்பூரில் இன்னும் குழந்தை நிலையில்தான் உள்ளது. அது மலர வேண்டிய 'அரும்பு' என்பதில் தவறேதும் இல்லை.

சிங்கப்பூர்க் குழந்தை இலக்கிய முன்னோடியாக விளங்கியவர் மூத்த கவிஞர் ந. பழநிவேலு. இவருடைய முதல் சிறுவர் கவிதை 1937இல் வெளிவந்தது. இவருடைய 'தாய் தந்தை' என்னும் குழந்தைக் கவிதை பாடுபொருள், உத்தி, கவிதைத்தன்மை ஆகிய மூன்று கோணங்களிலும் சிறுவர்க்குப் பொருத்தமாக அமைந்தது. சிறுவர் கவிதை எப்படி அமைய வேண்டும் என்பதை இக்கவிதை வழி அறியலாம். 'தெய்வம்' என்னும் கவிதையில் சிறுவரை முன்னிலைப்படுத்தி அறிவுரை கூறியுள்ளார் ந.பழநிவேலு. முன்னோடிக் கவிஞரான இவருடைய நூல் 'பாப்பாப் பாடல்கள்' என்னும் நூலாக வெளிவந்தது. பாடுபொருள் அடிப்படையில் சிறுவர்களுக்கு நன்கு அறிமுகமானவற்றைக் கையாண்டுள்ளார். இருப்பினும் இவருடைய கவிதைகளில் இடம்பெறும் சொல்லாட்சிகள் சிறுவர்க்குப் பொருத்தமானவையா எனச் சிந்திக்க வைக்கின்றன. பிரதிபலன், கருப்பை, வாவி, மூளி, சதுப்புநிலம், உடுக்கள், மாட்சிமை, ஆண்மை போன்ற பற்பல சொற்கள் சிறுவர்களுக்குப் பொருள் புரியாத அருஞ்சொற்களாக உள்ளன. சிறுவர்களுக்கு ஏற்ற எளிய சொற்கள் இடம்பெற்றிருக்கலாமே எனச் சிந்திக்க வைக்கின்றன. எளிமை, இனிமை ஆகிய பண்புகள் சிறுவர் கவிதைகளுக்கு அவசியம் வேண்டப்படுபவை. ஆயின் பாவலர் பழநிவேலு நீதி கொளுத்துவதிலும், அறிவுரை கூறுவதிலும் அதிக அக்கறை காட்டுவதால் 'கருத்துக்களின் கோவையாக' இவருடைய பாப்பாப் பாடல்கள் திகழ்கின்றனவே தவிர இனிமையாக அமையவில்லை. உணர்வுபூர்வமாகப் பாடி மகிழ ஏற்றவையா என்பதும் கேள்விக்குரியதே. உரைநடையின் செல்வாக்கு அதிகமாக அமைந்

துள்ளது. சிறுவர் இலக்கிய முன்னோடி என்ற அடிப்படையில் வைத்து எண்ணிப் பார்த்தால் இவருடைய கவிதைகளின் குறைபாடுகள் தெரியா.

பாவலர் முல்லைவாணன் தனித்தமிழ்ப் பற்று மிகுதியும் கொண்டவர். 'ஊஞ்சல்', 'வீணை', 'கரும்பு' ஆகிய மூன்று நூல்களையும் வெளியிட்டுள்ளார். இம்மூன்று நூல்களையும் படிக்கும்போது முல்லைவாணன் ஆற்றல்மிக்க கவிஞர்; தனித்தமிழ் நெஞ்சினர்; இலக்கியப் பயிற்சி பெரிதும் உடையவர் என்ற உண்மைகள் தெற்றெனப் புலப்படுகின்றன. ஆனால் சிறுவர்களுக்குக் கவிதை எழுதுவதில் சில நுட்பங்கள் உள்ளன என்பதை இவர் கருத்தில் கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது. தனித்தமிழ்ச் சொற்கள், இலக்கிய வழக்குடைய அருஞ்சொற்கள் என்பன இவருடைய கவிதைகளைச் சிறுவர்கள் படித்து மகிழ்வதற்குத் தடையாகின்றன என்பது தேற்றம்.

சிறுவர் கவிதைகளின் 'இதயம்' என வருணிக்கத்தக்க ஓசை நயம் இவருடைய கவிதைகளில் இடம்பெற்றாலும் அவை மேற்கூறப்பட்ட சொல்லாட்சிகளால் தடைப்பட்டுப் போகின்றன. மேலும் பேச்சு வழக்குச் சொற்களை இவர் கவிதைகளில் காணலாம். பேச்சுவழக்கு வட்டாரத்துக்கு வட்டாரம் வேறுபடும். சிங்கைத் தமிழில் அத்தகைய வட்டாரப் பாகுபாடு இல்லை என்றாலும் தமிழகத்திலிருந்து சிங்கப்பூருக்குக் குடியேறிய காலந்தொட்டுத் தமிழர்கள் பேச்சுவழக்கில் தமிழக வட்டாரச் சொற்களின் பயன்பாடு ஊடாடி வருவதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆகவே நூலாசிரியர் பேச்சுவழக்குச் சொற்களைப் பயன்படுத்தி உள்ளார் எனலாம். ஆயின் இவை சிறுவர்களுக்குப் புரியுமா?

பாடுபொருள் அடிப்படையில் சிறுவர்க்குப் பொருந்தாத சில செய்திகள் உள்ளன. தமிழகத்தைச் சேர்ந்த ஈ.வெ.ரா.பாவாணர், மறைமலையடிகள் ஆகியோர் பற்றிச் சிங்கைவாழ் சிறுவர்கள் அறியவேண்டி பாவலர் இவற்றைப் பாடியுள்ளார். சிங்கையின் மொழிச் சூழலுக்கும், சிறுவர்களின் வாழ்க்கை நடைமுறைகளுக்கும் இவை பொருந்தாதவை. எனவே 'சிங்கப்பூர்த் தமிழ்ச் செல்வங்களுக்கு மொழியறிவை, இனப்பற்றை, நாட்டு நலத்தை முன்னோட்டமாகத் தரும்' பாவலரின் முயற்சி வீணாகிவிடுகிறது.

சிங்கை நாட்டுச் சூழல் இவருடைய சிறுவர் கவிதைகளுக்குப் பாடுபொருளாக அமைந்துள்ளது. சிங்கப்பூர் பற்றியும், சிங்கப்பூர்த் தலைவர்கள் பற்றியும் பாடும் இப்பாவலர் அறிவு கொளுத்துவதிலும்,

அறிவுரை கூறுவதிலும் அதிக கவனம் செலுத்தியுள்ளார். இவர் தமக்கெனக் கொண்டிருக்கும் தனித்தமிழ்ப் பற்று, பிறமொழி கலவாத தூய்மை ஆகிய கோட்பாடுகளால் இவருடைய சிறுவர் கவிதைகள் சென்ற தலைமுறைச் சிறுவர்களுக்குப் பொருந்துமே தவிர இன்றைய சூழலில் பொருந்துமா எனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

நல்ல கற்பனை வளமும், பன்னூற் பயிற்சியும், இனப்பற்றும், தனித்தமிழ்ப்பற்றும் கொண்ட கவிஞர் முல்லைவாணன் சிறுவர் இலக்கியக் கோட்பாடுகளை மனங்கொண்டு மேற்கூறிய நூல்களைப் படைத்திருப்பின் அவரின் பணியும் பங்கும் செல்வாக்குப் பெற்றிருக்கும்.

பாத்தேறல் இளமாறன் 'பனிக்கூழ்', 'திங்கள்' என்னும் இரு நூல்களைச் சிறுவர்க்கென்று எழுதி வெளியிட்டுள்ளார். இவரும் தனித்தமிழ்ப் பற்று மிகுதியும் உடையவர். இவருடைய இரு நூல்களிலும் சிறுவர்க்கேற்ற பாடுபொருள்கள் மிகவும் குறைவு. தமிழ்க் கவிஞர்கள் நீதி கூறுவதையே நோக்கமாகக் கொண்டு சிறுவர்களுக்கெனக் கவிதைகளை எழுதியுள்ளனர் என்பதற்கு இவரும் விதிவிலக்கல்லர். சிங்கைச் சூழலுக்குப் பொருந்தாத செய்திகளை இவர் சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்த எண்ணியதற்கு 'அண்ணா', 'மறைமலையடிகள்', 'பலவகை மரங்கள்' என்பன நல்ல சான்றாகும். சிறுவர் இலக்கியக் கொள்கைகள் பற்றிய தெளிவான சிந்தனையுடன் இனிவரும் காலங்களில் பாத்தேறல் இளமாறன் போன்றோர் கவிதை படைப்பது நல்லது.

பாத்தென்றல் முருகதாசன் 'பாடிப் பழகுவோம்' என்னும் நிகழ்ச்சிக்கு எழுதிய பாடல்களை மழலையருக்கென்றும், சிறுவருக்கென்றும் தொகுத்துத் தனியே நூல்களாக்கி 'மழலை மருந்து', 'தேன் மலர்கள்' என்னும் பெயர்களில் வெளியிட்டுள்ளார். மழலையர், சிறுவர் என்ற பருவ வேறுபாட்டைக் கருத்தில் கொண்ட கவிஞர் அப்பருவங்களுக்கு ஏற்பக் கருப்பொருள்களை அல்லது பாடு பொருள்களை வகைப்படுத்தத் தவறிவிட்டார் என்றே சொல்ல வேண்டும். ஆனால் அதே வேளையில் 'மழலை மருந்து' என்னும் நூலில் ஓரளவு சந்தநயம் மிக்க அல்லது ஓசைச் சிறப்புடைய பாடல்கள் அமைந்துள்ளன. இம்மழலை மருந்தில் கடினமான சொற்கள் பல கையாளப்பட்டுள்ளன. சிங்கப்பூர்ச் சூழலில் இத்தகு கடினமான சொற்கள் பாலர் பள்ளி செல்லும் பாலகர் வாயில் நுழையுமா என்பது கவிஞரின் சிந்தனையில் தோன்றவே இல்லை. ஆகவே இதனை மழலையர் மருந்தாகவும் (கசப்பாகவும்) எண்ணலாம்.

மேலும் சிங்கப்பூர் பல இனக் கலாச்சாரச் சூழல் கொண்ட நாடு. பல்வேறு சமயங்களைச் சார்ந்த சிறார்கள் பயிலும் பள்ளிச் சூழலில் 'முருகா' என்னும் தலைப்பில் மழலையருக்கான ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது. மழலையர் பள்ளியில் பயிலும் பிற சமயக் குழந்தைகள் இதனை எப்படிப் பாடுவர் என்பதைக் கவிஞர் மறந்தார் போலும்! 'சிவம்', 'கடவுள் ஒன்று' போன்ற பாடல்கள் மழலையர்க்குப் பொருந்தாதவை. மழலையர்க்கு ஓசைச் சிறப்புடைய பொருளிலிப் பாடல்கள் மிகப் பொருத்தமானவை. இதை விடுத்துக் கடினமான, மத நல்லிணக்கத்திற்குப் பாதகம் செய்யும், பொருள் புரியாத பாடுபொருள்களை 'மழலை மருந்து' என்ற பெயரில் தந்தால் அவை மருந்து போல வெறுப்பையே வளர்க்கும்.

'தேன் மலர்கள்' என்னும் தொகுப்பில் 'செயல்வீரர் சாமிவேலர்', 'தீபாவளி', 'கர்ணன்' போன்ற கவிதைகள் சிறுவர்களுக்கு எவ்வளவு தூரம் ஏற்புடையவை என்பது கவிஞருக்குத் தெரியாது போலும்! சென்ற தலைமுறையில் சிறுவர்கள் இத்தகு கவிதை நூல்களைக் கற்கும் சாத்தியம் இருந்தது. ஆயின் இப்பொழுதும், இனியும் இவை சாத்தியப்படா.

'அன்னமே' என்னும் கவிதையில் சிறுமியை விளித்துக் கவிஞர் நீதிபோதனை செய்கிறார். இறுதியில் பாடலின் கடைசி வரி 'அன்னமே' என முடிகிறது. இப்பாடலில் தொடர்பற்ற செய்திகள் நீதி போதனையாக முடிவது தமிழ்ச் சிறுவர் கவிதைகளில் காணப்படும் போக்கு. இது தவிர்க்கப்பட வேண்டும். எளிய, இனிய செய்திகள் கோர்வையாக்கித் தரப்பட வேண்டும்.

கவிஞர் முத்துமாணிக்கம் அடிப்படைக் கல்வியை முற்றிலும் கற்காமல், இசை, தமிழ் இலக்கணம் ஆகியவற்றை ஆவலினால் கற்றுக் கவிஞர் ஆனவர். தன் நண்பர் கேட்டுக்கொண்டதற்கிணங்கச் சிறுவர்களுக்காகக் கவிதைகள் எழுதி 'பொன்வண்டு' என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். 'தம் வாழ்நாளில் நம் வழித்தோன்றல்-களுக்காக ஏதேனும் ஒன்றைச் செய்து வைத்தாக வேண்டும்' என்னும் எண்ணத்தில் இந்நூலை உருவாக்கி உள்ளார். இந்நூலில் காணப்படும் குறைகளுக்குத் தமது குறைந்தபட்சக் கல்வியறிவே காரணம் என்பதையும் தெரிவித்துள்ளார்.

இந்நூல் தொண்ணூற்றாறு பாடல்கள் கொண்டது. இப்பாடல்களைத் தெய்வப் பாடல்கள், தமிழே என் தாய், பல்சுவைப்

பாடல்கள், கதைப் பாடல்கள், சான்றோர் போற்றிப் பாடல்கள், நம் நாடும் நமது தலைவர்களும் என்னும் அத்தியாயங்களின் அடிப்படையில் வகைப்படுத்தி உள்ளார். முருகதாசனைப் போல் கவிஞர் முத்துமாணிக்கமும் சிங்கப்பூர்த் தமிழர்களில் இந்து சமயத்தைப் பின்பற்றாமல் பிற சமயநெறிகளைக் கடைப்பிடித்து (இசுலாம், கிறித்தவம்) வாழும் தமிழர்களையும் அவர்களின் குழந்தைகளையும் கருத்தில் கொள்ளாது இந்நூலில் தெய்வப் பாடல்களை இணைந்திருப்பது பொருந்தாது. தமிழைப் பற்றிய பாடல்கள் நூலாசிரியரின் தமிழுணர்வை வெளிப்படுத்தினாலும், அப்பாடல்களின் பொருளாழமும் சொல்லாட்சியும் சிங்கை வாழ்த் தமிழ்ச் சிறுவர்களுக்கு ஏற்புடையவையாகத் தோன்றவில்லை. இப்பாடல்களில் சிறுவர் இலக்கியத்திற்கு அமைய வேண்டிய எளிமை சிறிதும் இல்லை.

பாடுபொருள் அடிப்படையிலும் 'பொன்வண்டு' சிறுவர்க்குப் பொருந்தாத கருத்துக்களைக் கூறுகிறது. சான்றாக 'மதுவுக்கு அடிமையாய் வாழ்தலும் தீது', 'செய்யும் தொழிலே சிறப்பு' என்பன போன்ற பாடல்களைக் கூறலாம்.

மற்ற சிறுவர் கவிதை நூல்களைப் போலன்றி இந்நூலில் சிறுவர்களை மகிழ்விக்கும் கதைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சிறுவர்களைக் கதைப் பாடல்கள் கவரும் என்பதைக் கவிஞர் கருத்தில் கொண்டு எழுதியிருப்பது பாராட்டுக்குரிய அம்சமாகும். ஒரு சில கதைப்பாடல்கள் தவிர ஏனையவை நன்னெறிகளை நேரடியாகப் புகட்டும். மேலும் அவ்வொரு சில கதைப்பாடல்களும் சிறுவர்க்குப் பொருத்தமற்ற விஷயங்களை, எதிர்மறையாகக் கூறும் உத்தியின் மூலம் கூறுகின்றன.

சான்றோர்களைப் பற்றிய பாடல் வரிசையில் சமயச் சான்றோர் களாக ஏசுநாதரையும், முகமது நபிகளையும் பாடியுள்ளதன் மூலம் சமய நல்லிணக்கத்திற்கு வழிகாட்டியுள்ளார் கவிஞர். சிங்கப்பூர் பற்றிய செய்திகள் சிறுவர்களுக்கு நாட்டுப் பற்றை வளர்க்கும் நோக்குடன் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளதும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

சுருங்கக் கூறின் கவிஞர் முத்துமாணிக்கம் 'பொன்வண்டு' என்னும் தமது நூலின் வழி சிறுவர் இலக்கியக் கோட்பாடுகளைப் புரிந்துகொள்வதில் ஓரளவு முயற்சி செய்துள்ளார் எனலாம். சிறுவர்க்குரிய பாடுபொருள், கதைப்பாடல்கள், ஓசை நயம், பொருளிலிப் பாடல்கள் போன்ற கூறுகள் இவரது முயற்சியை வெளிப்படுத்துகின்றன.

'தேன்சிட்டு' என்னும் நூலில் கவிஞர் முத்துமாணிக்கம் 'பாடிப் பழகுவோம்' நிகழ்ச்சிக்காக எழுதிய பாடல்களை நூலாக்கியுள்ளார். முன்னர் கூறப்பட்ட குறைகள் இந்நூலிலும் காணப்படுகின்றன. 'புகைத்தல் ஒரு தீது', 'எத்தர் தம்மின் இனங் காண்போம்', 'சோப்பு சீப்பு கண்ணாடி' என்பன போன்ற பாடல்கள் சிறுவர்க்குரிய கருப்பொருள்களைக் கொண்டு எழுதப்படவில்லை என்பது தேற்றம். இந்நூலிலும் சில கதைப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவ்விரு தொகுப்புகளையும் ஒருசேர எண்ணிப் பார்க்கும்போது ஓரிரு கவிதைகளில் தமிழ்நாட்டுச் சூழலின் பிரதிபலிப்பைக் காணலாம்.

பரணன் தென்கிழக்காசிய எழுத்து விருது பெற்ற கவிஞர். இவருடைய கவிதை நூல்களுள் 'மழை' என்னும் நூல் சிறுவர் கவிதைத் தொகுப்பு ஆகும். சிறுவர்க்கேற்ற கருப்பொருள்கள், ஓசைநயம், கற்பனை போன்ற அம்சங்கள் இந்நூலில் அமைந்திருந்தாலும் ஓரிரு அருஞ்சொற்களையும் கவிஞர் சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்னும் விருப்பத்தோடு வலிந்து புகுத்தியுள்ளதையும் இந்நூலின் வழி அறியலாம். சிறுவர்க்குரிய கருப்பொருள்களை விளக்கும் வகையில் படங்களையும் இந்நூலில் இடம்பெறச் செய்துள்ளார் கவிஞர் பரணன்.

சிங்கையில் வெளிவந்துள்ள சிறுவர் கவிதை நூல்களுள் 'மழை' என்னும் தொகுப்பு ஓரளவு சிறுவர்களைத் திருப்திப்படுத்தும் நூல் என்பதில் ஐயமில்லை.

பெரி.நீல. பழநிவேலன் 'செவ்வானம்' என்னும் சிறுவர் பாத்தொகுப்பை வெளியிட்டுள்ளார். நாட்டுப்பற்றுப் பாடல்கள், நெறிமுறைப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள் இயற்கைப் பாடல்கள், கதைப் பாடல்கள், சான்றோர் பற்றிய பாடல்கள் ஆகிய தலைப்புகளில் தாம் எழுதியவற்றைத் தொகுத்துள்ளார். மறைமலையடிகள், திருமூலர், பெரியார், தேவநேயப் பாவாணர் போன்ற சான்றோர்களைப் பற்றிய பாடல்கள் சிங்கைவாழ் சிறுவர்களைச் சென்றடையுமா என்பது சந்தேகமே! 1960களிலிருந்து நூலாசிரியர் எழுதிய சிறுவர் பாடல்களின் தொகுப்பாகிய 'செவ்வானம்', எழுதப்பட்ட காலத்தில் சிறுவர்க்குப் பொருத்தமானவையாகத் தோன்றினாலும் இன்றைய காலகட்டத்தில் கடினமானவையாகவே தோன்றும். சிங்கப்பூரின் பெருமை பேசும் பாடல்களுள் 'நான் பிறந்த நாடு' என்னும் தலைப்பு போன்றவற்றைச் சிறுவர்க்குப் பொருந்தாதவை எனக் குறிப்பிடலாம். 'செவ்வானம்' என்னும் பாத்தொகுப்பில் பாடலாசிரியரின் இனவுணர்வு,

மொழியுணர்வு போன்றவை வெளிப்படுகின்றனவே தவிர சிறுவர்களுக்குப் பொருத்தமான கற்பனையோ, ஓசை நயமோ அமையவில்லை. 'பாடு பாப்பா' என்னும் பாடலில் 'பெண்ணடிமை' பற்றிய கருத்துகளைப் பேசுகிறார் நூலாசிரியர். மொத்தத்தில் செவ்வானம் என்னும் பாத்தொகுப்பில் மிகச் சிலவே சிறுவர்களின் சிந்தனைக்குப் பொருத்தமானவை. 'கிட்டிப்புள்' போன்ற விளையாட்டுகள் சிங்கை வாழ் சிறுவர்கள் அறியாதவை. சுருங்கக் கூறின் பெரி.நீல. பழனிவேலன் சிறுவர் இலக்கியச் சிந்தனை பற்றிய தம் கண்ணோட்டத்தை பார்வையை விசாலப்படுத்திக்கொள்ளலாம் என்பதை 'செவ்வானம்' தெளிவாக்குகிறது.

க.து.மு. இக்பால் எழுதிய சிறுவர் கவிதைத் தொகுப்புகள் 'அன்னை', 'வைரக் கற்கள்' என்பவாகும். 'அன்னை' என்னும் நூலில் இடம்பெற்ற சிறுவர் பாடல்கள் அனைத்தும் இந்நூலில் இணைக்கப் பட்டுள்ளன. 175 பாடல்கள் கொண்ட இந்நூலில் உள்ளவை யாவும் 'பாடிப் பழகுவோம்' என்னும் நிகழ்ச்சியில் ஒலிபரப்பானவை. க.து.மு. இக்பால் மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகியன படைக்கும் ஆற்றல் உடையவர். சிறுவர்க்காகப் பாடல் எழுதும்போது எளிய சொற்களைக் கையாள்வதில் அவருடைய 'புலமை' குறுக்கிடுவதை 'வைரக் கற்கள்' நூலின் வழி அறிகிறோம். இதன் விளைவாகச் சிறுவர்களுக்குத் தெரியாத, அவர்களுக்குப் பழக்கமில்லாத சொற்களை அவர் பயன்படுத்தியுள்ளார். சிறுவர்க்குரிய கருப்பொருள்களைப் பற்றி எழுதியிருப்பினும் அருஞ்சொற்களாலும், 'தாலாட்டு' போன்று சிறுவர்க்குப் பொருத்தமற்ற பாடல்களாலும் நூலாசிரியர் சிறுவர் இலக்கியம் பற்றிப் பழமைப் போக்குடையவராக 'வைரக்கற்கள்' வழி காட்சியளிக்கிறார். 'காது' என்னும் சொல்லைப் பயன்படுத்திச் 'சொல் விளையாட்டைச்' சிறுவர்க்கு அறிமுகம் செய்கிறார். சிறுவர்க்குரிய ஓசைநயம் மிகுந்த பொருளிலிப் பாடல்கள் பற்றி அவர் கவனத்தில் கொள்ளவில்லை.

மு.அ. மசூது 'பிறைத்தோணி', 'புதிய மின்னல்கள்' ஆகிய கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டவர். இவர் ஒரு தமிழாசிரியர் என்ற அடிப்படையில் 'பிறைத்தோணி' என்னும் நூலை இளையர்க்குரிய கவிதைத் தொகுப்பாகப் படைத்தார் என்று கூறலாம். முற்றிலும் சிறுவர்க்குரிய நூலாகக் கருத இந்நூலின் பாடுபொருள்கள் இடந்தரவில்லை. மிகச் சில கவிதைகளே சிறுவர்க்குப் பொருத்தமான பாடுபொருள்களைப் பற்றியதாய் உள்ளன.

இதுவரை நூலுருப் பெற்றுள்ள சிறுவர் பாடல்களையும், கவிதைகளையும் ஒருசேர எண்ணிப் பார்க்கும்போது நம் தமிழ்க் கவிஞர்கள் அனைவரும் ஒரே மாதிரியான சிந்தனை கொண்டுள்ளனர். ஆங்கிலக் குழந்தை இலக்கியத்தில் பொருளிலிப் பாடல்கள், செவிலியப் பாடல்கள் என்னும் இரு வகை உண்டு. (வள்ளியப்பா ஒரு வழிகாட்டி, ப. 43). சிங்கைத் தமிழ்க் கவிஞர்கள் பொருளிலிப் பாடல்களுக்கு முக்கியத்துவம் தருவதில்லை. ஆனால் தமிழ்நாட்டில் அழ. வள்ளியப்பா போன்றவர்கள் குழந்தைகளைக் கவரும் ஓசைக்கு - ஓசைநயத்துக்கு முக்கியத்துவம் அளித்துப் பாடியுள்ளனர். சிங்கையின் தமிழ்ச் சிறுவர் கவிதைகளிலும் ஒரே மாதிரியான பாடுபொருள்கள், கருத்துச் சிறப்பு அல்லது பொருட் சிறப்பின் முக்கியத்துவம் கருதி அவற்றைத் திணிக்கும் போக்கு, கற்பனையாற்றல் அல்லது கற்பனையின் வீச்சு மிகக் குறைந்து காணப்படுவது, தொடர்பற்ற சிந்தனையின் விளைவாகப் பாடல் ஒன்றைப் பற்றிப் பேசத் தொடங்கி வேறொன்றில் முடிதல், வறட்டுத்தன்மை வாய்ந்த சொல் விளக்கங்கள், அளவுகடந்த நீதி போதனைகள் போன்ற பற்பல குறைபாடுகள் உள்ளன. இனி வருங் காலங்களில் சிறுவர்களைத் தமிழ் மொழியின்பால் ஈர்க்க வேண்டுமானால் நம் கவிஞர்களின் பழமைப் போக்கு மாறிக் குழந்தை இலக்கியம் பற்றிய அவர்களின் பார்வையும், கருத்துக்களும் விரிவடைய வேண்டும். காலத்துக்கேற்ற பாடுபொருள்கள் கற்பனையோடு எளிமையாக, இனிமையுடன் எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.

(எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரையின் புது வடிவம் (டிசம்பர் 2004)

●

தமிழ் நாடக நூல்கள் : ஓர் ஆய்வு

முன்னுரை

நாடகமாவது, 'வாழ்க்கை அல்லது மாந்தர்களை உருப்படுத்திக் காட்டும் நோக்குடன் உரைநடையிலோ, கவிதையிலோ நடிப்பதற்கேற்ற வகையில் ஆக்கப்படும் இலக்கியம்' என விளக்கமளிக்கிறது வெப்ஸ்டர் அகராதி. இந்நாடகக் கலை இலக்கியக் கலையாகவும், காட்சிக் கலையாகவும், வாழ்க்கைக் கலையாகவும் விளங்குகிறது. இந்நாடகம் படிப்பதற்குரிய நாடகமெனத் தனியோர் இலக்கிய வகையாகவும் வளர்ந்து வருகிறது.

படிப்பதற்குரிய நாடகங்கள்

நாடகாசிரியரின் மனமேடையில் ஒவ்வொரு பாத்திரமும் மாறி மாறி நடித்துக்கொண்டிருக்கும். அதனை அவர் நாடகமாகச் சொல்லில் வடிப்பார். இவ்வுணர்வு நாடக நூல்களைப் படிப்பவருக்கும் ஏற்பட வேண்டும். நாடகாசிரியரின் கற்பனை வளம் கனிய வேண்டும். நாடகத்திற்கும், நாடக அரங்கிற்கும் உள்ள தொடர்பை நாடக நூல் படிப்போர் எப்பொழுதும் நினைவுகூர வேண்டும். நாடகாசிரியருக்கும், நாடக நடிகர்க்கும் உள்ள தொடர்பை மனங்கொள்ள வேண்டும். நாடகக் காட்சிகள், நடைபெறும் களம், காலம், சூழல் ஆகியவற்றைக் கற்பனையில் உருவாக்கிப் பாத்திரங்களோடு ஒன்றிப்போகும் நிலையில் நாடக நூல் படிப்போர் இருக்க வேண்டும். மேடை நாடகங்கள் நூல் வடிவம் பெறும்போது இவ்வாறு படித்தால் அவற்றைத் துய்க்க முடியும். கற்பனைத் திறனோடு உணர்ந்து நாடக நூல்களைப் படிப்போர் தம் மனமாகிய மேடையில் சிறந்த நாடகத்தைக் காண்போர் ஆவர். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அனுபவிக்கும் நிலை நாடக நூல் படிப்பவர்க்கும் கைவரப்பெறுகிறது.

சிங்கப்பூரில் நாடக நூல்கள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிங்கப்பூரில் தமிழ் நாடகக் கலை, மேடைக் கலையாக அறிமுகமானது. தமிழகக் குழுக்களின் வருகையாலும், சிங்கப்பூரில் அமைந்திருந்த தமிழர் அமைப்புகளாலும் மேடை நாடகத் துறை மெல்ல மெல்ல வளர்ச்சி கண்டது. '1950களின் ஆரம்பத்தை மேடை நாடகத் துறையின் பொற் காலம்' என்பர் ரெ. சோமசுந்தரம். அறிவியல் வளர்ச்சியினால் மேடை நாடகக் கலை கிளைத்துப் பல்வேறு ஊடகங்களின் (சாதனங்களின்) வழி புத்துயிர் பெற்றுள்ளது.

மேடை, வானொலி, தொலைக்காட்சி எனப் பல ஊடகங்களின் வழியே மக்கள் மனங்களை ஊடுருவிய நாடகக் கலை நூல் வடிவம் பெற்று வருகிறது. சிங்கையில் வெளிவந்துள்ள நாடக நூல்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவு மிகச் சிலவே.

அவை வருமாறு:

1. உயர்ந்த உள்ளம் (ச. வரதன்)
2. நீறில் பூத்த நெருப்பு (ரா. நாராயணசாமி)
3. சிங்கப்பூர் மாப்பிள்ளை (சே.வெ. சண்முகம்)
4. உதயத்தை நோக்கி (பொன். சுந்தரராசு)
5. கல்லுக்குள் ஈரம் (பெ. கோவிந்தராஜூ)
6. மனோன்மணீயம் (எம்.கே. நாராயணன்)
7. பழத்தோட்டம் (சே.வெ. சண்முகம்)
8. திருவாளர் (ஏ.பி. சண்முகம்)
9. நெஞ்சிலாடும் நிழல்கள் (ராம. நாராயணசாமி)
10. *சிங்கப்பூரில் தமிழ் மேடை நாடகங்கள் (ரெ. சோமசுந்தரம்)
11. இலக்கியக் காட்சிகள் (பி. கிருஷ்ணன்)
12. கல்யாணம் ஒரு கால்கட்டு (எஸ்.எஸ். சர்மா)
13. எல்லாம் நன்மைக்கே (எஸ்.எஸ். சர்மா)
14. அமளிதுமளி (எஸ்.எஸ். சர்மா)
15. நாடகம் நடத்தினோம் (எஸ்.எஸ். சர்மா)
16. வெற்றித்திருமகன் (நா. ஆண்டியப்பன்)
17. அடுக்கு வீட்டு அண்ணாசாமி (பி. கிருஷ்ணன்)

18. அதிபதி & பந்தம் (இரா. புகழேந்தி)

19. தலாக் (இளங்கோவன்)

20. ஊடாடி (இளங்கோவன்)

மேற்கூறப்பட்ட நூல்களுள் உடுக்குறியிட்ட(*) நூல் ஆய்வு நூலாகும். எஞ்சியவற்றுள் நான்கு முதல் பதினொன்று வரை உள்ள வற்றை இந்தியர் பண்பாட்டு நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவினர் வெளியிட்டுள்ளனர். இவை சிங்கப்பூரின் இருபத்தைந்தாம் ஆண்டு வெள்ளி விழாவை ஒட்டி வெளியிடப்பெற்றவை. இவை தவிர தமிழ் இளையர் மன்றமும் சில நாடக நூல்களை வெளியிட்டுள்ளது என அறிகிறோம். நாடகாசிரியரின் சொந்த முயற்சியிலும் சில நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நாடக நூல் வெளியீட்டின் நோக்கம்

இருபத்தைந்தாம் ஆண்டு வெள்ளி விழாக் கொண்டாட்டத்தை ஒட்டிச் 'சிங்கப்பூருக்கு நமது படைப்புகள் இருபத்தைந்து' என்னும் அறிமுகத்துடன் நன்றியுணர்வுடன் - நாட்டுப்பற்றுடன் நூல்களை வெளியிட்டுள்ளனர். நோக்கம் உயர்ந்தது. ஆயின் இதனைச் செயல் படுத்திய முறை திருப்திகரமானதன்று. இவ்வேழு நாடக நூல்களை ஆழ்ந்து படிக்குங்கால் தவிர்க்கப்பட முடியாத வினா எழ இடமுண்டு. இலக்கிய நேர்மையைக் கருத்தில் கொண்டு இலக்கியத் தரமுடைய படைப்புகளை வெளியிட்டிருப்பின் மிகவும் பயனுடையதாக இருக்கும் அன்றோ? இவ்வினா நியாயமானதும், கூர்மையானதும் ஆகும். இஃது இலக்கியத் தரம் பற்றிய எதிர்பார்ப்பை இலக்கிய வளர்ச்சியின்பால் கொண்டுள்ள நாட்டத்தை வெளிக்காட்டுகிறது. மேலும் இந்நூல்கள் அனைத்தும் மிகக் குறுகிய காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு அச்சேற்றப் பட்டவை. ஆகவே 'அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமாக' அமைந்துவிட்டன என்னும் சமாதானத்தைக் கூறித் தவற்றை நியாயப் படுத்தலாம்.

உதயத்தை நோக்கி

பொன். சுந்தரராசு ஜனரஞ்சகப் புகழ்பெற்றவர். இவருடைய சிறுகதைத் தொகுப்புகளும், நாடகங்களும் இவ்வகையினவே. இவருடைய படைப்புகளில் கனமான விஷயம் (உள்ளடக்கம்) இருந்த தில்லை. ஆதலின் ஜனரஞ்சகப் புகழ்பெற்றவராகக் கூறுவது தவறான

முடிவாகாது. 'உதயத்தை நோக்கி' என்னும் நாடகத் தொகுப்பு நூல் ஆறு நாடகங்களைத் தன்னகத்தே கொண்டது.

'மண்ணில் ஒரு நிலா' என்னும் முதல் நாடகம் விளையாட்டு வினையாவதைக் கருவாகக் கொண்டது. பணத் திமிரால் ஆண்களோடு பழகுவதை விளையாட்டாகக் கருதிய ரேகாவின் கதையைக் கூறுவது. உயிருக்கு உயிராய்க் காதலித்த அன்பரசனின் சாவுக்கு ரேகா செய்யும் பிராயச்சித்தமே அன்பு இல்லம். ஒழுக்கந் தவறிய ரேகாவைக் காதலித் தற்காக அன்பரசன் தற்கொலை செய்துகொள்வது செயற்கையாக உள்ளது. அன்பு இல்லத்தை உருவாக்குவதற்காக இந்நிகழ்ச்சி வலிந்து புகுத்தப்பட்டுள்ளது. பின்னோக்கு உத்தி இந்நாடகத்தில் பயன்பட் டுள்ளது. அன்பு இல்லம் சில இடங்களில் அருள் இல்லமான மர்மத் திற்கு ஆசிரியரின் கவனக்குறைவன்றோ காரணம்?

'உதயத்தை நோக்கி', 'புதிய தொடக்கம்' ஆகியவை குடும்பத்தைக் களமாகக் கொண்டவை. பிள்ளைகளுக்கு இருக்க வேண்டிய கடமை உணர்வையும், குடும்ப மேம்பாட்டையும் வலியுறுத்தக் கூடிய சாதாரணக் கருப்பொருள்களே! பெற்றோரின் அன்பும், கவனிப்பும் இல்லாப் பிள்ளைகளின் வாழ்க்கை திசைமாறிப் போவதைக் காட்டுவது 'பாதை மாறும் பயணங்கள்' என்னும் நாடகம். இஃது இவருடைய சிறுகதைக்குக் கொடுக்கப்பட்ட நாடக வடிவம்.

'உ ர்ளங்கள் உறவுகள்' காதல் கதையாகும். 'கன்னிப் பூக்கள்' குடும்பச் சுமைகளைக் கண்டு அஞ்சித் திருமணமே வேண்டாமென உறுதி பூண்டவர்கள் அவ்வுறுதி சிதைந்து திருமணம் புரிவதைக் காட்டும் நாடகம். இஃது எண்பதுகளில் சமூகச் சிக்கலாக விளங்கிய பிரச்னையாகும். மேலும் இந்நாடகத்தில் சில இடங்களில் 'குரல்' பேசுவதாகச் சில வசனங்களை ஆசிரியர் படைத்துள்ளார். இக்குரல் யாருடையது? மனச்சான்றின் குரலா? அறிவிப்பாளர் குரலா? என்ற ஐயப்பாடுகள் எழுகின்றன. இக்குரல் இங்கு பேசுவதாய்க் காட்டுவது பொருத்தமுடையதன்று. பாத்திரப் பண்புகளைச் சொல்லிக் காட்டாமல், பாத்திரங்களுடைய செய்கைகளின் வழி அப்பாத்திரப் பண்புகள் வெளிப்படுமாறு செய்வதே சிறந்த உத்தியாகும்.

'எனக்கும் ஆசைதான்' என்னும் நாடகம் பெண்ணாசை காரண மாகப் பெண்களைக் கீழ்த்தரமாக எண்ணி, நடந்துகொண்ட ஒருவரைப் பற்றியது. பெண்களை இழிவாக மதிக்கும் இத்தகையோருக்குப் பாடம் புகட்டும் நாடகமாகும் இது.

இத்தொகுப்பில் உள்ள நாடகங்களில் இரண்டு மட்டுமே சமூகச் சிக்கல்களைப் பேசுவன ('கன்னிப் பூக்கள்', 'பாதை மாறும் பயணங்கள்'). எஞ்சியவை பொழுதுபோக்கு அம்சம் நிறைந்தவை. சமுதாயத்திற்குப் பயன்படாத எந்த எழுத்தும் பயனற்றது, பொழுதுபோக்கு அம்சமுடைய படைப்புகள் இலக்கிய அந்தஸ்தைப் பெறா என்னும் கருத்துகள் இத்தொகுப்பைப் படிக்கும்போது உறுதிப்படுகின்றன.

கல்லுக்குள் ஈரம்

இந்நாடகத் தலைப்பு ர.சு. நல்லபெருமாள் (தமிழக நாவலாசிரியர்களுள் ஒருவர்; சிறந்த படைப்பாளி) அவர்களின் புதினத் தலைப்பை நினைவூட்டுகிறது. இரு குடும்பங்களை மையமாகக் கொண்டு பின்னப் பட்ட கதை. சுதந்திரம் கொடுப்பதாகக் கருதிக்கொண்டு பெண்களைத் 'தறுதலைகளாக' வளர்ப்பது, அதன் விளைவு ஆகியவை இந்நாடகத்தின் வழி கூறப்படுகின்றன. மாறான இரு குடும்பங்களின் மூலம் கட்டுப் பாடின்றிப் பிள்ளைகளை வளர்ப்பதன் விளைவு, கட்டாயத் திருமணத் தின் விளைவு ஆகியவை வலியுறுத்தப்பட்டுள்ளன கட்டுப்பாடின்றி வளர்க்கப்பட்ட விமலா கட்டுப்பாட்டின் தேவையை உணர்கிறாள். கட்டாயமாகத் திருமணம் செய்து வைக்கப்பட்ட சத்தியனும் திலகாவும் இடையில் பிரிந்து இறுதியில் இணைகின்றனர். திலகா சத்தியனுடைய அலுவலகத்திலேயே பணிபுரிவதும், நாகப்பன் அவளிடம் கீழ்த்தரமாக நடந்துகொள்வதும் தமிழ்த் திரைப்படங்களில் புகுத்தப்படும் உச்சக் கட்டத்தை நினைவூட்டுகின்றன. இது செயற்கைத் தன்மை உடையதாக இருப்பினும் கதைப்போக்கு செவ்வையாய் உள்ளது. இவ்வுச்சக்கட்டம் மாற்றப்பட்டு வேறு விதமாகப் படைக்கப்பட்டி ருந்தால் நாடகம் இன்னுஞ் சிறக்க வாய்ப்புண்டு.

பாத்திரப்படைப்பு இந்நாடகத்தில் மரபுவழிப்பட்ட முறை யிலேயே அமைந்துள்ளது. சத்தியன் நாடகத் தலைவன். சிவநேசன் துணைத் தலைவன். இது துணைப் பாத்திரமாகும். இப்பாத்திரப் பண்புகளும் தலைவனைப் போன்று நல்ல பண்புகளே. இவ்வாறு தலைவனும் துணைத் தலைவனும் அமைவது வடமொழி நாடக வழக்கு. நாகப்பன் எதிர்நிலைத் தலைவன் (வில்லன்). தலைவன் x வில்லன் என்றமைவது மரபுவழிப்பட்ட முறை. நாடகத் தலைவி திலகா நெஞ்சில் நிற்கும் படைப்பு. பெண்களுக்கு முன்மாதிரி. தோல்வி கண்டு துவளாத துணிவுடையவள். பிற துணைப் பாத்திரங்களும் பொருத்தமுறப் படைக்கப்பட்டுள்ளன. சத்தியன் தந்தையின் விருப்பத்திற்கு இணங்கித்

திருமணம் செய்வது; தந்தையின் பிடிவாத குணத்தை மாற்ற அப்பழுக் கில்லா மனைவியைத் தண்டிப்பது ஆகியவை அறிவுக்குப் பொருந்திய செயல்களாகத் தோன்றவில்லை. இருப்பினும் இவை சத்தியனின் நோக்கிற்குத் துணைபுரிகின்றன.

கல்லுக்குள் ஈரமும் உண்டென்பதற்கு முருகப்பரும், விமலாவும் சான்று. தலைப்புப் பொருத்தம் சிறப்புற உள்ளது. பல நல்ல கருத்துக்கள் இந்நாடகத்தில் கூறப்பட்டுள்ளன.

மனோன்மணீயம்

பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை அவர்களின் ஒப்பற்ற கவிதை நாடகம் மனோன்மணீயம். தமிழகத்தில் பலரும் இந்நாடத்தை நன் கறிவர். ஆயின் சிங்கப்பூர்த் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இதனை மேடையேற்றினர். எம்.கே. நாராயணன் முன்னுரையில் கூறியது போன்று கவிதையில் உள்ள நாடகத்தை உரைநடையில் எழுதியுள்ளார். இஃது அறிமுகத்திற்காகச் செய்யப்பட்ட முயற்சி. இதனைத் தழுவல் நாடகம் என்று கூறுவதில் தவறில்லை. தழுவற் படைப்புகளில் இரு வகை உண்டு. ஒன்றின் வழி ஆசிரியரின் ஆளுமை வெளிப்படும்; இரண்டாவது ஊடகத்தை மட்டும் மாற்றி அப்படியே மூலப் படைப்பை எழுதுவது. இரண்டாவது வகையின் பாற்பட்டதே எம்.கே. நாராயணனின் மனோன்மணீயம். இவ் விரண்டாம் வகை நாடகங்களின் வழி எழுத்தாளரின் திறமையைக் கணிக்க முடியாது. ஏனெனில் ஏற்கனவே உள்ள கதைத் திட்டம், பாத்திரங்கள் போன்றவற்றைக் கைக்கொண்டு நாடகத்தின் மொழி நடையை மட்டும் மாற்றியுள்ளார் எழுத்தாளர்.

பழத்தோட்டம்

சே.வெ. சண்முகம் இதன் ஆசிரியர். இவர் புனைகதை ஆசிரியரும் ஆவார். அதிகமான எண்ணிக்கையில் இவர் படைப்புகள் வெளி வந்திருப்பினும், தரமான படைப்புகள் வரிசையுள் அடங்குவன மிகச் சிலவே!

'பழத்தோட்டம்' என்னும் தொகுப்பில் ஐந்து நாடகங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. வானொலி நாடகங்களின் தொகுப்பு இந்நூல். பாசம் மிக்க அண்ணன் தம்பியிடையே நடைபெறும் பாகப் பிரிவினையே கதைக்கரு. உழைப்பும் தன்னம்பிக்கையும் கொண்ட தம்பி

இளங்கோ கட்டாந்தரையை வளங்கொழிக்கும் பழத்தோட்டமாக்கி வாழ்வில் உயர்கிறான். பிரிந்த அண்ணன் தம்பி இறுதியில் வாழ்வில் இணைகின்றனர். கதைக்கரு சாதாரணமானது. 'முயற்சி மெய் வருத்தக் கூலிதரும்' என்னும் உண்மையை வலியுறுத்துகிறது.

நாடகத்தின் அறிமுக உரையில் சொல்லப்பட்டிருப்பது போலச் சிங்கப்பூர்க் குடியரசின் வளர்ச்சி, சுதந்திரம் ஆகியவை உருவகமாகப் பேசப்படவில்லை. அவ்வாறு உருவகத்தை உணர்த்தும் கூறுகளையும் காண இயலவில்லை. கம்பம், ரம்புத்தான் ஆகிய மலாய்ச் சொற் களையும், சீனத் தவக்கை ஒருவரின் பெயர் சூட்டப்படுவதையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் இக்கதையில் சிங்கப்பூர்ப் பின்னணி தெரிவ தில்லை; இக்கதை தமிழ்நாட்டுப் பின்னணியில் எழுதப்பட்டதாகக் கூடச் சொல்லலாம். இளங்கோவும், அவன் மனைவியும் சிறப்புறப் படைக்கப்பட்டுள்ளனர். இளங்கோ குணங்களில் பெருங்கோவாகப் படைக்கப்பட்டுள்ளான்.

'காலங் கெட்டுப் போகவில்லை' என்னும் நாடகம் பிள்ளைகளின் கடமையுணர்வைப் பற்றிய கதை. முதுமைக் காலத்தில் தங்களின் பெற்றோரைப் பேணாத பிள்ளைகள் நடப்பியல் உலகில் பெருகி வருகின்றனர். ஆதலின் ஆசிரியர் இப்பிரச்னையை மையமாய்க் கொண்டு எழுதியுள்ளார். சபாபதியின் பிள்ளைகள் திட்டம் வகுத்துப் போட்டியிட்டுக்கொண்டு தங்களின் தந்தையைப் பேண முற்படு கின்றனர். பிள்ளைகளின் அன்புமழை, காலம் இன்னும் கெட்டுப் போகவில்லை என உணர்த்துகின்றது.

'பெண்பாவம் பொல்லாதது' என்னும் நாடகம் மர்ம நாடக மாகும். இது பொழுதுபோக்கு அம்சமுடையது.

'அரங்கேற்றம்' நாடகக் கலை பற்றிய நாடகமாகும். நடிப்புக் கலை, நடிகர்கள் ஆகிய நாடகக் கலை தொடர்பான செய்திகளைக் கூறியுள்ளார். நகைச்சுவை இந்நாடகத்தில் இடம்பெற்றுள்ளது. நாடகத்தைக் கலையாக மதிக்க வேண்டும்; கடைச் சரக்காக்கிடக் கூடாது என்னும் எதிர்பார்ப்பு இந்நாடகத்தில் ஒலிக்கிறது.

'குண்டலகேசி' என்னும் நாடகம் இலக்கியக் கருப்பொருளைக் கொண்டது.

இந்நாடகத் தொகுப்பு பல்வேறு வகையான கருப்பொருள்களைக் கொண்டிருந்தாலும் கனமான கரு எந்த நாடகத்திலும் அமையவில்லை.

இந்நாடக நூல் பொழுதுபோக்கு அம்சம் நிறைந்த ஜனரஞ்சக எழுத்தாளராக சே.வெ. சண்முகத்தை இனங்காட்டுகிறது.

திருவாளர்

ஏ.பி. சண்முகத்தின் நாடக நூலான இதில் சமுதாயத்தைக் கேலி செய்யும் போக்கைக் காணலாம். சமுதாயத்தின் குறைபாடுகளைச் சில பாத்திரங்கள் வழியே சுட்டிக்காட்டி எள்ளி நகையாடுகிறார். இந்நாடகம் சிங்கப்பூர்ப் பின்னணியில் எழுதப்பட்டாலும் இப்பின்னணி சில இடங்களில் பொருத்தமுற அமையவில்லை. சிற்சில இடங்களில் நம்ப முடியாத சில நிகழ்ச்சிகளையும் படைத்துள்ளார். 'திருவாளர்' என்னும் அடைமொழி 'திரு' என்று சுருங்கிய செய்தியைப் பெரிதாக்கிக் காளியப்பனும் அவனுடைய கூட்டத்தாரும் பழிவாங்க எண்ணுவது; மணி சுந்தரியுடன் தொலைபேசியில் பேசும் முறை (காட்சி 11) ஆகியவை பொருந்தவில்லை. 'மை டார்லிங்' என்று பேசியவன் திடீரென்று 'ஆத்தா' என்றழைப்பது, மொழி நடை பாத்திரத்திற்கேற்றவாறு அமைய வில்லை என்பதற்குச் சான்று. ஆங்காங்கே குறைகள் தென்பட்டாலும் 1966இல் எழுதப்பட்ட சமூக அங்கதமாகும். நகைச்சுவைக்கெனச் சில பாத்திரங்களைப் படைத்துள்ளார் ஆசிரியர்.

நெஞ்சிலாடும் நிழல்கள்

ராம். நாராயணசாமியின் படைப்பு 'நெஞ்சிலாடும் நிழல்கள்' என்னும் நாடகம். இது பிள்ளைகளால் புறக்கணிக்கப்படும் பெற்றோரின் நிலையைக் காட்டும் நாடகம். தன் பிள்ளைகளுக்குக் கல்வி தந்து, அவர்கள் வாழ்வில் முன்னேற உதவும் தந்தை பரஞ்சோதி, மூன்று பிள்ளைகளால் ஏற்பட்ட விரக்தி காரணமாக நான்காம் பிள்ளையை வெறுக்கிறார். ஆயின் தந்தையின் விரக்தியை மாற்றத் தன் காதலையும் தியாகம் செய்கிறான் நான்காம் பிள்ளையான பாபு. பின்னோக்கு உத்தி நாடகத்தில் பயன்பட்டுள்ளது. காட்சி 2இல் பரஞ்சோதியின் மனைவி ஒரே வசனத்தை (உன் அப்பாதான் களைச்சு போயிருக்காரு) மீண்டும் மீண்டும் கூறுவது அலுப்புணர்வை ஏற்படுத்துகின்றது. பாபுவும், மாலதியும் நெஞ்சிலாடும் நிழல்களாக உலவுகின்றனர்.

இலக்கியக் காட்சிகள்

இலக்கியக் காட்சிகளைப் பலரும் தமிழகத்தில் நாடகமாக்கி யுள்ளனர். சிங்கப்பூர்த் தமிழர்களுக்குத் தமிழிலக்கியங்களை அறிமுகம்

செய்வதற்காக பி. கிருஷ்ணன், 'சிலப்பதிகாரம்', 'கோப்பெருஞ்சோழன்', 'முல்லைப் பாவை', 'நைடதம்', 'காத்திருந்த நெஞ்சம்' ஆகிய ஐந்து இலக்கிய நாடகங்களை எழுதியுள்ளார். இந்நாடகங்களின் கருப் பொருள்கள் பழமையானவை; ஆயினும் இந்நாடகங்களின் மொழி நடை நாடகாசிரியரின் தமிழுணர்வையும், தமிழ்த்திறத்தையும் வெளிக் காட்டுகின்றது.

சிங்கப்பூரில் மேடை நாடகங்கள்

சிங்கப்பூரில் மேடை நாடகங்கள் பற்றிய இவ் ஆய்வுநூலை ரெ.சோமசுந்தரம் எழுதியுள்ளார். இந்நூல் பல செய்திகளைத் தரும் அரிய முயற்சி. மேடை நாடகக் கலையின் வரலாற்றைக் கூறும் இந்நூல் சிங்கப்பூரில் மேடை நாடகங்கள் பற்றி அறிய விழைவார்க்கு நல்ல கையேடாகும். ஆயின் மற்றவர் உழைப்பைக் கொண்டு ரெ. சோம சுந்தரம் பேரும் புகழும் பெற நினைப்பது இலக்கிய நேர்மையாகுமா?

அடுக்கு வீட்டு அண்ணாசாமி

பி. கிருஷ்ணன் எழுதியவற்றுள் நாடகங்களே அதிக எண்ணிக் கையில் இடம்பெறுகின்றன. இவர் வானொலி நாடகங்கள், தொலைக் காட்சி நாடகங்கள், மேடை நாடகங்கள் என 350க்கும் அதிகமான நாடகங்களை எழுதியுள்ளார். தம்முடைய எழுத்துக்களை ஆவணப் படுத்தும் ஒரு முயற்சியாக 'அடுக்கு வீட்டு அண்ணாசாமி'யை மூத்த எழுத்தாளரான இவர் நூல் வடிவாக்கியுள்ளார்.

கடந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் 9.3.1969 முதல் 6.3.1970 வரை 52 வாரங்களுக்குத் தொடர்ந்து ஒலிபரப்பான நாடகம் 'அடுக்கு வீட்டு அண்ணாசாமி'. மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கப் பன்முறை மறுஒலிபரப்புச் செய்யப்பட்ட நகைச்சுவைக் காவியம் இந்நாடகம். 'மாடி வீட்டு மங்களம்' என்னும் வானொலி நாடகத்தை சிங்கப்பூரர்கள் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. இது 39 வாரங்களாகத் தொடர்ந்து ஒலிபரப்பான நகைச்சுவை நாடகமாகும். மூத்த எழுத்தாளரான திரு. பி. கிருஷ்ணன் சிறந்த படைப்பிலக்கியவாதி. சிறுகதைக் கலை அவருக்குக் கைவரப்பெற்ற கலை. ஆயினும் இவர் நாடகப் படைப்பாளியாகவே அடையாளங் காட்டப்படும் அளவுக்கு நாடகப் படைப்புகளை உருவாக்கியுள்ளார். 'கலப்படம்', 'வாழ்க்கையோ வாழ்க்கை', 'உலகம் பலவிதம்' போன்ற நிகழ்ச்சிகளில் இவருடைய நாடகங்கள் ஒலியேறியுள்ளன.

'அடுக்கு வீட்டு அண்ணாசாமி' தொடர் நாடகத்தின் உருவாக்கம் பற்றித் தம் முன்னுரையில் நாடக ஆசிரியர் கீழ்க்காணுமாறு கூறுகிறார்:

> 'முப்பதாண்டுகளுக்கு முன்னர் இந்நாடகத்தை நான் எழுதத் தொடங்கியபொழுது இது நகைச்சுவை ஒன்றினையே முதன்மையாய்க் கொண்டு அமைதலினும் அரசின் கொள்கைகள், மக்கள் கடமை, நாட்டுப்பற்று, மக்கள் அறிய வேண்டுவன, மக்கள் தம் எண்ணங்கள், உணர்வுகள் போன்றவற்றுடன் அன்றாட நிகழ்வுகளும் நாடகத்திற்குப் பிற்புலமாய் அமைதல் வேண்டும் எனக் கருதி, எல்லா அகவையினரும் செவிமடுத்து இன்புறத்தக்கவாறு இயல்பும் எளிமையும் பொருந்திய உரையாடல்களுடன் தகுதி நலம் வாய்ந்த நகைச்சுவையையும் இடையிடையே விரவி வருமாறு எழுதினேன்.'

நகைச்சுவையை மட்டும் நாடகங்களின் முக்கிய நோக்கமாகக் கொள்ளவில்லை நாடக ஆசிரியர். சமுதாயத்துக்குச் செய்திகளை வழங்கும் நோக்கமும் உடையவர் என்பதனை ஒவ்வொரு நாடகமும் புலப்படுத்துகின்றன. தேர்ந்த இலக்கியப் படைப்பாளரான இவர் உருவம், உள்ளடக்கம், உத்தி என்ற மூன்றிலும் அதிக அக்கறையுடன் செயல்பட்டுள்ளார் என்பதை 'அடுக்கு வீட்டு அண்ணாசாமி' செம்மையாக வெளிப்படுத்துகின்றது. தேசிய சேவையின் அவசியம், அஞ்சலகச் சேமிப்பு, வரிசையில் நின்று பேருந்தில் ஏறுதல், தேசிய உடலுறுதிப் பயிற்சி, சாலைக் கடப்புகளைப் பயன்படுத்துதல், பொதுச் சொத்துக்களைப் பேணுதல் போன்ற அரசாங்கத்தின் பல்வேறு இயக்கங்களை 'அடுக்கு வீட்டு அண்ணாசாமி' சிங்கப்பூர் வாழ் மக்களிடம் எடுத்துச் சென்றுள்ளார். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முந்திய சிங்கப்பூரைப் படம் பிடித்ததில் 'அடுக்கு வீட்டு அண்ணாசாமி'க்கு பெரும் பங்கு உண்டு. வீடமைப்புப் பேட்டைகளின் சூழல்கள், கிராமங்களிலிருந்து அடுக்குமாடி வீடுகளுக்குப் புதிதாய்க் குடியேறுதல், அடுக்குமாடி வீடுகளை அழகுபடுத்துவதில் தமிழர்களுக்கு இருந்த ஆர்வம், அண்டை வீட்டாரிடம் அமைந்திருந்த அடிப்படை உணர்வுகள் மற்றும் பண்புகள், அன்றாட வாழ்க்கை நடைமுறைகள், ஆடவர் பெண்டிர் செயற்பாடுகள், வாழ்க்கைத் தரம், மக்களின் பேச்சுவழக்குகள், உலக விஷயங்களின் பாதிப்புகள் போன்ற பற்பல செய்திகளைச் சித்திரிப்பதன் வழி கடந்த நூற்றாண்டின் சிங்கப்பூர்க் காட்சி நம் மனக்கண் முன்

படக்காட்சியாக விரிகிறது. சிங்கப்பூர்ச் சமுதாயத்தைச் சித்திரிக்கும் சொல்லோவியமாக இத்தொடர் நாடகங்களைக் கூறலாம். பெரும் பாலான சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் உதட்டளவில் உச்சரிக்கும் 'சிங்கப்பூர் மண்ணின் மணம்' இத்தொடர் நாடகங்களில் முழு வீச்சுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சிங்கப்பூர் வரலாற்றில் கடந்த நூற்றாண்டின் வாழ்க்கை நிலையை அறிய விழைவார்க்கு அரிய வழிகாட்டியாக 'அடுக்கு வீட்டு அண்ணாசாமி' திகழ்வார்.

தம்முடைய படைப்பு எப்படி வரலாற்றுக் காவியமாகவும் திகழ்கிறது என்பதை பி. கிருஷ்ணன் கீழ்க்காணுமாறு விளக்குகிறார்:

> 'இந்நாடகத்தில் வரும் நிகழ்வுகளும் உரையாடல் களும் முப்பதாண்டுக்கு முந்திய சிங்கப்பூர் வரலாற்றையும் நிகழ்ச்சிகளையும் பல்வேறு படிமங் களில் சித்திரித்தலை நாடகம் படிப்பார் பலர் நினைவுகூர்வர் என்று கருதுகிறேன். அவ்வகையில் இது ஒரு வரலாற்றுச் சித்திரமாகவும் அமைந்திருத் தலைப் பலரும் உணர்வர்.'

ஆசிரியர் கூறுவது போல வெறும் சிங்கப்பூர் வரலாற்றுக் காவியமாக மட்டும் அமையாது சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகப் பிரதி பலிப்பையும் செவ்வையாகக் காட்டுவதால் சமூகவியல் அணுகுமுறை யிலும் இலக்கியத்தை ஆராய்வோருக்கு 'அடுக்கு வீட்டு அண்ணாசாமி' நிச்சயமாக உதவிக்கரம் நீட்டுவார் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. தமிழ்ச் சமூகக் குறைபாடுகளை நகைச்சுவை இழையோட, யாரையும் புண்படுத்தா வகையில், யாரும் மனங்கோணா வகையில் பி.கிருஷ்ணன் சித்திரித்துள்ளதால் இவர் எதிர்ப்புகளை எதிர்நோக்காமல் பாராட்டுக் குள்ளானார். நகைச்சுவைக்காக இவர் பயன்படுத்தியுள்ள உத்திகள் பல.

> 'எள்ளல் இளமை பேதைமை மடனென
> உள்ளப்பட்ட நகை நான்கென்ப.'

(தொல்காப்பியம், பொருளதிகாரம் 248)

என்று தொல்காப்பியம் நகைச்சுவை பிறப்பதற்குரிய களன்களை உரைக்கும். எள்ளல் எனப்படும் கேலி செய்தல், இளமை காரணமாக நகைக்க வைத்தல், பேதைமை, மடமை என்பனவற்றின் காரணமாகச் சிரிக்க வைத்தல் போன்ற உத்திகளைக் கையாண்டு நகைச்சுவை என்னும் மெய்ப்பாட்டை உணர வைக்கிறார் நாடக ஆசிரியர். பேதைமை என்பது கேள்விப்பட்ட செய்தியை உய்த்துணராது அப்படியே

மெய்யாக நம்புதலாகும். ஆனால் மடமை என்பதோ ஒரு செய்தியின் பொருண்மையை மாற்றிப் புரிந்துகொள்ளுதல் ஆகும். பி.கிருஷ்ணன் கையாண்டுள்ள நகைச்சுவை உத்திகள் இவ்வகைப்பாட்டினுள் அடங்குபவை. ஆரோக்கியசாமி என நோயாளிக்குப் பெயர் கொடுப்பது, பஞ்சநாதம் என்பவரின் பெயர் விளக்கம், பஞ்சநாதம் பழம்பெருமை பேசுவது, ராஜேந்திரனின் நையாண்டிப் பேச்சு, அண்ணாசாமியின் கூர்மையான கிண்டல் பேச்சுக்கள், பழக்க வழக்கங்களைப் பகடி செய்தல், மலாய் மொழியில் பேசிச் சிரிப்பூட்டுதல், பஞ்சநாதத்தின் சாப்பாட்டுப் பைத்தியம், ஒரே செய்தியைப் பன்முறை கூறுதல், எதுகை மோனையாகப் பாத்திரங்கள் பேசும் பேச்சு போன்ற பற்பல கோணங்களில் நகைச்சுவைத் தொனி நாடகமெங்கும் விரவியுள்ளது. 'அடுக்கு வீட்டு அண்ணாசாமி' நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலையை மறக்கச் செய்து வாய்விட்டுச் சிரிக்க வைக்கும் ஆற்றல் கொண்டவர். மேலும் சிங்கப்பூரின் விசுவாசமிக்க குடிமகனாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளார். 'அடுக்கு வீட்டு அண்ணாசாமி' பல்துறை அறிவு வாய்ந்தவராய் பல பொதுவான விஷயங்களை அலசி ஆராய்பவராகவும் திகழ்கிறார்.

இந்நாடகத் தொடரின் மொழி நடையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய சிறப்புத்தன்மை கொண்டது.

இவரின் மொழி நடையை அங்கத நடை, இலக்கிய நடை, பேச்சுத்தமிழ் நடை, கொச்சை மொழி நடை, கலப்பு மொழி நடை எனப் பல வகையாகப் பகுத்துப் பார்க்க முடியும். அங்கத நடையைச் செம்மொழி அங்கதம், பழிகரப்பு அங்கதம் எனத் தொல்காப்பியம் கூறும். இதனை வஞ்சப் புகழ்ச்சி எனப் பிற்கால இலக்கணிகள் கூறுவர். பழிப்பது போலப் புகழ்வது, புகழ்வது போலப் பழிப்பது என இரு விதங்களிலும் 'அடுக்கு வீட்டு அண்ணாசாமி' நாடகத் தொடரில் மொழி நடை அமைகிறது. சீன மொழிச் சொற்கள், மலாய் மொழிச் சொற்கள், ஆங்கில மொழிச் சொற்கள் கலந்த கலப்பு மொழி நடையைக் காணலாம். மொழி நடை பாத்திரங்களுக்கு ஏற்ப அமைந்துள்ளதோடு அப்பாத்திரங்களின் குணாதிசயங்களை வெளிக்காட்டுவதாயும் அமைகிறது. தனஞ்செயன் என்னும் இளைஞன் பேசும் பேச்சு மொழிக் கொலையாக ('அடுக்கு வீட்டு அண்ணாசாமி', முதல் தொகுதி, பாகம் 14) இளைஞர்கள் பேசும் தமிழைக் கேலி செய்வதாக அமைகிறது. பல புராண, இதிகாச, இலக்கியச் செய்திகள் உவமைகளாக நாடகத்திடையே அண்ணாசாமியின் வாய்மொழி வழியாகப் புலப்படுகின்றன. 'அடுக்கு

வீட்டு அண்ணாசாமி', நாடக ஆசிரியரின் வெளிப்பாடாகவே நாடகத் தொடர் முழுமையும் காண முடிகிறது. நகைச்சுவை நாடகமாக அமையும் 'அடுக்கு வீட்டு அண்ணாசாமி' வாசகர்களைச் சிரிக்க வைக்கும் வேளையில் சிந்திக்கவும் வைக்கிறது. சுருங்கக்கூறின் இந்நாடகம் பி. கிருஷ்ணனின் ஆளுமையை, படைப்பாற்றல் திறனை வெளிக்காட்டும் அற்புதமான படைப்பாகும்.

எல்லாம் நன்மைக்கே

எஸ்.எஸ். சர்மா இந்நாடக நூலின் ஆசிரியர். 1985இல் சிங்கப்பூரின் 'இந்தியக் கலை மன்றம்' என்னும் தமது அமைப்பின் மூலம் இந்நாடகத்தை அரங்கேற்றிப் பின்னர் 1986இல் நூலாக்கியுள்ளார். நகைச்சுவை நாடகமான இந்நூல் உழைப்பின் உயர்வு, வேலையில் உயர்வு தாழ்வு கருதாமை, கல்வியின் அவசியம் போன்ற கருத்துக்களை விவரிக்கிறது. சிரிப்பு, சிந்தனை ஆகிய இரண்டின் கலவையான இந்நூல், ஆடம்பரம் பயன் தராது என்பது போன்ற செய்திகளைச் சொல்கிறது. மொழிக் கலப்பும் ஓர் உத்தியாக நகைச்சுவையை வரவழைக்கப் பயன்படுகிறது. இந்நாடகத்திற்கு ஏன் பரிசு வழங்கப்படவில்லை? என்று வாசகர் பலரும் கேள்வி கேட்டதை 'நாடகம் நடத்தினோம்' என்னும் நூலின் இறுதியில் நூலாசிரியர் இணைத்துள்ளார். 'எல்லாம் நன்மைக்கே' என்பது ஜனரஞ்சகமான சாதாரண நாடகம். இதில் ஏதும் சிறப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

கல்யாணம் ஒரு கால்கட்டு

மளிகைக் கடை வைத்திருக்கும் சிங்காரவேலுவின் மகன்களுக்குத் திருமணம் செய்வதை மையமாகக் கொண்ட கதை 'கல்யாணம் ஒரு கால்கட்டு' என்ற பெயரில் நாடகமாகியிருக்கிறது. நகைச்சுவை நாடகமான இது நாடக விழாவில் அரங்கேற்றப்பட்டது. சிங்கப்பூர்த் தொலைக்காட்சியிலும் இந்நாடகம் ஒளிபரப்பப்பட்டது. சிங்கப்பூர்ப் பின்னணியில் கல்யாணத்தை நடத்துவதும், மளிகைக் கடையை மினி மார்க்கெட் ஆக்குவதும், வேலை அனுமதிச் சீட்டுப் பெற்று ஊழியர்கள் வேலை செய்வதும் இந்நாடகம் சிங்கப்பூரில் எழுதித் தயாரிக்கப்பட்ட நாடகம் எனப் புரிந்துகொள்ள வைக்கின்றன. இந்நாடகம் பற்றிய கருத்துகளை 'நாடகம் நடத்தினோம்' என்னும் நூலின் இறுதிப் பகுதியில் நூலாசிரியர் இணைத்துள்ளார். வழக்கமாகப் புகழ்மாலை களை வாரி வழங்கும் பார்வையாளர்கள் இந்நாடக வசனங்களை

ஆபாசமானவை என்றும், விரசமானவை என்றும் வருணித்துள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது. இந்நாடகத்தில் மன்னார் நாட்டுப்புறத் தானாக மாடு, கன்று வைத்து வாழ்க்கை நடத்துவதாக ஆசிரியர் படைத்துள்ளார். இந்நாடகம் எழுதி அரங்கேற்றப்பட்ட எண்பதுகளில் சிங்கப்பூர் நகரமயமாகிவிட்டதே? அப்படியிருக்க மாட்டுப் பண்ணையைப் படைத்துக் காட்டுவது பொருத்தமாகப் படவில்லை. அதற்கும் மேலாக மன்னார் 'ஆங்கிலம்' வேறு பேசுகிறார். இவை யெல்லாம் நம்பகமாக இல்லை. அதாவது நாடகப் பாத்திரப் படைப்புக்கு ஒவ்வாததாக உள்ளது. இப்படித் தவறுகளைக் கொண்ட ஒரு நாடகத்திற்கு நுழைவுச் சீட்டுகள் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் பார்வையாளர்கள் வீடு திரும்பியதாகப் படித்ததும் பார்வையாளர்களின் ரசனையில் கோளாறுகள் இருப்பது தெளிவாகப் புலனாகியது. இச்செய்தி வியப்பையே அளிக்கிறது. ரசிகர்களில் பலதரப்பட்டவர்கள் உள்ளனர் என்பதும், நாடகம் பற்றி விஷயம் தெரியாத ஒரு கூட்டம் சர்மாவின் நாடகப் படைப்புகளை மெச்சி உச்சி குளிர்ந்திருக்கிறது என்பதும் தெளிவாகின்றன. காட்சி 15இல் சிங்காரம் 'சிங்கப்பூரிலே பசு மாடு ஏது' எனக் கேட்பதும், மன்னார் மாட்டுப் பண்ணை வைத்திருப்பதாகக் காட்டுவதும் முன்னுக்குப் பின் முரணாக நாடகப் பாத்திரங்களின் கூற்றிலேயே வெளிப்படுகின்றன. காட்சி 7இல் எதிரொலி கேட்பதாகக் காட்டி அடைப்புக் குறிக்குள் memory என ஆங்கிலத்தில் எழுதியுள்ளதும் தவறாகவே படுகிறது. மனச்சான்று அல்லது மனசாட்சியின் குரலை எதிரொலி எனக் குறிப்பிட்டுள்ளாரோ என ஐயுறவும் வேண்டியுள்ளது. இருப்பினும் இந்நாடக ஆசிரியர் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளை (நாடகம் உள்பட) படைத்திருக்கும் ஆர்வத்தைப் பாராட்டலாம்.

நாடகம் நடத்தினோம்

எஸ்.எஸ். சர்மா கலைத் துறையோடு நெருங்கிய தொடர் புடையவர். இந்நூலில் தமது ஐம்பதாண்டுகாலக் கலைத் துறை அனுபவங்களை ஆவணப்படுத்துவதுடன், இன்றைய இளைய தலை முறையினருக்கு மூத்த தலைமுறையைச் சார்ந்த தம்மைப் போன்றவர்கள் கடந்து வந்த பாதையை நினைவுகூர்கிறார் ஆசிரியர். இதுவே நூலின் நோக்கமாக அமைகிறது. ஏராளமான நிழற்படங்களுடன் (வண்ணப் படங்களுடன், ஏறத்தாழ எழுநூறு பக்கங்களுடன் மிகப் பெரிய நூலாக வெளியிட்டுள்ளார். இந்நூலாசிரியர் 'இந்தியன் மூவி நியூஸ்' என்னும்

ஜனரஞ்சக இதழை நீண்ட காலம் (ஆசிரியராக) நடத்திய அனுபவம் உடையவர் என்பதால் இவருடைய நூல்கள் அனைத்துமே ஜனரஞ்சக ரசனை படைத்தவர்களிடம் சென்று சேர்கின்றன. விற்பனையைப் பொறுத்த அளவில் சர்மா வெற்றி நடை போடுகிறார் என்பதில் தவறிருக்க முடியாது. தாம் வெளியிட்ட நூல்கள் அனைத்தையும் விற்று முடித்து, மறுபதிப்பு வெளியிட்ட சிங்கைத் தமிழ் எழுத்தாளர் இவராகத்தான் இருக்க முடியும். தமிழர்களின் திரைப்பட ரசனையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டவர் எஸ்.எஸ். சர்மா என்பதை யாராலும் மறுக்க முடியாது.

பால்ய வயதில் வேதம் படிக்க அனுப்பப்பட்ட சிறுவனான சர்மா, ஜப்பானிய ஆட்சிக் காலத்தில் நடிக்கப்பட்ட 'வீர வனிதா' போன்ற நாடகங்கள் தந்த எழுச்சியால் நாடகக் கலையின் மீது தனி ஈடு பாட்டைப் பெற்றவர். இந்திய நுண்கலைக் கழகம் 1949இல் தொடங்கப் பட்டபோது அதன் உறுப்பினராகச் சேர்ந்த இவர், 'கோமதியின் காதலன்' என்ற நாடகத்தின் பிரதியைச் சரிசெய்து, தயாரிக்கும் பொறுப்பிலிருந்தார். இந்நாடகத்தைப் பற்றி எழுதும்போது, 'இன்று வரை மேட்டுக்குடியினர் பங்கேற்ற நாடகங்கள் சிங்கப்பூரில் அரங் கேறியதில்லை' எனக் குறிப்பிடும் ஆசிரியர் அரசாங்கத்திலும், தனிப்பட்ட நிறுவனங்களிலும் அதிகாரிகளாகப் பணியாற்றியவர்களை மேட்டுக்குடியினர் என வருணிக்கிறார். சுதந்திர மலேசியாவின் உதயத்தன்று 1957இல் 'பவானி' என்னும் நாடகம் ராஜேந்திர சோழனைப் பற்றியதாகப் பட்டிதொட்டி எங்கும் அரங்கேறியது எனப் பெருமிதமடைகிறார் சர்மா. இவர் இந்நாடகத்தைப் படிப்பதற்காக எழுதிப் பின்னரே மேடை நாடகமாக்கினார். 'எடுக்காத படம்' என்னும் நகைச்சுவை நாடகம், 1960 முதல் 1985 வரை மலேசியாவிலும், இந்தோனேசியாவிலும் அரங்கேறியதைத் தேதி, ஊர் எனப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். தமது நாடகப் பணி பற்றிப் பெருமைப் பட்டுக்கொள்ளும் நூலாசிரியர் 'சிங்கப்பூர் வரலாற்றிலேயே சிங்கப்பூர்க் கலைஞர்களைக் கொண்டு வெளியூர்களில் நாடகம் நடத்தியதில் நான் முன்னோடியாக இருந்ததில் பெருமைப்படுகிறேன்' எனத் தம்மை அடையாளப்படுத்திக்கொள்கிறார்.

பல கலை நிகழ்ச்சிகளைப் படைத்த அனுபவம் உடையவர் என்பதால் தமது ஜனரஞ்சக, திகில் தொடர்கதையான 'கபுகா'வை நாடகமாக்கினார். இந்நாடகத்தைப் பலர் பாராட்டியதை நினைத்து மகிழும் நூலாசிரியர், திறந்த மனத்துடன் சித்ரா கிருஷ்ணசாமி

(தமிழகத் திரைப்படத் தயாரிப்பாளர்) 'நாடகம் என்றால் அதில் ஏதாவது ஒரு செய்தி (மெசேஜ்) இருக்க வேண்டும். திரு. சர்மா தமது ஆற்றலை நமது கலாச்சாரப் பெருமையை வெளிப்படுத்தக்கூடிய நாடகங்களைத் தயாரிப்பதில் காட்ட வேண்டும் என்று மேடையில் மொழிந்தார். அது ஒரு சவாலாகவே எனக்குப் பட்டது' என எழுதுவதை நோக்க, உள்ளீடு இல்லாமல், வெறும் ரசனையை மையப்படுத்தியே நூலாசிரியர் நாடகங்களை எழுதியிருக்க வேண்டும் எனத் தோன்று கிறது.

தம்முடைய நாடகப் பணிகளையும், கலைப் பணிகளையும் விவரிக்கும் நூலாசிரியர் மற்ற கலைஞர்கள் விருது பெற்ற நிகழ்வுகளை நினைவுகூர்கிறார் (ப. 123). நிருத்யாலயா நுண்கலைக் கழகம் என்ற அமைப்பு நடத்திய ஆய்வரங்கில் (1990, நவம்பர் 11, 12) 'சிங்கப்பூரில் தமழ் இலக்கிய வளர்ச்சி' என்னும் ஆய்வுக் கட்டுரையில் சர்மா '1800ஆம் ஆண்டில் டாங்க் ரோடு தண்டாயுதபாணி மீது பாடப்பட்ட ஊஞ்சல் பாட்டே சிங்கப்பூரின் முதல் தமிழ்ப் படைப்பு' என்று குறிப்பிட்டி ருந்ததையும், அதைத் தேடிப் பிடித்து திருமதி. சாந்தா பாஸ்கர் நடன நிகழ்ச்சி நடத்தியதையும் நினைவூட்டுகிறார்.

பொதுநலப் பணிகளுக்கு உதவும் பொருட்டுத் தம் கலைப் பயணத்தைத் தொடர்ந்துள்ளார் சர்மா என்பதையும், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் மூலம் உடல் ஊனமுற்றோர் அமைப்பு கள், ஆலய நிர்மாணப் பணிகள், அற நிறுவனங்கள் ஆகியவற்றுக்குக் கணிசமாக உதவியுள்ளார் என்பதையும் இந்நூல் வழி அறிய முடிகிறது.

நாட்டிய நாடகம், புராண நாடகம் ஆகியவற்றை நடத்தும்போது ஏற்பட்ட தவறுகளையும் ஒளிவுமறைவின்றி ஆசிரியர் கூறிச் செல்கிறார் (ப. 132, ப. 144, ப. 154). இதற்கு எடுத்துக்காட்டாக நாடகப் பாத்திரங் களின் ஒட்டு மீசை, ஜடாமுடி போன்றவை மேடையில் விழுந்து பார்வையாளர்களின் கேலிக்கு உள்ளாகியதைக் குறிப்பிடலாம்.

மலேசிய நாடகக் கலைஞர்களான ஆழி அருள்தாசன், மனுராமலிங்கம் ஆகியோரின் சேவைகளை மனந்திறந்து பாராட்டும் நூலாசிரியர் சில தகவல்களைத் தருவதில் தயக்கம் காட்டுகிறார்.

'சிங்கப்பூரில் நாடகத் துறையில் அரும் சேவையாற்றிய பல நாடக மன்றங்கள் அந்த நாட்களில் இருந்தன. அவற்றின் சேவை, பணி பற்றிச் சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றம், தமிழ் இளையர் மன்றங்கள்

நடத்திய ஆய்வுகளில் காணலாம்' எனத் தப்பித்துக்கொள்ளும் மனோபாவத்துடன் நூலாசிரியர் எழுதியுள்ளார். மற்றவர்கள் குறை கூற இடந்தரக் கூடாது என்பது ஆசிரியரின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும்.

நூல் மிகப் பெரிய அளவில் அமைந்திருப்பதால் செய்திகள் கூறியது கூறலாக மீண்டும் மீண்டும் சொல்லப்படுகின்றன. மேலும் ஆசிரியர் செய்திகளைக் கோர்வையாகச் சொல்லாமல் தடம் மாறிப் போகிறார். இதற்கு ஐம்பதாண்டுக் காலக் கலையுலக அனுபவங்கள் பற்றிய பல செய்திகளையும் ஒருங்கே சொல்ல முனைவதே காரண மாகும். மேலும் நூலாசிரியரின் பாரபட்சமான அணுகுமுறையும், சந்தர்ப்பவாதி போல் கருத்துரைக்கும் போக்கும் கீழ்க்கண்ட பகுதியின் மூலம் தெரிய வருகின்றன:

> 'இப்படிப் பாரபட்சமற்ற விமர்சனம் எழுதும் சுதந்தரத்தைச் சிங்கப்பூர்ப் பத்திரிகைகள் அந்த நாட்களில் பெற்றிருந்தன. அதன் பிறகுதான் அவற்றின் போக்கு மாற்றப்பட்டுவிட்டது. அரசாங்க சார்புடைய அமைப்புகளுக்கே பத்திரிகைகள் தாளம் போட்டன. தனிப்பட்டவர்கள் அல்லது அரசு சார்ந்திராத அமைப்புகள் நடத்திய பல நிகழ்ச்சி- களைக் கண்டுகொள்ளாமல் விட்டன. பாரா முகமாக இருந்தன அல்லது குறைபாடுகளை மட்டுமே பூதக்கண்ணாடி போட்டுக் காட்டுவதில் பெருமைப்பட்டுக்கொண்டன. அந்தப் போக்கு மேட்டுக் குடியினரின் உரிமை என்று நாமும் பொருட்படுத்தவில்லை' (ப. 161).

பாராட்டும்போது அதனை ஏற்றுக்கொள்ளும் மனம் பழிக்கும் போது அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மேற்கூறிய எடுத்துக்காட்டு நூலாசிரியரின் மனோநிலையைத் தெளிவாகவே காட்டுகிறது. சிங்கப்பூரில் முதன்முதலாக மேட்டுக்குடியினர் பங்கேற்ற நாடகம் என்று பெருமையோடு கூறும் ஆசிரியர், தமக்குச் சாதகமற்ற சூழலில் மேட்டுக்குடியினர் மனோபாவம் என்று அதைச் சாடுகிறார். இப்படிப் பாராட்டும்போது உச்சி குளிர்வதும், பழிக்கும்போது உள்ளம் உடை வதும் பெரும்பாலான எழுத்தாளர்களிடம் தொற்றிக்கொண்டுள்ள நோயாக உள்ளது. இதற்கு இந்நூலாசிரியரும் விதிவிலக்கல்லர்.

பொதுவாகச் சிங்கப்பூரின் நாடகத் துறை பற்றிய செய்திகளை ஆங்காங்கே சுட்டிச் செல்கிறார். இதற்குச் சான்றாக அமைவன கலாசார அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட நாடக ஊக்குவிப்புத் திட்டம், நாடக விழாவில் நடத்தப்பட்ட நாடகங்கள், இந்தியக் கலை விழா பற்றிய செய்திகள் ஆகியவை. தம்முடைய நாடகங்கள் பரிசு பெறவில்லையே என்ற ஆதங்கத்தால் நூலாசிரியர் வருத்தம் தொனிக்க எழுதிச் செல்வதையும் காண முடிகிறது. நாடக விழாப் போட்டிகளின் முடிவு பற்றிக் கருத்துரைக்கும் நூலாசிரியர், 'நாடகத் தேர்வாளர்கள் திறமையை விடச் செல்வாக்கிற்கு வழக்கம் போல் அடிபணிந்து, பிற படைப்புகளை ஒதுக்கிவிட்டுப் பரிசளித்தது' என ஒருதலைப்பட்ச முடிவிற்கு எதிர்ப்புக் குரல் கொடுக்கிறார்.

'நாடக விழாவில் மற்ற மொழிப் பிரிவு சார்பாகப் பள்ளிகள் பங்கேற்கும் வேளையில் தமிழ்ப் பள்ளிகள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை' என்று நூலாசிரியர் குறிப்பிடுவது தமிழ்ச் சமுதாயத்தின் மெத்தனத்தையே காட்டுகிறது.

நாடக விழாவில் நூலாசிரியர் தமது இந்தியக் கலை மன்றம் ஏழு நாடகங்களைப் படைத்ததையும், இந்நாடகங்களின் கதை, வசனம், இயக்கம் என்ற அனைத்துப் பொறுப்புகளையும் தாமே ஏற்று நடத்தியதையும், 34 புதிய நடிகர்களை அறிமுகப்படுத்தியதையும், காட்சியமைப்பில் புதுமை சேர்த்ததையும் இந்நூலின் வழி அறிகிறோம். சர்மாவின் ஐம்பதாண்டு கால மேடையனுபவம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. தமது பணிக்குப் பரிசோ, பாராட்டோ தரப்படவில்லை என்றாலும் தமிழ் நாடக விழா பற்றி விமர்சிக்கும் பொறுப்பாவது தனக்கு வழங்கப்பட்டதைப் பெரிய அங்கீகாரமாக ஏற்று மகிழ்கிறார் நூலாசிரியர்.

நூலாசிரியரின் பழமைப் போக்கும், புதுமையை வரவேற்க இயலாத மனமும் இந்நூலின் வழி அறியக் கிடக்கின்றன. ரவீந்திரன் நாடகக் குழுவினர் 18.1.98 அன்று நடத்திய பட்டறையில் நூலாசிரியர் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வழங்கினார். அவ்வேளையில் இக்கால நாடகங்கள் பற்றிக் கருத்துரைக்கும் நூலாசிரியர் புதிய சோதனை முயற்சிகளை ஏற்றுக்கொள்ளாதவர் என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

> 'ஆங்கில நாடகப் பாத்திரங்கள் போல் முகமூடி
> அணிந்துகொண்டு அல்லது முகத்திற்குச் சாயம்
> பூசிக்கொண்டு கதகளி ஒப்பனை போல் உருமாற்றி

> நடிப்பது தமிழ் நாடகங்களுக்கு ஏற்றவை அல்ல. 'one act play' எனப்படும் முகபாவனை நடிப்பு எல்லாம் முழுமையான நாடக மரபுக்கு உட்பட்டவை அல்ல. முழுமையான மேடை நாடகம் என்பது ஒரு கதையை இரண்டு மணி நேரத்திற்குக் குறையாமல் மேடையில் நடித்துக் காட்டுவதுதான். எதையும் செய்யலாம், எப்படியும் செய்யலாம் - அதுதான் நாடகம் என்ற போக்கிலிருந்து மாறி மரபு மாறாத முறையைக் கூடுமானவரை தொடர முயற்சி செய்ய வேண்டும்' ('நாடகம் நடத்தினோம்', ப. 576).

மேற்காட்டப்பட்ட பகுதியிலிருந்து நூலாசிரியரின் பழமை வாதமும், சோதனை முயற்சிகளின்பால் ஆர்வமின்மையும், one act play என்பதை ஓரங்க நாடகம் என்று உணராமல் முகபாவனை நடிப்பு என்பதாகப் பிழைபட உணர்ந்துள்ளமையும் தெற்றெனப் புலனாகின்றன. பழமையையே பின்பற்றினால் புதுமைக்கு வழி விட வேண்டாமா? வழிவிடுவது எப்போது? என நூலாசிரியர் சிந்திக்கத் தவறிவிட்டார்.

'நாடகம் நடத்தினோம்' என்னும் நூலின் கட்டுக்கோப்பு சிறப்பாக அமையவில்லை. 'சிந்தனைக்குச் சில' என்னும் பகுதி தேவை யில்லாமல் இணைக்கப்பட்டுள்ளது. 'சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம்' பற்றி நூலாசிரியர் வாசித்த கட்டுரைகள் எனப் பல செய்திகள் தொடர்பற்ற முறையில் இணைக்கப்பட்டுள்ளன. நாடகம் தொடர்பான பல செய்தி களை மட்டுமே ஆசிரியர் தொகுத்திருக்கலாம். 'கூறியது கூறல்' என்னும் குறை நூலில் தெரிந்தாலும் நூலின் இறுதிப் பகுதி தொடர்பற்று ஆசிரியரின் சமூகப் பணி, மலேசியக் கலைஞர்கள், பயண நூல்கள் பற்றிய செய்திகளைத் தாங்கியுள்ளது. நூலின் ஒட்டுமொத்த அமைப்பைப் பார்க்கும்போது நூலாசிரியர் தம்மைப் பற்றிய செய்திகளை எல்லாம் ஆவணப்படுத்திவிட வேண்டும் என்னும் துடிப்போடு செயல்பட்டிருக்கிறார் என்பது தெளிவாகவே தெரிகிறது. இந்நூலைச் 'சுயவிளம் பரம்' என்று வருணிப்பதில் கூடத் தவறேதும் இருக்க முடியாது.

அமளிதுமளி

இசை ஆராய்ச்சியாளரான கிட்டுவையும், அவருடைய மாமா மகள் மாலதியையும் முக்கியப் பாத்திரங்களாகக் கொண்டு நகைச்

சுவையாக எஸ்.எஸ். சர்மாவால் எழுதப்பட்ட நாடகம் 'அமளிதுமளி' என்பதாகும். இது சிங்கப்பூரில் எழுதப்பட்ட நாடகம் என்பதற்கு அடையாளமாகச் சிங்கப்பூரில் உள்ள இடப்பெயர்கள் (அமளிதுமளி ப. 21) அமைந்துள்ளன. மொழிக்கொலை, கலப்பு மொழி, கொச்சை மொழி (ப. 61, ப. 68) ஆகியவற்றின் மூலம் நகைச்சுவை தோன்றும்படி நாடகத்தின் வசனங்களை அமைத்துள்ளார் நாடகாசிரியர். ஆராய்ச்சி பற்றி ஆசிரியர் கூறும் தகவல்கள் நம்பும்படி இல்லை. ஜனரஞ்சக நோக்கமே பெரிதாக இருப்பதால் கதை அமைப்பில் ஓட்டைகள் இருப்பதை நாடக ஆசிரியர் உணரவில்லை (ப. 75, ப. 79). நகைச் சுவைக்காக வள்ளி, வேலன் ஆகிய இரு பாத்திரங்களும் புகுத்தப் படுவதை நோக்க எஸ்.எஸ். சர்மா நாடகத்தில் எதை எழுதினாலும், எப்படி எழுதினாலும் அவருக்கென ஒரு ரசிகர் கூட்டமே இருந்தது என்பது வெள்ளிடைமலை.

வெற்றித் திருமகன்

சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகச் செயலாளராக உள்ள நா. ஆண்டியப்பன் 'வெற்றித் திருமகன்' என்னும் இத்தழுவல் நாடக நூலை உருவாக்கியுள்ளார். கவிதையில் கற்பார்க்கு இன்பம் பயக்கும் காவி யத்தை உரைநடையில் எழுதி இளைய தலைமுறையினரின் உள்ளங்களில் இலக்கிய ஆர்வத்தை உண்டாக்கும் முயற்சியில் இதனை நாடக நூலாகச் செய்துள்ளார். மலேசியாவின் 'தினமணி' நாளிதழில் 85 வாரங்களாகத் தொடர்ந்து வெளிவந்த படைப்பு இந்நாடகம். நூலாசிரியரின் நோக்கமும், முயற்சியும் பாராட்டத்தக்கவை என்றாலும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் - வரலாற்றில் இந்நூலின் பங்கு என்ன என யோசிக்க வேண்டியுள்ளது. ஒரு சிங்கப்பூரரின் இலக்கிய ஆர்வத்தையும் நல்ல நோக்கத்தையும் வெளியிடும் இந்நூல் ஆசிரியரின் படைப்பாற்றலை - புதிதாக எழுதும் ஆற்றலைக் காட்டுமா? இனிவரும் காலங்களில் தமிழ் எழுத்தாளர்கள் தழுவல் நாடகங்களில் கவனம் செலுத்தாது புதியன படைக்க முயலலாமே? சிங்கப்பூரைப் பொறுத்த வரை வானொலிக் கலைஞர்களைத் தழுவற் படைப்புகள் மிகவும் கவர்ந்துள்ளன. எழுத்தாளர்கள் இவற்றால் ஆர்வத்தை ஊட்டுவதாகச் சொன்னாலும் கவிஞர் ந. பழநிவேலு தொடங்கி எவ்வளவு காலத்திற்குத்தான் இந்த முயற்சிகளைத் தொடரப் போகிறார்கள்? சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் எப்படி இத்தகைய முயற்சிகளால் வளம்பெறும் எனச் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

நாடக நூல்கள் - ஓர் ஆய்வு

சிங்கப்பூரில் தமிழ் நாடகத்துக்குச் சரியான முகவரி இன்னும் இல்லை என்று ஆதங்கப்படும் கலைஞரான திரு.இளங்கோவன் தமிழ் நவீன நாடகத்தின் முன்னோடி. 1991இல் தோற்றுவிக்கப்பட்ட 'அக்கினிக்கூத்து' என்னும் இருமொழி நாடகக் குழுவின் பிரதான நாடக எழுத்தாளராகவும், நாடக இயக்குநராகவும் உள்ள இளங்கோவனின் மற்றுமொரு தமிழ் நாடகம் 'ஊடாடி'. இந்நாடகம் 1992இல் சிங்கப்பூர்க் கலைவிழாவின்போது ஒரு முழு கருப்பு வர்ண ஒளி நாடகமாக 'அக்கினிக்கூத்து' குழுவினரால் நடிக்கப்பட்ட நாடகமாகும். இது இரு மொழிப் படைப்பாக 2003இல் நூலுருப் பெற்றதாகும். சிறுபான்மைச் சமூகத்தின் உரத்த, துணிச்சல்மிக்க குரலாக இயங்கும் இளங்கோவன் சிங்கப்பூர்த் தமிழனின் அடையாளத்தை, 'கிலிங்' என்றழைக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தில் சொந்தத் இனத்தாலேயே அடிமைப்படுத்தப்பட்ட பறையரினத்தின், சாதியின் பெயரால் சமூகத்தின் அடிமட்டத்துக்குத் தள்ளப்பட்டுத் தாழ்த்தப்பட்ட பறையரினத்தின் வாழ்நிலையை, வரலாற்றுச் செய்திகளின் அடிப்படையில் 'ஊடாடி' என்னும் நாடக மாக உருவாக்கியுள்ளார்.

சாதிப் பாகுபாட்டினால் நலிவுற்றுக் கிடக்கும் தமிழ்ச் சமூகத்தின் இழிநிலை குறித்துத் தம் 'புதுக்கவிதைகளில்' கேலியாகவும், கிண்டலாகவும், நையாண்டியாகவும், அடங்காத கோபத்தோடும் கருத்துக்களைக் கூறியுள்ள கவிஞர் இளங்கோவனின் அதே கருத்துக்கள் 'ஊடாடி' நாடகத்தின் மூலம் மீண்டும் உயிர்த்தெழுத்துள்ளன. மற்றவர் தொடத் துணியாத கதைக்கரு, அபாரமான துணிச்சல்மிக்க வசனங்கள், ஜோஜோ, தமிழ்வால், ரப்பர் காண்டம், குராகுரோ என்பன போன்ற நையாண்டிக் காட்சிகளில் இடம்பெறும் சத்தியமான, ஆய்வுப்பூர்வ மான தகவல்கள் போன்றவை 'ஊடாடி' நாடகம் நவீன நாடகத் துறையில் இளங்கோவனைச் சிங்கப்பூரில் மட்டுமில்லாமல் தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் அடையாளங்காட்டும் படைப்பாகும்.

அரங்கக் கலை பற்றிய ஆய்வுப் படிப்பும், அனுபவப் படிப்பும், புதியன படைக்கும் வேட்கையும், பரீட்சார்த்த நாடகத் துறையில் புதிய புதிய பரிமாணங்களைப் படைத்துக் காட்டும் புதுமையும் இளங்கோவனின் கதைக் கருக்கள் அசாத்தியத் துணிச்சலோடு சமூகப் பிரச்னைகளை விவாதிப்பவை என்பதும் சிங்கை வாழ் தமிழர்கள் அனைவரும் அறிந்த செய்திதான். ஆயின் அவருடைய நாடகங்களின் முதலும் முடிவும் விசேஷமானவை. பார்வையாளர்களின் சிந்தனைக்கு

விருந்தளிப்பவை. நாடகத்தின் தொடக்கத்தில் வந்த கட்டியங்காரன் உடுக்கடித்தபடி கேள்வியோடு அறிமுகமாகிறான். நாடகத்தின் இறுதியிலும் பறையடித்தவாறே முழங்குகிறான். தொடக்கத்தையும் நிறைவையும் இணைக்கும் சிறப்பு அம்சம் ஒரே செய்தி இரண்டிலும் இடம்பெறும் உத்தியாகும். 'தலாக்' நாடகத்தில் இடம்பெறும் உப்புப் பொம்மை பற்றிய கதை தொடக்கத்திலும் முடிவிலும் இணைக் கப்படுகிறது.

அரசின் குறியீடான பார்லிமெண்டில் உட்காரத் துடிக்கும் வேட்கை ஒரு சமூகத்தின் ஊடாடியாக ஒருவனை உருவாக்குகிறது. பேய்களின் தலைவனாக விரும்பும் சின்னக்கருப்பன் என்னும் ஒருவன் ஊடாடி; பேய்களை விரட்ட வரும் முனியாண்டி ஓர் ஊடாடி எனச் சிங்கப்பூர்ச் சமூகத்தின் அரசியல், பொருளாதார, சமூக நிலை பல படிநிலைகளில் இந்நாடகத்தில் விமர்சிக்கப்படுகிறது. இளங்கோவனின் நாடகம் சமூகத்திற்கு உணர்த்த விரும்பும் செய்தி குறியீடுகளின் வாயிலாகவே உணர்த்தப்படும். 'தலாக்' நாடகத்தில் உப்புப் பொம்மை முழுவதும் கரையாமல் இருப்பதும், இறுதியில் 'இந்த அலைகள் எல்லாம் ஏன் ஆண் அலைகளா இருக்கு' என நிஷா கேட்பதும் ஆணாதிக்க சமூகத்தில் கரைந்துபோக மறுத்தவளின் ஒலியாக, பெண்ணிய வேட்கையின் உரத்த குரலாக ஒலிக்கிறது. பெண்ணியத் திற்குக் குரல் கொடுக்கும் ஒரு பெண்ணியவாதியான இளங்கோவன் ஊடாடி நாடகத்தின் இறுதியில் சமூகத்திற்குக் கட்டியங்காரன் மூலமும், 'போர்ப்'பறை முழங்குவதன் மூலமும் செய்தி விடுக்கிறார். 'எனக்குள் ஒரு கலகக்காரன் இருட்டைத் தோண்டி எடுக்கிறான்' எனக் கூறுவது சிங்கப்பூர்ச் சமூகத்தில் சாதிய இன அடிப்படைக்கு எதிரான உரிமைக் குரலாகும். சிறுபான்மைச் சமூகத்தின் உரத்த குரலாக ஒலிக்கும் 'ஊடாடி' நாடகம் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மட்டுமல்லாது உலகின் மூலை முடுக்குகளில் வாழும் தமிழர்களுக்கு தங்கள் கலாச்சார வேர்களை இழக்காமலிருக்க வழிகாட்டுகிறது.

இரா. புகழேந்தி என்பவர் எழுதிய இரு நாடகங்களான 'அதிபதி'யும், 'பந்தம்'மும் இணைக்கப்பட்டு ஒரு நாடக நூலாக வெளியிடப்பட்டுள்ளது. முதல் நாடகமான 'அதிபதி' பரீட்சார்த்த முறையில் மனிதனின் ஒவ்வொரு உணர்வுகளையும், D.N.A. எனப்படும் மரபணுவையும் பாத்திரமாக்கியுள்ளது. இப்படி உணர்வுகளையும், மரபணுவையும் பாத்திரமாக்கிக் குறியீடுகளின் வாயிலாகச் சமூகத்தை, அரசியலைச் சாடுகிறது. இந்நாடக ஆசிரியர் ஏராளமான தமிழ்த்

திரைப்பாடல்களைத் திரித்து வசனங்களாகப் பயன்படுத்தியுள்ளார். அன்பு என்னும் உணர்வு மூளையின் அதிபதியாக்கப்படுகிறது. அன்பில்லா வாழ்க்கையின் தீமைகளை மறைமுகமாக உணர்த்துவதோடு மட்டும் அல்லாமல் 'அன்பே உலகத் தத்துவம்' என்று கூறுவதே இந்நாடகம் விடுக்கும் செய்தி. இந்நாடகத்தின் வழி நாடக ஆசிரியரின் திறமையைக் கணிக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. இதை நாடகம் என்று கூடச் சிலர் சொல்வதற்குத் தயங்கலாம். மனித உணர்வுகளைப் போட்டியிடுவதாகக் காட்டித் தலைமைப் பதவிக்கு அவை ஒவ்வொன்றும் முயல்வதாகக் காட்டியிருப்பதன் வழி இரா. புகழேந்தி இன்றைய போட்டிமிக்க உலகை மறைமுகமாகக் கேலி செய்கிறார் என்றே தோன்றுகிறது. பதவிக்காக ஒவ்வொருவரும் பிரமப் பிரயத்தனம் செய்வதை எள்ளல் தொனியோடு காட்டுகிறது

'அதிபதி' என்னும் நாடகத்தில் தனி மனிதர்களைப் பயன்படுத்தினால் வெறுப்புக்கும் கோபத்திற்கும் ஆளாவோம் என எண்ணி மனித உணர்வுகளைப் பாத்திரமாக்கியுள்ளார். இந்நாடகத்தின் மேடையாக்கம் பற்றிய சிறு குறிப்பு விவரிப்பவர் மூலமாக நாடகத்தின் முதலில் இடம்பெறுகிறது. மற்றபடி காட்சியமைப்பு ஏதுமின்றி ஒவ்வோர் உணர்வும் வந்து D.N.A.வுடன் தொடர்ந்து பேசுகின்றன. இவற்றை நோக்க, இந்நாடக நூலின் ஆசிரியர் நாடக மேடையாக்கம் பற்றிய சிந்தனை ஏதுமின்றி, ஏதோ திரைப்படப் பாடல்களை வசதிக்கேற்ப மாற்றி, தன்னை அடையாளப்படுத்திக் காட்டும் எவ்விதச் சிறப்புமிக்க நாடகக் கூறுகளைக் கையாளாமல் தான் நினைத்ததை எல்லாம் ஒரே சொற்குவியலாகக் கொட்டியிருப்பதை நோக்க, இவர் நாடகம் பற்றியும், நாடக நுணுக்கம் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டியவை ஏராளமாக உள்ளன என்பதை இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்வர். இவர் 'ஓர் கற்றுக்குட்டி' என்பதை 'அதிபதி' நாடகம் கூறுகிறது.

'பந்தம்' என்னும் நாடகமும் அல்லி, ராமசாமி, மரகதம், சீனிவாசன் ஆகியோருக்கு இடையே நடக்கும் உரையாடல் பற்றியது. முன்னர் குறிப்பிட்டது போல இதில் நாடகக் கூறுகள் ஒன்றும் அமையவில்லை. தொலைபேசி உரையாடல், பாத்திரங்கள் நேருக்கு நேர் உரையாடுவது என்பதாகப் 'பந்தம்' அமைகிறது. கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் இடையே உள்ள பந்தம், மனைவிக்கும் அவர் சார்ந்துள்ள சங்கத்துக்கும் இடையே உள்ள பந்தம், கணவருக்கும் அவருடைய அலுவலகத்துக்கும் உள்ள பந்தம், கணவனின் தந்தைக்கும்

(ராமசாமியின் தந்தை) சமூக சேவைக்கும் உள்ள பந்தம் எனப் பலவகைப்பட்ட பந்தங்களும் பதவி, புகழ், அந்தஸ்து என்பனவற்றைப் பெற எவ்வாறு ஒருவனுக்கு உதவுகின்றன; இவற்றை விரும்பாத உண்மையான மனிதர்களும் உள்ளனர்; தமிழ்ச் சமுதாயம் பற்றிய செய்திகள், தமிழ் மொழி பற்றிய கணிப்புகள், தமிழவேள் கோ. சாரங்கபாணி பற்றிய குறிப்புகள் எனப் பல செய்திகளை மாற்றி மாற்றிப் பாத்திரங்கள் பேசுவது மட்டும் நாடகம் என நினைத்தார் போலும் புகழேந்தி! நாடக நூல் என்ற பெயரில் தான் எழுதியவற்றை அச்சிட்டு வெளியிட்டுள்ள இரா. புகழேந்தி மேடை நாடகம், நவீன நாடகம், இவற்றின் நுணுக்கங்கள், செயற்பாடுகள் போன்றவற்றைத் தெரிந்து கொண்டு இனி வரும் காலங்களில் செயல்பட வேண்டும்.

முடிவுரை

ஒவ்வோர் எழுத்தாளனும் சமுதாய உறுப்பினன். எனவே அவனை ஒரு சமுதாயத்தினனாகக் கற்கலாம் இவ்வடிப்படையில் ஓர் எழுத்தாளனை அணுக இந்நாடக நூல்களுள் ஒன்றிரண்டே, அதுவும் ஓரளவே பயன்படும். 'சமுதாயத்தைச் சொல்லில் வடித்தளிப்பதே இலக்கியம்' என்னும் கூற்றுக்கு இளங்கோவனின் நாடகங்களைத் தவிர மற்ற நூல்களைச் சான்று காட்டுவது பொருந்தாது.

(1992இல் உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய ஆண்டு மலருக்காக எழுதப்பட்ட கட்டுரையின் புது வடிவம்)

மேற்கோள் விளக்கம் :

1. தா.ஏ. ஞானமூர்த்தி, நாடகத்திறன், ப. 18
2. ரெ. சோமசுந்தரம், சிங்கப்பூரில் தமிழ் மேடை நாடகங்கள், ப. 11.

பன்முகங் காட்டும் பயண நூல்கள்

மூலவர் பணியும், முதல் முயற்சியும்

பொருளாதார வளமும் பலமும் குடியேறிகளின் குறிக்கோள், அவர்களுக்கு இலக்கியம் பற்றிய அக்கறை இருப்பதில்லை என்பது சமூகவியலாரின் ஆய்வுக் கணிப்பு. சிங்கப்பூரைப் பொறுத்தவரை இக்கணிப்பு பொய்த்துவிடுகிறது. ஏனெனில் சிங்கப்பூரின் தேசிய இலக்கியத்திற்கு வித்திட்டவர்கள் குடியேறிகளே! குடியேறிகளின் இலக்கிய முயற்சிகள் மூலமும் முதலுமாய் விளங்குவதோடு சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் வேரும் விழுதுமாய்ச் செழித்து வளர உறுதுணையாயின.

கல்லார் பயணமும், கவிதை வடிவும்

குடியேறிகள் படைத்த நான்கு பயண நூல்களான 'அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி' (1893), 'சிங்கை நகர் சிங்கார வடிவேலர் காவடிச் சிந்து' (1907), 'புத்தர் ஆலய வழிநடைச் சிந்து' (1936) 'இந்தியக் கப்பல் பிரயாண வழிநடைச் சிந்து' (1930) ஆகியவை நாட்டுப்புற இலக்கியத் தன்மைகள் கொண்ட கவிதை வடிவில் அமைந்த பயண நூல்கள். 'வழிநடைச் சிந்து' என்னும் வகைப்பாட்டினுள் அடங்கும் இந்நூல்கள் வெவ்வேறு மெட்டுகளில் அமைந்தவை. பிழைப்புத் தேடி மலாயா, சிங்கப்பூருக்குப் பயணம் மேற்கொண்ட மக்களைப் பற்றியும், இறையருள் நாடி இவர்கள் மேற்கொண்ட பயணங்கள் பற்றியும் இவை பேசுகின்றன. தொழில்முறைப் பயணம், ஆன்மீகப் பயணம் என்னும் பாகுபாட்டின் அடிப்படையில் இப்பயண நூல்களை எண்ணிப் பார்க்க இயலும். கற்றோரின் பயண நூல்கள் 'ஆற்றுப்படைகளாக' வாழ்ந்தமை போலக் கல்லாதாரின் பயண நூல்கள் 'சிந்துகளாக' மலர்ந்தன; மணம்

பரப்பின. இதற்கு அக்காலத்தில் 'சிந்து' பெற்றிருந்த செல்வாக்கும் காரணமாகும். இந்நூல்கள் வழி பெண்களைப் பற்றிச் சமுதாயம் கொண்டிருந்த எண்ணங்களை அறிய முடிகிறது. ஆயினும், 'தாயகம் போலச் சிங்கை நகரில் நேயமுடன் வாழ வேண்டும்' என வேண்டுகோள் விடுப்பது நாட்டின் மீது விசுவாசங் காட்ட வேண்டும் என்னும் நோக்குடன் விடுக்கப்பட்ட வேண்டுகோளாகவே ஒலிக்கிறது.

பாவலர் பயணமும், பரிணாமப் பார்வையும்

குடியேறிகள் படைத்த நான்கு பயண நூல்களும் அவர்கள் மேற்கொண்ட தொழில்முறைப் பயணத்தின் விளைவாக மலர்ந்தவை! ஆன்மீகப் பயணத்தின் அடிப்படையில் அமைந்தவை. வரலாற்றுப் பயணமாக வழிகாட்டுபவை. சமூகவியற் பயணமாகச் சமூகத்தைச் சித்திரிப்பவை. முழுமையும் சிங்கப்பூரைப் பற்றிய தகவற் பயணமாக அமைபவை. இவற்றைப் பற்றிய செய்திகள் 'சிங்கப்பூரில் தமிழ்க் குடியேறிகள் படைத்த நான்கு பயண நூல்கள்' என்னும் கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.

சர்மாவும், சளைக்காப் பயணமும்

இவர் 1952 முதல் 36 ஆண்டுகள் தொடர்ந்து 'இந்தியன் மூவி நியூஸ்' என்னும் இதழின் ஆசிரியராகப் பணியாற்றியவர் 'கலையரசு' என்னும் விருதுபெற்ற எஸ்.எஸ். சர்மா. 'வேல்', 'அலை ஓசை' ஆகிய இதழ்களையும் பல்லாண்டு நடத்தியவர். சிங்கை வானொலியின் 'கலைவானம்' பகுதிக்கு முப்பத்தி நான்கு ஆண்டுகட்கும் மேலாக எழுதியவர். வானொலி, தொலைக்காட்சி, மேடை நாடகத் துறையிலும் நிறையப் பங்காற்றியுள்ளார். 'இந்தியக் கலை மன்றத்தைத்' தொடங்கி முப்பத்தைந்து நாடகங்கள், நடனம் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்த வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். ஆன்மீகப் பயணம், கலைப் பயணம், அறிவுப் பயணம் எனப் பல வகைப் பயணங்களைச் சளைக்காமல் மேற்கொண்டவர் சர்மா. பதினான்கு நூல்களைப் படைத்துள்ள திரு. சர்மாவின் பயண அனுபவங்களை விவரிக்கும் நூல்களின் எண்ணிக்கை ஒன்பது ஆகும். தமிழகத்தின் 'உலகம் சுற்றிய தமிழன்' என்னும் புகழாரத்திற்குரிய திரு. ஏ.கே. செட்டியார் போல இவரையும் அழைக்கத் தோன்றுகிறது.

சர்மாவும், ஆளுமை காட்டும் தமிழகப் பயணமும்

சர்மா சிங்கப்பூரிலேயே பிறந்து வளர்ந்த சிங்கப்பூர்க் குடிமகனாக 1978இல் குறுகிய காலப் பயணம் மேற்கொண்டு தமிழகம் சென்றவர். தம் அனுபவங்களைத் 'தமிழ்நாட்டில் எட்டு நாட்கள் ' என்னும் நல்ல நூலாக வடித்துள்ளார். இவர் ஆன்மீகப் பயணத்தை மேற்கொண் டாலும், கலை, இலக்கியம், கலாச்சாரம் எனப் பல்வேறு துறைகளை களையும் பேசும் பயண நூலாகத் தம் நூலைப் படைத்துள்ளார். ஓர் அவசரப் பயணமாக இருப்பினும், ஓட்டமும் விறுவிறுப்பும் கொண்ட சரளமான தமிழ் நடையில், தம் பயண அனுபவங்களை நகைச்சுவை இழையோட விவரித்துள்ளார் ஆசிரியர். திருத்தலப் பயணங்களை மேற்கொள்வார்க்கு இந்நூல் அரிய கையேடு. பல புதிய செய்திகளைத் தம் நூலில் பொதிந்துள்ளார் இந்நூலாசிரியர். எடுத்துக்காட்டுக்குச் சிதம்பரத்தில் அமைந்த ஞானசம்பந்தர் திருக்கோயில்; ஆரியபட்டர்கள், நம்பிகள் ஆகியோர் யாவர்? கும்பகோணம் சாரங்கபாணி கோவிலில் உள்ள கருவறைக் கோவில் பற்றிய புதுமையான செய்தி போன்றவற்றைச் சான்றாகக் கூறலாம்.

ஆன்மீகப் பெருமையும், கலைச் சிறப்பும் வாய்ந்த திருத்தலச் சிற்பங்களின் அழகில் மெய்மறந்து திளைக்க வைக்கிறது இந்நூல். கலையின் அருமை புரியாமல் படிக்கட்டுக்களாக அமைக்கப்பட்ட கல்வெட்டுக்களையும், தரையிலே பதிக்கப்பட்ட கல்வெட்டுக்களையும், சிற்பங்களையும் காணும்போது கலையருமை தெரியாத மக்களை எண்ணி இவர் நெஞ்சம் கவல்கிறது. பாழடைந்த நிலையில் இருக்கும் இராசஇராசேச்வரம், தாராசுரம் போன்ற கோவில்களை அரசாங்கம் கவனிக்காது விட்டுவிட்டதாகக் கவலைப்படும் இவர் வசதி நிறைந்த மக்கள் புதிய ஆலயங்களைக் கட்டாமல் இப்படிப்பட்ட பழைய ஆலயங் களைப் புதுப்பிக்கலாமே! எனப் பொன்னான ஆலோசனையையும் கூறுகிறார்.

தமிழகப் ப்யணம் மேற்கொண்டாலும் தம் தாயகமான சிங்கப்பூரின் நினைவு அவ்வப்போது தோன்றி ஒப்பீட்டுப் பார்வையின் மூலம் சில தகவல்களைச் சொல்ல வைக்கிறது. சர்மாவின் இலக்கிய ஈடுபாட்டை ஆங்காங்கே காட்டப்படும் மேற்கோள்கள் தெளிவாக்கு கின்றன. பயண அனுபவங்களை 'ஒளிவுமறைவின்றி' ஓர் அயல்நாட்டவர் என்னும் கோணத்திலும் கூறியுள்ளார். தங்கும் விடுதி நடத்தும் தமிழர் ஒருவர் தம்மை ஏமாற்றிய அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் சிங்கப்பூரர்களை அவர் எச்சரித்துள்ளார். பற்பல தகவல்களின்

சுரங்கமாக உள்ள இப்பயண நூலில் 'சென்று தேய்ந்திறுதல்' என்னும் உத்திப்படி நகைச்சுவை இடம்பெறுகிறது. நூலின் தொடக்கத்தில் சுவாரஸ்யமாகப் படிக்க உதவிய நகைச்சுவை உணர்வு நூலின் இறுதியில் காணாமல் போய்விடுகிறது. 'தமிழகத்தில் எட்டு நாட்கள்' என்னும் இந்நூல் இந்நூலாசிரியரைக் கலைஞராக, ஆன்மீகவாதியாக, இலக்கிய ஆர்வலராக, படைப்புக் கலைஞனாக, மனிதநேயங் கொண்ட மனிதராக, தேர்ந்த எழுத்தாளராகப் படம்பிடித்துக் காட்டுகிறது. தமிழகத்தின் பொருளியல் வறுமையையும்; அருளியல், ஆன்மீகவியல், கலையியல் செழுமைகளையும் இவர் திரைப்படம் போலக் காட்டத் தவறவில்லை. பயண நூல்களுக்குரிய அம்சங்களைப் பெற்று விளங்கும் பான்மையும் பாராட்டுதற்குரியது.

சர்மாவும், இனிய ஈழப் பயண நினைவுகளும்

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ளச் செல்லுமுன் ஈழத்திற்குச் சென்ற திரு. சர்மா 'தந்தையர் நாடென்னும்' மகிழ்ச்சியிலே தம் பயண அனுபவங்களை 'ஈழத்தில் இனிய நாட்கள்' என்னும் நூலாக்கியுள்ளார். தம் குடும்பத்தினருடன் பயணம் செய்து, தம் புதல்வியரின் நாட்டிய நிகழ்ச்சிகளையும் இவர் நடத்தியுள்ளார். ஈழத்தின் தமிழ் மக்களுக்காகவும், அங்கு நடக்கும் இரத்தக்களரிக்காகவும் மனிதநேய அடிப்படையில் கண்ணீர் விடச் செய்கிறது இந்நூல். இலங்கையின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதியதோடு, இலங்கையின் எழில்மிகு காட்சிகள், தாம் சந்தித்த தலைவர்கள், கண்டுகளித்த இடங்கள், போராட்ட வெறியர்களின் அழிவு மனம் ஆகியவற்றையும் விவரித்துள்ளார். 'யான் கண்ட இலங்கை', 'இலங்கைச் செலவு' போன்ற பயணநூல்களுக்கு மத்தியில் சிங்கப்பூரர் ஒருவரின் பயண அனுபவமாக மிளிரும் இந்நூல் 'விருந்தோம்பல்' போன்ற இனிய, உயர்ந்த பண்புகளின் உறைவிட்மாக இலங்கைத் தமிழர்களைச் சித்திரிக்கிறது.

சர்மாவும், அருள் நாடும் ஆன்மீகப் பயணமும்

சர்மா அவர்களுக்குக் கலைகளின்பால் உள்ள ஈடுபாட்டைப் போலவே ஆன்மீகத் துறையிலும் ஆழ்ந்த பிடிப்புண்டு. இதன் விளைவாக உருவானவை மூன்று நூல்கள். 'கும்பகோணம் மாமாங்கம்', 'காஞ்சியின் மகிமை', 'இந்து சமயத்திற்கு இனிய விழா' ஆகியவை ஆன்மீகப் பயண நூல்களே. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் மகாமகப் பெருவிழா கேலிக்கூத்தாக நடைபெற்ற செய்தியைக்

'கும்பகோணம் மாமாங்கம்' என்னும் நூலில் காணலாம். சமயத்தின் பெயரால் நடக்கும் கேலிக்கூத்துகளை அம்பலப்படுத்தும் துணிவு இவரிடம் உண்டு. அதே வேளையில் குறைபாடுகளைச் சரி செய்து கொண்டு மன்னிக்கும் அருளுள்ளமும் உண்டு. மகாமகப் பெருங்குளத்தில் தமிழக முதல்வர் நீராடுவதைக் காணக் கூடிய கூட்டம், சுவர் இடிந்து விழுந்து பலர் மாண்ட பரிதாபம் ஆகியவை பற்றியும், ஏற்பாட்டாளர்களே திக்குமுக்காடிப்போன நிலையையும் இந்நூலில் விவரித்துள்ளார். 'காஞ்சியின் மகிமை' என்னும் நூலில் காஞ்சியின் சிறப்புகளைப் பற்றிய செய்திகளை பலருடைய பார்வையிலும், வரலாற்று அடிப்படையிலும் தந்துள்ளார். காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரியார் இந்து சமயத்தின் மிகப் பெரும் தலைவராயிருந்தும் 'போப் ஆண்டவர்' போல உலகம் முழுவதும் அறியப்படவில்லை என்னும் வேதனையையும் வெளிப்படுத்துகிறார்.

இலங்கையில் 1982இல் நடைபெற்ற 'உலக இந்து சமய மாநாட்டி'ல் கலந்துகொண்ட சர்மா, இம்மாநாட்டில் 'தென்கிழக்கு ஆசியாவில் இந்து சமயம்' என்னும் ஆய்வுக் கட்டுரை படித்தார்.

இம்மாநாட்டு அனுபவங்களே 'இந்து சமயத்திற்கு இனிய விழா' என்னும் நல்ல நூலாக எழ அடிப்படையாயின. வழக்கம் போல விறுவிறுப்பூட்டும் தமிழ்நடை இவரது சிறப்புக்கும், நூலின் வெற்றிக்கும் காரணமாகியுள்ளது. இலங்கைப் பயணம் மேற்கொள்வோர் அங்குள்ள திருத்தலங்களின் மாண்பினைக் கண்டுகளிக்க உதவும் பயனுள்ள நூலாக இது அமைகிறது. இலங்கையின் எழிலை உள்ளது உள்ளவாறே படம் பிடித்துக் காட்டும் ஆசிரியர் தம் பயணத்தின்போது அவ்வப்போது சிங்கப்பூரையும் நினைவுகூர்கிறார். சிங்களர்களின் வெறியால் தரைமட்டமான தமிழர்தம் ஆலயங்கள், நூலகங்கள் என ஒவ்வொரு வரலாற்றுச் சின்னத்தின் அழிவுகளை இந்நூலின் வாயிலாகப் படிக்கும் போது நம் மனம் கவல்கிறது. இந்து சமய மாநாட்டின் நேர்முக வருணனை என்றுகூட இப்பயண நூலை வருணிக்கலாம்.

சர்மாவும், சுவர்ணத் தீவுப் பயணமும்

சுமத்ரா என்ற வடசொல்லின் பொருள் தங்கம் என்பதாகும். இத்தீவு இந்தோனேசியாவின் மிகப் பெரிய மாநிலமாகும்,. இத்தீவுக்கு இரண்டு தடவை பயணமாகச் சென்ற சர்மா, 'சுவர்ணத் தீவில் தங்கத் தமிழர்கள்' என்னும் கட்டுரையைத் 'தமிழ்மலரி'ல் 1970களில் எழுதினார். இருபதாண்டுகளுக்குப் பின்னர் சுமத்ராவுக்கு இரண்டாம் முறை சென்ற

பின் இப்பயண நூல் பிறந்தது. 1970இல் இந்தியக் கலை மன்றத்தின் மூலம் ஒரு கலைக் குழுவை அழைத்துச் சென்று 'எடுக்காத படம்' என்னும் நகைச்சுவை நாடகத்தை சுமத்ராவில் படைத்தார். பின்னரும் கலைப் பயணத்தை மேற்கொண்ட சர்மா மேடானில் தன் படைப்புகளுக்குக் கிடைத்த வெற்றி பற்றியும், மேடான் நகர், மேடானில் இந்துக் கோவில்கள், மேடான் நகரத்தார் பணி எனப் பல செய்திகளைப் பயணநூற் கூறுகளுடன் எழுதியுள்ளார். இந்தோனேசியாவில் சுதந்திரத் துக்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் பற்பல. அவை இந்து சமய நடவடிக்கைகள் பலவற்றை முடக்கிவிட்டதாக அறிகிறோம். எடுத்துக்காட்டாகத் தைப்பூசத் தேர்விழாவும், மேடான் நகரின் முக்கிய வீதிகளை வலம் வரும் தேரோட்டமும் நின்றுவிட்டன. நகரத்தார்கள் எங்கு சென்றாலும் முருகனுக்குக் கோயில் எழுப்பும் வழக்கத்தைக் கொண்டிருந்ததை விரிவாகவே பாராட்டுகின்றார் இந்நூலாசிரியர். இப்போது வாழும் தமிழர்கள் இருபதாண்டுகளுக்கு முன்பிருந்ததை விடத் தமிழ் மொழியிலும் பண்பாட்டிலும் ஆர்வம் காட்டுவதையும் இந்நூல் வழி அறிகிறோம். 'ஓம் தத்துவமசி' என்று கூறி மணமக்களை வாழ்த்தும் பாலி பிரமுகர்களும் நம்மை வியக்க வைக்கிறார்கள். இந்தோனேசியாவில் உள்ள சமோசிர், தாவோ போன்ற தீவுகள், அங்கு நிலவும் மூடநம்பிக்கைகள், சுயநலத்தின் பொருட்டு வனவிலங்குகள் அழிக்கப்பட்டு வரும் கொடுமை போன்ற பல செய்திகளையும் தரும் இந்நூல் இயற்கையழகைக் கண்டு உல்லாசமடையவும் நமக்கு உதவும் பயனுள்ள நூலாகும். இவர் சுமத்ரா என்றொரு சொர்க்கம் சிங்கப் பூருக்கு அருகிலுள்ளதைத் தம் பயணத்தின் வழி உணர்த்தி உள்ளார்.

சர்மாவும், திருவோடு தரும் சீசெல்ஸ் பயணமும்

திரு. சர்மாவும் அவரது கலைக் குழுவினரும் மேற்கொண்ட கலைப் பயணமே சிசெல்ஸ் நாட்டுப் பயணமாகும். இந்தியப் பெருங் கடலில் மடகாஸ்கர் அருகே உள்ள இத்தீவு இயற்கையெழில் கொஞ்சும் தீவென அறிகிறோம். 'சிசெல்ஸ் நாட்டில் சில நாட்கள்' என்னும் நூல் சிசெல்ஸ் தீவின் முழுமையான படப்பிடிப்பு. இங்கு வாழும் தமிழர்கள் 'தவில்' என்னும் இசைக்கருவியைப் பார்த்ததே இல்லை என்னும் செய்தி நமக்கு வியப்பளிக்கிறது. தமிழர்கள் செல்வச் செழிப்புடன் வாழும் இடங்களில் இத்தீவும் ஒன்றாகும். சிசெல்ஸ் நாட்டில் விஷ ஜந்துக்கள் இல்லை என்னும் செய்தி நம்மை ஆச்சரியத்துக்கு உள்ளாக்குகிறது. அந்நாட்டு மக்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் ஆங்கில விளக்கங்கள்

அளித்துக் கலை நிகழ்ச்சியை நடத்தியதும், முதன் முதலாக மேளக் கச்சேரியையும், நாதசுரக் கச்சேரியையும் நடத்தி வெற்றி கண்டதும் சர்மா கலைக் குழுவினரின் வெற்றிப் பயணமாக, இந்தியக் கலைகளின் பெருமையை நிலைநாட்டும் பயணமாக அமைகிறது. துறவிகளின் கையை விட்டகலாத திருவோட்டின் பிறப்பிடம் சீசெல்ஸ் தீவே. திருவோடு தரும் 'கோக்கோ டி மெர்' என்னும் ஒரு வகைப் பனைமரம் இந்நாட்டின் அரசாங்கச் சின்னத்தில் இடம்பெற்றுள்ளது. ஆண், பெண் பிறப்புறுப்புக்களைக் கொண்ட இந்த அதிசய மரத்தினை 'அறிவு தரும் மரம்' என்றழைக்கின்றனர். மருத்துவ குணம் கொண்ட 'திருவோடு' விளையும் ஒரே நாடு சீசெல்ஸ் என்பன போன்ற சுவையான தகவல் களைத் தரும் சுவையான பயண நூலாக இந்நூல் விளங்குகிறது.

சர்மாவும், அதிசயிக்க வைக்கும் ஐரோப்பாப் பயணமும்

பயணம் செய்வதைக் கலையாகக் கருதும் திரு. சர்மா அவர்கள் தம் ஐரோப்பியப் பயண அனுபவங்களை 'அடேயப்பா! ஐரோப்பா' என்னும் நூலில் விளக்கியுள்ளார். நூலின் பெயரைப் பொறுத்த அளவில் மலைப்பே ஏற்படுகிறது. ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றைப் பற்றியும் சமூக, அரசியல், பொருளாதாரம், கலை, கலாச்சாரம், வரலாறு எனப் பல்வேறு கோணங்களில் நுணுக்கமான தகவல்களைச் சுவையாகவும், கச்சிதமாகவும் தருகிறார் சர்மா. 'இந்தியன் ரூ வி நியூஸ்' என்னும் ஜனரஞ்சகப் பத்திரிகை ஆசிரியராகப் பழுத்த அனுபவ ம் பெற்ற இவரின் தமிழ் நடை ஆற்றொழுக்காக அமைந்து பயண நூலை ஆர்வத்துடன் படிக்கத் தூண்டுகிறது. இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளதினின்று இவர் பயண நூல் படைப்பதில் வல்லமை உடையவர் என அறிகிறோம். ஒவ்வொரு நாட்டைப் பார்க்கும்போதும் சிங்கப்பூரோடு ஒப்பிட்டுப் பார்க்கும் ஒப்பீட்டு அணுகுமுறை இவரை அடையாளங் காட்டும் உத்தியாகும்.

ஐரோப்பாவில் 'டிப்ஸ்' பெற்ற செல்வாக்கு, நள்ளிரவிலும் சூரியனைக் காணும் நார்வே போன்ற நாடுகளைப் பார்க்கும்போது சர்மாவுக்கு உதிக்கும் பூலோகம், தேவலோகம் பற்றிய புராணச் செய்தி, பிரிட்டிஷார் முன்பு போல் வீரநடை போட்டுக் கர்ஜித்த சிங்கம் அல்ல; ஓய்ந்துவிட்ட சிங்கம் என வருணிக்கும் எள்ளல் நடை, ஷேக்ஸ்பியர் பிறந்த ஹார்விக்ஷயர் என்னும் இடம் பழமைப் பொலிவோடு காட்சியளிக்கும் பாங்கு, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ண முமாக அடிக்கடி மாறும் சிங்கப்பூர், சிங்கப்பூர்க் கலை விழாவுக்கு

முன்னோடியான எடின்பரோ கலை விழா, 'பேய்களின் மாட் டிறைச்சித் தொட்டி' என்னும் வினோதமான பெயர், சிங்கப்பூரர்களின் 'கியாசு' மனப்பான்மை, பூக்களைக் காணும் சர்மாவின் உள்ளம் ஹாலந்து தேசத்திலிருந்து மலேசியா, சிங்கப்பூர், தமிழ்நாடு நோக்கிப் பயணம் செய்து பூச்சூடும் பூவையரை நினைப்பது, டச்சுக்காரர்களின் அறிவாற்றல், விளையாட்டுத் திறமை, ரோமானியப் பெண்கள் கற்பழிக்கப்படாமல் இருக்க எஃகினாலான பட்டையை இடையுடன் சேர்த்துப் பூட்டுப் போட்டுச் சாவியை வைத்திருக்கும் பழங்கால ரோமனியர்களின் வழக்கம் போன்ற தகவல்களை வியக்க வைக்கும் வகையில் விளக்குகிறார் இந்நூலாசிரியர். ரோம் நகரச் சிலையை வருணிக்கும் வழிகாட்டி 'உடை தேடப் போயிருக்கிறார்' என வருணிக்கும் நகைச்சுவை உணர்வு போன்றவற்றை மறக்க இயலாது.

வாசகர்களைக் கவரும் எழுத்தாற்றல், விஷயஞானம், உணர்வு பூர்வமான எழுத்துக்கள், ஒளிவுமறைவின்றிக் கூறும் ஆற்றல், குறை களைத் துணிவுடன் கூறும் வல்லமை, இலக்கியம் போன்ற பல்துறைகளில் நாட்டம் எனப் பல திறன்கள் கொண்டவர் சர்மா. இவர் மனைவியும் தன் எகிப்தியப் பயண அனுபவங்களை 'எகிப்தின் மகிமை' என்னும் நூலாக்கியுள்ளார்.

பல்வகைப் பயணமும், பயணக்கலை மாண்பும்

சர்மாவின் கலைப் பயணம் 'நிதி திரட்டும்' நல்லெண்ணப் பயண மாக அமைந்து இந்தோனீசிய மக்களுக்கு (மேடான்) உதவியுள்ளது. ஆலயம் அமைக்க 'நிதி திரட்டும்' பயணமாகவும், ஆன்மீக வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட பயணமாகவும் அமைந்து 'சீசெல்ஸ்' நாட்டுக்குச் சிறப்புச் சேர்த்துள்ளது. 'ஹாய் ஹவாயி' என்னும் பயண நூல் உல்லாசப் பயணம் மேற்கொள்வார்க்கு உதவும் நூலாக வெளிவந்துள்ளது. பிழைப்புக்காகப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தங்கள் வேர்களை மறந்துவிடாது இருக்க விழுத்துணையாக அமைய இருப்பது 'பாரதப் பயணம்' என்னும் பெருநூலாகும். இங்ஙனம் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் உயர் நோக்கோடு இவர் எழுதிய பயண நூல்கள் சிங்கப்பூர்ப் பயண இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பவை யாகும். தாம் செய்த கலைச்சேவைகளின் பதிவேடாகவும் இப்பயண நூல்கள் விளங்க வேண்டும் என்னும் நோக்குடனும் தம் இந்தியக் கலை மன்றத்தின் பணிகளை, கலைத் தொண்டை ஆங்காங்கே குறித்துள்ளார். ஆகவே இவற்றைச் சுயவிளம்பரம் எனக் கொள்ளக் கூடாது. பயன்

தரும் பயணக் கலையின் மாண்பு சர்மாவின் நூல்களில் எதிரொலிப்பது சுகமாகவே அமைகிறது!

சுதர்மனும், சுற்றுப்பயண அனுபவங்களும்

திரு. வை.சுதர்மன் அவர்கள் சிங்கப்பூரின் பொதுப் பணியில் ஈடுபட்டுப் பொதுவாழ்வு வாழ்ந்த ஒரு தமிழர். தமிழுணர்வும், ஆர்வமும் மிகப் பெற்றவர். இவர் உலகத்தமிழ் மாநாடுகளில் (ஏழாவது, எட்டாவது) பங்கு பெற்ற அனுபவங்களை நூல் வடிவாக்கியுள்ளார். மொரிசியஸ், தஞ்சாவூர் பற்றிய பயண அனுபவங்களை முறையே 'நினைவலைகள்' என்னும் நூலாகவும், 'இனிய நினைவுகள்' என்னும் நூலாகவும் எழுதி வெளியிட்டுள்ளார். ஆசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு தமிழ்ப் புரட்சியாளரான திரு. வை.சுதர்மன் அவர்கள் 'வரலாற்று நினைவுகள்' என்னும் நூலின் வழி நன்கு அறியப்பட்டவர். 'சமயத்தால் ஓர் உலகம்' என்னும் நூல் இவருடைய அமெரிக்கப் பயண அனுபவம் பற்றியதாகும். 'அலைகள்' என்னும் நூலில் 'நான் கண்ட நாடும் நகரும்' என்னுந் தலைப்பில் துபாய், கொமரோஸ் நாடுகள், கொமோரியன், ஜொகன்னஸ்பர்க், ஹொசிமின் நகர் ஆகியவை பற்றி எழுதியுள்ளார். இவர் எழுத வேண்டும் என்னும் முனைப்புடன் எழுதிய ஆர்வத்தையும், உணர்வையும் மதித்துப் போற்றலாம். வை.சுதர்மனின் நூல்கள் முற்றிலும் பயண நூல்களாகக் கருதத் தக்கவை அல்ல. அவருடைய குடும்பத்தைப் பற்றிய செய்திகள், நிழற்படங்கள் ஆகியவை நூல்களில் அமைந்திருப்பதை நோக்க, நூல்கள் நினைவுச் சின்னங்கள் என்றே இவர் நினைத்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

பி.பி. காந்தம்

இவர் தமிழ் இலக்கிய ஆர்வலர், மொழிபெயர்ப்பாளர், இலக்கியப் படைப்பாளர் என்ற மூன்று நிலைகளில் சிங்கைத் தமிழர்களுக்கு நன்கு அறிமுகமானவர். இவர் சீன மொழிக் கதைகளை 'மரகதத் தெய்வம்' என்னும் பெயரில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். 'தூர தேசங்களில் சுகமான பயணங்கள்' என்னும் பயண நூலின் வழி, மேற்கையும் கிழக்கையும் இணைக்கும் வகையில் மக்களின் வாழ்வியலையும், அதன் கூறுகளான கலை, சமயம், பண்பாடு போன்றவற்றையும் பொருளியல், அறிவியல், வரலாறு போன்ற துறைகளையும் பதினோரு தலைப்புகளில் அடக்கிச் சுவையான தகவல்களை சுவாரஸ்யமான முறையில் கூறியுள்ளார் நூலாசிரியர். பயண

நூல்களைப் பொறுத்தவரை இந்நூல் சிங்கப்பூரர் ஒருவரின் கன்னி முயற்சி ஆகும்.

முடிவுரை

சிங்கப்பூரிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்வோர் பலராக இருப்பினும் அனைவரும் தமது பயண அனுபவங்களை எழுத்தில் வடிப்பதில்லை. சிங்கப்பூரின் ஒரே நாளிதழான 'தமிழ்முரசி'ல் இடம்பெறும் பயணக் கட்டுரைகள் சிற்சிலவே. அவை பயண இலக்கியம் என்று வகைப்படுத்த இயலாதவை, தரமற்றவை. ஆயின் நூல்களில் பல தரமிக்க படைப்புகளாக உள்ளன.

(2003இல் இந்திய சாகித்திய அகாடெமிக்காக எழுதப்பட்ட கட்டுரை)

விருது பெற்ற வித்தகர்கள்

ஆக்கமும் அடையாளமும்

மனிதன் தன் அறிவாற்றலின் பலத்தாலும், பக்குவத்தாலும் உருவாக்கி வைத்த கலைகள் பற்பல. அவற்றுள் உன்னதமானது எழுத்துக் கலை. இக்கலையைப் படைக்கும் படைப்பாளன் அல்லது கலைஞன் வாழ்க்கை அனுபவங்களை, மனித சமுதாயத்தை, மனித நாகரிகங்களைக் கற்பனை மெருகோடு சொல்லில் வடித்தளிக்கும் ஆளுமை பெறும்போது எழுத்தாளன் ஆகிறான்.

தீர்க்கமான சிந்தனையும், தீவிரமான தவமும் ஒருங்கிணையும் போது படைப்பிலக்கியங்கள் முகிழ்க்கின்றன. சிந்தனைக்கு விருந்தளித்தும், மனப்பண்பாட்டைக் காத்தும், உயர்ந்த இலட்சியங் களைக் கொண்டும், இன, மொழி, தேச எல்லைகளைக் கடந்தும் இலக்கியப் படைப்புகளை எழுத்தாளன் சிருஷ்டிக்கிறான். இந்த சிருஷ்டி பலவகைப் பரிமாணங்களைக் கொண்டது. சிறுகதை, நெடுங் கதை எனப்படும் புதினம் (நாவல்), கவிதை, நாடகம் போன்றவை எழுத்தின் இலக்கியப் பரிமாணங்கள்.

மனிதகுல தர்மத்தைத் தமது அனுபவத் தேடலின் அடிநாத மாகவும், ஜீவநாடியாகவும் வெளிப்படுத்தும் இலக்கியப் படைப்புகளும், அவற்றின் சொந்தக்காரர்களாகிய எழுத்தாளர்களும் அடையாளம் காணப்பட்டு, விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப் படுகின்றனர். உண்மையில் இவ்வகை அங்கீகாரங்களுக்காக எழுத் தாளன் படைப்பிலக்கியங்களைச் சிருஷ்டிப்பதில்லை என்பதையும் இவண் நினைவுகூர வேண்டும்.

பரந்த அனுபவம், சுய கற்பனை, ஆழ்ந்தகன்ற அறிவு, சமூகப் பிரக்ஞை, நுட்பமான பார்வை, சொற்களைக் கொண்டு 'ரசவாதம்'

செய்யும் சொல்லாற்றல், மனிதநேயம் போன்ற பற்பல அம்சங்களின் எதிரொலியாக விளங்கும் படைப்புகள் எழுத்தாளன் வாழ்ந்த, வாழ்கின்ற காலத்தையும் பிரதிபலிக்கின்றன. எனவே இலக்கியங்கள் ஆவணங்களாக உருப்பெறுகின்றன. சமூக ஆவணமாக, சமுதாய ஆவணமாக, இலக்கிய ஆவணமாக, வரலாற்று ஆவணமாகப் படைப் பிலக்கியங்கள் கருதப்படுகின்றன. ஒரு நாட்டினைப் பற்றி அறிய விரும்புவோருக்கு இவை பெருந்துணை புரிகின்றன. எனவே படைப்பிலக்கியங்கள் 'பேர் சொல்லும் பெருமை' பெறுகின்றன. நாட்டையும் சிருஷ்டிகர்த்தாவையும் அடையாளம் காட்டும் கருவி களாகின்றன. சிலவகை சிருஷ்டிகள் வட்டாரம், நாடு என்னும் பூகோள எல்லைகளைக் கடந்தும் உலகளாவிய நிலையில் சிருஷ்டிகர்த்தாவின் பேரை ஒலிக்கச் செய்கின்றன. ஆகவே 'பேர் சொல்லும் பெருமையை' இலக்கியங்கள் பெறுகின்றன.

சிங்கைத் தமிழரும் படைப்புலகமும்

சிங்கப்பூர் ஒரு குடியேற்ற நாடு. தொடக்க காலத்தில் தமிழகம், இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து சிங்கப்பூரில் குடியேறிய தமிழர்கள் பொருளாதார பலத்திற்காக இந்நாட்டில் குடியேறினாலும் கலை, இலக்கியம் போன்றவற்றை மறக்கவில்லை. தங்களின் சிறுசிறு முயற்சிகள் மூலம் தங்களின் கலை, இலக்கிய ஆர்வத்தைப் புலப்படுத்தினர். சிங்கப்பூரில் நிகழ்ந்த அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களும் அவர்களைப் பாதித்தன. அவற்றின் எதிரொலிகளை விடுதலைக்கு முன்னர் தோன்றிய படைப்புகளில் காணலாம்.

சிங்கப்பூரில் தோன்றிய தமிழ் இலக்கிய முயற்சிகளையும், வெவ்வேறு காலகட்டங்களில் அவை மேற்கொள்ளப்பட்டதையும் கருத்திலே கொண்ட அமரர் நா. கோவிந்தசாமி, தொடக்கக் காலம் (1887 முதல் 1900 வரை), சீர்திருத்தக் காலம் (1930 முதல் 1942 வரை), ஜப்பானியர் காலம் (1942 முதல் 1945 வரை), இன எழுச்சிக் காலம் (1946 முதல் 1960 வரை), குழப்பமான அறுபதுகள் (1961 முதல் 1970 வரை), நிலைபெற்ற எழுபதுகள் (1971 முதல் 1980 வரை), அங்கீகாரம் கிடைத்த எண்பதுகள் (1981 முதல் 1989 வரை) என ஏழு பிரிவுகளாகப் பிரித்து ஆராய்ந்துள்ளார். இக்கட்டுரையும் இப்பாகுபாட்டை அடியொற்றி எழுதப்பட்டுள்ளது.

தொடக்கக் காலம் என்பது சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தின் தோற்றத்தை, தேசிய இலக்கியம் என்ற சிந்தனை விதைக்கப்பட்ட

காலத்தைக் குறிக்கிறது. சமுதாயத்தின் மேல்மட்டத்தினரால் மட்டுமே படிக்கப்பட்டும், பயன் துய்க்கப்பட்டும் வந்த இலக்கியம் சமுதாயத்தின் அடிமட்டத்தினரால், பொருளாதாரத் துறையில் நலிவுற்றவர்களால், சமூகக் கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்ட பின்தங்கியவர்களால் படைக்கப்பட்டு வளர்க்கப்பட்ட புதுமை சிங்கப்பூர் மண்ணில் நிகழ்ந்திருக்கிறது. குடியேறிகளாக வருவோரும், வாழ்வோரும் கலை, இலக்கியம் போன்றவற்றில் அக்கறை காட்ட மாட்டார்கள், பொருளாதார பலம் ஒன்றே அவர்களின் குறிக்கோளாக இருக்கும் என்பது சமூகவியலார் பொதுவாகக் கூறும் உண்மை ஆகும். ஆனால் இவ்வுண்மை பொய்த்துப் போனதைச் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாற்றில் காண்கிறோம். எனவே சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தின் மூலவர்கள் எனக் குடியேறிகளை வருணிப்பதில் தவறேதும் இருக்க முடியாது.

ஆறு தமிழ் நூல்கள் இங்கு தொடக்கக் காலத்தில் அச்சிடப் பட்டன. 1887ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சதாசிவப் பண்டிதர் சிங்கப்பூர் தீனோதயவேந்திர சாலையில் 'சிங்கை நகர் அந்தாதி', 'சித்திர கவிகள்' என்னும் இரு நூல்களை வெளியிட்டார். மகதூம் சாயபு என்பவரை ஆசிரியராகக் கொண்டு கிபி 1887 முதல் 1890ஆம் ஆண்டு வரை வெளிவந்த 'சிங்கை நேசன்' என்ற கிழமை இதழ் இவ்வச்சுக் கூடத்திலிருந்துதான் வெளிவந்தது. 'சிங்கை நேசன்' என்னும் இந்தக் கிழமை இதழ் சிங்கை நாட்டுத் தமிழ் மொழி வளர்ச்சியில் மிகப் பெரும்பங்காற்றியது.

1888ஆம் ஆண்டு மகதூம் சாயபு தம் கிழமை இதழில் 'வினோத சம்பாஷணை' என்ற பெயரில் எழுதிய சிறுகதைகள் தமிழ் இலக்கிய உலகில் தோன்றிய முதல் சிறுகதைகளாகக் கருதப்பட்டன. (நா. கோவிந்தசாமி, சிறுகதை வளர்ச்சி). மகமதூம் சாயபு ஆங்கிலத்தில் உள்ள 'நாவல்' என்னும் நூதனக் கட்டுக்கதைகளைத் தமிழில் உரு வாக்குதல், பல விஷயங்களை அடியொற்றிக் கதைகளை உருவாக்குதல், மலாய், சீனம், இந்துஸ்தானி கலந்த சிங்கப்பூர்த் தமிழைப் பிற தேசத்தார் அறிவதற்காக எழுதுதல், கற்பனைப் பாத்திரங்களைக் கொண்டு சிறுசிறு நிகழ்ச்சிகளைக் கதை வடிவாக்குதல் போன்ற பெருநோக்கங்களோடு (நா. கோவிந்தசாமி, சிறுகதை வளர்ச்சி) வினோத சம்பாஷணைகளை எழுதி வந்ததன் மூலம் தேசிய இலக்கியத்தின் நோக்கும் போக்கும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் திட்டவட்டமான சிந்தனை கொண்டிருந்தார் என அறிகிறோம். சிங்கப்பூர்த் தமிழ்ப் புனைகதை உலகின் மூலவர்; முன்னோடி என மகதூம் சாயபுவைக் கூறுவது சாலப்

பொருந்தும். வட்டார வண்ணம் (local colour) எனப்படும் மண்ணின் மணம் இக்கதைகளில் வீசக் காண்கிறோம்.

1893, 1907, 1936, 1937 ஆகிய நான்கு ஆண்டுகளில் வெளிவந்துள்ள 'அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி', 'சிங்கை நகர் வடிவேலர் காவடிச் சிந்து', 'புத்தர் ஆலய வழிநடைச் சிந்து', 'இந்தியக் கப்பல் பிரயாண வழிநடைச் சிந்து' ஆகிய நான்கு பயண நூல்களும் குடியேறிகள் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய உலகிற்கு ஆற்றியுள்ள பங்கினைத் தடம் அமைத்துக் கொடுத்த பாங்கினை வெளிக்காட்டுபவை. நாட்டுப்புற இலக்கியக் கூறுகளுடன் படைக்கப்பட்டவை. 'ஒரு நாட்டின் வரலாற்றை அறிய, மக்களின் மனப்பண்பைத் தெரிந்து கொள்ள, பழக்க வழக்கங்களைத் தொகுத்தறிய, நாகரிகச் சார்புகளை ஆய்ந்தறிய, உள்ளத்து உணர்ச்சிகளின் உருவத்தைப் படம் பிடிக்க நாட்டுப் பாடல்கள் துணைபுரிவன' (சு. சண்முகசுந்தரம், 1982) இவ்வடிப்படையில் சிங்கப்பூரின் வரலாற்றையும், குடியேறிய தமிழர்கள், பிற இனத்தார் ஆகியோரின் வாழ்க்கை நிலைகளையும், சமூக அக்கறையையும் இப்பயண நூல்கள் நன்கு சித்திரிக்கின்றன.

சீர்திருத்தக் காலகட்டத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட சமூக மாற்றம் இந்நாட்டு இலக்கியங்களிலும் சீர்திருத்த வேட்கையாக எதிரொலித்தது. ஈ.வெ.ரா. பெரியார் நடத்திய 'குடியரசு' இதழ் இந்நாட்டில் 'முன்னேற்றம்' என்னும் இதழைத் தொடங்கும் அளவிற்குச் சுயமரியாதைச் சிந்தனையை ஊட்டியது. பெரியாரின் சிங்கப்பூர், மலேசிய வருகை இலக்கிய உலகில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. 1932ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழர் சீர்திருத்த சங்கம் தோன்றியது. அதன் கொள்கை ஏடாகத் 'தமிழ் முரசு' இதழ் முகிழ்த்தது. 1934ஆம் ஆண்டில் கோ. சாரங்கபாணி நடத்திய ஸ்டார் பிரஸ் சில நூல்களை வெளியிட்டது. சுருங்கக் கூறின் 'தமிழ் முரசு' நாளிதழ் சிங்கைத் தமிழிலக்கியப் படைப்பிலக்கியப் பரப்பை விரிவுபடுத்த வேரும் விழுதுமாக அமைந்தது.

1936 முதல் 1942 வரையில் ந. பழநிவேலு எழுதியவை ஏராளமாகத் 'தமிழ் முரசி'ல் வெளியிடப்பட்டன. ந. பழநிவேலு சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்தவர் அல்லர். தமிழகத்திலிருந்து இங்கு குடியேறியவர். ஆகவே அவருடைய படைப்புகளில் அதிகம் தமிழகச் செல்வாக்கே காணப்பட்டது. தொடக்க காலத்தில் வாழ்ந்த குடியேறித் தமிழர்கள் போன்று சிங்கப்பூரின் பிரச்னைகளையோ அல்லது வட்டார வண்ணத்தையோ படைப்புகளில் கொண்டுவர அவரால் இயலவில்லை.

ஜப்பானியர் ஆட்சிக் காலம் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை இருண்ட காலமாகவே கருதப்பட வேண்டும். ஜப்பானியர்களைச் சகோதரர்களாகக் கருதியதோடு ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து விரட்டுவது என்னும் ஒரே எண்ணந்தான் சிங்கப்பூர் இந்தியர்களிடம் மேலோங்கியிருந்தது. இந்த எண்ணத்தின் வெளிப்பாடு கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் மிகுதியான எண்ணிக்கையில் வெளியாயிற்று.

இன எழுச்சிக் காலகட்டத்தில் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் உயிர்ப்புடன் மீண்டும் தழைக்கத் தொடங்கியது. 'பேனா முனை', 'திராவிட முரசு' போன்ற இதழ்கள் வெளிவந்தன. சிங்கையில் வாழ்ந்த சீனர்கள், மலாய்க்காரர்கள் ஆகியோர் இன, மொழி, பண்பாட்டு மேம்பாடுகளைத் தீவிரப்படுத்தியது போன்று தமிழர்களும் தமிழ்க் கல்வியின் வாயிலாகத் தங்களின் மொழி வளர்ச்சிக்கும், இன எழுச்சிக்கும் முனைப்போடு பாடுபட்டனர். இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கும் வகையில் திரு. வை.திருநாவுக்கரசு, அ. முருகையன், முருகு சுப்பிரமணியன் ஆகியோர் 'தமிழ் முரசு' இதழில் பணியாற்றினர். மலேசியாவில் சுப. நாராயணன், பைரோஜி நாராயணன் ஆகிய இருவரும் கதை வகுப்பைத் 'தமிழ் நேசன்' பத்திரிகை வாயிலாக நடத்தினர். அதைப் போன்று 'தமிழ் முரசு' 'ரசனை வகுப்பைத்' தொடங்கியது. 'ரசனை வகுப்பு' இலக்கிய ரசனையையே நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டது. சுப. நாராயணனின் தலைமையில் ரசனை வகுப்பு (மூன்று மாதங்களே) நடைபெற்றாலும் இலக்கிய விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தியதில் முக்கியப் பங்கு வகித்தது. இக்கால கட்டத்தில் 'எழுத்தாளர் பேரவை' என்ற அமைப்பு தோன்றியது. 'தமிழ் முரசு' மாதாந்திரச் சிறுகதைப் போட்டியைத் தொடர்ந்து நடத்தியது. 1953இல் எழுத்துப் பயிற்சி அரங்கம் 'மாணவர் மணிமன்றம்' என்னும் பெயருடன் 'தமிழ் முரசில் தொடங்கப்பட்டது. இக்கால கட்டத்தில் எழுத்தாளர்கள் பலர் தோன்றி எழுதினர். சிங்கப்பூர்ப் பின்னணியில் இவ்வெழுத்தாளர்கள் ஆர்வம் காட்டினர். ஆகவே அவை யதார்த்த வாழ்வைச் சித்திரிக்க முயலும் செல்நெறியை - போக்கைப் பிரதிபலிக்கின்றன எனலாம்.

குழப்பமான அறுபதுகளில் மலேசிய உதயம், இந்தோனீசிய எதிர்ப்பு, இனக்கலவரங்கள் போன்றவை சிங்கப்பூர்த் தமிழ்க் கவிஞர் களுக்குப் பாடுபொருளாயின. ஆதலின் அவை பிரசார நெடி கொண்ட கவிதைகளாகவே திகழ்ந்தன. இந்தப் பிரச்னைகளைப் புனைகதை

எழுத்தாளர்கள் கவனித்ததாகச் சான்றில்லை. 1963இல் தமிழ்முரசின் வேலை நிறுத்தத்தால் 'தமிழ் மலர்' என்னும் நாளேடு பிறந்தது. இந்நிலையில் சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்தது. மலேசிய சிங்கப்பூர் இணைப்பினால் தாங்கள் சிங்கப்பூரரா அல்லது மலேசியரா என்ற குழப்பம் எழுத்தாளர்களுக்கிடையில் நிலவியது. இந்நிலை இக்காலகட்டக் கவிதைப் படைப்புகளில் தெற்றெனப் புலப்படுகிறது.

குழப்பமான அறுபதுகளில் நாட்டின் அரசியல் நிலையில் குழப்பம் நிலவினாலும் தமிழ்ச் சிறுகதை உயர்நிலையை அடைவதற்கான தகுதியை எட்டிப் பிடிக்கும் இலக்கை நோக்கிப் பயணம் செய்ததாக இக்காலகட்டத்தை வருணிக்கிறார் நா. கோவிந்தசாமி.

பிரிவும் பெருக்கமும்

ஆங்கிலக் காலனித்துவ ஆட்சியினின்று விடுபட்ட சிங்கப்பூர் தனி நாடாகப் பிரிந்தது படைப்பிலக்கியத் துறையிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. பல்லினக் கலாச்சாரச் சூழல், இலக்கியப் பரப்பின் விரிவு, பல்வேறு இலக்கிய உத்திகள், சிங்கப்பூர் மண்ணின் மணம் போன்ற விசேஷத் தன்மைகள் விடுதலைக்குப் பிந்திய இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டு உள்ளன. சிங்கப்பூர்த் தமிழிலக்கியப் புலம் 1965க்குப் பிறகு விரிவடைந்தது. எழுதும் ஆர்வம் மக்களிடையே பெருகத் தொடங்கியது. எழுத்தாளர் என்று சொல்லிக்கொள்லதில் பலர் பெருமை அடையத் தொடங்கினர். பல்வேறு அமைப்புகள் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆதரவாக அமைந்தன.

விரிவும் வரையறையும்

சிங்கப்பூரில் 1965க்குப் பிறகு தமிழில் எழுதுவோர் பெருகினாலும் எழுத்தாளுமை பெற்றவர்கள் மிகச் சிலரே. 'இலக்கிய அந்தஸ்து' என்னும் தகுதியைப் பெற்ற படைப்பிலக்கியங்களும் சிலவே. முன்னர் கூறியபடி சிங்கப்பூரை அடையாளம் காட்டும் படைப்புகளும், அவற்றை சிருஷ்டித்த இலக்கியகர்த்தாக்களும் 'விருது பெற்ற வித்தகர்களாக' விளங்குகின்றனர். இவர்களுள் சிங்கை முகிலன், ந. பழநிவேலு, சே.வெ. சண்முகம், நா. கோவிந்தசாமி ஆகியோர் இன்று நம்மிடையே இல்லை. இவர்களின் இலக்கியப் படைப்புகள் படைப்பாற்றல் திறன், ஆளுமை, சிங்கப்பூர்த் தமிழிலக்கிய வளர்ச்சியில் இவர்களின் பங்கும் பணியும் போன்ற பல அணுகுமுறைகளில் ஆராய்வதற்கு இடமளிக்கின்றன. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாற்றில், மூத்த எழுத்தாளர்களாகிய

இவர்களின் பணி சிறப்பிடம் பெறுகிறது. ஆகவே இவர்களைப் பற்றி அறிவது அவசியமாகிறது.

சிங்கை மா. இளங்கண்ணன். இராம. கண்ணபிரான், பி. கிருஷ்ணன், இளங்கோவன், க.து.மு. இக்பால், பரணன், முருகதாசன், கனகலதா, ச. வரதன் ஆகியோர் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் எழுத்தாளர்கள் ஆவர். முன்னர் குறிப்பிட்டபடி சிங்கைத் தமிழிலக்கிய வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க பங்காற்றியோர் என்ற நிலையிலும் காலந்தோறும் இலக்கியத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் பற்றி அறியவும், மேலும் இலக்கிய வளர்ச்சிக்கு அது எதிர் காலத்தில் உந்துசக்தியாக விளங்கும் என்ற நிலையிலும் இவ்வெழுத் தாளர்களைப் பற்றி அறிவதும் மிகவும் அவசியமான ஒன்றே. கனகலதா மட்டும் இன்னும் பரிசுகள் பெறவில்லை. ஆயினும் தரமான கவிதைகள் படைக்கும் வல்லமை உடையவர் என்ற காரணத்தினாலும் இக்கட்டுரை இவரைப் பற்றியும் பேசுகிறது.

எழுத்தாளர்களை அவர்தம் படைப்புகளின் வழியேயும், நேர் காணல்களின் வழியேயும், அவர்தம் படைப்புகள் பற்றிய கட்டுரைகள் போன்ற இன்னபிற தரவுகளின் வழியேயும் அடையாளம் கண்டு முழுமையும் நடுநிலையான கண்ணோட்டத்துடன் இக்கட்டுரை படைக்கப்பட்டுள்ளது. விருப்பு, வெறுப்புக்கு அப்பாற்பட்டுத் 'துலாக் கோல் போல' ஆராயும் மனநிலையில் முகிழ்க்கிறது இக்கட்டுரை. சில எழுத்தாளர்களை ஒரு சில பக்கங்களுக்குள் எழுதியிருப்பதும் மற்றும் சிலரைப் பல பக்கங்களுக்கு விரித்து எழுதியிருப்பதும் பாரபட்சமான பார்வையாலன்று. எதிர்காலப் படைப்புகளின் இலக்கு எதை நோக்கி யிருக்க வேண்டும் என்பதனாலேயே ஆகும். மேலும் எழுத்தாற்றலும், எழுத்தாளுமையும் எண்ணிக்கையால் மதிப்பிடப்படுபவை அல்ல என்னும் அழுத்தமான நம்பிக்கையும் இக்கட்டுரை இவ்வாறமையக் காரணமாகும். சிலவேளைகளில் நிறைய எழுதுபவர்கள் நிறைவாக எழுதுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. தமிழர்கள் எத்தகைய சூழ்நிலையில் இலக்கியம் படைத்தார்கள் என்பதை விளக்கும் பொருட்டே வரலாற்று அடிப்படையில் சில குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ளன.

மூத்தவரும் முதிர்ச்சியும்

நா. அப்துல் ரகுமான் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் தமிழகத்தில் பிறந்தவர். திரைகடல் தாண்டித் திரவியம் தேடும்

பொருட்டு மலையகம் வந்தவர். மரபுக் கவிதைகளில் ஆழங்காற் பட்டவர். இவருடைய படைப்புகள் அனைத்தும் மரபுக் கவிதைகளே. இவர் முதன்முதலில் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் 'குடியரசு' இதழில் கவிதை எழுதத் தொடங்கினார். 1938இல் பிரசுரமான அக்கவிதை சிங்கை முகிலனின் படைப்பிலக்கிய வேகத்திற்கு உந்துதல் ஆனது. 'தமிழ் ஒலிக் கீதம்' இரு தொகுதிகள் (1939, 1941); 'திராவிட மணிக் கீதம்' (1940), 'இந்திய தேசிய ராணுவ நினைவுக் கீதம்' (1946), 'இதயமலர்' (1952), 'துடிக்கும் உள்ளம்' (1954), 'இதய ஓசை' (1960), 'மனிதச் சுவடு' (1975), 'உருவகக் கதைகள்' (1976), 'நல்ல முடிவு' (1989), 'மனவீதி' (1989) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். இவற்றுள் உருவகக் கதைகள் என்னும் நூலைத் தவிர எஞ்சியவை அனைத்தும் கவிதை நூல்களே.

கவிஞர் சிங்கை முகிலன் தமிழ்ச் சமுதாயத்தின் மீது கொண்ட அக்கறை அவருடைய கவிதை நூல்கள் அனைத்திலும் 'ஊடும் பாவுமாக' இழையோடியுள்ளன. சீர்திருத்தக் கருத்துக்களை மிகவும் அதிகமாகக் கூறியுள்ளவர் சிங்கை முகிலனே. தன்னுடைய தமிழ்ச் சமூகம் அடைந் துள்ள இழிநிலை, அதில் மண்டிக் கிடக்கும் சீர்கேடுகள், பிற்போக்கான எண்ணங்கள் போன்றவை கவிஞரின் உள்ளத்தை வருத்தவே, அது நன்னிலை அடைய வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்தோடு சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறியுள்ளார். சிங்கை முகிலனின் கவிதைகள் 'காலக்கண்ணாடியாய்' அவர் காலத்திய தமிழ்ச் சமூகத்தைப் பிரதிபலிப்பதோடு, அச்சமூகம் பற்றிய விமர்சனமாயும் திகழ்கின்றன. இவர் மலாயா திராவிடர் சங்கத்திலிருந்து சீர்திருத்தப் பணி செய்தவர். ஆகவே இவரின் அனுபவங்களை, உள்ளது உள்ளபடி ஒளிக்காமல் வெளிப்படுத்தும் கவிதைகளாய் இவரது கவிதைகள் விளங்குகின்றன.

இவர் மனிதநேயம் மிக்கவர். இவருடைய கவிதைகள் அனைத் திலும் மனிதநேயம் மலிந்துள்ளது. தமிழ்ச் சமூகம் என்ற கோணத்தில் இல்லாமல் ஒரு மனிதன் என்ற நிலையில் வைத்துப் பார்த்தால் ஒரு சமூகப் பிரதிநிதி தரம் தாழ்ந்து போகாமலிருக்க அவர் நல்வழி காட்டுகிறார் என்று கூறலாம். எனவே சிங்கை முகிலனை அடையாளம் காட்டும் அம்சங்களாகச் சமூக சீர்திருத்தம், மனிதநேயம் ஆகியவற்றைச் சொல்வது தவறாகாது.

சிங்கை முகிலனின் கவிதைகள் 'வட்டார இலக்கியம்', 'தேசிய இலக்கியம்' என்னும் குறுகிய வட்டங்களுக்குள் அடைபடுவன அல்ல. உலகளாவிய பொதுநோக்கு அவரின் கவிதைகளில் தெற்றெனப் புலப்படுகின்றது. எகிப்தில் நடந்த படுகொலை ('மனவீதி' ப.52) எளிய

தமிழ்க் கவிஞனின் உள்ளத்தை வருத்துகின்றதைக் காண்கிறோம். விஞ்ஞானத்தில் வெற்றிகளைக் குவிக்கும் மனிதன் அருளுள்ளம் சிறிதும் இன்றி அணுகுண்டு மூலம் அவனிக்கு இழைத்து வரும் தீங்குகள் சிங்கை முகிலனின் சிந்தையைக் கலக்குகின்றன. அவர் படும் வேதனையின் எதிரொலி 'மனிதன்', 'குண்டு வெடிப்பும் குவலயத் துடிப்பும்', 'வழி இல்லையா', 'தாகம் இருக்க வேண்டும்', 'அமைதி எங்கே', 'சிந்தித்துப் பார் யார்' போன்ற பல கவிதைகளின் வழி ஒலிக்கின்றது. இங்ஙனம் பொதுமை தழுவிய நோக்கு அல்லது உலகளாவிய நோக்கு தமிழ்க் கவிஞர்க்குப் புதியதன்று. எனினும் சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தினை அணுகுவோர்க்குச் சிங்கப்பூர்த் தமிழ் கவிஞர்களுள் (மரபுக் கவிஞர் களுள்) சிங்கை முகிலன் தனித்து நிற்கும் பெற்றியை உணர்த்துவதாய் உள்ளது. சிறிய நாட்டில் வாழும் தமிழ் கவிஞனின் பார்வை விசாலப் பட்டிருக்கும் பாங்கினை இவருடைய கவிதைகள் படம்பிடித்துள்ளன.

கவிஞன் என்ற படைப்பாளன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் பாங்கினையும் சிங்கை முகிலனின் கவிதைகளில் காண் கிறோம். 'என் வழி' என்னும் கவிதை சிங்கை முகிலன் 'வணங்காமுடி' கவிஞனாய் நிற்பதை, அவர்தம் ஆளுமையை வெளிக்காட்டுகிறது. சிங்கை முகிலன் கவிதைகள் அவருடைய தமிழிலக்கியப் புலமையையும் யாப்பிலக்கணப் புலமையையும் எடுத்துரைக்கின்றன. தமிழ் மொழி ஒன்றை மட்டுமே கற்றுப் பெருமை பெற்ற கவிஞராக ஒரு மொழிப் புலமையில் ஒப்பற்றுத் திகழ்கிறார் முகிலன். 'எழுத்துத் திருடர்கள்' தமிழிலக்கிய உலகில் பெருகி வருவதையும் கவிதை இலக்கணங்கள் ஏதும் அறியாமல் கவிதை எழுதும் அவலம் பெருகுவதையும் ('கவி பெற்ற மாற்றம்', 'நல்ல முடிவு' ப. 34) கண்டு நொந்து போகிறார் இலக்கிய நேர்மை கொண்ட கவிஞர் முகிலன். பல்வேறு சுவைகள், பல்வேறு சந்தங்கள், உரையாடல் உத்தி, கதைப்பாடல் உத்தி, கற்பனை நயம் போன்றவை மிளிர நயமிக்க கவிதைகளைப் படைத்துள்ளார் முகிலன். இவர் 'கவிக்கடல்' என்னும் பட்டம் பெற்ற புலமையர். 'தமிழவேள் விருது', 'கலாசார விருது' என விருதுகள் பெற்ற வித்தகர்.

மரபும் புதுமையும்

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத் துறையில் கவிதைகள் மூலம் ஆற்றிய இலக்கியச் சேவைக்காக 'மோன் பிளாங்' இலக்கிய விருதும், தமிழவேள் விருதும், தென்கிழக்காசிய விருதும், 'கலாரத்னா' விருதும் பெற்றவர் கவிஞர் க.து.மு. இக்பால். 1958 முதல் கவிதைகள் எழுதி வரும்

இக்கவிஞர் பல்வேறு நாளிதழ்களிலும், சஞ்சிகைகளிலும் தம் கைவண்ணங்களை வெளியிட்டுள்ளார். சிங்கப்பூர் வானொலியின் தமிழ்ப் பிரிவின் மூலம் 'பாடிப் பழகுவோம்' என்னும் நிகழ்ச்சியின் வாயிலாக இருநூறுக்கும் மேற்பட்ட சிறுவர் கவிதைகளை எழுதி யுள்ளார். சிறுவர்க்குச் செந்தமிழ் வழங்கிய இக்கவிஞரின் கவிதைகள் 'வைரக் கற்கள்' என்னும் பெயர் கொண்ட நூலாக வெளிவந்துள்ளன. சிறுவர் இலக்கியம் படைத்த இக்கவிஞர் 'குழந்தை இலக்கியக் கவிஞராக' அறிமுகமாகிப் பின்னர் வளர்ச்சி பெற்று மரபுக் கவிஞராக 'இதய மலர்களை' வெளியிட்டுள்ளார். 'முகவரிகள்' என்னும் கவிதைத் தொகுப்பின் மூலம் கவிதைத் துறையில் தம்முடைய முகவரியை அடையாளத்தைப் பதித்துள்ளார். மரபுக் கவிதைத் துறையிலிருந்து புதுக் கவிதைகள் படைக்கும் ஆற்றல் பெற்றவராய்த் திகழ்கிறார். 'கனவுகள் வேண்டும்' என்னும் கவிதைத் தொகுப்பு 'புதுக் கவிஞராகவும்' கவிஞர் இக்பாலை அடையாளம் காட்டுகிறது. குழந்தைக் கவிஞர் ஒருவர் ஆயுள் முழுவதும் சிறுவர்களுக்காகவே எழுதிக்கொண்டு இருப்பாரானால் அது வளர்ச்சியாகாது. கவிஞர் இக்பால் இவ்வுண்மையை நன்கு உணர்ந்து தம்மை நன்றாக வளர்த்துக் கொண்டுள்ளார். 'அன்னை' என்னும் சிறுவர் கவிதைத் தொகுப்பை வழங்கிய இவருடைய கவிதைகள் பல்வேறு தொகுப்புகளிலும் இடம்பெற்றுள்ளன.

கவிதைத் துறையில் இவர் பெற்றிருக்கும் வளர்ச்சியின் காரண மாகக் கவிதை தொடர்பான பல்வேறு பொறுப்புகளும் இவரை நாடி வந்தன. 'ரிதம்' என்னும் சந்தங்கள் 'சிங்கப்பூர்க் கவிதைகள்' ஆயிரத் தாண்டுத் தொகுப்பின் பதிப்பாசிரியர் குழுவில் ஒருவராகவும், தேசியக் கலைகள் மன்றத்தின் தமிழ் இலக்கியப் பகுதியின் உறுப்பினர்களில் ஒருவராகவும் (Resource Panel Member) பணிபுரிந்துள்ளார். சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழக உறுப்பினரான இவர் 'தமிழ்முரசின் ஞாயிற்றுக் கிழமைப் பதிப்பில் வெளியிடப்படும் கவிதைப் பக்கத்தின் பொறுப்பையும் ஏற்றிருந்தார். 'தமிழ்முரசி'ன் கவிதைப் பக்கத்தை இவருடைய கவிதை ஒவ்வொரு ஞாயிறன்றும் அணி செய்தது. வானொலியின் தமிழ்ப் பிரிவுக்குக் கவிதைகள், நாடகங்கள், சிறுகதைகள் எனப் பல படைப்புகளைப் படைத்தளித்துள்ளார். 'தமிழ் முரசு', 'தமிழ் மலர்', 'தமிழ்நேசன்', 'மலேசிய நண்பன்', 'சிங்கா', 'பிறை', 'முஸ்லீம் முரசு', 'மலைநாடு', 'ஆனந்த விகடன்', 'நம் குரல்', 'மாதவி', 'தேசதூதன்', 'செம்பிறை', 'பிறைக்கொடி', 'மாணவன்' முதலிய பல பத்திரிகைகளில் கவிஞர் இக்பாலின் படைப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

மலேசிய வானொலியும் இவர் கவிதைகளை ஒலிபரப்பி உள்ளது. மலேசியாவில் 'தமிழ் கவிஞர்கள்' (1961), 'கவிக்குலம் போற்றும் தமிழவேள்' (1982), 'சிங்கப்பூர்க் கவிதைகள்' (1985), 'பயணங்கள்' (1997), 'மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' (1997), 'நினைவுகளும் ஆசைகளும்' (1998), 'சந்தங்கள்' (2000) ஆகிய தொகுப்பு நூல்களில் கவிஞர் இக்பாலின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

க.து.மு. இக்பால் எழுதிய 'தண்ணீர்' என்னும் கவிதை பெரு விரைவு இரயில்களில் இடம்பெற்றது. மரபுக் கவிதைகளில் சமுதாயம், மொழி, இயற்கை, புலவர்கள் போன்ற பல்வேறு பொருள்களையும் தனக்கென ஒரு பாணியை வகுத்துக்கொண்டு பாடும் போக்கைக் காணலாம். இவருடைய கற்பனைக்குச் 'சூரியப்பானை' போன்ற கவிதைகள் கட்டியம் கூறுவன.

ஒரு சமுதாயத்தின் பயணத்தில், அதன் இலக்கிய முன்னேற்றப் பாதையில் தடுமாற்றங்களும், வழிவிலகுதலும் நேராதிருக்கத் துணை புரிபவன் இலக்கிய விமர்சகன் (த. ராசு, புதிய நோக்கில் படைப் பிலக்கியம்). ஆனால் க.து.மு. இக்பால் தம்முடைய கவிதை யொன்றில் (விமர்சகன் பேசுகிறான்) விமர்சகனைத் தடுத்து நிறுத்தி உலகத்தைக் காப்பாற்ற நினைக்கிறார். பொதுவாகத் தமிழ் எழுத்தாளர்கள் பெரும்பாலோர் விமர்சனங்களைக் கண்டு பயப்படும் போக்கை இக்கவிதை காட்டுகிறது. இவரும் இதற்கு விதிவிலக்கல்லர்.

கவிதைத் துறையில் மரபுக்கவிதை, புதுக்கவிதை என்னும் இரு வகைக் கவிதைகளிலும் திறமைமிக்க இவர் அவ்வப்போது மொழிபெயர்ப்புக் கவிதைகளையும் வெளியிட்டு வருகிறார். 'கவிப்பூஞ் சோலை' என்னும் கவிதைச் சந்திப்பின் வழி இளங்கவிஞர்களை நெறிப்படுத்தி வருகிறார். தமிழகக் கவிஞர் அப்துல் ரகுமானின் தாக்கம் இவரிடம் உண்டு.

உணர்வும் ஊக்கமும்

கவிஞர் பரணனின் இயற்பெயர் சோ. வேலு என்பதாகும். மலையாளம் இவரது தாய்மொழியாக இருப்பினும் தமிழ் மொழி கற்றுக் கவிஞராக வளர்ந்தவர். மலாயாவில் பிறந்து, கேரளம் சென்று பின் 1958இல் சிங்கை வந்தார். 1963 முதல் 'பரணன்' என்னும் புனைபெயரில் கவிதைகள் புனையத் தொடங்கினார். 'எதிரொலி' (1982), 'மழை' (1984), 'தோணி' (1985), 'தென்றல்' (1985), 'தேன்கூடு' (1985) ஆகிய ஐந்து கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். 'சந்தங்கள்' என்னும் ஆயிரத்தாண்டுக்

கவிதைத் தொகுப்பிலும், ஆசியான் கவிதைத் தொகுப்பிலும், சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதைத் தொகுப்பிலும் இவருடைய கவிதைகள் இடம் பெற்றுள்ளன. சிங்கப்பூரில் தமிழ்க் கவிதைத் துறையில் இவரது பங்களிப்பு இவருக்குத் தென்கிழக்காசிய விருதைப் பெற்றுத் தந்தது. சிங்கப்பூர்த் தமிழர் பேரவையும், சிங்கப்பூர்த் தமிழர் இளையர் மன்றமும் இணைந்து நடத்திய ஆய்வரங்கில் '1984இல் சிங்கப்பூரில் தமிழ் இலக்கியம் - கவிதை ஒரு கண்ணோட்டம்' என்னும் தலைப்பில் கவிதை பற்றிய கட்டுரை ஒன்றைப் படைத்துள்ளார். சிங்கை வானொலியின் தமிழ்ப் பிரிவு நடத்திய 'பாடிப் பழகுவோம்' என்னும் நிகழ்ச்சியில் சிறுவர் கவிதைகளை வழங்கியவர் பரணன்.

வழக்கம் போல் சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதைகளில் இடம்பெறும் நாடு, தமிழ் மொழி, குடும்பம், சமூகம், இயற்கை, தலைவர்கள், நீதி, காதல், சோகம், குழந்தை, போன்ற பாடுபொருள்கள் இவரது கவிதைகளிலும் பாடப்படுகின்றன. இருப்பினும் பரணனின் முத்திரை பளிச்சிடும் இடங்களும் உள்ளன. 'உனக்குள்ளே ஒரு சாக்கடை' ('தேன்கூடு', ப.30), 'இலக்கணக் காதல்' ('தேன்கூடு', ப.49), 'தமிழ்லா' ('எதிரொலி', ப.12) போன்ற கவிதைகளைச் சான்று காட்டலாம். இவர் மரபுக் கவிதையின் அபிமானி என்பதால் புதுக்கவிதையை வெறுக்கிறார். ('எதிரொலி', ப.20) தோணி என்னும் நூலுக்கு முன்னுரை வழங்கிய திரு. கண்ணதாசன் தமிழை வாழ்விக்கும் வெறியராகப் பரணனைக் காண்கிறார்.

பரணன் 80களில் ஆர்வத்தோடு எழுதிக்கொண்டிருந்தார். நூல்களை வெளியிட்டார். ஆயின் இப்பொழுது அவருடைய இலக்கிய நடவடிக்கைகள் ஒன்றையும் பார்க்க முடிவதில்லை. அவர் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழக உறுப்பினராக உள்ளார் என்ற செய்தி மட்டுமே அறியக் கிடக்கிறது. பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்கள் தொடக் கத்தில் ஆர்வத்தோடும் துடிப்போடும் எழுதுகிறார்கள். பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றதும் இலக்கிய உலகில் காணாமல் போய் விடுகிறார்கள் என்பது வேதனைக்குரிய செய்தியாகும்.

வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளும் வேதனைகளும் இவர் களை வனவாசம் செய்ய வைத்துவிடுகின்றனவா? என எண்ண வேண்டி யுள்ளது. பரணன் போன்ற கவிஞர்கள் தொடர்ந்து எழுதியிருந்தால் நிறைய நூல்களை வெளியிட்டிருக்க முடியும். நிறைய இளங் கவிஞர்களை உருவாக்கி இருக்க முடியும். ஆனால் தமிழ்க் கவிஞர்களில் குறிப்பாக மரபுக்கவிஞர்கள் ஏன் இப்படிச் சிந்திப்பதில்லை?

'பழநி' என்னும் இயற்பெயர் கொண்ட இக்கவிஞர் பாத்தென்றல் முருகதாசன் என்று அழைக்கப்படுகிறார். சிங்கப்பூர்த் தமிழ்க் கவிஞர்களுள் (மரபுக்கவிஞர்களுள்) வேகமிக்க கவிதைகளால் தனித்து நிற்பவர் முருகதாசன். அறுபதுகளில் எழுதத் தொடங்கிய இவர் கடவுள் மறுப்புக் கொள்கையைக் கைக்கொண்டு பின் பக்திப் பாடல்கள் பாடியவர். 'வில்லுப்பாட்டு' என்னும் கலையைச் சிங்கையில் வாழ வைத்ததால், 'வில்லிசைக்கு வேந்தன்' எனப் போற்றப்படுபவர். இவர் 'முருகதாசன் கவிதைகள்' என்னும் பெயரில் நான்கு தொகுதிகள் வெளியிட்டுள்ளார். மேலும் பக்தி இலக்கியம், குழந்தை இலக்கியம் என்னும் துறைகளிலும் நூல்கள் வெளியிட்டுள்ளார். அவை முறையே 'திருமுருகன் காவடிச் சிந்து' (1975), 'வாழ்வருள்வாள் வடகாளி' (1990). 'தேன்மலர்கள்' (1989), 'மழலை மருந்து' (1990), 'அழகோவியம்' (1990), 'முருகதாசன் கவிதைகள்' (1990), சூரியதாகம்' (1997), 'நெற்றிக் கண்' (1997), 'வானவில்' (1997) என்பனவாகும். இவர் எழுதிய கவிதைகள் ஆசியான் கவிதைத் தொகுப்பிலும், 'சந்தங்கள்' என்னும் கவிதைத் தொகுப்பிலும், 'நினைவுகளும் ஆசைகளும்' போன்ற தொகுப்புகளிலும் இடம்பெற்றுள்ளன. சிங்கை வானொலியில் 'பாடிப் பழகுவோம்' என்னும் நிகழ்ச்சிக்காகச் சிறுவர் பாடல்களை வழங்கியவர். இவரும் மரபுக்கவிதை அபிமானியே. புதுக்கவிதையின்பால் இவர் கொண்ட வெறுப்பு 'எது கவிதை' ('சூரியதாகம்', பக். 21 முதல் 23 வரை) என்னும் கவிதை வழி புலனாகிறது. சிங்கையில் குடியேறிய தமிழர்கள் எத்தகைய துன்பங்களை அனுபவித்தார்கள் என்பதை 'நாதமில்லா வீணை' ('சூரியதாகம்', பக். 15 முதல் 17 வரை) என்னும் கவிதையின் வழி வெளிப்படுத்தியுள்ளார். பொதுவாக முருகதாசன் கவிதைகள் சுட்டெரிக்கும் சொற்களையும், அனல் பறக்கும் சுடுசொற்களையும் அதிகம் கொண்டவை என்பதை யாரும் மறுக்கவியலாது. இவரும் தமிழ் வளர்க்கும் வெறியர் வரிசையில் இடம்பெறுகிறார் என்பதை இவரது கவிதைகள் புலப்படுத்துகின்றன.

மரபுக்கவிதைகளில் விருது பெற்ற கவிஞர்களின் படைப்புகளில் மட்டுமல்லாமல், சிங்கையில் எழுதப்பட்டுள்ள மற்ற கவிதை நூல்களையும் ஒருசேரக் காணும்போது அவை ஒரு குறிப்பிட்ட வாய்பாட்டில் (formula) அதாவது சிங்கப்பூர், சிங்கப்பூர்த் தலைவர்கள், தமிழினம் பற்றியவை, தமிழ் மொழி பற்றியவை, இயற்கையைப் பாடுபவை, தமிழ் மொழியோடு தொடர்புடைய தலைவர்கள் என்ற

வாய்பாட்டில்தான் பாடப்பட்டுள்ளன. கவிஞர்களுக்குக் கவிபாடும் ஆற்றல் இருப்பினும் கவித்துவம் மிளிரும் கவிதைகள் மிகவும் குறைவு. கவிஞர் முருகதாசன் போன்றோர் தங்கள் பாடுபொருள்களை விரிவுபடுத்திக்கொண்டால் நல்ல கவிதைகளைப் படைக்க முடியும். ஆயின் துரதிர்ஷ்டவசமாக மரபுக்கவிஞர்கள் புதிய பாடுபொருள்களைப் பாடுவதற்குத் தயங்குகின்றனர். மரபுக்கவிதைகள் புதிய பாடுபொருள் களைத் தாங்க மாட்டா என்று நினைக்கிறார்கள் போலும்! இதனால் வீரியமிக்க, கவித்துவம் மிக்க தமிழ் மரபுக் கவிதை நூல்கள் புதிய தளங்களில் எழுதப்படவில்லை. மரபுக்கவிதைகளில் இது ஒரு தேக்க நிலை என்று கூற வேண்டும்.

சோதனையும் சாதனையும்

தமிழ்க் கவிஞர் குழாத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டுத் திகழும் புதிய தலைமுறைக் கவிஞர் இளங்கோவன். ஆங்கிலம், தமிழ், மலாய் என மும்மொழிப் புலமை கொண்டவர். இருமொழிக் கவிஞர், நாடக எழுத்தாளர், நாடக இயக்குநர், புனைகதை எழுத்தாளர் எனப் படைப்பிலக்கியத் துறையின் பல்வேறு பிரிவுகளிலும் தமக்கெனத் தனியிடத்தைத் தக்க வைத்துக்கொண்டவர். தமிழ் எழுத்தாளர்களுக்குள் 'சர்ச்சைக்குரிய' எழுத்தாளராக அடையாளங் காணப்பட்டவர். பல் துறைப் புலமை வாய்ந்த அறிவுஜீவியாகத் திகழ்பவர். கூரிய சிந்தனைத் திறனும், புதிய, நுட்பமான பார்வையும், மேதாவிலாசமும், உண்மையை உரைக்க அஞ்சாத் துணிவும், தனித்தன்மையை இழந்துவிடாத ஆளுமையும் கொண்ட இக்கவிஞர் தென்கிழக்காசிய விருதினைப் பெற்றவர். இவர் 'விழிச் சன்னல்களின் பின்னாலிருந்து' (1979), 'மௌன வதம்' (1984). 'இருமொழிக் கவிதைகள்' (1988) ஆகிய புதுக்கவிதை நூல்களைப் படைத்தவர். சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தில் புதுக்கவிதைத் துறையின் முன்னோடி என்னும் பெருமைக்குரியவர்.

'தமிழ்மலர்' நாளிதழிலும், 'சிங்கப்பூர்க் கவிதைகள்', 'ஆசியான் கவிதைத் தொகுப்பு', 'சந்தங்கள்', 'சிங்கப்பூர்க் குரல்கள்', 'சிங்கப்பூர் வெள்ளி விழாக் கவிதைகள்', 'பயணங்கள்' போன்ற கவிதைத் தொகுப்பு களிலும் இவருடைய கவிதைகள் இடம் பெற்றிருக்கின்றன. 'சிங்கா' என்னும் இலக்கிய இதழின் பதிப்பாசிரியர் குழுவில் ஒருவராகவும் அங்கம் வகித்துள்ளார். 'சிங்கப்பூர்ச் சிறுகதைகள்' என்னும் நூலின் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்துள்ளார். பெருவிரைவு ரயிலில் 'மயிரிழை' என்னும் அவரது கவிதை ஊர்வலம் வந்தது.

உலகளாவிய நிலையில் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்திற்கு குறிப்பாகக் கவிதைத் துறைக்குச் சிறப்புச் சேர்த்த பெருமை கொண்டவர் இளங்கோவன். சிங்கப்பூரின் பிரதிநிதியாகத் தமிழ்ப் புதுக்கவிதைகளை அவர் உலக அரங்குகளில் ஒலிக்கச் செய்துள்ளார். பங்களாதேஷில் நிகழ்ந்த 'இரண்டாம் ஆசியக் கவிதை விழா' (1989), 'தென்கிழக்காசிய எழுத்தாளர் மாநாடு', சிங்கப்பூர் (3ஆம் மாநாடு, 1987), பிலிப்பீன்சில் நிகழ்ந்த 'தென்கிழக்காசிய எழுத்தாளர் மாநாடு' (4ஆம் மாநாடு) மற்றும் 'பயிலரங்கு' (1992), கல்வியமைச்சு மீத்திறன் மாணவர்களுக்காக ஏற்பாடு செய்த படைப்புக் கலை தொடர்பான கருத்தரங்குகள், பட்டறைகள் போன்ற பல நிகழ்வுகளில் பங்கு கொண்டு தமிழ்க் கவிதைக்கு ஏற்றம் தந்தவர்.

'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே உண்மையொளி உண்டாகும்'

என்னும் பாரதியின் கவிதை வரிகள் கவிஞர் இளங்கோவனுக்கே சாலப் பொருந்தும். உண்மையை ஒளிக்காமல் கூறத் துணிவு வேண்டும். அத்தகைய துணிவோடு உண்மையை அஞ்சாமல் உரைப்பதால் 'சர்ச்சைக்குரிய எழுத்தாளர்' என முத்திரை குத்தப்பட்டவர்.

மரபுக் கவிதைகளில் காணப்படும் பழகிப்போன 'செக்குமாட்டுத் தன்மை கொண்ட' பாடுபொருள்களைக் கையாளாமல், பிறர் தொடத் தயங்கும் பாடுபொருள்களைத் துடிப்போடு சொல்லும் கவிஞர் இவர். இவர் கவிதைகளில் காணப்படும் யதார்த்தமும், கற்பனையும், அங்கதமும், சொற்செட்டும் இவர் கவித்துவத்தைப் புலப்படுத்துவன. சிங்கப்பூர் வாழ்வின் பிரச்னைகளும், மனிதநேயக் கண்ணோட்டத்தில் பிறந்த உலகளாவிய பிரச்னைகளும் இவர் கவிதையின் விசேஷ அம்சங்கள். தேசிய இலக்கியம் உலக இலக்கியமாகும் அந்தஸ்தை இவருடைய கவிதைகள் பெறுகின்றன. இதற்குச் சான்றாவன இவருடைய மூன்று கவிதைத் தொகுப்புகளில் உள்ள பல கவிதைகள் என்பது வெள்ளிடை மலை.

இவர் நாடகத் துறையில் அதிகக் கவனம் செலுத்தி வருவதுடன் நவீன நாடக அரங்கில் புதிய சோதனை முயற்சிகளில் இறங்கியுள்ளார். இளங்கோவன் பரீட்சார்த்த நாடகத்தின் முன்னோடி. 'அக்கினிக்கூத்து' என்னும் இருமொழி நாடகக் குழுவிற்கு நாடகங்கள் எழுதியும், இயக்கியும் 1991 முதல் நாடகத் துறைக்குப் பங்காற்றி வருகிறார். இவருடைய முயற்சியால் தமிழில் நவீன நாடகம் புதுப் பரிமாணத்தை

எட்டியுள்ளது. 'மரபு', உந்திச்சுழி', செங்கல்', 'குழி & சிதை' 'அன்னியன்', 'கோமாளி', 'இடம்', 'புலி', 'விபத்து', 'மரம்', 'ஊர்வலம்', 'கால் & சப்பாத்து', 'நாய்கள்', 'மோட்சம்', 'மாமாடிராமா', 'முகம் & மிருகம்', 'ஊர்வலம்' போன்ற பல படைப்புகளை உருவாக்கியுள்ளார். உண்மையை அப்பட்டமாகக் கூறுவதால் இவருக்கு எதிர்ப்புகள் அதிகம். ஆனால் அஞ்சாமையும், அறிவும் இவரிடம் இருப்பதால் எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றி நடை போடுகிறார். அஞ்சாமை, புதுமை, அறிவு ஆகியவற்றின் மொத்த உருவமாக இவர் திகழ்கிறார். 'தலாக்' என்னும் நாடகம் மும்முறை அரங்கேறித் தமிழ் நவீன நாடக வரலாற்றில் சாதனை படைத்தது என்று சொல்ல வேண்டும். இடையீடின்றித் தமிழ் நாடகங்களை மேடையேற்றும் இளங்கோவன் அவற்றை நூல் வடிவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். 'தலாக்' என்னும் நாடக நூல் விவாகரத்து என்னும் 'பேயின்' கொடுமைகளையும், ஆணாதிக்கம் மிக்க சமூகத்தில் ஒரு பெண் படும் துன்பங்களையும், முஸ்லீம் பெண் ஒருத்தியின் வாயிலாகப் பேசுகிறது. சிங்கப்பூரில் இந்நாடகம் எழுதப்பட்டிருப்பினும் உலகம் முழுமைக்கும் பொருந்திவரக் கூடிய படைப்பாகவே கருதப்படுகிறது. இந்நாடகத்தில் பெண்ணிய நோக்கு விரவியுள்ளது. இவருடைய 'ஊடாடி' இருமொழிப் படைப்பாக நூலுருப் பெற்றுள்ளது. 'நாடகக்கலா நிபுணர்' என்னும் விருது பெற்ற இவரின் பணி வியக்கத்தக்கதும், அளப்பரியதும் ஆகும்.

சிறுகதைத் துறையிலும் முத்திரை பதித்தவர் இளங்கோவன். சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகள், ஆசியான் சிறுகதைத் தொகுப்பு ஆகிய இரு தொகுப்பு நூல்களிலும் இவருடைய இரண்டு சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. 'புகை ஏணி', 'அறிமுகமில்லாக் கண்ணாடிகளில் எதேச்சையாக' என்னும் இரு சிறுகதைகளும் இளங்கோவனின் உலகம் தழுவிய பார்வைக்கு உதாரணங்களாகும். இவை சிறுகதையிலும் புதுமை படைப்பவர் இவர் என்பதற்குத் தக்க சான்றுகள். இக்கதைகள் சிங்கப்பூர் மண்ணில் எழுதப்பட்டாலும் எந்த நாட்டுக்கும் பொருந்தக்கூடியவை. உள்ளடக்கம், உத்தி முறை, சொல்லும் முறை ஆகியவற்றால் வித்தியாசமான கதைகளாகப் பேசப்படுகின்றன.

சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தில் சோதனை முயற்சிகளின் மூலம் அடையாளங் காணப்பட்டுப் பெருமை படைத்து வருபவர் இளங்கோவன். சோதனை புரிபவர்கள் சம்பிரதாயங்களிலிருந்து விலகிச் சென்றால் ஒழியத் தனித்துவங்களோடு கூடிய சோதனைகளை நிகழ்த்த இயலாது என்பது இளங்கோவனின் இலக்கியப் பணிகளிருந்து நாம்

அறிந்துகொள்ளும் பேருண்மையாகும். இவர் நல்ல திறனியுமாவார். பல ஆய்வரங்குகளில் சர்ச்சைக்குரிய ஆய்வுக் கட்டுரைகள் படைத்தவர்.

தற்கால வாழ்வின் மிகச் சிக்கலான அம்சங்களாகக் கருதப்படும் பொருளியல், அரசியல், உளவியல் பிரச்சனைகளை ஆழமாகவும், அழுத்தமாகவும், நுணுக்கமாகவும் படைத்துக் காட்டும் வல்லமை பெற்ற இளங்கோவன் தமது கவிதைப் படைப்புகளைப் பற்றி,

> 'முற்றிலும் மரபிலக்கணக் கவிஞர்களே முற்றுகை யிட்ட இந்நாட்டில் புதுக்கவிதை முயற்சிகளுக்கு ஆதர்சமாக எந்த ஆரோக்கியமான உள்வட்டமும் அறவே இல்லாத தமிழ்ச் சூழலில் மரபுக் கவிஞனாக அறிமுகமான நான் எதிர்ப்புகளைப் பொருட்படுத் தாது முழு மூச்சுடன் மூன்று நூல்களையும் வெளிக் கொணரும் துணிச்சலைப் பெற்றதற்கு காரணம் தன் முனைப்பும், புத்திலக்கிய விழிப்புணர்வும், கல்வியும், சமகாலப் படைப்பிலக்கிய முயற்சிகளில் வாசகப் பரிச்சயமும் இதையெல்லாம் மீறிய தேடலும்தான்'

என்று கூறியுள்ளார். படைப்பாளனாக விளங்குவோருக்குப் பன்முக அறிவு இருத்தல் அவசியம் என்பதை இளங்கோவனின் படைப்புகள் நமக்கு உணர்த்துகின்றன. பன்முகமும் படைப்பும் ஒருங்கிணைவ தாலேயே இவரால் கருத்துப் புதுமை, வெளியீட்டுப் புதுமை போன்ற வற்றைக் கையாள முடிகிறது. தனிச்சிறப்பு வாய்ந்த இவர் தென்கிழக் காசிய எழுத்து விருதும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதுமையும் பொறுப்பும்

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்திற்குப் பெண்களின் பங்களிப்பு மிகவும் சொற்பமே. பெண் படைப்பாளர்கள் என்ற வரிசையில் இளம் எழுத்தாளர் என்ற நிலையில் அறிமுகமானவர் லதா. இவர் புனைகதைத் (சிறுகதைத் துறை) துறையிலும் சிறந்த படைப்புகளை உருவாக்கி யுள்ளார்.

இவருடைய கவிதைகள் 'தீவெளி' என்னும் நூலாகக் கடந்த ஆண்டு நூலுருப் பெற்றது. பல தொகுப்புகளில் இவருடைய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. 'சிங்கா' இலக்கிய இதழ், 'சந்தங்கள்' என்னும் தொகுப்பு நூல், ஆசியான் கவிதைத் தொகுப்பு, சிங்கப்பூர்க் கவிதைகள், 'சிங்கப்பூரின் குரல்கள்' என்னும் வெள்ளி விழாத் தொகுப்பு,

தமிழகத்தின் 'காலச்சுவடு', பிரான்சின் 'உயர்நிழல்' இதழ், இலங்கையின் 'சரிநிகர்' இதழ் போன்றவற்றில் லதாவின் கவிதைகள் அச்சேறியுள்ளன. தேசிய கலைகள் மன்றத்தின் 'மூவ்' திட்டத்திலும் இவருடைய கவிதைகள் பிரசுரமாகியுள்ளன. சிங்கப்பூர்ப் பின்னணி, அங்கதச் சுவை, புதுக்கவிதை உத்திகளான குறியீடு, படிமம் போன்றவை லதாவின் கவிதைகளில் சிறப்பாக அமைந்துள்ளன. சிங்கப்பூரின் ஒரே நாளிதழான 'தமிழ் முரசு'வின் இலக்கியப் பகுதி, மாணவர் முரசு, இலக்கியப் பகுதியின் சிறப்புப் பக்கம் போன்றவை லதாவின் கைவண்ணத்திலும், லதாவின் பொறுப்பிலும் சிறப்புப் பெற்றுள்ளன. இவர் 'பாம்புக் காட்டில் ஒரு தாழை' என்னும் நூலையும் அண்மையில் வெளியிட்டு உள்ளார்.

லதாவின் கவிதைகளில் காணப்படும் சிறப்பு அம்சம் எள்ளல் தொனியும், வாழ்க்கை யதார்த்தங்களை வெளிச்சமிட்டுக் காட்டுவதும் ஆகும். 'வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடும் மீ கோரிங்கும்' என்னும் கவிதை சிங்கப்பூர்த் தமிழ் மக்களின் நிலையையும் நினைப்பையும் காட்டுகின்றது. பண வேட்கைச் சமூகத்தை 'காசு கொடுத்தால் தேடி வரும் இலக்கியமும் கலைகளும்' என்னும் வரியின் மூலம் படம்பிடிக்கிறார்.

சிங்கப்பூர்த் தமிழர்கள் தீபாவளி கொண்டாடும் விதத்தைக் கேலி செய்யும் கவிதை 'கணக்கு' என்பது. ஐப்பசி மாதத்தில் சௌத் பிரிட்ஜ் ரோடு மாரியம்மன் கோவிலில் நடைபெறும் தீமிதித் திருவிழா, திரௌபதி அம்மன் திருவிழா, தீபாவளிக்கு முதல் நாள் செத்தவர் களுக்குப் படையலிடுவது, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தரம், அவற்றின் பாதிப்பு போன்ற உண்மைச் சம்பவங்களுக்கு உயிர்ப்புக் கொடுத்துத் திட்டப்பட்ட கவிதை 'கணக்கு' என்னும் தலைப்பில் அமைந்தது. இக்கவிதையில் சமய, சமூக, கல்விப் பின்னணி சிறப்பாகப் பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது.

பரபரப்புடன் இயங்கும் சிங்கப்பூர்ச் சாலைகளை 'ஒரு சாலைக் கனவு' என்னும் கவிதை படம்பிடிப்பதோடு கூர்ந்து நோக்கும் திறனுடையவர் லதா என்பதையும் இதன் வழி நாம் அறிகிறோம். 'ஹைக்கூ' போன்ற கவிதை 'இலை ஒன்று கீழே விழுந்தது' என்பதாகும். இது உருவகத் தன்மை கொண்ட கவிதை. 'தலைமைத்துவ வழிபாடு' பற்றி லதா எழுதிய 'மேய்ப்பன்' கவிதை எந்த நாட்டுக்கும் பொருந்தி வரும் முருகியல் தன்மை கொண்ட கவிதையாகும். சமூக, அரசியல், பொருளியல் பிரதிபலிப்பு, வாழ்க்கை யதார்த்தம், புதுக்கவிதைக் கூறுகள்,

உலகளாவிய நோக்கு போன்ற அம்சங்களைச் சிறப்பாகச் சித்திரிக்கும் லதா இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதை உலகிற்குப் புதிய பரிமாணத்தைத் தருவார் என நம்பலாம்.

வேட்கையும் வேள்வியும்

புனைகதைத் துறையில் தனது பங்களிப்பிற்காகத் தென்கிழக்காசிய விருது பெற்றவர் அமரர் நா.கோவிந்தசாமி. ஏராளமான சிறுகதை களையும், வானொலி நாடகங்களையும், தொலைக்காட்சி நாடகங் களையும் படைத்துள்ளார். 'உள்ளொளியைத் தேடி' என்னும் சிறுகதைத் தொகுப்பையும், 'வேள்வி' என்னும் நாவலையும் வெளியிட்டுள்ளார். 'சிங்கப்பூர்ச் சிறுகதைகள்' என்னும் தொகுப்பு நூலின் பதிப்பாசிரியர். ஆசியான் தொகுப்பாகச் சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகளைத் தொகுத்த தேசியக் கலை மன்றத்தின் திட்டத்திலும் இவர் பதிப்பாசிரியர் குழுவில் இடம்பெற்றிருந்தார். பல ஆய்வரங்குகளில் சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் பற்றிய, புனைகதைத் துறை பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்ட திறனாய்வாளராகவும் இவர் விளங்கினார். 'என்னைப் பொறுத்தவரை வாழ்க்கை வேறு; எழுத்து வேறு இல்லை. வாழ்க்கையில் நான் அனுபவிப்பதை, காண்பதை எழுத்துக்களாக வடிக்கிறேன்' என்று தன் இலக்கியப் படைப்பின் பின்னணியை விளக்கியுள்ளார் ('தமிழ்முரசு' 23.10.94). 'வேள்வி' என்னும் நாவல் இவரை சர்ச்சைக்குரிய எழுத்தாள ராக இனங்காட்டியது. கனமான, புரட்சி வாய்ந்த உள்ளடக்கம், துணிகரமான முயற்சி ஆகியவற்றின் பிரதிபலிப்பாக இவருடைய 'வேள்வி' விளங்குகிறது. இந்நாவல் தேசியப் புத்தக மன்றத்தின் பரிசைப் பெற்றது குறிப்பிடப்பட வேண்டிய செய்தியாகும். ஆங்கிலக் கல்வியும் இருமொழிப் புலமையும் கொண்ட இவர் எழுத்தை வேள்வியாகக் கருதியவர். சிங்கைத் தமிழர்களின் வாழ்வியல் பிரச்னைகள், அவர்களின் குணாதிசயங்கள், எழுத்தாளனின் போலி வாழ்வு போன்ற பல அம்சங்களையே - மண்ணுக்குச் சொந்தமான பிரச்னைகளையே பேசு கிறார். 'சிங்கப்பூர் எழுத்து என்பது இவ்வட்டாரத்தைச் சார்ந்தது. தமிழ்நாட்டு எழுத்தை மொழி என்ற ஒன்றின் தொடர்பில் மட்டுமே படித்து அது கூறும் பொதுவான வாழ்க்கை உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். நம் உள்ளூர் சீன, மலாய், ஆங்கில இலக்கியங் களைப் படிக்க வேண்டும்' என்று சிங்கப்பூரில் எழுத விரும்புவோருக்கு அவர் ஆலோசனை ('தமிழ் முரசு' 23.10.94) கூறியிருந்ததை இவண் நினைவுகூர்வது பொருத்தமாகும்.

இவர் சிங்கப்பூர் இலக்கியக் களம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் ஆகிய அமைப்புகளின் வழியேயும் இலக்கிய வளர்ச்சிக்குப் பணியாற்றியுள்ளார். கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டது போல எழுத்தாளருக்கு இருக்க வேண்டிய குணாதிசயங்கள் நிரமபப் பெற்றவர் இவர். இவரின் அகால மரணம் உண்மையில் சிங்கப்பூர்த் தமிழ்ப் புனைகதைத் துறைக்குப் பேரிழப்பேயாகும். இவர் எழுதிய முன்னுரை களும் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளும் மிகுந்த இலக்கியத் தரம் வாய்ந்த முன்னோடி ஆய்வுகளாகும்.

தனித்தமிழும் தகவும்

எம். பாலகிருஷ்ணன் என்னும் இயற்பெயர் கொண்ட இவ்வெழுத்தாளர் தனித்தமிழ்ப் பற்றாளர். அதனால் தம் பெயரைத் தனித்தமிழில் இளங்கண்ணன் என மாற்றிக்கொண்டார். இவர் எட்டு நூல்களை வெளியிட்டுள்ளார். இவற்றுள் மூன்று நாவல்கள். அவை 'அலைகள்' (1976), 'வைகறைப் பூக்கள்' (1990), 'நினைவுகளின் கோலங்கள்' (1993) என்பன ஆகும். எஞ்சிய ஐந்தும் சிறுகதைத் தொகுப்புகள். அவை முறையே 'வழி பிறந்தது' (1975), 'குங்குமக் கன்னத்தில்' (1977), 'கோடுகள் ஓவியங்களாகின்றன' (1978), 'உணர்வின் முடிச்சுகள்' 'தூண்டில் மீன்' (2001) என்பனவாகும். இவருடைய சிறுகதைகள் பல்வேறு தொகுப்பு களிலும் இடம்பெற்றுள்ளன. 'சிங்கப்பூர்ச் சிறுகதைகள்' என்னும் தொகுப்பு நூலிலும், சிங்கா இலக்கிய இதழ்களிலும் (1982, 1986), மலேசியாவின் 'தேவான் பஹாசா டான் புஸ்தகா' என்னும் அமைப்பு வெளியிட்டுள்ள இருமொழித் தொகுப்புகளிலும் (மலாய், ஆங்கிலம்), லண்டன் கே.பத்மநாப ஐயரைப் பதிப்பாசிரியராகக் கொண்ட 'கண்ணில் தெரியுது வானம்' என்னும் தொகுப்பு நூலிலும் இடம் பெற்றுள்ளன.

இவர் 'தொண்டன்' என்னும் இதழை நடத்தினார். இதன் இரு இதழ்கள் மட்டுமே வெளிவந்தன. பின்னர் இவ்விதழ் நிறுத்தப்பட்டது. தான் கண்ட சமூக அநீதிகளும், சமூகத்தின் பிற்போக்கான நிலையுமே தன்னை எழுதத் தூண்டியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆசியான் விருது பெற்றபோது ஆற்றிய உரையில் படைப்பிலக்கியவாதிகளின் பொறுப்பை நினைவுபடுத்தியுள்ளார். இந்த உண்மைகளை நினைவில் கொண்டு இலக்கியம் படைப்பவர் இளங்கண்ணன்.

சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழக உறுப்பினராகிய இவருடைய படைப்புகளின் விசேஷத் தன்மை அவற்றின் உள்ளடக்கமும், இவர்

எழுதிச் செல்லும் முறையுமாகும். இவர் அடிமட்டத்துத் தமிழர்களின் வாழ்வு, அவர்கள் எதிர்கொண்ட பிரச்னைகள், அவர்களின் நம்பிக்கைகள் போன்ற விஷயங்களைத் தம் பாடுபொருளாகக் கொண்டுள்ளார். உள்ளதை உள்ளபடி உரைக்கும் திறமும், உண்மையோடும் துணிவு டனும் எழுதும் திறமும் வாய்க்கப் பெற்றவர். டாக்டர் மு.வ. போல் பாத்திரங்களுக்கு அவர்களின் குணாதிசயங்கள் வெளிப்படும்படி பெயர் சூட்டுவது இவர் வழக்கம். பெரும்பாலான கதைகளில் திருவேங்கடம், நன்மலர் போன்ற பெயர்கள் இடம்பெறும்.

இளங்கண்ணன் மற்றத் தமிழ் எழுத்தாளர்களினின்று வேறுபட்டு நிற்கிறார். இவர் கையாளும் பாடுபொருள்களும், கதை கூறும் ஆற்றலுமே அவரைச் சிறந்த எழுத்தாளராகக் காட்டுகின்றன. கைதேர்ந்த நிழற்படக்காரர் அரிய காட்சிகளை நிழற்படமாக்குவது போன்று இவர் வாழ்க்கையை மிகச் சிறப்பாக அற்புதமாகப் படம் பிடிக்கும் ஆற்றலர் என்பது மிகையன்று. மெ.திரு.அரசுவும் இக் கருத்தினரே. 'மீ கோரிங்' விற்றவர்கள், 'சென்டோல் விற்றவர்கள்', பால்காரர்கள், பூக்கடைக்காரர்கள், மளிகைக்கடை ஊழியர்கள், தோட்டவேலை செய்தவர்கள், புல்வெட்டுத் தொழிலாளிகள், கள்ளக் குடியேறிகள், தொழிற்சாலை ஊழியர்கள், பெட்டிக்கடை வைத்திருந்த வர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளிகள் போன்ற பல்வேறு அடிமட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை இவருடைய கைவண்ணத்தால் சிறப்பாகச் சித்திரிக்கப்படுகின்றது. மற்றத் தமிழ் எழுத்தாளர்கள் மேற்கூறிய இவர்களைப் பற்றி எழுத நாணி, வாசகர்கள் தங்களை அடையாளங் கண்டுகொள்வார்களே என்று அஞ்சி ஒதுங்கிவிடுவர். இவருக்கு அத்தகைய அச்சம் இல்லை. மேலும் இளங்கண்ணன் இவர்களுடைய வாழ்க்கையை அணுக்கமாகவும் கூர்மையாகவும் கவனித்துள்ளார்.

இவர் சமூகக் குறைபாடுகளையும், சமூக அநீதிகளையும், சமூகத்தின் பிற்போக்கான நிலையையும் கண்டு அவற்றைச் சொல்லில் வடித்தளிக்க முன்வந்துள்ளார். (சிறப்புரை, தென்கிழக்காசிய விருது வழங்கிய நாள், 1982). மேலும் பிற இனத்தைச் சார்ந்த பாத்திரங்களும் அதாவது சீன, மலாய்ப் பாத்திரங்களும் இயல்பாகப் படைக்கப் பட்டுள்ளன. இவருடைய படைப்புகளின் மூலம் வருங்காலத் தலை முறையினர் கடந்த காலத் 'தேக்கா' பகுதியையும், 'புக்கிட் தீமா' பகுதியையும் கற்பனை செய்து பார்க்க முடியும். எழுத்தாளரின் படைப்புக் கற்பனைக்கும், வாசகரின் மறுபடைப்புக் கற்பனைக்கும் விருந்தளிக்கிறார் இளங்கண்ணன்.

1977ஆம் ஆண்டின் மிகச் சிறந்த சிறுகதை எழுத்தாளராக அடையாளங் காணப்பட்ட இவருடைய 'நினைவுகளின் கோலங்கள்' என்னும் நாவல் உண்மையில் ஒரு பெரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 60களில் சிங்கப்பூர்ப் பெண்களைத் தமிழ்நாட்டில் வாழ்வோருக்குத் திருமணம் செய்து கொடுக்கும் வழக்கம் மேலோங்கி யிருந்தது. 'நினைவுகளின் கோலங்கள்' என்னும் நாவல் வெளிவந்த பின்னர் அவ்வழக்கம் அடியோடு நின்றது. சிங்கப்பூர் மண்ணுக்கு விசுவாசங் கொண்ட இளந்தலைமுறையினர், குடியேறித் தமிழர், இரண்டுங் கெட்டான் தமிழர் (தமிழ்நாடா, சிங்கப்பூரா என்னும் தடுமாற்றம்) என மூவகைத் தமிழர் இவருடைய நாவல்களில் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

எழுபதுகளில் தொடர்கதையாக வெளிவந்த 'வைகறைப் பூக்கள்' என்னும் நாவலும் இளங்கண்ணனின் எழுத்துப் பணிக்குச் சிறப்புச் சேர்க்கும் படைப்பாகும். பழமையைப் பின்னோக்கிப் பார்க்கும் கற்பனையில் முகிழ்த்தது இந்நாவல். ஆங்கிலேயர் ஆட்சிக்காலம், ஜப்பானியர் ஆட்சிக்காலம், இந்திய தேசிய ராணுவ எழுச்சி (INA) போன்ற கடந்த காலச் செய்திகளைக் கற்பனைத் திறனோடு, உயிர்ப்பு மிக்க பாத்திரங்களை உலவ விட்டுச் சிறந்த நாவலைப் படைத்துள்ளார். அங்கதமும், குறியீடும் இந்நாவலில் அழகுற அமைந்துள்ளன.

தனித்தமிழ்ச் சொற்களின் பயன்பாடு ஒன்றே இளங்கண்ணனின் பலவீனம். புனைகதைப் படைப்புகளுக்குத் தனித்தமிழ் பொருந்தி வராது. புனைகதைகள் பண்டிதர்களுக்குப் படைக்கப்படுபவை அல்ல. பாத்திரங் களுக்கு ஏற்ப மொழி நடை அமைந்திருந்தாலும் தனித்தமிழ்ச் சொற்கள் வாசகனின் புரிந்துணர்வில் ஓர் இடைவெளியை ஏற்படுத்தும். வருங்காலத் தமிழ் இளையர்களுக்கு அச்சொற்களைப் புரிந்து கொள்வது கடினமாக அமைவதோடு சவாலாகவும் இருக்கும். தமிழைப் படிப்போர் எண்ணிக்கை குறைந்துகொண்டே வரும் நிலையில் தனித்தமிழைக் கையாண்டு இளங்கண்ணன் சிங்கைத் தமிழர்களைப் பயமுறுத்த வேண்டாமே?

'அலைகள்' என்னும் புதினம் தவிர எஞ்சிய அனைத்தும் இளங்கண்ணனைக் கைதேர்ந்த படைப்புக் கலைஞராக அடையாளம் காட்டும் என்பது உறுதி. இவரின் சிறுகதைப் பணிக்காகவும், சிங்கையின் தமிழிலக்கிய வளர்ச்சியின் இவரது பங்களிப்பிற்காகவும் தென்கிழக் காசிய விருதும், தமிழவேள் விருதும், தமிழக்கியப் பரிசும் (2004) வழங்கப்பட்டன. ஆரவாரம் ஏதுமின்றி அடக்கமாகத் தமிழ்ப்பணி புரிந்த இவருக்கு இவ்விருதுகள் கிடைத்திருப்பது பொருத்தமே!

சிந்தனையாற்றல், கூரிய பார்வை, ஆழ்ந்தகன்ற படிப்பறிவு, இருமொழிப் புலமை போன்ற பண்புகள் கொண்டவர் இராம. கண்ணபிரான். தென்கிழக்காசிய விருது, கலாச்சார விருது, தேசியப் புத்தக மன்றத்தின் பரிசு, தமிழவேள் விருது போன்ற விருதுகள் பல பெற்றவர். இவர் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் ஆயுள் உறுப்பினர். அனைத்துலகப் படைப்பிலக்கியத் திட்டத்தின் கீழ் 'அயோவா' சென்றவர். இவர் 'இருபத்தைந்து ஆண்டுகள்' (1980), 'உமாவுக்காக' (1980), 'வாடைக் காற்று' (1981), 'சோழன் பொம்மை' (1981) ஆகிய நான்கு சிறுகதைத் தொகுப்புகளையும் 'வாழ்வு', 'பீடம்' (1982) என்னும் இரு குறுநாவல்களையும் எழுதியுள்ளார்.

பல்வேறு புனைகதைப் படைப்புகளிலும் வெளிப்படும் இவருடைய பார்வை சமூகப் பார்வை, குடும்பப் பார்வை, அறிவியல் பார்வை, உளவியற் பார்வை, சிறுகதைப் பார்வை, மொழிப் பார்வை, மனிதநேயப் பார்வை, சமயப் பார்வை, பொதுமைப் பார்வை, கலைப் பார்வை என விரிவுபட்டு நிற்கிறது. இருப்பினும் இவரைக் குடும்பக் கதைகள் எழுதுபவராகவே பலரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். கனமான உள்ளடக்கம் கொண்ட 'நாடோடிகள்', 'பீடம்', 'இழப்புகள்', 'வாழ்வு' ஆகிய படைப்புகள் காலத்தால் அழியா அமரத்துவம் பெற்ற கதைகள். இவருடைய படைப்புகள் பல தொகுப்பு நூல்களிலும் இடம்பெற்றுள்ளன. 'சிங்கா' இலக்கிய இதழ், சிங்கப்பூர்ச் சிறுகதைகள், ஆசியான் இலக்கிய வரிசையில் 'சிங்கப்பூர்ச் சிறுகதைகள்', தேவான் பஹாசா டான் புஸ்தகா என்னும் அமைப்பு வெளியிட்ட தொகுப்பு நூல் ஆகியவற்றில் இவருடைய கதைகள் பிரசுரமாகியுள்ளன. தமிழக எழுத்தாளர் டாக்டர் மு.வ. போலச் சமுதாயத்துக்கு ஏதேனும் ஒரு செய்தியைக் கொடுப்பதையே தம் படைப்பின் நோக்கமாகக் கொண்டுள்ளார். ஒரு விதத்தில் இவரைக் கருத்தியல்வாதி என்று கூட அழைக்கலாம்.

பல்வேறு ஆய்வரங்குகளிலும் சிறுகதைத் துறை பற்றிய கட்டுரை களை வாசித்துள்ளார். தேசியக் கலை மன்றத்தின் தமிழிலக்கியப் பகுதியின் ஆலோசகர், எழுத்தாளர் வாரச் செயற்குழு உறுப்பினர் எனப் பல்வேறு பணிகளின் வழி இலக்கியப் பணி ஆற்றி வருபவர் கண்ணபிரான்.

கருத்தியல்வாதியான கண்ணபிரான் இளங்கண்ணனைப் போன்றே வாழ்க்கையைப் படம்பிடிப்பதில் வல்லவர். இவருடைய

சமூகப் பார்வையில் மரபுவழிப்பட்ட சமுதாயம், மாறுபட்ட சமுதாயம், புதுமைச் சமுதாயம் என மூவகைப்பட்ட சமுதாயமும் படம் பிடிக்கப் பட்டுள்ளன. சிறுகதைகளின் வழியேயும் குறுநாவல்களின் வழியேயும் படைப்புக் கற்பனைக்கும், மறுபடைப்புக் கற்பனைக்கும் முக்கிய இடம் தந்திருப்பது இவர் படைப்புகளின் மற்றொரு சிறப்பு அம்சமாகும்.

தம் ஆசிரியப் பணியின் பின்னணியில் தமிழ் மொழியின் வாழ்வுக்கு வழிகாட்டியிருப்பதோடு பிரச்சார நெடியின்றி, (டாக்டர் மு.வ. போலக் கருத்தியல்வாதியாக இருப்பினும் அவரைப் போல) கருத்துக்களைத் திணிக்காமல் எழுதும் பண்பு இவரிடம் அமைந் துள்ளது. இவர் படைக்கும் கதைமாந்தர்கள் மனிதநேயம் கொண்ட வர்கள். தனிமனிதன் உயர்ந்தால் சமுதாயம் உயரும் என்பதன் எதிரொலியாகவே 'மனிதத்துடன்' சித்திரிக்கப்பட்டுள்ளனர். எழுத் தாளன் என்ற முறையில் படைப்புச் சுதந்திரம், கலை பற்றிய கண்ணோட்டம் ஆகியவற்றில் தெளிந்த சிந்தனை உடையவர் கண்ண பிரான் என்பதைப் 'பீடம்' என்னும் குறுநாவல் வழி நாம் அறிகிறோம்.

கண்ணபிரானின் படைப்புகளுள் முடிமணியாகத் திகழ்வது 'பீடம்' என்னும் குறுநாவல் மூத்த எழுத்தாளர்களுள் பலரைப் போல ஒய்ந்துவிடாது இன்னும் இவர் தொடர்ந்து இலக்கியப் பணியாற்றுவது குறிப்பிட வேண்டிய செய்தியாகும்.

நகைச்சுவையும் எழுத்தும்

புதுமைதாசன் என்பது பி.கிருஷ்ணன் அவர்களின் புனைபெயர். இவர் 50களின் தொடக்கத்தில் இதழ்களுக்கு எழுதத் தொடங்கியவர். அப்போது இவருடைய சிறுகதைகள் இடையீடின்றி இதழ்களில் பிரசுரமாயின. புதுமைப்பித்தன் என்னும் தமிழக எழுத்தாளரின் எழுத்துக்களால் கவரப்பட்டுப் புதுமைதாசன் ஆனார்.

இவருடைய 'புதுமைதாசன் கதைகள்' என்னும் சிறுகதை நூல் தரமான படைப்பு. ஆகவே தேசிய புத்தகமன்றத்தின் பரிசைப் பெற்றது. சிங்கப்பூர் வானொலியின் மூத்த தயாரிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள இவர் ஏறத்தாழ 350 வானொலி நாடகங்களை எழுதியவர். இவற்றுள் ஒன்று 'இலக்கியக் காட்சிகள்' என்னும் பெயரில் வெளிவந்த நூலாகும். இது தமிழ் இலக்கியத்திலிருந்து எடுக்கப்பட்ட நிகழ்ச்சி களைக் கொண்டு நாடகப் போக்கில் எழுதப்பட்டது. 'அடுக்குவீட்டு அண்ணாசாமி' என 1969 முதல் 1970 வரை ஓராண்டு காலம் ஒலியேறிய

வானொலி நாடகம் சிங்கப்பூரின் அடுக்குமாடிப் பின்னணி பற்றிய வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுவதாகும். இந்நாடகம் இரு தொகுதிகளாக நூலுருப் பெற்றுள்ளது. வானொலியின் கோரப் பசிக்கு தீனி போட வேண்டி இருந்ததால் ஏராளமான நாடகங்களை எழுதி யுள்ளார்.

சிறந்த சிறுகதை எழுத்தாளரான இவர் வானொலி நாடக எழுத்தாளராகவே மக்களால் அடையாளம் காணப்பட்டவர். ஒலி பரப்புத் துறையின் மூலம், நகைச்சுவை நாடகத்தின் மூலம், 'மெக்பெத்' என்னும் மொழியாக்கப் படைப்பின் மூலம், சிங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறுபவர். இவருடைய படைப்புகள் ஆசியான் சிறுகதைத் தொகுப்பு, ஆசியான் நாடகத் தொகுப்பு, சிங்கா, கல்வி யமைச்சின் துணைப்பாட நூல்கள், இந்திய சாகித்ய அகாடெமியின் தொகுப்பு, சிங்கப்பூர்ச் சிறுகதைகள் போன்ற பல தொகுப்புகளிலும் பிரசுரமாகியுள்ளன.

இவர் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் 'தமிழவேள் விருது' பெற்றவர். சிங்கப்பூர்த் தேசியக் கலை மன்றமும், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸும் இணைந்து நடத்திய தங்க முனை விருதுச் சிறுகதைப் போட்டியின் நடுவராகவும், எழுத்தாளர் வாரத்தில் பங்கேற்றுப் பல்வேறு இலக்கியப் பேச்சுகளை நிகழ்த்தியும், இலக்கியக் கட்டுரைகள் எழுதியும் இலக்கியப் பணியாற்றி வருகிறார். ஆங்கில மொழி அறிவும் அமையப் பெற்றவர். தம் வாழ்நாளுக்குள் 30 நூல்களையாவது வெளியிட்டுவிட வேண்டும் என்னும் துடிப்போடு முதுமையிலும் அதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

ஆற்றலும் ஆக்கமும்

சே.வெ. சண்முகம் 1949இல் இந்தியாவிலிருந்தபோது 'நேதாஜி' என்ற இதழில் எழுதத் தொடங்கினார். பின்னர் 1951இல் இவரது எழுத்துப் பணி விரிவடைந்தது. 'மனோகரன்' என்னும் இதழின் துணை ஆசிரியராக இருந்த இவர், 'தமிழ்நேசன்', 'தமிழ்மலர்', 'தமிழ்முரசு' ஆகிய நாளிதழ்களிலும் 'மாதவி', 'பொன்னி', 'மலைமகள்' முதலிய திங்களேடு களிலும் எழுதியுள்ளார். பல வானொலி நாடகங்கள் இவர் கை வண்ணத்தில் உருவானவை. இவர் நகைச்சுவையாக எழுதும் திறன் பெற்றவர். இவருடைய 'மீன் வாங்கலையோ' என்னும் சிரிப்புச் சித்திரம் இவருடைய நகைச்சுவை ஆற்றலைப் புலப்படுத்தும். 'சிங்கப்பூர் மாப்பிள்ளை' என்னும் நாடக நூல் இவருடைய எழுத்தாற்றலுக்கும்,

மண்மணம் கமழ எழுதும் திறனுக்கும் சான்றாகும். 'இரணியூர் நாகரெத்தினத் தேவர்' என்னும் நூலும் இவர் கைவண்ணமே! 'மாணவர் இலக்கியம்' என்னும் வானொலி நிகழ்ச்சிக்காகப் புகழ்பெற்ற ஷேக்ஸ்பியர், அலெக்சாண்டர் டூமாஸ், ராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்சன், சார்லஸ் டிக்கன்ஸ், பாரதிதாசன், டாக்டர் மு.வ. ஆகியோரின் கதைகளை நாடகமாக்கியுள்ளார். 'சிங்கப்பூர்க் குழந்தைகள்' என்னும் சிறுகதை நூலொன்றையும் இவர் வெளியிட்டுள்ளார்.

இவர் சிறுகதைகள், தொடர்கதைகள், கட்டுரைகள், விமர்சனங் கள், கவிதைகள், நாடகங்கள் எனப் பல துறைகளிலும் 500க்கும் மேற்பட்ட படைப்புகளை உருவாக்கியுள்ளார். சிறுகதை எழுதும் போட்டி, வானொலி நாடகம் எழுதும் போட்டி எனப் பல போட்டி களில் எழுதிப் பரிசுகள் பல பெற்றவர். 'வள்ளி மணாளன்'. 'வள்ளி அக்காள்', 'சானாமூனா', 'சானா' என்பன சே.வெ. சண்முகத்தின் புனைபெயர்கள். இவரின் 'பழத்தோட்டம்' என்னும் நாடக நூலையும் சிங்கப்பூர் வெள்ளி விழாவையொட்டி வெளியிட்டுள்ளனர் இந்தியர் பண்பாட்டு மாதக் குழுவினர். இவர் 'தமிழவேள்' விருது பெற்றவர். சிங்கப்பூர்த் தமிழர் இயக்கம் 1984இல் 'சிறந்த நாடகாசிரியர் என்னும் விருது வழங்கிச் சிறப்பித்தது. நல்ல எழுத்தாற்றலும், நகைச்சுவைத் திறமும் கொண்ட இவர் இன்று நம்மிடையே இல்லை. இவருடைய 'சிங்கப்பூர் மாப்பிள்ளை' என்ற நாடகம் ஆசியான் தொகுப்பிலும் 'மற்றொன்று' என்ற சிறுகதை, ஆசியான் சிறுகதைத் தொகுப்பு, சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகள் ஆகிய தொகுப்பு நூல்களிலும் பிரசுரமாகியுள்ளன.

சிந்தனையும் சீர்திருத்தமும்

தமிழகத்தில் பிறந்து சிங்கை வந்த திரு.ந.பழநிவேலு சிங்கப்பூரின் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவர். படைப்பிலக்கியத் துறையில் சிறுகதை, கவிதை, நாடகம் எனப் படைப்புப் பல படைத்தவர். இவருடைய படைப்புகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு கவிஞர் ந.பநிவேலுவின் படைப்புக் களஞ்சியமாக இரு தொகுதிகளில் வெளிவந்துள்ளன. 1932ல் இவர் 'வல்லமை' என்னும் சிறுகதையின் வழியே எழுத்துலகப் பிரவேசம் செய்தார். ஈ.வெ.ரா. பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளால் ஈர்க்கப் பட்ட இவர் சமுதாய சீர்த்திருத்தக் கருத்துக்களையே தமது படைப்பின் வழி வலியுறுத்தி வந்தார். அவையே அவர் படைப்புகளின் உயிர்நாடி என்று கூறுவதில் தவறில்லை. கவிதை நாடகம், சமூகநாடகம், குடும்ப

நாடகம், புராண நாடகம், இலக்கிய நாடகம் எனப் பல வகையான நாடகங்களை எழுதிக் குவித்தவர் இவர். இவை வானொலியின் தேவைக்காக எழுதப்பட்டவை.

தமிழிலக்கியங்களைச் சிங்கப்பூர்த் தமிழர் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக அவற்றைப் பற்றிய உரையாடல்களை அவர் தொடர்ந்து எழுதி வந்திருக்கிறார். உண்மையில், வானொலியில் அவர் பணியாற்றியதனாலேயே இவ்வளவு எழுத்துப் படிவங்களை எழுத முடிந்தது. பாரதி கூறியது போன்று தமக்குத் தொழில் எழுத்து என்பதையும், 'இமைப் பொழுதும் சேராதிருத்தல்' என்பதையும் அவர் தாரக மந்திரமாய்க் கொண்டு வாழ்ந்தார் என்பது அவருடைய படைப்புகளின் வழியே தெரிய வரும் உண்மையாகும். அவர் வாழ்ந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டிலிருந்து குடியேறிய தமிழர்கள் தங்களுடன் பத்தாம்பசலிக் கொள்கைகள், மூடப் பழக்கவழக்கங்கள், அறியாமை, பாமரத்தனம் ஆகியவற்றையும் இங்கே குடியேற்றியதால் ந. பழநி வேலுவின் பேனா முனைக்கு ஓய்வில்லாதிருந்தது; மேலும் தமிழகச் செல்வாக்கும் அவர் படைப்புகளில் விஞ்சி நின்றது.

சமுதாய நலன், சீர்திருத்தம், ஆற்றொழுக்கான தமிழ்நடை ஆகியவற்றால் ந.பழநிவேலுவின் எழுத்துக்கள் செல்வாக்குப் பெற்றன. இவருடைய சிறுகதைகள் சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகள் என்னும் தொகுப்பிலும், ஆசியான் சிறுகதைத் தொகுப்பிலும் பிரசுரமாகியுள்ளன. இவருடைய கவிதைகள் ஆசியான் கவிதைத் தொகுப்பிலும் இடம் பெற்றுள்ளன. மொத்தத்தில் ந.பழநிவேலு பல துறைகளிலும் எழுதிய பெருமை கொண்டவராயினும், 'நாடக சிகாமணியாகவே' அவர் அடையாளங் காணப்பட்டார். அவர் ஆற்றிய பங்கையும் பணியையும் மறந்துவிட்டோ அல்லது மறைத்து விட்டோ சிங்கப்பூர்த் தமிழிலக்கிய வரலாற்றை ஒருவர் எழுத இயலாது. வாழ்நாள் வரைக்கும் இலக்கியப் பணி செய்த அவர் 'கலாச்சார விருது' பெற்றது சிங்கைத் தமிழ் நாடகத் துறைக்குக் கிடைத்த ஏற்றம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மேடையும் மேன்மையும்

தமிழ் மேடை நாடகப் பணிக்காகவும், பங்களிப்புக்காகவும் 'கலாச்சார விருது' பெற்ற மற்றொருவர் ச.வரதன். இவரும் தமிழகத்தில் பிறந்து பிழைப்புத் தேடிச் சிங்கப்பூர் வந்தவர். தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கட்சியின்பால் ஈடுபாடு கொண்டு அறிஞர் அண்ணா துரை, கலைஞர் கருணாநிதி ஆகியோரின் நாடகங்களை இயக்கி நாடக

இயக்குநராகத் திகழ்ந்தவர். நாடகத்தைப் பற்றி எதுவுமே அறிந்திராத அவர் பதினெட்டு வயது வரை நாடகத்தைக் கூடப் பார்த்ததில்லை எனக் கூறியுள்ளார். இந்நிலையில் அவருடைய நாடக ஈடுபாடு பிறந்து 1955இல் பகுத்தறிவு நாடக மன்றத்தைத் தொடங்க ஊக்கமூட்டியது. தம் நாடகத் துறை அனுபவங்களை 'நினைவுகள் மறைவதில்லை' என்னும் நூலாகவும், 'சுவடுகள்' என்னும் நூலாகவும் எழுதியுள்ளார். 'உயர்ந்த உள்ளம்' என்னும் இவருடைய நாடகம் நூலுருப் பெற்றுள்ளது. 'நாடகத் துறை வளர்த்த நல்லவர்கள்' என்னும் நூலும் நாடகத் துறைக்குப் பணி செய்தோர் பற்றிய தகவல்களைத் தருகிறது. தமிழ் நாட்டில் நிகழ்ந்த எட்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் 'சிங்கப்பூரில் தமிழ் நாடகம் வளர்ந்த வரலாறு' என்னும் கண்காட்சி ஒன்றையும் நடத்தினார். நாடகத்தைப் பற்றி ஒன்றுமே அறியாத வராயிருந்து பின் செட்டியார்களிடம் வட்டிக்குப் பணத்தைக் கடனாக வாங்கி நாடக மன்றம் தொடங்கி, பகுத்தறிவுப் பிரசாரத்திற்கு நாடக மேடையைப் பயன்படுத்தி, நாடக எழுத்தாளராகவும் இயக்குநராகவும் வளர்ந்த ச.வரதன் கலாசார விருது பெற்றதன் மூலம் தான் மட்டுமின்றித் தமிழ்க் கலாசாரத்திற்கும், தமிழ் நாடகத்திற்கும் பெருமை தேடித் தந்துள்ளார்.

பொதுவும் சிறப்பும்

நாடறிந்த நல்ல எழுத்தாளர்கள் என்ற வகையிலும், இனத்துக்கும், மொழிக்கும், நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் எழுத்தாளர்கள் என்ற வகையிலும், தமிழ் மொழிக்கும் அதைச் சார்ந்த உலகு தழுவிய பார்வைக்கும் அடையாளம் கொடுத்தவர்கள் என்ற வகையிலும், புது முயற்சிகளைச் சோதித்துப் பார்க்கச் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் தயங்கியதில்லை என்ற வகையிலும், தமிழர்கள் வாழும் உலகின் மற்ற பகுதிகளில் வெளிவரும் எழுத்துக்களைப் போலவே காத்திரமான எழுத்துக்களைச் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்களாலும் படைக்க முடியும் என்ற வகையிலும் பேர் சொல்லும் பெருமை பெற்ற படைப்புகள் இலக்கியத்தின் பரிணாம வளர்ச்சியில் நிலைபேற்றுடன் திகழும்.

எதிர்காலமும் எழுத்தாளர் கடமையும்

பல இனக் கலாச்சாரச் சூழலில் வாழும் தமிழர்கள் இந்நாட்டின் பிறமொழிகளுடைய இலக்கிய வளத்தோடும் இலக்கிய வளர்ச்சியோடும்

ஒப்பிடத்தக்க வகையில் சிங்கைத் தமிழிலக்கியத்தை வளர்ப்பது தமிழ் எழுத்தாளர்களின் பொறுப்பாகும். ஒரு சில எழுத்தாளர்கள் இப் பொறுப்பை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர் என்பது ஆறுதலளிக்கும் செய்தியாகும்; எனினும் தமிழ் எழுத்தாளர் சமூகம் இதிலேயே திருப்தி அடைந்துவிடக்கூடாது. நாட்டுப்பற்று, நாட்டு வருணனை, நாட்டுத் தலைவர்கள் என்ற அடிப்படையில் மரபுக் கவிஞர்கள் கவிதை படைத்து வருகின்றனர். இவர்களைப் பொறுத்த வரை படைப்பிலக்கியங்களில் சிங்கப்பூரின் பிரதிபலிப்பு இதுதான். இது மட்டும்தான் சிங்கப்பூர்ப் பின்னணி என எழுத்தாளர்கள் கருதுவது வெறும் மாயையே!

சிங்கப்பூரில் வாழும் நான்கின மக்களும் வெவ்வேறு வகையான பிரச்னைகளை எதிர்நோக்கும் அதே வேளையில் எல்லோருக்கும் பொதுவான பிரச்னைகளும் எவ்வளவோ உள்ளன. அவற்றைத் தமிழ் எழுத்துலகம் தனது படைப்புகளுக்கு களமாக்கிக்கொள்ள வேண்டும். சிங்கப்பூரர்களுக்குரிய பிரச்னைகளைக் கூர்மையான பார்வையாலும், நுண்ணறிவினாலுமே அடையாளம் காணமுடியும். வெறும் பழமை வாதமும், புதுமைகளை வரவேற்காத அல்லது ஜீரணித்துக்கொள்ளாத மனமும் தேசிய இலக்கியத்தைப் படைக்க உதவ முடியாது. 'தமிழ் எங்கள் உயிர்', 'தமிழுக்கே உயிர் கொடுப்போம்' என்னும் வெற்றுக் கோஷங்களும், வெறித்தனமான உணர்வுகளும், தனித்தமிழ்ப் பிடிப்பும் வருங்காலத் தமிழ் இலக்கிய உலகை வளப்படுத்தா. அவை தடைக் கற்களே! எனவே சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியப் புலம் ஆழமும், அகலமும், கூர்மையும் கொண்டு விரிவடைவது எழுத்தாளர்களின் பார்வையைப் பொறுத்தே அமையும்.

ஏக்கமும் எதிர்பார்ப்பும்

இலக்கியம் வளர்வதற்குத் திறனாய்வு அடிப்படையாக அமைய வேண்டும். இலக்கியம் எந்த இலக்கை நோக்கிப் படைக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறும் திறனாய்வு, இலக்கியம் எத்திசை நோக்கிச் சொல்ல வேண்டும் என்றும் வழிகாட்டுகிறது. நடுநிலையான, விருப்பு வெறுப் பிற்கு அப்பாற்பட்ட ஆரோக்கியமான திறனாய்வுகளே சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தை ஆரோக்கியமான வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும். ஆனால் துரதிர்ஷ்டவசமாகப் பெரும்பாலான திறனாய்வும் 'ஆய்வு என்னும் போர்வை' போர்த்தப்பட்டு, பட்டத்திற்காகவும்,

பதவிக்காகவும், நுனிப்புல் மேய்ந்தாற் போலவும் வெளிவந்துள்ளன. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய உலகம் என்னும் சிறு வட்டம் பெரும் பாலும் பாராட்டுமுறைத் திறனாய்வு என்னும் மையப் புள்ளியிலேயே சுற்றிச் சுழல்கிறது. குறைபாடுகளைக் கூறுவோரைக் கண்டனம் செய்வதோடு பழிவாங்கவும் முயல்கின்றனர் பலர். இப்படிப்பட்ட வருந்தத்தக்க, வெறும் உணர்வுபூர்வமாக இயங்கக்கூடிய பின்னணியில் நடுநிலையான ஆய்வுகள் பெருகுவதும் அவசியம். கருத்துத் திருட்டு சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியை முடக்கி வரும் கூறாகும் என்பது வருத்தந்தரும் மற்றொரு செய்தியே! பிஎச்.டி. என்னும் முனைவர் பட்டம் பெற்ற சிலருக்குக் கருத்துத் திருட்டு கைவந்த கவலையாக உள்ளது. இதையறியாமலேயே முனைவர் பட்டமும் அவர்களுக்குப் பல்கலைக் கழகங்களால் வழங்கப்பட்டு வருகிறது. ஆய்வாளர் என்ற அணியில் சமூகம் அவர்களைக் கொண்டாடினாலும் தரமான, நடுநிலையான ஆய்வுகளை வழங்க அவர்களால் ஒருபோதும் முடியாது.

மூத்த எழுத்தாளர்கள் பலர் எழுதியது போதும், பரிசும் பாராட்டும் நிறைவளித்துவிட்டன என்றும் ஓய்ந்துவிடலாகாது. தம்மாலியன்ற வரை தமிழ்ச் சமூகத்துக்கு இலக்கியச் சேவை செய்யும் வாய்ப்புகளை நழுவ விடாது, புதிய முயற்சிகளை மேற்கொண்டும் இளம் எழுத்தாளர்களை உருவாக்க வேண்டும். தலைமுறை இடை வெளி, இரு மொழிப் புலமை, ஆங்கிலக் கல்வி, தமிழறிவில் ஆழமின்மை போன்ற பல காரணங்களால் மூத்த எழுத்தாளர்கள் பலருக்கும், இளந்தலை முறையினருக்கும் இடையே உள்ள பெரிய இடைவெளி சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்திற்கு ஒரு சவாலாகவே உள்ளது. தமிழ் இளையர் களைப் பொறுத்தவரை இலக்கியம் படைப்பது என்பது இளங்கோவன் கூறியது போன்று 'ரசம் வைப்பதாக' எளிய செயலாகத்தான் தெரிகிறது.

தமிழ் மொழிக் கல்வியின் தரமும், அதைப் படிப்போர் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருவதும், தமிழிலக்கியம் கற்போர் மிகமிகச் சொற்பம் என்பதும் வேதனை தருவதோடு சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தின் எதிர்காலம் பற்றிக் கவலை கொள்ளவும் வைக்கின்றன. தமிழ்ச் சமூகத்தின் இளைய பிரிவை இலக்கியம் கவரத் தவறி விடுகிறது. உண்மையான இலக்கிய ஆர்வம் தூண்டப்பட்டாலொழியச் சிங்கப்பூர்த் தமிழ் இளையர்கள் இலக்கி யத்தின்பால் அக்கறை காட்ட மாட்டார்கள். உண்மையான இலக்கிய

ஆர்வம் என்பது பரிசு, பாராட்டு, புகழ் போன்றவற்றிற்கு அப்பாற் பட்டது என்பதும் நினைவில் கொள்ள வேண்டிய கருத்தாகும்.

முடிவுரை

பல்லின சமுதாயத்தில் ஒவ்வோர் இனத்தின் அடையாளமாகவும், பண்பாட்டு விளக்கமாகவும், சமூக ஆவணமாகவும் திகழ்வது இலக்கியம். சிங்கப்பூரில் தமிழர்களின் வாழ்வும் தாழ்வும் அவர்கள் படைத்த இலக்கியங்களின் வாயிலாகவே எதிர்காலச் சந்ததியினருக்குத் தெரிய வரும். எனவே இலக்கியம் படைத்தல் என்னும் சமூகப் பொறுப்பை அக்கறையோடும், ஆர்வத்தோடும், விழிப்போடும் செய்வோம்.

(2001இல் தேசியக் கலைகள் மன்றத்தினரால்
எழுதுமாறு பணிக்கப்பட்ட கட்டுரை.)

•

இராம. கண்ணபிரானின் ஐந்து நூல்கள் : ஒரு பார்வை

சிந்தனை வளமும், கொள்கைப் பிடிப்பும், நிறைவாக எழுத வேண்டும் என்னுந் துடிப்பும், எழுத்தை வேள்வியாய்க் கருதும் 'செம்மல்' உள்ளமும், ஆழ்ந்தகன்ற படிப்பறிவும், பல்விதமான பட்டறிவும், கூரிய பார்வையும், 'எழுதியவை போதா' என்னும் நிறைவின்மையும் கொண்ட எழுத்துலகச் சிற்பி இராம. கண்ணபிரான். சிங்கப்பூர்த் தமிழிலக்கிய வளர்ச்சியில் இவரின் பங்கு குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் பேரையும் புகழையும் வலிந்து பெறத் துடிக்கையில், தகுதிமிக்காரைப் பேரும் புகழும் தாமே வந்தடையும் என்னும் உண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டானவர் இராம. கண்ணபிரான். விருது கள் பல பெற்ற வித்தகரான இவர் தம் எண்ண ஓவியங்களை வண்ண முறச் சிறுகதைகளாகவும், கட்டுரைகளாகவும், குறுநாவல்களாகவும் வடித்தவர். 'இருபத்தைந்து ஆண்டுகள் உமாவுக்காக' (1980), 'வாடைக் காற்று' (1981), 'சோழன் பொம்மை' (1987) ஆகிய நான்கு நூல்களும் சிறுகதைத் தொகுப்புகள். 'பீடம்' என்னும் நூல் இரு குறுநாவல்களைக் கொண்ட தொகுப்பு.

கண்ணபிரானின் சமூகப் பார்வை

இலக்கியம் சமுதாயத்தின் வெளிப்பாடு. இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள அணுக்கமான தொடர்பை வெளிக்காட்டுபவை எழுத்தாளனின் எழுத்துக்களாகும். ஆகவே இலக்கியங்களை 'சமூக வாழ்வின் ஆவணங்கள்' எனச் சாற்றுவதுண்டு. இப்பாராட்டுரைக்கு முற்றிலும் பொருந்துவன கண்ணபிரானின் எழுத்துக்கள். 'தேசிய இலக்கியம்' என்னும் கோணத்தில் சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தின் பிரச்னைகளை அலசும் கனமான படைப்புகள் இவரின் சமூகப்

பார்வையைத் தெள்ளிதின் புலப்படுத்துகின்றன. 'நாடோடிகள்', 'இழப்புகள்', 'ஆறு பத்து பதினேழில்', 'வாழ்வு' (குறுநாவல்) போன்ற வற்றைச் சான்றாகக் கூறலாம். இவருடைய சமூகப் பார்வை மரபுவழிப் பட்ட சமுதாயம் (traditional society), மாறுபாட்டுச் சமுதாயம் (transitional society), புதுமைச் சமுதாயம் (modern society) என்ற மூவகைச் சமுதாயங் களைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

கண்ணபிரானின் குடும்பப் பார்வை

குடும்பம் சமுதாயத்தின் அங்கம். வீட்டு வாழ்வைப் பொறுத்தே நாட்டு வாழ்வு அமையும். இலக்கியம், மனித வாழ்க்கையைப் பயனுள்ள நல்ல வாழ்க்கையாக்க பயன்பட வேண்டும் என்ற குறிக்கோளில் அழுத்தமான நம்பிக்கை உடையவர் என்பதால் கண்ணபிரான் குடும்பக் களங்களைப் பின்னணியாகக் கொண்டு கதைகளைப் படைத்துள்ளார். 'கோபுர நிழல்', 'அவர் பங்கு', 'புதிய உலகு', 'பழைய சர்ச்சைகள் புதிய நோக்குகள்', 'கருவியா துணைவியா', 'அன்னை நெஞ்சம்', 'இருளிலும் சில வெண்மேகங்கள்', 'பொன்வளையல்', 'ஒரு சத்தியம் இரு நிலைகள்', 'வாடைக்காற்று', 'வழிகாட்டி', 'நண்பன் காட்டிய வழி', 'நடிகையின் கண்ணீர்', 'அருமை', 'இருண்ட வீடு', 'சோழன் பொம்மை', 'திருமங்கை' எனப் பல கதைகளின் வாயிலாகக் குடும்பப் பிரச்னைகள் பல கோணங்களில் சித்திரிக்கப்படுகின்றன. இக்கதைகளின் மூலம் அன்பு, பாசம், காதல், நட்பு போன்ற உணர்வு களை விதைக்கிறார் கண்ணபிரான். அன்பின் பல்வேறு பரிமாணங் களைப் படைத்துக் காட்டும் கண்ணபிரான் அன்பு நெறியை வலியுறுத்தும் காந்தியக் கொள்கை கொண்டவர் எனக் கூறலாம். அகிலன், அறிஞர் மு.வ. போன்ற தமிழக எழுத்தாளர்கள் போலக் கருத்தியல்வாதியாக (idealist) காட்சியளிக்கிறார் கண்ணபிரான்.

எழுத்தாளனுடைய சொந்த வாழ்க்கைக்கும், அவனுடைய எழுத்துக்கும் உள்ள உறவு மிக நெருக்கமானது. எழுத்தாளனின் வாழ்க்கை அனுபவம் அவனுடைய எழுத்துக்களுக்கு வித்தாக அமைவ தோடு உரமாயும், ஊன்றுகோலாயும் திகழ்கிறது என்னும் உண்மையைக் கண்ணபிரானின் குடும்பக் கதைகள் நிதர்சனமாக்குகின்றன. நல்ல குடும்பத் தலைவர் என்ற முறையில் இவர் பல கதைகளில் வெளிப் படுகிறார். மொத்தத்தில் சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தினருக்கு நல்ல குடும்பங்களையும், மாறுபட்ட குடும்பங்களையும், கருத்து வேறுபாடு நிலவும் குடும்பங்களையும் சித்திரித்துக் காட்டியுள்ளார். செல்வர் ஏழை,

ஒழுக்கம் ஒழுங்கீனம், உண்மை பொய், அன்பு அன்பின்மை, வெளி வேடம் (வேஷம்) என முரண்பட்ட குடும்பங்களைக் காட்டி அன்பெனும் பிணைப்பை வலுப்படுத்துகிறார் கண்ணபிரான்.

கண்ணபிரானின் அறிவியல் பார்வை

அறிவியலைக் கதையின் உள்ளடக்கமாக்கி அழகுறக் கதை கூறும் ஆற்றலுடையவர் கண்ணபிரான். விஞ்ஞானக் கலைச் சொற்களைப் பயன்படுத்திச் சாதாரண வாசகனைக் குழப்பாமல் தெளிவாக, புதுமை யாகக் கூறப்பட்ட கதைகளாக 'மனக்குகை', 'உமாவுக்காக' ஆகியவற்றைக் கூறலாம். இவ்விரு கதைகளும் கண்ணபிரானின் அறிவியல் பார்வையைச் சிறப்புறக் காட்டுவன.

கண்ணபிரானின் உளவியற் பார்வை

உளவியல் அடிப்படையிலும் சிறுகதை வடிக்கும் திறமை கொண்டவர் கண்ணபிரான். இதற்குக் கட்டியம் கூறுவன 'மனக்குகை', 'பிகு', 'அமைதி பிறந்தது' என்னும் கதைகள். இவை மனத்தின் விசித்திரங்களை விவரிக்கும் படைப்புகள்.

கண்ணபிரானின் சிறுகதைப் பார்வை

உருவம், உள்ளடக்கம், உத்திமுறை ஆகியவற்றில் சிறந்து விளங்கும் படைப்புகள் சிறந்த எழுத்தாளரை இனங்காட்ட வல்லன. நான்கு சிறுகதைத் தொகுப்புகளிலும் நாட்குறிப்பு உத்தி, கடித உத்தி, அகநோக்கு நிலை (internal view point), புறநோக்கு நிலை (external view point), முதலிய பலவகை உத்திகளைக் கையாண்டு கதைகளைச் சோர்வு தட்டாமல், தொய்வு விழாமல் கூறும் ஆற்றல் படைத்தவர் என்பதைத் 'தானாமேரா டைரி', 'அத்தானுக்கு ஒரு கடிதம்', 'உமாவுக்காக', 'தூண்டுதல்',"சாமி நல்லவரு', 'இருபத்தைந்து ஆண்டுகள்' ஆகிய கதைகளின் வழி அறியலாம். சிறுகதை என்பது சம்பவ விவரிப்பு மட்டு மன்று; கதைமாந்தர் மனப்போக்கு, அவர்களின் செயற்பாடு ஆகிய வற்றை விளக்குவது என்னும் உண்மையைக் கண்ணபிரானின் கதைகள் சிறப்புறத் தெளிவுபடுத்துகின்றன.

கதைமாந்தரை இடையிடையே உரையாட விட்டுக் கதை கூறும் நாடக உத்தியும் (dramatic narration), எல்லாம் அறிந்த நிலையில் ஆசிரியர் இடையிடையே தம் எண்ணங்களைக் கூறும் காப்பிய உத்தியும் (epic narration) இவர் கதைகளில் இடம்பெற்றிருக்கின்றன.

சிறுகதையின் வெற்றி அதன் வடிவத்திலும் அடங்கி உள்ளது என்பது அங்கை நெல்லி. சிறுகதையின் தொடக்கம், இடைப்பகுதி, முடிவு ஆகிய மூன்றும் கண்ணபிரான் கதைகளில் செவ்வையாய் அமைந்துள்ளன. படிப்போரின் மனத்தைத் தெளிய வைத்துப் படைப்பில் ஐக்கியமாகும்படிச் செய்யும் ஆற்றலுடைய கதைகளினை அவர் வடிவச் சிதைவு இல்லாமல் படைத்திருக்கிறார். ஆசிரியரின் படைப்புக் கற்பனைக்கும் (creative imagination), வாசகரின் மறுபடைப்புக் கற்பனைக்கும் (re-creative imagination) இடந்தந்து இணைந்து செயல்பட வைக்கும் ஆற்றலுடையவை கண்ணபிரானின் கதை வடிவங்கள்.

கண்ணபிரானின் மொழிப் பார்வை

கண்ணபிரான் தமிழாசிரியராகப் பணிபுரிபவர். அவரின் மொழியுணர்வு, மொழிப்பற்று ஆகியவை அவருடைய படைப்புகளில் பிறங்கி வெளிப்படுகின்றன. பாத்திரங்களுக்குப் பெயர் சூட்டும் பாணியில் அறிஞர் மு.வரதராசனாகக் காட்சியளிக்கிறார் கண்ண பிரான். தூய தமிழ்ப் பெயர்களும், இலக்கியத் தொடராட்சிகளும் ஆசிரியரின் தமிழ்ப் பற்றைப் புலப்படுத்துகின்றன. 'மொழியே ஓர் இனத்தின் விழி' என்னும் உண்மை 'வாழ்வு' என்னும் குறுநாவலில் எதிரொலிக்கிறது. தமிழ் மொழியின் வாழ்வு சிங்கப்பூர்த் தமிழர்களின் கையிலுள்ளது என்னும் செய்தியைக் கண்ணபிரான் தம் ஆசிரியப் பணி அனுபவத்தின் பின்னணியில் 'ஞானப்பூங்கோதையாய்' நின்று சிறப்பாகப் 'பிரச்சார நெடி' இன்றி எழுதியுள்ளார்.

மலேசிய, சிங்கப்பூர்ச் சூழலில் படைக்கப்பட்டுள்ள கதைகளில் 'வட்டார மொழி' என்னும் அடிப்படையில் மலாய்ச் சொற்கள் பல வற்றையும், ஒருதுறைச் சொற்கள் (technical terms) பலவற்றையும் கையாண்டுள்ளார். பாத்திரங்களுக்கேற்ற ஆங்கில மொழிப் பிரயோகங் களும் இவர் கதைகளில் இடம்பெற்றுள்ளன.

கண்ணபிரானின் மனிதநேயப் பார்வை

தனிமனிதனைக் கதையின் உள்ளடக்கமாகக் கையாளும் ஆசிரியர் அவனுடைய பண்புநலன்களைச் சிறப்பாகச் சித்திரிக்கிறார். குமரநாயகம் ('அருமை'), தங்கப்பா ('தூண்டுதல்') கோபு, அருணகிரி ('கோபு என்னை மன்னி'), சபாரியா ('சபாரியா') திருமங்கை ('திருமங்கை'), தூயமணி ('செய்யாத குற்றம்'), குணசாலி ('ஒரு பிரச்னைக்குத் தீர்வு') எனப் பல

பாத்திரங்கள் 'மனிதம்' கொண்ட உயர்ந்த மனிதனைச் சித்திரிக்கின்றன. இவர்கள் மனிதநேய அடிப்படையில் உருவானவர்கள். தனிமனிதன் உயர்ந்தவனாக விளங்கும்போது சமுதாயம் உயர்வதில் தடையேது?

கண்ணபிரானின் சமயப் பார்வை

கடவுட்பற்றைக் காட்டும் 'வளையம்' என்னும் கதை கண்ண பிரானின் சமயப் பார்வையையும் காட்டத் தவறவில்லை. மனிதன் எஞ்ஞான்றும் நேர்மை தவறக் கூடாது. அவ்வாறு தவறினால் கடவுள் தண்டிப்பார் என்னும் உண்மையைப் பால்ராஜ் என்னும் கிறித்தவப் பாத்திரத்தின் வழி காட்டுகிறார். 'மனச்சான்றுக்கு அஞ்சி நடப்பதே நல்ல சமயநெறி' என்னும் ஒப்பற்ற சிந்தனை 'மனத்துக் கண் மாசில னாதல்' என்னும் வள்ளுவத்தின் எதிரொலியாக ஒலிக்கிறது.

கண்ணபிரானின் பொதுமைப் பார்வை

கண்ணபிரானின் 'நாடோடிகள்' என்னும் கதை அவருடைய உலகளாவிய பொதுமைப் பார்வையைக் காட்டுகிறது. உலகெங்கிலும் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் பொருளாதார மேம்பாடு கருதிப் பண்பாடு, நாகரிகம் முதலியவற்றை இழந்து பின்னர் அவற்றின் மேன்மையை - அருமையை - அவசியத்தை உணர்கிறார்கள் என்னும் உண்மையைத் தமிழ்க் குடியேறிகளின் பிரதிநிதியான தனபால் மூலம் புரியவைக்கிறார். தனபாலனைப் படைத்துக் காட்டியதன் வழி மனித சமுதாயம் முழுமைக்கும் அவ்சியமான கலாச்சாரப் பின்புலத்தை வலியுறுத்துகிறார்.

கண்ணபிரானின் கலைப் பார்வை

எழுத்துக் கலையும் படைப்புக் கலைகளுள் ஒன்றே. படைப்புச் சுதந்திரம் சிற்பக் கலைஞனுக்கு மட்டுமின்றிப் படைப்புக் கலைஞன் ஒவ்வொருவருக்கும், படைப்புக் கலைகள் அனைத்திற்கும் அவசியம் வேண்டப்படுவதே என்னும் உண்மைகளைக் கலைஞனாக நின்று கண்ணபிரான் வெளிப்படுத்தும் காட்சியைப் 'பீடம்' என்னும் நெடுங் கதையில் காண்கிறோம். படைப்பாளன் தன்னைத் தன் படைப்பில் வெளிக்காட்டாமல் இருக்க முடியாது. கதைமாந்தர் வாயிலாகத் தன்னை வெளிக்காட்டியே தீருவான். படைப்பாளன் தான் படைக்கும் கதைமாந்தராக மாறுவதை 'பீடம்' என்னும் நெடுங்கதை உணர்த்து-கிறது எனலாம்.

இக்குறுநாவலில் கண்ணபிரானின் 'ஆளுமை' வெளிப்படுகிறது. இது எழுத்துலகில் - சிங்கப்பூர்த் தமிழிலக்கிய உலகில் கண்ண பிரானுக்குத் தனித்த சிறப்புமிக்க 'பீடம்' அமைத்துக் கொடுக்கும் படைப்பு என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. படைப்புச் சுதந்திரம் என்னும் ஆணிவேரைச் சர்வாதிகாரம் என்னும் புழு அரிக்குமானால் கலைஞன் எவ்வாறு பாதிக்கப்படுவான் என்பதைச் செம்மையாய்ச் சித்திரிக்கும் படைப்பு 'பீடம்' என்னும் குறுநாவல்.

படைப்புக் கலைஞனின் சிறப்பியல்புகள், அவனது கோப தாபங்கள், உள்ளக் குமுறல்கள், போலிக் கலைஞர்களின் பொய்ம் முகங்கள், சந்தர்ப்பவாதிகளின் வாழ்க்கை முறைகள், சர்வாதிகாரத்தின் கொடுமைகள் முதலியன உணர்வுபூர்வமாகப் பேசப்பட்டுள்ளன. படைப்புக் கலை பற்றிய அறிவார்ந்த பேச்சும், ஆழமான கருத்துகளும் வாசகர்களின் 'மனபீடத்தில்' சிவசங்கர் என்னும் உண்மைக் கலைஞனை அமரத்துவம் அடையச் செய்கின்றன.

'பீடம்' என்னும் நாவலின் தலைப்பு விளக்கம் நாவலில் இடம்பெறுவது இந்நெடுங்கதையின் தனிச்சிறப்பு. ஆட்சிபீடம் கொடுங்கோலனின் அரச பீடமாகும்போது, நிர்வாக பீடங்களின் நிலை மாறி, தனிமனித வழிபாட்டின் அடிப்படையில் புதிய சக்தி பீடங்களும், வித்யா பீடங்களும் தோன்றி, உண்மைக் கலைஞர்களின் உயர்ந்த கலைப்பீடத்தை அசைத்து ஆட்டங்காணச் செய்து, இறுதியில் சத்தியபீடத்தின் முன் தோற்றுவிடுகிறது என்பதைப் 'பீடம்' என்னும் குறுநாவலின் தலைப்பு உணர்த்துகிறது.

இக்குறுநாவல் மூலம் கலைஞன் கலைஞனாக மட்டும் வாழக் கூடாது; சமூகப் பிணைப்புக் கொண்டவனாகவும் வாழ வேண்டும் என்பது போன்ற பல உயர்ந்த விஷயங்களைச் சமுதாயத்திற்குக் கண்ணபிரான் வாரி வழங்கியிருக்கிறார். 'காண்பவை எல்லாம் அவையே போல' என்பது போன்று எந்த நாட்டின் கொடுங்கோலாட்சியையும் இக்கதையோடு பொருத்திப் பார்க்கலாம். அரசியலுக்கும் கலைக்கும் ஏற்படும் போராட்டத்தில் கலை வெற்றி பெறுவதாகக் காட்டப்படும் புதுமையும் இக்குறுநாவலில் உண்டு.

சாதாரண வாசகனால் ஜீரணித்துக்கொள்ள முடியாத 'கனமான' உள்ளடக்கம் இக்குறுநாவலின் தனிச்சிறப்பு. பாத்திரப்படைப்பும், அவற்றிற்குப் பெயர் சூட்டும் முறையும் கண்ணபிரானின் முத்திரை களாகக் காட்சியளிக்கின்றன. உண்மைக் கலைஞன் சிவசங்கர்

ஆசிரியரின் வெளிப்பாடு என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. உணர்ச்சிச் செறிவான மொழிநடை கதைக்கு மேலும் வலுவூட்டியிருக்கிறது.

முடிவுரை

கண்ணபிரானின் ஐந்து படைப்புகளும் சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்திற்குக் கிடைத்த நற்பேறு என்பதும், 'பீடம்' ஏற்றந்தரும் உயரிய படைப்பு என்பதும் மறுக்க முடியா உண்மைகளாகும்.

('NBDCS' என்னும் தேசியப் புத்தக மேம்பாட்டு வாரியத்திற்காக 1998இல் எழுதப்பட்ட கட்டுரை)

•

சிங்கப்பூரில் நற்றமிழ் வளர்த்த நகரத்தார்

நகரத்தார் என்பதனை நகரத்தில் வாழும் மக்களைக் குறிப்பதாகப் பொதுப் பெயராகப் பலரும் எண்ணுவர். ஆயின் நகரத்தார் என்னும் பெயர் சிறப்புப் பெயராகச் செட்டியார் இனத்தைக் குறிக்கிறது. இதனை நாட்டார் நகரத்தார் என்னும் வழக்கும் புலப்படுத்துகிறது. செட்டி நாட்டுக்கும் செந்தமிழுக்கும் நெருங்கிய உறவுண்டு. செட்டி நாடென்னும் செந்தமிழ் நிலம் பாண்டித் தமிழின் மணமும், பாரி வண்மையும் கொண்டது. ஆகலின் செட்டிநாடு சீர் மலிந்த பகுதி யாயிற்று.

நகரத்தார் - பெயர்க் காரணம்

நகரத்தார் என்னும் சிறப்புப் பெயர் செட்டியார்களை மட்டும் குறிப்பதற்கு அறிஞர்கள் பல காரணங்களைக் கூறுவர். காவிரிப் பூம்பட்டினம் என்ற நகரத்திலிருந்து வந்தவர்; ஆதலின் நகரத்தார் என்றழைக்கப்பட்டனர் என்பர் சிலர். இக்காரணம் நகரத்தார் வரலாற்றோடு தொடர்புடையது. நகரத்தார் என்ற பெயர்க் காரணம் பற்றி அறிஞர் எஸ்.சந்திரசேகர் கீழ்க்கண்டவாறு கருத்துரைப்பர்.

> 'நகரம் என்னும் சொல் பழந்தமிழ் வாணிப மையமாக அல்லது வாணிப கிராமமாக விளங்கிய இடத்தைக் குறித்தது. தென்னிந்திய வரலாற்றில் சோழர் காலத்தில் (கி.பி. 846 முதல் கி.பி. 1279 வரை) இச்சொல்லாட்சி வாணிப நாட்டங் கொண்ட அர்ப்பணிப்புத் தன்மை கொண்ட, குறிக்கோள் மாந்தரைக் குறித்தது. ஆகவே நகரத்தார் என்பது

வாணிபத் தொடர்புடையாரைப் பொதுவாகக் குறித்தது.'

எனக் கிளப்பர். இக்கருத்து திரு.பி.வி.என். நாயுடு என்பாரின் கூற்றைத் தழுவியதாம்.

'நகரம் என்னும் சொல் மக்கள் கூடி வாழும் பகுதியைச் சுட்டுவது. நகரம் என்னும் சொல் ஆங்கிலத்தில் உள்ள 'township' என்னும் பொருளையே தருகிறது. சமுதாய நோக்கங்களுக்காக நகரத்தார் என்றழைக்கப்படும். செட்டியார் இனம் ஒன்பது நகரங்களாக வகைப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு நகரத்தின் தலைமையில் ஒவ்வோர் கோயிலும் அமைந்ததே.'

நாயுடு அவர்களின் இக்கருத்து நகரத்தார் வரலாற்றோடும், சமூக அமைப்போடும் தொடர்புடையதாகும். 'நகரகர்' என்னும் வட சொல்லும் நகரவாசிகளையே சுட்டுவது இங்கு நினையத் தகும்

பழந்தமிழில் இலக்கியங்களில் 'நகர்' என்ற சொல் அரண்மனை அல்லது பரந்த வீட்டைக் குறிப்பதாகும். அறைகள் அதிகம் கொண்டதும், வசதிகள் அனைத்தும் மிக்க அரண்மனை போன்ற வீடுகளில் வாழ்ந்தோரை 'நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்' என்றழைப்பதும் அவர்களின் வீட்டமைப்பைக் கருத்திற் கொண்டேயாம். இது மட்டுமின்றி இங்கு மற்றொரு கருத்தும் நினையத் தக்கது. கோட்டை என்பது நாட்டினைப் பாதுகாக்கும் அரண்களில் ஒன்று. ஆகவே கோட்டையை அரண் என்றழைப்பர். நாட்டிற்கு அமையும் பலவித அரண்களுள், பொருள் செயல் வகைகளுள் ஒன்றான வாணிகமும் ஓர் அரணாகும். ஆகவேதான் வான்புகழ் வள்ளுவர் அரண் என்னும் அதிகாரத்தில்,

'ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்'

எனக் கூறினார். அரண் என்னும் அதிகாரத்தை அடுத்துப் பொருள் செயல் வகை என்னும் அதிகாரத்தை வள்ளுவர் வைத்ததும் இக்கருத்துப் பற்றியேயாம். இதனைப் பரிமேலழகர் தெளிவுற விளக்குவர்.

'இனிப் பெரும்பான்மையும் நாட்டானும் அரசானும் ஆக்கவும் காக்கவும் படுவதாய பொருளைச் செய்தலின் திறம் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்.'

மேற்கூறப்பட்ட கருத்துகளால் நாட்டுக்கு வணிகமும், கோட்டையைப் போலப் பாதுகாப்புத் தரும் என அறிகிறோம். ஆகவே இதற்கு வணிகத் துறையில் தலைநின்ற செட்டியார்கள் நாட்டுக்குக் கோட்டையைப் போன்று பொருளாதாரப் பாதுகாப்பை வழங்கினர். வாணிகத் துறையில் வளப்பமடையாத நாடு சிறந்த, வளமுடைய நாடாகக் கருதப்படுவதில்லை. இஃது உலகறிந்த உண்மை. இதனை உளங்கொண்டு நோக்க 'நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்' என்னும் சொற்றொடரின் பொருள் மேலும் விளக்கமடைகின்றது. வாணிகத் துறையில் கோட்டையாக விளங்கிய இவர்களை நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் என்றழைத்ததன் காரணமும் அறிய வருகின்றது. இக்கருத்தினைப் பொருளாதாரத் துறையில் நகரத்தார்கள் ஆற்றிய பங்கும் பணியும் பற்றிய ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

'செட்டி' என்னும் சொல் வாணிகம் செய்வோரைக் குறிப்பதாகவே தென்னிந்திய மொழிகள் பலவற்றிலும், அவற்றின் கிளைமொழிகளிலும் வழங்கி வருகிறது. இச்சொல்லின் தோற்றம் பற்றிப் பல கருத்து வேறுபாடுகளும் ஐயப்பாடுகளும் நிலவி வருகின்றன. 'செட்டி' என்னுஞ்சொல் 'எட்டி' என்ற சொல்லினின்று பிறந்திருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். இச்சொல் சோழர்காலத்திலும் பிற்காலப் பாண்டியர் காலத்திலும் இவ்வாறு தோன்றியிருக்க வாய்ப்புண்டு. எடுத்துக்காட்டாக 'எட்டி சாயலன்' என்னும் வணிகன் மணிமேகலையிலும் குறிப்பிடப்படுகின்றான். இப்பெயர்களை நோக்க 'எட்டி' என்னும் சொல் வாணிபத் தொடர்புடையோருக்கு வழங்கி வந்ததாகக் கூறலாம்.

'செட்டு' என்னுஞ் சொல் சிக்கனம் என்ற பொருளில் வழங்கி வருவதைப் பலரும் அறிவர். அன்றாட வாழ்வில் பொருளைச் செலவிடுவதில் அக்கறையுடனும் கவனத்துடனும் எண்ணிப் பார்த்துச் செலவிடும் பண்புடையவர் செட்டியார்கள். ஆதலின் 'செட்டி' என்ற சொல் 'செட்டு' என்னும் சொல்லினின்று பிறந்தது எனத் துணிவோர் பலர். கவியோகி சுத்தானந்தரும் இக்கருத்தினரே என்பதனைக் கீழ்க்கண்ட பாடல் தெளிவுபடுத்துகிறது.

'வீட்டிற் செட்டாக வாழ்ந்திடுவார் ஏதும்
வீணின்றி மிக்கக் கணக்கிடுவார்
நாட்டிற்குத் தாராள மாய்க்கொடுப்பார் இவர்
நல்ல பொதுநல ஊழியரே.'

'செட்டு' என்னுஞ் சொல் வாணிகத்தில் ஈட்டப்படும் இலாபத்தின் எல்லையைக் குறிப்பதாகும். தமிழில் வழங்கும் இச்சொல் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில் புரியும் மக்களுக்கு வழங்கப் பட்டது என்பர் சிலர். ஆயின் இக்கருத்து ஒரே வழிதான் ஏற்புடையது. 'செட்டி' எனுஞ் சொல், இலாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டு வாணிகஞ் செய்வோரைக் குறித்தது. வாணிகத்தில் இலாபம் ஈட்ட விழைவது, 'செட்டு' பெற எண்ணுவது செட்டியார்களுக்கு மட்டுமின்றி எல்லா வணிகர்க்கும் பொருந்துவதன்றோ? ஆகலின் செட்டி மக்கள் என்பது வாணிகஞ் செய்த பிரிவினரைக் குறிக்கும் எனக் கோடலே சாலப் பொருந்தும்.

திரு. சந்திரசேகர் அவர்கள், 'செட்டிறை' என்னுஞ் சொல் ஒரு விதமான சுங்க வரி அல்லது இறக்குமதி வரியைக் குறிப்பதாகும். ஆகவே 'செட்டிறை' என்னுஞ் சொல்லினின்று செட்டி என்னுஞ் சொல் தோன்றி, இச்சொல் இவ்வரியோடு தொடர்புடைய வணிகரினத்தைக் குறித்தது' என்பர்.

வடமொழியில் 'சிரேஷ்டி' என்ற சொல்லினின்று செட்டி என்ற சொல் பிறந்திருக்க வாய்ப்புண்டு எனவும் திரு. சந்திரசேகர் கூறுவர். 'சிரேஷ்டா' என்ற சொல்லுக்குச் சிறந்த, இன்றியமையாத எனும் பொருள்கள் உண்டு. இன்றுங்கூட இப்பெயர் மிகப் புகழ்பெற்ற குடும்பத்தாருக்குரியதாக இருப்பது கவனிக்கத்தக்கது என்றும் சந்திர சேகர் கூறுவர். திரு. சந்திரசேகர் தம் கருத்துக்கு அரணாக, மறைந்த முன்னாள் இந்திய பிரதமர் ஜவகர்லால் நேருவின் கூற்றை ஆதாரமாகக் காட்டுவர்.

> 'ஜவகர்லால் நேரு வேறொரு சூழலில் எழுதும்போது தமிழகத்தின் செட்டிகள் மிகப் பழங்காலத் தொட்டே வாணிபத்திலும், தொழிலிலும், (வட்டித் தொழிலிலும்) தலைவர்களாக விளங்கிவந்துள்ளனர். செட்டி என்ற சொல் சிரேஷ்டி என்ற வட சொல்லினின்று தோன்றி வணிகரினத்தில் தலைமை வாய்ந்தோரைக் குறித்தது. மற்றொரு பொதுப் பெயரான 'சேட்' என்பது சிரேஷ்டியிலிருந்து தோன்றியது. தமிழகத்தின் செட்டிகள் தென் இந்தியாவில் மட்டுமன்றி பர்மா முழுவதும் பரவி வாழ்ந்து இன்றியமையா இடம் வகித்துள்ளனர்.'

மேற்கூறிய கருத்துக்களை உளங்கொண்டு நோக்குங்கால் 'செட்டி' என்ற சொல் 'சிரேஷ்டி' என்ற வடசொல்லினின்று தோன்றியது என்பது, வடமொழிமாட்டு மிகுந்த விருப்பமுடையார் கூற்றாகவே தெரிகிறது. ஆயினும் வடமொழியிலும் இச்சொல் வணிகம் செய்வோரைக் குறித்தது என்ற கருத்து இவண் நினையத் தகும்.

தமிழில், செட்டாக வாழ்பவர் செட்டியார் என்பது அத்துணைப் பொருத்தமாகத் தோன்றவில்லை. செட்டாக வாழ்பவரின் திருமணம் போன்ற பெரிய நிகழ்ச்சிகளிலும், ஏனைய மங்கல நிகழ்ச்சிகளிலும் 'செட்டு' எங்கே சென்றது? மேற்கூறிய நிகழ்ச்சிகளில் பணத்தை வாரி இறைத்துச் செலவு செய்வதை நோக்க, செட்டாக வாழ்பவர் செட்டியார் என்ற கருத்து ஏற்புடையதன்று.

சங்க இலக்கியங்களின் மூலம் வாணிகச் சாதியினர்க்கு, வணிகர்களுக்கு 'எட்டி', 'காவிதி' ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன என்றறிகிறோம். சிலப்பதிகாரம் காட்டும் எட்டி சாயலனும், மணிமேகலை மொழியும் எட்டி குமரனும் இத்தகு விருது பெற்றோரேயாவார். ஆகலின் 'எட்டி' என்ற சொல் மருவி நாளடைவில் 'செட்டி' என்று வழங்கியிருக்க வேண்டும் எனக் கோடலே பொருந்துவதாகும். மொழி வளர்ச்சியில், மக்கள் பேச்சுவழக்கில் இத்தகு மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. இச்சொல் பற்றிய ஆராய்ச்சியில் கருத்துரைக்க வேண்டுவது மொழி யியலார் கடனாம்.

செட்டி எப்போது செட்டியார் ஆனார்? என்ற வினாவும் எழுவது இயல்பே. 'ஆர்' என்னும் விகுதி சிறப்புக் கருதிச் சொல்லப் பட்டது. ஆர் என்னும் பின்னொட்டு மரியாதை கருதி வழங்கப்படுவது யாவரும் அறிந்ததே. ஆகலின் 'செட்டி' என்னுஞ் சொல் 'செட்டியார்' ஆயிற்று. ஆயினும் இம்மாற்றம் பழைய வழக்கா என்று ஆராயுமிடத்து, அறிஞர் திரு. சந்திரசேகர் அவர்களின் கருத்துப்படி, அரை நூற்றாண்டுகட்கு முற்பட்டதாகவே இருந்திருக்க வேண்டும். சாசனம், பட்டயம் ஆகியவற்றில் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் 'செட்டி' என்ற சொல்லே கையாளப்பட்டுள்ளது. இம்மாதிரி 'ஆர்' என்னும் பின்னொட்டு தெலுங்கு போன்ற தென்திராவிட மொழிகளிலும் மரியாதைக்குரியதாக வழங்கி வருகின்றது. சான்றாக ரெட்டிகாரு, நாயுடுகாரு, செட்டிகாரு ஆகிய தெலுங்குச் சொற்களைக் கூறலாம். எனவே 'ஆர்' என்னும் பெருமைக்குரிய அல்லது சிறப்புக்குரிய பின்னொட்டு செட்டி என்ற சொல்லுடன் இணைந்து செட்டியார் ஆயிற்று; செட்டியாரினமும் பெருமைக்குரியதாயிற்று.

நகரத்தார் இனம் பழஞ்சிறப்புடைய இனமாக விளங்கியது போன்றே இவர்களின் பைந்தமிழ்ப் பற்றும் தொன்மை மிக்கது. 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்று பரந்த மனப்பாங்குடன் பாடல் பாடிய கணியன் பூங்குன்றனார் செட்டிநாட்டுப் புலவரே என்பது அறிஞர் பலரின் முடிந்த முடிபு. பொதுமைக் குரல் எழுப்பிய புலவரை ஓரினத்தைச் சேர்ந்தவர் எனக் குறுகிய எல்லைக்குள் அடக்கிப் பார்ப்பது பொருந்தாது; ஆயினும் தமிழினத்தின் மாண்புக்கும், புதுமைச் சிந்தனைக்கும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே 'பூபாளம் இசைத்த' புலவர் நகரத்தார் இனத்தில் பிறந்தவர் என்று கூறும் வேளையில் இனத்திற்கும் பெருமை சேர்கிறது. அறிவுடைச் சான்றோர்கள் பொதுவுடைமையானவர்கள் என்பதில் இருவேறு கருத்துக்கள் இல.

பூங்குன்றம் என்ற பகுதி பூங்குன்ற நாடு எனக் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி செட்டிநாட்டுப் பகுதியில் உள்ள 96 ஊர்களில் 'மகிபாலன் பட்டி' என்றழைக்கப்படுவதாகும். பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் ஆகிய சான்றோர்கள் இப்புண்ணியபூமியில் பிறந்தனர்.

ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற் புலவரும் செட்டி நாட்டினரே. நகரக் கோயில்கள் ஒன்பதில் இளையாத்தங்குடிக் கோயில் என்றொரு பிரிவு உண்டு. இதன் உட்பிரிவினுள் 'ஒக்கூருடையார்' என்றொரு பிரிவும் உண்டு. இவ்வொக்கூரில் பிறந்த பெண்பாற் புலவரே ஒக்கூர் மாசாத்தியார். நன்றியுணர்வு மிக்க இப்புலவரின் பாடல்கள் புறநானூற்றில் அமைந்துள. ஒக்கூரில் பிறந்த காரணத்தோடு மட்டு மன்றி அப்புலவரின் பெயரும் அவர் நகரத்தார் குலத்தினரே என்பதனை மெய்ப்பிக்கும். நகரத்தார் பெருமக்கள் சாத்தப்பன், சாத்தம்மை எனப் பெயர் வைக்கும் வழக்குடையவர்கள்.

சங்க காலத்திற்குப் பிறகு தோன்றிய பக்தி இயக்க காலத்திலும் பட்டினத்தடிகள், காரைக்காலம்மையார் போன்ற புலவர் பெரு மக்களைக் காண்கிறோம். இப்பட்டினத்தடிகள் நகரத்தார் என்பதற்கு இளையாற்றங்குடிக் கோவிலின் ஒரு பிரிவான 'பட்டினசாமி வகுப்பே' தக்க சான்றாகும். 'அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு வரிசை யிட்டுப் பார்த்து மகிழாமல்' எனப் பட்டினத்தடிகள் பாடியுள்ளார். வரிசை, ஆத்தாள் என்ற சொல்லாட்சிகள் இவண் கவனிக்கத்தக்கன.

தாயாரை 'ஆத்தாள்' என்றழைப்பது செட்டிநாட்டு மரபு. மங்கல நிகழ்ச்சியாயினும், துன்ப நிகழ்ச்சியாயினும் தாய் வீட்டிலிருந்து சீர்வரிசையை வரிசையாகக் கொண்டு சென்று பரப்பும் பழக்கம் உண்டு. இத்தகு நகரத்தார் பழக்க வழக்கங்களைப் பட்டினத்தடிகள் பாடியுள்ளமையால் பட்டினத்தடிகள் செட்டிநாட்டுப் புலவரே எனத் துணியலாம்.

சிற்றிலக்கியக் காலம் என்று கூறப்படும் இடைக்காலத்திலும் பல செட்டிநாட்டுப் புலவர்கள் தமிழுக்குச் சிறப்பான தொண்டாற்றியுள்ளனர். பாடுவார் முத்தப்ப செட்டியார், காரைக்குடி சொக்கலிங்கையா, வயிநாகரம் அ. இராமநாதன் ஆகிய முதுபெரும் புலவர்களும் நகரத்தாரே.

இருபதாம் நூற்றாண்டில் பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு தமிழ்க் கவிதை மரபைத் தழைக்கச் செய்த கவிஞர் பரம்பரையில் கவிஞர் கண்ணதாசனுக்குச் சிறப்பிடம் உண்டு. இவர் முத்தையா என்னும் இயற்பெயர் கொண்டவர். இன்றும் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த பற்பல பேராசிரியர்கள் தமிழ்ப்பணி யாற்றிவருவதை நாம் காணலாம். பதிப்பகங்கள் அமைத்துத் தமிழ் நூல்களை வெளியிட்டும் தமிழ்த் தொண்டாற்றி வருகின்றனர் நகரத்தார் பெருமக்கள். தமிழ் நூல்களை வெளியிடுவோர்க்கு விளம்பரம் இல்லாமல் பொருளுதவியும் செய்து வருகின்றனர் செட்டியார்கள்.

> 'இதுகாறும் நாம் கண்ட தமிழ்த் தொண்டர்களை நினைவுகூர்கையில், செந்தமிழ்ப் பற்று மிக்க செட்டியார்களின் தமிழ்ப் பணியைத் திரு. சந்திரசேகர் அவர்கள் சாசனங்களின் துணைகொண்டு நிறுவுவதும் கருதத்தக்கது.'
>
> 'The contribution of the Nagarathar community to the growth of Tamil language and litereature is attested to in one of the sasanas. There are references to the Nagarathar's love for poet Tiruvalluvar's (circa first century A.D.) famous book Tirukkural and the saint Tirumulars (circa fifth century A.D.) saivite work Tirumantiramalai. The sasanas also bear evidence to the rich patronage extended by the Nagarathar community to Tamil poets and writers in general. For example, a golden anklet was bestowed upon Avvai, the celebrated Tamil poetess ; the community also constructed a

temple in memory of Kamban, the renowned author of the Tamil Ramayana.'

தாம் வாழும் இடங்களிலெல்லாம் தமிழையும் சமயத்தையும் நகரத்தார் பேணிவருவது பெருந்தொண்டாகும். செட்டிநாட்டில் மட்டுமின்றிச் சென்றவிடமெல்லாம் செந்தமிழைத் தழைக்கச் செய்தனர் செட்டி மக்கள். திரைகடலோடியும் திரவியம் தேடச் சென்ற நகரத்தார் பெருமக்கள் பர்மா, மலாயா, இலங்கை, இந்தோனேசியா ஆகிய பல நாடுகளுக்கும் சென்றனர். இவர்கள் வெறுங்கையோடு செல்லவில்லை. பெரும் பணம் கொண்டுசென்று அதனை முதலீடு செய்து பொருளீட்டி நாட்டுக்கு நலஞ்சேர்த்தனர். நகரத்தாரின் வட்டித்தொழில் பல நாடு களை வளம்பெறச் செய்தமையைப் பல அறிஞர்களும், ஆராய்ச்சி யாளர்களும் கட்டுரைகளாக வடித்துள்ளனர்.

வட்டித்தொழில் வாழ்க்கைத் தொழிலாக அமைந்தாலும் பணம் ஒன்றே குறிக்கோளாக அமையவில்லை அவர்களுக்கு. தேடிக் குவித்த திரவியங்கள் பலப்பல; ஆனாலும் வாழ்க்கைக்கு வேண்டிய நல் லொழுக்கம், நற்பண்புகள் அனைத்தையும் மறந்தாரில்லை. நாட்டு உணர்வும், மொழியுணர்வும், சமயவுணர்வும் சாலப் பெற்றவர்கள் நகரத்தார். சென்றவிடமெல்லாம் செந்தமிழ் வளர்த்த சீராளர் நகரத்தார். கன்னித்தமிழுக்குக் கவின்மிகு தொண்டாற்றிய இவர்திறம் கட்டுரைக்கும் தகையதன்று. 'செட்டிநாடும் செந்தமிழும்' (1984), 'நகரத்தார் கலைக்களஞ்சியம்' (1998) போன்ற நூல்கள் நகரத்தாரின் நற்றமிழ்ப் பணியை எடுத்துரைக்கின்றன.

பி.என்.எம். முத்துப்பழநியப்ப செட்டியார்

'மலாயாவின் தோற்றம்' என்னும் அரிய ஆய்வு நூலை, வரலாற்று நூலை எழுதிய ஆன்றோர் இவர். சுங்கரம்பை எனப்படும் சுங்குரும்பைப் பகுதியைச் சார்ந்தவர் இவர்.

'மலாயாவின் தோற்றம்' என்னும் நூல் இவ்வான்றோரின் கடும் உழைப்பினால் மலாய் நாட்டின் மாண்பை எடுத்துரைக்கும் ஏற்றமிகு நோக்கோடு எழுதப்பட்டதாகும். மக்களின் ஒருமைப்பாடு, ஆங்கில அரசின் திறம், அரசியலமைப்பு, இயற்கை எழில், இந்தியர்களின் தொடர்பு, செல்வத்தின் வளம், செட்டியார்களின் சிறப்பு, தக்காரின் வாழ்க்கை ஆகிய இவற்றைச் சீர்மலிந்த தமிழில் திறம்படச் சித்திரித் துள்ளார் இவ்வறிஞர். ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் எழுதப்பட்ட

இந்நூலில் உள்ள செய்திகள் அனைத்தும் உண்மையான வரலாற்றுச் செய்திகளாகும். இந்நூல் 1938இல் வெளிவந்த ஒப்புயர்வற்ற, சிறந்த வரலாற்று நூலாகும்.

நூலின் ஒவ்வொரு கட்டுரையைத் தொடங்கும்போதும் வெண்பாவோடு தொடங்குகிறார் ஆசிரியர். இக்கவிதைகளைத் 'தமிழறம் பேணுந் தகைமையாளர்' என்னுஞ் சிறப்புப் பெற்ற மலாக்கா அருணாசலஞ் செட்டியார் இயற்றினார். இச்செய்தியை நூலின் முன்னுரையில் நூலாசிரியர் திறந்த உள்ளத்தோடு நேர்மையாகக் கிளப்பர். நூலாசிரியர் ஆய்வறம் பேணிய அறிஞர் என்பதனை இப்பகுதி காட்டுகிறது. நூலின் மேற்கோள்கள் பொருத்தமுறக் கையாளப்பட்டு, இனிய, எளிய தமிழ் நடையில் நூலை ஆக்கியுள்ளார் ஆசிரியர். நூலின் முன்னுரையில் ஆசிரியர், சுவாமி அற்புதானந்தா, மலாக்கா அருணாசலஞ் செட்டியார் ஆகியோரின் உதவியை அழகிய உருவக நடையில் காட்டுவர்.

'மலாயாவின் தோற்றமாகிய மரத்தைப் பெருந்தருவாக
வளர்த்து, பல கிளை, மலர், பிஞ்சு, காய், கனிகளாக்கி,
அக்கனியின் இரசத்தை நாம் அனைவரும் அருந்தும்
வண்ணம் செய்தார்.'

சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் ஆகிய இலக்கியங்களிலிருந்து பல மேற்கோள்கள் காட்டப்பட்டுள. இவை நூலாசிரியரின் இலக்கியப் பயிற்சியைத் தெளிவுபடுத்தும். கவிதைகளில் தற்குறிப்பேற்ற அணியைப் பயன்படுத்துவர் கவிஞர். ஆயின் நூலாசிரியரோ உரைநடையிலும் இவ்வணியைக் கையாண் டுள்ளமை பாராட்டுக்கு உரியது. 'பினாங்கு ஆலயங்களின் பெருமை' என்ற கட்டுரையில் தண்ணீர் மலையின் காட்சிகளை வருணிக்கும் வேளையில் தற்குறிப்பேற்ற அணி செவ்வையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. கார்த்திகேயனின் கருணை வெள்ளத்தில் ஆழ்ந்த அன்பர்கள் கொடுக்கும் பழங்களுக்காகச் சோலைகளில் உள்ள குரங்குகள் அப்பழங்களைப் பறித்துக்கொண்டும், சண்டையிட்டுக் கொண்டும் மரக்கிளைகளில் தாவும் காட்சியை,

'உலக மக்களில் நல்லோர் கூட்டுறவும் நற்பழக்கமும் இல்லாதவர்கள், ஒன்றுபட்டு வாழாதவர்களின் திறத்தையும், தான் ஒருவன் வாழ்ந்தால் போதும்

என்று எண்ணிக் கிடைத்தவற்றைப் பற்றிக்கொண்டு இல்லத்தை அடையும் ஒருவரின் செய்கையையும், எளியாரை வலியார் வாட்ட நினைக்கின்ற கூற்றையும் பார்ப்பது போல இருக்கும்.'

என வருணிக்கிறார்.

நகைச்சுவை நயம்பட எழுதியுள்ள போக்கும் இந்நூலில் அமைந்துள்ளது. 'செட்டியார்களும் சீர்திருத்தமும்' என்ற கட்டுரையில் மேனாட்டு நாகரிக மோகம் தந்த அவமானத்தை நகைப்பு ஏற்படும் வகையில் எழுதியுள்ளார்.

ஆய்வறிஞர்களைப் போல 'குணம்நாடி, குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்கக் கொளல்' என்னும் வள்ளுவனின் அடிச்சுவட்டில் நூலாசிரியர் தம் கருத்துகளை நடுவுநிலையோடு கூறியுள்ளார். நூலாசிரியர் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவராயினும் தம் சமூகத்திடம் இன்னும் சீர்திருத்த உணர்வுகள் முழுவளர்ச்சி பெற வில்லை என்ற கருத்தைக் கீழ்காணுமாறு கூறுகிறார்.

'ஆகவே சீர்திருத்தங்களையும் படிப்படியாகத்தான் புகுத்தவேண்டும் என்பது பலரது நோக்கம். அதைப் பலரும் பின்பற்றுவதால் இப்போது இயன்ற அளவு சீர்திருத்தத்தில் சிறந்துள்ள செட்டியார்கள் சமூகம் இன்னுஞ் சின்னாளில் அதிகம் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.'

மலாக்கா அருணாசாலம் செட்டியார் போன்ற பெரியோர்களின் வரலாற்றையும் இவண் காட்டியுள்ளார். இதனால் நாட்டுக்குழைத்த நல்லவர்களின் வரலாற்றையும் இந்நூல் பேசுகிறது. புள்ளிவிவரங் களோடு பல செய்திகளைப் பொருத்தமுறத் தந்துள்ளார் நூலாசிரியர்.

'செட்டியார் காந்தி' என்ற சிறப்புப் பெயர் நூலாசிரியருக்கு உண்டு. மகாத்மா காந்தியடிகளைப் போன்றே உருவத் தோற்றமும் உயர்பண்புகளும் உடையவராதலின் மக்கள் இவரைச் 'செட்டியார் காந்தி' என்றே சிறப்பித்தனர். இந்நூலாசிரியரின் அரும்பண்பு பற்றியும், அரும்பணி பற்றியும் நூலின் முகப்பில் அமைந்துள்ள சிறப்புரை தெளிவாக விளக்குகிறது.

'மனத்தூய்மை, வினைத்தூய்மை, மாறில் வாய்மை, செயல்வன்மை என்ற சீரிய ஒழுக்கங்களைப் பெற்றி

ருக்கும் ஸ்ரீமான் செட்டியார் மலாய் நாட்டில் நல்லனுபவமும், நல்லறிவுமுடைய அறிவாளர். அறம் உடலாயும், அறிவு உள்ளமாயும், அன்பு உயிராயும் பொருந்தியிருக்கப் பெற்றவர் என்பதை இவருடன் பழகிய யாவரும் அறிஞர். தாய்மொழி அபிவிருத்தி யிலும், தன் சமூகத்தினரின் மேன்மையிலும் இவர் ஆர்வம் கொண்டிருப்பதனாலாயே பெரும் சிரமத் திலும், பொருட்செலவிலும், நிகரற்ற உழைப்பிலும் நிலைபடும் அரிய செய்கையாக இந்நூலின் ஆக்கி யோனாக முற்படும் நீர்மையையும் நேர்மையையும் கொண்டனர்.'

மலாய் நாட்டின் வரலாறு பற்றிப் பல நூல்கள் ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ளன. ஆயின் தமிழில் மலாயாவைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள் அனைத்துக்கும் (ஒரு சிலவே) இந்நூலே தோற்று வாயாக, அடிப்படையாக அமைந்திருக்கிறது. மலாயாவின் தோற்றம் என்ற இந்நூலில் கூறப்பட்டிருக்கும் தரவுகள் மற்றும் செய்திகள் போல நடுநிலைமையுடனோ, மெய்ம்மையுடனோ மற்ற நூல்களின் செய்திகள் முழுவதுமாக அமையவில்லை என்பதும் கருதத்தக்கது. ஆதலின் 'மலாயாவின் தோற்றம்' என்ற இந்நூல் நாட்டு வரலாறாக மட்டுமின்றி, மொழி வரலாறாக, இன வரலாறாகத் திகழ்வதும் இவண் நோக்கத் தக்கது. ஆகவே மலேசிய இந்தியர்களின் - மலையகத் தமிழர்களின் வரலாற்றில் இந்நூல் 'துருவ நட்சத்திரமாக' ஒளிரும் பெற்றியது.

மலாக்கா உ.அரு. அருணாசலஞ் செட்டியார்

மலையகத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்ட ஆன்ற தமிழ்ச் சான்றோருள் இவரும் ஒருவர்.

பிறப்பும் வளர்ப்பும்

தமிழ்நாட்டில் பிறந்த இவர் செட்டியார் குல வழக்கப்படிப் பன்னிரண்டாம் அகவையில் 'கை பழக' பர்மாவுக்கு அனுப்பப்பட்டார். இவர்தம் தாய்மாமன்களுக்கும் இவ்வட்டிக்கடையில் பங்கு இருந்தது. பர்மா சென்ற அருணாசலனார் பர்மிய மொழியைக் கற்றார். முதல் உலகப் போர் நடந்த வேளையில் தாயகம் வந்து திருமணம் புரிந்து கொண்டார். பின்னர் 1919இல் தம் தமையனாருடன் வாணிபத்தின் பொருட்டு மலாக்கா வந்தார். மலாக்காவில் க.வீ.அழ. கடைக்கு

மேலதிகாரியாகப் பணியாற்றினார். 1929 வரை இப்பணியில் நீடித்தார். 1930இல் தமிழகம் சென்றார். இக்காலத்தில் அருணாசலனார் தமிழில் சிறந்த புலமை பெறும் பொருட்டுக் கற்றார். சைவ சித்தாந்த வித்தியா சிரமத்தில் சேர்ந்து அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டார். பல இடங் களுக்கும் சென்று சொற்பொழிவாற்றினார்.

கல்வித் திறம், கேட்டார்ப் பிணிக்கும் சொற்பொழிவுத் திறம், தமிழ்த் திறம் ஆகியவை கண்டு காரைக்கால் சைவ சித்தாந்த வித்தியா சிரம விழாவில் இவருக்கு 'தமிழறம் பேணுந் தகைமையாளர்' என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது. சைவ சித்தாந்தம், தமிழிலக்கியம் இவற்றில் மட்டுமின்றி அரசியல் துறையிலும் ஆற்றல்மிக்க பேச்சாள ராக விளங்கினார். இவருக்கு வழங்கப்பட்ட உபசாரப்பத்திரம் ஒன்றில் இச்செய்தி குறிக்கப்பட்டிருக்கிறது.

'அரசியல் மிகத்தேர்ந்தோர் அறிவியலை
உணரார்கள் அதிலுந் தேர்ந்தோர்
உரைசெய்யும் ஞானவியல் உணரார்கள்
உலகநிலை இவ்வாறாக
பரசுதல்செய் பலவகையும் சிறப்புறவே
பயின்றதுடன் பயிற்றும் சான்றோய்
அரசத்தின் கிருபையினால் அனைத்தின்பம்
அடைந்துபுகழ் எய்தி வாழ்க.'

மகாத்மா காந்தியடிகள் தமிழகப் பயணம் மேற்கொண்ட வேளையில் 1927இல் கடியாபட்டிக்கு வருகை புரியுமாறு செய்தார். மீண்டும் காந்தியடிகள் 1934இல் தென்னிந்தியப் பயணம் செய்தபோது காரைக்காலில் அவரை வரவேற்றதோடு அமையாமல், அப்பெருங் கூட்டத்தில் அடிகளின் முன்னிலையில் பேசும் பெரும் பேறும் பெற்றவர். ஜவகர்லால் நேரு, டாக்டர் இராஜேந்திரபிரசாத் போன்ற தலைவர் களை வரவேற்கக் கடல் அலையெனத் திரண்டிருந்த மக்கள் கூட்டம் இவரின் நாநலத்தில் கட்டுண்டிருந்ததனை விரிவாகப் போற்றுவர் முத்துப்பழநியப்ப செட்டியார். வள்ளுவம் கூறும் நாநலம் இவரிடம் நன்கு அமைந்திருந்தது.

'நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று.'

மீண்டும் 1934இல் மலாக்காவுக்குப் புறப்பட்டு வந்து ஆயுள் காப்புறுதித் தொழிலை நடத்தியதாக பெ.நா.மு. முத்துப் பழனியப்பன்

கூறுவர். ஆயின் இவரின் புதல்வர் திரு. நாகப்பன் 1934இல் மலாக்காவுக்கு வந்து துணி வியாபாரத்தையும், மளிகை வியாபாரத்தையும் தொடங்கியதாகக் கிளப்பர். இவர் தொழிலைக் கவனிக்க நிர்வாகியைப் பணிக்கு அமர்த்திவிட்டு முழுநேரப் பொதுத் தொண்டராகச் சேவை செய்தார். இக்காலகட்டத்தில்தான் 'தமிழ்க் கொடி' என்னும் மாத இதழைத் தொடங்கினார். இருவாரங்களுக்கு ஒருமுறை இவ்விதழ் வெளிவந்தது. இவ்விதழினால்தான் தமிழ் மொழியின் மீதும் தமிழ் இலக்கியங்களின் மீதும் மக்களுக்குச் சிறிது ஆர்வம் தோன்றியது என்றால் மிகையாகாது.

மலாக்காவில் வாழ்ந்த நகரத்தார் இளைஞர்களை ஒன்றுபடுத்தித் 'தனவைசியர் இளைஞர் சபை' என்ற அமைப்பை உருவாக்கினார். இவர்களுக்குத் தமிழறிவை ஊட்டியதோடன்றி நாடக ஈடுபாட்டையும் ஊட்டினார். 1937 - 38ஆம் ஆண்டுகளில் 'உத்தமநாதன் அல்லது சத்திய புரி ஜமீன்தார்' என்னும் நாடகத்தை உருவாக்கி மலாக்காவில் மேடையேற்றினார். இதனைத் தொடர்ந்து 1939, 1940 ஆண்டுகளில் 'காரைக் காலம்மையார்', 'இந்திரா B.A.,' ஆகிய நாடகங்களை உருவாக்கி இவற்றைக் கோலாலம்பூர், மலாக்கா ஆகிய இரு நகரங்களிலும் மேடையேற்றினார். இந்நாடகங்களில் பெண் வேடங்களையும் ஆண்களே ஏற்று நடித்தனர்.

1941இல் இரண்டாம் உலகப் போர் மூளவே இவரின் தொண்டுகள் தடைப்பட்டன. சப்பானியர் ஆட்சிக்காலத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய ராணுவம் அமைக்கப்பட்டது. மலாக்காவில் இந்திய சமுதாயத்தின் பிரதிநிதியாக அருணாசலனார் பங்கேற்றார். அருணாசலனாருக்குத் துணையாக வழக்கறிஞர் எஸ். சண்முகம் என்பவர் நியமிக்கப்பட்டார். சப்பானியர் ஆட்சி முடிந்ததும் இவரின் தமிழ்ப் பணி மீண்டும் தொடர்ந்தது. மலாயா முழுவதும் பயணஞ்செய்து இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார். மக்களுக்கு இலக்கிய அறிவூட்டவே எண்ணருஞ் சொற்பொழிவுகள் ஆற்றினார்.

தமிழ்ப்பண்ணையில் தமிழ் வளர்த்தவர்

இவர் 'தமிழ்ப்பண்ணை' என்னும் அமைப்பின் மூலம் தமிழ் மொழி வகுப்புகள், தமிழிலக்கிய வகுப்புகள் ஆகியவற்றை நடத்தி வந்தார். ஆண்டுதோறும் கோலாலம்பூரில் தமிழ்க்கலை மாநாடு ஒன்றினை இடையறாது நடத்தினார். 1957இல் தேசிய அளவில்

சிறுகதைப் போட்டி நடத்திப் பவுன் பரிசுகளை வழங்கியது தமிழ்ப் பண்ணை. தமிழ்ப் பண்ணையின் வாயிலாகச் சில நூல்கள் வெளிவந்தன. ஆயின் இன்னின்ன நூல்கள் என்பது அறியுமாறில்லை. அருணாசால னாரின் அருந்தமிழ்ப் பணிக்கு உறுதுணையாக நின்றவர் சைவப் பெரியார் கா. இராமநாதன் ஆவார்.

இவர் சில நூல்களையும் எழுதியதாக அறிகிறோம். முன்னர் குறிப்பிட்ட நாடகங்களின் வழி அவர் நாடகாசிரியர் என அறியலாம். இவர் நல்ல கவிஞர் என்பதற்குச் சான்றாகப் 'பினாங்குத் தண்ணீர் மாமலை ஸ்ரீதண்டாயுதபாணி அருட்பாடற் திரட்டு' என்னும் நூல் சான்றாக அமைகிறது.

இவர் சமூகத் தொண்டராக, அரசியல் தொண்டராக, தமிழ்த் தொண்டராகப் பல்லாற்றானும் தொண்டு செய்தார். மற்ற துறைகளில் அவர் சேவை செய்திருப்பினும் அவருடைய தமிழ்த் தொண்டே வையம் புகழும் பெற்றியது. அதனாலன்றோ,

'தாய்நாடுந் தென்மொழியும் தானோங்கத் தொண்டாற்றும்
நேயனரு ணாசலமும் நேர்குணமும் வாய்மையுஞ்சேர்
இல்லாளுஞ் சேய்சுற்றம் யாவருமே என்றென்றும்
நல்லாராய் வாழ்ந்திடுவர் நன்று'

என்று வாழ்த்துவர் பி. திருநாவுக்கரசு என்பார். தமிழறிவை ஊட்டியும், தமிழ் கற்பித்தும், தமிழ் கற்பாருக்குத் 'திருவள்ளுவர் நூல் நிலையம்' நிறுவியும், தமிழ் இதழ் தொடங்கியும், தமிழ்ப்பண்ணை என்னும் சங்கம் அமைத்தும், தமிழ் நூல்களை அச்சிட்டும், தமிழ் நாடகக் கலையின்பால் ஈடுபாடு கொண்டு நாடக நூல்களை வெளியிட்டும் ஒல்லும் வகை யெல்லாம் உயர்பணி செய்த இவரின் தமிழ்ப்பணி ('மலைகயத் தமிழ்') இலக்கிய வரலாற்றில் என்றென்றும் நிலைபெற்று வாழும் என்பது வெள்ளிடை மலை.

சுப. நாராயணன்

மலையகத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் - குறிப்பாக எழுத்தாளர்களை உருவாக்கிய ஏற்றமிகு பணியில் அறிஞர் இவரை மறக்க இயலாது. தமிழறிஞர்களுள் 'குன்றென நின்ற' பெருமை கொண்ட அறிஞர் மு. வரதராசனார் சுப. நாராயணனை அறிஞராய் கண்டவர். ஆதலின் 'அறிஞர் சுப. நாராயணன்' என்றே அழைக்கலானார்.

மலேசியத் தமிழ் இலக்கியவுலகு 'கந்தசாமி வாத்தியாராக' இவரை நன்கறியும். இவர் சீர்மிக்க செட்டி நாட்டின் கல்லுப்பட்டியைச் சேர்ந்தவர். தமிழ் கூறும் நல்லுலகு இவரை ஓர் எழுத்தாளராக நன்கறியும். தி.ஜ.ர. 'சக்தி' இதழை விட்டு விலகி 'மஞ்சரி' இதழின் ஆசியராகப் பொறுப்பேற்றார். ஆதலின் 'சக்தி' இதழின் ஆசிரியராகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. 1948இல் சக்தியின் 'சக்திமிக்க' எழுத்தாளராக - ஆசிரியராக ஆனார்.

'ஆரியப் புல்லுருவி', 'மதம் பிடித்த மடாதிபதிகள்' ஆகியவை இவரின் கைவண்ணத்தால் மிளிர்ந்த கட்டுரை நூல்கள். 'கவிதைக் கலை விமர்சனம்' என்னும் திறனாய்வு நூலையும் திறம்பட எழுதிய இவர் 'கற்பளித்த கன்னி' என்னும் நாவலையும் எழுதியுள்ளார்.

தமிழ் மட்டுமின்றி ஆங்கிலமும், பிரெஞ்சு'ம் இவரிடம் கொஞ்சி விளையாடின. மும்மொழிப் புலமை கொண்ட முத்தமிழ் வல்லார். இவர் மலேசியத் தமிழ் இலக்கியம் என்னும் ஆலமரம் உருவாக வித்தாகத் திகழ்ந்தார். சுப.நா.வின் முயற்சிகள்தாம் மலேசியத் தமிழ் மாளிகையின் அடிக்கற்கள். இம்மாளிகையில் 'அகோரநாத் பண்டிதராகவும்', 'பிடாரிக் கண்ணுவாகவும்', 'பஸ்மாசுரப் பாவலராகவும்' கற்பனை அவதாரங்களில் உலவியவர் இவர்.

கவிதை, கட்டுரை, சிறுகதை, நெடுங்கதை எனப் படைப் பிலக்கியத்தின் ஒவ்வொரு துறையும் செழிக்கப் பயிற்சி கொடுத்தார். கதை வகுப்பு என்பது இவர் தமிழ்நேசனில் நடத்திய பயிற்சிப் பட்டறையாகும். இப்பட்டறையில் உருவாக்கப்பட்ட, புடம் போடப் பட்ட எழுத்தாளர்கள் பலர். சுருங்கச் சொல்லின் மலேசியத் தமிழ் எழுத்தாளர் பரம்பரை உதயமானது கந்தசாமி வாத்தியாரின் கதை வகுப்பினால்தான். 26.11.1950 முதல் 19.8.1951 வரை ஒன்பது மாத காலம் கதை வகுப்பு நடந்தது. குறைவான காலத்தில் நிறைவான செயல் திறத்துடன் இவ்வகுப்பு நடந்தது. தமிழ்நாட்டு எழுத்தாளர்களையே அதுகாறும் வாழ்வித்து வந்த மலேசியத் தமிழ்ப் பத்திரிகைகளில் மலையக எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிட ஏற்பாடு செய்தார் இவர். மலையக எழுத்தாளர்களுக்குச் சுப.நா. கொடுத்த ஊக்கமும் ஆக்கமும் என்றென்றும் நினையற்பாலன.

கதை வகுப்பு ஏன் தோன்றியது? இதனைப் பற்றி ந. பால பாஸ்கரன்,

> 'தமிழகச் செல்வாக்கிற்கு இரையாகாத, இந் நாட்டையே எப்பொழுதும் நினைத்து ஓர்

> எழுத்தாளர் பரம்பரையை உருவாக்க வேண்டும் என்ற உறுதியுடன் இம்முயற்சி அரும்பியது'

எனக் காரணங் காட்டுவர். கதை வகுப்பு பிறந்த சூழலை விவரித்து எழுது கையில் இவ்வகுப்பின் மூலவரான சுப.நா. கீழ்க்காணுமாறு குறிப்பர்:

> 'மலாயாவில் தமிழ் எழுத்தாளர் இல்லையென்ற கருத்துப்பட முன்னாள் 'தமிழ்நேசன்' ஆசிரியர் ஆதி. நாகப்பன் 1949 வாக்கில் தலையங்கம் எழுதினார். அவர் லண்டன் சென்ற பிறகு நானும் வானம் பாடியும் சேர்ந்து 1950, 51இல் எழுத்தாளர் வகுப்பு நடத்தி மணியான எழுத்தாளர்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்தினோம். வகுப்பு தொடங்கியபோது தமிழ் முரசு தலையங்கம் எழுதி, மலாயாவில் எழுத்தாளர் இல்லையென்ற கருத்துப்பட நையாண்டி செய்தது.

சுப.நா. குறிப்பிட்டவாறு எழுத்தாளர் வகுப்பாகத்தான் இஃது இயங்கி வந்துள்ளது. கதை, கவிதை, கட்டுரை என எல்லா இலக்கிய வடிவங்களையும் உருவாக்கப் பயிற்சி கொடுக்கப்பட்டது. பெயர்தான் கதை வகுப்பு என்றிருந்தது. ஆயின் இலக்கணம், மொழிபெயர்ப்பு, நாடகம் ஆகிய அனைத்துக்கும் இவ்வகுப்பில் இடமளிக்கப்பட்டது. பள்ளிகளில் வகுப்பு நடத்துவது போன்றே இங்கும் நடத்தப்பட்டது. தேர்வு வைத்துச் சான்றிதழும் வழங்கினர். கதை வகுப்பின் செயற் பாட்டை,

> 'பத்திரிகைக்கு வரும் எழுத்துப் படிகளை ஆராய்ந்து திறனாய்வு செய்வதே இவ்வகுப்பின் முக்கிய நோக்கம். சரளமாக பேச்சுநடையில் இக்குறிப்பு களைச் சொன்னதன் மூலம் கதை வகுப்பு, பேரார் வத்தை எழுப்பியது. புதிதாக எழுதத் தொடங்கிய பலருக்கும், அவ்வப்போது எழுதிய பலருக்கும் இது உற்சாகம் கொடுத்து கதைக் கலையின் கூறுகளை விளக்கியது. இதில் பங்கெடுத்த பலர் இன்றும் தேர்ந்த எழுத்தாளராக உலவுகின்றனர். வகுப்பின் முன்னேற்றத்தை அறிய விரும்பி சுப.நாராயணன் ஒரு தேர்வையும் நடத்தினார் இத்தேர்வு முடிவு களின்படி கலந்துகொண்டோர், 'மேதை', 'தேர்ந்த',

'சிறந்த', 'ஆர்வ' எழுத்தாளர்கள் என நால்வகைப் பிரிவில் வகுக்கப்பட்டனர்'

என்று விளக்குவர் நா. சுப்பிரமணியன்

சிறுகதை இலக்கணத்தை அகோரநாத் பண்டிதர் விளக்கினார்; பிடாரிக்கண்ணு விமர்சகர் எழுத்துத் திருட்டை அம்பலப்படுத்தினார். இவ்வகுப்பில் எழுதுபவரின் 'பஞ்ச லட்சணம்' இணைக்கப்பட வேண்டும் என்ற விதியும் இருந்தது. எழுதுபவரின் பெயர், படிப்பு, வயது, தொழில், எழுத்தனுபவம் ஆகிய ஐந்து அம்சங்களையும் எழுத்தாளர் குறிப்பிட்டனர். குறை கண்ட இடத்து நேரடியாக, யாருக்கும், எதற்கும் அஞ்சாமல் துணிந்து சொல்லும் திறம் பெற்றவர் சுப.நா. ஒரு திறனியிடம் இருக்க வேண்டிய நடுநிலைமையும், துணிவும் அவரிடம் இருந்தன. இவர் கருத்துத் திருட்டை (கதைத் திருட்டை) வன்மையாகச் சாடியவர். இதற்குக் கீழ்க்கண்ட பகுதியே சான்றாக அமைகிறது. 18.2.1951இல் 'சந்தேகம்' என்னும் கதையை இருவர் ஒருவரையொருவர் அறியா மலேயே ஒரே புத்தகத்திலிருந்து பெயர்த்தெழுதிக் கதை வகுப்பிற்கு அனுப்பினர். இதன் விளைவினைக் கீழே காண்க:

> 'கதை எழுதிப் பெயர் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கம் நல்லதுதான். ஆனால் இந்த மாதிரிக் கபோதித்தனமாக இருவரும் ஒரே புத்தகத்தைப் பார்த்து அதிலிருந்து ஒரு கதையைத் திருடிச் சிறிதும் மாற்றமின்றி அனுப்புவது, அயோக்கியத்தனமின்றி வேறென்ன? எங்கள் கதை வகுப்பையே அவமதிக்கும் போக்கில் உள்ள இந்தக் கெட்ட செயலை இனியாவது அத்தோழர்கள் செய்யாதிருப்பார்களாக! பரம்பரைத் திருட்டுப் பிண்டங்கள் செய்ய வேண்டிய இழிசெயலன்றோ இது! மாரீசத்தனம் செய்ய எண்ணும் பலருக்கும் இது ஒரு ஒரு நல்ல படிப்பினையாய் இருக்கட்டும்.'

இராமாயணம் அறிந்தோர் மாரீசனை அறிவர். இவன் மாயமான் வடிவெடுத்துச் சீதையை மயங்கச் செய்தவன். இத்தகு மாரீசனை எழுத்துத் திருட்டுக்கு உவமிப்பது அன்றையத் தமிழக எழுத்தாளர்களின் பாணியாகும். இதனைச் சுப.நா. அவர்கள் பயன்படுத்தியதிலிருந்து கதைத் திருட்டை அவர் எவ்வளவு தீவிரமாகச் சாடினார் என்பது தெரிய வரும்.

கதைத் திருடர்களை அவர் தண்டித்த முறை புதுமையானது. ஒரு சமயம் பதினேழு வயதுடைய ச.ப. ராஜா என்பவர் ஒரு திருட்டு நாடகத்தை எழுதியனுப்பினார். சுந்தசாமி வாத்தியாரும் இந் நாடகத்தைப் பாராட்டிப் பிரசுரித்தும் விட்டார். ஆயின் மா. இராமையா. மு. அப்துல் மஜீது, கே. ராஜா ஆகிய மூவரும் நாடகத் திருட்டை அம்பலப்படுத்தினர். பின் சுந்தசாமி வாத்தியார் கீழ்க் காணுமாறு புதிய தண்டனையை அறிமுகப்படுத்தினார்.

> 'ச.ப. ராஜாவுக்கு இலக்கியத் தீவாந்தர சிட்சை விதிக்கிறேன். இலக்கியச் சட்டப்படி கொலைத் தண்டனை கொடுக்க வேண்டும். வயது வராததால் அனுதாபங் காட்டி இந்த சிட்சை விதித்துள்ளேன். இலக்கியப் போலீஸ் இன்ஸ்பெக்டர்களாகிய மூன்று தம்பிகளையும் ஸம்பூர்ண ஸந்தோஷத்துடன் பாராட்டி ஆசிர்வதிக்கிறேன். ச.ப. ராஜா அடுத்தபடி அனுப்பியுள்ள தொடர்கதை இந்தக் கணமே தீக்கிரையாக்கப்படும்.'

நேர்மையான உள்ளம் கொண்டவர். ஆதலின், தாம் ச.ப. ராஜாவுக்கு வழங்கிய புகழுரைகள் அனைத்தும் நாடக எழுத்தாளரான சிங்கதாசனுக்குச் சமர்ப்பிக்கப்படுவதாகவும் தெரிவித்துக்கொண்டார்.

நகைச்சுவை உணர்வுடைய இவர் கதை வகுப்பைக் கவர்ச்சி மிக்க வகையில் நடத்தி வந்தார். சான்றாகக் கதைத் திருட்டை அவர் அம்பலப் படுத்திய முறை புதுமையானதாக அமைந்திருந்தது.

> மாரீச மர்த்தனம்
> மாரீசன் - எஸ்.பி. நாதன், துரோலாக்
> மாரீசம் - தந்தையும் தனயனும்
> போலீஸ் - கா. பெருமாள், ரிங்லட்
> தண்டனை - சட்டப்படி ஆறு மாத அச்சுலகப் பிரஷ்டம்
> ஆனால் போகிறது என்று மன்னிப்புத் தரப்படுகிறது, திருந்தவும்.'

கதை வகுப்பு ஏற்படுத்திய உணர்வின் ஆற்றலைக் கண்டு கு. அழகிரிசாமி மலைத்துப் போனார். 1952இல் மலேசியா வந்தபோது அவர் தெரிவித்த கீழ்க்காணும் கருத்து கதை வகுப்பின் வெற்றியை உறுதிப்படுத்துகிறது:

'தமிழ் நேசன்' பத்திரிகையின் ஞாயிறு பதிப்பைத் தயாரிக்கும் முழுப்பொறுப்பும் என்னுடையதாயிற்று. இந்நாட்டு எழுத்தாளர்கள் எழுதியனுப்பிய சிறுகதைகள் என்று நூறு நூற்றைம்பது கதைகளைக் கொண்ட ஒரு கட்டு என்னிடம் கொடுக்கப்பட்ட போது என்னால் நம்பவே முடியவில்லை. இந் நாட்டில் கதை எழுதக்கூடியவர்கள் இத்தனை பேர் இருக்கிறார்களா என்று நான் ஆச்சரியப்பட்டேன். நான் மலாயாவில் போய் இறங்கியபோது அங்கே கதை எழுதுகி,வர் ஒருவர் இருப்பார் என்றே நான் நினைக்கவில்லை. எதிர்பாராத ஆச்சரியத்துடனும், மகிழ்ச்சியுடனும் கதைக்கட்டைப் பிரித்து வாசிக்க ஆரம்பித்தேன் நூற்றைம்பது கதைகளில் ஐந்தாறைப் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுத்தேன். வாரா வாரம் மலாயாத் தமிழ் எழுத்தாளர்களின் கதைகளை வெளியிட்டு வந்தேன்.'

சுப. நாராயணன் எந்நோக்கத்துடன் கதை வகுப்பைத் தொடங்கி வைத்தாரோ அந்நோக்கம் நல்லமுறையில் வெற்றிபெற்றது என்பதை கு. அழகிரிசாமியின் கூற்று வெளிப்படுத்துகின்றது அல்லவா. இது சுப. நாவின் சாதனையன்றோ.

கதை வகுப்பின் சாதனை பற்றி மா. இராமையாவும் மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெருமைப்படுவதைக் காணலாம். சி. கமலநாதன் கதை வகுப்பைப் 'பாலபாடம்' எனப் போற்றுவதும் இவண் நினையத்தக்கது. சிறுகதை எழுத்தாளர்களுள் ஒருவரான சை. பீர்முகம்மது,

'இங்கே ரப்பர்க் கன்றைக் கொண்டுவந்து நட்டு இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு வளம் சேர்த்த நீட்லி பிரபுவுக்கு நாம் எந்த மரியாதையும் நன்றியும் செய்வோமோ அதே அளவு மாற்றுக் குறையா நன்றியையும் மரியாதையையும் தமிழ்ச் சிறுகதையை இங்கே விதைக்க முயற்சிகள் எடுத்துக்கொண்ட திரு. சுப. நாராயணனுக்கும், திரு. பைரோஜி நாராயணனுக்கும் சொல்ல வேண்டும். தமிழ்ச் சிறுகதையின் முனைகள் மழுங்கலாக இருந்த

நேரத்தில் இருவரும் அதன் முனைகளைக் கூர்மை ஆக்கினார்கள்'

என்று மனமாரப் போற்றுகிறார்.

மலேசியத் தமிழர்கள் விமர்சனக் கலை பற்றிய அறிவு பெறவும் வழிகாட்டினார் இவர். மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக எளிய பேச்சுத்தமிழ் நடையைக் கையாண்டார். ஆயினும் இவருடைய விமர்சனப் பார்வை விமர்சனத்தின் எல்லைகளை உள்ளடக்கியிருந்தது. குறை, நிறைகளைச் சுட்டிக்காட்டி, ஊக்கம் கொடுத்துச் சிறுகதைத் துறையை மலேசியத் தமிழன்னையின் 'செல்லக் குழந்தையாக' ஆக்கினார். 'தமிழ்முரசு'வின் 'ரசனை வகுப்பு' விமர்சனக் கலைக்கு வித்தாகும்.

சொல்லுதல் யார்க்கும் எளிது; ஆயின் சொல்லிய வண்ணம் செயல்படுவது அரிது. மலேசியாவில் தமிழிலக்கியங்கள் பெருக வேண்டும் என்னும் வேணவாக் கொண்ட இவ்வறிஞர் சொல்லியதோடு அமையாது படைப்பிலக்கியங்கள் பெருகவும் தாமே முன்மாதிரியாய்ச் செயலாற்றினார். மலேசிய வானொலியில் இவர் படைத்த நாடகங்கள் பலப்பல. நுண்மாண் நுழைபுலம் பெற்றவராதலின் இவர் ஆய்வு முயற்சிகளிலும் ஈடுபட்டார். இவருடைய 'கம்பராமாயண ஆராய்ச்சி' என்னும் ஆய்வுக் கட்டுரை 'தமிழ் முரசு'வில் வெளிவந்தது. 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தலும்' ஒப்பற்ற தமிழ்ப் பணியே. 'சீனமும் சீனமக்களும்' என்னும் நூல் இவரின் மொழி பெயர்ப்புத் திறமைக்குத் தகுந்த சான்றாகும்.

மொழியை ஒரு நாணயமாகக் கருதினால் அந்நாணயத்தின் ஒரு புறம் இலக்கியம்; மற்றொரு புறம் இலக்கணம் எனலாம். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலே தொன்றுதொட்டு வரும் மரபு. இவ்வகையில் இலக்கியப் புலமை உடையார்க்கு இலக்கணப் புலமையும் இருப்பது வியப்பன்று. இத்தகையோருள் இவரும் ஒருவர். மொழியைப் பிழையறப் பேசவும், எழுதவும் தமிழர் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் வேண்டும் என்பது சுப.நா.வின் பேரவா. 'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்ற அடிப்படையில் நக்கீரப் பார்வையுடன் குற்றங்களை - குறைகளைச் சுட்டிக்காட்டினார். 1950களிலேயே தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்குக் குரல் கொடுத்தவர். தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய நூல் (பெயர் அறியுமாறில்லை) இவரின் முயற்சிகளுள் குறிப்பிடத்தக்க ஒன்று.

மலேசிய அரசின் பதிவுத் துறையில் பணியாற்றிய இவர் தம்முடைய தொழிலோடு அமையாது தமிழ் வேட்கையால் பணிகள் பல புரிந்தார். 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்றாற் போலத் தமிழுணர்வு உள்ள ஒவ்வொரு நெஞ்சத்திலும் சுப.நா. வாழ்ந்து கொண்டிருக்கிறார். இவர்தம் இலக்கியப்பணி மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன்

பரந்து விரிந்திருக்கும் உலகைத் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் நெருங்கச் செய்வன பத்திரிகைகள்.

அறிவியலின் வளர்ச்சியால் கனிந்த இப்பத்திரிகைப் பெண்ணின் பெருமைகளைப் பாவேந்தர்,

'காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்

பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்!

ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்

பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே'

எனப் போற்றிப் பாடுவர். இப்பத்திரிகைத் துறையின் மூலம் மலேசிய, சிங்கப்பூர் மக்களுக்கு அறிமுகமாகி, அவர்களின் அன்பு இதயங்களில் ஏற்றமுடன் வீற்றிருப்பவர் அமரர் முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிர மணியன்.

எழுத்தார்வம்

தமிழ்நாட்டில் பிறந்த இவர் திருச்சி அர்ச். சூசையப்பர் உயர்நிலைப் பள்ளியில் 1939ஆம் ஆண்டு ஐந்தாம் படிவத்தில் படித்துக் கொண்டிருந்தபொழுதே இவருடைய எழுத்தார்வம் பிறங்கி ஒளிவிடத் தொடங்கியது. முருகுவின் கட்டுரையை அவருடைய தமிழாசிரியர் மற்ற மாணவர்களுக்குக் காட்டிக் 'கட்டுரை என்பது இவ்வாறு அமைய

வேண்டும்' எனப் போற்றி விளக்கினார். முருகுவிடம் அமைந்திருந்த எழுத்தாற்றலை அவருடைய ஆசானே மேன்மேலும் வளரச் செய்தார்; தூண்டுகோலானார். இவரிடம் ஆற்றலிருப்பதைச் சுட்டிக்காட்டி நிறைய எழுதுமாறு பணித்தார்.

'இளந்தமிழன்' உதயம்

1942இல் முதல் பல்கலைக்கழக வகுப்போடு படிப்பு முடிந்தது. திருச்சியில் பள்ளியில் படிக்கும்போதே முருகுவிடம் பத்திரிகை ஆர்வம் மிளிர்ந்தது. 'இளந்தமிழன்' என்னும் பெயரில் மாதமிருமுறை கையெழுத்துப் பத்திரிகையை வெளியிட்டார். அறிஞர் பார்வையினை 'இளந்தமிழன்' பிணித்தான்.

இளந்தமிழனால் கவரப்பட்டு அதில் கட்டுரை எழுதியவர் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சர். சி.வி. ராமனின் துணைவியார் திருமதி லோகசுந்தரி ஆவார். இளந்தமிழன் 'அச்சுத்தேர் ஏறித் தமிழுலகில் வலம் வரவேண்டும்' என்று கரந்தைத் தமிழ்ச் சங்க ஏடான 'தமிழ்ப்பொழில்' தன் மதிப்புரையில் வாழ்த்திற்று. ஆயின் இளந்தமிழன் மூன்றாண்டுகட்குப் பின் அச்சூர்தி ஏறாமலேயே நின்றான்.

இளந்தமிழனில் 'முருகு' என்னும் புனைபெயரில் எழுதிவந்தார். இளந்தமிழனின் ஆசிரியர் முருகு என்னும் பெயரோடு வெளிவந்தது இப்பத்திரிகை. இப்பெயரே இவருடைய இயற்பெயரோடிணைந்து 'முருகு சுப்ரமணியன்' என நிலைத்துவிட்டது. இளந்தமிழனில் 'கண்ணாடி' என்னும் கவிதையை முருகு 1942இல் எழுதி வெளியிட்டார். இக்கவிதை முருகின் புலமையைக் காட்டும் கண்ணாடியாய் இலங்குகிறது. இக்கவிதை சிறுவர் இலக்கியத்திற்கு இட்ட வித்தாக விளங்குகிறது. நீண்ட கவிதையாக அமைந்திருப்பதனைத் தவிர, மற்ற வகையில் பார்க்கும் போது சிறுவர்களுக்கு ஏற்ற எளிய, இனிய கவிதையாக அமைந்துள்ளது.

தம் எழுத்தார்வத்தைப் பெருக்கிய புலவர் பெருமக்களை முருகு நன்றிப் பெருக்குடன் நினைவுகூர்கிறார். இவரின் மலரும் நினைவுகளைக் கீழே காண்க:

> '...மற்றும், மூன்று பெரியார்களை நான் குறிப்பிட வேண்டும். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், பன்மொழிப் புலவர் அப்பாதுரை, கோநகர்ப் புலவர்

விசு. திருநாவுக்கரசு ஆகிய மூவரும் என்னுள்ளே தமிழுணர்வு, இலக்கிய ஆர்வம், எழுத்தாற்றல் ஆகியவை வளர்வதற்குப் பெருந்துணை புரிந்தனர் என்பதனை நன்றியுடன் குறிப்பிடுகிறேன்.'

என இவர் கூறியுள்ளார்.

இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் விற்பன்னராக விளங்கியவர் முருகு. தொடக்க காலத்தில் கவிதைத்துறையில் பேரார்வம் காட்டிய முருகு, தம் கவிதைத் துறை ஈடுபாட்டைப் பற்றிக் கீழ்க் காணுமாறு கருத்துரைக்கிறார்:

'கவிதையே எனக்கு மிகவும் பிடித்த இலக்கிய வடிவம். ஆரம்பத்தில் எழுத்துத் துறையில் அடியெடுத்து வைத்த நேரத்தில் கவிதைகளையும் நான் எழுதியதுண்டு. பாரதிதாசனையும் பாரதி யாரையும் ஈடுபட்டுப் படிக்கத் தொடங்கிய பிறகு என்னுடைய கவிதை ஆக்கத்தில் எனக்குள்ள நம்பிக்கை குறைந்து நான் கவிதை எழுதுவதை நிறுத்திக்கொண்டேன்.'

இப்பகுதியிலிருந்து இவரின் நேர்மையுள்ளமும், அடக்கமும் தெள்ளிதின் புலனாகின்றன. ஒரு கவிதை எழுதியதும், 'எனக்குப் பாவேந்தரிடம் ஈடுபாடு; நான் அவருடைய பரம்பரைக் கவிஞர்' என்றெல்லாம் கவிஞர்கள் போலிப் புகழ் தேடும் இன்றைய உலகில் இவரின் கூற்று தெரிந்ததையும்கூடத் தெரியாது போலப் பேசும் இவரின் தன்னடக்கத்தையன்றோ காட்டுகிறது. அவர் 'ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்' என்பதையல்லவா இந்நிகழ்ச்சி புலப் படுத்துகிறது.

'குமரனும்' கொஞ்சுதமிழ்ப் பணியும்

சீர்திருத்தச் செம்மலும், பெருந் தமிழறிஞருமான சொ. முருகப்பாவின் பத்திரிகை 'குமரன்'. இது காரைக்குடியிலிருந்து இருவார இதழாக வெளிவந்தது. இவ்விதழில் 1944ஆம் ஆண்டு துணையாசிரியராகவும், நிர்வாகியாகவும் பணியாற்றினார் முருகு. பத்திரிகைத் துறையில் பரந்த அனுபவம் பெறுதற்கு உறுதிமிக்க அடித்தளத்தை இட்டவன் 'குமரன்' என்பர் முருகு.

தமிழ் இதழியல் துறையிலே 'பொன்னி' ஒரு காவியம். தமிழிதழ்களை நடத்தத் தயங்கிய நாற்பதுகளில் பெருந்துணிவோடு 'பொன்னி' என்னும் இலக்கிய இதழைத் தொடங்கினார் முருகு. 1947ஆம் ஆண்டு, விடுதலை பெற்ற இந்தியாவில், தமிழர் திருநாளன்று (பொங்கல்) வெளிவந்தாள் 'பொன்னி'. பல இளம் எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை 'பொன்னி'யையே சாரும். 'பொன்னி' முதலில் புதுக்கோட்டையிலிருந்தும், பின்னர் சென்னையிலிருந்தும் வெளிவந்தாள். முதலில் மாதமொருமுறை இலக்கிய நெஞ்சங்களைச் சந்தித்த 'பொன்னி', பின்னர் மாதமிருமுறை தமிழன்பர்களுக்கு இலக்கிய விருந்தளித்தாள்.

'பொன்னி' இதழில் தமிழறிஞர்கள் பலரும், சமூகத் தலைவர்களும், புகழ்மிக்க எழுத்தாளர்கள் பலரும் எழுதியுள்ளனர். பெரியார் ஈ.வெ.ரா., அறிஞர் அண்ணாதுரை, கலைஞர் கருணாநிதி போன்ற அரசியல், சமூகத் தலைவர்களும்; பாவேந்தர் பாரதிதாசன், கண்ணதாசன், சுப. நாராயணன், இளவழகனார், கா. அப்பாதுரை (பன்மொழிப் புலவர்) என்.வி. நடராசன், க. அன்பழகன், விசு. திருநாவுக்கரசு முதலிய தமிழறிஞர்களும் 'பொன்னி'யில் எழுதியுள்ளனர். இவர்களின் இலக்கியப் பணி தொடர்வதற்கும், பெருகுவதற்கும் 'பொன்னி'யே வாய்ப்பளித்தாள். அகிலன், சுகி, இராதாமணாளன், இளமைப்பித்தன், மா. இளஞ்செழியன், நாரண. துரைக்கண்ணன், நாரா. நாச்சியப்பன், கோவை இளஞ்சேரன், கண. இராமநாதன் முதலிய எழுத்தாளர்களும் 'பொன்னி'க்கு மெருகூட்டியுள்ளனர்.

'பொன்னி'யின் இலக்கிய மணம் அகிலனைப் பெருவியப்புக்கு உள்ளாக்கிற்று. சென்னையில் இருந்துகொண்டு இதழைச் சிறப்பாகக் கொண்டுவர இயலா நிலையில், அச்சு வசதிகளோ, சிறந்த ஓவியர்களோ, இதழை வெளிக்கொண்டுவரத் தேவைப்படும் பிற வசதிகளோ இல்லாத புதுக்கோட்டையிலிருந்து இப்படிப்பட்ட இதழை எவ்வாறு கொண்டுவர இயலுகிறது என அகிலன் வியப்படைந்துள்ளார். மேலும் 'பொன்னி'யின் தனித்தன்மையை வெகுவாகப் பாராட்டியும் உள்ளார்:

> 'பொன்னி'யில் நான் கண்ட ஒரு முக்கியமான சிறப்பு அதன் தனித்தன்மை கொண்ட போக்காகும். ஒரு வகைத் தனித்தன்மையின் முத்திரை (stamp of individuality) அதில் இருந்தது. சென்னையிலிருந்து

வந்த எந்தப் பிரபலமான பத்திரிகையைப் போலவும் அது இல்லை. எதையும் அது பின்பற்றவில்லை. இளம் எழுத்தாளர்கள் சிலரையும், புதிய கலைஞர்கள் சிலரையும் அது துணிந்து அறிமுகம் செய்திருந்தது.

பத்திரிகைகள் வாணிக நோக்குடன் வெளிவரும்போது அவை தரத்தில் குறைந்துவிடுவது இயல்பு. ஆயின் 'பொன்னி' இலக்கிய இதழாக, தான் கொண்ட இலக்கினில் ஒரு சிறிதும் பிறழாது இலட்சிய இதழாக (குறிக்கோள் இதழாக) வெற்றி நடையிட்டது. பொருளாதார நோக்கில் 'பொன்னி' பல நெருக்கடிகளை முருகுவிற்குத் தந்தாள். ஆனால் முருகுவின் இலட்சியப் பிடிப்பு உடும்புப் பிடியாய் அமையவே முருகுவின் போராட்டமே வெற்றியடைந்தது. இலக்கிய வளர்ச்சி கருதி முருகு அடைந்த சோதனைகளெல்லாம் அவரைச் சாதனை வீரராகவே மாற்றின. முருகு நடத்திய 'பொன்னி' இதழைத் தமிழகத்தின் 'கலைமகள்' இதழோடு ஒப்பிட்டும், அதனை விட உயர்த்தியும் பேசிய எழுத்தாளர் களின் கூற்றுகளே 'பொன்னி'க்குச் சூட்டப்பட்ட புகழ்மாலைகளாகும்.

மலேசியாவில் மணக்கும் தமிழ்ப் பணி

உலகில் தமிழில் தோன்றிய தாளிகைகளுள் 'சுதேசமித்திர'னை அடுத்துத் தோன்றிய பெருமை கொண்டது 'தமிழ் நேசன்' நாளிதழே! சீர்பெற்ற இந்நாளிதழின் துணை ஆசிரியராக (13.7.1953இல்) பணியேற்றார் முருகு. இப்பணி 1954ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை நீடித்தது. பின், இவ்வாண்டு நவம்பர் முதல் 'தமிழ்முரசு' நாளிதழில் துணையாசிரியராகப் பணியாற்றினார். தமிழ்முரசு'வில் முருகுவின் தமிழ்ப் பணி ஏறத்தாழ எட்டாண்டுகள் நீடித்தது.

1962ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் 'தமிழ்நேசன்'னின் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று மீண்டும் மலேசியாவுக்கு வந்தார். 'தமிழ்நேசன்' மூலம் மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த முருகுவை வானளாவப் புகழினும் வார்த்தைகள் கிடையா. சுருங்கக் கூறின் தலைவனின் அன்பைப் போற்றும் குறுந்தொகைத் தலைவி ஒருத்தியின் கூற்றே முருகுவின் மலேசியத் தமிழ் இலக்கியப் பணிக்கும் பொருந்துவதாம்.

'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்

சுருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.'

மலேசியத் தமிழ் இலக்கியத்துக்கும் முருகுவுக்கும் உள்ள நட்பை விளக்கும் வகையில் குறுந்தொகைப் பாடலின் முதலிரு வரிகளைக் கூறலாம்.

எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் வழங்கும் பணியை மலேசியாவில் தமிழ்நேசனிலும் தொடங்கினார். இதன்மூலம் மலேசியாவில் தமிழ் இலக்கியம் வளர்வதற்கு முருகுவே வழிகோலினார். 'தமிழ் நேசனி'ல் 'பவுன் பரிசுத் திட்டத்தை' அறிமுகப்படுத்தினார். இப்பரிசுத் திட்டம் எழுத்தாளர்களிடையே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.

இவர் மண்மணம் கமழும் மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் வெளிவருவதற்கு முற்றிலுமாகத் தம் நல்லாதரவை வழங்கினார். தமிழ்ச் சமுதாயம் விழிப்புணர்ச்சியைப் பெற வேண்டும் என்ற நன்னோக்கில் சமுதாயப் பிரச்னைகளைக் கருவாகக் கொண்டு கதைகள் படைப்பதை ஊக்குவித்தார். மலேசியத் தோட்டப் புறங்களில் வாழும் மக்களில் பெரும்பாலோர் உழைத்துப் பெறும் பொருளை ஒழுங்காகப் பேணிச் சேமித்து வைக்காததனால் நிரந்தரக் கடனாளிகளாக வாழ்ந்து வருகின்றனர். இச்சிக்கல் முருகு காலத்தில் இன்னும் தீவிரமடைந் திருந்தது. மது அருந்துதல், குழந்தைகளின் கல்வி பற்றியோ எதிர்காலம் பற்றியோ திட்டமிட்டு வாழாமை ஆகிய பிரச்னைகள் இவர்களிடம் குடிகொண்டிருந்தன. இந்நிலையை மாற்றிப் புதிய எழுச்சியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பவுன் பரிசுக் கதைகள் அமைந்தன.

மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தின் விடிவுக்கும், இலக்கியங்களுக்கும் உள்ள தொடர்பைச் சுட்டிக்காட்டி, முருகுவின் இலக்கியப் பணி இவ்வாறு அமைந்தது என மதிப்பிடும் அகிலன் கீழ்க்காணுமாறு கருத்துரைப்பர்:

> 'இவர்களுக்கெல்லாம் (மலேசியத் தமிழ்ச் சமுதாயத் தினருக்கு) புறவாழ்க்கைச் சட்டங்கள் மட்டிலுமே துணைபுரிய மாட்டா. மனிதனின் அகம் வளர்ந்தாக வேண்டும். அறிவிலும் பண்பாட்டிலும் நம்மவர் சிறந்து விளங்க வேண்டும். அந்தச் சிறப்பைத் தருவதில் மொழிக்கும் இலக்கியத்துக்கும் பெரும் பங்கு உண்டு. ஆகவேதான் மொழிக்கும் இலக்கியத் துக்கும் உழைப்பவர்களை நாம் போற்றுகிறோம்.

இலக்கியப் புரவலராக ஒரு கால் நூற்றாண்டு காலத்துக்கு மேல் இடைவிடாது உழைத்து வருபவர் முருகு. அவர் நம் பாராட்டுதலுக்கு உரியவர்.'

எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் சேவை செய்த முருகு உண்மையான இலக்கியவளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பல நல்ல செயல்திட்டங்களை நடத்தினார். நூல் வெளியீடு, கருத்தரங்குகள் முதலியவை முருகுவின் ஆக்ககரமான இலக்கியச் சேவைக்குச் சான்றாவன. எழுத்தாளர் சங்கத்தின் மூலமாகத் திரு. ரெ. கார்த்திகேசு அவர்கள் அகிலனை மலையகத்துக்கு அழைக்க முழு முயற்சிகள் எடுத்துக்கொண்டபோது அம்முயற்சிக்குப் பேராதரவு நல்கினார் முருகு. இந்நிகழ்ச்சியின் மூலம் இலக்கிய வளர்ச்சிக்கு உழைப்பவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் உயர்ந்த உள்ளமுடையார் முருகு என்பதனை அறியலாம். இந்நாட்டு எழுத் தாளர்களுக்குத் தக்க பயிற்சி பெறுவதற்குரிய வாய்ப்பாக அகிலனின் வருகை அமைந்தது.

இவர் மலையக எழுத்தாளருடைய படைப்புகளுக்குத் தமிழக அரசு பரிசளித்து அங்கிகாரம் வழங்க வேண்டும் என்னும் வேண்டு கோளை விடுத்தார். இர.ந. வீரப்பன் அவர்களின் 'உலகத் தமிழர்' என்னும் நூலுக்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பரிசு கிடைத்ததை மலையகத் தமிழ் மக்கள் மறந்திருக்க முடியாது. முருகுவின் கோரிக்கை நிறைவேறியதை இச்செயல் காட்டுகிறது.

பத்திரிகை சமுதாயத்தின் குரலாக ஒலிக்கும் சாதனம். இதனை நன்குணர்ந்தவர் முருகு. ஆதலின், 'தமிழ்நேச'னைச் சமுதாயத்தின் குரலாக ஒலிக்கச் செய்தார். பத்திரிகைத் துறையினரையும் மக்களையும் இணைத்த பாலமே முருகு!

'தமிழ்நேசன்' வழியே சமுதாயப் பணி

பலரும் நினைப்பது போல முருகுவின் சமுதாயப் பணி சிங்கப்பூரில் தொடங்கியது அன்று. தமிழகத்தில் அவர் வாழ்ந்த பொழுது திராவிடக் கழகத்திலும், பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்திலும் முக்கியப் பொறுப்பேற்றிருந்தார். முருகுவின் முட்டுப் பாடில்லாத சமுதாயப் பணியைப் பாராட்டும் ஆழி அருள்தாசனின் சொற்கள் இவண் நினையத்தக்கவை.

'பேரறிஞர் அண்ணா அவர்களின் பாசறையில் தோற்றமுற்று, பெருந்தலைவர் தமிழவேள்

> கோ. சாரங்கபாணி அவர்களால் ஏற்றமுற்று, இன்று சமுதாய நல்லுணர்வு கொண்ட தொண்டர்களின் நெஞ்சங்களில் தலைவராய்ப் பரிணமிக்கும் முருகு அவர்கள், வாழும் நாளிலேயே வாழ்த்துப் பெறும் வாய்மைமிக்க விழுமியோர் ஆவார்.'

முருகு தமிழகத்தில் தொடங்கிய சமுதாயப் பணி மிகச் சிறிதே ஆயினும் அவரின் பணி ஏற்றம் பெற்றது கோ.சா.வினால்தான் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. முத்தமிழ் வித்தகரும் முறையோடு இதனை நினைவுகூர்கிறார்.

> 'தமிழ்முரசு' இதழில் துணையாசிரியராக ஏழாண்டு காலம் பணியாற்றியபோது தமிழவேள் தலைமையின்கீழ் பத்திரிகைத் துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றதோடு சமுதாயப் பொதுவாழ்விலும் என்னை ஈடுபடுத்திக் கொள்கிற பரந்த வாய்ப்பும் எனக்குக் கிட்டிற்று. சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் வாழ்கின்ற தமிழ்ச் சமுதாயத்தின் பிரச்சனைகளையும் மனத்தில் கொள்வதற்குத் தமிழவேள் நல்கிய இந்த வாய்ப்பு எனக்குப் பெரிதும் பயன்பட்டது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரோடு நேருக்கு நேர் பழகுவதற்கும், எண்ணற்ற ஊர்களில் பல்வேறு கூட்டங்களில் பங்குகொள்வதற்கும் எனக்கு வாய்ப்பை வழங்கியது.'

தமிழவேளின் பொது வாழ்க்கைப் பயணத்தின் தொடர்ச்சியாக முருகு அவர்களின் பணியைக் கூறுவது மிகையன்று.

அநீதி கண்டு அடர்த்தெழும் உள்ளம் படைத்தவர் முருகு. சுயநலமின்றி, ஒருதலைப்பட்சமின்றி நீதி தெரிவிப்பதிலும், நீதிக்குக் குரல் கொடுப்பதிலும் முன் நிற்பவர் முருகுவேயாவார். மலேசியத் திருநாட்டின் பெரிய இயக்கங்களான ம.இ.கா. தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், தேசிய நலநிதிக் கூட்டுறவுச் சங்கம், தமிழ் இளைஞர் மணிமன்றப் பேரவை ஆகிய முக்கிய அமைப்புகளுக்கும் முருகுவின் சமுதாயச் சிந்தனை பக்கபலமாகப் பயன்பட்டுள்ளது.

முருகு 'தமிழ்நேசன்' மூலமாகத் திரட்டிக் கொடுத்துள்ள நிதிகள் மலைக்கத்தக்கவை! 'சிங்கப்பூர் ஜெகதாம்பாள் நிதி', 'செல்வி கிருஷ்ணவேணி நிதி', 'சனநாயகக் காப்பு நிதி' எனப் பல நிதிகளைத்

'தமிழ்நேசன்' மூலமாகத் திரட்டித் தமிழ்ச் சமுதாயத்துக்கும், அரசிற்கும் உதவியதை யாரும் மறக்க முடியாது.

முருகு கணக்கிலடங்காப் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சமுதாயப் பணியைச் செவ்வனே செய்துள்ளார். தமிழர் திருநாள் கூட்டங்கள், தலைவர்களின் பிறந்த நாள் கூட்டங்கள், கருத்தரங்குகள், கவியரங்குகள் ஆகியவை சமுதாயப் பணியின் களங்களாக முருகுவுக்கு அமைந்தன.

சமுதாயப் பணியின் சிகரம்

தமிழர் நலத்தில் - தமிழர் நல்வாழ்வில் என்றென்றும் அக்கறை காட்டியவர் முருகு. தமிழினத்தின் கல்வி வளர்ச்சியில் அவர் அதிக கவனம் செலுத்தினார். இதற்குக் கட்டியம் கூறுவது 'தமிழ்ப் பள்ளி மாணவர் கல்வி நிதி'. ஒரு கோடி வெள்ளி நிதி திரட்டத் திட்டமிட்டார் முருகு.

சிங்கையில் சீர்மிகு தமிழ்ப் பணி

குமரன் இதழில் 'வெண்பாப் போட்டி' என்றோர் அங்கத்தைத் தொடங்கிக் கவிஞர்களிடையே புத்தெழுச்சியைக் கொணர்ந்தது போன்றே 'தமிழ்முரசு' இதழிலும் வெண்பாப் போட்டியை நடத்தினார். மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் கவிஞர்களின் எண்ணிக்கை பெருகிய தற்கு இப்போட்டியே காரணம் எனத் துணியலாம். 'தமிழ்முரசு' நாளிதழில் 'கவிதைப் பக்கம்' என்றோர் அங்கமும் வளரும் கவிஞர்களுக்கு வாய்ப்பளித்தது.

புதிய எழுத்தாளர்களுக்கு இவர் என்றுமே ஊக்கம் தந்ததுண்டு. சிங்கையிலும் 'எழுத்தாளர் அறிமுகம்' என்ற பெயரில் பல இளம் - புதிய எழுத்தாளர்களைத் 'தமிழ்முரசு' வாயிலாக அறிமுகப்படுத்தினார். இதனால் எழுத்தாளர் பலர் நற்பலன் அடைந்தனர்.

ரேடியோ, கலாச்சாரம் ஆகிய பிறமொழிச் சொற்களை ரசிகமணி டி.கே.சி. அவர்கள் வானொலி, பண்பாடு என அழகுதமிழில் மொழி பெயர்ப்புச் செய்தார். இதனைத் தமிழகத்துத் தமிழறிஞர்கள் பலரும் அறிவர். இச்சொற்களை மலையக, சிங்கைத் தமிழர்கள் அறியுமாறு 'தமிழ்முரசு'வில் முருகு பயன்படுத்தினார். 'ரேடியோ நிகழ்ச்சி' என்னும் பகுதி முருகுவின் வருகைக்குப் பின் 'வானொலி நிகழ்ச்சி' என்று எளிய, இனிய தமிழில் அச்சானது.

‘தமிழ்முரசு’ நாளிதழில் ‘தமிழரின் அடிப்படைக் குறைகள்’ என்னும் தலைப்புடைய முருகுவின் கட்டுரை ஞாயிறு முரசில் வெளி வந்தது. தமிழ்ச் சமுதாயத்தினரின் குறைகளைத் துணிவுடன் சுட்டிக் காட்டி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார் முருகு.

நுவலரும் நூலாசிரியர் முருகு

முருகு நல்ல எழுத்தாற்றல் உடையவர் என்பதனாலன்றோ பத்திரிகைப் பொறுப்புகள் தாமாக அவரைத் தேடி, நாடி வந்தன. பத்திரிகை ஆசிரியராக விளங்கிய இவர் தேர்ந்த நூலாசிரியராகவும் விளங்கினார். நீதிவெண்பாவின் நெறிமுறைகள், தமிழ்கூறு நல்லுலகம் ஆகிய இரு நூல்கள் மட்டுமே இன்று அரிதில் கிடைப்பன.

‘நீதிவெண்பாவின் நெறிமுறைகள்’ என்னும் நூல் நீதிவெண்பா என்னும் அற இலக்கியம் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பாகும். சிங்கப்பூர் வானொலியின் பள்ளிக்கூட ஒலிபரப்பில் நீதி இலக்கியம் பற்றிய கட்டுரைகள் ‘தமிழ்முரசு’விலும், தமிழகத்தில் கண்ணதாசன் நடத்திய ‘தென்றல்’ இதழிலும் வெளிவந்து இன்பம் பயந்தன.

சென்னையில் 1968இல் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினைப் பற்றி எழுதிய கட்டுரைகள் ‘தமிழ்கூறு நல்லுலகம்’ என்னும் பெயரில் நூலாக வெளிவந்துள்ளது. முருகு இருபதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியிருப்பதாகப் பரிதா மணாளன் குறிப்பிட்டுள்ளார்.

கன்னற்கட்டுரையாளர் முருகு

பயண இலக்கியத் துறை மலையகத்தில் செழித்து வளர்ந்திட ஆக்கங் கொடுத்தவர் முருகு.

‘சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்’

என்பது பாரதியாரின் வேண்டுகோள். இதற்குச் செயலுருவம் கொடுத்தவர் இவர் ஆவார். இவர் சென்றுவந்த நாடுகள் பல. சீனா, ரஷ்யா, பிரிட்டன், தைவான், சுவிட்சர்லாந்து, இத்தாலி, ஜப்பான், கம்போடியா, வியட்னாம், இந்தோனேசியா, அல்சீரியா, எகிப்து முதலான நாடுகளுக்குச் சென்றுள்ளார். இந்நாடுகளில் இவர் பெற்ற அனுபவங்களைத் தம் பயணக் கட்டுரைகளின் வழியே தமிழ் சமுதாயத் தினருடன் பகிர்ந்துகொண்டுள்ளார்.

பேரரசர் தம்பதிகளுடன் ஜப்பானுக்கும், பிரதமர் துன்ரசாக் அவர்களுடன் சீனாவிற்கும் சென்று வந்துள்ளார். இது தமிழ் பத்திரிகைத் துறைக்கும் - மலேசியா வாழ் தமிழ்ச் சமுதாயத்தினருக்கும் ஏற்றந்தரும் நிகழ்ச்சியெனில் மிகையன்று.

இவரின் எண்ணற்ற கட்டுரைகள் நூலுருப் பெறாமல் உள்ளன. தமிழுணர்வு மிக்க மொழி அமைப்புகள், சமூக அமைப்புகள் அல்லது பதிப்பகத்தார் இவரின் கட்டுரைகளை நூலுருவாக்க வேண்டும். இச்செயலொன்றே இவரின் இலக்கியச் சேவைக்கு மலையகத் தமிழர்கள் செய்யும் கைம்மாறாகும்.

நூற்கொடை வழங்கிய நுண்ணறிவாளர்

முருகுவின் பெயரால் இயங்கும் நூலகங்களும் மலேசியாவில் உள்ளன. பல அரிய நூல்களை முருகு இந்நூல் நிலையங்களுக்கு வழங்கி யுள்ளார். தமிழ்ச் சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டில் கருத்தூன்றிய இவர் 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' போல அறிவு ஊற்றெடுப்ப தற்காக வழங்கிய நூற்கொடை சீரிய கல்விப் பணியன்றோ! இந்தோனேசியாவில் மேடான் என்னுமிடத்தில் 'முருகு சுப்பிரமணியன் நூலகம்' பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. கோலாலம்பூரில் 'கம்போங் பிரம்பாங்' என்னும் இடத்தில் 'முருகு நூலகம்' 1976ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. தமிழகத்தில் வாழ்ந்தபோது முருகு அவர்கள் இளம் பருவத்தில் பழனியாண்டவர் வாசகசாலை நடத்தியதனை நினைவு கூர்வர் வித்வான் விசு. திருநாவுக்கரசு.'

புதிய சாதனையாளர்

பொறுப்புணர்வு மிக்க பத்திரிகையாளரான இவர் பத்திரிகை உலகில் சிறந்த சாதனையாளராகவும் போற்றப்படுகிறார். கல்வித் தகுதியை மட்டும் கொண்டு ஒருவர் நாளிதழின் ஆசிரியராகிட இயலாது; சமுதாயத் தொடர்பு இன்றியமையாது வேண்டப்படுவதாம். இளமை முதலே சமுதாயத் தொடர்பு மிக்கவர் இவர். ஆதலால் நாளிதழ்த் துறையில் அவர் சாதனைகள் பல புரிந்தார்.

சமுதாயத்தின் கருத்துகளை அஞ்சாமையோடு வெளியிட்டார். முருகு தனிமனிதச் செல்வாக்குக்கு வளைந்து கொடுத்ததேயில்லை. எந்தச் சமுதாயத் தலைவரோடும் தொடர்பு கொண்டு உரிமையோடு கருத்துத் தெரிவிக்கும் மாண்பினர்.

பத்திரிகை ஆசிரியர்களுக்குத் தொலைநோக்கும் மிகவும் வேண்டப்படுவதொன்றாம். தூரநோக்கினை அடையப் பல வழிகளைக் கையாண்டார் இவர். அவற்றைக் குறுகிய நோக்கமுடையவர்கள் குறைகூறி உள்ளனர். பாராட்டுரைகளைப் பெற்றதைப் போலவே இவர் பழிப்புரைகளையும் பெற்றுள்ளார். பத்திரிகைத் துறையில் ஈடுபட்டோருக்குச் சந்தனமும் பூசப்பெறும்; சேறும் வாரியிறைக்கப்படும். பாராட்டுரை வழங்கப்பட்டவிடத்து, தருக்கியோ, செருக்கியோ நில்லாத இவர், பழிப்புரை கூறப்பட்டவிடத்துத் துவண்டோ, சோர்ந்தோ நின்றாரிலர்.

'போற்றுவார் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுவார் தூற்றட்டும்; தொடர்ந்து சொல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்! அஞ்சேன்'

என்ற மனநிலையே இவருக்கு இருந்தது.

சமயப் பணியும் 'தமிழ் நேச'னும்

முருகு திராவிடக் கழகத்தில் இருந்தவராயினும், புரட்சிக் கவி பாவேந்தரிடம் அளவிறந்த அன்புடையார் ஆயினும் சமயத்தையும் 'தமிழ் நேசன்' வழியே மக்களிடையே பரப்பினார். 'தமிழ் நேசன்' ஞாயிறு மலரில் 'சைவ விளக்கம்' என்ற பகுதியைத் தொடங்கிச் சைவ சித்தாந்த விற்பன்னரும், வித்தகருமான முரு.பழ. இரத்தினம் செட்டியார் அவர்களை எழுதுமாறு கேட்டுக்கொண்டார். இதனால் சைவம் மலேசியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவிற்று. எளிய, இனிய நடையில் எழுதிய இரத்தினம் செட்டியாரும், மேற்படி செட்டியார் அவர்களை எழுதத் தூண்டிய முருகுவும் மலையகத் தமிழிலக்கிய வரலாற்றில் இடம்பெறத் தக்கோராவர். இவண் சைவ சித்தாந்த வித்தகர் கூறும் உண்மை மனங்கொளத் தக்கதாகும்.

> 'தமிழ்நாட்டில் தமிழ் இலக்கியம் பயின்றவர்களிடையே கூடச் சைவ சித்தாந்தம் பற்றிப் பேசுவோர் குறைவு. மலேசியாவில் சித்தாந்த முழக்கம் செய்த ஒரே பத்திரிகை 'தமிழ் நேசன்'தான். முருகு அவர்கள் செய்து வருகிற பணிகள் பலவற்றுள் இச்சமயப் பணியும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.'

முருகுவும் முத்தான தலையங்கங்களும்

பத்திரிகைத் துறையில் தலையங்கங்கள் தலையாய இடம் பெறு கின்றன. தலையங்கங்கள் எழுதுதற்கு முன் அத்தலையங்கம் தொடர் பான செய்திகளை முழுமையாகத் தெரிந்துகொண்டு ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அதனை அணுகுவது முருகுவின் வழக்கம்.

பொறுப்புமிக்க பத்திரிகை ஆசிரியரின் திறமை அப்பத்திரிகையின் தலையங்கங்களிலிருந்தே தெரிய வரும். இக்கூற்று முருகுவைப் பொறுத்த வரை முற்றிலும் உண்மை. இவருடைய தலையங்கங்கள் மூலம் எழுச்சியும் உற்சாகமும் பெற்றனர் மக்கள், அரசியல்வாதிகள் ஆகியோர்.

பல்துறைப் பகுதிகள்

பல்துறை அறிஞர்களையும் மக்களையும் பாலமாக இணைத்தது 'தமிழ்நேசன்'. வாசகர்களுக்கும் வளரும் எழுத்தாளர்களுக்கும் பாலமிட்டதும் 'தமிழ்நேச'னே! இவ்வாறு உறவுப்பாலத்தைக் கொண்டு மக்களை உயர்வில் நாட்டமுறச் செய்தவர். இவர் 'தமிழ்நேச'னில் தொடங்கிய 'ஆசிரியர் நாட்குறிப்பு' என்னும் பகுதி பத்திரிகை உலகின் பிரச்னைகளைச் சுட்டிக்காட்டியது; வாசகர்களுக்கும் பத்திரிகையாளர் களுக்கும் இடையில் புத்துணர்வை உண்டாக்கி நெருக்கமாகத் தொடர்பு கொள்ள வைத்தது. ஆகவே முருகுவின் பத்திரிகை உலகச் சாதனைகளைக் கொண்டு முனைவர் தண்டாயுதம் 'முருகு அல்லது பத்திரிகை' என்று புகழாரம் சூட்டியது பொருத்தமன்றோ?

ஆய்வுத்திறம் பெற்ற அறிஞர்

1966இல் கோலாலம்பூரில் நடந்த முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு அமைப்புக் குழு உறுப்பினராக இருந்து அரிய பணிகள் பல செய்தார். இம்மாநாட்டில் அவர் 'மலேசியாவில் தற்காலத் தமிழிலக்கிய வளர்ச்சி' என்னும் தலைப்பில் கட்டுரையும் சமர்ப்பித்தார். மலேசியத் தமிழ் இலக்கியம் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு இக்கட்டுரை பேருதவி புரியும். மலேசியச் சிறுகதைகளைப் பற்றி அவர் கூறியுள்ள கீழ்க்காணும் கருத்து அவரின் ஆய்வுத்திறத்தைப் புலப்படுத்தும்:

> 'பல சிறுகதைகள் நீதி புகட்டுவனவாகவே அமைந் துள்ளன; நம் எழுத்தாளர்கள் அவர்களுடைய எழுத்து மூலம் வாழ்க்கையைத் திருத்தியமைக்க முயல்கின்றனர். இம்முயற்சியானது பல நல்ல

சிறுகதைகளை வெறும் நீதிக் கட்டுரையாகவே மாற்றி விடுகிறது.'

இக்கூற்றிலிருந்து ஒரு திறனிக்குள்ள நடுநிலையான கொள்கையை இவர் பெற்றிருந்தார் என்பது அங்கைநெல்லி.

சென்னையில் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலும் இவர் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தார்.

இவை தவிர முருகு அவர்கள் தலைமையேற்று நடத்திய ஆய்வுக் கருத்தரங்குகள் எண்ணில. இவை முருகு அவர்களின் ஆராய்ச்சிப் புலமைக்குக் கட்டியங்கூறுவன.

விருதுகள் பல பெற்ற வித்தகர்

'சந்தனக் கிண்ணம்' என்னும் மணக்கும் கவிதைத் தொகுப்பை வழங்கிய கவிஞர் ஐ. உலகநாதன் 'மாதவி' என்னும் இலக்கிய இதழை வெளியிட்டார். அவ்விதழ் வெளியிட்ட பேட்டிக் கட்டுரையில் 'முத்தமிழ் வித்தகர்' என்னும் பட்டத்தை முருகுவுக்கு வழங்கியது.

பத்திரிகைத் துறை சேவைக்காக மாட்சிமை தங்கிய பேரரசர் அவர்கள் 'ஏ.எம்.என்.' (A.M.N.) என்னும் விருதினை 1968ஆம் ஆண்டு வழங்கி முருகுவைச் சிறப்பித்தார்கள். பத்திரிகையின் வாயிலாகப் பல்லாற்றானும் பல்லருஞ் சேவைகள் புரிந்த முருகுவை மாட்சிமை தங்கிய சிலாங்கூர் சுல்தான் அவர்களும் கௌரவித்தார்கள். 1976ஆம் ஆண்டு சிலாங்கூர் சுல்தான் அவர்களின் பிறந்த நாளன்று 'எஸ்.எம்.எஸ்.' (S.M.S.) விருது வழங்கப்பட்டது.

பதவிகள் பல பெற்ற பண்பாளர்

பதவியைத் தேடி மக்கள் ஓடும் காலத்தில் வாழ்ந்தாலும் கூட, இவரை நாடிப் பதவிகள் தாமாக வந்தன. சமூக முன்னேற்றத்தில் அதிக ஈடுபாடு கொண்ட முருகு அவர்களால் அவர் பதவி வகித்த பல அமைப்புகள் நலம் பெற்றன; வளமும் பெற்றன. பணியால் அவரும், அவரால் பணியும் சிறப்படைந்தன என்பது மிகையன்று. அவர் வகித்த பொறுப்புகள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன:

அ. திரைப்பட மேல்முறையீட்டுக் குழு உறுப்பினர்.

ஆ. தேசிய வீரர் நல்வாழ்வு நிதி வாரிய உறுப்பினர்.

இ. பெர்னாமா செய்தி நிறுவன ஆட்சிக் குழு உறுப்பினர்.

ஈ. மலேசியப் பத்திரிகைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர்.

உ. ஆசியான் தகவல் மலேசியக் குழு உறுப்பினர்.

ஊ. தமிழ் இளைஞர் மணிமன்ற தேசியப் பேரவையின் காப்பாளர்.

படைப்பிலக்கியம் தந்தவர்

முருகு அவர்கள் நல்ல படைப்பிலக்கியவாதியும் ஆவார். அவர் எழுத்தாற்றல் வல்லவர் என்பது பத்திரிகைத் துறையில் அவர் நிகழ்த்திய சாதனைகளின் வழி அறிய வரும். அவர் சோர்விலாச் சொல்லாற்றல் உடையவர் என்பது அவர் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய கருத் தரங்குகள், ஆய்வரங்குகள், தமிழர் திருநாள் கூட்டங்கள் ஆகியவற்றின் வழி அறிய வரும். முருகுவின் படைப்பாற்றலை அவர் எழுதிய சிறுகதைகளும், நாடகங்களும் செவ்விதின் புலப்படுத்தும். 'சின்னப்பயல்' போன்ற சிறுகதைகளும், மலேசிய வானொலியில் ஒலிபரப்பான நாடகங்களும் முருகுவின் படைப்புத்திறனை வெளியிடுவனவாம். 'சின்னப்பயல்' என்ற கதை குழந்தையின் சமர்த்தை வெளியிடுவதாம்.

'தனையீன்ற சமுதாயத்தின் தரத்தினை உயர்த்தவேண்டி
நினைப்பெல்லாம் தேக்கி யிந்த நெடும்புவி
நிலைகளெல்லாம் முனைப்புற்றுத் திட்டிக் காட்டி
முன்னேற்றப் பாதைபோட்டுத்தனையதற்
கர்ப்பணிக்கும் தமிழெழுத் தாளன் நண்பன்'

எனத் தம் நண்பர்கள் இன்னார் என்பதை இனங்காட்டுவர் பாவாணர் ஐ. உலகநாதன். இவர் எழுத்தாளர்களுக்குக் கூறியுள்ள இலக்கணங் களை எல்லாம் நாம் முருகுவிடம் காணலாம்.

புதிய சமுதாயம் படைத்தவர்

பாவேந்தரிடம் பழுதிலா அன்பு கொண்டவர் முருகு. ஆதலின் பாவேந்தரின் வேண்டுகோட்கிணங்கப் 'புதியதோர் உலகு செய்ய' புறப்பட்டார். 'தமிழ்முரசு', 'தமிழ்நேசன்' வழியே பாவேந்தரின் கனவு களை நனவாக்கினார். அத்துடன் தம் பணி முடிந்தது என அமர்ந் தாரில்லை. 'புதிய சமுதாயம்' என்னும் இதழைத் தொடங்கினார். இவ்விதழ் இவர் இறக்கும் வரை (10.4.82) இருவார இதழாக ஐந்தாண்டுகள் தொடர்ந்து வெளிவந்தது.

சைவப் பெரியார் கா. இராமநாதன் தமிழ்ப் பணி புரிந்த தகைமை

சைவப் பெரியார் கா. இராமநாதன் மலாக்கா அருணாசலஞ் செட்டியாருடன் இணைந்து 'மலாயாத் தமிழ்ப்பண்ணை' என்ற அமைப்பு உருவாகப் பெருந்துணை புரிந்தார். 1948இல் நிறுவப்பட்ட இப்பண்ணையின் வழி இலக்கிய வகுப்புகளை நடத்தினார். பல தமிழ் நூல்களைப் படைத்தவர் சைவப் பெரியார்.

தமிழ்ப் பண்ணையின் தோற்றம்

கோலாலம்பூரில் தமிழ்ச் சங்கம் இல்லாத குறையை நீக்க உருவானதே 'தமிழ்ப் பண்ணை' என்னும் அமைப்பு. 'தமிழ்ப் பண்ணை' எனப் பெயர் சூட்டியவர் சைவப் பெரியார் ஆவார். இலக்கிய வகுப்புகள் நடத்தியும், தமிழ்க் கலை மாநாடு கூட்டியும் தமிழ்ப் பண்ணை ஆக்ககரமான பணிகளைச் செய்தது.

மலாயாவில் தமக்குக் கிடைத்த நண்பர்களை நினைவுகூரும் சைவப் பெரியார், தமிழறம் பேணுந் தகைமையாளராம் மலாக்கா உ.அரு. அருணாசலம் செட்டியார் பற்றி விரிவாகப் புகழ்ந்துள்ளார். இவர் தொடங்கிய தமிழ்ப் பண்ணையின் வளர்ச்சியே தமிழ் வளர்ச்சி யாயிற்று.

> 'ஒவ்வொரு செட்டியார் வீட்டுக் கணக்கிலும் தமிழ்ப்
> பண்ணையின் பெயர் இருக்கும்'

எனச் செட்டி மக்கள் செந்தமிழை வளர்க்கச் செய்துள்ள உதவிகளைப் போற்றுவர் சைவப் பெரியார். மலாக்கா அருணாசலஞ் செட்டியார் பற்றி,

> 'அவருக்கு இரண்டில் நனிவிருப்பம்;
> ஒன்று பிரசுரம்;
> மற்றொன்று பிரசாரம்
> அவைகளே அவரது ஜீவநாடி'

எனப் புகழ்வார்.

இதழ்ப் பணி

இலக்கிய வகுப்புகள் நடத்துவது; தமிழ் நூல்களை எழுதி வெளியிடுவது என்ற அளவுடன் தம் தமிழ்த்தொண்டை நிறுத்திக் கொள்ளவில்லை சைவப் பெரியார். 'சோலை' என்னும் இலக்கிய

ஏட்டை 1952இல் தொடங்கினார். எட்டுத் திங்கள் மட்டுமே இலக்கியச் 'சோலை' மலர்ந்தது. பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரின் வாழ்த்துரை 'சோலை'யின் நோக்கைத் தெள்ளிதின் காட்டும்.

'சொன்மலர் பூத்துப் பொருள் மணக்கும் சோலையெனும்
நன்மைதரு திங்களிதழ் நானாளும் மன்பதைகள்
துய்த்து மகிழச் சுவைசால் கனியுதவி
நித்தலும் வாழ்க நிலத்து'

'கோலாலம் பூரிற் குளிர்சோலை கண்டவெனப்
பாலாருந் தாமுவக்கும் பான்மையினான் நூலாகும்
சாராம நாதன் கலைவளர்க்கும் நன்னெஞ்சான்
சீராக வாழ்க செழித்து.'

'மலாயாவில் தமிழ் இலக்கியம்' என்னும் தலையங்கத்தின் வழி மலேசியாவில் தமிழ் இலக்கியம் வளர்வதற்கான சூழல்களை ஏற்படுத்தித் தந்துள்ளது 'சோலை'. சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்குச் 'சோலை'யே முதலில் வித்திட்டது.

> 'சிறுவர்களுக்கு ஊட்டும் இலக்கிய இன்பம் மிகவும் எளிதான தன்மையுடன் இன்பமாகப் புகுத்த வேண்டும், புகுத்தப்பட வேண்டும். இதற்கு ஆரம்பப் பாடசாலைகளே தகுந்தவை. அங்குள்ள ஆசிரியர் கள் நல்ல முறைப்படி பயின்ற தமிழ் மன்னர்களாக இருக்க வேண்டும்.'

சோலை விடுத்த விண்ணப்பத்தின் எதிரொலியே 'தமிழ் முரசு' மாணவர் மணிமன்ற மலராகும்.

நாடகக் கலை வளர்த்த நல்லோர்

நாடகக் கலையை வளர்ப்பதிலும் நாட்டம் காட்டியுள்ளனர் நகரத்தார். சான்றாக எஸ்.ஆர்.எம். பழனியப்பன் அவர்கள் வானொலிக்கும், தொலைக்காட்சிக்கும் பல நாடகங்களை எழுதி யுள்ளார். சா.ஆ. அன்பானந்தன் 'மலேசியாவில் தமிழ் நாடக வளர்ச்சி' என்னும் கட்டுரையில் எஸ்.ஆர்.எம். பழனியப்பனின் நாடகங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவருடைய நாடகங்கள் நூல் வடிவு பெற்றில.

இயக்கங்களும் இன்றமிழர் நலனும்

தமிழவேள் கோ. சாரங்கபாணி மலையகம் மற்றும் சிங்கையில் தமிழர் நலனுக்கும், தமிழ் மொழிக்கும் அயராது உழைத்த பெருமகனார். அன்னாரின் சமூகப் பணிக்கு ஆதரவு நல்கித் தோளோடு தோள் கொடுத்து உதவிய தொண்டர் பெருமகனார் வயி. சண்முகம் செட்டியார். தமிழவேள் சுயமரியாதைப் பிடிப்புடையவர். அவருடன் துணைநின்ற வயி. சண்முகம் செட்டியார் அருள்நெறிச் செல்வர். ஆயினும் தமிழவேளுடன் இணைந்து செயலாற்றியவர். தன்னுடைய சமூகமே (நகரத்தார்) தன்னைத் தனிமைப்படுத்தியபோதும் தயங்காது, அச்சமூகத்தினரின் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது மலையகத் தமிழர் நலனுக்காக அயராது பாடுபட்ட அருந்தொண்டர் சண்முகஞ் செட்டியார். தமிழர் வாழ்ந்தாலன்றோ தமிழ் வாழும்? ஆகலின் தமிழரை வாழ்விக்கப் பல்லாற்றானும் பாடுபட்டு, 'நமக்கேன் வம்பு' என ஒதுங்கி நில்லாது அவர் செய்த பணிகள் அனைத்தும் தமிழை வாழ்விக்கச் செய்த பணிகளே. கோ.சா.வின் முயற்சிக்கு ஆதரவு நல்கிய ஒரே ஒரு செட்டியார் சண்முகம் செட்டியார் என்ற ஒப்பற்ற புகழ்பெற்றவர். தமிழவேள் மணிவிழா மலர்க் குழுத் தலைவராக இருந்து தக்க வழி காட்டியவர் இவர்.

'அருள்நெறிச் செல்வர்' என்னும் விருது பெற்ற இவர் சிங்கப்பூர்த் தமிழர் சீர்திருத்த சங்கம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் போன்ற அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டு தமிழ்ப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார். இவரும், இராம. பெரியகருப்பன் செட்டியாரும் சிங்கப்பூரில் தமிழ்ப் பணி செய்த இரட்டையர்கள் என்பதில் தவறில்லை. சிங்கப்பூரின் பொது வாழ்வில் ஐம்பதாண்டுக் காலம் தமிழ்ப் பணி புரிந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. மலாயாப் பல்கலைக்கழகத்தில் 'நாட்டுக்கோட்டை செட்டியார் டிரஸ்ட்' என்னும் அறநிதிக்கு நகரத்தார் சமூகத்தினர் பெரும் பணத்தை நன்கொடையாக வழங்க வயி.ச. அவர்களின் முயற்சியே காரணமாகும்.

இராம. பெரியகருப்பன் செட்டியார்

இவர் தமிழ் நலம், தமிழர் நலம் என்னும் அடிப்படையில் சிங்கையில் தமிழ்ப் பணி புரிந்தவர். பல்வேறு இலக்கிய முயற்சிகளுக்கும் ஆதரவு நல்கியவர். இவர் உடலால், உள்ளத்தால் மட்டுமின்றி நிதியுதவி அளித்தும் தமிழ்ப் பணி புரிந்த சான்றோர் ஆவார்.

தொடர்புச் சாதனங்களும் தொல்தமிழ்ப் பணியும்

அறிவியல் வளர்ச்சி பரந்து விரிந்திருக்கும் உலகைச் சுருக்கி விட்டது. இதற்கு முக்கியமான காரணிகளுள் பத்திரிகையின் தோற்றமும் ஒன்றாகும். மலேசியாவில் நாளிதழ்த் துறையில் நல்லதொரு முன்னோடியாகத் திகழ்ந்தது 'தமிழ் நேசன்' நாளிதழாகும். இதன் உரிமையாளராக விளங்கியவர் நா. மலையாண்டி செட்டியார்; 'தமிழ்நேச'னின் இயக்குநர் புலவர் மு. சேதுராமன், 'தமிழ் நேசன்' நிறுவனத்தின் அதிகாரி எம். நாகப்பன் ஆகியோரும் நகரத்தார் இனத்தவரே. புலவர் மு. சேதுராமன் தமிழ்நேசனின் ஆசிரியராகப் பணியாற்றித் தம் கடமையைச் செவ்வனே செய்துள்ளார். இவருடைய பணி மலேசியத் தமிழ் இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்கது. நாளிதழ் மட்டுமின்றி வாரஇதழ், மாதவிதழ் போன்றவற்றையும் நகரத்தார் பெருமக்கள் வெளியிட்டுத் தமிழுக்கு நற்றொண்டு ஆற்றியுள்ளனர். 'சிலம்பு' என்னும் மாத இதழை 1960இல் கோலாலம்பூரில் என்.எம்.என். மலையாண்டி செட்டியார் வெளியிட்டுள்ளார். 'சோலை' என்னும் மாதவிதழ் இலக்கிய இதழாக மலர்ந்தது என்னும் செய்தி முன்னர் கூறப்பட்டது. ஆயினும் தி.சு. சண்முகம் இதன் நிறுவனராக இருந்தார். இவ்விதழ் கோலாலம்பூரில் 1950களில் வெளிவந்தது. 'தமிழ்ப் பூஞ்சோலை' (வார இதழா அல்லது மாத இதழா என்பது அறியு மாறில்லை) என்னும் இதழையும் மலாக்கா அருணாசலம் செட்டியார் நடத்தினார்.

சிங்கப்பூர் வானொலியில் தேனினும் இனிய தமிழினிமையைப் பரப்பியவர் மெ. திருநாவுக்கரசு ஆவார். இவர் பல கட்டுரைகளைப் படைத்து வானொலியின் வழி தமிழை வளர்த்தவர். தமிழில் உள்ள இலக்கியச் செல்வங்களின் பெருமைகளைச் சிங்கப்பூர்த் தமிழ் மக்கள் அறியுமாறு செய்தவர். சிங்கப்பூர்த் தமிழிலக்கியம் பற்றிய பல கட்டுரைகளைப் பல்வேறு கருத்தரங்குகளில் இவர் படைத்துள்ளார்.

மெ. சிதம்பரம் 'தமிழ்முரசு' நாளிதழின் ஆசிரியராக விளங்கித் தமிழ்ப் பணி ஆற்றியவர்.

படைப்பிலக்கியவாதிகளை ஆதரித்தோர்

முருகு சுப்பிரமணியன் பல புதிய இளம் எழுத்தாளர்களை உருவாக்கினார். இவர் பல எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி, அவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டி, நிறையவும் நிறைவாகவும் எழுதத் தூண்டினார். முருகு கொடுத்த ஊக்கத்தால் உயர்ந்தோர் பலர்.

இராம. பெரியகருப்பன் செட்டியார் (காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி நிறுவனர்) விளம்பரம் விழையாது தூயதமிழ்த் தொண்டாற்றிய தூயர். இவர் 'மெய்யம்மை பதிப்பகம்' என்னும் பதிப்பகத்தைத் தமிழகத்தில் நிறுவி நல்ல, அரிய நூல்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிட்டார். உலகளாவிய நிலையில் 'மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ்' உருவாகக் கவிதைப் போட்டி (சிற்றிலக்கியப் போட்டி) நடத்தினார். இப்போட்டியில் பினாங்கைச் சேர்ந்த புலவர் சி. அன்பானந்தம் வெற்றி பெற்றார். இவருடைய படைப்பு மெய்யம்மை பதிப்பக வெளியீடாக மலர்ந்தது.

சிங்கப்பூருக்கு அகிலன் வருகையளித்தபோது அகிலனை வரவேற்பதற்காகச் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் இராம. பெரியகருப்பன் அவர்களைத் தலைவராகக் கொண்டு (வரவேற்புக் குழுத் தலைவர்) செயல்பட்டனர். இலக்கியக் கூட்டங்களுக்குச் சென்று, இலக்கியவாதிகளுக்குப் பொருளுதவி செய்து தமிழ்ப் பணி ஆற்றினார் இராம. பெரியகருப்பன்.

படைப்பிலக்கியத் துறை, கல்வித் துறை, சமயத் துறை, தொடர்பு சாதனத் துறை, நூல் வெளியீட்டுத் துறை, ஆய்வுத் துறை, கலைத் துறை எனத் துறைதோறும் தமிழ்த் தொண்டாற்றிய தூயர் நகரத்தார். இவர்களுடைய தமிழ்ப் பணி நேற்றுடன் நில்லாது நாளையும் தொடரும் என நம்பலாம். ஏனெனில் தமிழை மறவாச் சிந்தையர் நகரத்தார்!

•

நன்றி மலர்கள்

இந்நூலை வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்கிய
சிங்கப்பூர் இன்டர்நேஷனல் பவுண்டேஷன்.

அணிந்துரை வழங்கிய
பேராசிரியர் வீ. அரசு.

தேசியக் கலைகள் மன்றம்,
சிங்கப்பூர்.

தேசியப் பல்கலைக்கழகத்தின் கலைகள் மைய வெளியீடான
'சிங்கா இதழ்.

நூலின் உருவாக்கத்திற்கு கருத்துரை வழங்கிய
இலக்கிய நண்பர்கள்.

நூலைச் செம்மையாக வெளியிட்டுதவிய
'மருதா' பதிப்பக உரிமையாளர் திரு ம. பாலகுருசாமி.

மற்றும்

ஆய்வுக்குத் தரவுகள் வழங்கி உதவிய
எழுத்தாளர்கள்.

மருதாவின் பிற வெளியீடுகள்:

அவ்வை மண்ணில் பெண் எழுத்தாளர்கள்	
- பிரம்மராஜன் & ஆர். சிவக்குமார்	70
கவிமூலம் (இரண்டாம் பதிப்பு)	
- விக்ரமாதித்யன்	50
கலையா! கைவினையா!	
- ஈரோடு தமிழன்பன்	30
கவிதைரசனை (இரண்டாம் பதிப்பு)	
- விக்ரமாதித்யன்	100
வில்லிசை வேந்தர் பிச்சைக்குட்டி	
- சோ. தர்மன்	40
மதிப்பீடுகள்	
- ஈரோடு தமிழன்பன்	40
தற்காலக் கவிதைகள் ஒரு பார்வை	
- அன்பாதவன்	50
தெருவோரக் குறிப்புகள்	
- பாமரன்	50
சாட்டிலைட் சனியன்களுக்கு	
- பாமரன்	50
இலக்கிய வெளி	
- சுகதேவ்	90
பிரதிகளின் ஊடே பயணம்	
- ந. முருகேசபாண்டியன்	90
அடிமைகளின் தலைவர் அய்யன்காளி	
- ஏபி. வள்ளிநாயகம்	70
அணங்கு	
- மாலதி மைத்ரி / க்ருஷாங்கினி	50
தமிழ்க்கவிதை மரபும் நவீனமும்	
- விக்ரமாதித்யன்	100
பெண்ணியம் - சமூகம்	
- எஸ்.எல். நரசிம்மன்	70
கொல்லிப்பாவை - இதழ்த் தொகுப்பு	
- அ. ராஜமார்த்தாண்டன் / ஆர். ராஜகோபால்	150
'அகிம்சாமூர்த்தி' அமெரிக்கா	
- பாமரன்	60



முனைவர் எம்.எஸ். ஸ்ரீலக்ஷ்மி
மலாயாப் பல்கலைக்கழகத்தின்
இந்திய ஆய்வியல் துறையிலும்,
தேசிய கல்விக்கழகம் சிங்கப்பூரிலும்
விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.
உள்நாட்டிலும் அயல்நாடுகளிலும்
நடத்தப்பட்ட
தமிழிலக்கிய மாநாட்டுக்
கருத்தரங்குகளில் பங்கேற்றுப்
பல கட்டுரைகளை வாசித்துள்ளார்.
இவர் எழுத்தாளராக, பதிப்பாசிரியராக
மலேசியா, சிங்கப்பூரின்
தமிழ்மொழி, தமிழிலக்கிய வளர்ச்சிக்குப்
பங்காற்றி வருகிறார்.
சிங்கப்பூரின் தேசியக் கலைகள் மன்றம்,
ஊடக வளர்ச்சி ஆணையம் ஆகியவற்றின்
இலக்கியப் பகுதி ஆலோசகராகவும்
பங்காற்றி வருகிறார்.



கொத்தமங்கலம் சுப்புவின்
புதினங்களில் கலைப் பின்புலம்',
'இலக்கிய அரும்புகள்',
'மிதிலைப்பட்டிக் கவிராயர்கள்',
'இலக்கியப்பாலம் பங்கும் பணியும்'
ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.
இவை தவிர,
சிங்கப்பூரில் உயர்நிலைப் பள்ளி
மாணவர்கள் பயனடையும் வகையில்
'மாணவர்க்குரிய கட்டுரைகள்',
'சிந்தனைத் துளிகள்',
'கற்கத் தூண்டும் கட்டுரைகள்'
என்னும் நூல்களையும்
வெளியிட்டுள்ளார்.
வசிப்போர் குழு,
இந்தியர் நற்பணி மன்றம்
ஆகியவற்றின் வழி
சமூகசேவையும் செய்து வருகிறார்.

ISBN No. 981-05-3203

$ 18